ஸ்ரீ:

பதினெண்கீழ்க்கணக்கிலொன்றாகிய

பழமொழி மூலமும்

பழைய உரையும்.

[முதற்பகுதி, முதனூறுபாட்டு]

இவை

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் "செந்தமிழ்" ப்பத்திராதிபர்

திரு. நாராயணையங்காரால்

பரிசோதிக்கப்பெற்று

அவரெழுதிய குறிப்புரையுடன பதிப்பிக்கப்பட்டன.



செந்தமிழ்ப் பிரசுரம்—ம க.

தமிழ்ச்சங்கமுத்திராசாலை

மதுரை.

1918.

IRL

விலை ரூபா 1—0—0.

ஸ்ரீ:

முன்றுரையர்செய்த

பழமொழி

மூலமும் உரையும்.

1. ..

அரிதவித் தாசின் துணர்ந்தவன் பாதம்
விரிகடல் சூழ்ந்த வியன்கண்மா ஞாலத்
தரியதனிற் கண்டுணர்ந்தா ரோக்கமே போலப்
பெரியதை ஞெமி பெரிது.

ஈண்பது, உலகதின்ஈட விரிந்ததற்குரியதூற்றலதைக்கெடுதலுச சிறுதிமொழியாமன முழுதுமுணர்ந்தவன்பாதத்தைதத தமசகுரிமைபட வாராய்ந்தணர்ந்தவர்க சோராமேயுறதாவது: பேருடமபினை யுடையதாதலிற பிரிதாயதிபோனறு என்றவாறு.

(குறிப்பு) உலகம-காமபூமி. குறறம-காமம் வெகுளி மயகஙகளாம; இதனைக "காமம வெகுளி"† எனனுங குறளுரையாலு மறிக. முழுதுமுணாந்தவன்-எலலாமுணாநத இறைவன். அவனபாதத்தைத தமகுரிமைப்பட ஆராய்ந துணாதலாவது, அவனை உரியோனெனவும, தாம அவனடிசதொழபுகுரிய உரிமையெனவும ஆததமவிசாரமசெய்ய தெளிதல. கெடுதது, ஆராயந்தவாக கெனகூட்டுக ஒகார-உயாவு; மேற்கெதியுமாம எகாரம தேற்றதத்தின்கண வந்தது. ஒன்றற்கு உடமபின்வளாசசியாற பெரியதென உயாவுணடாவதுபோல, மூற்றமுணர்ந்தவன்பாதத்தையுணர்ந்தவாககு ஞானவளாசசியால் உயர்வுண்டாமென உவமையொடுபொருதியுரைத்தகொளக ஆராயந்தணாநதவாக குயாவுண்டென்றாயினும, அவரோயமர்வுடையரா; அவர் வணங்குற்பாலரெனபதும கருத்தாதலால் அடியார்வணக்கமுங் கடவுள்வணக்கமு மொருக்குகூறியவாறுமாயிற்று. பெருந்தகுபெரிது என உலகவழக்காய்வந்த பழமொழி இங்குக் கொள்ளப்பட்டது. யும்

*மூதற்பாட்டுக் கிடைத்திலது. கிடைத்தால் எழுதிக்கொள்ளும்படி இடம் விடப்பட்டது.

† திருக்குறள் ஈகூ-ம் அதி. மெய்யுணர்தல் கo.

4. கல்லாதான் கண்ட கழிதுட்பங் கற்றூர்முற்
சொலலுங்காற சோர்வு படுதலா—னலலாய்
வினைமுந் துறுத வுரையிலலே யிலலேல
கனைமுந் துறுத வினை.

எ-து, கற்றுவல்லாதா னொாய்ந்துகண்ட மிகநுண்மை கற்றூர முன்புதான்சொல்லுங்காற் சோாவுபடுதலால நலலாய்! வினைமுற்படாத செபபுமிலலே, கனை முற்படாதவினையுமிலலே; ஆதலா லவ்விரண்டுங் கலவி முந்துறுத நுண்மையுணர்வுமிலலே எ-று.

(குறிப்பு) கல்லாதான், கற்றூர் என்பவற்றிற்கேற்ற செயபபடுபொரு ளாகிய, நீதிநூல்களே யென்னு மெசசச்சொல்வருவித்துக கூட்டியுரைத்துக கொளக. நுண்மை-நுண்ணுணர்வாலாராய்ந்த சூழ்ச்சிமுடிவு. சோவுபடுதல-தவருமொழிதல. நலலாயென்பது மகடூஉமுன்னிலே. இது, சுவைநயந்தோன் றக்கூறவதொருமரபுபற்றிவரு மிலவழகு. இந்நூலுட் பின்னும் பலபடியாய வரும் முனனிலைகளும இனன. சோர்வுபடுதலால் எனனும் மூன்றனுருபை, கல்விமுந்துறுத நுண்ணுணர்வுமில்லே எனபதனுள, இலலையென்னும் எச்சச சொலலொடுகூட்டிமுடிக்க வினைமுந்துறுதவுரையிலலே, கனைமுந்துறுதவினை யில்லே என்பன இரண்டும இணைநது ஒருபழமொழியானமையா லவையிரண்டுந் திருட்டாந்தமாயின. இவறறுள் வினைமுந்துறுதவுரையிலலேயென்றது கடா வின்றி யுரைநிகழாதென்பார்மதம்பற்றிய கலேவழகு. இதனை, இசசூதகிரம் என்னுதலிற்றேவெனின் என வினவிக்கொண்டுவரையுர உரைகடைகளாலும் அறிக. வினையென்றது வினைப்பயனுகவும் நண்மைதீமைகளாம் அவற்றை யுணர்தற்குக கனவை நிமிததமாகக்கொள்ளுதல் மரபாதலால் அவற்றிற்குக் கனை முந்துறுதல் நியமமாயிற்று. இதுவும் கலேவழகு. இதனை, "வாரணமாயிரம்"* என்னும் நாசசியாதிருமொழிப்பாசுரங்களாலும, கனைநுண்முதலியவற்றாலும அறிக. எடுத்துக்காட்டுக்கியையக் கல்விமுந்துறுதநுண்ணுணர்வுமிலலேயெனப் பொருள்வருவித்துரைக்கப்பட்டது. இதனால் ஒருவனுக்கு இயற்கையாலுண்டா கிய நுண்ணுணர்வுக்கு அவன் முற்பிறப்பிற்கற்றகலவியே காரணமாமென்பதும, அந்நுண்ணுணர்வுகிலேபெறுதற்குப் பின்னுங் கல்வியுளர்வே வேண்டுமென்ப தும் பெறப்படும. பெறவே, நுண்ணுணாவுடையோனேயாயினும் அது சோர் வடையாமைப்பொருட்டு நீதிநூல்கற்கவேண்டுமென்பது கருத்தாய்த் தெய்வ ணக்கத்தையுடைத்துச் செயப்படுபொருளாகிய நீதிநூலின் சிறப்புக கூறியவா றிற்று. இப்பாட்டிற்காட்டியபழமொழி காலியவழக்காய் முந்தையோர்செய் ளிற்பயின்றதுபோலும். இவ்வாறே பினனும் "இருகைத்தின்மிக்கவிழிவில்லே யில்லே, யொழுகைத்தின்மிக்கவுயர்வு"† எனவருதலும் காண்க.

*நாலாயிரப்பிரபந்தம் நாச்சியார்திருமொழி, 6-ம்பத்து.
† இது இந்நூலின் அறுபத்தாறான்காம் செய்யுள்.

3. கலவியா ணுய கழிநுட்பங் கலலார்முற்
சொலலிய நலலவுந தீயவா—மெலலா
மிவர்வரை நாட தமரையில லாக்கு
நகரமுங் காடுபோன் றுங்கு.

எ-து, கலவியாணுய மிகுகநுண்மையறிவா லொருவன் கல்லாதார் முன்புசொலலிய நலலபொருள்களுந தீயவாம்; எலலாப்பொருள்களா லுமவி நுமபபடாகின்றவரைநாடனே! தமரையில்லாதார்க்கு நகர முங் காடுபோன்றற்போல எ-று.

(குறிப்பு) நுட்பம-நுண்ணுணாவு. நுட்பததால், எல்லாவற்றினும் என மூன்றனுருபுவிரிதரைகைகப்பட்டது. கல்லாரால், தீயனபோற்கருதப்படுமென் பார் தீயவாம் என்றார். தமர்-தமமொடுபயின்றார். ஒருவர்கருத் தம்மொடுபயின்ற நிலலையாயின, பயிலாதநல லோபலரிருகுமுகரமும் ஆன்வழககற்றகாடுபோல மனங்கொளளாதாகுமாறே, கற்றுவல்லார் தூணுகிகண்ட நல்லனவாயபொருள் களேக கலலாதார்க்குசொல்லின் அவ ரவை பயிலாமையால் மனங்கொள்ளாது விடுவரென உவமையொடுபொருதியுரைததுகொள்க. கல்வியினுண்மறிவாற் கண்ட செவ்வியபொருள்களேக கலவியறிவில்லாதமுழுமக்களிடததுச் சொல்ல லாகாதென்பது கருதது. கற்றேனிடத்தேசொல்லவேண்டுமென்பது குறிப்பு. உற்றுரையில்லாத ஆநும் ஊரோ? என்பது உலகவழகான பழமொழி. இதனால நூற்பொருள்கேட்டற் கதிகாரமில்லாதாரிவரென்பது சொல்லப்பட்டது.

4. கேடபாரை நாடிக கிளைதபய மிமபொருட்கண்
மேவடகை யறிகதுரைப்பர் விதகா—வேடகையால்
வண்டு வழிபடநும வாடகண்ணுய் தோற்பது
கொணடு புகாஅ ரவை.

எ-து, தாமுரைக்கின்றபொருளேக் கேட்கவலலாரைநாடித தாஞ் சொலலப்படுமபொருட்க ணவாவி நுமபுவாரென்பதணியறிகது சொல் லுவா தெள்ளியரா, தங காதலாமேல் வண்டுகள் பூவென்றுபின்செல்லா கின்ற வொளியிணையுமபடகண்ணுய்! நீதாற்பணகொண் டலவரின்கட் புகாரதலா லதுமேபால எ-று.

(குறிப்பு) கேட்பார-தூல்கேட்டற்குரிய கலவியறிவுடையார். கல்வியுஞ் ராயி னவரிடைச்சொலலிய அவரறிகதுகொள்ளமாட்டாமையாற் பயன்பட தென்பார் கேட்பாரைநாடி யென்றும, கல்வியுடையராயினும் சொல்லும்பொருட் கண் அவர்கரு விருப்பமிலலையாயிற் சொல்லுவதாற்பயனில்லையென்பார் இளைத் தப்படும்பொருட்கண் வேட்கையறிந்து என்றும் கூறினார். பூவென்று என்றது

வண்கிள்வழிபடர்தற்குக காரணம்விரிதகூரத்தவாறு. இங்கு, தோற்பது-தோல்வியுறுமசொற்கள. தோற்பதுகொணடுபுகாஅரவை என்னும் பழமொழிப் பொருள இஙகு வெதிரேகதருஷடாநதமாகக காட்டபபட்டமையால் அவையிற் புகுவார வெலவதற்கேற்ற செலலுஞசொற்கொணடுசெலவா எனனு முடன் பாடாகிய பொதுப்பொருளால, சொல்லுவனசெலலுமாறு, கேட்பாரைநாடிக... .... துரைப்பாவிசதகா எனனும சிறப்புப்பொருள தணியபபட்டது. இதனுற் கேட்போராகிய அதிகாரியையறிந்து சோவுபடாது நூற பொருள்சொலலவேண்டுமெனற கொலலுமாறும, கலவியறிவுடையமையாகிய ஆற்றலும விருபபமுமுடையாரே நூறபொருள கேட்டறகுரிய அதிகாரியென பதும் சொலலப்பட்டன

5. புலமிக வலலாரப புலமம திரிதல
புலமிக கலலாகமிக புலனு—நலலிகக
பூமபுன லூர பொதுமகட காகாமித
பாமபறியும பாமபின காலு.

ல-து, அறிவுமிகவலலாரபபுலமம திரிதல அறிவுமிகவாதமிக புளளாரபப; நனலமபிதர புனலூரமேன! சிறபபில்லாதமக கடதுக திரிதலரிது; பாமபினவெலலாபாலகளுந தமகனமரியபபாமபுக ளறியுமாதலா னநமபோல ல-து

(தறிப்பு) புலமென்றது புலநதொருதலதோன,புலநெறிவழகு,புலவர, என நூலெலடியைநதேஅறிவுகானமையால உரையிலுள அறிவென்றது நூலறிவை யெனகொணடு, நூலகறறருண்ணறிவானமிகுாரியறறியுாவினகண்ணுளள ஆழ்நதகருததுக்களே யாராயநதறிதல நூலறிவானமிகுாராகவே யுளவாம, எனப் பொருளே விரிதுரைததுகொளக. இதனை, "விபூலிமவுவ்ஜாநாகி விபூஜ்ஜமவுளிஸ்ரு ரூ" என வடமொழிவாணரும வழஙகுவா. புலமிக்கவரைப புலமைதெரிதல என்றது, பசுவைப் பாலகறபதனை என்பதுபோனறு ஈருரு பிணைத்துநின்றது. அது புலமிகவரதுபுலமைதெரிதலென்றபடி. புலப்படுவது உளளதேயாமாதலால, புலனுமெனறதற்கு உளவாமெனப் பொருளுரைகபபட்டது. தெரியு மாறு பலவாதலாலும், தெரியும பொருட்பனமையாலும தெரிதல் பலவாதலால் உளவாமென்றா. புலமிகவரராகிய நூலாரியரது துணிகியகருத துகளே புலவரேதெரிவராதலால அவாபாற்சென்றே நூற்பொருளகேட்க வேண்டும எனபது குறிபபு புலமிகவர்க்கேபுலனு மெனறமையானே பொது மக்கட்காகாதெனபது பெறபபட்டிருகவும, மறிதது மபொதுமகட்காகாதென்றது, இறைவனுல மயாவதுநிலமருளபபெறற சிறபபுடையபரா கலவாதுமுணர்வா எனப துணாதததறகெனக. பாமபறியுமபாமபினகாலுவென்றது பாம்பின்கால் பாம்பறியும் எனனும பழமொழியாம. அது இங்குச செயயுள்நோகங முன்

பின்னுகமாற்றி ஆறனுருபுவிரிதரைகசுப்பட்டது. இப்பழமொழி, "பாம்பறியம் பாம்பினகா லெனமொழியும பழமொழியும் பார்க்கிலீரோ"* எனத தமிழப் புலவராலும, "ꯀꯣꯝꯃꯤꯔꯥꯕꯥꯏꯔꯤꯁꯦꯟ" என வடமொழியாணராலும காவியங்களில எடுத்தாளப்பட்ட து காண எனனுஞ்சொல, ஒழுகுவலியால் நடகுமுறப்பபயுணாத துரையாயிருபபினும, அவ்வுறப்பு பாமபுகளில்லாமையா லிநகு அதனையொழித்தது பொருளுகளையய இடவிசேடமேபொருளெனகொள்ளத தகுகுதாயிற்று காண எனபது இடவிசேடதையுணாத துஞ்சொலலாகுமென பதைக "கணகாலபுறமகம"† எனனுஞ சூத்திரவுரையுட் சேனவையரால்கூறிய வாற்முனும, கால், காலவாய, வாயகால் எனறாறிறுடகுகதது உலகவழகால் ஒடுங்குயும, மூடகுயும, வளைதும, நிமிராதும, நீண்டிம இருகும இடவிசேடங்களேயுணாத தாலும மறிக. பாமபுறையும இடங்களும அதனுடறகிடகைகை கேற்றவாறேதானமைகளேயுடையவாயிருகவேண்டுமாதலா லவை பாம்பின் காலெனப்படும நணடி, கறையான இவை உறையுமிடதை நணடிவேள, கறையானபுறம எனவழகும மரபுபோலப பாமபுறையுமிடதைப் பாமபினகால என வழங்குவது பணடையோாமரபாதலால மூலதானமும உரையுளளும பாமபினகால எனபதறகுப பாமபுறையுமிடங்களே எனபொருளுரைத தகுகொளக மிகவும கோபமியமாகப் பாமபுறையுமிடங்களே அவறறிறடைதை பறபாமபுகளுநிவ தலாது பிறரறியாதவாறுபோல தூறறிவுடையோரது கோப்யமானகருதது கேள, அவரோடொதை தூலறிவுடையோரெயனறிப பிறரு அரியாரெனப் பொருளாயபொருளுறுயுரைதகுகளாக றிது, கோபய ரகூஉக பரப்யததன்மைகளே ஒபபுமையாகவிகாணட எனத ருகாட்டி ஈபபழமொழியினகருது திருவேயெனபதறகு இப்பழமொழிய ாசசபபொருளாகிய பிறரறியாரென்பதனை, "இனனபுறறிறபாமபருதுயினயாருறிவா" என வழங்கும உலகவழகுமு, "ꯀꯣꯝꯃꯤꯔꯥꯕꯥꯏꯔꯤꯁꯦꯟ" எனனும வடமொழியிதகாடருளளகுவிஹம் வதாமி எனபதறகுப பாமபுறையுமிடங்களே எனனும பொருளுடைமையும சானறும. இங்ஙனமன்றி, இப்பழமொழி, "ꯍꯧ ꯑꯖꯤꯡꯃꯅꯥꯎꯖꯥꯏꯔꯤꯁꯦꯟ ꯍꯧꯖꯥꯡ ꯑꯔꯥꯎꯕꯥꯏꯔꯤꯁꯦꯟꯅꯥꯎꯕꯥꯏ" எனத குலையானதத்துள வலலோாவுற்பெணிக குசாரணமாகக காட்டப்பட்டுளளது இதில சுரணம எனறது நடகுமுறுப்பாகிய காலகளேயுணாத தவதாம இதற்கு "ꯀ ꯄꯨꯎꯗꯤꯡꯒꯤ ꯑꯣꯏꯅꯥ ꯑꯣꯏꯕꯥ ꯑꯣꯏꯕꯥ ꯑꯣꯏꯕ

சித்தராரூடமும், பல்லி பாம்பரணை யிவற்றின்பரம்பரையே நாளடைவிற் பாம் பாகப்பரிணமித்ததென்னு மொருசாராங்கிலநூல* வல்லார்கொள்கையும்† சான் றுவனபோலும். இப்பாட்டிற புலமையெனறது நூலிலுளளநுணுகியகருததுக களேயாதலால், புலவராலறியததக நுணுகியகருதறிக்களேயுடையதே நூலாம் என நூலினிலக்கணமும், அததகைய நுணுகியகருதறுகளேயறிநதுசொலலற குரியோன் நூலவலலோனுயிருகக்வேண்டுமென ஆசிரியனிலக்கணமும ஒருங்கு கூறியவாறுயிற்று. இவையெநதபாட்டும நெறியுணாதறுதலபறறி நூலாகவும், வணக்க மதிகாரமுதலியவுணர்தறுதலபற்றிப் பாயிரமாகவும ஒருங்கேகொள்ளு மாறுகூறியதொரு நநதிரவுதறி. இவையே அவையடக்கியலுமாமா ருராய்ந் தறிந்துகொளக இனி, இநநூலாசிரியா, மாணாக்கர்க்கறிவுறுதறற்குரிய அற முதற்பொருளகளேக கூறவான்றொடஙகி, அவறறை அதிகாரப்படவைப்பின, செய்யுளகளினபொருளகள் அதிகாரதளவா யடஙகியொருகுமெனநினைந்து, அவ்வாறுகூறுது, விரோதமினறிவிளஙகும்பொருள்களேயெலலாம், வேண்டிய வாறே வெகுமுகமாய விரிதறுரைதறுக்கொளளுதறுமேற்ற முதறகசெய்யுளக ளானேகூறுப.

*Encyclopædia Britannica Vol 22 p. p 189--190

†இககொளகை யுணமையுடையதாயின அப பல்லிவகையினகாலகள் நா ளடைவிற் குறுகிக்கொணடிவருது பிறாகதறேன்றுதமறையுந்தருணமாகிய முன்னேயடிகளாலகளி லிபபழமொழி பிறநதிருகக்லாமெனகொளளுதல் பொருந்துமாயினும, அககாலகளேயறித லதுபயோகமாயப் பொருளொடுபொருந தாமையாலும, சித்தராரூடதறுட்கணடது –கருமபு மூங்கிலமுதலியவறறினுளள வட்டவடிவானவரைபபை கணணெனனுமிடபபெயராலவழஙகுதலும தலாக கோலினமேற்புறதறுளள வறையறுகுறியான வெண்ணிறவரையை வெளளிக காலென வழஙகுதலுமபோலப பாமபினடிப்புறதறுக குறுகியநீணடவடிவுளள வரைகளேயே காலெனனுமிடப்பெயராலவழஙகியதாகக காணப்படுதலால் அவை யும வலலோனுவிறசாகேறற பொருட்குறிப்புக கிடறகாமையாலும, காமலிங்காது சாஸனதறிறகண்ட ம-ப்ோவாதி (மறைநதகாலகளேயுடையது, எனனும பெய ரானது:-கூடசப்தம அபாவலகூஷகமாக, "அருங்கேடன" (குறள் 210) என்பது போனற இணமையின்முன்மையில இலலாதை யுள்ளதுபோலவைதறுகூறுவ தொருவழகுவகையாக காலிலலாதது எனறபொருளேயுணாதறி விரோதிகக யாலும், அவை சான்றுகாமையால், குவலயானநதறதிற்கண்ட ச(ஐ)ரணம் என்ற சொலலானது கிருஷ்ண ரக்ஷகவாசகமாய அடையுமிடத்தையுணர்த்தும் ச(ஸ்)ரணம் என்ற சொலலாயிருகக்வேண்டுமெனறும, அதன் வியாக்கியானத தில், "கூவெஷ் வொடாநஹிரெவவெத்தி" என்றிருப்பது கூவெஷ் வெடா நு)ஹிரெவவெத்தி என்றிருக்கவேண்டுமென்றுந் தோன்றுகின்றது.

6. ஈனுலகத தாயி னிசைபெறூஉ மஃகிறந்
தேனுலகத தாயி னினிதாகுங—தானெருவ
ளுள்வாயு நலறஞ செய்வாற் கிரண்டிலெருமை
வேள்வாய் கவட்டை நெறி.

எ-து, இவ்வுலகின்நிறைத தாராய்வேமாயிற் புகழைப்பெறாமை, புகழைததரினர மறுமைபுலகின்நிறைத் தாராய்வேமாகில மறுமைபுலகாமை மினிதாம, ஆதலால நாடோறு நலறஞசெய்புமிமா நவற் கிரண்டிலெருமை முங் கவட்டைநெறியின்கணுளவாகிய கலயாணங்கள்பாலும எ-று.

(தறிப்பு) ஈனுலகதது-இவ்வுலகின்நிறைததாகியநன்மை எனுலகதது-மறுமையுலகின்நிறைததாகிய நனமை. இசைபெறூஉம எனபதறகு நல்லறஞ் செய்வான் என்பதனோயும, இனிதாகும எனபதறகு நல்லறஞசெயவாற்கு என் பதனையும வாகியசேடங்களாகவருவித்தக கூடடியுரைத்தகொளக. எனுல கத தாயி னினிதாஉம, வேளவாயக கவட்டை நெறி என்பன பிரதிபேதம. வேள்வாய்-வேட்குமிடம; கல்யாண மீடெனறபடி. கவட்டைநெறிகண் என ஏழனுருபைவிரித்தக கவட்டைநெறிகட் கலயாணமென்க யாததிரைசெயயு மொருவன் தானகருதியவாறகுமெலலுந கவட்டைவழியிலுளளவர்களிரண் டிற் கலயாணமுளவாயின் அவன நெநெரியாறசெலலினும விருதணடு கணடு களித் தின்புறமாறபோல, அறநெறியொழுகுமொருவன், இகலோக பரலோக மிரண்டினுள் யாகுவாழினும முறையே புகழ்புணணியங்களோநுகாநு தினபுறுவ னெனக கருதறபாலோகி உவமையொபொருதத்தியுரைத்தகொள்க. ஈனுலக மெனக சுட்டிடைசெசொல்லீண்டெழித்தோனறியமெய் திரிந்துந்நின்றது. எனே யென் பதனிறுதிவிகாரதகாற்பெறாகது வேளவாய்க்கவட்டைநெறியெனக கரவொற்றுமிகக பிரதிபேதமும பாடமாயின் ஒருகலயாணதகுகு இருதலே யானுஞ்செல்லுதறகுரிய கவட்டைநெறிபோலுமெனப் பொருளுரைத்தக கொளக. இங்குக கவட்டைநெறியாவது ஒருகல்யாணத திபயசமபநதிகளுக்குந் தொடர்புடையனுதல். இத்தொடர்புடையான் எந்கள்வழியினன் எங்கள் வழியினன் என உபயசம்பந்திகளாலும உபசரிக்கப்பெற் றிருநெறியானும இன புறுதல்போல அறஞ்செய்வானும இகபரமெனனும் இருதலேயானும் இன்புறவ னென உவமையொடுபொருத்தியுரைத்தகொளக. இவ் விருதலைத்தொடர் புடையானே இரட்டைசசம்பந்தியென்பது மணமனேவழகு. கவட்டைவழி என்பது ஒரு சொலவடையாயவழக்கும் வழகு. இது கவையடி என்றும் வழங்குவதண்டு. இதனை, இரண்டொரியத்தக்கு ஒருபாயம்செய்திருகுமவ னைக் கவையடிக்காரன் என வழங்குதலா லறிக. இப்பாட்டால் இம்மைப்பய னுண்றேயுடைய பொருளின்பங்களினின்றும் இருமைப்பயனுமுடைமையால் அறம் சிறந்ததென அறத்தின்சிறப்புக் கூறப்பட்டது. அறஞ்செய்யவேண்டும் என்பது கருத்து.

7. ஆஅ மெனகெளி தென்றலக மாண்டவன்
மேஎந துணையறியான் மிகுகுநீர் பெய்திழுநதான்
றேறை முடைய தொடங்குவார்க் கில்லேய
தாஅந தரவாரா நோய்

எ-து, மூவடி நிலங்கொடுப்ப தினைத் தெளிதாமென்றுசொல்லிப் பண்டொருநா ளுலகமுழுதாண்டமாவலியுந் தன் மருதிரிசாலலே நிருமபுமாவுரியாஞ்ச செருக்ஞன்றிகு நீருதானமாக நீர்வார்த்த திலசமெல்லாமிழுநதானதலாற் குறற முடையகாரியங்களேச செயயத தொடங்குவார்க்குத தமகுத தாநதரவாராதநோய்களிலலே எ-று.

(தூறிப்பு) உலகமாண்டவன எனகெளிதாமென்று மேஎநதுணையறியாண்மிகுநீர்பெயதிழுநதான் எனக கூட்டுக. உலகமாண்டவன நீர்பெயதிழுக்தான் என்னுங்குறிப்பால எளிதெனபதற்கேறற மூவடிநிலக்கொடுப்ப தெனகு என்னும எசசசொறசளும, மேவும் என்னும வினைகேற்பத தன் மந்திரி சொலலே எனனுஞ செயப்படுபொருளும, பிறவற்றிற்கேறற பிறவும வருவித துரைகக்படடன. மேவும எனனுமபெயரெசசம ஈறறயிமெயகெட்டுத தொடைநோகக யளபெடுகக்பட்ட து சாநதரவாராநோயிலலே எனறது தாநதர வரும் நோயே உண்க எனறபடி. ஆது ஸவாயம்கிருதாரித்தப் என வட மொழியால்வழஙகுருசொலவடையினகருதததடையது திருட்டாநத தகில மேவுந்துணையறியாதுமிருதல தோமாகவகொளக. மாவலிசெயலாகிய நிறபபால் தோமுடையதொடங்குவார்க்குத தாநதரவருநோயுணடெனப் பொதுப்பொருள் தணியப்பட்டது. அரசன எதுதுணை நிறப்படையோஞையும நீதிநூல்வல்ல அமைசசாசொலவழிநடகவேணடுமெனபது கருதது.

8. எநதநறி யாறு நிறைவன்முன் மகளேச
செந்தநறிமே னிற்பச செயலவேண்டு—மந்நெறி
மான்சேரநத நோச்சினை யாங்க வணங்காகுந்
தான்செய்த பாலவ தனகு.

எ-து, எல்லாவாற்றானுங்குலநத தன்புதலவனேச செவ்வியபெறிமே னிற்கும்வகை யறிவுண்டாகசெய்யவேண்டும; அரசெய்தபெறி, மான் சேர்நதநோ கினைப்' தாலதகுகெதெய்வமாகுந தான்செய்த பாலவை யதுபோலும, அதுதனையதனகு எ-று.

(தூறிப்பு) எல்லாவாற்றானுமென்றது அறம்பொருளின்பங்களேயடைதற் குரிய பலவழிகளிலும் என்றபடி. மக்கள் எனப் பின்வருதல்நோக்கி, அதற் கியைய இறைவன் என்பதற்குத் தந்தையெனப் பொருளுரைக்கப்பட்டது. மக்கள் சாதிப்பண்மையாதலாற் பால்பிரிதலப் பொருளுரைகக்பட்டது. செங்நெறி-

பழிக்கப்படாதநெறி. நெறி என்றதனையானே அதன்கண் நிகழ்தற்குரியது ஒழுக்கமாகியநடையென்பது தானேபெறப்படுதலால் நெறிமேல்நடக்கவென்னாது நிற்கவென்றார். ஈண்டு நிற்றல் விலகாமையையுணர்த்திக் கொடுநெறிக் கட்செலலுதலேவிலக்கிநின்றது. இங்ஙனருதடகமபற்றியே, நெறிசென்மோரென்னாது "நெறிநின்றார்நீடுவாழ்வார்"* எனறும், "கற்றபி, னிற்கவதற்குதக"† என்றும், "சகடரநெறிநில்" என்றும் யாண்டும் வழங்குதலகாண்க. அறிவுண்டாயினல்லது, அங்ஙனம் நிற்றல்கூடாமையின் அறிவுண்டாகவெனக காரணம் விரிதுரைக்கப்பட்டது. அந்நெறி-அங்ஙனமசெய்த செநநெறி. மான் சேர்ந்த நோகினுஞ் எனறது மகடூஉ முன்னிலை; மானவிழிபோன்ற இணைந்தவிழியினையுடையாய என்பதுபொருள். ஆங்க என்பது உவமசசொல். தாதை-பிதாவைப் போலவே சாதகருமமுதல உபநயனமீருகியசடங்குகளை விதிப்படிசெய்து தெய்வ பிம்பதனைய பிரதிஷ்டைசெய்யுமவன்; இது, ஐயா, பட்டர், போற்றி என வழங்குவதுபோனறதொரு பூஜ்யவாசகமாகவுமாம. செய்தபாவை தனகது அணஙகாகும என்னுங்குறிப்பால், அசசெயலின்வினைமுதலாகிய தான் என்பது இங்குத் தெயவப்பிரதிஷ்டைசெயபவனே யுணாதநிறறு. செய்தவெனபதற்கு, நெறிநிறகசசெய்த எனப் பொருளடை கூட்டி, நான்முறை பிரதிஷ்டைசெய்த எனப் பொருளுரைதலுககொளக ஒருதாதையால் நெறிமுறைநிறுவப்பெற்ற தெய்வபிமபமானது அசதாதையாலும போற்றததகக பாதுகாப்பாய்நின்றே அததாதைகளும, உலகுகளும இம்மைமறுமைநலங்களே அளிதலதுவுபோல அரசன் தனமகனை நெறிமுறைநிறுதலும செந்நெறியானது, அவ்வரசனுமபோறறுதலதகக பாதுகாப்பாய்நின்றே அவனுககும், உலகுகளும இம்மை மறுமைநலங்களேயளிதலதுவும என உவமையொடுபொருதபியுரைதலுக்கொள்க. இங்கு, "பிறர்திருவாராதனததின நீாததமே ஸவீகாரயமாய்த தான் ஏறியருளப்பணணின விகரஹததினநீர்தமை ஸ்வீகாரயமாகாதோ"‡ என்று ஆண்டாள் அருளிசசெயதவாாததையும, "கணபுரங்கைதொழும், பிள்ளையைப்பிள்ளையெனறெணணப்பெறவரே"§ எனற இவ்யருகதியும் ஸமாநகாதகும. இனி, இப்பாட்டு, புதலவரைபபெறதல் என்னுமநெறியொன்றே யதிகரிகைப்படாத முதலதமாதலாலும், "இறைவன தனமைந்தனை"யெனக் கருதியபொருள் இனிதுவிளஙகாகூறாது, "இறைவன றன்மகனே" எனப் பிறிதுபொருளும கொள்ளுமாறே கூறப்பட்டமையாலும வேறபொருளும கொள்ளதகும. அதாவது — அரசன தன்பிரைகளாகியகுடிகளே யல்லாநெறிகளிலும ஒழுங்காய்நடகது மறிவுடையராகச்செய்யவேண்டும, அஙனமசெயயுநெறியானது அப் பிரதிஷ்டாபகன் காட்டியதெயவமபோலச தனகதும உலகிற்கும பாதுகாப்பாகி இம்மைமறுமைநலங்களேயளிதலதுவுமெனபதாம. இருவகைப்பொருளிலும நெறி அணஙகாதல் மகள்வாயிலாயென வுணாக.

*திருக்குறள், கடவுள்வாழ்த்தது-சு. †திருகுகுறள், சா0-ம் அதி. கல்வி-க.

‡இவை, குருபரமபராப்பிரபாவம் ஆருயிரப்படியுள, பட்டாவைபவததிற் பதினெட்டாம்பததியிலுள்ளவை.

§பெரியதிருமொழி, 8-மபதது, 2-ம திருமொழி, ஒனபதாம்பாசுரம.

9. திருநதாய்நீ யார்வதனைத தீமை யுடையார்
வருநதினு ரென்றே வயபபடுவ தூண்டோ
வரிந்தரிகால பெய்தலமைய கூடியக கண்ணும
பொருநதாமண் ணுகா கவர்.

எ-து, அவாமே லாவதனைவிட்டித தி நதாய் நீ, நிருஞசமேம்' நமமேமற் றீயமனதுடையா ரிவாவ நருதினுரென று நமககு யையமாவ தண்டோ; வரிதாளையரிநதுபெய்தலேச கூடியவிடதது ஞ கவரெடுக நின்றபொ ழுதிபொ நுதாதமண் பின்னை பொ நுதிச கவாராகாதது போ லவநம பொ நுதா எ- று.

(தறிப்பு) தீமையுடையார் எனப் பிணவருதலால அவாமேல் எனச சுட்டி வருவிதததுரைக்கபபட்டது. ஆவதனை-அபிமானதனை. விட்டு என்னும எசசசொல் வருவிதததுரைகபபட்டது திருந்தாய்-திருநதுவாயாக. தீமை யுடையார்-தீங்குபுரியுமியலபுடையார். வருநதினுரெனறு என்றது, நம்மேல ஆவமுடையராய நம்மை வயமாகவருநதினுரொனறுநினைநதி என்றவாறு. வய மாவதணடோ என்றது வயமாகா எனறவாறு. வரிந்தரிகாலபெயது எனபதனை வரிகால் அரிநதுபெயது என விகுதிபிரிதது கூட்டி, வரிதாளே அரிந்துபெய்து எனப் பொருளுரைசசபபட்டது. வரிகால-கிட்டிகளெம்பு; அது வீட்டிருககு மிரண்டினைக கிட்டுமாறுநெருககுமை வரிகொமபு. அரிநதுபெய்து-செதுகவி வைத்து. சுவரெடுகவினறபொழுதேபொருநதாதமண - ஒடடுசசுவா. சுவரொடு பொருந்தாத ஒட்டுசசுவா வீரிநது வேறபடிவதுகண்டு கிட்டிவைத்துககட்டி வலிநதுகூட்டியவிடதது ஒட்டி ஒருசுவராகாதவாறபோலத தமபகுதியொடு பொருந்தாது தமமைவிட்டவிலகுமவரை ஆர்வததால் வலிந்துகூட்டியவிடதது அவர் ஒட்டி ஒருநினையாரா எனை வமையினொடுபொருதது யுரைத்துக்கொளக. கிட்டிவச் சுக்கட்டிலுலும் விட்டசுவரோட்டாது என்பது பழமொழி. இது கிராம்யவழகது; ஒட்டுச்சுவரும் சுவரோ ரீர்ப்படிபிள்ளையும் பிள்ளையோ எனப் பாப்பனமகளிர்குழுவுள்ளும ஒருபழமொழி வழங்குவதுண்டு.

10. பெரியகட டார்க்குமபகைவர்க்குஞ செனறு
கிரிவினறித தீர்நதாரேபோற் செலலினியவரு
மெனருவிரோ டொன்றி யெனருபடா தாரோ
யிரநதூலக கொள்ளியென் பரா.

எ- து, பிரிநத தமமை நடபாகசசேர்நது நட்புக்கொண்டார்க்கும் பகைவர்க்குஞ சென்று, மனதது மெனருபிறபடின்றி மிக நட் பாயிஞர்போலே இரநதிறதது மரையும்மெடுபபிக்குஞ சிலசொறகளை

சொல்லி மற்றவரு ளொருவரோடுபொருந்தியொருப்பட்டுறுதியாயின செய்யாதார், இரண்டுதலையாணுருடுகொள்ளியோடொப்பர் எ-று.

(குறிப்பு) பெரியரட்டாராகும் பகைவர்க்குந் திரிவின்றித் தீர்ந்தார்போற் சென்றுசொலலி எனக கூட்டுக திரிவின்றித்தீர்ந்தார்-ஐயமின்றித்தெளியப் பட்டவர். இன்றித்தீர்தல், இன்றியொழிதல் எனபதுபோனற ஒருசொலலா யிற்று. தீர்நதார்போல் எனறதனுல உண்மையில, தீராதுவைத்து எனபது குறிப்பாம் இகுறிப்பானே இருதிறதாரையும் வேறபடக்குஞ சிலசொற்களே எனை, சொல்லி எனபதற்கேற்ற செயப்படுபொருள வருவித்துரைகக்பட்டது. இருதலேயாணுஞ்சுடுகொளளியோடொப்பா என றது இருதலேயாணுஞ்சுடு கொளளி, தனனுடனியைந்த இரண்டு காயந்தூறுகளே எகாலததில வேமாறு சுட்டித் தானுமவிரைவிற்கெடுவதுபோல் இவரும அவ்விருதிறதாரையுங்கெடுத் தது தாமும விரைவிற்கெடுவா என்றவாறு. இருவா தம்முள் மாறுகொண்ட விடத்துநட்பாயிஞரபோன்றுஇருதிறதாமூடா டிவேறுபடப்பார்கடக்கொடுக்க லாகாதென அரசரீதியும, நடடாரமாட்டி ஒருதிறதானறிந்பவனே தூதனுவா னெனக குறிப்பாற் றூதனிலகணமுங கூறியவாறு. இருதிறதாரைவேறு படக்குமொருவனே இருதலேக்கொள்ளி எனவும, இருதலேமணியன் எனவும் வழங்குவதுணடு இருதலேமணியன என்பது இரண்டுபுறமும தலேயுடையசா யூர்ந்துசெல்லுவலல விடப்பாமபு

11. மிக்குப பெருகி நிகுபுனல பாய்நதாலு
முபபொழிதல செலலா வொலிகடலபோன்—மிக்க
வினகல நன்குடைய வாயினு மென்று
மனகல மாகாவாங் கீழ்.

எ-து, மிகபபெருகி யாறுகளின்மிகுநீர புகப்பாய்நதாலும் ஒலி கடல உவர்ப்புநீங்காதவாறுபோல, மிகக இனத்தினன்மை மிகவுண்டா யினும எஞ்ஞான்றும மனததால நல்லவாகமாடடா கீழ்மக்கள் எ-று.

(குறிப்பு) ஒழிதல்செல்லா என்றது ஒருசொல்லாய் ஒழியாத என்னும் பொருளுணரநினறது. உப்பொழிதலில்லா என்பது பிரதிபேதம. யாறுகள், மேல்நிலததவாதலாலும, நனனீரமையுடைமையாலும நல்லினதுகுவ மையா யின. சடலகள், கீழ்நிலததவாதலாலும், நனனீரமையின்மையாலும கீழ்மகட் குவமையாயின. குலததாலும நலததாலும கடையாய கீழ்மகள அவரோடு சேர்ந்த இனத்தாலும் திருந்தாராதலால் அவரைத திருகதமுயறல பயனின்று மென்பது கருதது. இங்கு உவமையால், இனமெனறது தமமைவிருபபாதிருக் குங் கீழ்களேத் தாமாகவேசென்றுசேர்ந்த நலவினமாதலும், "மனதுாய்மை .. இனந்தூய்மைதூவாவரும்"* என்பதிற்சொல்லிய இனம மனந்தூய்மையடையு மவன் முனேவிரும்பிசசென்றுசேர்ந்த நல்லினமாதலுமாகிய வேறுபாடடைமை யால் அக்குறளொடு மாறுபடாமையுணர்க. "தெருண்ட மேலவர் சிறியவர்ச்

* திருக்குறள், 46-ம் அதி. சிற்றினஞ்சேராமை-5.

சேரினு மவர்தம், மருண்ட தண்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே"* என் பது அதிசயோக்தியடியாகவந்த அதிசங்கையாதலால் அதுவு மிதனெமிறு படா நிதனேயே வலியுறத்தியதெனவறிக. அல்லது, அதிசயோக்தியடியாகக் கலேமலேவுகாட்டுங் கவிசா தரியமாகியாவியவாக்கியமாகக்கொள்க கொள்ளவே யதிற் பிராமாண்யமின்மையாலு.ம மாறபாடின்றென வுணாக. 'ஆகாவாங்கீழ்' என இழிதகற்கண் அஃறிணேயாயிற்று. ஆநெல்லாம்வேள்ளமடுத்துமடுத் தாலும் நீர்நல்லதாமோகடல் என்பத பழமொழி.

12. விழுமிழை கலார் வெருள்பிணேபோ னேக்கங்
கெழுமிய நாணே மறைகுரு—தொழுகையுண்
மாலேயு மாலே மயக்கு முததா னஃதன்றே
சாலபினே சாலபுகு மா று.

ஏ-று, விழுமிய அணியினேயுடையகலார் வெருண்டமான்பிணே போன்றமேநாசகங்கள், ஆடவர்மாட்டெ செறிந்தநாணினேக் கெடுக்கும்; யமுனேயென்கிற ஆறறிந்தணே, யாலையுமபகவலலமாயவணேயும் மயக்கதநின்கண்ணேவீழப் பின்னேயென்பாள் தன் அழகினுன் மயக் குறுதலினுள்; மிகுதிலைய யதனினுமிகதொனறு கெடுக்குநெறி யது வன்றே எ-று.

(குறிப்பு) நாண்-நிறை. அது, கெழுமியாணெனச்சிறப்பிக்கப்பட்டமை யால ஆடவர்மாட்டுச்செறிந்தநாண் எனப் பொருளுரைக்கப்பட்ட.. ஆடவர் மாட்டுநாண்செறிந்ததென்பதை,'கருமததா ஞணுத ஞணுத் திருதத, னல்லவர் நாணுப் பிற'† என்பதனுலறிக. மால் என்ற விதவாதசொல்லாற்றலாலும் பொரு ளாற்றலாலும் யாரையுமமயக்கவல்லமாயவன் எனப் பொருளுரைக்கப்பட்டது. யாரையுமென்றது பின்னேப்பிராட்டியுமஃப்பட எலலாரையுமென்றபடி. மாலே-பின்னேப்பிராட்டி. மயக்குறுத்தலாவது-வியாமோஹிப்பித்தல். அதாவது, பின் னேப்பிராட்டி கண்ணபிரானிடத்த உழுவலன்புடையளாதலின் இவளுக கவ னிடத்துள்ள அளவிறந்தபிரேமமானது அவனது அளவிறந்தநிறையைமறைக்க, அவனுகு இவளிடத்துள்ள அளவிறந்தபிரேமம், இவளது அளவிறந்தநிறையை மறைக்க இருவரு மொருவரையொருவர் கலந் தின்புற்றார் என்பதாம். இதனே, சிலப்பதிகாரத்த ஆய்ச்சியர்குரவையுள், "வஞ்சஞ் செய்தான் நெழுநைப் புனலு, ணெஞ்சங் கவர்ந்தா ணிறையெண் கோயாம, நெஞ்சங் கவர்ந்தா ணிறை யும் வளேயும், வஞ்சஞ் செய்தான் வடிவெண் கோயாம" எனவும், "தையல் கலே யும் வளேயு மிழந்தே, கையி லொளித்தாண் முகமென் கோயாம், கையி லொளித் தாண் முகங்கண் டழுங்கி, மைய லுழந்தான் வடிவென் கோயாம்" எனவும்,

* கம்பராமாயணம், வரைக்காட்சிப்படலம், செய்யுள்-8.

†திருக்குறள் கமஉ-ஆம் அதி. நாணுடைமை-க.

"வையமளந்தான்றன் மார்பிற் றிருநோக்காப், பெய்வளைக் கையாணம் பின்னைதா ளெமென்றே, ஐயென்ரு ளாயர் மகள்" எனவும் இளங்கோவடிகள்காட்டியவாற் ருனுமுணர்க. "தொழுதையுண், மாலேயுமாலேமையக்குறைதாள்" என்றது எடுத்துக் கொண்டபொருளுகேற்றதோ ரிதிகாசங்கூறியவாறு. அன்றேவென்றது ஆச் சரியக்குறிப்பு. இனி, இப்படியும் அந்யோந்யாச்ரயமா யொருஸம்பவமுண்டோ வென்னும ஆசங்கையை, நியாயஸித்தமான திருஷ்டாந்தத்தாற் பரிஹரிக்கிறூர, சால்பினையென்றதொடங்கி. சாலபு-வியாபகதவவாசகம்; அது இங்கு வியாபகத் தைக்கு ஆகுபெயராயிற்று. சால்பினைச்சால்பறுகுமாறென்றது எல்லாவற்றையுந் தன்னுளடக்கின தாஞனறுளடங்காது சாவவியாபகமாயிருப்பதொன்றைப் பிறி தொருசர்வவியாபகம வியாபித்ததாற்போலு, என்றவாறு. அதாவது சாவவியாபக மான ஆகாசத்தைப் பிறிதொருசாவவியாபகமான இடம வியாபிக்குமதுபோலு மென்பதாம். இப்பாட்டால், இரண்டுவியாபகப்பொருள் ஒன்றினையொன்ற வியா பிக்கவே அவற்றுளள இது சிறிது, இது பெரிது என்று சொலலவொண்ணுதபடி இரண்டும் அளவிறந்துசெல்வதுபோல உழவலனபுடைய, காதலனுங் காதலியுங் கூடுங்கூட்டதது அவ்விருவாகுமுளதாமபிரேமமு மளவ்றந்துசெல்லுமெனக காமபுருஷார்த்தமாகிய இன்பத்தின்சிறப்புக கூறபபட்டது. அறத்தல, வரைதல், அவசசேதம என்னுமசொறகளே வியாபித்தற்பொருளிலவழங்குதல நியாய நூலார்மரபு. சால்பினைச்சால்பறுக்கும் எனனு மிப்பழமொழி நியாயநூல் வழக்குப்பற்றிவந்ததெனகொளக இப்பாட்டினைப புணாசசிவிழையாமையின் பாற்படுத்தா புறத்திரட்டினையா. இது புணாசசிவிழையாமையுது தணி வுறுதலாமையாலும், மேலோர்கொள்கையொடுமாறுபடுதலாலும், உவமையொடு பொருந்தாமையாலும் அது பொருளண்றெனவுணர்க.

13. *பாப்புக் கொடியாற்குப் பான்மேனி யான்போல*
தாகி யமருட் டலைபெய்யார்—போக்கி
வழியராய் நட்டார்க்கு மாதவஞ்செய் வாரே
கழிவிழாத் தோளேற்று வார்.

எ-து, பாம்புக்கொடியையுடைய சூருகுலவேந்தற்குப் போரின் கண் உதவிசெய்தற்குத் தொடர்புடையனுகிய பாலவண்ணன்போல, நட்டார்தாக்கியபோரின்கட டலைப்பெய்யாதே தமமுடையநட்டார் பட்டதற்பின் அவர்க்கு நன்றுகவென்று பெருந்தவஞ்செய்வார, விழாக் கழிந்தவழிற் புதல்வரை விழாக்காண்டற்பொருட்டுத தோண்மே லேற்றுவாரோடொப்பர் எ-று.

(குறிப்பு) பாப்புக்கொடியான-அரவக்கொடியுடையதுர்யோதனன். பான் மேனியான் - பாலபோலவெண்ணிறமுள்ளதிருமேனியையுடைய பெலராமன். தாக்கிய என்பது தாக்கி எனக் கடைக்குறையாயிற்று. தலைப்பெய்யார்-தலைப் பெய்யாது என முற்றெச்சப்பொருளுணர்த்திற்று. தலைப்பெய்தல-புகுதல். வழியராய்நட்டார்க்குத் தாக்கியமருட்டலைப்பெய்யாதுபோகி மாதவஞ்செய்வார் எனக்கூட்டி, தாம் தொடர்புடையராயிருந்துவைத்துத் தம்மைநட்டார்க்குப்

போர்நேர்க்குதழி அப்போரிற்புகுத்தாக்கி அந்நட்டார்கருஉதவிசெய்யாது நீர்த்த யாத்திரைமுதலிய விரதமேற்கொண்டுசெல்பவா எனப் பொருளுரைத்துக் கொளக. "கழிவிழாததோளேற்றவா" என்றசொலவடை சமயத்திலுதவாதவர் எண்ணும குறிப்புடையது. கழிவிழாத்தேரேற்றவா எனபது பிரதிபேதம் இது திருநாட்கழித்துத்தேரிழக்கவந்தார் எனனும சொலவடையாம. வேணடுங் காலதுதவாதவாநட்பாற் பயனிலலெயெனபது கருதது

14. தாநட டொழுகுதற்குத தகவா ரெனவேண்டா
யாரிடத தாயினு நட்புக கொளலவேண்டுங்
கானடரு நாறுங கதுப்பினைய தீநறுதேரா
நாய்நடடா னலல முயல.

எ-து, தாம பிறரொநடபுகொண்டொழுகுதற்குத தகுவா, தகாரென்று ஆராயவேணடுவதிலலை; யாவாநடபியாயினும நட்பைக கொளலவேண்டும; எலலாபபூக்களினு முலடையகாட்டினைவென்றுநாறு கின்ற மபிரினைபுலடையாய்! தமமைத தீநாறுதேரா! நாயொநடடால அநநாய் நலல முயலினை எ-று.

(குறிப்பு) தாம நடடொழுகுதறகு எனறது தம காரியமாகப் பிறரொடு நட்புக்கொணடு ஒழுகுதறகண் எனறவாற தகாரெனவேண்டா என்றது அபபிறர் தகாராயிருகவேணடுமனனும நியமமிலலை எனறவாறு யாநட்பே யாயினும என்றது தகாநட்பேயாயினுமாக, தகாதாநட்பேயாயினுமாக எனற வாறு. பின நட்பு எனறது அது என்றவாறு. கான-காடு. அடல-வெலலுதல. கதுபப-கூநதல. கானட்நாறுகதுப்பினைய எனறது நறுநாற்றப்பூககண்மலிந்த காட்டிலும்மிகுப பரிமளிகருக்கூந்தலையுடையா யென்றவாறு. தீற்றல-ஊட்டல. முயல-முயற்கறி. நாபோடுசேர்ந்தாலும்நல்லழபயல்கிடைத்தும் எனபது பழமொழி. தமகு உதவிசெயதற்குரியா இழிதகையராயினும அவா நட்புக கொளளற்பாலதென்பது கருதது. பிறர ஸ்வயகாரியமாக நட்புகொளள வரின் அவரைத தகார், தகவிலரென்பதை யாராய்ந்து, தகாராயின் நட்புக கொள்ளவும, தகாதாராயின் நளளாதொழியவுமவேண்டுமென்பது குறிப்பு.

15. அங்கண விசுமபி னகனிலாப் பாரிக்குந
திங்களுந் தீங்குறுதல காண்டுமாற்—பொங்கி
யறைபபா யநுவி யணிமலை நாட
வுறற்பால யார்க்கு முறும.

எ-து, அங்கண்விசுமபினின்று மிக்கநிலாவைப்பரப்பும மதியமும பாம்பினுற்றீங்குறுதலதாணினின்றுமாதலால,கற்பாறையின்கண்மிகுகு வந்துபாயாநின்றவ நுவியையுடைய மலைநாடனே! தமக்குறுகுகடவதுன் பங்கள் யாவர்க்கும்வருவதுமு எ-று.

(குறிப்பு) அங்கண்விசும்பு எனறது, திங்களைக கோள்பற்றுங்காலத்தில், தப்பியோடிப்பிழைகுக தட்டித்தடையில்லாத வெட்டவெளியானஇடத்தின் அலலதுந்தசெனகரியாதிசெயங்கூறியவாறு. அகனிலாப்பாரிகருமெனறது இருள்

வடிவான ராகுகேதுக்களென்னும சாயாக்கிரகங்கள் தன்னிடமணுகுவதற்கே யோக்கியமில்லாத தனது ஸ்வபாவசக்தியின்வலிமைகூறியவாறு. திங்களும் என்றது தன்னைப்பற்றவரும்சாயாகிரகங்கள் பதினெட்டாண்டுசென்றுகடக்கு மொருராசிமண்டலத்தைப் பரிதி ஓராண்டளவிற்கடப்பதாயிருக்கவும், தான் ஒரு மாதத்தக்குள்ளேகடந்துசெல்லும் மிகவேகமாகிய தப்புதற்குரிய சாதனத்தி சயங்கூறியவாறு இக்கருத்துப்பற்றியே அங்கண்விசும்பிலவிரொளிபாரிக்குஞ் செங்கதிருந்தீங்குறுதலகாண்டும என்னுத “திங்களுந்தீங்குறுதல்காண்டும்” எனச் சிறப்புமையைப்பாற் செங்கதிருமகப்படக்கூறினுரென்வுணர்க. இடமபொரு ளாற்றலான் மாற்றமியலபுடையா எனினும், எயதியஙியதிதவறுதாகையால் ஊழால்வருந்கேட்டிற்கு வருந்தலாகாதென்பது கருத்து. வருவதுவந்தேதீரும் என்னும உலகவழகான பழமொழிப்பொருளே இங்குப் பொருளாகக்கொளளப் பட்டதுபோலும, ‘வருவதுதானேவரும’ எனனு மபியகதர்வாக்கும, இக்கருத துடையதாயிருப்பதகாணக. அம்புலயையு மாவுவிழுங்கும் என்பது மொரு பழமொழியாம்.

16. நணபொன்றித தமமாலே நாட்டப்பட டார்களைத
கணகண்ட குற்ற முளவெனினுங் காய்நதிலார
பண்கொண்ட தீஞசொற பணைதோளா யாருளரோ
தங்கன்று சாகதறப பார.

எ-து, நண்புசெய்து தமமாலே நாட்டப்பட்டாரகளைத தங் கண் காண அவர்களசெயதகுற்ற முளவாயினும பொருளார; பண்கொண்ட தீஞசொற்பணைதோளாய! தங்களனறுகு பாலகொடாமைத யதிகாம வலைத பசுவினைசகறபபார யாவருளர எ-று.

(குறிப்பு) காயநதிலார எனனும பயனிலைகொகறப மேலோர் என்னும எழுவாய் வருவிதுதறைத தங்கொளக இதனுல் தூயநெறிவழகினும ஆன்றோ ரது ஒழுகைநெறிவழகுஞ் சிறந்தெனபது குறிக்கப்பட்டது காய்ந்தியார் என பது பிரதிபேதம. அதறகுக காயாதுதவுவரெனபது கருததாக்கொள்க. பணை-மூகில. சாவுகறப்பா என்பது சாக்கறப்பா என விகாரமாயிற்று. “களையு நாளைகொலவும”* என்புழிப்போல சாக்குச் சாதல வருந்தலுணாத்திநின்றது. கன்றுசாகப் பால்கறப்பாரா எனபது உலகவழகான பழமொழி. தம்மால வளர்க்கப்படுமகன்று கட்டியகயிறறுதறசென்று பாலுண்ணகண்டாராயினும் பின்னரும் அதற்குரியபால்விட்டாது அது வருந்துவகை பாலே முற்றக்கறப்பா ரில்லை; அதுபோல நண்பொன்றிப் போற்றப்பட்டார் உரிமையால் நியதி கடந்து தமக்கு வேண்டியதொருபொருளைத் தாமே கோளாதுகொள்ளினும் அது

*திருக்குறள் அஅ-ம் அதி. பகைத்திறந்தெரிதல —க.

காரணமாக அவர்க் கொன்றும் உதவா தொழிக்கற்பாலரல்லர் எனத் திட்டாந்தத்தொடு பொருத்தியுரைத்துக்கொள்க இப்பாட்டால் நட்பிற் பிழை பொறுக்கவேண்டுமென்பது கூறப்பட்டது. "வஷவ்ய ஜூ3விலவுஜ்ஜ்ஹ்வு வுயமெஅத ஈஹாவ்ரதம்" என்னும் வடமொழிவாக்கியமும், "தாம் வளர்ததோர், நச்சுமாமரமாயினுங்கொலார்"* என்னுந் திருவாசகமும் இக்கருத்துடையன.

17. உள்ள தொருவ ரொருவர்கை வைததக்காற்
கொள்ளுந பொழுதே கொடுக்கதாங்—கொள்ளார்
நிலைபெரு ளென்றதனை நீடழித்தல வேண்டா
புலைப்பொரு டங்கா வெளி.

எ-து, தமக்குள்ளதொருபொருளை யொருவர் தங் ஙகயின்கண் வைததக்கால அப்பொருளை வைததவர்கள்வேண்டியபோதே வைக்கப் பட்டார் தாங் கொள்ளாதே கொடுக்க; தமககு நிலைமையுடையபொரு ளென்றகருதி, அவாகதக்கொடாதே நீடழிதலலவேண்டா; புலையர் மாடடுள்ளபொருள அடங்காவாய வெளியாம; ஆதலான் அடைககலப் பொருளை மறைககவியலா எ-று.

(தறிப்பு) புலைப்பொருள-புலையரடபுலால. அவர் அதை மறையசெய் யினும அது மறையாது காறறததால வெளிப்படும; அதபோல அடைக்கலப் பொருளை பிறரறியாதபடகனும அஃதடகாதவெளிப்பட்டுப் பழிப்புக்கிடமா மெனப் பொருளைநிலைபொருதது யுரைததுகொளக. இதனை, "மறைவழிப் பட்ட பழிமொழி செய்வம, பறையறைகாக கோடிப் பறகுமை-கழிமுடைப், புன்புலா ணறறம புறமபொதிந்து மூடினுஞ், செனறறைதைகருஞ் சேயா முகத்து"†என்னூர் பிறரும. மறைந்துசெய்பவன றவறு வெளியாகுமென்ற வழங்கவேண்டுமிடத்து, நாற்றம்வெளியாகுமெனபது சாதாரணவழககு. அதனையே "புலைப்பொருடங்கா வெளி" என இடகரடகாய்க்கூறினரெனகொள்க. இதனை இன்னும் அசப்பியபாஷைமாகப் பாமரவழங்குப் பழமொழியு மொன்றுண்டு. இன்னொ ரன்னபழமொழிகளு மிடகரடகி யிந்நூலுட்கூறப்படுமென்பதனைப் பின "இழிததகககாணிற்கஞ்"‡ என்பதனாலுமறிக.

---

*திருவாசகம், ஆநந்தாதீதம செய்—கூ.

†நீதிநெறிவிளகக்கம், செய்-கூடி.

‡ இந்நூலின் 182-ஆம் செய்யுள்.

18. தக்காரோ டொன்றித் தமரா யொழுகினூர்
மிக்காரா லென்று சிறியாரைத தாந்தேரூர்
கொக்கார் வளவய லூர தினலாமோ
வக்காரஞ் சேர்ந்த மணல்.

எ-து, தக்காரோடுபொருந்தி மற றவர்க் குறவாயொழுகினராதலா லவர்மிக்ககுணத்தையுடையா ரிவரென்றுகருதிச் சிறியகுணதையை யுடையாரைத தாந தேறலாகாது; மாஞ்சோலையானிறையப்பட்ட வளவயலூரனே! அக்காரமாகியபாகினேடுசேர்ந்தமணலேத தின்ன லாமோ! ஆதலான் எ-று.

(குறிப்பு) தககார்-வினையாட்சிகருரியரெனததெளியத்தக்க குடிப்பிறப்பு, கல்வி, அறிவு, அன்பு முதலியன வுடையார். சிறியார்-சிற்றினம். இது, "கல்லதனலனும் தீயதன்றீமையும இல்லென்போரும், வீடரும், தூர்ததரும, கடரும், உள்ளிட்டகுழு"*. தேரூர் என்பதற்குக கருத்துரோக்கித் தேறலாகாதெனப் பொருளுரைக்கப்பட்டது. கொக்கு-மாமரம். மணல் சர்க்கரைப்பாகினேச்சார்ந்து கிடந்தாலும், அதற்குத தன்னியல்பே உளதாவதன்றிச் சர்க்கரைக்குரிய இனிமையும் மென்மையும் நன்மையும் எய்தாமையால் அது தின்னலாகாதவாறு போல, சிறியார் தககாரினத்தைச்சார்ந்தாராயினும் அவாக்குத் தம்மியல்பே உளதாவதன்றித் தக்கார்க்குரிய இனிமையுமென்மையு நன்மையுமெய்தாமையா லவரை வினையாட்சியிற் தெளியலாகாதென விரித்துரைததுக்கொள்க. "தாகட் டொழுகுதற்குததக்காரெனவேண்டா"† என்றதனுற் சிறியார் தக்காரைற் கொள் ளப்படினு மவர் சிறுமையினீங்கி அநபாய்யராகத் தெளியப்படுதற்குத தகுதி யுடையராகாரென்பதும், அச் சிறியாரினீங்கிய தக்காரே அநபாய்யராவரென்ப தும் கருத்தாகக்கொள்க. "பானகத்துநும்பு" என வழங்கும் சொலவடையின் கருத்தும் இது. "மிக்குப்பெருகி" என்னும் பதினேராம பாட்டுக்குக் கீழ்மக்க ளைத் திருத்தலாகாதென்பது கருத்தாகலானும, இப்பாட்டிற்குச் சிறியாரைக் கைக்கொள்ளலாகாது என்பது கருத்தாகலானும் இது கூறியதுகூறலாகாதென வுணர்க.

19. கறுத்தாற்றித தம்மைக் கடியசெய் தாரைப்
பொறுததாற்றிச சேறல் புகழா—லொறுத்தாற்றின்
வானேங்கு மால்வரை வெற்ப பயமின்றே
தானேன் றிடவருஞ் சால்பு.

---

*திருக்குறள் 46-ம் அதிகாரவிவரணம்.

† இக்நூலின்பதினென்காஞ்செய்யுள்.

எ-து, கோபத்தின்கண்ணேமிக்குத் தமக்குக்கொடியவாயிருப்பன செய்தாரையும் பொறுத்ததுச்செலுத்துவது புகழாவது; ஒறுப்பின் கண்ணே மிக்கொழுகின், வானேங்கு மால்வரைவெற்பனே! அதனான் ஒருபயனில்லை; தான் பிறரைப்பொறுக்கும பொறையாண்வருவது சால்பாவது எ-று.

(குறிப்பு) தம்மை உருபுமயக்கம். செய்தாரையும் என்னும் சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. பொறுத்து - அவர்செய்யுங் கடியனவற்றைச்சகித்து. ஆற்றி-அவர்க்குள்ள மனவெப்பததை ஆற்றி. சேறல்-அவரை நல்வழியிற் செலுத்துதல்; ஈண்டுச் சேறல் பிறவினைப்பொருளுணர்த்திற்று. சேறல்புகழெனக் காரணம காரியமாயுபசரிக்கப்பட்டது. பொறுததாற்றிச்சேறல எனபது பொறுததாற்றிகொள்ளல் எனவும, மால்வரைவெற்பவென்பது மால்வரைநாட எனவும் பிரதிபேதங்களிலுள்ளன. வரைவெறபவென்பதற்கு மூங்கில்களேயுடையமலைநாடனே எனப் பொருளுரைததுகொள்க. ஒறுதல்-தண்டிதல, ஆற்றல்-மிகுதல. ஒறுதலாற்றலால் உட்பகைகொள்வராதலாலும், புகழும் சாலபு மெய்தாமையாலும அதனாற் பயனில்லை என்றார். நோன்றல்-பொறுத்தல்; இதனை, "உற்றநோய்நோன்றல்"* என்பதனாலுணர்க. தானேகெடவருஞ் சால்பினைப் பிரதிபேதமிருப்பினும், அது உரையொடுபொருந்தாமையாலும் வேறு பொருட்பொருதத மின்மையாலும விலக்கத்தகாது. சால்பு-பெருமை. **பொறுத்தவர் பெரியவர்** என்பது உலகவழக்காய்வழங்கும் பழமொழி. இப் பாட்டால், தமக்குத் தீங்கிழைப்பாரை யொறுத்தலினும் பொறுத்தலே சிறந்ததென்பது கூறப்பட்டது. இது "ஒறுதாற்றின்" என்னுங்குறிப்பால் ஒறுத்தற் குரியராகிய எளியார் பிழைத்தன பொறுத்தலே அறமெறிகோக்கி விதிததலால, ஒத்தார் மிக்காராய பகைவர்பிழைத்தனபற்றி, "பொறையெனப் படுவ தாடவர் தமக்குப் பூணெனப் புகலினும பொருந்தார், முறையறப் புரிந்தா லக்கணத் தவர்த முடித்தலே தணிப்பதே முழுப்பூண்"† என்னும் அரசநீதியொடு மாறுபடாதென வுணர்க.

20. காவலனே யாக வழிபட்டார் மற்றவ
னேவல் வினைசெய் திருந்தார்க் குதவடுத்த
லாவனைய நின்றதன் கன்று முலையிருப்பத்
தாயண ணுன்சுவைத் தற்று.

---

*நிருக்குறள் உஎ-வது அதி. தவம். ௬.

†வில்லிபாரதம் சேசன்வதைச்சருக்கம். செய்—சக.

எ-து, அரசனைத் தமக்குநட்பாம்வகை வழிபட்டொழுகினோர், மற்றவ்வரசனுலேவப்பட்டவினைசெய்திருந்தபிறர்க்குஉதவியையடித்துமற்றவராற் காரியங்கோடல், தண்ணியணையங்கின்ற ஆவினை யதன்கன்று முலையைத்தவிரத் தாயணலைச்சுவைத்தாற்போல்வதொன்று எ-று.

(தமிழ்ப்பு) உதவடித்தல்-உதவுதலைப்பின்பற்றிக் காரியங்கோடல்; அதாவது எவல்வினைசெய்திருந்தார்க்கு ஒன்றுதவுதலைச்செய்து அதற்குப்பிரதியாகத் தாங்கருதியகாரியங்கொள்ளமுயறல் என்றபடி. ஆவினையங்கின்றதன்கன்று என்றதற்கு, தண்ணையணையங்கின்றஆவினை யதன்கன்று எனப் போந்தபொருளுரைக்கப்பட்டது. அணல்-பசுவின்முன்னங்கால்களினிடையே புடைத்திருப்பதோர் உறுப்புவிசேடம். அது, தாடியினடியாம். ஒரு பசுக்கன்றுனது, தன்னிடத்தன் புள்ள தாயின்மடியிற் பால்சுரந்திருக்கும்போதே யதன்வழி தனக்குவேண்டும் பாலைநகராது, தாயின் தாடியைசுவைப்பதாற் பயனுறுவாறுபோல, ஒருவன் தனக்கு அரசன் அன்புடையனுயும, வேண்டிற்றுதவும விழைவுடையனுயும் இருகுமபோதே அவனிடம கொள்ளுதற்குரிய காரியங்கொள்ளாது அவனே வியவேலைகளைச்செய்யுமவருகு ஒன்றுதவிக் காரியங்கொள்ளுமுயற்சி பயனின்றும் என உவமையொடுபொருத்தி யுரைத்துகொள்க. முயற்சி பயனிலதாதற்குக் காரணம், அரசனிடத தநிபரிசயமுடையராயிருத்தம், இக்காரியம் அவனிடத தெளிந்திற்கொள்ளாமைபால் அவனுக்கு இதுசெய்ய விருப்பமில்லையோ என்ற ஐயுறவாலும், இவர்க்கு இதுசெய்யின இவ்வாறே பிறர்க்குஞ்செய்யுமியல் பினனென இவர் தெரிந்துவைததுப் பின்பொருகாலத்தஅரசனுக்கு அறிவிக்கக் கூடுமென்னு மச்சத்தாலும் அவ ரதுசெய்யாமையென்க. அரசனை வழிபட்டார் அவனுலடைதற்குரியபயனை எய்தும்வாயிலறிந்துபெறுதல் எளிதென்பது இதனுற் கூறப்பட்டது. தாய்முலைசுவைக்கப்பால்வருமோ? தாடியைச்சுவைக் கப்பால்வருமோ? என்பது பழமொழி.

21. உரைமுடிவு காணு னிளமையோ னென்ற
நரைமூது மக்க ளுவப்ப—நரைமூடிதுதுச்
சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிசடை
கல்லாமற் பாகம் படும்.

எ-து, தம்முண் மறுதலையாயினிருவர் தமக்குமுறைமைசெய்ய வேண்டிவந்து சிலசொன்னு லச்சொல்லின்முடிவுகண்டே யாராய்ந்து முறைசெய்ய வறிவுநிரம்பாத விளமைப்பருவததானென் றிகழ்ந்த நரைமூதுமக்களுவக்கும்வகை நரைமுடித்துவநது முறைவேண்டிவநத விருதிறத்தாருஞசொலலியசொற்கொண்டே யாராய்ந்தறிந்து முறைசெய்தான், கரிகாற்பெருவளத்தானென்னுஞசோழன்; ஆதலாற் றத்தங் குலத்துக்குத்தக்கவிசடைகள் கற்பதற்குமுன்னே செம்பாகமுளவாம் எ-று.

(குறிப்பு) 'தம்முண்மறதலையாயினுரிருவர் தமக்குமுறைமைசெய்யவேண்டி வந்து சிலசொன்னுல்' என்பதும், 'முறைவேண்டிவந்த இருநிறத்தாருஞ்சொல்லிய' என்பதும் இசையெச்சம். காணு என்றதனுல், கண்டு முறைசெய்வதற்கேற்ற அறிவுநிரம்பாமையாகிய காரணம் உபசரிக்கப்பட்டது. 'ஆராய்ந்தறிந்து' என்றது முறைசெய்தற்குரிய சாதனம்விரித்துரைத்தவாறு. தூலவீச்சை கல்லாமற்பாகம்படுமென்றது பழமொழி. இது 'குலவித்தை கல்லாமற்பாதிவரும்' எனவும், "குலவித்தை கல்லாமலேவரும்" எனவும் வழங்கப்படுகிறது. இப் பழமொழிப்பொருளே இப்பாட்டினுள எடுத்துக்கொண்டபொருளாக நாட்டப்பட்டமையால் "உரைமுடிவு..... சோழன்" என்றது அப்பொருளேநிரூபித்தற்கு ஏதுவாகிய காரியவாறு இவ் வைதிகம, மணிமேகலையுள்ளும் "இளமைகாணி முதுமையெய்தி-உரைமுடிவுகாட்டியவுரவோன்"* எனக் குறிக்கப்பட்டுளளது. அதாவது —முனபொருகாலத்துச சோழநாட்டி லரசுரிமைகருமியாரில்லையாக, அதற்குரியானேத்தெரிந்தெடுக்குமாற அந்நாட்டார் பட்டதுயானேயின்கையிற் பூமாலேகொடுத்துவிடுத்தவிடத்து, அது கருவூர்சென்று, அங்குக் கடிநிலையுளி வீலையாடிக்கொண்டிருந்த கரிகால்வளவன்கழுத்திலே அம் மலர்மாலேசாத்த, அது கொண்டு, அவனே யவ் வரசுரிமையுடையானென முடிசூட்டப்பெற்று, இவ்வையுரிருந்து முறைசெய்துவருங்கால், முறைசெய்வதற்கேற்ற அறிவுநிரம்பாத இவ்வேயோனுதலால் இவன்செய்யும் உரைமுடிவு நெறிப்படுமா றெங்ஙனம் என முறைவேண்டிநிற்கும் முதியோ ரையுறுமாற்றையுரிது, அவ ரங்ஙன மையுறுவண்ணம், பின்பு பிறிதொருமுதியோரைவைத்து முறைசெய்வான்போன்று, உரைமுடிவரித்து முதியோர்வேடம்பூண்டு தானேயிருந்து முறைசெய்துவந்தான் என்பதாம். இச்சரித்திரத்தைப் பின்னர்க் "கழுமலத்தியாத்தகளிறு"† என்னும் பாட்டுரைகூட்டி யுணர்க. இதனுல், குலவித்தை இயலபானேவருமாதலால் ஒருவனுக்குப் பிறதொழிற்பயிற்சி சோர்வுபடுவதுபோலக் குலத்தொழிற்பயிற்சி சோர்வுபடாதென அதன்சிறப்புக்கூறப்பட்டது. குலத்தொழிலேக் கைவிடலாகா தென்பது கருத்து. [இக்கருத்துப்பற்றியே முன்னுராற் பலவகைத்தொழில்களும் இந்நாட்டிற் குலாசாரமாக நியமிக்கப்பட்டன.]

22. உரைத்தாரை மீதூரா மீக்கூற்றம் பல்லி
கெரித்த சிறுபோலு நீளிரும் புண்ணேப்
பொரிப்பூ வித்முறைக்கும் பொங்குநீர்ச் சேர்ப்ப
நரிக்கூஉக் கடற்கெய்தா வாறு.

எ-து, தம்மே லடர்த்துச்சொல்லப்பட்டாரைச் செயலாலடர்க்க மாட்டாது வாயாலடர்த்துச்சொல்லுஞ் சொலவு, பல்லியினுடைய

*காதை-4 அடி-107-108.

† இந்நூலின் 62-ஆம் செய்யுள்.

முட்டையைநெரித்தாற்போலமலர்ந்த நீளிரும்புன்னையினுடைய பொரி நிறம்போன்ற பூக்களினுடையவிதழ்கள்பெய்யாநின்ற பொங்குநீர்ச் சேர்ப்பனே! நரியின்கூப்பீடு கடலினோசையைத் தாழ்படுக்கமாட்டாத வாறுபோலும் எ-று.

(தெளிப்பு) 'உரைத்தாரை'யென்பதற்கு, பின்வரு 'மீதூராமீக்கூற்றம்' என்னுங்குறிப்பால், 'தம்மே லடர்த்துச்சொல்லப்பட்டாரை' எனப் பொருளுரைக்கப் பட்டது. தம்மே லடர்த்துச்சொல்லப்பட்டாரை யென்றது, தம்மை யடர்த்துப் பேசி வாய்க்கலகம்விளைப்பாரை யென்றபடி. சொல்லப்படுதல் ஈண்டுச் செய் வினையளவாய்நின்றது. அடர்தல்-அடக்கி மேற்சேறல். மீதூர்தல் என்பதனுள் ஊர்தல் செயலாதலால் அது செயலாலடர்த்தலாயிற்று. அது இங்கு ஊர்தல் என்னுங் குறிப்பான் மெல்லெனமேற்சேறலாகிய நெறிப்பாடையை முறை செயலென அறிக. இதனுல் எதிர்த்துதாக்குஞ் செயலாலடர்த்தல் விலக்கப் பட்டது. மீதூராமீகூற்றம-பெயரெச்சத்தொடர். அதற்கு, 'செயலாலடர்க்க மாட்டாது வாயாலடர்த்துச்சொல்லுஞ்சொலவு' எனத் தெளிவுபற்றி வினை யெச்சவாய்பாட்டாற் போந்தபொரு ளுரைக்கப்பட்டது. அல்லது ஊராதென்னும் வினையெச்சததிறுதி விகாரததாற்றொகுதெனக் கொளக. நெரித்த என்பது உருபுகொள்ளும்பெயரிடைவந்த செயப்பாட்டுவினைப்பெயரெச்சம், செய்ததுபோற்கூறப்பட்டது. உறைத்தல்-துளித்தல்; அது பெயலொப்பு மையால் உதிர்தலுணர்நின்றது. சேர்ப்பன்-கடற்கரையுடையான். கூ-முதனிலைத்தொழிற்பெயர். கடல் என்பதற்குப் பொருளொடுபொருந்தக் கட லோசையெனப் பொருளுரைததிருப்பது உபசாரவழகு. எய்தாவாறு இதில் எய்தாமை-பொருந்தாமை; அது ஒவ்வாமைக்குறிப்பானமையால், 'தாழ்படுக்க மாட்டாதவாறுபோலும்' என உவமவுருபுவிரிததுப் பொருளுரைக்கப்பட்டது. தாழ்படுத்தல்-தாழச்செய்தல்; அடகுதலென்றபடி. நரிகூப்பீடு கடலொலி யைத் தாழ்படுக்கமாட்டாதவாறுபோலச் சொல்லாலடர்த்துவருவா ராரவாரத்தை எதிர்ப்பாரது சொல்லாரவாரம் தாழ்படுக்கமாட்டாதென்பது உவமையாற்போந்த பொருளாம். ஆகவே, சொலலாலடர்ப்பாரை யடர்ககப்படுவார் தாமும் அவ்வா றடர்க்காது ஒறுகுமுறையானே யடகுகுவெனபது கருததாகக்கொள்க. நரிக் கூக்குரற்கடன்முற்றும்? என்பது பழமொழி. இங்கு முற்றும்? என்றது காரு வாதலால் முற்றுதென்பதே பொருளாம். இது, கடற்கரைக்காட்டிலுள்ள நரிகள் கரையருகுவரும் நண்டுகளோத்தின்ன, அதுகண்டு கடல் தம்மையோட்டக் கருதி ஆரவாரித்துவருகின்றதென்றுநினைத்து,அக்கட லோயோட்டக்கருதியவைதிரண்டு கூவினி யெடுக்கின்றனபோலும் என நரிகளிரவி லூளையிடுதலைவருணிக்கும் கற் பனையடியாகவந்தநாட்டுவழக்கு. நரிக்கூவினிக்கடங்காதகடல் இராமபிரானுணைக் கடல்கியவாறுபோல, மீக்கூற்றக்கடங்காது ஆரவாரித்துக் கலங்கினைப்பார் அரச

ஞணைக்கு அடங்குவார் என்பது குறிப்பு. இராமபிராஞணையாற் கடலடங்கிய தென்பதனே "வென்வேற் கவுரியா தொன்முது கோடி-முழங்கிரும் பௌவ மிரங்கு முன்றுறை-வெல்போ ரிராம னருமறைக் கவித்த-பல்வீ ழாலம் போல-வொலியவிர் தன்றிவ் வழுங்க வூரே* என்னும் அகப்பாட்டடிகளா னறிக.

23. அருமை யுடைய பொருளுடையார் தங்கட்
கருமம் முடையாரை நாடா—ரெருமைமேல்
ஞரை தூயிலவதியு மூர குளகதொட்டுத்
தேரை வழிச்சென்ரு ரில.

எ-து, பெறுதற்கரியபொருள் யாதானுமொன்றனையுடையார், தம்மாட்டுக்கொள்ளுங்கருமமுடையாரை யாராயவேண்டுவதில்லே; எருமைமேல் ஞரைதூயிலவதியுமூரனே ! குளதைததோண்டி அதன்க ணுறைவதறகுத தேரையுள்ளவிடநதேடிசசெல்வா ரில்லே எ-று.

(குறிப்பு) 'தங்கட்கருமமுடையாரை' என்னுங் குறிப்பால இங்குப் பெருள் என்றது பொருள்வருவாய்கடிடனை தொழிற்றுறையையென வுணாக. அத துறைவகை பலவாதலால் அவற்றுட் டமக்கேற்றதொனறனே என்பார், யாதானு மொனறனே யென்ரார். அலை, பொன்மணிமுதலியபொருள்கொளுந்துறைக ளும், பொறிபலசமைகருங் கம்மியததுறைகளும, இயற்கைப்பொருளாய்ந்தெடுக் குந துறைகளும, செயற்கைப்பொருள்பலசெய்யுந்துறைகளும், மரகலமுதலிய வியக்குறுதுறைகளும பிறவுமாம. அத்துறைகட்கருமையாவது செயயக்கடவ வினைகளே இடம,பொருள,கருவிமுதலியவற்றினமைதியால எளிதின்முடிகுமா றமைத்தல். 'தமமாட்டுகொளளுங் கருமமுடையாரை யாராயவேண்டுவதில்லே' என்றது அங்ஙனம செவ்விதினமைகப்பெற்ற தொழிற்றுறைக்குரிய வினைகளே நடாத்தற்குரியா அத தொழிறறுறைமுதல்வனுல் ஆராய்ந்துதேடவேண்டாது அவர்தாமே தேடிவிரும்பிவருவர் என றவாறு. 'எருமைமேல் ஞரைதூயில்வதியு' மென்றது நீர்ப்பரப்பில்லாத வெற்றிடமில்லாமையும், அங்நீர்ப்பரப்பின்கண், திடர்கள்போற் றிரண்டதொகை எருமையின் றெருதியும், அவற்றின் மடியின் மிகுதியும் குறிப்பாலுணர்த்தி மருதநிலவளஞ் சுவையுறக்கூறி முன்னிலேயை விசேடித்தவாறு. காரை தூயில்வதியுமென்றது-அது தூயில்வதியுமாறு இரை தேர்தற்கேற்ற மீனினங்களினமிகுதிகுறித்துநின்றது. ஊரன்-மருதநிலத்தலே வன். 'தேரையுளளவிடந் தேடிச்செல்வாரில்லே' என்றது தவளைகள் தாமே வந்தடையு மென்றவாறு. தவளைகள் தாம் ஜீவித்தற்குரிய வாய்ப்பானகுளத் துறைளேத் தாமே விரும்பிவந்தடைவதுபோல, வினையாளரும், தாம் ஜீவித் தற்குரிய வாய்ப்பான தொழிற்றுறைகளேத் தாமே விரும்பிவந்தடைவர் எனக்

*அகநானூறு, செய்யுள்-70.

கருத்தறோக்கி எடுத்துக்காட்டொடு பொருத்தியுரைத்துக்கொள்க. தொழிற் றுறைகளோடாட்டற்குரிய பெருஞ்செல்வமுடையார் வினையாளரில்லையென்று மடிந்திராது அவர் தாமேதேடிவரும்படி இடம் பொருள் கருவிமுதலியவற்றுல் வாய்ப்புடையவாய் அமைக்கவேண்டுமென்பது கருத்தாகக்கொள்க. இதன் பழமொழி, தளம்வேட்டத் தவனோ தானேவரும் என வழங்கப்படுகிறது.

24. இசைவ கொடுப்பதூஉ மில்லென் பதூஉம்
வசையன்று வையத் தியற்கையஃ தன்றிப்
பசைகொண் டவனிற்கப் பாதத்தண்ணு ஞயி
னசைகொன்ருன் செலவுலக மில.

எ-து, தனக்கியன்றன கொடுத்தலு மியலாதன வில்லையென்றலு மொருவற்குக் குற்றமன்று; உலகத்தாசெயலே; அவ்வகையன்றி, இவ னெனக்குப் பசைப்படுவனென்று தன்மனத்திற்கொண்டவொருவ னிற் பக்கண்டு மவனுக்குப பகுதத்தண்ணுதலேதவிர்க; நசையுடையா ரைத்தன்பமுறுத்தினுலுக்குச செலவு மறுமையுலகத்தின்கண் ணின்ப மில்லையாதலாற் பசைகொண்டவற்குப் பகுதத்தண்க எ-று.

(குறிப்பு) இசைவகொடுப்பது எனறது இரப்போன்விரும்பத்தினளவு கொடாது இரக்கப்படுவான் தனகியென்ற சிறிதளவுகொடுப்பதென்றவாறு. இல்லையென்றல் இங்குக் கொடுத்லின் மறுதலைகுறித்ததமையால் அதன் மறு தலைச்செயப்படுபொருளான 'இயலாதன' என்பது கூட்டியுரைக்கப்பட்டது. 'இயலாதனவில்லையென்ற'லாவது இரப்போன்விரும்புமவை கொடுக்கவியலா தனவாயின் உடனே அவை யில்லையென்றசொல்லி வறிதேபோக்குதலாம். 'அவ்வகையன்றி' என்றது அவ்விரண்டனுள் ஒன்றுஞ்செய்யாதென்றவாறு. பசை-பற்று. இதனைப் "பசைந்தாரிற், றீர்தலிற்றீப்புருதனனறு"* என்பதனு னறிக. பசைகொண்டவன் என்பதில், கொள்ளுதல கொள்கையாகியமனத் தொழிலாதலால், 'பசைப்படுவனென்று தன் மனத்திற்கொண்டவொருவன்' எனப் பொருளுரைக்கப்பட்டது. அங்ஙனம் அவன் கொள்ளுதற்கு முன்சொல் லிய இரண்டனுள் ஒன்றுஞ்செய்யாமையேகாரணமென்பது கருதாதாகக்கொள்க. பாத்தண்ணுனையின் என வினையெச்சமாகக்கொள்ளாது, பாத்தண்ணுனையில் எனப் பகச்சேதஞ்செய்து, பாத்தண்ணுனையிருத்தலென்பதன் எதிர்மறையாகக் கொண்டு, நசைகொன்ருன்செல்லுலகமில் எனப் பின்வருமேதுவுக்குப் பிர திஞ்ஞாஞசகமாக்கி, "பாத்தண்ணுனைதலைத்தவிர்க" எனப் போந்தபொருள் உரைக்கப்பட்டது. பகுத்தண்ணல்-"வருவாயுட்கால்வழங்கிவொழ்தல்."† நசை-

* நான்மணிக்கடிகை, செய்யுள்-கடு.

† திரிகடுகம், செய்யுள்-உக.

பால்பகாஅ ஃறிணைச்சொல்; அது இங்கு நசையுடையாருக் காகுபெயராய் அவ ரது எளிமையும் உடனுணர்த்திநின்றது. கொல்லுதல்-ஈண்டு வருத்துதலா யிற்று. நசைகொன்றூற்கென்னும் நான்காவதனுருபு விகாரத்தாற்றொக்கது. செல் லுலகம்-மறுமையுலகத் தின்பத்துகாகனமையா லாகுபெயர். 'பசைகொண்ட வற்குப்பருத்தணங்க' என்றது எதுவையடித்து முடிந்ததுமுடித்தல் என்னும் நிகமனங்கூறியவாறு. "இயன்ரூற்கொடுப்பர் இயலாவிட்டா லில்லையென்பர்" எனச் செம்பொருள்படவழங்கும உலகவழக்கான தொடர்மொழிப்பொருளே பழமொழிப்பொருளாகவும, அதன்குறிப்புப்பொருளே எடுத்துக்கொண்டபொரு ளாகவும் இப்பாட்டின்கண் காட்டப்பட்டனளன. இரப்பவர்க்கு நசையுண்டாகு மாறு அவரைத தாழ்க்கவைதது வருததலாகதென்பது கருத்தாகக்கொள்க.

25. 'உரிமைதனிற் றமமோ டுழநதமை கண்டு
பிரிவின்றிப போற்றப் படுவார்—திரிவின்றித்
தாமபெற் றதனை யுவவார் பெரிதகழிற்
பாமபுகாண் பாரு முடைதது.

எ-து, உரிமையாற் றமமொடு பிரிவின்றிப் பயின்றபழகினமை கண்டு பாதுகாக்கப்படுவார், மனததின்க ணொருவேறுபாடின்றிப் பாது காப்பாராற் ரூமபெற்றபொருளினுவவாது, பின்பு மாசைப்படாநிற் பார், பெரிதகழ்நதகாற் பாம்புகாண்பாரையு முலகமுடைதாதலாற் பெற்றதனுவக்க எ-று.

(குறிப்பு) உரிமை என்றது உழந்தமை என்னுங்குறிப்பால் இங்கு வினையாட்சி யாற் ரெடர்புடையராந்தன்மையை புணர்ததுவதாயிற்று. தம்மொடுபிரிவின்றி யுழந்தமைகண் டெனக்கூட்டுக. தம்மொடு என்றது பாதுகாப்பாராகியதலைவரோ டென்றவாறு. 'பயின்றபழகினமைகண்டென்றது' காரியஞ்செய்து பழகினமை கண்டென்றவாறு. போற்றப்படுவார் என்றது பாதுகாப்பாராற்போற்றப்படுவா ரென்றவாறு. திரிவின்றி என்னும் வினையெச்சம் உவவார் என்பதன் முத னிலைவினைகொண்டுமுடிந்தது. இதனால், திரிவின்மை உவத்தற்கும், திரிவு உவ வாமைக்கும் காரணமாமென்பது காட்டியவாறுமாயிற்று. திரிவு-உண்மைக்கு மறுதலையாய வுணர்வு. உவவார் என்றது உவவாதார் சிலர் என்றபடி. இது போற்றப்படுவோர் என்ற எழுவாய்க்குப் பயனிலையாயும், பின் உவக்க என வரு வித்தமுடிக்கும் பயனிலைக்கு எழுவாயாயும்நின்றது. 'தாம்பெற்றதனுவவார்' என்னும் பொருளடையை மத்திமதீபமாகவைத்தமையால், 'பெரிதகழிற் பாம்பு காண்பாருமுடைத்து' என்னும் இட்டாந்தத்தொடுங்கூட்டுக. பெரிதகழினென் னுங்குறிப்பால் உவவார் என்பதற்கு, ஆசைப்படாநிற்பர் எனப் பொருளுரைக் கப்பட்டது. பாம்புகாண்பாருமுடைத்து என்னுங் குறிப்பால், பெரிதகழின்

என்றதில், பெருமை அகழும் புழைகளின் எண்ணின்மிகுதியுணர்த்தினின்றது. பெரிதகழிற் பாம்புகாண்பாரு முடைத்து என்றது தாம்பெற்றதனலுவதாது பேராசைப்படுவோர்க் கேதமுண்டாமென்பதை எடுத்துக்காட்டுதற்கேற்றதோ ரைதிகமடியாகப்பிறந்த பழமொழி கூறியவாறு. அப்பழமொழி, பேராசையால் முயலுமொருவனுக்கு அமமுயற்சியே விபரீதமாகும் என்று சொல்லவேண்டு மிடத்து, எலிசீகெலவென்றுதோண்டப் பாம்புபுறப்பட்டாற்போலும் எனக் கிராம்யவழக்காக வழங்கப்படுகிறது. இதன் ஐதிகமாவது —ஒருவேடன் உணவின்பொருட்டுக் காட்டெலிபிடிக்கச்சென்று எலியுண்டென்றதெளிக்க சில எலிப்புழைகளைக்கண்டுதோண்ட அவற்றில் எலிகளிருந் தகப்பட்டதுகண்டு அவ்வளவினமையாது, அவாமிக்குடையனும், மேலும் தெளியப்படாத பலபுழை களைக்கண்டு தோண்டிய தருவமபோது ஒருபுழையிற் பாம்பிருந்து சீறிப்புறப் பட்டுவரவே தான் முன்பிடித்திருந்த எலிகளையுமபோகட்டு ஓடி உயிர்பிழைத் துப் பின் எலிபிடிக்குந்தொழிலையொழிந்தான் என்பதாம். எலிபிடித்தவேடன் எலியுண்டென்று தெளியப்பட்ட சில புழைகளி னியல்பானே கிடைத்ததனை கொண் வெவாது, இன்னுந் தோண்டும்புழைகள்தோறும் எலி கிடைக்கு மென்னும பேராசையுடையனுப்பாம்பில்லையென்றதெளியப்படாத புழை களையுந்தோண்டி அவன் ஜீவனோபாயமாயிருந்த எலிபிடித்தற்றொழி லையிழந்ததுபோல, வினையாளர்விரும்பியசிலவற்றைப் போற்றுவார் உதவுதல்கண்டு அமையாது பின்னும் தாம் விருமபியவையெல்லாங்கொடுப்பர் என்னும் நிரி வுணர்வால்வந்த பேராசைகொண்டு அவரைப் பின்னுஞ் சில கேட்டுவருத்துவா ராயின் ஜீவனோபாயமா யவரிடம்பெற்றிருந்த வினையாட்சியையும் அவர் சிற்றத்தா ழிழப்பராதலாற் பெறறதுகொண்டு உவக்கவேண்டுமெனத் தேட்டாந் தத்தொடு பொருத்தியுரைததுக்கொளக. எனனே? பாம்புகாண்பாருமுடைத்து என்பதில் உம்மை ஐயவும்மையாதலாற் பெரிதகழ்தலிற் பாம்புகாண்டல் நியத மில்லையென்பது பெறப்படும்; பெறவே, பாம்புகாணுவிடத்துப் பயனுண்டாத லுங் கூடுமாதலால், பயனுண்டோ? இல்லையோ? என்னும் ஐயப்பாடுள்ள கடன் கோடன் மூதலியகாரியத்தின்கண்ணும் முயற்சி நிகழ்தல் காண்டலாலும், அது பழிக்கப்படாமையாலும் விலக்கப்படாததாயிருக்க, இங்கு அத்தகைய மேன் முயற்சியைப் பெற்றதுகொண்டுவக்கவென விலகியவாறென்னையெனில், கடன்கோடன்மூதலியனபோல நன்மைவிளைதன்மாத்திரத்தின் ஐயப்பாடையை காரியத்திற்செல்லுமுயற்சி பழிக்கப்படாதேயல்லது, தீமைவிளைவின் ஐயப் பாடையகாரியத்திற் செல்லும முயற்சி பழிக்கப்படுவதேயாம. இதனே, ஒரு கீர்ப்பெருக்கைக் கடந்துசெல்லவேண்டும் நீத்தறியாதானொருவன், இது நீத்து நீரோ? நிலைநீரோ? என ஐயுறவுள்ளதனையும் அஞ் சிறிதுங்காமையாலும், நிலை நீரென்று தெளிந்தபின்னர் இறங்கிச்செல்லுதலாலும் அறிக. பாம்புகாண்பாரு முடைத்து எனத் தீமைவிளைவின் ஐயப்பாடுதோன்றலதுகொண்டு, இத்தகைய சூதாட்டமுதலியவற்றின் அம்முயற்சி விலக்கப்பட்டதுபோலவே இங்கும் விலக் கப்பட்டதென்க.

26. விடலரிய துப்புடைய வேட்கையை நீக்கிப்
படர்வரிய நன்னெறிக்க ணின்ரு—ரிடருடைத்தாப்
பெற்ற விடக்கு நுகர்தல் கடனீங்கிக்
கற்றடியு ளாழ்ந்து விடல்.

எ-து, விடுதற்கரியநுகர்வினைவிரும்பும்வேட்கையைநீக்கி யொழுகு தற்கரியநன்னெறியாகிய தவத்தின்கணின்ரூர், மெய்ப்பிணியாற் றமக் கிடர்வந்தகாலதத்தின்க ணழிந்து, தாங்கொண்டசீலத்துக்குக் குற்றமாம் படிபெற்றதொரு விடக்கைகதத்தின்றுய்தல், கடலீநீந்தியேறிக் கன்றி னுள்ளடியினீரிலே யழுந்தியதனேடொக்கும் எ-று.

(குறிப்பு) இப்பாட்டால, உண்ணுவாருண்ணுமுணவெல்லாம் உயிருடம்பா யிருத்தலால், துறந்தார்க்குப் பிறரிருமுண்டியிற்பெற்ற ஊனுண்ணல் பழியால் வருந்தியவழிக் குற்றமாகாதென்பார்* குதர்க்கவாதத்தைத் தர்க்கமென்னும் விதண்டையால் நிக்ரஹிக்கிறூர். 'விடுதற்கரியநுகர்'வாவது.—இம்மைப்பய னெனக் கண்கூடாகக்கண்டு இயல்பானே ஐம்புலன்களாலு மாரத்துய்க்கும் இன்பமாகிய காமநுகர்வு. 'ஒழுகுதற்கரியநன்னெறி'யாவது:-உற்றநோய்நோன்ற லுண்டிசுருக்கன்முதலிய விரதவொழுகங்களேயும, செயற்கரியசெயலாகிய இயமநியமாதி யட்டாங்கயோகமுயற்சியையுங் கைக்கொண்டொழுகுதல். இட ருடைத்தாக என்னுஞ் செயவெனெச்சத்திறுதி விகாரத்தாற்றெக்கது. அந்நெறி யென்னும் எழுவாய் வருவித்து, அந்நெறியிடருடைத்தாகப் பெற்றவிடக்கு எனக் கூட்டுக. அந்நெறியிடருடைத்தாதலாவது அத்தவவொழுக்கமாகிய சீலத் தக்குக் கேடுண்டாதல். 'மெய்ப்பிணியாற் றமக்கிடர்வந்தகாலத்தின்கணழிந்து' என்றது இசையெச்சத்தால் விடக்குநுகர்தற்குக் காரணங்கூறியவாறு. மெய்ப் பிணி-பிப்பிணிமுதலாயின 'தாங்கொண்டசீலத்துக்குற்றமாம்படி' என்றது அந்நெறியிடருடைத்தாக என்பதன் போந்தபொருள் கூறியவாறு. 'குற்றமாம் படிபெற்ற' என்றது குணமாகப்பெறும் யாகசேடத்தை விலக்கியவாறு. பெற்ற

* இங்ஙனங்கூறுவார், புத்தமதத்தினர் முதலாயினர். இதனைப் பிரபோத சந்திரோதயம், புத்தவதைச்சருக்கம் (செய்யுள் 29-30) "ஒருகாலுங் கொலையாகா தான்வேண்டிற் கொன்றதுகொண் டெண்ணலாகுந், தரைமீது மாண்டதெல்லாம் மண்ணினுக்கு நிகரென்பர் தக்கோரன்றே" எனவும், "தேதீர் வைத்தவருக் கற மதனே யுண்டவர்க்குச் செறியா தல்வா, ரேதினு னுண்டவர்க்குப் பாவமின்று கொன்றவருக் குறவு தாகு, மாதலா லூனருந்த வாசையுண்டேற் செத்தகண்ண லாகு மிந்த, நீதியார் மறுத்தரைப்பா ருலுக்கூ ஞட்டாதார் நினேவி லாரே" என வும் கூறியவாற்ருலும், பிறரு மொழுகுதலாலு முணர்க.

விடக்கு என்றதனால், பிறரிடம்சென்று இரந்துகொண்டதென்னும் இழிவுணர்த்தியவாறு. 'ஒருவிடகு' என்றது விடக்கின் எண்மைதோன்றகூறியவாறு, விடக்கு-ஊன்றடி. கடனீர்த்திக் கற்றடியுளாழ்ந்துவிடல என்றது, உடற்பொறையாகிய உயிர்ப்பிணிதீர்க்கக்கருதித் துறவுபூண்டு தவவொழுக்கத்திலுள்ளோன், உடற்பிணிக்குடைத்து புலாலுண்டுய்வானுயின அவன் ஒழுகும் பிற தவவொழுக்கங்களும் அவனது கூடாவொழுகுகதை மறைக்கக்கொண்டவேடங்களேயாம் என்பதைத் தர்சுகம என்னும் விதண்டையால் நிரூபித்ததபடி. அதாவது கடனீர்த்திக கடகுமாற்றல்போலு மாற்றலுடையராய், உறறநோய்நோன்றல் முதலிய விரதவொழுக்கஙகளால் மனவொருகமெய்திஞா, கடனீரினளவினின்றும் கொயமையிற் கன்றினடிச்சுவட்டிற்றங்கிய நீருகுளள வாகிபோலும்வாகியுள்ள மெய்ப்பிணிவாதைக்குட்பட்டுப் புலாலுண்டுய்தல், கடலேநீர்த்திக்கடந்த வாற்றலுடையான் கன்றினடிநீர்கடகுகமாட்டாது அதனுள்வீழ்ந்து மூழ்கியழிதல்போலு முண்மையுடையதென்பதாம். இதனால், கடனீர்த்து மாற்றலுடையான் கன்றினடிநீரில் ஆழாஞுயின், தவவொழுக்கமுடையோனும் மெய்ப்பிணிக்காற்றது புலாலுண்ணுண் எனத தவவொழுக்கத்தி ஞற்றல்மிகுதியும், கன்றினடிநீரைக் கடக்க மாட்டாதவன் கடனீர்த்துமாற்றலிலனென்பது ஒருதலேயாவதுபோல, மெய்ப்பிணிவாதைபொறுது புலாலுண்பானும் உற்றநோய்நோன்றல உண்டிசுருக்கல் முதலிய தவவொழுக்கமும் மனவொருக்கமும் மெய்துதற்கேற்ற வாற்றலிலனென்பது ஒருதலேயாமென அவன் படிற்றொழுக்கின்றொருதியும் ஒருங்குணர்த்தப்பட்டன. ஆழ்தலெனவே அமைவதாக ஆழ்த்துவிடல் என்றது ஈண்டு விதண்டைகேற்றதொரு தேற்றப்பொருள் தோற்றக்கூறியவாறு. இப்பழமொழி "ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ

(தூறிப்பு) இப்பாட்டில வெருவந்தசெய்யற்கவென்பார் அது செய்தொழுகு மரசரை எல்லாரும்வெறுக்கும் வெறுப்பினதளவு இத்தனை என்பதனை அவரது உயிர்வாழ்க்கையில் அதிசங்கைபண்ணிக் காட்டுகிறார். 'ஆராய்ந்து ஒருவர்மாட்டுங் கண்ணோடாது' என்றது இவர் கண்ணோடுதற்குரியார்; இவர் அதற்குரியாரல்லர் என அறிந்துவைத்தும் கண்ணோடுதற்குரியராயினுமொருவர்மாட்டுங்கண்ணோடா தென்றவாறு. கண்ணோடுதற்குரியார் தம்மொடுயின்ற நட்பாளரும் குற்றஞ் செய்யாது குறையிரந்துநிற்பாரும் முதலாயினர். தீவினை-பாவமும் பழியுமாயின செயலும், கடுமொழியும் கடுந்தண்டமும் முதலாயின; இவை குடிகளஞ்சுவன. சேர்ந்து தம்மையடைந்தார்-அமைச்சர் புரோகிதர் சேனாபதியர் அணுக்கத்தொண் டர் முதலாயினர். 'இளையாண்மிகசுற்றதாரர்'-கெருங்கிய வுறவினரும் மிக சுற்றத்தாரையுடைய சுற்றதாரும். அவர்கு வெறுப்பனசெய்தலாவது-அவரை வரிசையாலேகாது பொதுநோக்குநோகுதலும், அவர் விரும்பியனசெய்யாமை யும் முதலியன. நரகா-பாபிகள். இங்கு நரகைகதறசெய்பவரெனினுமாம். 'நரகர்கட்குச் சாவகலொல்லவல்லதொருநஞ்சில்லையோ' எனறது அவர்சாக்காட் டை எலலாரும்மிருமபுதலால் நஞ்சிருந்தால அவாநட்பினரே விருநதாணிலிடுவர்; அதுதாமேயுணர்ந்து விருநதண்ணராயினும், மிக்கஇளையாயினர்க்கெல்லாம் வெறுப்பனசெய்தலால் அறுசுவையுணடி யமர்ந்தூட்டு மில்லாளு மிடுவர்; அது வுந் தாமேயறிந்து பரிசோதித்தண்பராயினும், நட்டாரும, நாட்டாரும், சேர்ந்தா ரும், இளையாண்மிக்க உறவினரும் கைவிடுதலாற் பகைக்கெளியராய்ப் பின் பகைவ ரால்வரகடவ பரிபவங்களாகிய மானத்திக்கஞ்சித் தாமேயு நஞ்சுண்ணக்கடவரா யிருக்கச்செய்தே உண்ணுநிருப்பதென்னே? தேர்நதகண்ணோடித் தீவினையஞ்சி கல்வினைபுரிந்து சேர்ந்தாரையெல்லாம் பெருமைப்படவுரைத்து, தீந்தவிரகர்கட் கெல்லாம் விரும்புவனசெய்வார் அந் நல்வினைகாரணமாகத தேவராய்சசென்று அமுதபானம் பண்ணுவதுபோல, அவர்க்கெநிரான விவரும தீவினைகாரணமாக நரகராய்நின்று விஷபானமபண்ணவேண்டாவோ? அவ்வாற்றானும் அவ தபண் ணுமைக்குக்காரணம் என்னே? நஞ்சினுங்கொடியவிவரைக் கொல்லவல்லதொரு நஞ்சு படைக்கப்பட்டிலதுபோலும் என்றவாறு. இதனல் வெருவந்தசெய்யுமரசர் தாமடங்க எல்லாரானும் சாமாறுவெறுக்கத்தக்கார் என அச்செயலின் கொடுமை கூறப்பட்டது. இதன்பழமொழி, பசீசைநாவிவுச்சாலென்ன எனவும், தீயை வை எனவும், வெறுப்புக்குரிப்பில் வழங்கப்படும்.

28. தாமாற்ற கில்லாதார் தாஞ்சாரப் பட்டாரைத
தீமாற்றத தாலே பகைப்பித்திட்—டேமாப்ப
முன்னேட்டுக் கொண்டு முரணஞ்சிப் போவாரே
யுண்ணேட்ட கலுடைப் பார்.

எ-து, தாந் தம்மையாற்றமாட்டாதார் தாஞ்சாரப்பட்டவர்களைத் தீயசொலவுகளாற் பகையாக்கித் தமக்குச சேமமாக வவர்க்குமுன் னேட்டுக்கொண்டு பகைகோடலையஞ்சிப்போவார், தாமுண்கின்ற வோட்டகலே யுடைக்கின்றாரோடொப்பர் எ-று.

(குறிப்பு) 'தாந் தம்மையாற்றமாட்டாதார்' என்றது தாமே தம்மைப் பாது காத்துகொள்ளுந் திறமில்லாதார், அதாவது பராபேக்ஷையால் ஜீவிக்கிறவர் என்றவாறு. 'தாஞ்சாரப்பட்டவர்களே' என்றது தமகுச்சார்பாயிருந்தவர்களே யென்றவாறு. 'தீயசொலவுகள்' பொய், குறளை, கடுஞ்சொற்கள். 'சேமமாக'-பாதுகாப்பாகும்படி. 'அவர்குமுன்னேட்டுகொண்டு' என்றது அவர் தம்மைச் சார்பறுத்தோட்டுவதற்குமுன்னமே தாமா யவரைலிட் டோடுதலே மேற்கொண்டு என்றவாறு. 'பகைகோடலேயஞ்சிப்போவார்' என்றது சார்பாயினர்விரோதம் வந்துவிட்டதென்று அஞ்சிப்போவார் என்றபடி. 'உண்கின்றவோட்டகலே யுடைக்கின்றாரோடொப்பர்' என்றது தாமுண்ணும்பாதத்திரமாகிய சட்டியை யுடைத்தெறியுமவரோடொப்பர் ஏனபதாம. ஓட்டகல்-ஓடாகிய அகல். அகல்-அகன்றவாயையுடைய மண்சட்டி. தானுண்டு உயிராவாழ்தற்காதரவான சட்டியை யுடைததுப் பின் புண்ணுதற்கொன்றுமினறிவருந்துமறிவில்போலத தானுண்டு சீவிப்பதற் குதவியாயிருந்தாரைவிரோதித்துச சீவனதொழிலேயிழந்துவருந்து பவனும அறிவிலியாமென உவமையொடுபொருதஇயுரைத்துக்கொள்க. தனக்கு ஆதரவாயிருப்பதொன்றை யொழிகும் அறிவிலியைக தடிக்கிறவோட்டை யுடைக்கிறவன் எனபது கிராம்யவழகு. இததொடர்மொழிப்பொருளே இப் பாட்டிற்கொண்ட பழமொழிப்பொருளாயிற்று. இதனால் ஒருவரைச்சார்ந்து பிழைப்பவர், பொய் குறளே கடுஞ்சொல முதலிய தீமாற்றங்களேயொழித்து அவ ருகு உண்மையுரைப்பவராயிருகவேண்டுமென்பது உணர்த்தப்பட்டது.

29. முழுதுடன் முன்னே வகுததவ னென்று
தொழுதிருந்தக கண்ணே யொழியுமோ வல்ல
லிழுகினு னேகாப்ப தில்லையே முன்ன
மெழுதினு னேலே பழுது.

எ-து, முழுதுடலத்தையு முன்னேபடைத்தவன், நாமுறுகின்ற வல்லலேயு நமக்குப்படைத்தா னென்றுகருதி, அவனே யவ்வலலலைத் தீர்ப்பானுக வவனைத்தொழு தொருகாரியத்தைமுயலாதிருந்தாற் றம் மல்ல லொழியுமோ? அவ்வலலலைததப்ப நினைக்கவே தன்னே யவ்வல்லல் வந்து பிணிக்கமாட்டாது; முற்படவெழுதினவோலே பழுதுபட்டால், அப்பழுதுதீரப் பின்னேயு மெழுதுவாராதலான் முன்செய் தீவினைப் பயனே யிப்பொழுது செய்யுமுயற்சியானேநீங்குமாம் எ-று.

(குறிப்பு) இப்பாட்டால், மடியுடையராகி அன்றெழுதிவைத்தா னழித் தெழுதப்போவதில்லை, எழுதினவோலை பழுதாகாது என்னும் ஊழ்வலியுறுத் தும் பழமொழிகளோச்சொல்லிக்கொண்டு, உயிர்களுடையும் நன்மைதீமைகளெல் லாம் ஊழ்வயமாயேயுள்ளனவென்றும், முயற்சியால் ஒருபயனுமில்லையென்றும் பேசுவார்குதர்க்கவாதத்தை அவர்சொல்லும பழமொழிப்பொருண்கொண்டே நிரா கரித்து முயற்சிசெய்யற்பாற்றென நிரூபிக்கிறார்.

இப்பாட்டி அப்பழமொழிபற்றிப்பிறந்தமையா லப்பழமொழிப்பொருளு மிங்கு ஆராயத்தகுகதாம. அது பின்வருமாறு காண்க. அப்பழமொழிக்குரிய எழுத்து ஓலை என்னுஞ் சொற்கள் முறையே பழவினைப்பயனுாட்டும் பிராரப்தத்தையும் அது தங்கிய உடலையும உணர்த்துவனவாம. இதனைப் "பொறியின்மையார்க்கும் பழியன்று"* என்னுங் திருகுறளில் எழுத்தினபெயராகிய பொறியென்னுஞ் சொல்லாற் பிராரப்தம் வழங்கப்பட்டமையாலும, "ஏடு நிலத்தி லிடுவதன் முன் னம்"† என்னுங் திருப்பல்லாண்டில் ஓலையின்பெயராகிய ஏடு என்னுஞ் சொல் லாற் சரீரம் வழங்கப்பட்டமையாலு மறிக. இங்ஙனம்வழங்கும்வழக்குத் தொன்று தொட்டேயுள்ள பெருவழக்கென்பதை, "வெஞ்சின வெங்காரியினை வுண்ணிய வுலகினை வுவந்து" என்றும், "ஒளவியமிலாவுள்ளத் தொடு வாரிரு வாழ்நாளு மிலனாகுமெனின்" என்றும் பிராரப்தத்தைச் சிதரலேகனமாகவும, அது பதிந்தவுடலைச் சிதரலேகனபத்ரமாகவும வடமொழிவாணருங் கூறுதலா லறிக.

இனி இவ்வுருவகவகையான் அப்பழமொழிப்பொருள்களோ யாராயின், "அன் றெழுதினவைததா னழிதலெழுதப்போவதில்லை" எனபதற்கு, உடலெடுக்குமன்று பிராரப்தமென்னும் பொறிகளோ உடலினகட்பங்கியவைததலெய்வம், (ஊழ்வினைத் தொகுதி; அதாவது சஞ்சிதம் என்றபடி.) மறித்தும் அவற்றைமாற்றிப் பிறி தறப்பஞ்சில்லை; எனப் பொருள்படுவதாகும. இதனுள் எழுதினவைத்தான் என் றது உலகியற்றுங்கடவுளோயெனக்கொள்ளுதல கூடாதோவெனிற் கூடாது; ஏனெனில், இப்பழமொழிகு ஊழ்வலியுறுததலே கருதுதாதலால எலலாரு மவ் வூழின்வயப்படுவர் என அது தன் வயதததாகுஞ்சிறப்புத்தோன்றக் கூறுவதே முறையாதலாலும், இறைவன்வயத்ததாக்கிக்கூறுத லீண்டைக்கு ஏலாமையானும், ஊழினாவிவகரணாவிப்ரஹ்மணாவிவ்யவஸ்யவா । ஒளவடியி தாரெவாவரிரோவ்ருத்தமவஸ்துதி ॥" என்றும், "விதியால்வருவதல்

*திருக்குறள், 62-ஆம் அதி. ஆள்வினையுடைமை—8.

†பெரியாழ்வார்திருமொழி, 5. திருப்பல்லாண்டு நான்காம்பாசுரம்.

லான்மேதக்கோர்தங்கண், மதியிலுல்வாழ்வதொன்றண்டோ-பதிதொறுஞ், சங் கரனுமையமேற்றண்டான்றடங்கடல்சூழ், மங்கையுடன்காடுறைந்தான்மால்"* என்றும் அக்கடவுளரையும் இதற்குவயமாகக்கூறினமையானுமென்க: ஊழாகிய அஃறிணைப்பொருளே எழுதிவைத்தான் என உயர்திணைச்சொல்லாற் கூறியிருப் பது குற்றமாகாதென்பதும், இப்பாட்டில் வருதலவன் என்ற சொற்பொருளா ராய்ச்சியிற்காட்டுவதுகொண் டறியத்தக்கது. இப்பழமொழி ஒலிவேறுபாட்டால் அநிஷ்டக்குறிப்புணரக் கிடத்தலாலும், வழக்குவலியுடைமையாலும் தீயுழைப் பற்றியதென விளங்கும். இதனுனே ஏனைய நல்லூழைப்பற்றியதென அறிக.

இனி, "எழுதினவோலை பழுதாகாது" என்ற ஏனைப் பழமொழிப்பொருளே ஆராயின் அதுகூல ப்ராரப்தங்களாற் பதியப்பெற்ற சரீரத்தால் அவற்றின்பய னனுபவித்தல் தவருதென்பதாம். ஆகவே இப்பழமொழிக்கு நல்லூழின் அது பவம் தவருதென்பதும், அன்றெழுதிவைததான் என்னும் பழமொழிக்கு, தீயு ழின்பதிவை அத்தெய்வம் திருததாதென்பதுமே வாகியார்த்தங்களாம.

இவற்றுள், தீயூழிஃபதிவை 'அத்தெய்வம் திருததாதென்னும் வாக்கியார்த தத்தை அவலம்பித்துக்கொண்டு ஊழ்வலியுறப்பார்சொல்லுந் தர்கவாதத்தை யெல்லாஞ் சங்கிரகித்து ஒரேதொடர்மொழியா லதுவதிகிரூர்; 'முழுதுடன் முன்னேவகுத்தவனென்று' என்று. இதனுள் என்று என்னும் இடைச் சொல் இவ்விதமாகச்சொல்லி என்னும பொருளுடையதாய்த் தன்னையேற்ற தொடர்மொழியைச்சுட்டினமையால் அது அதுவாதக்குறிப்பாயிற்று. ஆகவே அதனுற்சுட்டப்பட்ட முழுதுடன் முன்னேவகுதவன் என்பது தர்க்கஞ்செய் யும் வாதிகூற்றெனவுணர்க. இக்கூற்றினுள் வகுத்தவன் என்றது, ஒருயிர் செய்த வினையின்பயன் பிறிதோருயிரின்கட் செல்லாமல் அவ்வுயிர்க்கேவகுக்கும் விதி, தெய்வம், இயற்கை என்ற பெயர்களால் வழங்கப்படும் பழவினைத்தொகுதி யாகிய சஞ்சிதமென அறிக. அஃ தஃறிணைப்பொருளேயாயினும் "இசைத்தலு முரிய வேறிடத் தான"† என்பதனுல் வகுத்தவன் என உயர்திணைச்சொல்லால் வழங்கப்பட்டது. இதனே "வகுத்தான்வகுத்தவகையல்லால்"‡ என்னுங் குற ளுரையானும் அறிக. அச்சொல் தன் பகுதிக்கேற்ற அடைகளானடைக்கப்பெற்று முழுதுடன்முன்னேவகுத்தவன் எனப் பழவினைக்கு ஒரு பெயராயிற்று. இத னுள் முழுதுடல் என்றது, யாவ ஹரீரஹாவியான பிராரப்தங்களே யாவ ஹரீ ரஞ என வழங்குவதுபோல உடலுள்ளகாலமுழுதும் உறக்கடவவான பிராரப்தங் களுக்குப்பெயராய்வழங்கப்பட்டதென வறிக.

* இது நீலகேசி ஐந்தாம்பாட்டுரையுதாரணம்.

† தொல். சொல். னெலியாக்கம். சூத்திரம்—கூ.

‡ திருக்குறள் 88-ஆம் அதி. ஊழ்—7.

முன்னேயென்றது உடலெடுக்கும்பொழுதே என்றபடி. இவ்வாற்றான் முழுதுடன்முன்னேவருத்தவன் என்ற தொடர்மொழியானது, ஒருபெயராய்நிற்கும் நிலையில், வேலன் என்றபெயர் முருகன் என்னும்பொருளுணர்த்துவதுபோல ஊழ் என்னும்பொருளேயுணர்தற்கிடமின்றி, அவ்வேலனென்னும்பெயரே அவயவப்பொருளுணர்த்தாதும்நிலையில வேலுடையான என்னும் பொருளும உணர்த்தி முருகன் வேலுடையான் என எழுவாயும் பயனிலையுமாகிய வாக்கியார்த்தவாசகமாவதுபோல, அவயவப்பொருளுணர்த்துமநிலையில் உடலுள்ளகாலமுழுதும் உறக்கடவபிராரப்தங்களேவருத்தவன் எனனும்பொருளுமுணர்த்தி, ஊழ் உடலுள்ளகாலமுழுதுமுறக்கடவபிராரப்தங்களே வருதத்த என எழுவாயும் பயனிலையுமாகிய வாக்கியார்த்தவாசகமாயிற்று.

ஆகவே, ஊழ் என்னும் எழுவாயானது, வாதி தர்க்கிக்கும் அநுமானத்துக்குப் பக்கமாகவும், உடலுளளகாலமுழுதும துகரகடவ பிராரப்தங்களேயெல்லாம் வருத்தத என்னும் பயனிலை ஏதுவாகவும கூறியவாறாயிற்று. ஆகவே, அது வருத்த பிராரப்தங்களினடியாக நாமுறுகின்ற அலலல்களேயும நமகருப்படைத்தது என்னுந் துணிபொருளும் பொருளாற்றலாற்பெறப்பட்டது

இனி இரட்டிறமொழிதலால், முழுதுடன்முன்னேவருத்தவன் என்பதற்குச் சரீரத்தை அதனுறப்பாகிய இந்திரியங்களகப்பட முழுதும்முன்னே ருத்தவன் என்னும்பொருளுந்தோன்றுதல்பற்றிச் சரீரமும் இந்திரியங்களும் ஊழ்மயமாம் என்பதும் பெறப்பட்டது. பெறவே, அவ்வூழால் நாமுறுகின்ற அல்லலைத் தீர்க்க நமக்குலிரகிலலே; அவ்வூழேதீர்கவேண்டும் என்னு முடிவுரையும் குறிப்பாற் பெறப்பட்டது. இங்ஙனம் பெறப்பட்டபொருள்களேயெல்லாந்திரட்டியே, 'முழுதுடன்முன்னேவருத்தவனென்ற' என்பதற்கு 'முழுதுடலத்தையும் முன்னேபடைத்தவன் நாமுறுகின்ற வல்லலேயும் நமக்குப் படைதானென்று கருதி அவனே யவ்வல்லலைத்தீர்ப்பா ரகி' எனப் பொருளுரைக்கப்பட்டது. தீர்ப்பாரகி என்றதில் ஆக என்றது, என்று என்னும் இடைச்சொற்பொருளுரைத்தவாறு; இதனை, வந்தானென்றசொன்னான என வழங்கவேண்டுமிடத்து வந்தானகச் சொன்னான என வழங்குதலா லறிக. இடையில் 'என்றுகருதி' என்றது வாதியின் அநுமானவாக்கியங்களே யதுவதித்துக்கொண்டே மேலும் அவற்கூற்றை அதுவதிப்பார் இடையே அநுமானவாக்கியங்கள் முடிந்தபடிகாட்டிய தம் கூற்றென உணர்க. என்றுகருதி என்றது என்று அநுமானித்து என்றபடி. கருதல்-அநுமானித்தல்.

இங்கே தொழுதென்னுங்குறிப்பால், வருத்தவன் என்றது தொழுதற்குரிய படைப்புக்கடவுளே யெனக்கொள்ளிற் பழம் இழுக்கென்னையெனில், ஊழ்வலியுறுப்பானுக்கு அது கருத்தாகானமயாலும், கருத்தாயின், அக்கடவுள்றைப்

புணர்த்தியதாவதன்றி ஊழ்வலியுறுத்தியதாகாமையாலும், கடவுளரைத்தொழுதல் அல்லலொழிக்கு முயற்சியாதலால் அது முயற்சியுடையாராற் பழிக்கப்படாதாகையாலும், இங்குச்சொல்லப்படுவது செயற்கையாகிய முயற்சியாதலால் அதற் கெதிராயிருப்பது இயற்கையாகிய ஊழெனக்கொள்வதே பொருத்தமுடையதாகையாலும் படைப்புக்கடவுளேயெனப் பொருள்கொள்ளுதல பொருந்தாதென்க.

'தொழுதிருந்தகண்ணேயொழியுமோவல்ல' எனறது, மருந்துவஞ்செய்தற்கிணங்காதுவருந்தும் புண்ணுடையானெருவனே நோக்கி, அப்புண்ணுக்கு மருத்துவஞ்செய்துதீர்க்கவேண்டுமெனனுங் கருத்துடையானெருவன், "நீ இப்புண்ணைவைத்துப் பூசைபண்ணிக்கொண்டிருந்தால் வாசியாமோ" என்பதுபோலக குறிப்புப்பொருளுணர்த்துமாறு,'அவனைத்தொழு தொருகாரியத்தை முயலாதிருந்தால் தம்மல்லல் ஒழியுமோ' எனப பொருளுரைக்கப்பட்டது. இங்கு 'அவனைத்தொழுது' என்றது அப்பழவினையாகிய இயற்கைக்குவயப்பட்டு என்றபடி. ஒழியுமோ என்றது ஒழியமாட்டாது, வளரும் என்றபடி; அதாவது.-மனமுதலிய இந்திரியங்களுக்குப்பட உடல்முழுதும பழவினையின்மயமாதலால் ஆவ்வுடலேயே யானெனமயங்கிய உன்னை யீடேறறறவார் ஒருவரும இல்லாமையாலும், இயற்கையின்வயப்பட்ட வுனக்கு அவ்வியற்கையின்வாதனையே பின்னுந் தோன்றுமாதலாலும் அப்பழவினை வளருமெனறவாறு. இன்னும், தொழுதிருந்தக்கண்ணேயொழியுமோ என்ற குறிப்பானே 'அவ்வல்லலைத்தப்பினேக்கவே தன்னை யவ்வல்லலவந்து பிணிக்கமாட்டாது' என்னுந் தன்றணிபு முரைக்கப்பட்டது. இங்குத தப்பினேததலாவது.—அவ்வல்லலீங்கினேதலும, முன் தான்னினேத்திருந்தினேவுக்கு மாறுகினேதலுமாம. மாறுகினேதலாவது.—இயற்கையின்வயமாகிய உடலேயானென எண்ணுதல அதனின்வேறுய ஆன்மாவையானென எண்ணலும், ஊழின்வயமாயடங்கியினேவாகிய தொழுதற்குமாறுக அதனேத்தன்வயமாயடகுகினேதலும்,"இன்பம்விழையானிடும்பையில்பென்"* றெண்ணுதலும், "இன்னுமையின்ப"†மெனக்கொள்ளுதலு மூதலாயின. இந்நினேவுகளால் அல்லலொழிவும் வாஸனாக்ஷயமும முண்டாவதுடன், தத்துவஞானத்தால் அவ்வல்லலுக்கெல்லாம காரணமாகிய சஞ்சிதாநாசமுமுண்டாகுமென்பதபற்றிக் காரியசிதியினெண்மையும், சாதனத்தின் வன்மையுந்தோன்றத் 'தப்பினேகவே அவ்வல்லல்வந்திபிணிக்கமாட்டா'தென்றார். எனவே, முயற்சிசெய்வார்க்கு அவ்வல்லல் ஒழியுமென்பது சொல்லவேண்டாதாயிற்று.

---

* இது திருக்குறள் 63-ஆம் அதிகாரத்தின் 8-ஆங்குறளின்கருத்து.

† திருக்குறள் 63-ம அதி. இடுக்கணழியாமை—10.

என்னே! நினைத்தற்குரியமனமும் முழுதுடலத்திலொன்றாய் ஊழ்வயமா யிருத்தலிற் றப்பினைகுமா றெங்ஙனங்கூடுமெனின், ஊழின்வயத்ததாயினும் அது அல்லலுறுத்திக்கால் உயிர் அம்மனத்தைக கருவியாகக்கொண்டே அவ் வல்லலை நுகரவேண்டுமாகையாலும், அங்ஙனங் கொள்ளப்படாதாயின் அல்ல லுணர்சியுண்டாகாதாகையாலும அம்மனம் உயிருகும் வயமாயிருக்கவேண்டு மாகையால் அங்ஙினலையில் அதுகொணடே, அவ்வல்லல் அநிஷ்டமாயிருப்பதுகண்டு அதனைத் தப்பினைதல் கூடுமெனக. தப்பங்னைதலால் அல்லலொழிந்தமை ஆணிமாண்டவ்யோபாக்யினதாலும, முயற்சியால் அலலலொழிந்தமை மார்க் கண்டேயோபாக்யினத்தாலும அறிக.

அங்ஙனமாயின், "அன்றெழுதிவைத்தானழித்தெழுதப்போவதில்லை" என் னும் கலைஞர்குழுவழகாக்வந்த பழமொழிக்கு விரோதமாகாதோ என்னும் வாதி யைநோக்கி அப்பழமொழியின் குறிப்புப்பொருளால விரோதமில்லையென்று பரிஹரிக்கிறார பின்னிரண்டடிகளாலும. அவ்வடிகளை, முன்னமெழுதினனலை இழுகினனலை பழுதுகாப்பதில்லையே என்று கூட்டுக. அப்பழமொழியில் அழித எழுதப்போவதில்லை யென்றகுறிப்பால் அவ்வெழுதத அழித்தற்குரிய தாரிய வெழுத்துப்போல்வதென்பது பெறப்படுமாகையால் அவ்வெழுத்தெழுதினனலை இழுகினனென் என்றார் இஃ. திழிதலற்குறிப்புமாம். இழுகுதல் மடலெழுதவது போல வண்ணீரால் எழுதுதல். 'முன்னமெழுதினனலை' என்றது அன் றெழுதிவைத்தானென்று சொல்லுகிறயே அவனெழுதியவோலையென்றபடி; இதவு மிழிதலற்குறிப்பு. இதனால் எழுதினவோலை பழுதாகாதென்னும் நல்லு ழோலை விலக்கப்பட்டது. இழுகினனைகாப்பதில்லையே என்றது அவ்வோலை யிற்றன்னு லிழுகப்படுமவற்றைத் தான் ஒருநாளுமழிப்பதில்லை என்பதொன்றே யன்றி எவ்வாற்றனும அஃதழியாதவாறு அவனற் காககப்படுமென்பது பெறப் படவில்லையே என்றவாறு. காப்புடைமை பெறப்படாமையால் அழியுமென்பது தானே பெறப்படும். பெறவே அழிந்தவிடத்தத் தானிருந் ததனைத் திரும்ப எழுதுவதின்மையாற் பிறர் அது பாழாயிருப்பதுகண்டு, அப்பழுதுதீரப் பிணை யும் திருத்தி எழுதிவைத்துக்கொள்ளகூடும் என்று பொருள்படுதலால், இதனை எடுத்துக்கொண்டபொருளொடுபொருத்திப் பின்னடி யிரண்டிற்கும், 'முற்பட வெழுதினவோலை பழுதுபட்டால், அப்பழுதுதீரப் பின்னையு மெழுதலாராத லான் முன்செய் தீவினைப்பயனை யிப்பொழுதுசெய்யு முயற்சியானே நீங்கலாம்' எனப் பொருளுரைக்கப்பட்டது. பழுதுதீரப் பின்னையுமெழுதலாவது ஒரு சித் ரபடத்தில், வேண்டாதவண்ணத்தையும் வடிவத்தையுமொழித்து விரும்பிய வண்ணமும் வடிவமுமமைய வெழுதுவதுபோலத் தீயுழையழித்து ஆங்கு நல் லுழைகாட்டிக்கொள்ளுதல். 'எழுதினவோலை பழுதுபடாது' என்னும் நல்லு ழோலை இங்கு விலக்கப்பட்ட தென்னையெனின் எழுதினனை னழியாளுகையா லும், உறவோ னின்புறுமாறு விழைபயனளித்தலால் அவனதனைத் தப்பினையா ளுகையாலும் அது பழுதுபடாதாகையால் அது விலக்கப்பட்டதென அறிக.

ஆயின், "அங்கண்விசும்பினகனிலாப்பாரிக்கும்"* என்னும் பாட்டில் 'உறற் பாலயார்க்குமுறும்' என்று கூறியவர்தாமே இங்கு இங்ஙனங்கூறுதல் மாறுபா டாகாதோவெனின், அங்கு ஊழ்வலியுறுத்திஞராதலின் அது தோல்வியுறுஞ் செய்தி சொல்லவொண்ணுதாதலால் அதனைவிடுத்து வென்றியடைந்தசெய்தி யையே மேற்கொண்டோதினர்; இங்கு முயற்சியைவலியுறுத்திஞராதலின் இது தோல்வியுற்றசெய்தி சொல்லவொண்ணுதாதலால் வென்றசெய்தியொன் றே மேற்கொண்டோதினர். ஆதலின் மாறுபாடின்றெனவுணர்க. மாறுபா டில்லையாயினும் இரண்டையுங்கூட்டியுணர்வார்க்கு முயற்சியான் ஊழைவெல் லல் ஒருதலையென்னும் தெளிவுபெறப்படாமை முயற்சிக்குத தடையாகாதோ வெனின் ஆகாது; ஏனெனில முயற்சிக்குத தடையாயுள்ளன தீமைவிளைவின் ஐயப்பாடும் அதன் றெளிவுமேயல்லது, நன்மைவிளைவி னையப்பாடு தடையின்றி உழவுபோலும் முயற்சியைப்பிறப்பிக்குமாகையால் அது தடையாகாதெனவறிக. இக்கருத்துப்பற்றியே, ,,யெ தகூ ெகயழி மவிஉ ஃதிகொ தூ ஒவுஷ ஃ" என்னூர் பிறரும.

30. நிறையான் மிகுநில்லா நேரிழை யாரைச்
சிறையா னகப்படுத்த லாகா—வறையோ
வருந்த வலிதினின் யாப்பினு நாய்வா
நிருந்துத லென்றுமோ வில.

எ-து, ஐம்பொறிகளையுநிறுத்து நிறையான்மிகமாட்டாநேரிழை யாரைக் காவலானகப்படுக்கவியலா; அகப்படுக்கலாமென்பார்க கறை கூவுகின்றேன்; வருந்த வலிபெறக்கட்டினும நாயின்வால் செவ்வேநின்று நிருந்துத லென்றுமில வதுபோல எ-று.

(குறிப்பு) 'ஐம்பொறிகளையுநிறுத்து' மென்றது நிறை என்னுஞ் சொல்லின் பகுதிப்பொருளை விரித்துரைத்தவாறு. 'நிறுத்துநிறை' என்றதனை நிறுத்துத லாகியநிறையென விரித்துரைத்துகொள்க. ஐம்பொறிகளையு நிறுத்தலாவது அவற்றை நெறியின்புறஞ்செல்லவிடாது செவ்வியநெறியி னொழுகசெய்தலாம். நிறை என்பதற்கு "நெஞ்சைக கற்புநெறியில்நிறுத்தல்"† எனப் பொருள் கூறுவர் பரிமேலழகர்; அங்குக கற்புநிமித்தமும் இங்குக் கற்பழிதனிமித் தமுமாகிய வ்டயபேதமுமுடைமையாலவிரோதமின்றென அறிக. நிறையான் மிகுதல்-நிறையான் மேம்பாடுடையராதல். இல்லா-இற்குமென்னும் பெயரெச் சத் தெதிர்மறை. இற்றல்-வலலுகராதல். 'மாட்டாநேரிழையார்' என்றது

* இந்நூலின் பதினேந்தாஞ் செய்யுள்.

† திருக்குறள் 6-வது அதிகாரம் (வாழ்க்கைத்துணைநலம்) 7-ஆங்குறளுரை பார்க்க.

சாமர்த்தியமின்றி இந்திரியபரவசராய் நெறியினீங்கிய பரத்தமையுடையமகளிர் என்பதாம். சிறை-தடுத்துகாத்தல். அகப்படுத்தல்-நெறியினடங்கி யொழுகச் செய்தல். அறையோ என்பது வெல்லும்வேட்கையுடையோன் கூறுங்கூற்றுதலால் 'அகப்படுகலாமென்பார்க்'கென அக்கூற்றுநிகழ்தற்கேற்றநிமித்தம் விரித்துரைக்கப்பட்டது. 'அறைகூவுகின்றேன்' என்றது அறையோ வென்றதனுடம் பொருபுணர்த்தலாற்பெறப்பட்ட தன்மையிடமும் கூவுதற்றொழிலும் விரித்துரைத்தவாறு. 'வருந்தவலிபெறக்கட்டினும்' என்றது காய்வாலே நிமிர்த்துத திருத்தக்கருதிக் கீழும் மேலும் செவ்வியசட்டங்களைக் கிட்டியாகவைத்து இறுக்கட்டினு மென்றபடி. திருந்துதல-கோடுதலின்றிச் செவ்விதாதல. என்றும் என்றது, "மண்ணுப்பொருளு மண்ணியறறே"* என்றதனுல் உம்மையும் இடமும் ஒருங்குகூறியவாறு ஓகாரம் தொனிலேப்பொருள்குறித்துநின்றது. இயல்பானேகோடிய நாயவாலே யாப்பிறுற்றிருத்தவியலாததுபோல, இயல்பானே நிறையழிமகளிரது காமசாரவொழுக்கத்தைக காப்பினுற்றிருத்தல் இயலாசெனக் கருத்துநோக்கிப் பொருளோடுபொருத்தி யுரைத்துக்கொள்க. ஒருவாற்றனுந் திருத்தாரென ஒருவரை யுரைக்கவேண்டுமிட்டத்து, நாய்வாலேநிமிர்க்க யாரா லேழியும் எனச் சாதாரணவழகாய்வழங்கும் பழமொழி இப்பாட்டிற் கொள்ளப்பட்டது. இதனை "ஆலேப் பலாவாக லாமோ வருஞ்சுணங்கன், வாலேநிமிர்க்க வசமாமோ"† எனப் பிறரும் எடுத்தாளுவாராயினர். இப்பாட்டாற் கற்பில்லாத மகளிரைக் காவல்செய்தலகுதல் கூடாதென்பது கூறப்பட்டது. இதனுனே அபிலகளானமகளிர்க்குப் பொதுமையினெய்திய காவல, கற்பழிமகளிர்க்கே விலக்கப்பட்டமையால், கற்புடைமகளிர்க் கது துணையாமென்பது மிகுந்தபடா தாயிற்று. கற்புக்குக் காவல் வேலியாய்ப்பாதுகாக்குமென்பதை, "அரசவேலியல் லதியாவதும், புரைதீர்வேலியில்லெனமொழிந்து, மன்றத்திருத்திச்சென்றீரவ் வழி, யின்றவ்வேலிகாவாதோ" என்ற சிலப்பதிகாரத்தாணு‡ மறிக.

31. எமரிது செய்க வெமக்கென்று வேந்தன்
றமரைத் தலேவைதத காலேத்—தமரவற்கு
வேலின்வா யாயினும மீழார் மறுத்துரைப்பி
ணுலென்னிற் பூலென்னு மாறு.

எ-து, நீ ரெமராகலா னெமக் கிக்காரியதனைச செய்துதரவேண்டுமென்று வேந்தன் றமரைத் தலேவைத் தக்காரியத்தினிடத்தேயேவிய

* தொல். சொல். னெவியாக்கம் சூத்திரம் 34.

† இது தனிப்பாடற்றிரட்டில் ஒளவையாக்காகக் காட்டப்பட்டிருக்கிறது.

‡ 28-வது கட்டுரைகாதை. 44-47 அடிகள்.

காலே, அவ்வேவப்பட்டதமர்க ளவ்வேந்தற்காக வேலின்வாயின்கணு யினு மிறவா தெமக்கியலாதென்று மறுததுரைப்பி ஞெருவ னுல மரததை யாலமரமென்றுசொலலின் மற்றொருவன் பூலாமரமென் றதனே டொக்கும். எ-று.

(குறிப்பு) எமரிதுசெய்க வெமக் கென்றது வேந்தன் தமரைநோக்கிக் கூறுங்கூற்றுகலான் அதற்கேற்ற நீர் என்னுப் எழுவாய் வருவிததுரைக்கப்பட் டது. எமா என்றது, முதனிலேவகையால் ஒருமைகும் பன்மைக்கும் பொது வாய்ப் பிரிப்பப்பிரியாக கிளேதுதற்பெய*ராதலால் என்னின்வேறல்லாதவர், எனகுஅங்கமாய்த் தாங்குபவர்,என்ஞணையைநாட்டுமவர்,என்னேயேபற்றியிருப் பவர் என்னுங் கருத்துகளேயுடையதாய் என் காரியத்தைத் தங்காரியமாகச் செய்யகடமைப்பட்டவரென்றபடி. இக்கருத்துப்பற்றியே 'இக காரியத்தைச் செய்துதரவேண்டும்' என்பதற்கு ஏதுவாகவி, 'எமராகலா' எனப் பொரு ளுரைகசப்பட்டது. இது, படைததலேவரை யொருகாரியத்திலேவுமரசன் கூறும் இன்மொழியிருக்குமபடி காட்டியவாறு. இதனே, "எனக்குயிரென்னப் பட்டானென்னலாற்பிறரையில்லான், முனேதடிறமுருக்கிமுன்னேமொய்யமர் பலவும்வென்றுன், றனக்கியானசெயவசெய்தேன் முன்செய்வசெய்க"† எனச சச்சந்தன்கூறியவாற்றுனு மறிக. எமக்கு எனறது நானும் நீருமாகிய நமக்கு என உளப்பாட்டுததன்மைப்பனமையாறகூறினமையா லரசன், தன்காரியம்போ லவர்காரியமாகியகடமைபையும் தனகாகசசெய்துதரவேண்டுமென்றவேண்டிய வாறுயிற்று. தமர்-இதுவு மேறகுறியவாறே யொருமைகும் பன்மைக்கும் பொது வாகிய கிளேதுதற்பெயராதலால், வேந்தனுகியதனக குரிமைபூண்டொழுகுமவர் எனப் பொருளுரைத்துகொள்க. தலேவைததல் எனறது, இது செய்கவென்று அரசன் தானே கேர்ந்தினறகூறுங் குறிப்பால, சாவாதிகாரமுமபெற்ற படைத் தலேவராய்வைத் தேவுதலாயிற்று. பின்னுந் தமரென்றது, தலேவைத்தேவப்பட் டாரும் அவர்கிழுள்ளாருமெனபது தோன்றத 'தமர்கள்' எனப் பொருளுரைக்கப் பட்டது. 'அவ்வேந்தற்காக' என்றது என்னின்வேறில்லாதநீங்கள என்காரி யததை தங்காரியமாகச்செய்யக்கடவீரென்று முழுதுரிமையுமளிததவேந்த னுக்கு எனத் தலேவைக்கப்பட்டார நெஞ்சில்கிணேக்கும் நன்றியறிவுதோன்றும் படி கூறியவாறு. 'வேலின்வாயாயினுமிறவா' தென்றது தலேவைத்தேவிய வுடனே அக்காரியத்தைச் செய்துகொடுகக வேண்டும்; அதற்குப் பகைவர் தடை செய்வராயின் அப்பகைவரையுமவென்று காரியததைமுடிக்கவேண்டும்; பகைவ ரதுபடைவலிமிகுதியாற் றம்படை அழிவுற்றதாயின், தலேவைக்கப்பட்டார்

* தொல். சொல். எச்சவியலில் 'தகநு' என்னும் 14-ஆம் சூத்திரம் சேனு வரையருரை பார்க்க.

† சித்தாமணி காமகளிலம்பகம் செய்யுள் --176.

தாமே கோரிற்சென்று பகைவரைத் தாக்கிக் கொல்லுதல், அல்லது அவர் கைவேல் பாயச் சாதல்வேண்டும்; அதுவுஞ்செய்யாதே யென்றவாறு. அரசனுரைத்த வின்சொல்லுக்கு அவ ரத்தூணைசெய்வதுஞ் சிறிதேயாமென்பார் வேலின்வா யாயினும்வீழார் என இழிவுசிறப்பும்மைகொடுத்துக்கூறினார். 'எமக்கியலா'தென் றது தலைவைக்கப்பட்டார் கூற்று. இதில் வேந்தனையகப்படுத்திய உளப்பாட்டுத் தன்மைப்பன்மையால் எமக்கென்றும், காரியமுடிவுபோகாதென்னுந்துணிவால் இயலாதென்றுங் கூறியவாறு. மறுத்தரைத்தல்-ஈண்டியலுங்காரிய மின்னதே யாமெனப் பிறிதொன்று துணிந்தரைத்தல். ஆலென்னிற்பூலென்னுமா றென் றது அங்ஙன மறுத்தரைத்தல் இத்தன்மைத்தெனக் கூறுதற்கேற்றதோ ரைதிக மடியாகப்பிறந்த பழமொழிகூறிமுடித்தபடி. அப்பழமொழியுரையுள், 'ஒருவன் ஆலமரத்தை ஆலமரமென்றுசொல்லின்' என்றது வினைகொள்வோனொருவன், தன் வினைசெய்வானைநோக்கிச சேய்மைகண்ணிருந்ததோ ராலமரத்தைச்சுட்டி அதோ ஆலமரமிருக்கிறது பா எனறுசொல்லின் எனறபடி 'மற்றொருவன் பூலாமரமெனறதனோடொகும்' என்றது, அவ்வினைசெய்வோன் வினைகொள் வோனைநோக்கி, அண்மைகணின்றதொரு பூலாமரத்தைச்சுட்டி, இதோ பூலா மரமிருக்கிறது என்றதனோ டொகு மென்றவாறு. அப்பழமொழியின் ஐங்க மாவது.-பொருளீட்டவிருமபிய முதியோனொருவன், ஒருரைச்சென்று, இரவிற் றுயின்று, காலையிலெழுந்து, ஊர்ப்புறத்தேசென்று, பொருட்பயனெய்தும விழைவுடன, ஆலம்வீழ்தாற் பலவிளகக்ககருதித தன் வினைசெய்வானைநோக்கி, ஆலம்வீழ்தறுதிதாவென்னுங்கருததாற் சேய்மைகணின்றதோ ராலமரத் தைச்சுட்டி, அதோ ஆலமரமிருகிறது என்றசொல்ல,அதுகேட்டு இனையனுகிய வினைசெய்வான், போகப்பயனுறுதற்குரிய பூலாவளாராற் டல்விளகதல் நலம் அவ் வளாகொண்டுவருவேன் எனனுங் கருததால வினைகொள்வோனைநோக்கி, அண்மைக்கண்ணிருந்த பூலாமரத்தைசசுட்டி இதோ பூலாமரமிருக்கிறது என்று சொன்னுக, அதுபற்றி அவன, ஆலென்றுற் பூலென்பான் எனவழுகப்பட் டமையால் அவ்வாறு, வினைகொள்வோர்சொல்லியபடிசெய்யாது வினைசெய் வோர்மறுத்தரைகருமுரைக்கெல்லாம ஆலென்னிறபூலென்னல் என ஒரு வாய்பாடாக வழங்கப்பட்டதென்பதாம். ஆல்விழுதாலும் பூல்வளாராலும் பல் விளக்குவோர் முறையே பொருளும் போகமும் எய்துவர் என்பதை, "வேலுக குப் பல்லிறரும் வேம்புக்குப் பற்றலங்கும், பூலுக்குப் போகம் பொழியுங்காண்- ஆலுக்குத், தண்டா மரையாளுஞ் சாருவளே நாயுருவி, கண்டார் வசீகரமாங் காண்."* என்பதனுனறிக. இப்பாட்டால அரசனுலேவப்பட்ட படைத்தலேவர் முதலாயினர், ஏவியகாரியததின் நன்மைதீமையாராயாது, எதிர்மாற்றமுமுரை யாது,தமகிறதியுறுவதும் பாராது,அரசன்சொற்படி தவருதுசெய்துதீரவேண்டு மென்பது கூறப்பட்டது.

* பதார்த்தகுணசிந்தாமணி 1894-ஆம்செய்யுள்.

32. தெருளா தொழுகுந் திறனிலா தாரைப்
பொருளா லறுத்தல் பொருளே—பொருள்கொடுப்பிற்
பாணிதது நிற்நிற்பார் யாவருளர் வேற்குத்திற்
காணியின் குத்தே வலிது.

எ-து, தன் னீ த் தேருதொழுகுந் திறனில்லாதபகைவரைப் பொருளாலேகோறல் காரியமாவது, அப்பகைவரைக்கோறற்குசிலர்க் குப் பொருள்கொடுத்தால் அவரைக்கொலலாது நீட்டிததுநிற்பார் யாவ ருளர், வேற்குதநிற்கு ஆணியின்குத்தேவலிதாகும் எ-று.

(குறிப்பு) தன்னேத தேருதொழுகுதலாவது.—தான் நிரபராதியாயிருக்க அதனே உள்ளவாறுணராது அபராதியெனப் பிறழவுணர்ந்து, எதிர்த்தொறக்குந் திறனினமையால் வஞ்சனேயாற் றீங்கிழைதலாவது. அதாவது இல்லெரியூட் டல் நஞ்சிடல்முதலாகிய தீத்தொழில்களேப்புரிதலாம். பொருளாலறுத்தல் பொருள் எனக காரணம சாரியமாய் உபசரிக்கப்பட்டது. 'கீட்டித்துநிற் பார்யாவருளர்' என்றது எல்லோருமே விரைந்துசெய்வார் என்றபடி. 'வேற்குத் திற்கு ஆணியின்குத்தேவலிதாகு'மென்றது தாமே நேர்நின்று மூணைந்துகோற லினும மறைந்து பிறிதோருபாயத்தாற்கோறல் தப்பாது என்றபடி. நேர்நின்று கோறலே யவரறிந்து பிறவுபாயததாற் றவிர்க்கலாமாகையாலும், மறைந்து பிற ருபாயத்தாற்கோறலேத் தவிர்க்கப் பிறிதோருபாயமில்லாமையாலும் பிறவுபாயத் தாற்கோறலே தப்பாதாயிற்ற இப்பாட்டிற்கொள்ளப்பட்டபழமொழி, "வேற் புண்விரைந்தாறும், ஆணிப்புண்ணுரு தி" என்றும், "குத்துக்காயத்தைவிடக் கோர்வைகாயம்பெரிசு" என்றும் நாட்டுவழக்காக வழங்கப்படுகிறது. இதில், குத் தக்காயம்' என்றது வேற்குத்துகாயமும், கோர்வைக்காயமென்றது கழுமரத்திற் கோகும் ஆணிக்காயமுமென்று கொள்க.

33. வெஞ்சின மன்னவன் வேண்டாத வேசெயினு
நெஞ்சத்துட் கொள்ப சிறிதுஞ் செயல்வேண்டா
வென்செய் தகப்படாக் கண்ணு மெழுப்புபவோ
துஞ்சு புலியைத துயில்.

எ-து, வெய்யசினத்தையுடைய அரசன் தன்கீழ்வாழ்வாரைத் தகாதனசெய்தானுபினும், அவன் மனத்திற் கறுவுகொள்ளத்தக்கன சிறிதும் அவன்கீழ்வாழ்வார்க்குச் செய்யலாகாது; எல்லாத்தின்பங்களோ யுந் தமக்குச்செய் தகப்படாக்கண்ணும் எழுப்புவரோ உறங்குகின்ற புலியைத் துயில் எ-று.

(குறிப்பு) சினம் அரசர்க்கு முற்றக்கடியுங் குற்றமன்மையால அளவிறந்த சினமே கடியற்பாலதாதலால் வெஞ்சினமென்றார். வேண்டாதனசெய்தல் என் பதில் எதிர்மறைக்கு மறுதலைப்பொருளுண்மையால் அது வெறுப்பனசெய்தலா யிற்று; அதாவது கொடுங்கோல்புரிதலாம். 'அவன் மனத்திற் கறுவுகொள்ளத் தக்கன' என்றது அவனுணையைவெறுத்ததலும், வேறோரரசனை நாட்டினேத்தலு மாகிய மனத்தொழில்களாம்; வினை வாகருக் காயங்களாலாகிய வேண்டாதசெயலை அவன் முனே கடிதின் ஒறுத்தடகுவானென்பது சொல்லவேண்டாதாயிற்று. 'அவன்வீழ்வாழ்வார்களுச் செய்யலாகாது' என்றது அவன்வீழ்வாழ்வார் செய்ய லாகாதென்றவாறு. என்செய்தெனபது என்னும்செயது என்னும் மூற்றும்மை தொக்க வினுத்தொடராதலால 'எல்லாத்துன்பங்களையுந் தமக்குசெய்' தெனப் பொருளுரைகசப்பட்டது. அகப்படாக்கண்ணுமென்றது அது தமவயப்படாதிருக கலும் என்றபடி. உம்மை, உயர்வுசிறப்பாய், அகப்பட்டக்கண்ணும அதுசெயத லாகாதென்பதுகுறிததது. எழுப்புவரோ என்றது ஒருவரும எழுப்பாரென்பதாம். தஞ்சுபுலியைத துயிலெழுப்புமவன அதனுற் கொல்லப்படுவதுபோலவே வெஞ் சினமன்னவன நெஞ்சததுட் கறுவுகொள்ளுஞ்செய்கைவினசெய்வாரும அவ னல் இறுதியடைவார் எனத திட்டாந்தத்தொடு பொருததியுரைததுக்கொள்க. இதன் பழமொழிப்பொருள், "தஞ்சுபுலியிடறியெடனபோல, வுய்ந்தனன் பெயர்தலோவர்தே" எனப் புறநானூறறளுப,* "வயப்புலியையாலுருவிவிடு கின்றீரே"† எனப் பாரதததுளளும வழங்கப்பட்டது. "உறங்குகிறபுலியை யெழுப்ப அது அதனாளகேட்டதாம" எனவும, துஷ்டனெருவனை யொருவன் கோபமூட்டினுன் என்று சொல்லவேண்டுமிடதது "தூங்கும்புலியைச சுளளி யிட்டுக்குதினுன்" எனவும நாட்டுவழகாக வழங்கப்படுதலு முண்டு.

34. பரந்த திறலாரைப் பாசிமே லிட்டுக்
கரந்து மறைக்கலு மாமோ—நிரந்தெழுந்த
வேயிற் றிரண்டதோள் வேற்கண்ணுய் விண்ணியங்கும்
ஞாயிற்றைக் கைம்மறைப்பா ரில்.

எ-து, எங்கும் பரந்து வெளிப்பட்டதிறலினையுடையாரைப் பாசி போலேயிருக்குஞ சிலசொற்களையுஞ செய்கைகளையுமிட்டுக் கரந்து மறைக்கலாமோ, நிரந்தெழுந்த வேயிற்றிரண்டதோள் வேற்கண்ணுய்! விண்ணின்கட் செலலாநின்ற ஞாயிற்றைத தங் கையான்மறைப்பா ரில்லையாதலான் எ-று.

---

* 78-ஆம் செய்யுள், 7— 8 அடிகள்.

† விஸ்விபாரதம் ரூதபோர்ச்சருக்கம் செய்யுள்—265.

(குறிப்பு) நிறல்-வெற்றி; இது, போரும் கல்வியும் கொடையும் முதலிய ஆண்மைக்குணம்பற்றிவருவதாம். அது பரத்தலாவது உலகெங்குமதியப்பிரசித்தி பெறுதல். பாசி-உவமையாகுபெயர். பாசிபோலிருக்குஞ்சொற்களுஞ் செய்கைகளுமாவன.—நீரிலுள்ளபாசி பிறர்க் கொருதீங்குமில்லதாய் நன்னீர்கொள்பவரா லொதுக்கப்படுவதுபோல அவரது நன்னீர்மைகொள்வாரால் ஒதுக்கற்பாலன. கரந்துமறைத்தல்-வஞ்சித்துமறைத்தல்; அதாவது அவர் நன்னீர்மையுடைய ரெனத் தானறிந்துவைத்தே பிறர் அதனை யறியாவண்ணம் அவரது மெல்லிய குற்றங்களால மறைத்துப்பேசுதல். 'கையான்மறைப்பாரில்லே' என்றது தாம் பாராது மறைத்துக்கொள்வதல்லது உலகத்தார்க்குத்தெரியாவண்ணம் கையான் மறைக்கவல்லாரில்லே என்றவாறு. மிகுபுகழுடையானெருவனை யொருவன் புகழியப்பேசுமிடத்து, அது பொறுதார் அவனைநோக்கிச் சூரியனைக் கையால் மறைப்பவன் நீதானே என்னும் சாதாரணவழகே இப்பாட்டில் எடுத்துக் கொண்ட பழமொழிபோலும். இப்பாட்டால், குணமே யொருங்குடையாருங் குற்றமே யொருங்குடையாரு முலகத்தினமையால், உலகப்பிரசித்திபெற்ற பெருந்தகையாளரிடத்துள்ள மேல்லிய சில குற்றங்களையே பொறுமைகுண முடையார்கூறுவாராயினும் அவை கொள்ளத்தக்கனவல்லவென்பதும்,அவற்றை யொதுக்கிக் குணங்களையேபாராட்டவேண்டுமென்பதும ருங்கு கூறப்பட்டன.

35. தமனெண் திருநாழி யீததவ னல்லா
னமனென்று காயினுந தான்காயான் மன்னே
யவனிவ னென்றுரைத தெள்ளிமற் றியாரே
நமநெய்யை நக்கு பவர்.

எ-து, தன்னையுறவென்று தனக் கிருநாழியாயினுமுதவினவன் தன்னைக்காயினுங் காயுமத்தன்மையல்லது, நம்சுற்றததானென்றிகழ்ந்து தனக்குதவியவன்றன்னை அவனிவனென் றிகழ்ந்துரைததுத தான் காயலாகாது; தெய்வத்தையூட்டிய நெய்யைக் கூசாதேநக்குவார் யாவருமில்லையாதலால் எ-று.

(குறிப்பு) தமனெண் திருநாழியீந்தவன்காயினும் (காயும்) அல்லால் நம னென்றெள்ளி அவனிவனென்றுரைத்தத் தான்காயான் எனக் கூட்டுக.'தன்னை யுறவென்று தனக் கிருநாழியாயினுமுதவினவன்' என்றது வற்போன் தொடர் புடையான் என அபிமானித்து எதேனுஞ் சிறிதுதவினவன் என்றவாறு. இரு நாழி-நெற்களவேள்வியி லாதலர்க்கிவ்வெதொரு சிறிய அளவு. 'தன்னைக்காயினும் காயுமத்தன்மையல்லது' என்றது அவனும் காயான், ஒரோவழிக் காய்வானுயினும்

ஈயப்பெற்றேனுக்குப் பழியும் பாவமு முண்டாகாதிருக்கவேண்டி, அக்காய்தலை வின் ஒழிவுமாறு பொறுத்திருப்பதே நலமாயிருப்பவும் அது செய்யாதென்ற வாறு. ஈண்டுக் காயினென்றது "தொடிற்சுடின்"* என்புழிப்போலத் தன் வினைப்பெயரெஞ்சின்றமையா லது காயுமென விரித்துரைக்கப்பட்டது. 'நம் சுற்றத்தானென் றிகழ்ந்' தென்றது ஈயப்பெற்றே னெதிர்த்துக்காய கெஞ்சு தணிதற்குள்ளதோரேதுவை விரித்துரைத்தவாறு. இதனுல், தொடர்பில்லாதார் காயின் எதிர்த்துக்காய்தலாகாதென்பது சொல்லவேண்டாதாயிற்று. 'தனக்குத வியவன்றன்னை' என்றது காய்தலாகாதென்பதனை வலியுறுத்தும்பொருட்டு ஈந் தோன் கன்றிபாராட்டற்குரியான என்பதை நினைப்பூட்டியவாறு. நமகெய்-மந்திரமுடிவில் நம (எனதில்லை) என்றுசொல்லித தேவரையூட்டுதற்கு வேண் விக்கண்வைதத நெய். உரையில் ஊட்டியநெய்யை யென்றது ஊட்டியவைத்த நெய்யை யென ஒருசொற் பெய்துரைககற்பாற்று. கூசுதற்கேது ஒழுக்கக்கேடும் காரியக்கேடும் உண்டாமென்னும் நினைவாதலால, கூசாதென்றது அந்நினை வின்றி என்றபடி. விரலிற் றீச்சுட்டால் உடனே நாவால்நக்கிப்போக்கல் கொல் லுலோமுதலியவற்றில். ஆதரர்வழக்கானமையால் அவ்வழக்குப்பற்றி, வேண்டிற் றுதவும் வேள்விக்குரிய நமநெய்காய்ச்சுஞ்சடங்கில் அந்நெய் விரலிச்சுடினும் ந(ம்)மநெய்தானேயென் றிகழ்ந்து நக்குதலிச்செய்யாதவாறுபோல, எற்போனை இவ்வோன் எதேனும் ஒருசமயம் காயுமாயினும் அவனை எமனென்றிகழ்ந்து, அவ்வேற்போன் காய்தலாகாதெனப் பொருளொடுபொருதநியுரைத்துக்கொள்க. இதன்பழமொழி, நீக்கீடுநெய்யில் நாக்கீடலாமா என்பது. இது வைதிகவழக் காகிய ஒழுக்கநெறிபற்றிவந்த பழமொழி. இப்பாட்டாற் செய்ந்நன்றி மறகக லாகாதென்பது கூறப்பட்டது.

36. பிக்குடைய ராகி மிகமதிக்கப் பட்டாரை
யொற்கப் படமுயறு மென்ற விழுக்காகும்
நற்கெளி தாகி விடினு நளிர்வரைமேற்
கற்கிள்ளிக் கையுய்ந்தா ரில்.

எ-னு, முதன்மையாய பிக்கபொருளுடையராகிப் பிறரான்மதிக் கப்பட்டாரை வறியராம்படிமுயல்வேமென்றுநினைத்தல், தமக்கிழுக்கா ரும்; மிகவுஞ் சிறிதா யெளிதாயிற்றாயினும், பெரியவரைமேலுள்ளகல் லைக்கிள்ளிக் கைவருந்துதலைத்தப்பினரில்லையாதலால் எ-று.

(குறிப்பு) பிறரான்மதிக்கப்படுதலாவது அறத்தாறீட்டித் தக்குழியீதல்பற்றிப் பிறரால் நன்குமதிக்கப்படுதல். 'வறியராம்படிமுயல்வேமென்றுநினைத்தல்' என் பதற்கு அவரது ஆக்கங்காணப்பொருதார்நினைத்தல் என எழுவாய் வருவித்

* திருக்குறள் 116-ம் அதிகாரம் (பிரிவாற்றுமை) குறள்—9.

திரைத்துக்கொள்க. 'வதியராம்படி முயல்வேமென்று' என்றது அவரது ஆக கத்தை யழிக்கமுயல்வேமென்று என்றவாறு. 'நினைத்தல் தமக் கிழுக்காகு'மென் றதனால், சொல்லலும் முயறலும் இழுக்காமென்பது சொல்லவேண்டாதாயிற்று. இழுக்கு-ஈண்டு முயற்சியும் பயன்படாது தாமும் நலிவெய்தல்பற்றிப் பிறரால் இகழப்படுதல். இங்ஙனம் இழுக்காகுமென்றதனை, ஸ்தாலீபுலாகந்யாயம்பற்றிய திருஷ்டாந்தமுகத்தால் நிரூபிக்கிறார், நற்கெளிதாகி என்று தொடங்கி. நற்கெளி தாகிவிடினும் என்பதை மதஜிமதீபமாகக்கொண்டு ஈரிடத்துங் கூட்டியுரைத்துக் கொள்க. 'மிகவுஞ்சிறிதாய்'என்றது அழிக்கக்கருதும்பொருள்போற் பெரிய மலையினின்றுமெடுத்துக்கொள்ளும் பொருளின்சிறுமைகூறியவாறு. 'எளிதா யிற்றாயினு'மென்றது அழிக்கும்முயற்சிக்குப் பிற தடையொன்றுமின்றியிருத் தலும் என்றபடி. இளலுதல்-விரலிடைவைத்து நமட்டல். இப்பாட்டால், மலை போலும் மிக்கசெல்வமுடையாரதுபொருளைக் கெடுக்கமுயலும் பொறுமையுடை யார்முயற்சி பயன்படாதுபோவதுமன்றி, அவர் தாமும தன்புறவர் என்பதுபற் றிப் பொறுமையொழிகவேண்டுமென்பது கூறப்பட்டது. இதன் பழமொழிப் பொருள் "கற்கிளளிக் கையீழ்ந் தற்று"என நாலடியுள்ளும்* எடுத்தாளப் பட்டது.

37. வைத்ததனை வைப்பென் றுணரற்க தாமதனைத்
தூய்ததனு வழங்கி யிருபா லு மத்தகத்
தக்குழி நோக்கி யறஞ்செய்க வஃதன்றே
வெய்ப்பினில் வைப்பென் பது.

எ-து, தாம் தேடிச் சேமித்துவைததபொருளைத் தமக்குதவும் வைப்பென்றுகருதற்க, தாம அப்பொருளைநுகர்ந்தொழுகியிருமைக்கு முழுதாகத தகுதியுள்ளவிடமபாததி அறதலதைச்செய்க; அவ்வறஞ் செய்கையன்றே தாம தளர்ந்தகாலதது தமக்குதவும வைப்பென்று சொல்லப்படுவது எ-று.

(குறிப்பு) வைப்பு-கேடுற்றவிடத்து உதவுமாறுவைக்கும் சேமநிதி. 'தம குதவும் வைப்பென்றுகருதற்க' என்றது வைததவர்க்கு கேடுநேராதவழி அது அவர்க்கு உதவுதலின்மையாலும், மிக்ககேடுநேரும் ஒரோவழி அதுவும் அழியு மியல்புடையதாகையாலும அது தம்மதென்று கருகத்தகாதென்றவாறு. பின்னர், 'தக்குழிநோக்கியறஞ்செய்க' என்பதனுள், கொடையும் அடங்கினமை யால், 'தூய்ததுவழங்கி' என்பதிலுள்ள வழங்குதலை ஒழுகுதலாகக்கொண்டு 'தகர்ந்தொழுகி' எனப் பொருளுரைக்கப்பட்டது. ஒழுகல் இடையீடின்றிநிகழ்த

* 34-ம் அதிகாரம் (பேதைமை) செய்—6.

லாதலால் 'துகர்ந்தொழுகி' என்பதற்கு துகராகின்றுகொண்டேயென்பது கருத்தாகக்கொள்க. 'இருமைக்கும்' என்றது இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்வுக்கு மென்றவாறு. அத்தக வலித்தல்விகாரம். இருவகைவாழ்வுகளும் அழகாவது இன்பமுடைமையும், அறனுடைமையும். 'அழகிதாக' என்றது அழகுடையதாக என்றவாறு. இம்மைவாழ்வுக்கு அழகுடைமை துகர்ந்தொழுகுதலும், மறுமைவாழ்வுக்கு அழகுடைமை தகுகுழிநோக்கி அறஞ்செய்தலால்வரும் புண்ணியமு மாம். இருவகைவாழ்வுக்கும் இவை இன்பமாகிய அழகையுண்டாக்கும் உரிமையுடையவாதல்பற்றி அவற்றிற்கு அழகுடையவாயின. தகுநிலங்களிடம் பார்த்து அறத்தைச்செய்தலாவது காலதேசபாத்திரங்களையறிந்து, அவர் தளர்வு தீரவேண்டியகாலங்களிலே செய்யத்தக்க அறச்சாலைகளை நிறுவுதல். இங்ஙனம் அறச்சாலைகளைநிறுவுமவர் வறுமையுற்றஞான்று தாமும் அதனுள் ஆதரிக்கத் தகுகோராய்ப் பாதுகாகப்பெறுதலால இம்மைகாண்க்கும், உடல்நீங்கியவழிப் புண்ணியப்பேற்றால, தேவராய்ச்சென்று இன்புறுதலின் மறுமைகாண்க்கும் கண்மையடைதலால், அது "தாம் தளர்ந்தகாலத்தத தமகுதவும் வைப்பென்று சொல்லப்படுவ"தாயிற்று. எய்ப்பினில்வைப்பென்பது, ஆபத்திலுதவுதற்குவைக்கும் நிதிபோல்வதொன்றை ஆபதனம என்னும் வடமொழிச்சொலவடையான் வழங்கும பழமொழி. இது, "ஈசனையிலங்குஞ்சுடர்ச்சோதியையெந்தையை யெனதுகெய்ப்பினில்வைப்பினை" எனப் பெரியதிருமொழியுள்ளும்* வழங்கப்பட்டது. இப்பாட்டாற் பெருஞ்செல்வமுடையா ரறஞ்செய்யுமாறும், அதன் பயனும் ஒருங்கு கூறப்பட்டன.

38. உற்ற னுறுஅ னெனலவேண்டா வொண்பொருளைக்
கற்றனை நோக்கியே கைவிடுக்க—கற்றன்
றிழவ னுரைகேட்குங் கேளா னெனினு
மிழவன் றெருதுண்ட தப்பு.

ஈ-தி, தனக்குச கற்றதுதான் அலலன் என்று ஆராயவேண்டுவ தில்லை; தனது ஒள்ளியபொருளைக் கற்றறிந்தோனைநோக்கியே யவன் மாட்டுகைவிடுக்க; கற்றவன், தன்னையாக்கிய தலைவன்சொலலைக்கேட்கு செய்யானாயினும், எருதுண்ட தப்பு ஒருவற் றிழவன்று; ஆதலால அவன் கொண்டபொருளும் கடைக்காற் றனக்கே யுதவும் எ-று.

(குறிப்பு) இப்பாட்டு, தலையாயவினையாளனைத் தலைவன் வைத்தாலுமாறு கூறுகின்றது. 'கற்றனை'னென்றது 'இழவனுரைகேட்கும்'என்னுங்குறிப்பால், இழவனுரைகேட்டுச் செய்தற்குரிய தொழிற்றுறைக்கல்விகற்றோன் எனப் பொருள்படு

* 7-மபத்து, 10-ம்திருமொழி. 4-ம்பாசுரம்.

தலால், அதற்கேற்ப 'ஒண்பொருள்' என்றது புகழொடுபொருந்திய பொருள்வரு வாய்க்குரிய தொழிற்றுறையையெனக் கொள்க. 'தனக்குச் சுற்றத்தான் அல்லன் என்று ஆராயவேண்டுவதில்லை' என்றது மிக்கபொருள்படைத்தானொருவன், அப் பொருளைப் பாதுகாத்து மேலும்வளர்ததற்குரிய வினையாளனைத் தெரிந்தெடுக்கு மிடத்து, பொதுவாக இவன் நம்சுற்றத்தானுதலால் நம்பொருளைப் பாதுகாக்குந் தொழிற்றுறைவினைக்கு உரியன், இவன் நம் சுற்றத்தா னல்ல னுதலால் அவ் வினைக்கு உரியனல்லன் என ஆராய்ந்து சுற்றத்தானுயிருப்பவனையே அவ்வினைக் குரியனுய்த் தெரிந்தெடுப்பது சாதாரணவழக்காயிருப்பினும், ஆராயப்படுவான் அத்தொழிற்றுறைவினையிற்பயின்று தோச்சிபெற்றனுயிருப்பானுயின் அச் சிறப்புப்பற்றி அங்ஙன மாராயவேண்டுவதில்லையென்றவாறு.'ஒள்ளியபொருளை' என்றது புகழொடுகூடிய பொருள்வருதற்குரிய தொழிற்றுறையை யென்றபடி. இதுவே தொழிற்றுறைகல்விகற்றுனோக்கிக் கைவிடுதற்குரிய செயப்படு பொருளாயிற்று என்பதை, வினைக பைப்பொருளை, பின்னர் "மறந்தானுந் தாமு டைய தாம்போற்றி னல்லாற், சிறந்தார் தமபெரன்று தேற்றுர்கை வையார்"*எனத் தமராயிருப்பினும் தெளியப்படாதாரிடம் கைவிடுதல்கூடாதென விலக்கப்பட்ட மையானும் அறிக. 'கற்றறிந்தோனோக்கி' என்றது, இவன் பொருள்செய்யும் தொழிற்றுறைநெறி கற்றறிந்தோனு? அல்லனு? என் றுராய்ந்து கற்றறிந்தா னெனத் தெளிந்து அவன் அது கற்றறிந்தமையேநிமித்தமாகக்கொண்டு என்ற வாறு. இதனுல் வினைகருமைநாடுமாறு கூறப்பட்டது. 'கைவிடுக' என்றது தன் வயமாய் வையாது அவனவயமேயாக்குக என்றவாறு. கைவிடாது தன்வயமாயும் வைதிருக்குமாயின் அதன் ஆக்கங்கேடுகள் அவன்பொறுப்பாகாமையாலும், ஒரு வினைக் கிருமூப்பு உதவாதாகலானும், அது நன்குசெல்லாதென்பது கருத்தாகக் கொள்க. இதனுல் வினைக்குரிமைநாடியபின்றை அவனை அதற்குரியனுக்க வேண்டுமென்பது கூறப்பட்டது. கைவிடுதலவழி அவ்வினைக்களத்தில் அவன் சொல்லே செல்லவேண்டுமாகையால், தலைவன், தனகதுகூலமாகுமவற்றைத் தானேசொல்லவும், அது செல்லவும் இடமில்லாதகுறையுளதெனக் கொள்ள லாகாதென்பார், 'கற்றேன் கிழவனுரைகேட்கு' மென்றுர். 'கற்றவன் தன்னை யாக்கியதலைவன்சொல்லைக் கேட்டுச்செய்யும்' என்றது: பொருள்செய்யும்நெறி யறிந்த வினையாளன் தன்னை வினைக்குரியனுக்கியதலைவன, தனக கதுகூலமாகச் சொல்லுமவற்றைகேட்டு அவனுகாக்குமுண்டாகுமாறு தவருதுசெய்வன் என்ற படி. 'கேளானெனினும்' என்றது தலைவன் உலோபகுணத்தாற் செலவுசுருக்கச் சொல்லுவது ஒரோவழி நூலொடும் துணிகியஉணர்வொடும் பொருந்தாதவிடத்து அதனைக்கேளாதே பிறிதுதச்செய்வானுயினும் என்றபடி. 'எருதுண்டதப்பு ஒரு வற் கிழவன்று' என்றது அவ்வினைக்களத்தினூட்டத்தில் லவன் கேளாதுசெய்யும்

* இந்நூலின் 48-ம் செய்யுள்.

பொருள்விரயமானது, தலைவனதுகருத்தைக்கடத்து உழவனூட்டும் எருத்தி னுணவுபோல கட்டமாகாதென்பதாம். அதாவது அவ்வுணவுமிகுதியாலுண்டாம் பொருட்செலவினின்றும் எருததின் உடல்வளர்ச்சியாலுண்டாம் விலைமதிப் பேற்றமும், உழைப்புமிகுதியாலுண்டாம் வினைபயனேற்றமும் ஆகிய பொருள் வரவுமிகுவதுபோலக்கிழவனைக்கேளாதுவினைக்களத்தையூட்டும்பொருட்செலவி னின்றும்அவ்வினைக்களத்தின் உடல்வளர்ச்சியின்விலைமதிப்பேற்றமும் வருவாய் மிகுதியுமாகிய பொருள்வரவுமிக்கிருக்குமென்றவாறு. 'ஆதலால்அவன்கொண்ட பொருளும்கடைக்காற்றனக்கேயுதவும்' என்றது அத்தொழிற்றலையூட்டத்தின் பொருட்டுக் கற்றேன்கொண்டபொருளும வருவாய்மிகுதியால் முடிவிற் பொரு ளுடையானுக் குதவுமெனக் கற்றேனைவைத்தாளுதலாலுண்டாகும் நன்மை கூறியவாறு. 'எருதுண்டவுப்பு' என்றபாடதில்,'உப்பிட்டவரையுளளனவுநினை' என்பதிற்போல உப்பென்பதும ஈண்டு உணவை யுணர்த்தியதென வுணர்க. காவினின்றது பாழாகாது எனவும, எருதினட்டம் உழதாற்றிதும் எனவும் உழவர்குழுவழகசால்வந்த பழமொழிப்பொருள இப்பாட்டிற் காட்டப்பட்டது. காவினின்றதென்றது காவிலகுக் கிழவனுரைகேளாது வேண்டுமளவு உழவ னூட்டும் பருத்திவிதைதொக்கு முதலியன.

39. நாடடிக் கொளப்பட்டா நன்மை யிலராயிற்
காட்டிக் கலாது மெனவேண்டா—வோட்டி
யிடமபட்ட கண்ணு யிறக்குமை யாட்டை
யுடமபட்டு வெளவுண்டா ரில.

எ-து, தமமாலே யாக்கிக்கொள்ளபபட்டார் தாமேவபபட்ட காரி யத்தின்கணின்று தமமையேவினார்க்கு நன்மையாவதைச்செய்கிலரா யின் அசசெய்யாமையைப் பிறக்கறிவித்தல்க காரியதத்தின்கணிறுத தலேக்கலேவேமென்றுகருதாதே,குழைகளேயோட்டியிடமுண்டாகுவே யகன்ற கண்ணினையுடையாய்! சாவக்கடவுமையாடடை யுடமபினை யட்டுக் குருதிகொண்டவரில்லே எ-று.

(தெளிப்பு) இப்பாட்டு, இடையாயவினையாளரும் தலைவரும இவ்வாறு முகற்பாலரென்பது கூறுகின்றது. 'தம்மாலே யாக்கிக்கொள்ளப்பட்டார்' என் றது தலைவராற் றம்வினைக்குரியராக்கிக்கொள்ளப்பட்டார் என்றபடி. 'தா மேவப் பட்டகாரியத்தின்கணின்று' என்றது தலைவர் வினையாளராகிய தம்மை யேவிய காரியத்தில் தாம் தலைமையுடையராய்நின்று என்றவாறு. நன்மையாவதைச் செய்தலாவது: அக்காரியம் பொருள்வருவாயான்(முன்னையநிலையின்)மிக்கிருக்கு மாறுசெய்தல். 'அச்செய்யாமையைப் பிறர்க்கறிவித்து' என்றது அங்ஙனம் பொருள்வருவாய்மிக்கிருக்கச்செய்யாமையே தவறெனத் தாம் கருதியது அத்

தொழிற்றுறையிலுள்ள பிறருமறிந்து அவரும் அத்தவறுசெய்யாதிருக்க அறிவுறுத்துதல், பொருளொன்றேநோகிய தலைவரதியல்பென்பது கூறியவாறு. காரியத்தின்கணிறுத்தலேக் களேதலாவது. வினைக்குரியராகநாட்டியிருத்தலே யொழித்தல். 'களேதும்' என்றது கருதுவார் நெஞ்சினேயகப்படுத்திநினைக்கும் உளப்பாட்டுத்தன்மைப்பண்மையாதலால், 'களேவேமென்றுகருதாதே' என முன்னிலேயொருமையோடுகூட்டி முரணின்றிப் பொருளுரைக்கப்பட்டது. அது அவரை யறியாதுநாட்டிய தம் குற்றமுணராது அவரை அங்ஙனங் களேவே மென்றுகருதல் ஆண்மைதன்மையன்று என்பதுதோன்ற மகடூமுன்னிலே யாகவே பயனிலேப்பொருள் கூறப்பட்டது. 'குழைகளே' என்றது ஒட்டுதற் குரிய செயப்படுபொருள் விரிதலுரைத்தலாவது. 'குழைகளே ... ...கண்ணுய்' என்றது மகடூமுன்னிலே. 'இறகுமையாட்டை, யுடம்பட்டுவௌவுண் டாரில்' என்றது எடுத்துக்கொண்டபொருளுக் கேற்றதொரு திட்டாந்தங் காட்டியவாறு. 'மையாடு'-இருபெயரொட்டு; வெள்ளாட்டுக்கடாய் எனபது பொருள். இங்குக் காட்டப்பட்ட திட்டாந்தத்தாற் சாவக்கிடகரும் மையாடு அதனேயுடையானுக்கு ஒருகேடும பயவாதிருகசசெயதே அது கிடையாடுகளேச் சினேப்படுத்தி ஆட்டைப் பலுகச்செய்யாதிருப்பதே ஒருகுற்றமாகக்கருதி அதனேக் கொல்லலா காதவாறுபோல, ஒருவினேயாளனேநாட்டிய தொழிற்றுறையில் அவனுல் ஈட்ட மொன்றுமில்லாதிருக்கச்செய்தே மிக்கலாபம் இல்லேயென்பது காரணமாகத் தலேவன் அவனே அவ்வினேயினின்றுநீக்குதல் கூடாதென்பதும், அவ் ஆடு, உடையான் மருததலவழுஞ்செய்யாது கொல்லவுங்கொல்லாது உபேக்ஷித்திருக்கு மளவில், தானே இறந்துபடுமதுபோல, முன்னேய நிலேயினின்று மிக்கலாபம் காட்டமாட்டாத தொழிற்றுறைவினேயாளன், தலேவன் தன்னே உபேக்ஷித்திருப் பதகண்டு தானுய் விரைவில அவ்வினேயாட்சியினின்றும் விலகிவிடுவனென் பதும் ஒருங்குபெறப்பட்டன. சாகக்கிடக்தும்வெள்ளாட்டை யேறிமிதித்துக் கோல்வானேன் என இடையர்குழுவழக்கால்வந்த பழமொழிப்பொருள் இப்பாட் டிற் காட்டப்பட்டது. முட்டுக்கடாயை வெட்டிப்பலியிடுவர் என்பது இதன் குறிப் பாதலால், ஈட்டங்காட்டும் கடையாயவினேயாளனே அவ்வினேயாட்சியினின்றும் காட்டிக் களேவரென்பது குறிப்பாற்போந்த குறிப்பாயிற்று.

40. பயனேக்கா தாற்றவும் பாத்தறிவொன் றின்றி
யிசைகோக்கி யீகின்ரு ரீகை—வயமாப்போ
லாலித்துப் பாயு மலேகடற் றண்சேர்ப்ப
கூலிக்குச் செய்துண் ணு மாறு.

எ-து, அருளினும் பிறர்க் கொன்றைக்கொடுத்தாற் றமக்கு மறு மைக்கண் பயக்கும் பயனே ஆராய்தே, மிகவும் பகுத்தறியுமறிவொன் றின்றிப் புகழின்பொருட்டு ஈகின்றூரீகை, புலிபோல ஆவித்துப்பாயா கின்ற அலகுகளையுடைய கடற்சேர்ப்பனே! கூலிக்குத் தொழில்செய் தண்ணுநெறியோடொக்கும் எ-று.

(குறிப்பு) இப்பாட்டு ஈகையின்றிறம் உணர்த்துகின்றது. அருளினும் பிறர்க்கொன்றைக்கொடுத்தலாவது அருள்பிறத்தற்குரியராய் ஒதியுணர்ந்தொழு கும் வறுமையுடைய சற்பாத்திரங்களும், பிறதொழிலாற் பொருள்தேடுதற்குரிய ரல்லாத கலைகணற்றவருமாகிய இரவலர்க்கு அவர் இடர்தீர விரும்புவதொன் றைக் கொடுத்தல். இதுவே இசையின்வேறுகிய மறுமைப்பயன்பயக்குமாதலாற் 'பயனெக்கா'தென்றதன்குறிப்பால் விரித்தரைகைப்பட்டது. 'ஆற்றவும்' என் பது பாத்திரவினது இன்மைகருதிச்சேடணமானமையால் அம்மிகுதி அதன் எதிர்மறையின்சிறுமையாற் குறிகவேண்டுமொகையால் 'மிகவும்பகுத்தறிவொன் றின்றி' என்றதற்குப் பகுதறிவு சிறிதுமின்றி என்பதே கருத்தாகக்கொள்க. இதனாற் பகுத்தறிவு சிறிதுவிரவினும் அறப்பயனளிகருமென்பது குறிப்பாயிற்று. பகுத்தறிவாவது இவர் எளியர், இவர் வலியர், இவர் ஒழுகமுடையோர், இவர் ஒழுகமில்லோர், இவர் ஒதினர், இவர் ஒதாதார், இவர் கலைகணில்லார், இவர் கலைகணுள்ளார் எனப் பகுத்து, ஒதியுணர்ந்தொழுகும் வறிஞர்களும், பிறவழியாற் பொருளீட்டுந் தகுதியில்லாத கலைகணற்றரும் அறக்கொடைக்குரியரென உணர்தல். இவ்வுணர்வின்றித் தம்மைப்புகழ்வாரையேநோக்கிக் கொடுக்கும் கொடைக்கு அப்புகழொன்றே பயனுமொழிதலால அதனை'இசைநோக்கியீகின் றூரீகை'என்றார். இவ்வீகை உயர்ந்தோர்கருரியதன்றென்பார்'இசைநோக்கியீகின் றூரீகை'என அவர்க்கே யுரியதாக்கிக்கூறினர். ஈண்டு ஈகையென்ற ஒழிந்தாராயி னும் உவமையான் அவ்வீகையின்பயனுகிய இன்பதுகர்ச்சியென்பதே கருத்தாகக் கொள்க. ஆவித்து-ஆரவாரித்து. கடல்சேர்ப்புக்கும், தட்பம்சேர்ப்பனுக்கும் தனித் தனிவிசேடணமாதலால் இயைபான் ஒருதொடராகக் கூறுதல்பற்றிக் கடற்சேர்ப் பனேயெனப் பொருள்கூறிவிடுத்தார். தட்பம்-தண்ணளி, 'கூலிக்குத்தொழில் செய்தண்ணுநெறியோடொக்கு' மென்றது, அற்றைக்கூலிவேலைசெய்து அதன் பயனை அவ்வப்பொழுதோடு உண்டுகழிக்கும் இன்பதுகர்ச்சியோடொக்குமென்ற வாறு. பாத்திரவின்றி இசைநோக்கியீகின்றூரீகையின் இன்பதுகர்ச்சி இங்ங னம் தொழுதாண்சுவைதுகர்வோடொக்குமென்றமையால் இதனின்வேறும் மறுமைப்பயனெக்கிப் பாத்திரிந்தியீகையின் இன்பதுகர்ச்சி ஏழுதாண்சுவை யோடொக்குமென்பது குறிப்பாயிற்று. ஆகவே பொழுதெல்லாம் அற்றைக் கூலிக்குழைத்து அண்மையிற்கிடைக்கும் சிறுகூழைநுகர்ந் தின்புறுதலேகாட்டி லும் கண்ணிலக்களிலே ட்ருவத்தில்விதைத்தனை பலவாய்ப் பின்னிலும்

பெருங்கூழைத்தொருத்து அதனைதுகர்ந் தின்புறுதல் சிறந்ததாவதுபோலப் புகழ் நோக்கிக்கொடுப்பதால் இம்மையின் அண்மையினுஞ்சும் இசைநுகர்ச்சியைக் காட்டிலும், சற்பாத்திரங்களிற் காலமறிந்துகொடுக்கும் புண்ணியநுகர்ச்சி சேய்மைக்கண்ணதாயினும் பெரிதாதலால் அது சிறந்ததெனக் கருத்துநோக்கிப் பொருளொடுபொருத்தியுரைததககொள்க. இதனுள் இசைநோகையியுமீகையினின்றும் அறனேக்கியீயும் ஈகை சிறந்ததென்பது பெறப்பட்டது. ஆயின், "அறவிலே வாணிக ஞஅ யல்லன்"* என அறம்நோகையியுமீகை பழிக்கப்பட்டதன்றேவெனின், அன்று. அறப்பயனளிக்கு மதனையே பயனேகாதுபுரிவான் என்பதுபற்றி ஈவோனைச் சிறப்பித்தவத்தினையல்லது பாததிரமறிந்தியுமதனைப் பழித்ததன்றெனவும், அறவிலேவாணிகனுகாதான் இசைவிலேவாணிகனுமாகாஞகையால் அவனது ஈகை இசைநோகிய ஈகையன்றெனவும உணாக. சான்றேர்க்குரிய கொடைமடமு மிசைநோக்கியதன்றுதலால் அதன்சிறப்பும இதனின் வேறுபடத் தனியேகூறுப. தொழதூண்சு ஈவயீ ஞழதூணினீது என்னும் பழமொழிப்பொருள் இப்பாட்டிற் கூற்றாலும் குறிப்பாலும் காட்டப்பட்டது. ஒருவரது குறைவுடையவாழ்கையைக் கூறுமிடதது "என்ன' அற்றைக் கூலிப்பிழைப்பு"என நாட்டுவழக்காய்வழங்கும் குறிப்புமொழியே இப்பாட்டிற்கு எடுத்துக்கொண்ட பழமொழி எனினும் அமையும்

41. வெள்ளம வருங்காலை யீரமபட் டஃதேபோற்
கள்ள முடையாரைக் கண்டே யறியலா
மொள்ளமர்க் கண்ணு யொளிப்பினு முள்ளம
படர்ந்தசே கூறு முகம்.

எ-து, † ... ...

... ...

... ...

... ...

... ...

... ... எ-று.

---

* புறநானூறு, செய்-- 134.

† இப்பாட்டுரை கிடைத்திலது. கிடைத்தால் எழுதிக்கொள்ளும்படி இடம் விடப்பட்டது.

(தூதிப்பு) கண்டு அறியல் என்பவற்றை உவமைக்கண்ணுங் கூட்டுக. 'வெள்ளம்வருங்காலை யீரம்பட்டது கண்டறியவேபோல்' என்றது நீர்வேட்கையுடையானெருவன், நீரறவறண்டதாய்த் தோண்டியவழி நீரூறக்கடவதாயிருப்ப தொரு நீர்க்காலாகிய ஓடையைத் தோண்டிழி யீரம்பட்டதுகண்டு, அதன்கண் உண்ணீருண்டென்ற அதுகூலத்தையறிதல்போல என்றவாறு. 'கள்ளமுடையாரைக் கண்டேயறியலாம்' என்றது தம்முள்ளக்கிடக்கையை வெளியிற்காட்டாத மனக்கள்ளமுடையோரை அவரோடு உரையாடுங்காலத்துங்கழும் அவரது முகக்குறியாகிய கருவிகொண்டே அவரது மனத்திற்கிடகரும் செற்றமாகிய பிரதிகூலதசை அறியலாம என்றவாறு. இஃ தொருவகை ஒப்பலொப்பு. 'ஒளளமார்க்கண்ணுய்' என்றது மகடூஉமுன்னிலை. 'ஒளிப்பினுமுள்ளம், படர்ந்ததேகூறு முகம்' என்றது தம் மனக்கிடகையைப் பிறரறியாவாறு அவ ரொளிக்குங்கருத் துடையராயினும் அவர மனத்திடைமிகுதலினையே முகங்கூறுமாதலால் என்ற வாறு. இது மனக்கள்ளமுடையாரைக்கண்டறிதற்கு ஒரு கருவிகூறியபடி. பட்டஃதேபோல என்றதில ஆய்தம் விரிதலவிகாரம். ஏகாரம்-இசைநிறை. இதனுல் அகக்கள்ளமுடையாரைக் குறிகளானே அறிந்து விலக்கவேண்டுமென் பது கூறப்பட்டது அகந்தீலுள்ளது முகத்தீலேதோன்றும் என்னும் பழ மொழிப்பொருள் இப்பாட்டிற காட்டப்பட்டதுபோலும. இவ்வாறு, "முகதினின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங, காயினுந தான்மூன் றுறும்", "அதுதது காட்டும் பளிங்குபோ னெஞ்சங், கதுதது காட்டு முகம்"* எனவும், "அகம் பொதிந்த தீமை முகமுரைகரு முனன, முகமபோல முன்னுரைப்ப தில்" "ஒரு வன், முகனுரைக்கு முண்ணின்ற வேட்கை"† எனவும் பிறரும கூறுவா.

42. விளிந்தாரே போலப் பிறராகி நிற்கு
முளிந்தாரைத் தஞ்ச மொழியலோ வேண்டா
வளிந்தார்க ணுயினு மாராயா ணெஞ்சத்
தெளிந்தான் விளிந்து விடும்.

எ-து, எப்பொழுதும் வெகுண்டாரேபோலப் பிறராகிநிற்கும் ஈரமற்றாரைத தேறவேண்டாவென் றெளிதாகமொழிந்து கற்பிக்க வேண்டுவதிலலை, தமக கன்புடையாரா ஈரமுடையார்மாட்டும் ஆரா யாணுகித் தெளிந்தான் தெறிம எ-று.

(தூதிப்பு) 'ஈரமற்றாரை' யென்றது அன்பும் அளியுமில்லாத வன்கண் ணரை யென்றவாறு. 'தேறவேண்டா' என்றது மொழியலுறுதற் கெடுத்துக் கொண்ட ஈரமற்றாரையென்னுஞ் செயப்படுபொருளுக் கவாய்நிலையான்வந்த

* திருக்குறள் 71-ம் அதிகாரம் (குறிப்பறிதல்) குறள்—7, 6.
† நான்மணிக்கடிகை-செய்—46, 69.

பயனிலைகொடுத்து முடித்துக்காட்டியவாறு. தஞ்சம்-எளிதென்னும் பொருளுணர்த்துவதோ ரிடைச்சொல்; இதனை, "தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே"* என்பதனு லறிக. எளிதாகமொழிதலாவது விளிந்தாரேபோலப் பிறராகிற்கு முளிந்தாரை யாரும் இயல்பானே ஈரமற்றுரென்பது தாமேயறிந்து தேறுராதலால், சொற்கள் அறிவுறுத்துமாற்ற லிலவாமாறு தேறவேண்டாவென மொழிதல். 'மொழியலோவேண்டா' வென்றது மேற்சொல்வதன் கைமுதிகநியாயசித்தமாமென்றவாறு. ஓகாரம் தெரிநிலைப்பொருள்குறித்துநின்றது. அளிதல் மென்மைக்குறிப்பானமையால் அக்குறிப்புடைய அன்பும் ஈரமும் அதன் பொருளாயின. ஈரம்-அளி. ஒருவன் அரசன்மாட்டு அன்பும் ஈரமுமுடையானேயாயினும் அவனை உபதைகளான் ஆராயாது தெளிந்து அரசன் தன்காரியத்தை மேற்கொள்ளலைப்பின், பின் பலவ அன்பும அளியும, அறம் பொருளின்ப முயிரச்சமென்னு நிமித்தங்களாற் போக்கப்பட்டுழிக ழேறுதத்துக்கெடுப்பானுகையால் அவனை உபதைகளானுங் தெளியவேண்டுமென்பர், 'அளிந்தார்க ணுயினு மாராயா ஞுந்த், தெளிந்தான் விளிந்து விடு' மென்றார். அறவுபதைமுதலியவற்றுற் றெளியுமாற்றை, "அறமபொருளினப முயிரச்ச"† மென்னுங் குறளுரையானறிக. அளிந்தாகணுயினுமென்னும உம்மை உயாவுசிறப்புணர்த்தினமையான் 'முளிந்தாரைதஞ்சமொழியலோவேண்டா' என்றது கைமுதிகநியாயசித்தமென்பது பெறப்பட்டது விளிந்துவிடுமென்றது தேற்றகுறிப்பு. ஆராயாதுசெய்வது கீராகாது என்பது இதன் பழமொழி. இப்பாட்டு, "ஆய்ந்தாய்ந்துகோள்ளாதான் கேண்மை கடைமுறை, தான்சாக துயரந் தரும்"‡ என்னுங் குறட்கருதலைத தழுவியது.

43. மறந்தானுந தாழுடைய தாமபோற்றி னலலாற்
சிறந்தா தமரென்று தேற்றற்கை வையார்
கறங்குநீர் காலலைக்குங் கானலஞ சேர்ப்ப
விறந்தது பேர்த்தறிவா ரில.

எ-து, தாழுடையபொருளைத் தாம பாதுகாத்தலல்லது நமக்குச் சிறந்தா ரிவரென்றுதேறித தேறப்படார்கையின்கண் மறந்தானும வைக்கலாகாது; கறங்குநீர் காலலைசுகுங் கானலஞசேர்பபீன! தம கைபினின்றும போயபொருளை மீட்டறிவாரிலலை யாதலால எ-று.

* தொல், சொல். இடைச்சொல்லியல். சூத்திரம்—18.
† திருக்குறள் 51-ம் அதிகாரம் (தெரிந்துதெளிதல்) குறள்—1.
‡ திருக்குறள் 80-ம் அதிகாரம் (நட்டாராய்தல்) குறள் 2.

(குறிப்பு) 'தாமுடையபொருளே' என்றது தம்வயமாகவேயிருத்தற்குரிய கைப்பொருளே என்றபடி. 'நமக்குச்சிறந்தாரிவரென்றுதேறி' என்றது நமக்குச் சிறந்தவுறவினராதலால் இவர் நம் கைப்பொருளைப் பாதுகாத்ததவுவர் எனத் துணிந்து என்றவாறு. 'தேறப்படார்கையின்கண்' என்றது உபதைகளாற் றேறப்படாதார்வயமாக என்றவாறு. 'மறந்தானும்வைக்கலாகா'தென்றது வைக்கலாகாதென்பதை மறவாதொழுகவேண்டும் என்றபடி. 'கையினின்றுமபோன பொருளே மீட்டறிவாரில்லே' என்றது எடுத்துக்கொண்டபொருளுக்கேற்ற தொரு பழமொழிப்பொருள்கூறியவாறு. அப்பொருளாவது ஒருவன்கையினின்றும் பிறனொருவன் கொண்டபொருளே அவன்கொடாது திரும்பக்கொள்ளுமாறு அறிவார் ஒருவருமில்லே என்பதாம். இது ஏது; ஆதலால் தேரூர்கைவைக்கலாகாதென முடிக்க. இதனை பழமொழி போனதுபோனதுதான் என வழங்கும் உலகவழக்கெனவுணாக. இது "விடுபொரு ளுமுடனு மிடமுமி" என வடமொழியுள்ளும் "பூண்டவிகுணனேவிட்டுப் போனதுபோன தின்றே" எனத திருவாலவாயுடையாதிருவிளையாடறபுராணததுள்ளும்* வழங்கப்பட்டது.

44. கையார வுண்டமையாற் காய்வார் பொருட்டாகப்
பொய்யாகுத தம்மைப பொருளல்ல கூறுபவேன்
மையார வுண்டகண் மாணிழா யென்பரிவ
செய்யாத வெய்தா வெனில.

எ-து, தம்மைக்காய்வார் கைப்பொருளே யவர்கொடுக்க நிறையக் கொண்டு சிலருண்டமையால் அககாய்வார்க்காக உண்மையன்றிப் பொருளல்லாதகுற்றங்களேச சொலலுவராயின், மையாரவுண்டகண் மாணிழாய்! அதற்கு என்காரணத்தாற் பரிவதாம; செய்யாதகுற்றங்கள் தமக்குக குற்றமாகாவாயின் எ-று.

(குறிப்பு) கை-கைப்பொருள். பின்வருதல்நோக்கி அப்பொருட்குரியரான காய்வார் என்னும் அடை கூட்டியுரைக்கப்பட்டது. 'அவர்கொடுக்க' என்றது அவரறியாத தாமே கவர்ந்துணினும் அது சொல்லார் என்றவாறு. 'நிறையக்கொண்டு' என்றது சிறிதுகொண்டாரும் அது சொல்லார் என்றவாறு. 'சிலருண்டமையால ... கூறுபவேல்' என்றது பலரும் இங்ஙனம் கொண்டுண்டு . கூறார் என்றவாறு. 'அக்காய்வார்க்காக' என்றது அங்ஙனங் கொடுத்ததவி யேயிய பகைவர்பொருட்டாக என்றவாறு. தம்பொருட்டில்லாமையால் அவர் குற்றங்கூறஞ் சொற்களே உறுதியுறச்சொல்லாரென்பது குறிப்பு. 'பொருளல்ல' என்றது பொருளாகக்கொள்ளத்தகாதனவென்னும் பொருளுடையதாய்

* 48-வது வரகுணனுக்குச் சிவலோகங்காட்டியதிருவிளையாடல், செய்—21.

இங்குக் குற்றங்களே யுணர்த்தினமையால், பொருளல்லாதகுற்றங்களே என்பப் பொருளுரைக்கப்பட்டது. தம்மைச்சொல்லுவாராயின் எனக் கூட்டுக. 'சொல்லுவாராயின்' என்றது ஒருவழிச் சொல்லுதல் இயல்பென்றவாறு. 'என்காரணத்தாற்பரிவதாம்' என்றது தாம் அக்குற்றத்தைச் செய்யாமையானும், அவர் அது சொல்லுதற்குகாரணம் பிறிதிண்மையானும், பரிதற்கு ஒருகாரணமும் இல்லாமையாற் பரியவேண்டா வென்றவாறு. 'செய்யாதகுற்றங்கள்' என்றது குற்றங்களேச்செய்யாமை என்றபடி. எய்தாவெனின் என்றதற்குக் குற்றங்களாக எய்தாவெனின் என்பது கருததாதலால் அக்கருத்துநோக்கித் 'தமக்குக் குற்றமாகாவாயின்' எனப் பொருளுரைக்கப்பட்டது. 'எய்தாவெனின்' என்றது எய்துமெனிற் பரியவேண்டுமென்னுஞ் செயினென்வினையெச்சத் தெதிர்மறையானமையால் எய்தாமையின் ஐயப்பாடின்றெனவும், எய்தாதென்பதே துணிவெனவும் கொள்க. செய்யாதகாரியம் செய்ததாகமுடியாதென்பதே இதன் பொருளென அறிக. இதனால தம்மிடத்தக குற்றம்வாராமற் பாதுகாக்கவேண்டுமென்பதும், அங்ஙனம் பாதுகாத்திருப்பாரைப் பிறகாரணமபற்றிப் பிறர்கூறும் பொய்களுறறம் நிலேபெறுதாதலால் அதற்கு அவர் பரியவேண்டாவென்பதும் கூறப்பட்டன. "செயீயாதகாரியம் பொய்யாது" என்பது இதன் பழமொழி. இதில், பொய்யாதென்றது செயததாகமுடியாதென்றவாறு.

45. நோவ வுரைததாரைத தாம்பொறுக்க லாகாதார்
நாவி னெருவரை வைதால வயவுரை
பூவிற் பொலிந்தகன்ற கண்ணு யதுவன்றே
தீயிலலே யூட்டுங் திறம.

எ-து, தம்மைத தின்புறுமபடி வெகுண்டுவைதாரைத தாம் பொறுக்கமாடடாதார் தமமுடையநாவினுற் றும் பிறரொருவரை வெகுண்டுவைதா லவ் வைத வயவுரை, பூவிற்பொலிந்தகன்றகண்ணுய்! தமமில்லித தாமே தீக குணவாகவூடடியதிறத்தோடொக்கும் எ-று.

(குறிப்பு) இது, தம்குற்றங்கண்டு ஒறுக்கும் மேலாயார் தம்மைச் சிறின் அது பொறுத்திருப்பதல்லது அதற்கேதுவாய்நிற்பாரைச் சிறுதல்கூடாதென்கின்றது. 'நோவுரைத்தாரை' என்றது தாம்செய்தகுற்றங்கண்டு பின்னும் அது செய்யாமைப்பொருட்டு ஒறுக்குமியல்புடையார் தம்மைத் தின்புறும்படி வெகுண்டுரைத்தவுரையை என்றவாறு. 'தாம் பொறுக்கலாகாதார்' என்றது அவர் நோவுரைக்கத்தக்காரும், நாம் அது பொறுக்கத்தக்காருமாகிய தொடர்புடையராயிருத்தும் அது செய்யாதார் என்றவாறு. அத்தொடர்பாவது வினை கொள்வோனும்-வினைசெய்வோனும், ஆசிரியனும்-மாணாக்கனும், தர்த்தியும்-

மைத்தனும், கணவனும்-மனையாளும், மாமியும்-மருகியும் முதலாயினோர் தமக் குள் அடக்கற்பாலரும் அடங்கற்பாலருமாதற்கேதுவாகிய தொடர்பு. 'பிறரொரு வரை' என்றது தாம்செய்தகுற்றத்தைக்கண்டு ஒறுப்பார்க் கறிவுறுத்தி அவர் கோவவ்வரைத்தற்கு ஏதுவாயிருந்த பிறரொருவரை என்றவாறு. 'தம்முடைய நாவினால் வைதால்' என்றது குற்றம் தம்மீதாகவும் கோவவுரைத்தார் தலைவ ராகவுமிருக்கப் பிறரைநோதற்கு நாவேழாதிருக்கவே அது தன்னை முயன் றெழுப்பி அவரை வெகுண்டுவைதால் என்றவாறு. 'தம்மில்லோத தாமே தீக்கு உணவாகவூட்டியதிறத்தோ டொக்கும்' என்றது ஒருவர் தம்மிலலோப் பழுதுபா ராதகுற்றத்தாற் கூரைமுதலி பிரிந்தவாறே அதன்வழியிறங்கித் தம்மைத தின் புறுக்கும் பனிவாடைக்காற்றுது, அப்பனிவாடைவந்து தின்புறுததற்கு வாயிலாய் நின்று, பழுதுபாராத தங்குற்றததைக காட்டிகொடுதத பிரிகூரையைச்சீறி அதனை யெரியூட்டியதோடொக்கும என்றவாறு. எனவே பிரிகூரைவீட்டிற் பனியால்வருந்துமவர் தாம் அதனைப் பழுதுபாராதகுற்றம்தீர அக்கூரையை வேய்ந்து அவ்வருத்தம் தீர்வதுபோல், தலைவராற் கடியப்பட்டுவருந்துவாரும், தாம்செய்யவேண்டிய வினைகளைக் குறைவறச்செய்து தம் குற்றத்தைப்போக்கி வருத்தந்தீரவேண்டுமென்பது கருத்தாககொள்க. கூதலுக்காற்றாதகீதாரி தடிலைக்கொளுத்தியேரித்தானும் என்பது இதன பழமொழி; இது கிராமய வழக்கு. கூதல் - குளிர்வாடை. கீதாரி - ஆடுமேய்ப்பாருள் தலைவன். குடில-ஆட்டுகடையிற் குட்டிகளை அடைத்துவைகும் ஓலைகூடு. ஒருகிடையில இரவிற் குட்டியடைத்தற்குதவாது பழுதுபட்டிருந்ததொரு கூட்டில் ஒரு கீதாரி குளிர்வாடைக்கொதுங்கஅது குளிர்தடுகுமாற்றலின்மைகண்டு, அதனைப் பழுது பார்த்துக்கொள்ளும் அறிவின்றித தீயிட்டெரித்தான் என்பது இதன் ஐதிகம. "மூட்டைக்கடிகாற்றுதான் வீட்டைத்தீயிட்டெரித்தானும்" எனவும் ஒரு பழமொழி வழங்குகிறதண்டு. இதற்கும் பொருத்துமாறு பொருளைப் பொருத்தி யுரைப்பினும் அமையும.

46. முகம்புறத்துக கண்டாற் பொறுக்கலா தாரை
யகமபுகுது மென்றிரக்கு மாசை—பிரிந்துங்கட் .தகுத
தக்க நெறியிடைப் பின்னுளு செலப்பெரு
ரொக்கலே வேண்டி யழுல.

எ-து, தம்முகத்தைப் புறதது க்கண்டாலும பொறுக்கிலாதாரை எம்மனையின்கண்ணேபுகுதுமென்று அவரை யிரந்துரைக்குமாசை, பெரியசுரத்தின்கட் பின்செல்ல, எளிதாம்வழியின்கட் டம்பின்செல்லப் பெறுத புதல்வர், அவருடைய மருங்கிலேயேறிப் போகவேண்டி யழுத லோடொக்கும் எ-று.

(குறிப்பு) இது, தம்மேல் வெறப்புடையாருடன்கூடி ஒரு குடிவாழ்க்கை செய்தல் இயலாதென்பது கூறுகின்றது. 'தம்முகத்தைப் புறத்துக்கண்டாலும் பொறுக்கிலாதாரை' என்றது தம்மிடத்து மிக்கவெறப்புடையராய்த் தம்வீட்டை விட்டு விலகிப்போயிருக்குமவரை என்றபடி. 'எம் மீனையின்கண்ணேபுகுதும் என்று' என்றது நம்வீட்டுக்குப்போலொன்றசொல்வி என்றவாறு. இதனுல் இங்கு வெறப்புடையோரென்றது அகமபுருக்கமுயல்வாரொடு ஒருவீட்டிலுறை தற்குரிய கிட்டியசுற்றத்தார் என்பதும், அவர் தமவீட்டைவிட்டுவிலகி வேறிட மிருப்பார் என்பதும பெறபபடும். 'அவரை யிரந்தரைக்குமாசை' என்றது வெறப்புடையாரை வெறுகபப்பட்டா நாம் ஒன்றுயிருப்போமென்ற பிரார்த் தித்தரைககும் ஆசைப்பாடு என்றவாறு. 'பெரியகாதலின்கட்பின்செல்ல' என் றது நெடிய காட்டிவழியில உடனசெல்லவிரும்பி என்றவாறு. 'எளிதாம் வழி யின்கட் டம்பின்செல்லப்பெறுதபுதல்வர்' என்றது பின்றொடர்ந்துநடந்துசெல் லதகுதியுள்ள எளியவழியின்கண்ணும், தாமுடன்கொண்டுசெல்லற்குரியரல் லாத பிறருடையமக்கள் என்றவாறு. 'அவருடையமருங்கிலே எதிப்போகவேண்டி அழுதலோடொக்கும்' என்றது பெருஞ்சுரஞ்செல்லும் பிதர்மருங்கிலேயேறி யுடன்போகவேண்டியமும்பிளளையின்ஆசைப்பாடுபோலப் பயனற்றதாய்முடியும் என்றவாறு இதனுல ஒருகுடிப்பிறதார் தமகருள் வெறப்புண்டாய்ப் பிரிவா ராயின், பின்பு அவர் ஒன்றுயுறைதல இயலாதாதலால் அவர்க்குரியதாயபாக முதலியபெற்றுப் பிரிந்திருப்பதே நலமாமென்பது குறிப்பாயிற்று. இதன் பழமொழி ஊருக்குடன்வாவோண்ணுதெனப்பிள்ளை யோக்கலையேறவழகிற தாம் என வழங்கப்படும்.

47. ஆயிரவ ராணு மறிவில்லார் தொக்கக்கான்
மாயிரு ஞாலதது மாண்பொருவன் போல்கலார்
பாயிரு ணீக்கு மதியம்போற் பன்மீனுங்
காய்கலா வாகு நிலா.

எ-து, அறிவில்லாதார் ஆயிரவர்கிரண்டாராயினும் மாயிருஞா லத்து அறிவான்மாட்சிமைப்பட்டவொருவன்போல விளங்கமாட்டார்; பரந்த இருணீக்கும் திங்கள்போல நிலாவை யெரிக்கமாட்டா, பல மீனும் ஒருமுகமாய்த்திரண்டாலும்; அதுபோல எ-று.

(குறிப்பு) இது, அறிவுடைமையின் சிறப்புக்கூறுகின்றது. 'அறிவில்லா தார்' என்றதில் இன்மைச்சொல் ஈஷதர்த்தவாசகமாதலால் சிறிதறிவுடையார் என்பதே பொருளாககொள்க. 'ஆயிரவர்' என்றதில் ஆயிரம் என்பது அள வின்மையின் உபலக்ஷணமாதலால் எண்ணிறந்தவர் என்பது கருத்தாகக்கொள்க.

'இரண்டாராயினும்' என்றது பொருள்களுக்கு வியக்திபாஹுள்யத்தால், குணங்களுக்குத்தோன்றுவ தியல்பாயிருக்கவும் என்றபடி. அதாவது அவற்றினளவு மூதலியகுணமிகுதல் இயலபேயாகவும் அறிவிற்சிறியார் பலர்இரண்டுழி அறிவு இரண்டு பெரிதாகா தென்பதாம். உம்மை திரளாதவழியும் தனித்தனி ஒவ்வாமையாகிய எச்சப்பொருளுணர்த்திநின்றது. 'மாயிருஞாலத்து' என்றது ஒவ்வுதல் ஒரிடத்துமில்லையென்னுந் தெளிவுணர்த்தியவாறு மாண்பு-இங்குப் புகழ் பொருள் அறிவாதலால் அறிவாலாகிய மாண்பெனக்கொள்க. மாண்பொருவன்-பண்புத்தொகை; மாண்புடையொருவன் என்றபடி. 'விளங்கமாட்டார்'என்றது விளங்குமாற்றலுடையராதார் என்றவாறு. அளவிற்சிறிய புன்மணி பலதொக்குழி அவை அளவான் ஒருநெண்மணிகொப்பாவ தியல்பாயிருக்கச் சிற்றறிவுடையார் பலர்தொகவழி அறிவான் அவர் பேரறிவுடையோனொருவனுக்கு ஒப்பாதல்கூடாதென் என்னும ஆசங்கையைத் திட்டாந்தத்தாற் பரிஹரிக்கிறார 'பாயிருணீக்கும்'என்று தொடங்கி. மதி-பூர்ணசந்திரன் இதனை "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப், பின்னீர பேதையார் நட்பு"* என்னுங் குறளுரையான் அறிக. தொக்கக்கால என்னும் பொருளுடையை உவமைகண்ணுங்கூட்டி 'ஒருமுகமாய்த்திரண்டாலும்' எனப் பொருளுரைகைப்பட்டது. அளவு ஆற்றல் மூதலியவற்றுற் பலர் ஒருங்குகூடி ஒருவற்கு இணையாகலாமாயினும் அறிவால் அங்ஙனம் கூடாமையாற் பேரறிவுடையோனொருவனுக்குச் சிற்றறிவுடையோரெல்லோரும் ஒருங்கு அடங்குவரென்பது கருத்தாகக்கொள்க. இதன் பழமொழியும்பொருளும்"வரகரிசிகொண்டுவெண்சோறு தருமெனின்-வரகுமுதலாயினவும் வேண்டுமென்பதாம்" என வடமொழியுள்ளும், "கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினுநூல், வல்லா னொருவனையே மானுவரோ-அல்லாரும், எண்ணிலா வான்மீ னிலவிடினும் வானகத்தோர்,வெண்ணிலா வாமோ விளம்பு" என நீதிவெண்பாவுள்ளும்,† வழங்கப்பட்டுள்ளன.

48. நிரைதொடி தாங்கிய நீடோண்மாற் கேனு
முரையொழியா வாகு முயர்ந்தோர்கட் குற்ற
மரையாகன் மாட்டு மலீகாட மாயா
நரையான் புறத்திட்ட சூடு.

எ-து, நிரைத்த கடகத்தைத்தாங்கிய நீண்டதோளையுடைய மால் குற்றத்தைச்செய்தானாயினுமம் அம்மாலுக்குக் குற்றஞ்செய்தானென்னுமுரை யொருநாளும் ஒழியாவாகுமாதலால், நரையான்புறத்திட்டசூடுபோல் உயர்ந்தோர்மாட்டுள்ளகுற்றம் ஒருநாளும் மாயா; மரையாகன்மாட்டும் மலீகாடனே! எ-று.

* திருக்குறள் 79-ம் அதிகாரம் (நட்பு) குறள்—2.
† செய்—98.

(குறிப்பு) 'நிரைதொரடிதாங்கிய' என்றது வெற்றிமிகுதி கூறியவாறு. 'நீள்தோள்' என்றது வலிமிகுதி கூறியவாறு. 'மால்' என்றது ஈண்டுப் பெருமைப்பொருளுடைமையானே சர்வாதிகனென்பது உணர்த்திநின்றது. குற்றம் மாயா என்னுங்குறிப்பால் 'மால்குற்றத்தைச் செய்தானுமினும்' என்னும் இசை எச்சம்விரிக்கப்பட்டது. 'மால் குற்றதத்தைச்செய்தானுமினும்' என்றது அவன் அது செய்யாமை உணர்த்தியவாறு. 'அம்மாலுக்கு' என்றது புகழ்பொருளே வலியுறுத்தவேண்டிச் சுட்டுப்பொருளே வெளிப்படையாக்கிக்கூறியவாறு. 'உரை' என்றது ஈண்டுக குற்றமென்னும பொருட்குறிப்பாற் பழியுரையையுணர்த்தினமையால், 'குற்றஞ்செய்தானென்னும் உரை' எனப் பொருள்விரிதலைக்கப்பட்டது 'ஒருநாளும்' என்றது ஒழியாமையின் நிலேபேறுகூறியவாறு. 'நரையானபுறந்திட்டசூடு' என்றது நரையெருதின உடற்புறத்திட்டசூட்டுத் தழும்பு என்றபடி. உயர்ந்தோர்-குடிப்பிறப்பு, கல்வி, அறிவு, ஒழுகம் முதலியவற்று ஜயர்ந்தோரா 'மரையா' என்றது இருபெயரொட்டாய் ஒருவகைமானுகுப் பெயராயிற்று. நரையெருதின்தூடு மறையாது எனபது இதன் பழமொழி. நரையெருது-வெண்மையுங் கருமையும் விரவியநிறமுடைய எருது. இது எருதுவகையில் உயர்ந்தது; மயிலேயென்னும்பெயரால வழங்கப்படுவது. இப் பழமொழி, "பெருவரை நாட பொரியாகட் டமை, கருவரைமேற் சூடேபோற் றோன்றும"* என நாலடியுளளும வழங்கப்பட்டது. குற்றமவாராமற் பாதுகாப் பதில உயர்ந்தோர் மிகவும கருதத்துடையராயிருகக்வேண்டுமென்பது குறிப்பு.

49. வீங்குதோட செம்பியன் சீற்றம் விறலவிசும்பிற்
றூங்கு மெயிலுந் தொலேததலா—லாங்கு
முடியுங் குறித்தான் முயலவொ ணாமை
படியிழுப்பி னில்லே யரண்.

எ-து, உயர்நததோளேயுடைய செம்பியன்சீற்றம், மிக்க விசும்பின் கண் இயங்கியொழுகும அருளுடையவரினேயுமதேவர்கட் காகவென்று தொலேவித்தலான், எப்பொழுதும ஒருக நமத்தை முடியுங்குறித்தாலெண்ணியரிதென்றதுமுயல அமையும்; கூறியமமை அடியமைய இழுத்தித தொடுக்கப்பெறினது பட்டுநவமாட்டாத கவசமில்லே எ-று.

(குறிப்பு) 'உயர்ந்ததோளேயுடைய' என்றது செம்பியனது பராக்கிரம மிகுதிதோன்றக கூறியவாறு. செம்பியன்-சோழன். இது சிபிமரபிற்பிறந் தோன் என்னும் பொருளுடைய சைப்பிய: என்னும் வடமொழிச்சிதைவாய் வழங்குவதொருபெய ரென்பாரும் உளர். 'சீற்றம்' என்றது சீற்றங்கொண்ட

* நாலடியார் 19-ம் அதிகாரம் (பெருமை) செய்— 6.

செயலென்றவாறு. அது இன்னதுசெய்தானென்றுதோன்றுத கோப்பியச் செயலென்பார் 'சீற்றம்' என்றதனையேகூறி யொழிந்தார். 'மிக்கவிசும்'பென்றது-பகைவர் தாம்மேல்நினறுகொண்டுகீழ்நின்றெதிர்ப்பாரையெறிதற்குவிறன் மிக்கவிசும்பென்றவாறு. இது எயிலின் இடவலிமிகுதி கூறியபடி. தூங்கல்-இயற்கையான வீழ்சிக்கும எழுசிக்கும வயமாகாதியலுதலாதலால் அவ்வினை நிகழ்ச்சியை 'இயங்கியொழுகல்' எனறார். இதனால் அவ்வெயிலின் செயற்கை வலிமிகுதி கூறியவாறு. 'அசுரருடையஊர்' என்றது தீயவருடையகுடியிருப் புப்போன்ற பூர்தியென்றபடி இது இசையெச்சததால் அதன் தினைவலி கூறியவாறு. 'எயிலும்' எனறு வுமை கொலைகாரிய என்னும் உயாவுகுறித் தமையா லுயாவுசிறப்பாயிற்று. இது அவ் வெயிலின் றனவலிகூறியவாறு. தொலேத்தல்-முறறறகெடுத்தல. இச்சரிதஇதிரம, "ஒனனு ருட்குர் தின்னருங கடுங்திறற், றூங்கெயி லெறிந்தன்ன ஞூங்கணேர் நினேப்பின்"எனப் புறகா ணூற் றுள்ளும்,* "வீங்குநீர் வேலி யுலகாண்டு வீண்ணவாகோன, ஒங்கரணங் காத்த வுறவோன்யா ரம்மானே,ஒங்கரணங் காத்த வுறவோ னுயர்விசும்பிற், றூங்கெயின் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானே"எனச சிலப்பதிகாரத்தும்,† "ஒன்னர், ஒங் கெயிற் கதவ முருமுசுவல சொறியுந, தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை"‡ எனச சிறபாணறறுப்படையினும, இன்னும் மணிமேகலே, கலிங்கத் துப்பரணிமுதலிய நூல்களிலுங் குறிக்கப்பட்டுள்ளது. 'ஆங்கு' என்பதற்கு அவ் வாறுகவே எனப் பொருளுரைத்துகொள்க; அதாவது பராக்கிரமசக்தியுடைய ராய்ப் பகைவரையழிககவிரும்பியவர் என்றபடி. இவ்வாறன்றித் தனிச்சொல்லே யாங்கும் எனப் பாடமோதிக் காலத்தையிடமாகப்பற்றி, எப்பொழுதும் எனப் பொருளுரைக்கப்பட்டது. 'எப்பொழுதும்' என்றது முயற்சிசெய்தற்குரிய காலங்களிலெல்லாம் என்றவாறு. 'ஒருகருமத்தை' என்றது அவாய்நிலேயான் வந்தது. முடியுங்திறத்தான் முயலலாவது இவ்வாறுசெய்யின் இது தப்பாது முடியும் என ஆராய்ந் தவ்வாறுமுயறல். 'அரிதென்னுதுமுயல' என்றது அத் தெளிவான், அது எளிதின்முடியுமென்றெண்ணிமுயல என்றவாறு. 'அமையும்' என்றது அக்கருமங் குறையின் றிமுடியுமென் றவாறு. 'கூரம் படியிழுப்பினில்லே யரண்' என்றது முடியுந்திறத்தான் முயலுமாற்றை ஒரு பழமொழிப்பொருள் காட்டிவிளக்கியவாறு. இழுத்துவிட்டாற் கீழுந்துருவப்பாயும் என்பது இதன் பழமொழி. இது வீரவாதம்பேசிவீளாயிடுஞ் சிறுர்குழுவழக்காயுள்ளது. இதன் பொருள்:—இழுத்தி-ஒருகூரிய அம்பினடியை விரற்சரட்டில்வைத்து ஆகண்ண மாக இழுத்தி. விட்டால்-விசையுட்டிவிட்டால். கழுத்தருவப்பாயும்-எதிர் நிற்கும் பகைவரது கழுத்திலணிந்த கவசத்தையும் கழுத்தையும் பொற் றப்புறவ்

* புறகாணூறு செய்— 39 அடி-5, 6.

† சிலப்பதிகாரம் 29-வது வாழ்த்துக்காதை, அம்மானேவரி, செய் 1.

‡ பத்துப்பாட்டு, பெரும்பாணாற்றுப்படை அடி 79— 81.

கழன்றோடுமாறு பாயும் என்பதாம். "மன்னவர்நெஞ்சினில்வேடர்விடுஞ்சரம் வாயாவோ"* என்பதும் இப்பழமொழிபற்றியகூற்றெனவுணர்க. இதனால், கோப்பியமான வுபாயங்களைக்கொண்டு ஒடுங்கியிருந்து காலம்வாய்த்துழித் தப் பாது முயல எக்கருமமும் தவறுதுமுடியும் என்பது கூறப்பட்டது.

50. கற்றதொன் றின்றி விடினுங் குடிப்பிறந்தார்
மற்றொன் றறிவாரின் மாண மிகநல்லர்
பொற்ப வுரைப்பான் புகவேண்டா கொற்சேரித
தன்னூசி விற்பவரில்.

எ-து, நற்குடிப்பிறந்தா கற்றதொன்றிலீலையாயினுமு, குடிப்பிற வாதகற்றாரின் மாட்சிமைபபட மிகநல்லர்; மாட்சிமைப்பட உரை சொலலவேண்டுவதிலலை; கொற்சேரிக்கண்ணே தன்னூசியைவிற்பார் ஒருவருமிலலை அதுபோல எ-று.

(குறிப்பு) 'நற்குடிப்பிறந்தார்' என்றது கல்வி, அறிவு, ஒழுகங்களுள்ள ஒருகுடியிற்பிறந்தாரொருவர் என்றவாறு. 'கற்றதொன்றில்லையாயினும்' என்றது அந்நற்குடிகளுரியகுணங்களில மற்றவையெல்லாமிருகத் தாம கல்லாதிருக்கும குறையொன்றுமே யுளதாயின் என்றவாறு. ஈண்டு நற்குடிகளுரிய கல்வியாவது வேதாகமபுராணஙிகளும் ஸ்மிருதிநூல்களும் ஒதியுணர்தலாம். 'குடிப் பிறவாதகற்றாரின்' என்றது கல்வி, அறிவு, ஒழுக்கமில்லாத குடியிற்பிறந்து தாம் வேதாகமாதி யோதியுணர்ந்த கல்வியுடையராயிருப்பாரைக்காட்டிலும் என்றபடி. பயிற்சிமிகுதியாலுள்ளதாகிய வாசனையாற் குடிப்பிறப்புடையா ரொழுகுகம் ஒருநிதிதம வழுவாதாகையாலும், குடிப்பிறப்பில்லாத கற்றோ ரொழுக்கம் பயிற்சியினமையால் வழுவுறுமாகையாலும் அககல்வியறிவுடைமை யாகிய நன்மையினும அநுபவமுடைமையாகிய நன்மை மிகச்சிறந்ததென்ற வாறு. 'உரைப்பான் புகவேண்டா' என்றது அந்நூல்களிற்கூறிய ஒழுக்கங்களே உரைகளும்பொருட்டு நற்குடிப்பிறவாத கற்றோன், குடிப்பிறப்புடையாரிடத்துத் தர்மோபதேசபரனுஞ்ப் புகவேண்டா என்றவாறு. 'கொற்சேரித் தன்னூசி விற்பவரில்' என்றது அநுபவம்புகுதல் பயனின்முயற்சியென்பதை உணர்த்துவ தற் கோ பழமொழிகூறியவாறு. கொற்சேரி-கொல்லர்தெரு. தன்னூசி-இழைநுழையூசி. 'ஒருவருமிலலை' என்றது ஒருவரும்புகார் என்பதை வலியுறுத் தியவாறு. கொல்லர்குலமக்களல்லாதார் தொழிற்சாலையிற்சென்று கொல்லுத் தொழில்கற்றாராயினும் அதுகல்லாத கொல்லர்குலமக்களுக்கு அவர் தன்னூசி செய்துகொடுக்கவேண்டாது தாமேசெய்துகொள்ளுமாறுபோலக குடிப்

* கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், குகப்படலம், செய்—16 மூன்னவனென்று.

பிறப்பில்லாத கல்வியுடையோன் கூறவேண்டாது குடிப்பிறப்புடையோர் தாமே யுணர்ந்தொழுகுவர் என்பதாம். ஆகவே தர்மோபதேசம் செய்தற்குரியோர், குடிப்பிறப்பு, கல்வி, அறிவு, ஒழுக்கம் இவையெல்லாமுடையராயிருக்க வேண்டுமென்பது குறிப்பாற்றேன்றிய குறிப்பாயிற்று. இப்பாட்டால், குடிப்பிறப்பின் சிறப்புக் கூறப்பட்டது. இக்கருத்து, கூலோத்தரஞ்சிதரு காலெஞ்சுதருவிலோத்தரஞ் சிதரினுங்கோத்தருவிலோஷ்டிः। என வடமொழியுள்ளும் வழங்கப்படும். இதன்பழமொழி, ஒருவன் ஒரு வஞ்சகனாகித் தன்றிறமைகூற, அதுகேட்ட மற்றொருவன், உன்வல்லமை இங்குச் செல்லாது, எனச் சொல்லவேண்டுமிடத்துக் கோல்லர்தெருவில் மாசி வியாகாது எனப் பிறிதுமொழிதலாக வழங்குவதாம இப்பழமொழி, "கொண்டிழிப்பண்டம்ஸ் லையாரிகொற்சேரி, நண்டுலேதுதன் னூரிலிற்பாரினை" என ஐந்திணையைம்பதிலும,* 'வைகொண்டஞ்சிகொற்சேரியின்விற்றெம்மிலவண்ண வண்ணப,பொயகொணடுகிறகலுரரேபுலேயாததின்னிபோந்ததுவே' எனதிருச சிற்றம்பலக்கோவையினும்,† "இருப்புக் கம்மியற் றிழைதுழை யூசியொன்றியற்றி, விருப்பிற் கோடியால் வீலைகெனும பதடியின் விட்டான்" என இராமாயணத துள்ளும்‡ வழங்கப்பட்டது.

51. இயற்பகை வெல்குறுவா னேமாப்ப முனேனே
யயற்பகை தூண்டி விடுதலோ—நயத்தாற்
கறுவழங்கி கைக்கெளிதாய்ச செய்க வதுவே
சிறுகுரங்கின் கையாற் முழா.

எ-து, தனக்கு இயற்பகையாகியபகையை வெலலுதலுறரு ணெருவன், முன்னே தனக்கரணுகத தன்பகைக்கு வேறேயொருபகை வளர்த்துவிட்டு ஒருதெறியாற் கறுவினலொழுகித தன்கைக்கெளிதாகத தன்பகையையெருக்குக; அப்பெறறிசெய்தல, முதுகுரங்கு சிறுகுரங் கின்கையாலே வேவுறுகூழைத தாழாளியசெயலேபொக்கும எ-று.

(குறிப்பு) இயற்பகையாகியபகை என்றது தான்முடிக்கக்கருதியகாரி யத்துக்கு ஸ்வபாவசித்தமாயுள்ள விரோதியாகியபகை என்றவாறு. வெலகுறு வான்-வெல்லத்தொடங்கும் ஒருவன். 'தன்பகைக்கு' என்றது தன்காரியத துக்கு விரோதியாயுள்ள பகைவர்க்கு என்றவாறு. 'வேறேயொருபகை வளர்த்துவிட்டு' என்றது அப்பகைவர்க்கு விரோதியாய்த் தமக்கு இனமா

* ஐந்திணையைம்பது செய்யுள்—21.
† திருச்சிற்றம்பலக்கோவை செய்—386.
‡ இராமாயணம், இராவணன்வதைப்படலம். செய்யுள்—121.

யிருக்கும் பிறரை அவர்மேற்செல்லுமாறு தூண்டிவிட்டு அப்பகைவரது வலியின் அளவறிந்துகொண்டு என்றவாறு. 'ஒருதெரியால்' என்றது பகைவலி மிக்கிருக்குமாயின் அது குறைவுற்றுக் கைகெளிதாம்வரை காலம்பார்த்து அடங்கியிருக்கவேண்டுமென்னும் விதிவிசேடத்தைமேற்கொண்டு என்றவாறு. 'கறுவினுளொழுகி' என்றது உட்பகையாகவொழுகி என்றவாறு. 'தன்னகை கெளிதாக' என்றது தனகைககு எளிதாகுமளவில என்றவாறு. 'தன்பகையை நெருக்குக' என்றது விரோதியையடாததக் கருதியகாரியதததைக் கைக்கொள்க என்றவாறு. 'அப்பெற்றிசெயதல்' எனறது அங்ஙனம்செய்தல் என்றவாறு. 'முதகுரங்கு சிறுகுரங்கின்கையாலே வேவுறுகூழைததழாவியசெலலியொக்கும்' என்றது எடுததுக்கொண்டபொருளுககேற்றதொரு திட்டாந்தமாகக்காட்டப்பட்ட பழமொழிப்பொருளே விரிததுரைததவாறு. இப்பழமொழி கூழ்சுடுமென்றுநினைந்ததரங்குதன்குட்டியின்கையாற்றழாவிற்றும் எனவும், தரங்குகுட்டியைவிட்டாழாய்பார்த்ததுபோலும் எனவும், வழங்கப்படும. இது இயல்பு பற்றிவநதவழககு சிறுகுரங்கினகை வதுவானரையால் அதற்கேற்ற முதகுரங்கு வேவுறகூழ் என்னும் வினைமுதலும செயப்படுபொருளும் விரித்துரைக்கப்பட்டன. • வேவுறுகூழ்-சுடுசோறு. 'தழாவியசெலலியொக்கும்' என்றது தழாவி வேவுறுகூழின சூட்டின்கடுமை யறிந்து, அது குறைந்திருந்தால் உடனேகொள்வதும, மிக்கிருநதால அது தணியுமவரை தாழ்த்திருந்துகொள்வதுமாகிய செலலியொககும என்றவாறு இதனுள, கூழுணவு காரியசித்திக்கும, சுடு அககாரியசிததிக்கு விரோதியான இயற்பகைக்கும், முதகுரங்கு காரியததின் மூயல்வோனுககும, சிறுகுரங்கின்கை இயற்பகைமேற்செல்லவிடும் அயற்பகைக்கும உவமங்களாம். இதனுற் பகைவலியறியாதான் அதனை யறிந்தசெய்யுமாறு கூறப்பட்டது.

52. பாரதத துளளுநம பணியந்த தாயமா
வீரமப தின்மநம போரெதிர்ந தைவரோ
டேதிலி ராகி யிடைவிணடா ராதலாற
காதலீரா டாடார் கவறு.

எ-து, பாரதததுள்ளுநம தாமமுலடையதாயமே பணியமாககொடுதது வீரமபதின்மநம சூதுபோலரையெதிர்ந்து மற்றதையவரோடிம் பகைவராகி வேறுபட்டுநீங்கினாகளாதலால, உற்றீரோடு கவறுடார் எ-று.

(தெளிப்பு) இப்பாட்டுச் சூதாடல்கூடாதெனபது கூறுகின்றது. பாரதத துள்ளுமென்றது வேதததுல்யப்பிரமாணமாகக் கருதப்படும் இதிகாசமாகிய மஹாபாரததுள்ளும என்றவாறு. உமமை உயர்வுசிறப்புணரநின்றது. அது துதலும் பொருளுக்குப் பிரமாணவலி கூறியவாறு. தாம என்றது ஈரைம்பதின்மராகிய

தார்த்தராட்டிரர் என்றவாறு. 'தாயமேபணையமாகக்கொடித்தி' என்றது உரியோர்க்கன்றி ஒருவாற்றானும் தாம் பிறர்க்குக்கொடுக்கத்தகாத தாயபாகத்தையும் பணையமாகவைத் தென்றவாறு. இதனால் ஸ்வயார்ஜிதங்களைவைத்தல் சொல்ல வேண்டாதாயிற்று. இது சூதின்மயக்கமிருகும்படிகூறியவாறு. 'சுரைம்பதின் மரும்' என்றது ஒரைவராகிய பாண்டவரோடு அவரின் இருபதிற்றளவான்மிக்க இனவலியுடையவருமென்றவாறு. இதனால் வலிமிக்குடையோருங் கெடுவரென் பது குறிப்பாயிற்று. போர் என்றதற்கு, கவறு என்னுங்குறிப்பால் 'சூதுபோரை' எனப் பொருளுரைக்கப்பட்டது. 'மற்றையைவரோடும் பகைவராகி' என்றது இருபதிற்றோரைவராய் ஒன்றுபட்டிருக்ககடவராகியதாம ஒரைவரோடுறை வொழிந்து குறைந்ததுமேயன்றி அவருக்குப் பகைவருமாகி என்றவாறு. இடை விண்டாராதலால் என்பது ஞாபகவேதுவாதலால அதன் உரையாகிய 'வேறு பட்டுநீங்கினர்களாதலால்' என்பதற்கு, வேறுபட்டுநீங்கினர்களென்று அறியப் படுதலான்என்பது கருதுதாகக்கொள்க 'வேறுபட்டுநீங்கினர்'என்றது திருஷ்ண தௌதயத்தாலும் உடன்பட்டு ஒன்றுகாதி பொருது உயிராநீக்கினர் என்றபடி. உற்றாரோகெவருடார் எனறராயினும் விகாரத்தாற்றெருக சிறப்புமமையை விரித்து, அறிவுடையோர் என்னும எழுவாயைவருவிதது, உற்றாரோடிம கவ ருடார் அறிவுடையோர் எனப் பொருளுரைதுகக்கொளக. இதனால் கொது மலரோடும் எதிலரோம்ம் கவருடல் மிகதீங்குபயக்கும என்பது சொல்லவேண் டாதாயிற்று. சுரைம்பதின்மரும போரெதிர்ந் தேதலரோடேதிலராகி யிடைவிண் டார் என்ற குறிப்பால், தமமின்மிக்க வலியுடையாரொடு கவருடலும் மிக்க தீங்குபயகுமென்பது தானேபெறப்பட்டது. காதலோடாடார்கவறு என்பது பாடமாயின், காதல் காதலாகாகுபெயராகக்கொள்க. காதலரோடுங் கவறுடலா காது என்பது இதன்பழமொழி. இப்பழமொழிப்பொருளே இப்பாட்டில் எடுத தக்கொண்டபொருளாகவும, திட்டாந்தம இதிஹாஸப்பொருளாகவும் காட் டப்பட்டுள்ளன.

53. அலல லொருவாக் கலடநதகுகான் மறறவர்கு
கலல ஞேக ளெனப்படுவார்—கலல
வினைமரபின் மறறதனை நீகக வதுவே
மனைமர மாய மருந்து.

எ-தி, ஒருவர்க்குத தின்பமவநதகுகால் அவர்க்கு மிக்க ஞேக ளென்று சொல்லப்படுகின்றவர்கள், கலலசெய்லகமரபினுலே அத்தின் பதலைதீர்க்குக; அங்ஙீக்கியசெய்கை, மனையின்கண்நின்ற மருநதாய மரத்தோடொக்கும எ-று.

(குறிப்பு) அல்லல் என்பது ஊழ், பகை, நோய், வறுமைமுதலியவற்று ளுண்டாகும் துன்பம். மிக்கினிலைகளாவார்—உடன்பிறந்தார்முதலாயினர். 'நல்லசெய்கைமரபினுலே' என்றது அததன்பன்றிருமாறு செய்துபோந்த அடிப் பட்டசெயல்களாலே என்றவாறு. 'மீனையின்கண்ணின்றுமருந்தாயமரத்தோடொக் கும்' என்றது நோயுற்றுளெருவனுகு அந்நோயை உடனேதீர்க்கவல்ல மருந் தாகி அவன் மீனையின்கண்ணேயுள்ளதொரு பசுகிலைமரம்போலும் என்றவாறு. இதனுள், துண்பததுகு நோயும்,நல்லகிலைகளினுதவிக்கு மீனைமரத்தினுதவியும் உவமங்களாம. நல்ல வினைமரபின்மற்றதனை நீகவென்றது கிலைகளோநோக்கிய கூற்றுனமையால ஒருவர்க்கு ஆபத்தவந்தகாலத்தில் அவருடைய நெருங்கிய கிலைகளாவார ஒடன்சென்றுதவவேண்டுமென்னும பொருளும், அங்ஙனம் உதவுவார் 'மீனைமரமாயமருந்து' என்றது அலலலுற்றுரைநோக்கிய கூற்றுக லால் அங்ஙனம் உதவுமவரைக கைவிடலாகாதென்னுங்குறிப்பும் பெறப்பட்டன. மீனைமரமாயமருந்து எனறது பழமொழிக்கூற்று. இது 'புழைக்கடைப்பச் சிலை' என வழங்கத்தகுவதாம அது, இககாலதது அல்லலுற்றார அவ் அல்லல் தீருமாறு தம் நலலகிலைகள் சொலலும் சொற்கேளாதவிடதது, அககிலையாயி னரைப் பிறர் கீவிர் இவர்கு இதனைபந்தடைகவொணணுதோவென வின வியக்கால் அவர் குறிப்பாகப் 'புழைக்கடைப்பச்சிலைமருந்துக்குதவுமா' என விடையிறுப்பதணடு. இது, மாமலையிலுளள மருநதேபோலப் பிணிதீர்க்கவல் லார் அயலாராய பிறரிருகக புழைகடைப்பசுகிலையோடொதத உற்றுராகிய எம்மனோசெயல் பயன்படாதுபோலும் என்னும குறிப்புடையதாகும். இதனுல் மாமலையிலுள்ள மருந்தேபோற் சேய்மைசகண்கின்று நல்லகிலையல்லார் அல் லற்கு உதவுதலினும் நல்லகிலையாயினர் புழைக்கடைப்பச்சிலைபோல் அண் மைசகண்கின்றுதவுதல் சிறந்ததென்று கூறப்பட்டமையால், அல்லற்குதவாத நல்லகிலையை, "உடன்பிறநதாசுற்றத்தாரென்றிருக்கவேண்டா*"வென விலக் கியதோடு விரோதமின்றென வுணர்க. இதன் பழமொழிப்பொருள் "மருந் தாகித்தப்பாமரத்தற்றுல்" எனத் திருக்குறளுள்ளு மெடுத்தாளப்பட்டது.

54. தெள்ளி யுணருந் திறனுடையார் தம்பகைக்
குள்வாழ் பகையைப் பெறுத லுறுதியே
கள்ளிணுற் கள்ள றுதல் காண்டு மடநெஞ்சே
முள்ளினுன் முட்கோ டெடு மாறு.

எ-து, ஆராய்ந்துணருந்திறத்தையுடையார் தம்பகைவர்க்குள்ளே வாழும் உட்பகையைப்பெறுதல் தமக்குறுதியே; தாம் முன்புகுடித்த தொருகள்ளோ மற்றெருகள்ளைப் பின்குடித்து அறுத்தல்காணுநின்றேம்

* மூதுரை, செய்—20.
† திருக்குறள், 22-ம் அதி. ஒப்புரவறிதல். 7.

அதுவன்றே மற்றொருமூள்ளினாலே தன்காலிற்பாய்ந்தமூள்ளைக் களையுமாறு எனறு.

(குறிப்பு) தெள்ளுதல்-கோதகீக்குதலொப்புமையால் ஆராய்தலாயிற்று. 'தம்பகைவர்க்குள்ளேவாழு முட்பகையை' என்றது தம பகைவருக்கதுள அவருக்குட்பகையாயிருப்பாரை யெனறவாறு. பெறுதல என்றது அப்பகையை வெல்லுத்தினையுக் தற்கால நட்பாகப்பெற்று அவரைக்கொணடுகளைதல் என்றவாறு. உறுதி-ப்ராப்யம். இது காரியவாகுபெயராய உபாயதைதையுணாதநிற்ற. கள்ளிஞற் களளறுத்தல்காண்டும் என்றது திட்டாநதம. 'முன்புகுடிததொருகள்ளோ, மற்றொருகள்ளைப் பினகுடிக்கு அறுததல்காலுங்னைதுமம் வனறது ஒருவகைக கள்ளுண்டுகளிததாலொருவன் அகளவினை மாறுபட்டவீரியமுடையபிறிதொருகள்ளையுண்ண முனனிருநத களிப்பொழிதல் அநுபவசிதமென்றபடி அதாவது : பிறிதோருபாயததாற் போகஉலாகாத கட்களியை அகளளின் மாறுபட்ட கட்களியாற்போகுதல கூடுமெனபதாம இதனை "சானசெய் நோய்கருதி தான்மருந சாகிய, தேனிமிர் நறவின தேறல போல* என்பதனாலு மறிக. அது என்றது அநுபவ பகைகளைதலென்றவாறு முள்ளினுள்முட்களையு மாறு எனறது பழமொழி. இது, "கடுமிகுகெடுநவகடுகப" எனவடமொழியுள்ளும், "மோதிமுள்ளொடுமுட்பகைகணடிடல்" எனச சிவகசிநதாமணியுளளும்† வழங்கப்பட்டது. இப்பாட்டால, பகைவரைவெல்லுக் தெளிவுந திறனுமுடையார் அப்பகைவாகுட்பகையா யுள்ளாரை யுறவுகொணடுவெலலல எளிதென்பது கூறப்பட்டது.

55. ஆற்றவுங் கறரு றறிவுடையா ரரஃதிலடையார்
நாற்றிசையுஞ செலலாத நாடிலலீ யநநாடி
வேற்றுநா டாகா தமவேயா மாயினு
லாற்றுணை வேண்டுவ தில

எ - து, அறிவுடையாராவார் பிறர்வங் ராரூர்; அர்ரலலியாலாய அறிவினையுடையார்க்கு நானகுதிசையின்னு ணுஞு சிதற்செலலாத நாடில்லீ; சென்றநாடிகள் வேற்றுநாடாகா, தம பகைடையநாடெளேயாம; ஆயினுல் அவ்வழிக்கு உணக்கொணடுபோகவேண்டியதில்லீ அவர் கட்கு எ-று.

* இலக்கணவிளக்கம், அகத்திணையியல் 128-ம் சூத்திரவுரை யுதாரணம்.

† சீவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம், செய்— 8?.

(குறிப்பு) இது கற்றவர்க்கு எல்லாக்காரியமும் சுலபசாத்தியமாகுமென்று கல்வியின் நன்மை கூறுகின்றது. 'ஆற்றவுங்கற்றுரறிவுடையார்' என்றது கல்வியானது அறிவுடையராற் கைக்கொள்ளத்தக்கது எனக் கல்வியின்சிறப்புத் தோனறக் கற்றோரைக்கொண்டாடுங்கூற்றுயிருத்தலால் அதற்கு, "தவஞ்செய் வார்தங்கருமஞ்செய்வார்"* என்புழிப்போல, 'அறிவுடையாராவார் மிகவுங்கற் றூர்' எனக் கிடக்கைமுறைமாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. இதற்குப் "பூ வெனப்படுவது பொறிவாழ்பூவே" என்புழிப்போலச் சிறந்த அறிவுடையோ ராவார் மிகவுங்கற்றூர் என்பது கருத்தாகக்கொள்க. 'அஃ' தென்றது கற்ற தென்றதன் முதனிலைப்பொருளாகிய கல்வியைச்சுட்டினமையால் அஃதுடை யார் என்றதற்குச் செய்யுளவிகாரதற்பிறகை நான்காவதுருபுவிரிதது உபசார வழக்காகஇ 'அகலல்வியாலாயவறிவினையுடையார்க்கு' எனப் பொருளுரைக்கப் பட்டது. 'நாற்றிசையுஞ்செலலாதநாடில்லை' எனறதற்கு, செல்லுதற்கேற்ற அவாய்நிலையான்வந்த சொல் எனனு மெழுவாயகூட்டி, 'நான்குதிசையின்கண் ணும் சொற்செல்லாதநாடில்லை' யெனப் பொருளுரைக்கப்பட்டது 'சென்ற நாடுகள்' எனறது, அங்ஙனம அவா சொற்சென்றநாடுகள் என்றவாறு. நாட்டில் அவர்சொற்செல்லலாவது-நாட்டார அவாசொலவழிகிற்றல. 'வேற்றுநாடாகா' என்றது தமகது ஒருநிமையுமில்லாத பிறநாடாயிருப்பினும் தம சொற்செல்லுத லால் அவை வேற்றுநாடெனறு கருதப்படாவென்றவாறு. 'தமவேயா'மென் றது வேற்றுநாடாகாத பாரிசேடிகத்தாலும், தம் சொல்லவழிநிற்றல்பற்றியும தமக்கேயுரியவாம் என்றவாறு. இசனுல நாட்டுக்கு உடையோரினும தமக்குரிமை மிக்கிருகுமென்பது குறிப்பாயிறறு. 'ஆயினுல' எனறது ஆகவே என்பதன் றிரிபாய் ஆதலால் என்னும பொருளுணர்த்திநின்றது. 'ஆற்றுணைவேண்டுவ தில்' என்றது பழமொழிக்கூற்று. இது, எதேனு மொரு கருதியபொருளைச் சுட்டி அது எளிதிற்கிடைக்குமெனவுரைக்கவேண்டுமிடத்து, 'அதற்குக் கட்டிக் சோறுகட்டிப்போகவேண்டாம்' என்னும் அடிப்பட்டநாட்டுவழக்கின் றொடர் மொழிப்பொருளையுடையது. 'வழிக்குணு' வென்றது, ஆற்றுணைவென்றதன் கண்ணழிப்பில் அலுக்காயததொடர்ந்தவொருசொல்லாய்க் கருதியபொருள்மேட் டும்படியொழுகும்பெருமுயற்சிகருத் தாணையாய்ககைக்கொள்ளப்படும் சாத னதையுணர்த்தும் குறிப்புமொழியாயிற்று. இப்பழமொழி, "கூற்றங்கொண் டோடத் தமியே கொடுநெறிக்கட் செல்லும்போழ்தி, னும்றுணைக் கொள்ளீ ரழ கலா லறிவொன்று மிலிரேபோலும்" எனச் சீவகசிந்தாமணியுள்ளும்,† பொதி சோறு என்னும் பரியாயப்பெயரான் அதன் உரையுள்ளும், தோட்கோப்பு என்னும் பரியாயப்பெயரால் "ஆட்பார்த் தழலு மருளில்கூற் றண்மையாற்,

* திருக்குறள், 27-ம் அதிகாரம் (தவம்) குறள்-6.

† சீவகசிந்தாமணி 6-வது கேமசரியாரிலம்பகம் செய். 139.

றேட்கோப்புக் காலத்தாற் கொண்டுய்ம்மின்" என நாலடியுள்ளும்* வழங்கப் பட்டது. 'கொண்டுபோகவேண்டியதில்லை' யென்றது, கொண்டொழுக வேண்டியதில்லையென்றவாறு கற்றோர்க்குத் தாம்கருதியவெல்லாம் யாங்கும் சுலபசாத்தியமாய்முடியுமென்பது கருத்து. இதனை, "வித்வான்ஸர்வத்ரபூஜ்ய தே"எனவும்,"யாதானு காடாமா ஸ்ராமா"†லெனவும்"கற்றோற்குச்,சென்றவிட மெல்லாஞ் சிறப்பு"‡எனவும் பிறருங் கூறுதலானறிக.

56. எமக்குத தமணியாவார் வேண்டுமென் றெண்ணித்
தமக்குத தமணியாவார்த தாந்தேர்தல் வேண்டா
பிறர்க்குப் பிறர்செய்வ தண்டோமற் றில்லீத்
தமக்கு மருதவர் தாம.

எ-து, எமக்கு ஓரிடர்வந்தாற் றுணையாவார் வேண்டுமென்றுகரு திதமக்குததுணையாவாரைத் தாமே தேடவேண்டா ; பிறர்க்குப் பிறரைசெய்வதொன்றுண்டோ? ஆதலான் மற்றுத துணையாவாரைக் கண்டிலமெ; தமக்கு மருந்தாவார் தாமேயாதலான் எ-று.

(குறிப்பு) இது, தண்ணயங்கருதியிருப்பார்நட்புக்கொள்ளற்கவென்கின்றது. 'தமக்குத்துணையாவாரை' என்றது தம்நட்பினர்க்குத்துணையாகாது ஸ்வயகார்ய நிரதராயிருப்பாரை யென்றவாறு. இவரைத் தன்காரியக்குட்டி எனவும், ஸ்வய காரியப்புலி எனவும் வழங்குவர் நாட்டார். 'தாம்தேடலவேண்டா'என்றது எமக் குத்துணைவேண்டுமென்பார் தாம்முயன்றுதேடவேண்டா என்பதாம். அதாவது, அவர் ஸ்வயகார்யசித்தியின்பொருட்டுப் பிறரைத் தாமே தேடியடைந்து அவர்க் குத் துணையாவார்போன்று வஞ்சித்தொழுகுவராதலா லவரைத் தேடியுங்கொள் ளல்வேண்டா வென்றவாறு. 'பிறர்க்குப்பிறர்செய்வதொன்றுண்டோ' வென் றது எமக்குத்துணையாவார்வேண்டுமென்பாரும், தமக்குத்துணையாவாருமாகிய விருவருங்கூடித் தம்மு ளொருவர்நன்மையைநாடாது தத்தம்நன்மையையே நாடுவராதலால் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தாமாகாது பிறராவர்; ஆகவே பிறர்க்குப் பிறர்செய்யுமுதவி யொன்றுமில்லை என்றவாறு. இது ஒருவருக்கொரு வர் செய்கிறதென்ன? என் றடிப்படவழங்கிவரு மூலகவழக்கினை, எடுத்துக் கொண்டபொருட்கிணிவிற் கேதுவாகக்காட்டியவாறு. இதனால் "இனையரிவ ரெமக் கின்னம்யா மென்ற, பினையினும் புல்லென்னு நட்பு"§ என்றபடி யொரு

* நாலடியார், 2-ம் அதிகாரம் (இளமைநிலையாமை) செய்-10.
† திருக்குறள், 40-ம் அதிகாரம் (கல்வி) குறள்-7.
‡ மூதுரை, செய்—26.
§ திருக்குறள், 79-ம் அதிகாரம் (நட்பு) குறள்-10.

வரையொருவர் தாமாகவேபாவிக்குமிருவரு மொருவருக்கொருவர்செய்யு முதவியி லதிவியாத்தியின்றெனவுணர்க. 'ஆதலான் மற்றுத் தீணையாவாரைக் கண்டிலே' மென்றது பிறர்க்குப்பிறர்செய்வதண்டோவென்ற ஆராய்ச்சியிற் ரோன்றிய தணிவுரைகூறியவாறு. 'தமக்குமருத்துவர்தாம்' என்றது பழமொழிக் கூற்று. இது தற்காப்பிற் பராக்காயிருப்பானெருவனிடருற்றழி அவனோக்கி யிடிப்பாருரைக்குமிடத்தத் தனக்குவமித்தியன் றலைவேண்டும் என்னும் உலக வழக்காயுள்ளது. இதன்பொருள ஒருவர்கு ஒருபிணிநோயுற்றுழி அப்பிணி நோயுற்றலைய தானே அந்நோய்தீர்கருமருந்தின்கூற்றுள் முதலாய்கின்று தன் அறிவாற்றலொழுகங்களால அந்நோய்தீர்த்தற்கு காரணமாவதுபோல இடருற்றலும் தன் அறிவாற்றலொழுக்கங்களால் அவ்விடர்தீர்க்கு முபாயங்க ளுள் முதலாய்நின்று தீர்தலுக்கொள்ளவேண்டுமென்பதாம். நோயுற்றலே அந்நோய்தீர்கு மருந்தின்கூற்றுள முதலாயுள்ளானென்பதை "உற்றவன் தீர்ப் பான் மருந்துழைச செல்வானென், றப்பாலுற் கூற்றே மருந்து"* என்னுங் குறளுரையாலு மறிக. இக்குறளில், நோயுறலுனையும அது தீர்ப்பானையும் மருந் தென்றுகூறியபடியே 'தமக்குமருத்துவர்' என்றதற்குத் 'தமக்குமருந்தாவார்' எனப் பொருளுரைக்கப்பட்டது.

57. கைவிட்ட வொண்பொருள் கைவர லில்லென்பார்
மெய்பட்ட வாறே புணர்ந்தாரான்—மெய்யா
மடமபட்ட மாலெனகின் மாமயி லன்னுய்
கடம்பெற்றான் பெற்றான் குடம.

எ-து, தனிசென்று ஒருவன் பிறர்க்குக் கைவிட்ட வொண்பொருள், பின்னைத தன்னகபின்கண்வருவதில்லையென்றுசொல்லுவார் மெய்ம் மைப்பட்டகெறியாலே அறிந்தார்கள்; மெய்மமையாகவே, மடமையை யுடைத்தாகிய மாலெனக்கினையுடைய மாமயிலபோல்வாய்! பிறர்க்குத் தனிசிட்டான் அத்தனிசுபெற்றபடியாவது சூளுறுதற்குப் பாமபுக கூடதலைபபெறுதல எ-று. "பாழ்ந்தனிசுவேண்டிப் பாம்புக்குடம் பெற்றான்" என்னும பழமொழி இது.

(குறிப்பு) இது சான்று சாசனம் அடகுமுதலியபற்றென்றுமின்றிப் பொன்மயமானபொருள்களைப் பிறர்க்குக கடனகொகலாகாதென்பது கூறு கின்றது. 'கைவிட்டவொண்பொருள்' என்றதற்கு, 'கடம்பெற்றான்' என்னுங் குறிப்பால், 'தனிசென் றொருவன் பிறாகருகலகவிட்டவொண்பொருள்' எனப்

* திருக்குறள், 95-ம் அதிகாரம் (மருந்து) குறள்-10.

பொருளுரைக்கப்பட்டது. தனிசு-கடன். 'பிறர்க்கு' என்றது தன்னெடியை பில்லாத அயலாருக்கு என்றபடி. 'கைவிட்ட'வென்றது பின்றொடர்தற்காதர வான ஈடு சாசனமுதலியவொன்றுமின்றிக்கொடுத்த வென்றபடி. இதனால் வர்த்தகமுறைப்படிகொடுக்குந் தனிசு விலக்கப்பட்டது. 'ஒண்பொருள்' என்றது கொள்வோன் விழைவுற்றுவெஃகுமாறு அவன்நிலைமையின்மிக்க சிறந்தபொருள் என்றபடி. 'பின்னைத் தன்கையின்கண்' என்றது மறிததும கொடுத்தான்வயமாக வென்றவாறு. 'வருவதில்லை யென்றசொல்லுவார்' என்றது வராதென்பார் என்றபடி. 'மெய்ம்மைப்பட்டநெறி' உண்மைப்பாடுடையநெறி, அதாவது பிரமாணங்களாம்;அவற்றுணர்ந்தாராவார்-பிராமாணிகர்கள்எனக்கொள்க.'மெய்ம் மையாகவே' எனறது உதாரணங்காட்டும் பழமொழிகதை, கட்டுக்கதையன்று உண்மையாகவேநடந்ததகதை என்ப துணாதறியவாறு. 'கடமபெற்றுன்பெற் றுன்குடம' என்றது பழமொழிகூற்று இகழுற்றில் இகழ்ச்சிக்குறிப்பாற் குடமபெற்றதே கடனபெறறதாயமுடிநததென்பா கடமபெறுவானென்னுது கடம்பெற்றுன்என இறநதகாலததாற்கூறினா எங்ஙனமபெற்றுன்என்பார்க்குக குடம்பெறறுஞ்சியெனப பெற்றபடிகூறுவார். கடமபெறறுன் எனறமையால், அதற்கு 'தனிசுபெற்றபடியாவது சூளுறுதற்குப பாம்புக்குடத்தைப்பெறுதல்' எனப் பொருளுரைக்கப்பட்டது குடம என்றதற்குப் பாமபுக்குடம என அடை யும், சூளுறுதற்கு என நியமித்தமும இப்பாட்டிற்கெடுத்தக்கொண்ட பழமொழி யின்கூற்றுளுங குறிப்பாலுங் கூட்டியுரைக்கப்பட்டது. 'பாழ்ந்தனிசுவேண்டிப் பாம்புக்குடம்பெற்றன் எனனும பழமொழியிது'வென்றது ஒரைஜிகமடியாகப் பிறந்ததாய், இப்பாட்டிற்கெடுத்தகொண்ட பழமொழியி னுகாரமிருக்குமபடி காட்டியவாறு. பாழ்ந்தனிசென்றதனுஈடு சான்று சாசனமுதலியவொன்றுமின்றிக கொடுத்ததனி சென்றபடி இதனுலும் சான்று அடகு சாசன முதலியவுளள தனிசு விலகப்படுதல்காண்க. இதன் ஐஜிகமாவது —சிறிதுபொருளபடைததா னொருவன, தனனிடமிருகும்பொருளைத திருடர்கவராஜிருகவேண்டிப் பிற ரறியாதுவைத்துத் தனனெபயின்றுனொருவனுக்கு மந்தணதஜிற் தனிசு கொடுக்க அத்தனிசுபெற்றுன் அதனையிறுத்தற்குரியகாலதஜிறுத்இலனுகத் தனி சிட்டோன் பன்னுட்டொடர்ந்து தனிததுகேட்டும் சாகருப்போகுச்சொல்லிக கடத்திக்கொண்டுவருதுகண்டு இனி இவன் நேரேதாராவனென்றுதணிந்து நியாயசபையில் மு றை யி ட, அதுகேட்ட நியாயசபையார் எதிரியையழைத தலைதது நின்னெதிருரையென்னென்ன; யான்தனிசுபெற்றிலேன் என்ன; அதுகேட் டவர் வாதியைநோக்கி நீ யிவற்குத் தனிசிட்டதற்குச்சானறுண்டோ வென்ன; சான்றில்லையென்ன; சூளுரைகூறி யுன்வழக்கை மெய்ப்பிக்க நாளை வாவென்றுபோகக் மறுநாள் அவன்வரதுழி அவ்வாதிகையிற் பாம்பின்குடங் கொடுப்பித்து அதனுட்கையிட்டுச்சூளுரைகூறென்ன, அவனதிற்கையிடற்கஞ்சி நேற்றிரவேதனிசுபெற்றுகொண்டேனென்றுகூறி வழக்கைநிறுத்திக்கொண்டு

பொருளையிழந்தான் என்பதாம்.* இவ்வாறு பண்டைக்காலத்துப் பாம்பின்குடத்தைக்கையிட்டுச்சூளுரைசொல்லும்வழக்குண்டென்பதை "ஆரங்கெடப்பரனன்பர் கொள்ளாரென்றவர்களுக்கா, வாரங்கொடுதடம்பாம்பிற்கையிட்டவன்மாற்றரை, வீரங்கெடத்தசெங்கோற்கொல்லிகாவலன்வில்லவர்கோன், சேரன் குலசேகரன்முடிவேந்தர்சிகாமணியே" † என்பதனாலறிக. (சான்றுவார் நீங்கெய்தினுமெய்துகவென்னுந்துணிவொடுநின்று கரிகூறவேண்டுமென்னும்மம்மூற்காலத்துப் பிறநாட்டினுமிருந்ததென்பது என்ஸைக்ளோபீடியா (பிரிட்டானிகா) பதினேழாவதுவால்யூம் (9-வது பதிப்பு) 698, 699-வது பக்கங்களிற் கூறப்பட்டிருத்தலாலும் அறியத்தக்கது.)

58. நிரந்தவழிவந்தநீசரு ளெலலாம
பரந்தொருவர் நாடுங்காற் பண்புடையார் தோன்றூர்
மரம்பயிலசோலை மலைநாட வென்றுங்
குரங்கினு ணன்முகத்த வில.

ஏ-து, இடையறாது குடியாகப்பிறந்துவந்த கீழ்மக்களுளெல்லாம் பரந்தாராயுங்காற பண்புடையாரொருவர் தோன்றூர்; மரம்பயில் சோலைமலைநாடனே ! என்றும குரங்கினதில நன்முகததவாயுள்ள குரங்குகளிலலை, அதுபோல ஏ-று.

* இதன் பழமொழியினதிகம் பிறிதோராற்றானும் கூறப்படவுதண்டு. அதாவது —உழுதொழிலவாழ்க்கையுடையானொருவன், தன்வீட்டாரறியாது தன் மூட்டதகிலுளள காய்கறிகளைவிற்றீட்டிய சிறுதேட்டைப் பிறரறியாது ஒருவனிடம் கடன்கொடுத்துவைததற்பின்பொருகாலத்துத் தனிதகுக்கேட்ட பொழுது, கடனபெற்றான் அதனை வஞ்சித்துக்கொள்ளக்கருதி காளையிரவிற் றருகின்றேன் வாவென்றுசொலலிப்போக்கி, ஒருகுடத்தில் இரைவைத்துப் பாம்பைப்பிடிதது, அகுடத்தினவாயைக் கிழியால் மூடிக்கட்டி, வீட்டிற் கொணர்ந்துவைதது, அன்றிரவிற் றனிசிட்டோன்வந்து கேட்க, இக்குடத்தில் இட்டுவைத்திருக்கிறேன் இதனை ஒசைப்படாது கொண்டுசென்று உன்தோட்டத்தில்வைத்து, எண்ணி எடுத்துக்கொள் என்றுசொல்லக்கேட்டு, அவன் குடத்தை யெடுத்தவளவிற் கனதிருப்பதுகண்டு, பணக்கிழியென்று மகிழ்ந்து, அதனைக்கொண்டு தன்தோட்டஞ்சென்று வேலிமறைவில்வைத்துக் குடத்தின் வாய்க்கிழியை அவிழ்ததுக் குடததுட்கையிட்டவாறே அதனுள்ளிருந்த பாம்பு சீறியெழுந்து கடிகக உடனேஇறந்தான் என்பதாம்.

† காலாயிரதிவ்யப்பிரபந்தம் பெருமாள்திருமொழிதனியன்.

(குறிப்பு) இது குற்றமேசெய்யுங்கூட்டத்தாராகிய இழிகுலத்தவருள் ஒருவரேனும் கல்லொழுக்கமுடையராயிராராதலா லவரோம்பலாகாதென்பது கூற்றின்றது. 'இடைப்பருத்திக்குடியாகப்பிறந்தவந்தவீழ்மக்கள்' என்றது குலம் சாதி கோத்திரியமமொன்றுமின்றி ஒருஞான்று முயர்குலத்தன்மையெய்தற் குரியராக்கி வழிவழியே இழிதொழில்புரிந்தவந்த கீழ்மக்கள் என்றவாறு. இவரையே சூத்திரர் என்னுஞ்செய்தரால் ஆங்கிலம்வல்லார்வழங்குவர். இவ்விழிகுல மன்றி நியமமுடைய சாதிவிசேடங்களிலுள்ள குடிப்பிறப்பின்வேறுதலால், இப் பாட்டின்கருத்து, "பெரும்கடலுட், பல்வேலை முத்தம் பிறக்கு மறிவார்யார், கல்லான் பிறக்குங் குடி"* என்பதனோடு மாறுபடாதெனவுணர்க. பரத்துவாஜர் காற் பண்புடையாரொருவர்தோன்றூர் எனக் கூட்டுக. 'பண்புடையார் ஒருவர் தோன்றூர்' என்றது கல்லொழுக்கமுடையாரொருவரும் தோன்றுரென்றவாறு. ஒருவரும் என்ற உம்மை விகாரத்தாற் றொக்கது. என்றுமென்றது, "மன்னுப் பொருளு மன்ன வியற்றே"† என்றதனு லும்மையுங் கனனு மொருங்கு கூறிய வாறு. 'குரங்கினுள் நன்முகத்தவில்' என்றது பழமொழிக்கூற்று. இது, தாங்கு முஞ்சியில் நல்லமுஞ்சியுண்டோ. என்றும், தங்கிலியக்தாங்கி லெந்தக் தாங்கானுலென்ன. என்றும் துஷ்டனிருத்தியஞ்செய்யுஞ் சிறுசைச்சுட்டி வழங் கப்படுகிறது.

59. முட்டின் றொருவ நுடைய பொழுதின்க
ணட்டிற்றுத் தின்பவ ராயிரவ ராபவே
கட்டலர்தார் மார்ப கலியூழிக் காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோ வில்.

ஏ-து, ஒருவர் குறைவின்றிச செல்வமுடையபொழுதின்கண் அவரட்டிலின்கண் ணுள்ளதனைத்தின்பவா ஆயிரவருள்ளாராவர்; கட் டலர்தார்மார்பனே! கலியூழியாகியகாலத்துக் கெட்டார்க்கு நட்டார் ஒருவருமில்லை; ஆதலான் ஏ-று.

(குறிப்பு) இது கெடுங்காலக்கைவிடுவொரொடு கேண்மைகொள்ளலாகா தென்கின்றது. முட்டு-முட்டுப்பாடு; இது, தாமுண்ணுதற்கும் உற்றார்க்குதவு தற்கும்போதாத பொருட்குறையையுணர்த்துங் குறிப்புமொழியாயிற்று. அக் குறைவின்மையே செல்வத்துக்கு நிறைவுடைமையாதலால், 'செல்வமுடைய பொழுதின்கண்' என்றது நிறைந்தசெல்வமுடையபொழுதின்கண் என்றவா றாயிற்று. 'அட்டிலின்கணுள்ளது' விரும்பியுண்ணுதற்கேற்ற விளுஞ்சூடாறுத லறுசுவைப்புண்டியும் பண்ணியவகைகளுமுதலிய வுணவின்றொகுதி. 'தின்பவர்'

* நான்மணிக்கடிகை செய்—4.

† தொல். சொல். வினையாக்கம். சூத்திரம்—34.

என்றது பின் பலர் கன்றிமதப்பவர் என்பதோக்கிய செறற்சொல்லாயிற்று. 'ஆயிரவருள்ளாராவர்' என்றது மிகப் பலராவர் என்றபடி. கலியுழியாயிரகாலம் என்றது கலிபுருஷன் என்னும் இழவூழ்த்தெய்வம் முறைசெலுத்துங்காலமாகிய இக் கடையுகமென்றவாறு. காலவியல்புந் தீவினைக்கே துணையாமாதலால் கன்றியறிதலுடையராயிருப்பாரரியரென்பது கருத்து. 'கெட்டார்க்குரட்டாரோலில்' என்றது பழமொழிக்கூற்று. கெட்டார்க்கென்றது குறைவின்றிச் செல்வமுடையராயிருந்தகெட்டார்க்கு என்றபடி. 'ரட்டாரோலில்' என்றதற்கு 'அட்டிற்றத்தின்பவ ராயிரவராபவே' என்றகுறிப்பால 'ஒருவருமில்லை'யெனப் பொருளுரைக்கப்பட்டது. ஓகாரம் தெரிநிலையானமையால் 'ஒருவருமில்லையாதலால்' என ஏதுவாக்கிப் பொருளுரைக்கப்பட்டது. 'ஆதலால்' என்றது கெடுங்காலக்கைவிடுவோர்கட்புக் கொள்ளற்கவென்னுங் குறிப்புப்பொருள்கொள்ளக் கூறியவாறு. 'கெடுங்காலக்கைவிடுவார்கேண்மை'என்னுங் குறளும்* 'காலமே போழ்தி'†லென்னும் காலடிசெய்யுளு மிகருதத்தடையன. இதன்பழமொழி 'கெட்டவருக்குநட்டவருண்டோ' என்பதாம். இது மிகுதிபற்றியவழக்கான்வந்த பழமொழி. இப்பழமொழிப்பொருள், 'நல்கூர்ந்தார்க்கில்லைசுற்றம்' எனச் சீவகசிந்தாமணியுள்ளும்‡ வழங்கப்பட்டது.

60. ஆற்று மிளமைக்கட் கற்கலான் மூப்பினகட்
போற்று மெனவும் புணருமோ—வாற்றச்
சுரம்போக்கி யுல்குகொண்டா ரில்லையே யில்லை
மரம்போக்கிக் கூலிகொண் டார்.

எ-து, கற்கலாமிளமைக்கட கற்கலாதான், மூப்புவந்தகாலத்துக் கலவியைக்கற்றுப் போற்றுமென்று சொல்லப்படுவதும் ஒருவாக்குக் கூடுமோ? மிகவுஞ்சுமந்து வழியைக்கடக்கப்போகவிட்டு ஒருவனைச் சுங்கங்கொண்டாரில்லை; ஓடத்தினின்றும்போகக் கரையேற்றிநின்று கூலிகொண்டாருமில்லை எ-று.

(குறிப்பு) இது கல்வியை அன்றறிவாமென்றிரா இளமைப்பிராயத்தே கற்கவேண்டுமென்கின்றது 'கற்கலாமிளமைகண்' என்றது பலவாற்றானும் கற்றற்குயோக்கியமுள்ள இளமைப்பருவத் தென்றவாறு. அவையாவன, மனம் மாசுபடாமையும், உணர்ச்சிவேட்கையும், மனக்கவலையின்மையும், விடயாந்தரங்களில மனஞ்செலலாமையும, இயல்பாகவே குரலுரசாலைக கடந்தியொழுகுமியல்புடைமையும, ஆற்றலருன்றுதி வளர்வடைந்தவருதலும் முதலாயின.

* திருக்குறள் 80-ஆம் அதிகாரம் (கட்பாராய்தல்) குறள்—9.
† காலடியார் 12-ம் அதிகாரம் (மெய்ம்மை) செய்—8.
‡ சீவகசிந்தாமணி 12 இலக்கணையாரிலம்பகம் செய்யுள்—158.

'மூப்புவந்தகாலத்' தென்றது பலவாற்றானுங் கற்றற்குயோக்கியமாகாத வயது நிரம்பியபிறகென்றவாறு. இதனை 'மூப்பதாமாண்டனவில்' என்னுமிடத்தும். 'கல்வியைக்கற்று' என்றது போற்றுமென்றதற்கேற்பச் சுட்டாற்போந்த செயப்படுபொருளை விரித்துரைத்தவாறு. 'போற்றுமென்றசொல்லப்படுவது மொருவர்க்குக்கூடுமோ' வென்றது போற்றுவானென்று ஒருவர் சொல்லுவதஞ் செய்யார் எனப் போற்றுமையை வலியுறுத்தியவாறு. 'மிகவு' மென்றது சுமப்பார் வர்த்தகத்தின்பொருட்டன்றித் தமககு துகரும்பொருட்டுச் சங்கமின்றிக்கொண்டுசெல்லற்குரிய அளவின்மேற்பட வென்றவாறு. 'வழியைக்கடக்கப்போகவிட்டு' என்றது சுங்கம்வாங்கும்வழியாயிலக கடந்துசென்று போகவிட்டு என்றவாறு. இப்பாட்டிற் பினனடியிரண்டும் இருதொடரினைந்த தொருபழமொழிக்கூற்று. இப்பழமொழியினசொரூபம வழக்குஞ செய்யுளுஞ் சோ்ந்து வந்துழிக்காண்க. இதன்பொருள் உபலக்ஷணவகையால் ஒன்றினை யொருவன் பெறுதறகுரியகாலதறபெறுதலிடுதறாற் பின் பதினைப் பெறுதலரிது என்பதாம். இப்பொதுப்பொருளால், இளமையிற்பெறுதற்குரிய கலவியைப் பெறுதலிடுதறான் பின் பதினைப் பெறுதலரிது என்னுஞ் சிறப்புப்பொருள் தணியப்பட்டது. இப்பாட்டால், கல்விகற்றற்கு இளமைப்பருவமே சிறந்தென் றமையாலும், மூதுமைப்பருவத்திற் கற்கலாகாதென்றவிலக்காமையாலும், கல்வி கரையிலவாதலால் இளமையிறகற்று னவ்வளவிலெழியாது மேலுங்கற்றல் மூதலமை னியலுமாதலாலும்இது'என்னெருவனசாந்தினையுங்கல்லாதவாறு'† என்னுங் குறட்கருத்தொடு மாறுபடாதென்க. இதில் 'மாம்போக்கிக்கூலிகொண்டார்' என்னும் பழமொழியிலுள்ள ஒடத்தை உபலக்ஷணவகையாற் பண்டியாக வைத்து,"உழந்தாலும் புத்தச்சொன் றிட்டீர்த றேற்று,திழந்தார் பலரா விடும்பை கீர் யாற்று, எழுந்துமாலப்பண்டி யச்சிரு முன்னே, கொளுஞ்சீலங் கூலியாக் கொண்டீர்மின்பாரீர்" எனச் சீவகசிந்தாமணியுள்ளும்‡ எழுங்கப்பட்டது. 1*

61. உணற்கினிய விங்கீர் பிறிதுழியில் லென்னுங்
கிணற்றகத்துத் தேரைபோ லாகார்—கணக்கினை
முற்றப் பகலு முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று.

எ-து, உண்ணுதற்கினிய இங்கீர் பிறிதோரிடத்தில்லையெனக் கருதிக் கிணற்றகத்தேவாழுந் தவளைபோல ஒழுகலாகாது; நூலொன்றினையே முடியும்படி நாடொறும்வெறுதே யினிதாகவோதிக் கற்றலிற் பலநூல்களையுங்கேட்டலே நன்று; ஆதலான் எ-று.

---

* கல்வழி, செய்-89.

† திருக்குறள் 40-ம் அதிகாரம் (கல்வி) குறள்—7.

‡ சீவகசிந்தாமணி, 18-வது முத்தியிலம்பகம், செய்-28.

(குறிப்பு) இது ஒருநூற்கல்வியினும் பலநூற்கேள்வி தெற்றென்கின்றது. 'இங்கீர்' என்றது இங்குள்ளநீர்போலும்நீர் என்றவாறு. இல்லெனல் தவினையின்வினையாகாத குறிப்புச்சொல்லாதலால் 'இல்லையெனக்கருதி'வாழுமெனத் தாற்பரியப்பொருளுரைக்கப்பட்டது. 'நிணற்றகத்தேவாழுந்தவளைபோலொழுகலாகா' என்றது தான் தெரிந்ததொருநூலினையே பயின்று பிறிதொருநூலும் அத்துணை நன்றன்றெனறு பயிலாதுவிட்டிருக்கலாகாதெனறவாறு. தனிச்சீர் உரையொடுபொருந்தக் 'கணக்கொன்றே' என்றிருக்கவேண்டும். 'முற்றப்பகலும் முனியாதினிதோதி' என்றது கற்றவின சிறந்தமுறையிருந்தபடி கூறியவாறு. 'நூலொன்றினையே' என்றது கற்குங்காலத்தப் பலநூலுமொருங்கு பயிலாது கற்கத்தகு மொருநூலையே பாடங்கேட்பது நன்றென்றுணர்த்தியவாறு. 'மூடியும் படி' என்றது இடையில்விட்டொழியாது விரைவில்முடியும்படி வேண்டுமென்பது பயின்று என்றவாறு. 'நாடொறு' மென்றது உரியகாலங்களை வீணுக்காது என்றவாறு 'வெறுதே' என்றது விருப்புகடையனுய்க்கொணடென்றவாறு. 'இனிதோதி' என்றது மனஞ் சோர்வடையவிடாது அநாயாசமாகப் பாடம் வரப்பண்ணி யென்றவாறு. இவை கற்கும முறைகளாம். கணக்கொன்றே கற்றலின் எனக கூட்டுக 'பலநூல்கள்ளாய்'மென மறறதலையையும் செயப்படு பொருளும் வருவித்துரைகக்ப்பட்டன. 'கற்றலிற்கேட்டலேநனறு' என்றது கற்றல்நன்று அதனினும கேட்டல் மிகவும நல்லது என்றவாறு. ஏகாரம் தேற்றப்பொருள்குறித்துநின்றது. ஆதலால என்னும வது ஒழுகலாகாதென்னுந் தணிபொருள்கொண்டுமுடிந்தது. நிணற்றுத்தவளை நாட்வேளமழியாது என்ப நிதன்பழமொழி. கணக்கொன்றே முற்றப்பகலு முனியாதினிதோதிக் கற்றொழுகுவாரை வெஹ-ஸ்ரு-ஹதி எனப் புகழ்வதும் வடமொழிவழக்கு. இப் பழமொழிப்பொருளே, "ஊறறநீர்க் கூவலு ளூறையு மீனஞர், வேற்றுநாட் டதனசுவை விடித்தன் மேயினூர்"* எனச் சிவகசிந்தாமணியினும் உபலக்ஷண வகையா லெடுத்துரைகக்ப்பட்டது.

62. கழுமலத நியாதத களிறுங் கருவூர்
விழுமியோன் மேற்சென் றதனுல்—விழுமிய
வேண்டினும் வேண்டா விடினு முறறப்பால
தீண்டா விடுத லரிது.

எ-து, சுழுமலமென்னு மூரின்கண்ணே பிணித்துநின்றகளிறும், கருவூரின்கண்ணேயிருந்த கரிகால்வளவன் கடிதினோயனபினும் அவன் சிறப்புடையனுதலால் அவன்மேற்சென்று தன்மிசையெடுத்துக்கொண்டு அரசிற்குரிமைசெய்ததாதலால் விழுமியபொருளைக் காதலிப்பினும் காதலியாதுவிடினும் உறக்கடவன தீண்டாவாய்விடுதல் அரிது எ-று.

* சிவகசிந்தாமணி, 5-வது பூமகையாரிலம்பகம் செய்-11.

(குறிப்பு) இது முயற்சியின்றியும் நல்லூழ்வலியால் விழுப்பேறடைத லியலுமென்ப தணர்த்துகின்றது. கழுமலத்தென்றது கருவூரின்சேய்மைத் தள்ளதென்னுங் குறிப்புணர்த்துதலியவாறு. யாத்த என்றது அவ்வூரைவிட்டுப் பிரிதிடம்புகலியாதி கட்டுண்டுபழகிய வென்றவாறு. களிறு என்றது தகுதி யறியுந்திறனில்லாத விலங்கு என்றவாறு. கருவூர் என்றது தேசாந்தரமாகிய சேரநாட்டுள்ளதென்னுங் குறிப்புணர்த்துதலியவாறு. இவை நான்கும வளவன் விழுப்பயனெய்துதற கியைபின்மையுணர்த்துதற்கின்றன. 'கரிகாலவளவன் கடி நிலையஞ்சினு' மென்றது இசைபெயரசசம இதுவும அவனரசுரிமையெய்தற் கியைபின்மைகாட்டியபடி 'அவன மாறுபுடையஞ்சலால' வென்றது அவன் அரசுரிமையெய்தற்குச் சுறுச் சுலவூர்புடையஞ்சலரல என்றவாறு இ-ள் தொன்றுமே யவனாகரிமையெய்தற் கேதுவாயின்றதென்பதாம. 'விழுமிய பொருளா' லென்றது ஒருவனை காரணமே முயன்றெய்தற்கரிய பெரும்பேறகள என்றவாறு 'காசலிடம்னு காதலியா லவ்டினு' மென்றது ஸ்ரும்பிமுயலினும முயலா தபேக்ஷித்திருபபினு மென்றவாறு 'உறகடவன' வென்றது நலவூழா லுறற்பாலனவாகிய நலங்கள் எனறவாறு 'தீண்டாவிதெலரித' என்றது அவ் வூழடையாளைப் பற்றுதொழியாவென்றவாறு. இப்பாட்டிற் பின்னடி இரண் டும் பனுவல்வழக்காய்ப்பிறந்த பழமொழிக்கூற்று இது நாலடியுள்ளும* வழங் கப்பட்டது.

63. எவ்வந தூணையார்ப் பொருண்முடிக்குந தாளாண்மை
தெய்வ முடிப்புழி யென்செய்பு—மொய்கொண்டு
பூப்புக்கு வண்டார்க்கு மூர குறும்பியங்குங்
கோப்புக் குழிசசெய்வ தில்.

எ-து, தன்பமே தனக்குத்தூணையாக ஒருவன் நிணைத்தபொருளை முடிக்குந தாளாண்மை, முற்பிறப்பிற்செய்த தீவிணைவந் திடையூறு செய்தால் அவ்வினையைவலிந்து என்செயவற்று, பூப்புக்கு வண்டார்க் கும் ஊரனே! எங்கும் தடையின்றிச செல்லவல்ல அரசன் கைக் கொண்டநாட்டின்சட் குறுமபன் வலிந்துசெய்வதொன்றில்லையாத லான் எ-று.

(குறிப்பு) இது வலியானமிக்க இழவூழின்முன் எளியமுயற்சி யழி யெய்துமென்பது கூறுகின்றது. 'தன்பமேதனக்குத்தூணையாகவென்றது' பொருண்முடித்தற்கேற்ற காலமிடமுதலிய பிறதூணையொன்றுமின்றி என்ற வாறு. 'ஒருவனினைத்தபொருளைமுடிக்குந்தாளாண்மை' யென்றது இடையூறில் வழிக் கருதியபொருளைமுடித்ததற்குப்போதியவளவினையுடைய மெய்ம்முயற்சி

* நாலடியார், 11-ம் அதிகாரம் (பழவினை) செய்-9.

யென்றவாறு. தாளாண்மை யென்செய்யு மென்னுங்குறிப்பால் 'தெய்வமென் றது' ஈண்டு முயற்சிக்குவிரோதியாயுள்ள இழவூழ்தெய்வமாயிற்று. அது முடித்தலாவது காரியகேடாகிய தன்காரியமேமுடியுமாறு முயற்சியைக் கெடுத்தல். 'ஆவ்வினையைவலிந் தென்செயவற்று' என்றது அவ்வலியதீவினை யை எளியமுயற்சியானது வலிந் தொன்றுசெய்து வெல்லாபாலதில்லை யென்ற வாறு. மொய்கொண்டு என்செயவற்று எனக் கூட்டுக. 'குறும்பியங்குங், கோப் புக்குழிசசெய்வதில்' என்பது திட்டாந்தமாகக்காட்டிய பழமொழிகளுற்று. இப்பழமொழியினசொரூபம் வழக்குஞ்செயயுளுநோகி வந்துழிக் காண்க. இது டைடத்துள், "வைய மேழுடை மனன னிறுத்தலும, வெய்ய பாசறை விட் டகல் வேளிரின்"* எனப் பொருள்பற்றி யெடுத்தாளப்பட்டது. 'எங்குந் தடை யின்றிசசெல்லவல்ல அரசன்' என்றது எநாட்டுக் தடையினறித் தன்ஞணை செல்லவல்ல சாவபௌமனை அரசன என்றவாறு 'கைகொண்டநாடு' - கையாட்சியிலுள்ளநாடு. குறுமபன் என்றது குறுநிலமன்னனைருவனென்ற வாறு. இதனற் குறுமபாபலாகூடி எதிர்ததல் விலகப்பட்டமையால், "ஊழையு முப்பகங்காணபர்"† என்னுங் குறளொடு மாறுபடாதாயிற்று. 'வலித்தசெய்ய தொன்றிலேல்' என்றது அப்பேரரசனுணையனடங்கிச செயலற்றிருப்பதன்றி அவ்வாணையொடு மாறுபடத தன்ஞணையை வலித்தசெல்லசசெய்யுமுபாய மொன்றுமில்லையென்றவாறு. 'ஆதலால' என்றிருபபது அதுபோல என்றிருக வேண்டும். பேரரசனுணையை ஒரு குறுநிலமன்னனுணை வெலலாதலாறுபோல இறைவனுணையாகிய வலியதீயூழை உயிரிஞணையாகிய ஒரு எளியமுயற்சி வெல்லாதென்பதாம ஆணை என்றது இங்குச் சங்கற்பத்தை எனக் கொள்க. இவ்விரண்டுபாட்டானும ஊழானனறி, முயற்சி பயனளிததலிற் பிறழ்ச்சி யுடையதன்றென்பது கூறப்பட்டது.

64. கலலா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொலலாத சிலலை யொருவாக்கு—நலலா
யிழுக்கதனின் மிகக விழிவிலலை யிலலை
யொழுக்கதனின் மிக்க வுயாவு.

ம-து, கலலாதாரமுன்பு சொலலுங் கடடுரையின்மிக்கதொரு பொலலாமைபிலலை ஒருவாக்கு; கலலாய ' இழுகதனின்மிக்கதோ ரிழிவுமிலலை; ஒழுகதனினமிக்க துயாவுமிலலை, ஆதலான் எ-று.

* வைடதம, இத்திரப்படலம் செய்-2.

† திருகுறள, 62-ம் அதிகாரம் (ஆள்வினையுடைமை) குறள்-10.

(குறிப்பு) இது கல்லாதவரிடை வைதுஷ்யப்பிரஸங்கமசெய்யலாகாதென உடன்பாட்டானு மெதிர்மறைமுகத்தானுங் கூறுகின்றது. கல்லாதவர்-கல்வியறி வில்லாதவர். கட்டுரை-வைதுஷ்யப்பிரஸங்கம. 'பொல்லாமையில்லே' என்றது தேண்டாமைபிறிதொன்றில்லேயென்றவாறு. பிண்டியிரண்டும் ஒருபழமொழி. இது கட்டுரைவகையால் வந்தது. இது"ஒழுக்கதநி னெய்துவர் மேன்மை யிழுக் கத்தி, னெய்துவ ரெய்தாப் பழி"* எனத திருக்குறளினு மமைத்துள்ளது. இழுக்கம்-தெறியினீங்கியசெயல். ஒழுக்கம-நெறிமுறையொழுகல். கல்லாதவ ரிடைக் கட்டுரை பயனில்கூற்றுப்ப் பயனிலசெய்யற்க வெனனும நெறிவழிப் படாமையால் அது நெறியினீங்கியசெயலா யிழுக்கமாயிற்று. அது செய்யாமை பயனிலசெய்பாமையாகிய நெறிவழிப்பட்டமையா லொழுகுகமாயிற்று. 'ஆத லான்' என்றது கல்லாதவரிடைசசொல்லுங்கட்டுரை யிழுகுகத்தின்பாற்படுதலா லும், அது செய்யாமை யொழுகுகதநினபாற்படுதலாலும் என்றவாறு. இது ஒருவர்கு அதனினமிகுகதொரு பொல்லாமையில்லே என்ற அனவயததாணும வெதிரேகத்தாணும தணிதற்கு ஏதுவாசகமாயிற்று 'இழுகுகதநின்மிக்கதோ ரிழிவுமில்லே' எனறது கலலாதவரிடைக்கட்டுரைசசாலலுதல் தீதென வுடன் பாட்டாற்கூறுதற் கேதுவாயிற்று. 'ஒழுக்கதநின்மிக்கதோருயர்வுமிலலே'யென றது கல்லாதவரிடைக்கட்டுரைசசொல்லாமையே நல்லது என எதிர்மறைமுகத் தாற்கூறுதற்கு ஏதுவாயிற்று. 'கல்வியாஞயகழிதுட்பம்'† என்பாட்டு தூல்கற்க வருமாணாக்கர் அந்நூற்பொருள்கொள்ளற்கேற்றகல்வியிலராயிற் சொல்லலாகா தெனக் கற்பிப்போனேரோகியகூற்முகையாலும், இப்பாட்டுக் கல்லாதாரவையுள் வைதுஷ்யப்பிரஸங்கமசெய்யலாகாதெனக் கோட்டிகொள்வாரைநோக்கிக்கூறிய கூற்முகையாலும இவை தம்முட் கூறியதுகூறலன்றென வுணர்க. இதனுல், கற்றற்கு அதிகாரநியமமவேண்டுவதுபோலக் **கேட்டற்கும்** அதிகாரநியமம் வேண்டுமென்பது பெறபபட்டது. "ஒளியார்முனெளளியராதலவெளியார்முன், வானசுதைவண்ணங்கொளல்"‡ என்பதும இக்கருத்தையது.

65. வென்றடு கிற்பாலர வெப்பித் தவர்காய்வ
தொன்றெடு நின்று நிறியார் பலசெய்தல
குன்றெடு தேன்கலா வெற்ப வதுபொரித
நன்றெடு வநததொன் றன்று.

எ-து, வென்று தமமைமக கொலலவலலாரை மனததைக்கொநிப்பித் தவர்வெகுள்வதொருகாரியததொடுநின்று எளியராய்ப் பல குற்றங் களீசசெய்தல, குவடுகளநம தேன்பொதிகளும் தம்முள் விரவிநெருங்கிய வெற்பபபுடையாளே! மிகவும அது தனக்கு நன்றெடுவந்தவன்று எ-று. குற்றெண்பதும வரும்.

* திருக்குறள, 14-வது அதிகாரம் (ஒழுக்கமுடைமை) குறள்-7.
† இந்நூலின் மூன்றுஞ்செயயுள்.
‡ திருக்குறள் 72-ஆம அதிகாரம (அவையறிதல) குறள்—4.

(தூறிப்பு) இது வலிமிக்க அரசரை அவரி னெளியராயினுர் அவமதிக்க லாகாதென்பது கூறுகின்றது. 'வென்று தம்மைத் தொல்லவும்லாரை' யென் றது போர்நேர்ந்துழித் தம்மை வெல்லவுங் கொல்லவும்வல்ல வலிமிக்கஅரசரை யென்றவாறு. 'மனத்தைக்கொதிப்பித்து' என்றது அவர்க்குச் சொல்லா லுஞ் செயலாலுஞ்செய்யகடவமரியாதைகளேச்செய்யா திருக்கும்படி மதிப்பால் அவர்மனம் புழுங்குமாறுசெய்து என்றவாறு. 'அவர் வெகுண்டதொரு காரியதொடுநின்று' என்றது அவர் வெகுண்டதனிய பிரதிஉலமொன்றேயுண் டிப் பிதிதொருபயனுமில்லையாக வென்றவாறு. 'எளியராய்' என்றது அவர் வெகுண்டால்வருந்தீங்கு தாங்கமாட்டாதாராய் என்றபடி. 'பலருந்தங்களேச் செய்தல்' என்றது முன்செய்தது பராக்கினலன்றென்றெண்ணுமாறு குற்றங் களேத தொடர்ந்தசெய்தல் என்றவாறு. 'நன்மெருடிவந்ததொன்றன்று' என் றது தீங்குடையவாகும் என்னும் பழமொழிப்பொருள்கொடுத்து மூடித்துக் காட்டியவாறு. பெரியாரையவமதிக்குஞ் சிறியாரை யிடித்துரைக்குமிடத்து அச் சிறியார்செய்யுஞ்செயலேச்சுட்டி இது "நல்லதொடிபட்டதில்லே" என வழங்கும அடிப்பட்டவழகே இப்பாட்டிற்கு எடுத்துக்கொண்டபழமொழி யெனவறிக. உரை முடிந்தபிறகு குற்றென்பதும்வரும் என்றெழுதப்பட்டிருப் பது ஆராயததக்கது; குன்றென்பதும்வரும் என்பது பிரதிபேதம்.

66. முன்னின்ஞ ராயினு மூடு மிடர்வந்தாற்
பின்னின்ஞ ராகிப் பிரியா ரொருகுடியார்
பொன்ஞசை செயினும் புகாஅர் புனஞார
தன்னிஞ ரல்லர் பிறர்.

எ-து, முன்பு ஒருகாரணததால இன்ஞராயினும் தம்மைமுழுக் கும இடர்வந்தாற் பின் இன்ஞராகிப் பிரியாதேபொருந்துவர் ஒரு குடிபபிறநதார்; பொன்ஞகப பிறரைசசெய்யினும பிறர் தமக்கோரிடர் வந்தால அவ்விடத்தின்வந்துபுகுதார்; புனஞாரனே! ஒருகுடிப்பிறவா தார் தன்னிஞரல்லராகலான் எ-று.

(தூறிப்பு) இது சுற்றததார்தனே சிறந்தென்பதுகூறுகின்றது. 'முன் பொருகாரணத்தால்' என்றது தம்மைமுழுகுமிடாவருதற்குமுன்பு தாயமுழுக்கு முதலிய யாதேனுமொருகாரணத்தால் என்றவாறு. 'இன்ஞராயினும்' மென்றது ஒருவர்க்கொருவர் இனிமையற்ற பகையராயிருப்பினு மென்றவாறு. உம்மை காரணமுன்னவழியு மின்ஞராகாரென்பது குறித்துநின்றது. 'தம்மைமுழுக்கு மிடர்வந்தால்' என்றது தம்முன் யாரேனும் ஒருவரையாயினும், இருவரையு மாயினும் அழுந்தச்செய்யுங்கேடு வருவதாயிருப்பின என்றவாறு. 'பின்னின்ஞ ராகி, என்றது உடனே ஒருவர்க்கொருவர் இனிமையுடைய நட்பினராய் ஒன்று

வாறு. 'பிரியாதேபொருத்துவர்' என்றது வேற்றுமையின்றி யொன்றுபடுவர் என்றவாறு. 'ஒருகுடிப்பிறந்தார்'-குடிப்பிறப்புடைய ஒருகுலத்திற் பிறந்தவர். மூன்றுமடி பழமொழிக்கூற்று. 'பொன்னைப் பிறரைச்செ யினும்' என்றது தம் மோடொருகுலத்திற்பிறவாதபிறரைப்பொன்மிக்குடையராகச்செய்துவைப்பினு மென்றவாறு. பிறர் என்றது அங்ஙனம செய்துவைகக்பெற்ற பிறராகிய அவர் என்றவாறு. தமகென்றது,அப்பிறரைப்பொன்மிகுடையராகச்செய்துவைத்த தமக்கே என்றவாறு. 'வந்துபுகுதார்' என்றது வந்து தீணைசெய்யாது விலகி நிற்பர் என்றவாறு. தனனினூரல்லர் பிறர் என்றதீனைப் பிறர் தன்னினூரல் லர் எனகூட்டிப் பழமொழிப்பொருளைசசாதிதற் கேதுவாக்கி 'ஒருகுடிப் பிறவாதா தனனினூரல்லராகலான்'எனப பொருளுரைகக்பட்டது. "பொன் னுக்செய்தாலும் பேராந்தார் பேராந்துவரோ" எனப நிதன்பழமொழி. ஒருகுலததார்கட் பொழிகறபாற்றன்றென்பது கருதது.

67. சுற்றததார் நட்டா ரெனசசென் றொருவரை
யறறததாற் றேறூ மறிவுடையார்—கொற்றபபுள்
ளூராதுலகந தாவின வண்ணமே யாயினுஞ்
சீர்ந்தது செய்யாதா ரில.

எ-து, சுற்றததாரென்றும் நட்டாரெனறுங்கொண்டு ஒருவரை மறைததுசசெய்யுஙகாரியததின்கண் அறிவுடையா தேறூரா; வென்றி யையுடைய புள்ளூயூரவதுஞசெய்து உலகதலதைக் காலாற்கடபபதுஞ செய்த உயர்ந்தமுதலவனேயாயினுமு, தன க்குச சீர்கபபெற்ற தொன்றை ஒழியவிடுவாரில்லை எ-று. தனபமீபறு சிரிதாயிருநததாயிற பழியும் பாவமும் பாராமீதையாவராயினுமு மனஙதிரிதவிளவுவர் எ-று.

(தூறிப்பு) இது, பிறபுறியிற் பொருட்பேறறை அவா தமதாகஙகோடற் குரிய சீரியகாரியத்தி லொருவரையும நமபலாகாதெனகின்றது. 'சுற்றத்தா ரென்றும நட்டாரெனறுமகொண்டு' என்றது இவா நம சுற்றததாராதலால் நமக கனுகூலம்செய்வரெனறேறினும, இவர் நட்டாராதலால் நமக் கனுகூலம செய்வரென்றேனும மனததிடகொண்டெனறவாறு. 'ஒருவரை' என்றது தானல்லாத பிறரொருவரையும எனறவாறு. வ்காரததாற்பெருக்கமுற்றுமமையை விரிதலுரைத்துக்கொளக. அற்றம-பிறறியாது மறைகக்ததருவது அற்றததால் என்றது வேற்றுமைமயக்கமாதலால 'ஒருவரை மறைததுசசெயயுஙகாரியததின் கண்' எனப் பொருளுரைகக்பட்டது மறைததுசசெய்யுஙகாரியமாவது:— பிறிதொருதீணையும்வேண்டாது தனியேமுயல வெளிதினெய்தும பொருட் பேற்றினைத் தன்னதாக்கிகொள்ளற்குரிய காரியம். 'அறிவுடையார் தேறூர்'

என்றது அக்காரியவிஷயத்தில் அறிவுடையோர் தெரிந்தெடுக்கமாட்டார் என்ற வாறு. 'வெண்றியையுடைய புள்ளூர்வதுஞ்செய்து' என்றது இந்திராதி தேவர்களெல்லாரையும்வென்று, அண்ணலாகிய தன்னினும் வரத்தா லுயர்வு பெற்ற கழுமீனைத் தனக்கு ஊர்தியாகக்கொண்டதுமேன்றி யென்றவாறு. 'உலகதைக் காலாற்கடப்பதுஞ்செய்த' வென்றது எல்லாமுடையஞனை என்ற படி. இத்தொடர் இக்கருதுதுடையதென்பதை "அடியனாந்தான்,ரூஅய தெல்லா மொருங்கு"*என்பதனுனுமறிக. 'உயர்ந்தமுதல்வனேயாயினு'மென்றது முதல் வராயுள்ளாருட் டலைவனேயாயினு மென்றவாறு. இதனை,'முதலாவார் மூவ ரம் மூவ ருள்ளும், முதலாவான மூரிசீர் வண்ணன்'†என்பதனுனுமறிக. 'தனக்குச் சீர்கப்பெற்றதொன்றை'யெனறது தன்னதாக வெளிதிற்கொளளதகுவதாய் வாய்க்கப்பெற்றதொனறை யெனறவாறு 'ஒழியவிவொரில்லை' யென்றது ஒழிய விடுவாரொருவருமிலலையாகலாலுமாம். தமமதாகக் கைப்பற்றிக்கொள்ள ரென்ற வாறு சோநதது-மெலிததலவிகாரம. அண்ணலேயாயினும்அசுசுற்றத்தார் கட்டார் சோந்தது செய்யாதாரில் எனப் பழமைவினைகேற்ற எழுவாய் விரிதலுமுடித்துக் கொளக. 'தனப்பேறு சிரிகாயிருந்ததாயின் பழியும் பாவமும் பாராதே யாவ ராயினுமனைச்சிரிந்து வெளவுவா' எனறது 'சிர்ந்ததைசெய்யாதாரில' என்ற பழ மொழிப்பொருளை விரிதலுரைதலவாறு. யாரும் 'வாயித்ததை விடமாட்டார்' எனனுமடிப்பட்டவழக்கேஇப்பாட்டிற்கெடுத்தக்கொண்டபழமொழிபோலும.

68. எணிப்பலவே யாயினுஞ் சேய்ததாப் பெறலிற்
றிணைததுணையே யானு மணிக்கோட னன்றே
யினக்கலி தேன்கிழிகரு மெற்கலசூழ் வெற்ப
பணைப்பதித தண்ணூர் பழம.

எ-து, எததுணைப் பலவாயினும் காலநெடிதுசென்றுற் பெறுமத னிற் றிணையளவேயாயினும் அணித்தாகவொருபொருளைப்பெற்றுத் தான்கோடல மிகவும நன்று; இனக்கலிகள் தேன்பொதிகளைக் கிழிக்கும் பிறங்கியகற்கள்சூழ்நதவெற்பனே ! பணையைநட்டு அப்பணைபழுத்தாற் பழமுண்போமென்றிருப்பார் ஒருவருமில்லை எ-று.

(குறிப்பு) இது சூசகடாஹங்யாயத்தாற் சேய்மைக்கட் பெரும்பயனுது முயற்சியினும் அண்மைக்கட் சிறுபயனுறுமுயற்சி சிறந்ததென்பது கூறின் றது. 'எசதுணைப்பலவாயினு' மென்றது பணையளவாகி மிக்கபலவாயினும் என்றபடி. 'காலநெடிதுசெனறுற் பெறுமதனின்' என்றது நெடுங்காலமுயன்று சென்றுற் பெறலாம்பயனுகிய அம் மிகப்பலவாகியபொருளினும் என்றவாறு

* திருக்குறள், 61-ம் அதிகாரம் (மடியின்மை) குறள்-10.

† நாலாயிரதிவ்யப்பிரபந்தம் இயற்பா முதற்றிருவந்தாதி, பாசுரம்-15.

'தினையளவேயாயினு மணித்தாக வொருபொருளைப்பெற்றுத் தான்கோடல் மிகவும்நன்று' என்றதனிற் சிற்றஞ்சிறுகாலேமுயல உடனேயிடைக்கும்பொருள் அளவான் மிகச்சிறிதாயிருப்பினும் அதனையே கைக்கொள்ளுதல் மிக நன்றென்றவாறு. அணித்துக்கோடல் என்பது அணிக்கோடல் எனக் கடைக்குறையாயிற்று. அணித்தாகக்கொள்ளுதல் என்பது பொருள். 'இனக்கலேக டேன் பொதிகளைவிழிக்கும்'என்றதனாலும்இனங்களுடன்கூடிய ஆண்குரங்குகள் தேனிழல்களைப்பிய்த்து இனங்களையூட்டித் தாமுமுண்ணுமென்றவாறு. பிறங்கிய கற்கள்-விளக்கமுள்ள பிறருண்ணாதகற்கள். பனைப்பதித்துண்ணுர்பழமென்பது பழமொழிக்கூற்று. 'பனையாட்டி, அப்பனைபழுத்தாற் பழமுண்போமென்றிருப்பாரொருவருமிலரே' என்றது பனையுடையராய் அப்பனிரைப் பனம்பழமுண்ணும் வேணவாவுடையாரெவரும், எளியமுயற்சியிற் கிடைப்பதொரு பனம்பழத்தைத் தேடியுண்டு பசிதீராது, அதன் கொட்டைதேடிக்கொணர்ந்துண்டித் தண்ணீர் வார்த்து வளர்த்தவந்த அது பனைமரமாயப் பின் காய்த்துப் பழுக்கும் மிக்க பழங்களைதருவேமென்றெதிர்பார்த்திராரென்றபடி."பசித்துண்ணவேண்டிப் பனைநடுவோருண்டோ" என்ப நிதன்பழமொழி. இப்பொருள்பற்றி நானேக் கிடைக்கும் பலாப்பழத்தைக்காட்டிலும் இன்னுகிடைக்குங் கலாப்பழம் நல்லது என்னும் ஒருபழமொழி வழங்குவதுண்டு.

89: தந்தம் பொருளுந் தமர்தம் வளமையு
முந்துற நாடிப் புறந்தர லோம்புக
வந்த ணருவி மலைநாட சேணெஞ்சி
னுந்துநீர் கொண்டதே போன்று.

ள-து, தந்தமது பொருளினதளவினையும், தமர்கள்செல்வத்தினள வினையும் முதலிறவே ஆராய்ந்தறிந்து உய்தற்கருதக்கவகை புறந்தருதற் பொருளைப் பொருள்செய்து பாதுகாக்க; அந்தணருவிமலைநாடனே! பின் தனக்கு நீர்பெறலாங் காலநெடுமையைப்பார்த்து நந்து நீரைத் தாங்கியதுபோல ள-று.

(தெளிப்பு) இது ஈட்டியபொருளை வீண்செலவுசெய்யாது சிக்கெனவுடையராய் வைத்து வாழவேண்டுமென்கின்றது. 'தந்தமதுபொருளினதள வினையும்'என்றது ஒவ்வொருவரும் தம்மாலீட்டப்பட்டுள்ள பொருளினதளவு இதனினையென்பதையும் என்றவாறு 'தமர்கள்செல்வத்தினளவினையும்' என்றது தம்மாற் பாதுகாக்கத்தக்க இருமுதுகுரவரும் மனைவியும் மகளும் ஏவலாளரும் மற்றுந் தமைமைப்பற்றிய சுற்றத்தாரும் உண்டுடுத்தணியவேண்டும்பொருள்களும் அவற்றிற் குபகரணங்களுமாகச் செலவுசெய்யவேண்டும்பொருளினளவையும் என்றபடி. முன்னுறவாய்ந்தறிதலாவது செலவிட்டுவாழவேண்டும் பிற்றைநாளின் முற்பட்டே அக்வினுலவளவைத்தையும் சீர்தூக்கியறிதல்.

'உய்தற்குத்தக்கவகை புறந்தருதற்பொருளைப் பொருள்செய்துபாதுகாக்க'வென்றது,தம்பொருளினளவுசிறிதாயின் தாமும் தமருமுயிரவாழுமாறு பாதுகாப்பிற்கு வைத்திருக்கும் அப்பொருளைப் பிறிதொருசெலவும்செயாது சிக்கெனவுடைய ராய்ப் பாதுகாத்துவாழவேண்டுமென்றவாறு. "சேணுலைக்கி னந்நீர்கொண்டதே போன்று" என்பது பழமொழிக்கூற்று லுதாரணங்காட்டியவாறு. 'பின் றனக்கு நீர்பெறலாங் காலநெடுமையைப்பாத்து நந்து நீரைதாங்கியதுபோல' என்றது நத்தை தன்கூட்டினுளளே பனிக்காலதிலீட்டிவைத்தநீரைத் தான் வீண்விர யஞ்செய்யாது காற்றுலுஞ் சூட்டாலுஞ் சுவறவிடாது புதர்நிழற்பசுமரங்களி லொட்டிக் கூட்டின்வாயைமூடி மிகசிக்கெனவுடையதாய் மாரிக்காலத்தளவும் வைததருந்தி வாழுமாறுபோல என்றவாறு. இதனால், சுருங்கியபொருளுடையார் அப்பொருளைத தீயர்கவர்ந்துகொள்ளவிடாது தண்ணளியுடையோரான வலி யோர்சார்புபற்றிச் சேமிததுவைததுக்கொண்டு சிகனெவுடையராய் நுகர்ந்து வாழவேண்டுமென்பது குறிப்பாயிறறு இதன்பழமொழிச்சொரூபம் வழக்குஞ் செய்யுளுநோக்கி வந்துழிக் கண்டுகொளக.

70. சிறியவ ரெய்திய செலவுதஞின் மாண்பு
பெரியவா கலகுமவ ரன்றி—தெரியின்
மதமையங்கு பூங்கோதை மாணிழாய் மோரின்
முதநெய்தீ தாதலோ வில.

எ-து, கீழ்மக்கள்பெற்றசெல்வதஞின் மாட்சிமைப்பட்ட பெரி யோர்பெற்றவறுமை உலகதஞப் பயன்படும்; ஆராய்வேமாயின், தேன் மிடைந்த பூங்கோதையையுடைய மாணிழாய்! மோர்போலப் பழைய நெய் தீதாகமாட்டாது; நன்றேயாம அதுபோல எ-று.

(குறிப்பு) இது வினைத்தூய்மையின் உயர்வுகூறுகிறது. 'கீழ்மக்கள் பெற்றசெலவதஞின்' என்றது பழிபாவங்களேயஞ்சாது பொருளொன்றையே கருதிய கீழ்மக்கள் தீநெறியிலீட்டிய நிறைசெல்வத்தைக்காட்டிலும் என்றவாறு. 'மாட்சிமைப்பட்டபெரியோர்பெற்றவறுமை யுலகதஞப்பயன்படும்; ஆராய்வேமா யின்' என்றது அங்ஙனமீட்டாமையாற் பொருள்வரவின்றி நெறிநின்றபெரி யோர்க்கு வறுமைவருமாயினும அது ஆராயுமிடதது உலகிற் கொழுக்காடை யைக்காட்டி அதனை வலியுறுதஞிப் பயன்படுமென்றுதோன்றுதலால் அது மிக நன்றென்றவாறு. 'தேன்மிடைந்தபூங்கோதையையுடையமாணிழாய்' என்றது (மகடூமுன்னிலை) வண்கேள்மொய்க்கும் பூச்சூட்டணிக்தகூந்தலினையும் சிறந்த அணிகலங்களேயுமுடையாய் என்றவாறு. உரையில் 'மோர்போல' என்றது மோரின் என்றிருக்கவேண்டும். மோரைக்காட்டிலும் என்றவாறு. 'பழையநெய்

நீதாகமாட்டா'தென்றது (புதிதாய்பபெருகியுள்ளமோசைகாட்டிலும்) பழைய தாய்ச்சருங்கியுளளநெய் நீதாகாது நன்றுருகுமென்றவாறு. அதனினும் புதிய நெய் மிகவுநன்றுருகுமென்பது சொலலாமையேபெறப்பட்டமையால் அதனுப மேயமாகிய பெரியவரெதியசெல்வம் மிகவு நன்றுருகுமென்பதும் குறிப்பாயிற்று. இதன்பழமொழியின்சொரூபம் வழக்குநோக்கி வந்துழிகாண்க. இப்பாட்டின் கருத்து, "பழமலைந் தெய்திய வாகைதந்திற் சான்றோர், கழிகல் குரவே தலை"* எனத் திருக்குறளிலுமுள்ளது. பாவமும பழியுமுணடாகச் சிறியராயினுரீட்டிஞ செல்வத்திரட்சியினும அநுஙனமீட்டாமையால நெறியினறபெரியார் வறுமை யுறினும அது சிறந்தென்றமையாற பொருளே னனெறியினின்றுமீட்ட வேண்டுமென்பது குறிப்பாயிற்று

71. வண்பாட் டவர்பகை கொள்ளினு மேலாயார்
புண்பாட வர்பகை கோடல பயபினறே
கண்பாடட பூங்கானிக் கானலந் தண்சேர்ப்ப
வெண்பாடட்டம வெள்ளாத நும.

எ-து, வலியதகைமையையுடையாரொடு பகைகொள்ளினும மேலாயா எளியதகைமையையுடையாரோடு பகைகோடல ஒருபயனும படாது; கண்களின்றகைமையாயுள்ள பூங்குவளைகளோபுடைய கானலந் தண்சேர்ப்பனே' பாநுவமைபுயன்றியே வெண்பாடட்டமும வெள்ளாத நுமாதலா னென்றவாறு.

(தெளிப்பு) இது ஒருவரோடும் பகைகொண்டு மேற்செல்லலாகாதென்கிறது. 'வலியதகைமையையுடையாரொடு பகைகொள்ளினும்' என்றது அறிவு ஆண்மை பெருமை என்னும் மூவகையாற்றலாலுந் தம்மின்வலியராயினு ரோடு மாறுபட்டு மேற்செல்லினும் செல்லுக என்றவாறு. உம்மையால் அது வும்கூடாதென்பது கருத்தாயிற்று. 'மேலாயார்' என்றது அவ்வாற்றலான்மிக்கா ராயினுரென்றவாறு. 'எளியதகைமையையுடையாரோடுபகைகோடல் ஒரு பயனும்படாது' என்றது அவ்வாற்றலா லிழிந்தாரோடு மாறுபட்டுமேற்செல்லல் கூடாதென்றபடி. உலியார்மேற்செல்லின் ஒரோவழி அவர் இவரது எளிமையை யும் அறிவின்மையையுமுணர்ந்து பிழைப்பிற்குத் தகவொறுத்தி அறிவுறுத்திவிட உய்தலுங்கூடுமாதலால் வண்பாட்டவர்பகைகொள்ளினுங்கொள்க என்றும் எளி யோர்மேற்செல்லின் அவர் தா மொருவாற்றலும் இவர்க்குய்தல் அரிதென்று தெளிந்து பலதீங்குகளும் ஒருங்குபுரிவராதலாலும் அவற்றிற்கெல்லாமஞ்சாது அவரைக்கொல்லினும் பழியும் பாவமுமெய்துதலாலும் அது பயமின்றென்றுங்

* திருக்குறள் 66-ஆம் அதிகாரம். (வினைத்தூய்மை) குறள்—7.

கூறப்பட்டன. பயமின்றென்றது செய்யலாகாதென்றபடி. 'கண்களின்றகை மையாயுள்ள' என்றது மகளிர்கண்களின் றகைமைபோலுங் தகைமையையுடைய என்றவாறு. இது பூவிற்கு அடையாயிற்று. 'பூங்குவளை' பூக்களையுடைய குவளை. கானல்-கழிக்கரைசோலை. "வெண்பாட்டம் வெள்ளந்தரும்" என்பது பழமொழிகூற்று. இதனுள் வெண்மை கருமையின்மறுதலையாய்ப் பாட்டத்தை விசேடித்தலால் வெண்பாட்டமென்றது கார்காலமல்லாத வேனிற்காலத்துப் பெய்யும் மழையை யுணர்த்திற்று. பாட்டம்-மழைபெயல். பாட்டமும் என்னும் உம்மை விகாரதாற்றொக்கது 'பருவமழையன்றியே வெண்பாட்டமும் வெள ளத்தருமாதலான்' என்றது கார்காலதத்துமழையேவெள்ளந்தருமென்றெண்ணற்க; வேனிற்காலதத்துமழையும வெளளந்தருமாதலால் அதனமேலும் செல்லலாகா தென்றவாறு. அதன்மேலும செல்லலாகாதென்பது பொருட்குறிப்பாற்பெறப் பட்டது. வெள்ளநதருதல்-நீரைப்பொழிதல். இது எடுத்துக்காட்டாதலால் 'ஆதலானென்றவாறு' என்றது ஆதலான் அதுபோலவென்றவாறு என்றிருக வேண்டும. பருவமழை ஒழியாதுநின்றுபொழிதலால வலிமிகுதலையுடையதும, வெண் பாட்டம சிறிதுபொழுதுபெயதொழிதலால வலியில்லதுமாகிய வேறுபாடுடைய வாயினும அவற்றைமதியாது எதிர்தத்துச்செல்வார் அவற்றின அம்புமாரியாற் றுக் குறுதல ஒருதலையாயெனபதுவா. அவற்றுட் பருவமழையிற்செல்வார், இடி, ஆலி, சுழிகாற்று முதலியவற்றுல வாதையிலலாமையும், வெண்பாட்டதிற்செலவார் இடிமுதலியவறறுல் வாதையுறுதலும எய்துவராதலாற் பருவமழையிற் செல்லுத லினும வெண்பாட்டதிற்செல்லுதல தீதாவதுபோல, வலியாரும் எளியாரும் வலியால்வேறுபாடும், தம்மையெதிர்ப்பார்மேல் அம்புமாரிபெய்தலால் ஒப்புமையும் உடையராயினும, வலியராயினரா எளியார்மேன் மிக்கசினங்கொள்ளாது அவர் அடங்குமளவே போர்புரிவராதலாலும்,எளியராயினர் தமக்கு உய்யுமாறில்லாமை யாற் றமமேலெதிர்தது வரும் வலியாரை யிலலையெனச்செய்யக்கருதி மிக்கசிற்றங் கொண்டு தாங்கவொண்ணுதபலதீங்குகளைச்செய்து கொல்லதுணிவராதலாலும வலியார்மேற்செல்லுதலினும் எளியார்மேற்செல்லுதல் தீதாகுமெனத் திட்டாக் தததொடு பொருததியுரைத்துக்கொள்க. இப்பாட்டிற்சொல்லப்பட்டபகை ஆக் கிரமணம என்னும மேற்செலவும, "வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா, மெலியார்மேன் மேக பகை"* எனனுங் குறளிற் சொல்லப்பட்டபகை தற்காப் பின்பொருட்டு எதிர்தத லுமாகிய வேறுபாடுடைமையால் இஃது அகுறளொடு மாறுபடாதென உணர்க. இப்பாட்டிற்கு எடுத்துக்கொண்ட பழமொழியின்வடி வம் வழகுகும் செய்யுளும்நோகின் வந்தழிக் கணடுகொள்க. எளியாரைப் பகை யாக்கிக்கொள்ளலாகாதென்னும் நீதியை நரியெதிர்த்தாற் சிங்கம் என்னுந் தொடர்மொழியால் நாட்டார்வழங்குகின்றனர்.

* திருக்குறள் 87-ம் அதிகாரம் (பகைமாட்சி) குறள்—1.

72. கடலே யிலராகி நன்றுணரா ராய
முடலே முழுமக்கண் மொய்கொ ளவைபு
ளுடலா வொருவற் குறுதி யுரைததல்
கடலுளான் மாவடித்த தற்று.

எ-து, மனத்தின்கட் கவலேயிலராய் நன்மையறியாராகிய மனம் வலிய முழுமக்கண்மொய்கொண்டவவையின்கணிருந்தவொருவற்கு அறிவிற்குடலாகிய வுறுதியாயினவற்றையுரைத்தல் கடலுள்ளே மாங் கனியையவடித்தாற்போ லும் என்றவா று

(துறிப்பு) இது நல்லோரலலாதார் கூட்டத்துளள ஒருவனுக்குச் சாஸ்த ராத்தஸாரதமங்களான ததவஸ்திபுருஷார்த்தங்களே உபதேசிக்கலாகாதென்கி றது. 'மனதினகட்கவலேயிலராய்' என்றது விசாரமற்றநிந்தையராய் என்றபடி. விசாரமாவது பிறப் பிறப்புப் பிணி மூப்பு ெ றுமைகளின் றன்பமுணாந்து அவற் றிற்கஞ்சி அவைதீரும்வாயில் நாடுதல 'நனமையறியாராகிய' என்றது இவை தமககு நன்மையாயின; இவை தமககுத் தீமையாயின எனப் பகுத்துணர்ந்து நன்மையாகிய ஒழுகக்ங்களே விருமபாதவராகிய என்றவாறு. 'மனமவலியமுழுமக கள்' என்றது அன்பு, விருப்பம், அச்சம், பசசார்த்தாபம் முதலிய மணநெகிழ்ச்சி யோடுகூடிய குணங்களொன்றுமின்றி, அமமனம வலியடைந திறருதற்குரிய வெறுப்பு, தறுகண், களிப்பு முதலிய தூர்க்குணங்களேயுடைய அறிவிலாமகளை என்றபடி. முடலே-வலிமை. இங்கு முழுமை-திருததப்படாமையுணரநின்றது; முழுமரமென் புழிப்போல. மொய்கொளவையுள் ஒருவற்குடலாவுறுதியுரைத தல் எனக் கூட்டுக. உடலாவுறுதி-வினைதொகை. ஒருவற்கு எனபது இடைப் பிறவரல் 'மொய்கொண்டவவையின்கணிருந்தவொருவற்கு' என்றது கொச்சை மக்களாதலால் ஆட்டுமந்தைபோலத் திரண்டகுழுவிலுள்ள ஒருவனுக்கு என்ற படி. ஒருவனுக்குரைத்தலே கூடாதென்றமையால் எல்லோர்க்கு மூரைத்தல் கூடாதென்பது சொல்லவேண்டாதாயிற்று. 'அறிவிற்குடலாகிய வுறுதியாயின வற்றையுரைத்தல்' என்றது ஞாதவ்வியங்களான தத்வ*ஹித†புருஷார்தங் களே‡யுபதேசித்தல என்றவாறு உடல்-இங்கு இலக்கணையால அங்கவாசக மாயிற்று. அறிவிற்கு விடயங்கள அங்கமாலையால அங்ஙனங்கூறினார். 'கட லுள்ளே மாங்கனியை வடித்தாற்போலும்' என்றது உவர்க்கடலுள் ஒருதுளி

---

* தத்துவம், "நவையெளி யூறுசை நாற்றமென் றைந்தின், வகைதெரி வான் கட்டே யுலகு" (திருக்குறள் 3-வது அதி. நீத்தார்பெருமை குறள்—7) என்னுங் குறளாற் சொல்லப்பட்டவை.

† ஹிதம், தீயனவொழித்து நல்லனசெய்தல்.

‡ புருஷார்த்தம அறம் பொரு ளின்பம் வீடெனபன.

நீரில் அது இன்சுவையெய்தற்பொருட்டு ஒரு தேமாங்கனியைப் பிழிந்தார்த் போலும் என்றவாறு. தேமாங்கனிரசம் பிழியப்பெற்ற உவர்க்கடலின் நீர்த்துளியானது, அதன்கணுள்ள பிறநீர்த்துளிகளின் கூட்டரவால் இன்சுவையெய்தா தொழிந்து திருந்தாதவாறுபோல மூடலேமுழுமகக்கண்மொய்கொளவையுளுள்ளா னெருவனுகரு உறுதிப்பொருளே யுபதேசிப்பினும் அக்குழவினுள்ளார்கூட்டரவால அவன் அதனை யுளத்துட்கொள்ளாதொழிதலால் அவன் ஒருநாளுந்திருந்தான் எனக் கருத்தநோக்கி யுவமையொடுபொருத்தி யுரைத்துக்கொள்க. "கிட லுளாணமாவடிதற்று" என்பது பழமொழிக்கூற்று. இது ஒப்புமைவகையால் வியர்த்தம் என்னும் பொருட்குறிப்புடையதாய்ப் "பன்றிக்கூழ்ப் பத்தரிற் றேமா வடித்தற்று"* எனநாலடியுள்ளும், "ஆற்றிற்கரைத்தபுளியாக்கிடாமலென்ன் பையெல்லாம்" எனத திருவேகம்பமாலையினும்† வழங்கப்பட்டது. சமத்தராந்தீர் பெருங்காயம் கரைத்தாற்போலும் என்பது சாமானியவழகத்.

73. யானுமற் றிவ்விருநத வெம்முனு மாயக்கால்
வீரஞ் செயகிடநத தில்லென்று கூடிப்
படைமாறு கொள்ளப பகைதூண்ட லஃதே
யிடைநாயிற் கெண்ணெய் மாறு.

எ-து, யானும இவ்விடததிருநத வெண்முன்னேனுமாக வொரு வினைசெய்யதொடங்கியக்காற் பகைவரால வீரஞ்செயக்கிடந்த தொன்றுமில்லையென்றுசொலலிப் பிறநந் தமமோடுகூடிப் படைத் தொழிலின்கண் மாறுகொளநும்வகை பகையைவிகசசொலலுதலாகிய வது ஆடுகாத்துக்கிடகரும் இடையர்நாய்களுக் களவர் எலுமபிடுமாறு போலு மென்றவாறு.

(தெளிப்பு) இது வலிமிகபகைவரை அடிததகெடுக்குமாறும், வஞ்சத் தீஞ்சொற்சொல்வாரை நம்பலாகாதென்பது மொருங்குகூறுகிறது. 'யானும்' என்றது பிறபகைவாசெருகையடகவல்ல யானுமென்றபடி. இது கெடுப்பான் கூற்றாய் அவன் தன்னையுணராதகியவாறு. 'இவ்விடத்திருந்த' என்றது கெடுக்கப்படுவானை அவன்பகைவரும பிறருமறியுமாறு கெடுப்பான்சுட்டிக்காட்டியவாறு. 'என்முன்னேனுமாக' என்றது கெடுக்கப்படுவான் கெடுப்பானுயெதன்னைத் தம னென்று நம்பும்படி அனபுடைமையும பணிவுடைமையுந்தோன்ற உறவுமுறை கூறியவாறு. 'ஒரு வினைசெய்யத்தொடங்கியகாற் பகைவரால் வீரஞ்செயக்

* நாலடியார் 26-ம் அதிகாரம் (அறிவின்மை) செய்யுள்—7.

† பட்டினத்தார்பிரபந்தம், திருவேகம்பமாலை செய்—22.

இடந்தொன்றுமில்லை என்றது இதுகாறும் எம்மூண் மாறுபாடுடையோமாயிருந் தோமாதலாற் பிற பகைவர் செருக்குற்றிருந்தார்; இப்பொழுது ஒன்றுபட்டோமாத லால் நாங்கள்கூடிச்செய்யப்போகும் ஒருகருமத்திற் பிறர் பகைவராய்வந்து அவர் வெற்றியடையக்கிடந்ததொருசெயலுமில்லை; எல்லாவெற்றியையும் யாமேயடை வோம் என்றவாறு. 'பிறரும்' என்றது பகைவரல்லாத தொதமலாய்நின்றவரும் என்றவாறு. 'தமமொடுகூடி' என்றது பகைவராய்க் கெடுப்பாராகிநிற்குந் தமக்கு அதுகூலராய் என்றவாறு. படைதொழில்-போர். 'மாறுகொள்ளும்வகை' என்றது கெடுக்கப்படுவானைப் பிறரெல்லாம் வீரமானத்தால் விரோதிக்கும்படி என்றவாறு. பகையைமிகச்சொல்லுதலாவது பகைவர்பராய்மிகுமாறு வீரம்பேசு தல். "இடைநாயிற்கென்பிடுமாறு" எனபது பழமொழிகூறறது. அதுதுக் கெடுக்குமியல்புடையான்கூறும் இன்மொழியை அறிவுடையோர் கேட்டுழி அத னைச்சுட்டி இடைநாய்க்கிட்டவெலும்பிது எனவழங்கும வழக்கே இப்பழமொழி எனகொளக. 'கள்ள ரெலும்பிடுமாறுபோலும்' எனறது களளர் என்பிட்டு வஞ்சிக்குமுபாயம்போலும் உபாயமென்றவாறு. அதாவது:---ஆதிருடுங்கள்ளர், ஆட்டுக்கிடைகாத்திருக்கும் நாய தம்மை ஐயுற்றுக குரையாதிருகுமவண்ணம பசுஞ்றசைபறறிய எனபுதுதுணடதறதைச சிறிது சேயமைகண்வைத்திருந்து, மோப்பங்கொண்டு அந்நாய் தமமருகுவருவதுகணடு, அவ்வெனபுதுண்டதறதை அதன்முன்பிட அதனை அநநாய் உவந்துகௌவிகெனவிச சுவைதது மகிழ்நது கள்வரைத் தமராகக்கருதி ஆட்டுக்கிடைப்பாதுகாப்பிற் பராக்காயிருகுமனவிற் கள்வர் தம்மினத்தாரையேவி ஆடுமுதலியவற்றைத திருடிச்செலலசெய்வது போலக் கெடுப்பாரும, கெடுக்கப்படுவர்கேட்டுத் தமமைத தமரென்ற நம்பியுவக குங் களிபபாற் பாதுகாப்பிற் பராகாயிருகுமாறு, "யானுமற் றிவ்விருந்த வெம் மூனு மாயக்கால், வீரஞ் செபகஙிடாதுதில்லெனறு" சொலலல்போன்ற வஞ்சத தி ராற்கூளச்சொல்லித தமமினதாரைததூண்டி அப்பகைவரது பாதுகாப் பற்ற நாடுமுதலியவற்றைக கைப்பற்றசெய்தலாம.

74. கண்ணிலை கயவர் கருதுதுணாந்து லகுமநிக
நண்ணி பவாசகு கலனுலடைய செய்பமேலெ
ணெண்ணி பிடாவ ந மென்னா புலிமுகத
துண்ணி பறிதது விடல.

எ-து, கண்ணேட்டமிலலாத கீழ்மகளகள் சுருதநின்கணவிருமபிய துணர்நது செயன்மிகுகு அவரோடு நண்புகொண்டு நன்மையாயின செய்வாராயின், ஆராய்ந்துசெய்தால் நமக் கிடர்வருமென்னுதே புலி முகத்தினுண்ணியை அருளினுமேலபறிதததேனெடாக்கும் என்றவாறு.

(குறிப்பு) இது கண்ணோட்டமில்லாதார்க்கு நன்மைசெய்யலாகாதென்கிறது. 'கண்ணோட்டமில்லாதகீழ்மக்கள்' என்றது (எது அடையானடுக்கப்பட்டமையால்) கண்ணோட்டமின்மையொன்றுனே சௌரிய வீரிய தைரிய பராக்கிரம முதலிய நற்குணங்களேயும் அதுகூலர்பகைல் தீக்குணங்களாக்கிகொள்ளுந் தீயார் என்ற குறிப்புணர்த்தியவாறு. 'கருத்தின்கண்விரும்பியதுணர்த்து' என்றது அவர்க்குச்செயயும நன்மையிற் சிறப்புதோன்றக் கூறியவாறு. கருத்தின் கண்விரும்பியதுணர்த்து நன்மையாயினசெயவாராயின் என இயையும். கருத்தினகணவிருமபியதுணர்த்துசெய்யுஞ் சிறநதநன்மைகே தீங்குபுரியும் இயல்புடையராயின் அவர் கருததுணராதுசெய்யும் நனமைக்கு மிகக தீங்குவிளேப்பரெனபது சொல்லவேண்டாதாயிற்று. ஆகவே அவாக்கு ஒருவிதத்திலும் நன்மை செய்யலாகாதென்பது குறிப்பு. 'செயன்மிகசு' என்றது தீயாரோடிணங்கலாகாதெனனும் விதியைகடைக்கு என்றவாறு. இங்கு ஒழுகுகதையுணர்த்தும் கையும செயலும விதிவாக்கியதாகசு ஆகுபெயராயின. 'அவரோடுநண்பு கொண்டு' எனறது தம்மொடுநண்பில்லாத அக்கயவரோடு தாமாய் ஒருதலே நண்புகொண்டென்றவாறு. 'செயவாராயின' என்றது செய்தல் அரிதென்னுங் குறிப்புணர்த்தியவாறு. 'ஆராய்ந்து இதுசெய்தால் நமகசு இடர்வருமென்றுதே' எனறது இதுசெயதால நமகசு இடாவருமென்று ஆராயாதே என்றபடி 'புலிமுகதது ணுணணியை' எனறது புலி தன்னைற் போகிக்கொள்ளவொணணுதபடி அதன கண்ணிமையைபபற்றி ரதபபானமபண்ணும் உண்ணியை என்றவாறு. ஈணடி முகம ஆகுபெயராயிற்று. 'அருளிஞலே' என்றது பிறிதொருபயனுங்கருதாது புலியின்றுயர்தீர்த்தலொன்றே கருதி யென்றவாறு 'பறிதததனேடொக்கும்' என்றது பறித்தபோர் ஐதிகச் செயலோடொக்கும் அசசெயலென்றவாறு அச்செயலெனற சுட்டு வருவித்துக் கூட்டியுரைதுக்கொளக 'எண்ணியிடர்வருமென்னர்' என்னும் உவமையடையைப் பொருளொடுங்கூட்டிவிரிதததுரைதுக்கொள்க."புலிமுகத் தண்ணி பறித்தலிடல்" என்பது ஒரைதிகமடியாகவந்த பழமொழிக்கூற்று. இதனேதிகமுங் கூற்றுலேவிளங்கும். இது "வேங்கை வரிப்புலிநோய் தீர்தத விடகாரி, யாங்கதனுக் காகார மாணைத்போல்"* எனப் பிறிதோராற்றுனும் வழங்கப்படும். சௌரிய வீரிய தைரிய பராக்கிரமமுதலிய குணவிசேடங்களாற்சிறந்த ஒரு புலியின்முகத்து அதனுதிரத்தை யுண்ணுதவாறு உண்ணியைப்பறித்தெடுத்து நன்மைபுரிந்தவனேக் கண்ணோட்டமின்றிக் குடரைப்பறித துதிரத்தையுண்டு உயிரைப்போகிய அப்புலிபோலச சௌர்யாதிகுணங்களுடையராயினும் நிர்த்தாக்ஷிண்யமுள்ள கயவர்கள் தமக்கு நன்மைசெய்வார்க்கும் மிக்கதீங்குசெய்வார் எனக் கருத்துநோக்கிப் பொருளொடுபொருத்தி யுரைத்துக்கொள்க.

---

* மூதுரை, செய்யுள்—15.

75. பெரியார்க்குச் செய்யுஞ் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல்—பொறிவண்டு
பூமே விசைமுரலு மூர வதுவன்றே
நாய்மேற் றவிசிடு மாறு.

எ-து, பெருமைக்குணமுடையோர்க்குச் செய்யக்கடவ சிறப்பினை விரும்பிச சிறுமைக்குண முடையார்க்குச செய்துவிடுதல, பொறிவண்டு பூமேற்படிக் திசைமுரலாநின்றவூரனே! அதுவன்றே! குதிரைமேலிடக் கடவ பண்ணினை நாய்முதுகிலிடுநெறி யென்றவாறு.

(குறிப்பு) இது தகுதியில்லாதார்க்குச்செய்யுஞ் சிறப்பின்குற்றம கூறு றைது. பெருமைக்குணங்களாவன :—கல்வி அறிவு ஒழுக்கம் குடிப்பிறப்பு வீரம் வினைத்திட்பம் சால்பு முதலியன. 'செய்யகடவசிறப்பினை' என்றது செய்யகடமைப்பட்டசிறப்புக்களை யென்றவாறு. அவை பொற்பூமுதலிய பரிசும் பட்டமும் புரவலர்தம்மோடிருக்கையு மெடுபடியு முதலாயின. 'விரும்பி' என்றது வெளியிடத்தகாதகாரணத்தால அவரைவிரும்பி என்றவாறு. சிறுமைக் குணமுடையார் - பெருமைகுணங்களின் மாறுபட்டகுற்றங்களையுடையராய்க காமகெறியொழுகுமவர். 'செய்துவிடுதல' என்றது செய்துவிட்டோமேயென்று பச்சரத்தாபமுண்டாகும்படி தவருகசெய்தல என்றவாறு. இதுவே பின்னும் அதுவென்று சுட்டப்பட்டமையால், தகாது என ஒருபயனிலைசொல்வருவித்து முடிக்கற்பாற்று. இங்ஙனம முடியாதிருப்பின் மேல் அதுவென்னுஞ்சுட்டு வேண்டாதகூறலாம். "நாய்மேற்றவிசிடுமாறு" என்பது பழமொழிக்கூற்று. தகாதார்க்குச்செய்யுஞ்சிறப்பை நாயிக்கிட்டதவிசு என வழங்கும் அடிப்பட்ட வழக்கே இதன்பழமொழியாகும். நாய்மேற்றவிசிடுமாறென்றமையால், 'குதிரை மேலிடக்கடவபண்ணினை' என மறுதலையுவமம் வருவித்துரைக்கப்பட்டது. பண் - ஏறுகுதிரைமேலிடுஞ் சேணமென்னுந்தவிசு. 'குதிரைமேலிடக்கடவ பண்ணினை நாய்முதுகிலிடுநெறி' என்றது தகாதகாரியம், பயனிலலாதசெயல், இகழப்படுஞ்செயல், அறிவில்லாதசெயல், முறையில்லாதசெயல் எனப் பலதிறத் தானும் பழித்தற்குரிய குறிப்புணர்த்தியவாறு. இப்பழமொழிக்கு மறுதலையுவமம் யானைமேலிட்டதவிசென்பதே சிறந்ததெனக்கொண்டு, "அகலிற்பெருத்தி னிட்ட, வண்ணப்பூந்தவிசுதன்னைஞமலிமேலிட்டதொக்கும்" எனச் சீவகசிந்தா மணி*யுள் வழங்கப்பட்டது. இப்பழமொழியிலுள்ள ஏழனுருபைப் பொருட்டுப் பொருளுணர்த்தற்குரிய விடயசத்தமியாகவும், மறுதலையுவமம் நாயகராகவும் கொண்டு, நாயகருக்கிட்டதவிசை நாமிக்கிட்டுத்தரித்தவைத்தவாறும் எனப் பிரி தோருரையில் வரையப்பட்டுள்ளது இக்கருத்துப்பற்றியே திருவாசகத்தில்

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், செய்யுள்—202.

இது ,இங்கு எடுத்துக்கொண்டபொருளே நாட்டுதற்குக்காட்டிய ஏது வசனமாய்நின்றது.'ஒருபொருளைக் கையாற்றொட்டாரை யொட்டாத பொருளில்லை'யென்றது அபகரித்துக்கொள்வாரை யடையாதபொரு ளொன்றுமில்லை யென்றபடி. இங்குக் கையாற்றொடுதல் அபகரித்தற் பொருளில்லவழங்கும் கைவைத்தல்என்னுங் குறிப்புமொழியின் பரியாய மாயிற்று. 'அட்டாரைப்பொருந்திப் பயன்படாத கலமுமில்லை' யென் றது பிறிதுமொழிதலாய், வினையாளர்க்குதவாத வினைக்களமுமில்லை யென்னுங் குறிப்புணரநின்றது. இது எடுத்துக்கொண்டபொரு ணிறைதற்கேதுவாய்நின்றமையால் ஆதலான் என ஏதுவசனம் வருவித் துரைக்கப்பட்டது. ஆதலாற் பரிவில்லாதாரை வையாதொழிகவெனக் கூட்டிமுடித்துக்கொள்க.

119. ஒற்கந்தா முற்ற விடத்து முயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல—வற்பத்தாற்
றண்மே னலியும் பசிபெரி தாயினும்
புன்மேயா தாகும் புலி.

எ-து. வறுமைதாமுற்றவிடத்துமுயர்ந்தவர்நின்றநிலையின்கண்வழுவாதே நிற்பர். மிகவுந்தன்மாட்டுநலியும் பசிபெரிதாயினும் புலிபுல்லினைமேயாதாகுமது போலவென்றவாறு.

(குறிப்பு) இது, தருமகர்த்தராகநியமிக்கத்தக்காரிவரென்கிறது. 'வறுமைதாமுற்றவிடத்து முயர்ந்தவர் நின்றநிலையின்கண் வழுவாதே நிற்பர்' என்றது குடிப்பிறப்பாலு மொழுக்கத்தாலு முயர்ந்தவர் தாமுணவின்றிவருந்தியகாலத்தும் அவர்,தமக்குரியபயன்கிடைத்தபோ ததனைதுகர்வதன்றித் தம்மொழுக்கங்கெடுமாறு தமக்குரியதல்லாத தொருபொருளையும் தாம் துகரவிரும்பார் என்றவாறு. நிலை-ஒழுக்கம். இதனால் அவர் செல்வமுமுடையராயிற் றமகுரியதல்லாததொரு பொருளையும் துகராரென்பது சொல்லவேண்டாதாயிற்று. இது ஏது. ஆதலாலவரே தருமகர்த்தராகநியமிக்கத்தக்கார் என்பது குறிப்பு. இது பொருள். வற்பமென்னுங்குறிப்புமொழி உணவுகிடையாமைப்பொரு ளுணரநின்றது. பின்னடியிரண்டும் பழமொழிக்கூற்று. இதன்பழ மொழி "புலிபசித்தாற்புல்லைத்தின்னுமா" எனவழங்கப்படும். இதன் பொருள் குலபரம்பரையாய்வந்தநியமத்தாற்சிறந்த புலியேறு மிக்க

பசியால் வருந்தியவிடத்தும் அது தனக்குரியதல்லாத புல்லிலத்தின்ன விரும்பாதவாறுபோல, குடிப்பிறப்பாயமைந்தகியமத்தாற் சிறந்தார் மிக்கவறுமையுற்றகாலத்தும் அவர்தமக்குரியதல்லாத பொருளைதுகர்ந் துயிர்வாழவிரும்பார் என்பதாம். இது இங்கு எடுத்துக்கொண்ட பொருளை நாட்டுதற்குக் காட்டிய ஏதுவைநாட்டும் பிரமாணவாக்கிய மாயிற்று. இங்ஙனமன்றி இப்பாட்டு உயர்ந்தவரதியல்புகூறியதெனக் கொண்டு செம்பொருளொன்றேபுணர்த்தித் திட்டாந்தமாய்நின்ற தெனினுமாம். இப்பழமொழி "இடுக்கண்டலைவந்தக்கண் ணுமரிமாக், கொடிப்புற்கறிக்குமோமற்று" என நாலடியுள்ளும்* "செங்கட்புலியே றறப்பசித்துநகின்னுவாம, பைங்கட்புனதபைங்கூழ்"* என நீதிநெறி விளக்கத்துள்ளும. "புலி புற்றின்னுதெனத்" திருக்குறளுரையுள்ளும் எடுத்தாளப்பட்டது.

120. பன்னாளு நின்ற விடத்துங் கணிவேங்கை
நன்னாளே நாடி மலர்தலான்—மன்ன
ருவப்ப வழிபட் டொழுகினுஞ் செல்வர்
தொகற்பால போழ்தே தொகும்.

எ-து, பலநாளுந்தானுளதாய்நின்றவிடத்துங் கணிகளைப்போலாளையறி விக்கும்வேங்கை தாமலரக்கடவநாளையறிந்துபூத்தலா லரசர்மனமகிழும்படி வழி பட்டொழுகினுராயினுமொருவர்க்குப்பொருள்கூடுங்காலத்தேவந்து கூடுமல்லது கூடாதென்றவாறு.

(குறிப்பு) இது, ஒருவர்செல்வமடைதற்குக் காலமும ஒத்துவர வேண்டுமெனக் காலமறிதல்கூறுகிறது. 'பலநாளுந்தானுளதாய்நின்ற விடத்தும்' என்றது பூத்தற்குமுதற்காரணமாகியதானும், காலவிசேட மொழிந்தபிறகாரணங்களும் மற்றைக்காலங்களிலெல்லாமுள்ளனவா யிருப்பினும் (கணிவேங்கைமலர்வதன்று) என்றவாறு. இது ஒரு காரியத்தோற்றத்திற்கு அதற்குரியகாலவிசேடமும் காரணமாமென வெதிரேகதிட்டாந்தங்காட்டியபடி. கணிவேங்கை-கணியாகியவேங்கை. இது வேங்கையென்னும் பலபொருளொருசொல்லின்குறிப்பொழித்து வேங்கைமரமென வெளிப்படையாக்கவந்த இருபெயரொட்டு. 'கணி கணிப்போலநாளையறிவிக்கும்' என்றது சோதிடகணிதம்வல்லாரைப்

* நாலடியார் 15-ஆம் அதிகாரம் குடிப்பிறப்பு செய். 1. நீதிநெறிவிளக்கம் செய். 61. திருக்குறள் உழ-ம் அதிகாரம் கூடாவொழுக்கம் செய். 3-ன்உரை.

போலப்பருவகாலவிசேஷத்தைத்தவறுதறிவிப்பதுஎனக்கணிஎன்னும் பெயரின்காரணவாற்றல்காட்டியதுணையாய்நின்றது. 'தேவங்கை காமலரக்கடவராகியறிந்துபூத்தலால்' என்றது வேங்கைமரம் தான் பூத்தற்கனுகூலமாகியபருவகாலவிசேடம்வாய்த்தவிடத்துத் தப்பாது தன்காரியமாகியபூத்தலியலடையுமாதலால் என்றவாறு. இது, காரிய சித்திக்குக் காலவிசேடமும் காரணமாமென்பதை அந்நுவயதிருஷ்டாந் தத்தாற்காட்டியபடி. ஈண்டுஆலுருபுஞாபகவேதுப்பொருண்மையுணர நின்றது. 'அரசர்மனமகிழும்படிவழிபட்டொழுகினராயினும்' என்றது ஒருவர்பொருள்கூட்டுதற்குப் பிறகாரணங்களாகிய தாம்செய்தொழுகும அரசன்வழிபாடும், அவ்வழிபாடுகொள்ளுமரசனும், அவனுக்கதில் விருப்பமும், அவ்விருப்பானுவந்தளிதற்கு அவன்மாட்டுப்பொருளும் மற்றைக்காலங்களிலிருப்பினும் என்றபடி. 'ஒருவர்ச்குப் பொருள் கூடுங்காலத்தேவந்துகூடுமல்லதுகூடா' தென்றது தாம்பொருளுடைய ராதற்குரியகாலவிசேடத்தாற்கிட்டுவதல்லது மற்றைக்காலத்திற் கிட்டாதென்றவாறு. பொருள்கூட்டுதற்கேற்ற காலவிசேடம்வாய்த்த விடத்துத் தவறவிடலாகாதென்பதுகுறிப்பு. இங்குக் காலவிசேட மென்றது தம் காரியசித்திக்கனுகூலமாகியசந்தர்ப்பததை யொட்டி யிருக்கும் காலமெனவுணர்க. இதன்பழமொழி செய்கிறவேலையைச் செய்துவந்தாற்கிடைக்கிறபோதுகிடைக்கும் எனச் செம்பொருளில்வழங் கும் அடிப்பட்டவழக்காயுள்ளது.

121. காடுறை வாழ்க்கைக் கடிவினை மாக்களை
நாடுறைய நல்கினு நன்கொழுகார்—நாடொறுங்
கையுள தாகி விடினுங் குறுமஞ்சூழ்க்குச்
செய்யுள தாகு மனம்.

எ-து, காடுறையும்வாழ்க்கையையுடைய கொலைத்தொழிலையுடையமக்களை நாட்டின்கணுறையவொருவர்நல்கினுங் கொலைத்தொழின்முதலானவற்றைத் தவிர்ந்துநன்றுகவொழுகமாட்டார். நாடோறுங்கையுளே மருவிவளரினுங் குறும் சூழ்க்குச் செய்யின்கண்ணேயுறையவேண்டுமெனமே யுள்ளதுபோல எ-று.

(குறிப்பு) இது, புல்லோரை நலலொழுக்கமுடையராகத்திருத்த லரிதென்கிறது. 'காடுறையும்வாழ்க்கையையுடையகொலைத்தொழி லையுடையமக்களை' என்றது நாடாகாதகாட்டிடத்தை யிருப்பிடமாகக் கொண்டு விலங்கினங்களைக்கொன்றுதின்றுயிர்வாழும் விலங்குபோலும்

எச. அன்பிற்குமார்பு மீடைமையதினிலும்
ணண்பென்னுநாடாச் சிறப்பு.

இ - ன். அன்பு ஆர்வமுடைமை ஈனும் - ஒருவனுக்குத் தொடர்புடையார்மாட்டுச் செயதவன்பு அத்தன்மையாற் பிறர்மாட்டும் விருப்பமுடைமையைத்தரும்,—அது நண்பு என்னும் நாடாச் சிறப்பு ஈனும் - அவ்விருப்பமுடைமைதான் இவற்குப் பகையும் தொதமலுமில்லையாய் யாவரும் நண்பென்றுசொல்லப்படும் அளவிறந்த சிறப்பினைத்தரும். எ - று.

உடைமை உடையனாந்தன்மை. யாவருநண்பாதல் எல்லாப் பொருளுமெயதுதற்கேதுவாகலின், அதனை நாடாச்சிறப்பெனறார்.

எஇ. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்று ரெய்துஞ் சிறப்பு. இ.

இ - ள். அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப - அன்புடையராய இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர்—வையகத்து இன்பு உற்றார் எயதும் சிறப்பு - இவ்வுலகத்து இல்வாழ்க்கைக்கணின்று இன்பதுகர்ந்து அதன்மேல் துறக்கத்துச்சென்றெயதும் பேரின்பத்தினை. எ - று.

வழக்கு .ஆகுபெயர். இல்வாழ்க்கைக்கணின்று மனைவியோடும் மக்களோடும் ஒக்கலோடுங்கூடியின்புற்றார் தாஞ்செய்த வேள்வித் தொழிலாறறேவராய ஆண்டுமின்புறுவராகலின், இன்புற்றுரெய துஞ்சிறப்பென்றார். தவத்தாற்றுன்புற்றெய்துந் துறக்கவின்பத்தினை ஈண்டுமின்புற்றெய்துதல் அன்பானனறி யில்லையென்பதாம்.

எசு. அறத்திற்கே யன்புசார் பென்ப வதியார்
மறத்திற்கு மஃதே துணை. கூ.

இ - ள். அன்பு சார்பு அறத்திற்கே என்ப அறியார் - அன்பு துணையாவது அறத்திற்கேயென்று சொல்லுவர் சிலரறியார்;—மறத்திற்கும் அஃதே துணை - ஏனமறத்திற்கும் அவ்வன்பே துணையாவது. எ — று.

ஒருவன்செய்த பகைமைபற்றி உள்ளத்து மறங்கிழ்ந்தழி அவனை ஈட்பாகக்கருதி அவன்மேலன்புசெய்ய அது நீங்குமாகலின், மறத்தை நீக்குதற்குந்துணையாமென்பார், மறத்திற்குமஃதே துணையெனறார், "தன்பத்திற் கியாரே துணையாவார்." * என்பு

* திருக்குறள், கஉகக.

ழிப்போல. * இவையைந்துபாட்டானும் அன்பினது சிறப்புக்கூறப்பட்டது. (கூ)

எஎ. என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம். எ.

இ - ள். என்பு இலதனை வெயில்போலக் காயும் - என்பில்லாத வுடம்பை வெயில்காய்ந்தாற்போலக் காயும்—அன்பு இலதனை அறம் - அன்பில்லாதவுயிரை அறக்கடவுள். எ - று.

என்பிலதென்றதனுன் உடம்பென்பதனுலும், அன்பிலதென்றதனுன் உயிரென்பதனுலும் பெற்றும். வெறுப்பின்றி எங்குமொருதன்மைத்தாகிய வெயிலின்முன் என்பில்லது தன்னியல்பாற் சென்று கெடுமாறுபோல, அத்தன்மைத்தாகிய வறத்தின்முன் அன்பில்லது தன்னியல்பாற்கெடுமென்பதாம். அதனைக்காயுமென வெயிலாற்களின்மேலேற்றினுர், அவற்றிற்கும் அவ்வியல்புண்மையின். இவ்வாறு "அல்லவை செய்தாற் கறங்கூற்றம்" † எனப் பிறருங்கூறினுர். (எ)

எஅ. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. அ.

இ - ள். அகத்து அன்பு இல்லா உயிர் வாழ்க்கை-மனத்தின்கணன்பில்லாத உயிர் இல்லறத்தோடு கூடி வாழ்தல்—வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்தற்று - வன்பாலின்கண் வற்றலாகிய மரந் தளிர்த்தாற்போலும். எ - று.

கூடாதென்பதாம். வன்பால் வன்னிலம். வற்றலென்பது பால்விளங்காவஃறிணைபடர்க்கைப்பெயர். (அ)

எகூ. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு. கூ

* "ஆதி சத்தத்தால் பூவிறகுச் சொனருன், தன்பத்திற் கியாரே தீணையாவார், மறத்தினுகு மஃதே தூணை, பிணிக்குமருந்து எனவற்றின்கட் பறித்தல் நீக்குதலென நடுவே பெய்து பொருளுரைத்துத் தழுவித்தமென்பதுங்கொள்க." என்னுர் பிரயோகவிவேகனுலார். காரகபடலத்து "உடனிகழ்கின்ற" என்னும் பதினுருஞ் சேயபுருரையிற்காண்க.

† நான்மணிக்கடிகை,—கல்லா வொருவற்குத் தன்வாயிற் சொற்றற்ற—மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய்கூற்ற—மல்லவை செய்தாற் கறங்கூற்றங் கூற்றமே—யில்லிருந்து நீங்கொழுகுவான்.

இ – ள். யாக்கையகத்த உறுபபு அன்பு இலவர்க்கு – யாக்கை யகத்தின்கணின்று இல்லறத்திற்குறுப்பாகிய அன்புடையரல்லா தார்க்கு—புறத்த உறுப்பெல்லாம் எவன் செய்யும் – ஈனப்புறத் தின்கணின்று உறுப்பாவனவெல்லாம் அவ்வறஞ்செய்தற்கண் என்னவுதவியைச் செய்யும்! எ – று.

புறத்தறுப்பாவன இடனும், பொருளும், ஏவல்செய்வாருமு தலாயின. தீணெறொடி கூடாதவழி அவற்றுற்பயனின்மையின், எவன்செய்யுமென்றார். உறுப்புப்போறலின், உறுப்பெனப்பட் டன. யாக்கையிற் கண்முதலிய உறுப்புக்களெல்லாம் என்ன பயனைச் செய்யும் மனத்தின்கணுறுப்பாகிய அன்பிலாதார்க்கென் றுரைப்பாருமுளர். அதற்கு இல்லறத்தோடு யாதுமியையில்லா மையறிக. (கூ)

அ0. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க் கென்புதோல் போர்த்த வுடம்பு. க0.

இ – ள். அன்பின் வழியது உயிர்நிலை – அன்புமுதலாக அதன் வழிநின்ற உடம்பே உயிர்நின்றவுடம்பாவது;—அஃது இலார்க்கு உடம்பு என்பு தோல்போர்த்த – அவ்வன்பில்லாதார்க்கு உளவான உடம்புகள் என்பினைத் தோலாற்போர்த்தனவாம், உயிர்நின்றன வாகா. எ – று.

இல்லறம் பயவாமையின், அன்னவாயின. இவைநான்குபாட் டானும் அன்பில்வழிப்படுங் குற்றங்கூறப்பட்டது. (க0)

கூ ம் அதி.—விருந்தோம்பல்.

அஃதாவது இருவகை விருந்தினரையும் * புறந்தருதல். தென்புலத்தார் முதலியவைம்புலத்துள் முன்னியவிரண்டும் கட்பு லஞ்காதாரை நினைந்து செய்வனவாகலானும், பின்னியவிரண்டும் பிறர்க்கீதலன்மையானும், இடைநின்ற விருந்தோம்பல் சிறப்பு டைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று. வேறுகாத அன்புடையி ருவர்கூடியல்லது செய்யப்படாமையின், இஃது அன்புடைமை யின்பின் வைக்கப்பட்டது.

அக. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு. க.

* இருவகைவிருந்தினர். சங—ம் குறளுரையிறகாண்க.

இ - ன். இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம் - மனைவி யோடும் வணக்கிற்செல்லாத இல்லின்கணிருந்து பொருள்களைப் போற்றிவாழுஞ் செய்கையெல்லாம்—விருந்து ஓம்பிவேளாண்மை செய்தற்பொருட்டு - விருந்தினரைப்பேணி அவர்க்குபகாரஞ் செய தற்பொருட்டு. எ - று.

எனவே, வேளாண்மைசெய்யாவழி இல்லின்கணிருத்தலும் பொருள்செய்தலும் காரணமாக வருந்தன்பச்செய்கைகட்கெல் லாம் பயனில்லையென்பதாம். (அ)

அஉ. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. உ.

இ - ன். சாவா மருந்து எனினும் - உண்ணப்படும் பொருள் அமிர்தமேயெனினும்,—விருந்து புறத்ததாத் தான் உண்டல் - தன்னேநோக்கி வந்த விருந்து தன்னில்லின்புறத்ததாகத் தானே உண்டல்—வேண்டற்பாற்று அன்று - விரும்புதன் முறைமையு டைத்தன்று. எ - று.

சாவாமருந்து சாவாமைக்குக் காரணமாகிய மருந்து. விருந் தின்றியே ஒருகாற்றானுண்டலிற் சாவாமருந்தென்பார் உளராயி னும் அதனினுந்தழிதலென்றாரப்பிறழ்மையும். இவையிரண்டி பாட்டானும் விருந்தோம்பலின் சிறப்புக்கூறப்பட்டது. (உ)

அஊ. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. ஊ.

இ - ன். வரு விருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை - தன் னேநோக்கி வந்தவிருந்தை நாடோறும் புறந்தருவானில்வாழ் க்கை—பருவந்து பாழ்படுதல் இன்று - கற்ருவான் வருந்திக் கெடுதலில்லை. எ - று.

நாடோறும் விருந்தோம்புவானுக்கு அதனுற்பொருடோகு யாத மேன்மேற்பெருகுமென்பதாம். (ஈ)

அஎ. அனைமாண்ட செப்பா ருறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில். எ

இ - ன். செப்பாள் அகன் அமர்ந்த உறையும் - திருமகள் மனமிழ்ந்த வாழாதிருக்கும்—முகன் அமர்ந்த நல்விருந்து ஓம்பு வான் இல் - முகமினியதாய்த் தன்விருந்தினரைப் பேணுவான தில்லின்கண். எ - று.

மனமெழுந்தற்குக் காரணம் தன்செல்வம் நல்வழிப்படுதல். தருதி ஞானவொழுக்கங்களாதியாதல். பொருள் இனைத்தற்குக் காரணம் கூறியவாறு. (ச)

அடி. விருத்த மிடல்வேண்டும் கொல்லோவிருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம். இ.

இ – ள். விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம் - முன்னே விருந்தினரை மிசைவித்துப் பின் மிச்சிலைத் தான் மிசைவானது வினைபுலத்திற்குரிய வித்தம இடல் வேண்டுமோ - வித்திடுதலும் வேண்டுமோ, வேண்டா. எ – து.

கொல்லென்பது அசைநிலை. தான் வினையுமென்பது குறிப்பெச்சம். இவையிரண்டிற்பயப்பட்டதும் விருந்தோம்புவார் இம்மைக்கண் வைதலும் பயன் கூறப்பட்டது. (இ)

அடி. செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான் வில்லிருந்து வானந் தவம். கூ.

இ – ள். செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்து இருப்பான் - தன்கட்சென்றவிருந்தைப் பேணிப் பின் செல்லக்கடவ விருந்தைப் பார்த்துத் தான் அதனோடு உண்ணவிருப்பான்— வானத்தவர்க்கு வில்லிருந்து - மதப்பற்பிற்றேவரும் வாழுமுள் ளார்க்கு வில்லிருந்தம். எ – து.

வருவிருந்தென்பது இடவழுவமைதி. வில்லிருந்து வைதலி ருந்து. இதனுள் மறைக்கலென்பதம்பயன் கூறப்பட்டது. (க)

அடி. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின் துணைத்துணை வேள்விப் பயன். எ.

இ – ள். வேள்விப் பயன் இனைத்துணைத்து என்பது ஒன்று இல்லை - திருந்தோம்பலையிய வேள்வியின்பயன் இன்னளவிற் றென்பதோரளவுடைத்தன்று;—விருந்தின் துணைத் துணை - அந் தரு அவ்விருந்தின்றருதியளவே அளவு. எ – து.

ஐம்பெருவேள்வியி * னென்புழியின் வேள்வியென்றும், பொருளாவது "தன்னிற் தாழ்ந்த தக்கார்க்கப் பட்டக்கால்—

* ஐம்பெருவேள்வியாவன பிரமயாகம், தேவயாகம், மானுட யாகம், பிதிர்யாகம், பூதயாகமெனவிவை. அவற்றுள், பிரமயாகம் வேதமோதல்; தேவயாகம் தீமல்வளர்த்தல்; மானுடயாகம் விருந்தோம்பல்; பிதிர்யாகம் நீர்க்கடனாற்றல்; பூதயாகம் பலியீதல்.

வான்றிதாப் போர்த்த விடும்" * ஆகலின், இனைத்தினைத்தென் பதொன்றிலையென்றல் கருதினர். இதனுள் இருமையும் பயத்தற் குக் காரணம் கூறப்பட்டது. (எ)

அஅ. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி வேள்வி தலைப்படா தார். அ.

இ – ள். பரிந்து ஓம்பிப் பற்று அற்றேம் என்பர் - நிலையாப் பொருளை வருந்திக்காத்துப் பின் அதனையிழந்த இதுபொழுது யாம் பற்றற்கோடிலமாயினே மென்றிரங்குவர்—விருந்து ஓம்பி வேள்வி தலைப்படாதார் - அப்பொருளான் விருந்தினரையோம்பி வேள்விப் பயனையெய்தும் பொறியிலாதார். எ – று.

ஈட்டிய வொண்பொருளைக்—காத்தலு மாங்கே கடிந்துண் பம்" † ஆகலின், பரிந்தோம்பியென்றார். வேள்வி ஆருபெயர்.(அ)

அக. இடைமையு வின்மை விருந்தோம்ப லோம்பா மடமை மடவார்க ணுண்டு. கூ.

இ – ள். உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா மட மை - உடைமைக்காலத்தின்மையாவது விருந்தோம்பலியலாமை பேதைமை:—மடவார்கண் உண்டு - அஃது அறிந்தார்மாட்டு உள தாகாது, பேதையார்மாட்டேயுளதாம். எ – று.

உடைமை பொருளுடையனாந்தன்மை. பொருளாற்கொள் ளும்பயனே யிழப்பித்து உடைமையை இன்மையாக்கலின், மடமை யை இன்மையாகவுபசரித்தார். பேதைமையான் விருந்தோம்பு மியலிற் பொருள் நின்றவழியும் அதனும்பயனில்லையென்பதாம். இவையிரண்டுபோட்டானும் விருந்தோம்பாவழிப் படுக்குற்றங் கூறப்பட்டது. (க)

கூ0. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து. க0.

---

* காலடியார், அறன்வலியுறுத்தல்,—உறக்குர் தினையதோ ராலம்வித் தின்டி—பிறப்ப நிழற்பயற் தாஅய் - கறப்பயனுங்— தான்றிதி தாயினுந் தக்கார்மகப் பட்டக்கால்—வான்றிதாப் போர்த்த விடும்.

† காலடியார், ஈயாமை,—ஈட்டலுந் தன்பமற் றீட்டிய வொண் பொருளைக்—காத்தலு மாங்கே கடிந்துண்பல்—காத்தல்-குறைபடிற் றன்பங் கெடிற்றன்பந் தன்பத்-குறைபதி மற்றைப் பொருள்.

இ – ள். அனிச்சம் மோப்பக் குழையும் - அனிச்சப்பூ மோந் தழியன்றிக்குழையாது;—விருந்து முகம் நிரிந்த வேக்கக் குழை யும் - விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர். எ – று.

அனிச்சம் ஓருபெயர். சேய்மைக்கட்கண்டுழி இன்முகமும், அதுபற்றி ணண்ணியவீழி இன்சொல்லும், அதுபற்றி உடன்பட்ட வழி ணன்னூற்றலுமென விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாய இன்முகம் இல்வழிச் செய்மைக்கண்ணே வாடிநீங்குதலின், நீண்டியவழியல்லது வாடாத அனிச்சப்பூவி னும் விருந்தினர் மெல்லியரென்பதாம். இதனுன் விருந்தோம்பு வார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டுமென்பது கூறப்பட்டது.()

கo ம் அதி.—இனியவைகூறல்.

அஃதாவது மனத்தின்கணுவகையை வெளிப்படுப்பனவாகிய இனியசொற்களைச் சொல்லுதல். இதனும், விருந்தோம்புவார்க்கு இன்றியமையாதாகலின், விருந்தோம்பலின்பின் வைக்கப்பட்டது.

கூக. இன்சொலா லீர மளிஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். க.

இ – ள். இன்சொல்-இன்சொலாவன—ஈரம் அளிஇப் பழுது இலவாம் செம்பொருளை கண்டார் வாய்ச் சொல் - அன்போடு கல ந்த வஞ்சனையிலவாயிருக்கின்ற அறந்தினை உணர்ந்தார்வாயிற் சொற்கள். எ – று.

ஈரம் அசைநிலை. அன்போடு கலத்தல் அன்புடைமையை வெ ளிப்படுத்தல். படிறின்மை வாய்மை. மெய்யுணர்ந்தார் நெஞ்சிற் கெல்லாஞ் செம்மையுடைத்தாய்த்தோன்றலின், செம்பொருளை னப்பட்டது. இலவாஞ்சொல்லெனவியையும். வாயென வேண் டாதுகூறினர், தீயசொற்பயிலாவென்ப தறிவித்தற்கு. இதனுன் இன்சொற்கிலக்கணம் கூறப்பட்டது. (க)

கூஉ. அனைமர்ந் நீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னுகப் பெறின். உ.

இ – ள். அகன் அமர்ந்து ஈதலின் நன்று - நெஞ்சுவந்து ஒரு வற்கு வேண்டியதொருபொருளைக்கொடுத்தலினும் நன்று-முகன் அமர்ந்து இன்சொலனுகப் பெறின் - கண்டபொழுதே முகமினிய னுய் அதனோடு இனியசொல்லையுமுடையனுகப் பெறின். எ – று.

இன்முகத்தோடுகூடிய இன்சொல் ஈதல்போலப் பொருள்வ
த்தருதித் தன்வயத்ததாயினும், அறநெஞ்சுடையார்க்கல்லது
பல்பாகவின்மையின், அதனினுமரிதென்னும் கருத்தான், இன்
சொலினுகப் பெறினென்னுர். (உ)

கூஉ. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தாரு
மின்சொ லினதே யறம். கூ.

இ – ள். முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி - கண்டபொ
ழுதே முகத்தான் விரும்பி இனிதாக நோக்கி—அகத்தான் ஆ
கின்சொலினதே அறம் - பின் கண்ணியவழி மனத்துடனிய
வினிடசொற்களைச் சொல்லுதலின்கண்ணதே அறம். எ – று.

நோக்கியென்னும் வினையெச்சம் இன்சொலென அடைய
டுத்துநின்ற முதனிலைத்தொழிற்பெயர்கொண்டது. ஈதலின்கண்
ணதன்றென்றவாறு. இவையிரண்டுபோட்டாலும் இன்முகத்தோடு
கூடியவின்சொல் முன்னரே பிணித்தக்கோடலின் விருந்தோம்பு
தற்கட் சிறந்ததென்பது கூறப்பட்டது. (கூ)

கூசு. துன்புறூஉந் துவ்வாமை யில்லாரும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு. சு.

இ – ள். யார்மாட்டும் இன்பு உறூஉம் இன்சொலவர்க்கு -
எல்லார்மாட்டும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல்லையுடையார்
க்கு—துன்பு உறூஉம் துவ்வாமை இல்லாரும் - துன்பத்தை மிகு
வித்தும் நல்குரவு இல்லையாம். எ – று.

காமுறுதலிய பொறிகள் சுவை முதலிய புலன்களை நுகராமை
யுடைமையின், துவ்வாமையென்னுர். யார்மாட்டுமின்புறூஉமின்
சொலவர்க்குப் பகையும் சொறுமையுமின்றி உள்ளது கண்டேயாம்
ஆகலே, அவர் எல்லாச்செல்வமுமெய்துவரென்பது கருத்து. (சு)

கூடி. பணிவுடைய னின்சொல னாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற. டி.

இ – ள். ஒருவற்கு அணி பணிவு உடையன் இன்சொலனு
தல் – ஒருவனுக்கணியாவது தன்னுற்றுழப்படுவார்கட்டாழ்ச்சியு
டையனும் எல்லார்கண்ணும் இனியசொல்லையுமுடையனுதல்;—
பிற அல்ல - இவையிரண்டுமன்றி மெய்க்கணியும் பிறவணிகள்
அணியாகா. எ – று.

இன்சொலுறுதற்கினமாகலின், பணிவுடைமையும் உடன்கூறினார். மற்று அதைக்கிவே. வேற்றுமையுடைமையாற் பிறவெனவும், இவை போலப் பேரழுருசெய்யாமையின் அல்லவெனவுங் கூறினார். இவையிரண்டுபோட்டானும் இனியவை கூறுவார்க்கு இம்மை பயன் கூறப்பட்டது. (இ)

கூஎ. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின். ஈ.

இ - ள். நல்லவை நாடி இனிய சொலின் - பொருளாற் பிறர்க்கு நன்மை பயக்குஞ்சொற்களே மனத்தானுராய்ந்து இனியவாக ஒருவன்சொல்லுமாயின்—தீயவை தேய அறம் பெருகும் - அவனுக்குப் பாவங்கடேய அறம் வளரும். எ - று.

தேய்தல் தன்பகையாகிய அறம் வளர்தலிற் தனக்கு நிலையின்றிமெலிதல். "தவத்தினமுன் னில்லாதாம் பாவம்." * என்பதனுலும் இப்பொருட்டு. நல்லவை நாடிச் சொல்லுங்காறும் கடியவாகச்சொல்லின், அறனுகாதென்பதாம். இதனுல மறுமைப்பயன் கூறப்பட்டது. (ஈ)

கூஎ. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல். எ.

இ - ள். நயன் ஈன்று நன்றி பயக்கும் - ஒருவனுக்கு இம்மைக்கு நிலையுமுண்டாக்கி மறுமைக்கு அநத்தையும் பயக்கும்—பயன் ஈன்று பண்பின் தலைப்பிரியாச் சொல்-பொருளாற் பிறர்க்கு நன்மையைக் கொடுத்து இன்மைப்பண்பினீங்காத சொல். எ - று.

நீதி உலகத்தோடு பொருந்துதல். பண்பென்பது ஈண்டிரண்டாந்தான் இன்மைமேனின்றது. தலைப்பிரிதல் ஒருசொன்னீர்மைத்து.

கூஅ. சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மின்மையு மின்பந் தரும். அ.

இ - ள். சிறுமையுள் நீங்கிய இன்சொல் - பொருளாற் பிறர்க்கு கோய்செய்யாத இனியசொல்—மறுமையும் இம்மையும் இன்பம் தரும் - ஒருவனுக்கு இருமையினும் இன்பத்தைப் பயக்கும். ஈ - று.

---

* காலடியார், அறவு—வினைக்குப் புகலிருள் மாய்த்தான் கொருவன்—தவத்தின்முன் னில்லாதாம் பாவம்- வினைக்குமெய்—தேய்விடத்துச் சென்றிருள் பாய்த்தாங்கு நல்வினை—நிலவிடத்து நீர்மைசார் நீத.

மதுமையின்பம் பெரிதாகலின், முற்கூறப்பட்டது. இம்மை யின்பமாவது உலகம் தன்வயத்ததாகலான் நல்லனவெய்தி இன்பு றுதல். இவையிரண்டுபாட்டானும் இருமைப்பயனும் ஒருங்கெய்து தல் வலியுறுத்தப்பட்டது. (அ)

கூகூ. இன்சொ லினிதின்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. கூ.

இ – ள். இன்சொல் இனிது ஈன்றல் காண்பான்-பிறர் கூறிய இன்சொற்றன்மையின்பம் பயத்தலே அநுபவித்தறிகின்றவன்—வன் சொல் வழங்குவது எவன்கொல் - அது நிற்கப் பிறர்மாட்டு வன் சொல்லைச் சொல்லுவது என்னபயன கருதி! எ - று.

இனிதென்றது நினைக்குறிப்புப்பெயர். கடுஞ்சொற் பிறர்க்கு மின்னாதாகலின், அது கூறலாகாதென்பது கருத்து. (க)

கஂ0. இனிய வுளவாக மின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. கஂ0.

இ – ள். இனிய உளவாக இன்னாத கூறல் - அரம் படக்கும் இனியசொற்களும் தனக்குளவாயிருக்க அவற்றைக் கூறாது பாவம் படக்கும் இன்னாதசொற்களை ஒருவன் கூறுதல்—வலி இருப்பக் காய் கவர்ந்தற்று - இனிய கனிகளும் தன்கைக்கணுளவாயிருக்க அவற்றை தகாத இன்னாத காய்களை தகர்ந்ததற்றொடக் கும். எ – று.

'கூறலென்பதனுற் சொற்களென்பது பெற்றும். பொருளை விசேடித்து நின்ற பண்புகள் உவமைக்கண்ணுஞ்சென்றன. இனிய கனிகளென்றது நுளைவுண்ட செல்லிக்கனி * போல அமிழ்தா வனவற்றை. இன்னாதகாய்களென்றது காஞ்சொங்காய்போல நஞ் சாவனவற்றை. கடுஞ்சொற்சொல்லுதல் முடிவிற்றனக்தேயின்னு தென்பதாம். இவையிரண்டுபாட்டானும் இன்னாதகூறலின் குற் றம் கூறப்பட்டது. (கo)

---

* தெருளாதுற்றப்படை, மனையரைச்—செழுஞ்சாற் கனிய செல்லி—பயிற்றுவரின் நிற்கனி யெளவைக் கீத்த—வரும்பிற் னின் வளை மொலிக்கும் கெடுவே—லாவக்கடம் முனை யதிகனும்

. புறநானூறு, கக, தொண்டியப்—பெருமிண விடைதந் தருள லரச் சொன்ற—நிறையிலை செல்லித் நிற்கனி முதியர—தாத னின் னைத் தடக்கை—சாத லிக்க வெமக்கீத் தனையே.

கக ம் அதி.—செய்ந்நன்றியறிதல்.

அஃதாவது தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை. இனிடவை கூறி இல்லறம் வழுவாதார்க்கு உய்தியில் குற்றம் செய்
ந்நன்றி கோறலேயாகலின், அதனைப் பாதுகாத்தற் கடிதற்பொரு
ட்டு, இஃதினியவைகூறலின்பின் வைக்கப்பட்டது.

கஅக. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. க.

இ – ள். செயாமல் செ த உதவிக்கு - தனக்கு முன்னேரு
தவிசெய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செ தவுதவிக்கு—வைய
கமும் வானகமும் ஆறறல் அரிது - மண்ணுலகும் விண்ணுலகுங்
கைம்மாறுகக் கொடுத்தாலும ஒத்தலரிது. எ – று.

எம்மாறுகளெல்லாம் காரணமுடையவாகலின், காரணமில்
லாத உதவிக்கு ஆறருவாயின. செய ரமைச் செ தவுதவிடென்று
பாடமோதி, மதித்துதவமாட்டாமையுள்ளவிடத்துச் செ தவுதவி
டென்றுரைபபாருமுளர். (க)

கஅஉ. காலத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலதினி மாணப் பெரிது. உ.

இ – ள். காலத்தினுல் செ த நன்றி - ஒருவனுக்கு இறுதிவர்த
வெல்லுக்கண் ஒருவன் செ தவுபகாரம்—சிறிது எனினும் ஞாலத்
தின் மாணப் பெரிது - தன்னே நோக்கச் சிறிதாயிருந்தாயினும்
அக்காலத்தை நோக்க நிலவுலகத்தினும மிகப்பெரிது. எ – று.

அக்காலநோக்குவதல்லது பொருணோக்கலாகாதென்பதாம.
காலத்தினுலெனபது|வேறதுமை மடக்கம். (உ)

கஅஊ. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது. ஊ.

இ – ள். பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் - இவ
ர்க்கு இது செய்தால் இன்னது பயக்கு மென்று ஆராய்தலிலராய்ச்
செ தவுதவியாயிய ஈரமுடைமையை ஆராயின்,—நன்மை கடலிற்
பெரிது - அதனன்மை கடலினும் பெரிதாம். எ – று.

இவை மூன்றுபாட்டானும் மூறையே காரணமின்றிச் செ த
தூஉம், காலத்தினுற் செ ததூஉம், பயன்தூக்காராய்ச் செ த
தூஉம் அளவிலவாதல் கூறப்பட்டது. (ஊ)

கoச. தினைத்துணை நன்றி செயினும்பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். ச.

இ – ள். தினைத்துணை நன்றி செயினும்-தமக்குத் தினையளவி
ற்றாய உபகாரத்தை ஒருவன் செய்தாலுயினும்,—பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார் - அதனை அவ்வளவிற்றாகக் கருதாது
பனையளவிற்றாகக் கருதுவர் அக்கருத்தின் பயன்தெரிவார். எ – று.

தினை பனையென்பன சிறுமைபெருமைகட்குக் காட்டுவன
செவ்வனலவ. அக்கருததின் பயனுவது அந்நனங் கருதுவார்க்கு
வரும் பயன. (ச)

கoரு. உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. ரு.

இ – ள். உதவி உதவிவரைத்து அன்று - கைம்மாறுனவுதவி
காரணத்தானும் பொருளானுங் காலத்தானுமாகிய மூவகையானும்
மூன்செய்த உதவியளவிற்றன்று;—உதவி செயப்பட்டார் சால்
பின் வரைத்து - அதனைச் செவ்வித்தக்கொண்டவர்தம் அமைதி
யளவிற்று. எ – று.

சால்பு எவ்வளவுபெரிதாயிற்று உதவியும் அவ்வளவு பெரிதா
மென்பார், சால்பின் வரைத்தென்றார் இவையிரண்டுபாட்டானும்
மூன்று மல்லாத வுதவிமாத்திரமும் அறிவார்க்குச் செய்தவழிப்
பெரிதாமென்பது கூறப்பட்டது. (ரு)

கoஙு. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு. சு.

இ – ள். துன்பத்துள் துப்பு ஆயசர் நட்புத் துறவற்க - துன்
பக்காலத்துத் தனச்சுப் பற்றுக்கோடாயினாரது நட்பை விடா
தொழிக;—மாசு அற்றார் கேண்மை மறவற்க - அறிவொழுக்கங்க
ளிற் குற்றமற்றாரது கேண்மையை மறவாதொழிக. எ – று.

கேண்மை கேளாந்தன்மை. இம்மைக்குதவுவார் மறுமை
க்குறுதியும் உடன்கூறினார். (சு)

கoஎ. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தக்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. எ.

இ – ள். தக்கண் விழுமம் துடைத்தவர் நட்பு - தக்கனெய்
ய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை—எழுமை எழுபிறப்

பும் உள்ளுவர் - எழுமையினையுடைய தம்மெழுவகைப்பிறப்பினும் நினைப்பர் நல்லோர். எ – று.

(எழுமையென்றது விணைப்பயன்றொடரும் எழுபிறப்பினை; அது வினையாபதியுட்கண்டது. எழுவகைப்பிறப்பு மேலேயுரைத்தாம். விழைவுதோன்றத் துடைத்தவரென்றார். நினைத்தலாவது துன்பந்துடைத்தலான் அவர்மாட்டுளதாகிய அன்பு பிறப்புத்தோறுந் தொடர்ந்து அன்புடையராதல். இவை இரண்டுபாட்டானும் நன்றி செய்தாரது நட்பு விடலாகாதென்பது கூறப்பட்டது. (எ)

கo அ. நின்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. அ.

இ – ள். நன்றி மறப்பது நன்று அன்று - ஒருவன் முன்செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறனன்று,—நன்றல்லது அன்றே மறப்பது நன்று - அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறப்பது அறன். எ – று.

இரண்டும் ஒருவனுற்செயயப்பட்ட வழி மறப்பதும் மறவாததும் வருத்தக் கூறியவாறு. (அ)

கo கூ. கொன்றன்ன தின்ஞ செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும். கூ.

இ – ள். கொன்று அன்ன இன்ஞ செயினும் - தமக்கு முன்னொருவன் தீமையைச்செய்தவர் பின்கொன்றாலொத்த இன்ஞதவற்றைச் செய்தாராயினும்,—அவர் செய்த நன்று ஒன்று உள்ளக் கெடும் - உலகவெல்லாம் அவர்செய்த நன்மையொன்றினையும் நினைக்க இலவாம். எ – று.

[நினைத்தலினை பனைத்தலினையாகக் கொள்ளப்படுதலின், அவ்வொன்றுமே அவற்றையெல்லாங் தெடுக்குமென்பதாம். இதனுன் நன்றல்லது அன்றே மறக்குநிறங் கூறப்பட்டது. (கூ)

கக o. எழ்ன்றி கொன்ஞர்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. கo.

இ – ள். எழ்ன்றி கொன்ஞர்க்கும் உய்வு உண்டாம் - பெரியவறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தினின்றும் வாயிலுண்டாம்;—செய நன்றி கொன்ற மகற்கு உய்வு இல்லை - ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கு அஃதில்லை. எ – று.

பெரியவரைத்தலைத்தலாவது ஆன்முலையறுத்தலும், மகளிர்கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த்தபுதலும் முதலிய பாதகங்களைச் செயதல். * இதனைப் செய்நன்றிகோறலின் கொடுமை கூறப்பட்டது. (கo)

கஉ ம் அதி.—நடுவுநிலைமை.

அஃதாவது பகை தொதுமல் நண்பென்னும் மூன்றுபகுதியினும் அறத்தினவழுவாது ஒப்ப நிறகு நிலைமை. இது, நன்றிசெயதார் மாட்டு அநன்றியினை நிணைத்தவழிச் சிதையுமன்றே அவ்விடத்துஞ் சிதையலாகாதென்றற்கு, செயநன்றியறிதலின்பின் வைகப்பட்டது.

கக்க. தருதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின். க.

இ – ள். தருதி என ஒன்றே நன்று - நடுவுநிலைமையென்று சொல்லப்படும் ஒரதருமமே நன்று,—பகுதியான் பாற்பட்டு ஒழுகப் பெறின் - பகை தொதல் நண்பென்னும பகுதிதோறும் தனமுறைமையை விடாதொழுகப்பெறின். எ – று.

தருதியுடையானைத் தருதியென்றார். "ஊராளுநர் தேவருலம்" என்பது போலப் பகுதியானென்பழி ஞூறுபு தோதுமென்பதன்பொருட்டாய் நின்றது. பெறினென்பது அவ்வொழுக்கந் தருமமதோனற நின்றது. இதனான் நடுவுநிலைமையது சிறப்புக் கூறப்பட்டது. (க)

ககஉ. செப்ப முடையவ னக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமப் புடைத்து. உ.

இ – ள். செப்பம் உடையவன் ஆக்கம் - நடுவுநிலைமையையுடையவனது செல்வம்—சிதைவு இன்றி எச்சத்திற்கு ஏமப்பு ஊடைத்து - பிறர்செல்வம்போல் அழிவினறி அவன் வழியினுளாரார்க்கும் வலியாதலையுடைத்து. எ – று.

* புறநானூறு, ஙச - ஆன்முலை யறுத்த வரனி லோர்க்கு—மானிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கு—குரவர்த் தப்பிய கொலைமேயோர்க்கும்—வருவாய் மருங்கிற் கழுவாயு மூனவே—நிலம் புடை பெயர்வ தாயினுமொருவன்—செய்தி கொன்றூர்க் குயதியில்லென்—றறம்பாடின்றே யாயிழை கணவ. கழுவாய - பிராயச்சித்தம்.

விகாரத்தாற்றொக்க எச்சவும்மையான் இறக்குஞ் துணையும் அவன்றனக்கும் ஏமாப்புடைத்தென்பது பெற்றும். ஏறத்தோடு வருதலின், அண்ணதாயிற்று. தானிறந்தழி எஞ்சிநிற்பதாகலின், எச்சமென்றார். (உ)

ககஈ. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
அன்றே யொழிய விடல். ஈ.

இ – ள். நன்றே தரினும் - நீங்கன்றி நன்மையே பயந்ததாயினும்,—நடுவு இகந்த ஆம ஆக்கத்தை அன்றே ஒழிய விடல் - நடுவு நிற்றலையொழிதலான் உண்டாகின்ற ஆக்கத்தை அப்பொழுதே யொழியவிடுக. எ – று.

நன்மை பயவாமையின், நன்றே தரினு மென்றார். இகத்தலானென்பது இகந்தெனத் திரிந்துநின்றது. இவையிரண்டுபாட்டானும் முறையே நடுவுநிலைமையான் வருத செல்வம் நன்மை பயத்தலும், ஏனைச்செல்வம் நீமை பயத்தலுங் கூறபபட்டன. (ஈ)

ககச. தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சக்காற் காணப் படும். ச.

இ – ள். தக்கார் தகவிலர் என்பது-இவர் நடுவுநிலைமையுடையர் இவர் நடுவுநிலைமையிலரென்னும் விசேடம்—அவரவர் எச்சத்தால் காணப்படும்—அவரவருடைய ன்மக்களது உண்மையானும் இன்மையானும் அறியப்படும். எ – று.

தக்கார்க்கெச்சமுண்டாதலும் தகவிலார்க்கில்லையாதலும் ஒருதலையாகலின், இருதிறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின. இதனால் தக்காரையுந் தகவிலாரையும் அறியுமாறு கூறபபட்டது.

ககஉ. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. உ.

இ – ள். கேடும் பெருக்கமும் இல் அல்ல - நீவினையாற்கேடும் நல்வினையாற்பெருக்கமும் யாவர்க்கும் முன்னே அமைந்து விடுதல;—நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி - அவ்வாறறையறிந்து அவை காரணமாக மனத்தின்கட்கோடாமையே அறிவானஞ்சான்றார்க்கு அழகாவது. எ – று.

அவை காரணமாகக் கோடுதலாவது அவை இப்பொழுது வருவனவாகக் கருதிக் கேடுவாராமையைக்குறித்தும் பெருக்கம் வருத

க்குறித்தும் ஒருதலைக்கணிற்றல், அவற்றிற்குக் காரணம் பழவி
ரயே, கோடுதலன்று என உண்மையுணர்ந்து நடுவுநிற்றல் சால்
ஹ யழருசெய்தலின், சான்றோர்க்கணியென்றார். (இ)

ககக. கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின். கூ.

இ – ள். தன் நெஞ்சம் நடுவு ஒரீஇ அல்ல செயின் - ஒருவன்
ன்னெஞ்சம் நடுவுநிற்றலேயொழிந்து நடுவல்லவற்றைச் செய்ய
ஹனக்குமாயின்,—யான் கெடுவல் என்பது அறிக - அந்நிலைவ
ான் கெடக்கடவேனென்றுணரும் உற்பாதமாக அறிக. எ – று.

நினைத்தலும் செய்தலோடொச்சுமாகலின், செயினென்றார்.()

ககஎ. கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு. எ.

இ – ள். நடுவாக நன்றிக்கண் தங்கியான் தாழ்வு - நடுவாக
ன்று அறத்தின்கண்ணே தங்கினவனது வறுமையை—கெடுவாக
வையாது உலகம் - வறுமையென்று கருதார் உயர்ந்தோர். எ – று.

கெடுவென்பது முதனிலைத்தொழிற்பெயர். செல்வமென்று
கொள்ளுவரென்பதனுக்குறிப்பெச்சம். இவை மூன்றுபாட்டானும்,
றையே கேடும்பெருக்கமுங் கோடுதலான் வாராவென்பதூஉம்,
கோடுதல் கேட்டிற்கேதுவாமென்பதூஉம், கோடாதவன்றாழ்வு
கெடன்றென்பதூஉம், கூறப்பட்டன. (எ)

ககஅ. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொ
கோடாமை சான்றோர்க் கணி. அ. [ருபாற்

இ – ள். சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் - மூன்னே
ான் சமனுகநின்று பின் தன்கண் வைத்த பாரத்தை வலையுறக்
நர் தலாம்போல—அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு
ணி - இலக்கணங்களானமைந்து ஒருபக்கத்துக் கோடாமை
சான்றோர்க்கு அழகாம். எ – று.

உவமையடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் பொருட்
ண்ணும், பொருளடையாகிய அமைதலும் ஒருபாற்கோடாமை
பும் உவமைக்கண்ணும், கூட்டி, சான்றோர் சீர்தூக்கலாவது தடை
விடை * களாற் கேட்டவற்றை ஊழான் † உள்ளவாறுணர்தலாக

* தடை - ஆக்ஷேபம். விடை - சமாதானம் † ஊழ் - முறைமை.

வும், ஒருபாற்கோடாமையாவது அல்வுள்ளவாற்றை மறையாத பான்மை சொல்லும்வி கட்பென்னும் மூன்றநிறத்தார்க்கும் ஒப்பக்கூற லாலவும், உரைக்க. இலக்கணங்களாலமைதல் இருவழியும் ஏற்பனகொள்க. (அ)

கசக. சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா வுட்கோட்ட மின்மை பெறின். கூ.

இ – ள். செப்பம் சொற்கோட்டம் இல்லது - நடுவுநிலைமை யாவது சொல்லின்கட்கோடுதலில்லாததாம்,—உட்கோட்டம் இன் மை ஒருதலையாப் பெறின் - அஃதன்னதாவது மனத்தின்கட்கோ ட்டமின்மையைத் திண்ணிதாகப் பெறின். எ – று.

சொல் ஊழான் அறத்தச் சொல்லுஞ்சொல். காரணம்பற்றி ஒருபாற்கோடாதமனத்தோடு கூடுமாயின், அறங்கிடந்தவாறு சொ ல்லுதல் நடுவுநிலைமையாமெனவே, அதனோடு கூடாதாயின் அவ் வாறு சொல்லுதல் நடுவுநிலைமையன்றென்பது பெறப்பட்டது. ()

கஉ0. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவுந் தமபோற் செயின். க0.

இ – ள். பிறவும் தமபோல் பேணிச் செயின் - பிறர்பொரு ளுந் தம்பொருள்போலப் பேணிச் செய்யின்,—வாணிகம் செய்வார் க்கு வாணிகம்-வாணிகஞ்செய்வார்க்கு கன்முய வாணிகமாம்.எ-று.

பிறவுந்தமபோற்செய்தலாவது கொள்வது மிகையும் கொடுப் பது குறையுமாகாமல் ஒப்பநாடிச் செய்தல். இப்பாட்டி மூன்ற னுள், முன்னையிரண்டும் அலையத்தாரை நோக்கின, வேறைய வாணிகரை நோக்கிற்று, அவ்விருநிறத்தார்க்கும் இவ்வறம் வேறு கச் சிறந்தமையின். (க0)

கஉம் அதி.—அடக்கமுடைமை.

அஃதாவது மெய், மொழி, மனங்கள் தொறிக்கட்செல்லாத அடங்குதலுடையதாதல். அஃது எவ்வார்க்குந்தம்போற்றன்னும் முன்காணும் நடுவுநிலைமையுடையார்காதலின், இது நடுவுநிலை மின்பின் வைக்கப்பட்டது.

கஉக. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை யாரிரு ளுய்த்து விடும். க.

இ - ள். அடக்கம் அமரருள் உய்க்கும் - ஒருவனை அடக்கமாகியவதம் பின்றேவருலகத்துய்க்கும்;—அடங்காமை ஓர் இருள் உய்த்துவிடும் - அடங்காமையாகியபாவம் தன்குதற்கரிய இருளின் கட்செலுத்தும். எ - று.

இருளென்பது ஓர்நரகவிடேடம். "எல்லாம் - பொருளிற் பிறந்து விடும்" * என்றுற்போல உய்த்துவிடுமென்பது ஒருசொல்லாய் நின்றது. (க)

கஉ. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூங் கில்லை யுயிர்க்கு. உ.

இ - ள். உயிர்க்கு அதனின் ஊங்கு ஆக்கம் இல்லை - உயிர்கட்கு அடக்கத்தின்மிக்க செல்வமில்லை;—அடக்கத்தைப் பொருளாக் காக்க - ஆகலான் அவ்வடக்கத்தை உறுதிப்பொருளாகக கொண்டு அழியாமற்காக்க. எ - று.

உயிரென்பது சாநியொருமை. அஃது ஈண்டு மக்களுயிர்மேனிறத்து, அதிற்தடங்கிபபயனகொள்வது அதுவேயாகலின். (உ)

கஉக. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின். ஈ.

இ - ள். அறிவு அறிந்து ஆற்றின் அடங்கப்பெறின் - அடங்குதலே ஈமக்கு அறிவாவதென்றறிந்து நெறியானே ஒருவன் அடங்கபபெறின்;—செறிவு அறிந்து சீர்மை பயக்கும் - அவ்வடக்கம் நல்லோரானறியப்பட்டு அவனுக்குவிழுப்பத்தைக் கொடுக்கும். எ-று.

இல்வாழ்வானுக்கு அடங்குநெறியாவது மெயம்முதன் மூன்றும் தன்வயத்தவாதல். (ஈ)

கஉச. நிலையிற் றிரியா தடங்கியொன் றேற்ற
மலையினு மாணப் பெரிது. ச.

இ - ள். நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் - இல்வாழ்க்கையாகிய தன்னெறியின் வேறுபடாது நின்று அடங்கினனது உயர்ச்சி—மலையினும்மாணப்பெரிது - மலையினுயர்ச்சியினுமிகப்பெரிது. எ - று.

---

* சான்றாண்மைக்கடிகை, எ.—கல்லிற் பிறக்கும் கதிர்மணி கல்லிற் பிறக்கு மூயர்மத - மெல்லவருளிற் பிறக்கு மருளெல்லாம்—பொருளிற் பிறக்கு மிடும்.

நிரியாதடங்குதல் பொறிகளாற் புலன்களே நுகராநின்றே டங்குதல்.| மலே ஆருபெயர். (ச)

கூடுநி. எல்லார்க்கு நன்றும் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. நி.

இ - ள். பணிதல் எல்லார்க்கும் நன்றும் - பெருமிதமின்றியடங்குதல் எல்லார்க்கும் ஒப்ப நன்றேயெனினும்;—அவருள்ளும் செல்வர்க்கே செல்வந்தகைத்து - அவ்வெல்லாருள்ளுஞ் செல்வமுடையார்க்கே வேறொருசெல்வமாஞ்சிறப்பினையுடைத்து. எ - று.

பெருமிதத்தினைச்செய்யுங் கல்வியுங் குடிப்பிறப்புமுடையார் அஃதின்றி அவை தம்மானேயடங்கியவழி அவ்வடக்கஞ் சிறந்து காட்டாதாகலின், செல்வர்க்கே செல்வந்தகைத்தென்றார், செல்வத்தகைத்தென்பது மெலிந்துநின்றது. பொதுவென்பாரையுமுடம்பட்டுச் சிறப்பாதல் கூறியவாறு. இவையைந்துபாட்டானும் பொதுவகையான் அடக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது. (நி)

கூடுசு. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து. சு.

இ - ள். ஆமைபோல் ஒருமையுள் ஐந்து அடக்கல் ஆற்றின் — ஆமைபோல ஒருவன் ஒருபிறப்பின்கண் ஐம்பொறிகளேயுமடக்கவல்லனாயின்,—எழுமையும் ஏமாப்பு உடைத்து - அவ்வன்மை அவனுக்கு எழுபிறபபின்கண்ணும் அரணுதலையுடைத்து. எ - று.

ஆமை ஐந்துறுபபினையும் இடர்புகுதாமல் அடக்குமாறு போல இவனும் ஐம்பொறிகளையும் பாவம்புகுதாமலடக்கவேண்டுமென்பார், ஆமைபோலென்றார். | ஒருமைக்கட்செயதலினையின் பயன் எழுமையுநதொடருமென்பது இதனுனறிக. இதனுன் மெய்யடக்கங்கூறப்பட்டது. (சு)

கூடுஎ. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. எ.

இ - ள். யா காவாராயினும் நா காக்க - தம்மாற் காக்கப்படுவனவெல்லாவற்றையுங் காக்கமாட்டாராயினும் நாவொன்றினையுங் காக்க;—காவாக்கால் சொல்லிழுக்குப்பட்டுச்சோகாப்பர்-அதனைக் காவாராயிற்சொற்குற்றத்தின்கட்பட்டுத்தாமே துன்புறுவர். எ-று.

யாவென்பது அஃறிணைப்பன்மைவினுப்பெயர். அஃது ஈண்டு எஞ்சாமையுணர்நின்றது. | முற்றும்மை விகாரத்தாற்றொக்கது.

சொற்குற்றம் சொல்லின்கட்டோன்றுங்குற்றம்.[1]அல்லாப்பர் செம் மாப்பர் என்பனபோலச் சோகாப்பரென்பது ஒருசொல். (எ)

கஉஅ. ஒன்ருனுந் தீச்சொற்பொருட்பயனுண்டாயி
னன்ருகா தாகி விடும். அ.

இ – ள். தீச்சொற்பொருட்பயன் ஒன்ருனும் உண்டாயின் – தீயவாகிய சொற்களின் பொருள்களாற் பிறர்க்கு வருந்துன்ப மொன்ருயினும் ஒருவன்பக்க லுண்டாவதாயின்,—நன்று ஆகா தாகிவிடும் – அவனுக்குப பிறவறங்களானுண்டான நன்மை தீதா யவிடும். எ – று.

தீயசொல்லாவன தீங்குபயக்கும் பொய், குறளை, கடுஞ்சொ ல்லென்பன. ஒருவன் நல்லவாகச்சொல்லுஞ் சொறகளின்கண் ணே ஒன்ருயினுந தீச்சொறபடும் பொருளினது பயன் பிறர்க்கு ண்டாவதாயினென்றுரைபபாருமுளர். (அ)

கஉசூ. தீயினுற் சுட்டபு ணுள்ளாறு மாருதே
நாவினுற் சுட்ட வடு. சூ.

இ – ள். தீயினுல் சுட்ட புண் உள் ஆறும் – ஒருவனையொரு வன் றீயினுறசுட்டபுண் மெயக்கட்கிடப்பினும் மனத்தின்கண் அடபொழுதேயாறும்,—நாவினுல் சுட்டவடு ஆருது – அவ்வாற ன்றி வெவ்வுரையுடையநாவினுற சுட்டவடு அதன்கண்ணும் எஞ் ஞான்றுமாருது. எ – று.

ஆதிப்போதலால் தீயினுற்சுட்டதனைப் புண்ணென்றும், ஆரு துகிடத்தலால் நாவினுற்சுட்டதனை வடுவென்றுங்கூறினர். தீயும் வெவ்வுரையுஞ் சுடுதற்றொழிலான் ஒக்குமாயினும், ஆறுமையாற் றீயினும் வெவ்வுரைகொடிதென்பது போதரலின், இதனுற்பா ன்வர்த்த வேற்றுமையலங்காரம். இவைமூன்றுபாட்டானும் மொழி யடக்கங்கூறப்பட்டது. (கூ)

கஉ0. கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து. க0.

இ – ள். கதம் காத்துக் கற்று அடங்கல் ஆற்றுவான் செவ்வி– மனத்தின்கண் வெகுளிதோன்றுமற் காத்துக் கல்வியுடையரு யடங்குதலே வல்லவனது செவ்வியை—அறம் பார்க்கும் ஆற்றின் னுழைந்து – அறக்கடவுள் பாராநிற்கும் அவனையடையும் நெறியி ன்கட் சென்று. எ – று.

அடங்குதல் மனம் புறத்துப் பரவாது அறத்தின்கண்ணே நிற்றல். செவ்வி தன்குறைகூறுதற்கேற்ற மன மொழி முகங்கள் இனியனாங் காலம். இப்பெற்றியானே அறந் தானே சென்றடையு மென்பதாம். இதனான் மனவடக்கங் கூறப்பட்டது. (௫0)

கசம் அதி.—ஒழுக்கமுடைமை.

அஃதாவது தத்தம் வருணத்திற்கும் நிலைக்குமோதப்பட்ட ஒழுக்கத்தினையுடையராதல். இது, மெயம்முதலிய அடங்கினார்க் கல்லது முடியாதாகலின், அடக்கமுடைமையின்பின் வைக்கப பட்டது.

கஙக. ஒழுக்கம்விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும். க.

இ - ள். ஒழுக்கம் விழுப்பம் தரலான் - ஒழுக்கம் எல்லார்க் குஞ் சிறப்பினைத் தருதலான்,—ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் — அவ்வொழுக்கம் உயிரினும் பாதுகாக்கப்படும். எ - று.

உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் ஒபப விழுப்பந்தருதலின், பொதுப்படக்கூறினார். ஈட்டு வருவிக்கப்பட்டது. அதனால் அங் ஙனம் விழுப்பந்தருவதாயது ஒழுக்கமென்பது பெற்றாம். உயிர் எல்லாப்பொருளினுஞ் சிறந்ததாயினும் ஒழுக்கம்போல விழுப்பந் தராமையின், உயிரினுமோம்பப்படுமென்றார். (ச)

கஙஉ. பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை. உ.

இ – ள். ஒழுக்கம் ஒம்பிப் பரிந்து காக்க - ஒழுக்கத்தினை ஒன் றினும் அழிவுபடாமற்பேணி வருந்தியுங்காக்க;—தெரிந்து ஓம்பித் தேரினும் துணை அஃதே - அறங்கள் பலவற்றையுமாராய்ந்து இவ ற்றுள் இருமைக்குந்துணையாவது யாதென்று மனத்தையொருக் இத் தேர்ந்தாலும் துணையாய முடிவது அவ்வொழுக்கமேயாக லான். எ - று.

பரிந்தமென்னுமும்மை விகாரத்தாற்றொக்கது. இவையிரண் டுபோட்டானும் ஒழுக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது. (உ)

கஙங. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும். ங.

இ - ள். ஒழுக்கமுடைமை குடிமை - எல்லார்க்கும் தத்தம் வருணத்திற்கேற்ற ஒழுக்கமுடைமை குலனுடைமையாம்,—இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும் - அவ்வொழுக்கத்திற்றவறுதல் அவ் வருணத்திற் றுழ்ந்த வருணமாய்விடும். எ - று.

பிறந்த வருணத்துள் இழிந்தகுலத்தாராயினும் ஒழுக்கமுடையராக உயர்குலத்தராவராகலின குடிமையாமென்றும், உயர்ந்தவருணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்திற்றவறத் தாழ்ந்த வருணத்தராவராகலின் இழிந்த பிறப்பாய் விடுமென்றுங் கூறினர். உள்வழிப்படுங் குணத்தினும் இல்வழிப்படுங்குறறம் பெரிதென்ற வாறு. பயன் இடையீடின்றி யெய்துதலின், அவ்விரைவு பற்றி அவ்வேதுவாகிய வினைகளே பயனுகவோதப்பட்டன. (சு)

கஙச. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். சு.

இ - ள். ஒத்து மறப்பினும் கொளலாகும் - கற்ற வேதத்தினை மறந்தாஞயினும் அவ்வருணங்கெடாமையிற் பின்னும் அஃதோதிக் கொளலாம்;—பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும் - அந்தணனது உயர்ந்தவருணம் தன்னொழுக்கங்குன்றக் கெடும். எ - று.

மறந்தவழி இழிகுலத்தனுமாகலின், மறக்கலாகாதென்னுங் கருத்தான், மறப்பினுமென்ரு. பிறப்புடைவருணத்திற்கு மொழிந்தமையின, இஃது ஏனைய வருணங்கட்குங் கொள்ளப்படும். (சு)

கஙஞ. அழுக்கா றுடையான்க ணொக்கம்போன் றில்லை யொழுக்க மிலான்க ணுயர்வு. ஞி.

இ - ள். அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று - அழுக்காறுடையான்மாட்டு ஆக்கமில்லாதாற்போல—ஒழுக்கம் இலான்கண் உயர்வு இல்லை - ஒழுக்கமில்லாதவன்மாட்டும் உயர்ச்சி யில்லை. எ - று.

உவமையான் ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சி யில்லையென்பது பெற்றும்; என்னை? "கொடுப்பதழுக்கறுப்பான் சுற்ற" * மும் நல்கூர்தலின். உயர்வு உயர்குலமாதல். (ஞி)

கஙட. ஒழுக்கத்தி னெல்கா ருரவோ ரிழுக்கத்தி னேதம் படுபாக் கறிந்து. சு.

* திருக்குறள், கசுசு.

இ - ள். ஒழுக்கத்தின்[1] ஒல்கார் உரவோர் - செய்தற்கரூமை நோக்கி ஒழுக்கத்திற் சருங்கார் மனவலியுடையார்,—இழுக்கத்தின் எதம் படுபாக்கு அறிந்து ; அவ்விழுக்கத்தால் தமக்கிழிகுல மாகிய குற்றமுண்டாமாற்றை அறிந்து. எ - று.

ஒழுக்கத்திறசருக்கம் அதனை யுடையார்மேலேற்றப்பட்டது. கொண்ட விரதம் விடாமைபற்றி, உரவோரென்றார். (கூ)

கஉ. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி னெய்துவ ரெய்தாப் பழி. எ.

இ - ள். ஒழுக்கத்தின் மேன்மை எயதுவர் - எல்லாரும் ஒழுக்கத்தானே மேம்பாட்டையெயதுவா,—இழுக்கத்தின் எயதாப் பழி எயதுவர் - அதனினீன்றிழுக்குதலானே தாம் எய்துதற்குரித்தல்லாத பழியையெயதுவா. எ - று.

பசைபற்றி அடாப்பழி கூறியவழி அதனையும் இழுக்கம்பற்றி உலகம் அடுக்குமென்று கொள்ளுமாகலின், எய்தாப்பழி யெயதுவ ரென்றார். இவையைந்துபாட்டானும் ஒழுக்கம் உள்வழிப்படுங் குணமும் இல்வழிப்படுங் குற்றமுங் கூறப்பட்டன. (எ)

கஉஅ நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க மென்று மிடும்பை தரும். அ.

இ - ள். நல்லொழுக்கம் நன்றிக்கு வித்தாகும் - ஒருவனுச்கு நல்லவொழுக்கம் அறத்திற்குங் காரணமாய இருமையினும் இன்பம் பயக்கும்;—தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் - தீய வொழுக்கம் பாவத்திற்குக் காரணமாய இருமையினுந துன்பம பயக்கும். எ - று.

நன்றிக்கு வித்தாகுமென்றதனால் தீயொழுக்கம் பாவத்திற் குக் காரணமாதலும், இடும்பைதருமென்றதனால் நல்லொழுக்கம் இன்பந்தருதலும் பெற்றும், ஒன்றுநின்றே வேனையதை முடிக்குமா கலின். இதனாற் பின்னிலவு கூறப்பட்டது. (அ)

கஉக. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய வழுக்கியும் வாயாற் சொலல். கூ.

இ - ள். வழுக்கியும் தீய வாயால் சொலல் - மறந்துந் தீய சொற்களைத் தம்வாயாற் சொல்லுந் தொழில்கள்—ஒழுக்கமுடைய வர்க்கு ஒல்லா - ஒழுக்கமுடையவர்க்கு முடியா. எ - று.

தியசொற்களாலன பிறர்க்குத் தீங்கு பயக்கும் பொய்ம்முத லியனவும் வருணத்திற்கு உரியவல்லனவுமரம். அவற்றது பன்மை யாற் சொல்லுதற்குரிழில் பலவாயின. சொல் சாதியொருமை. சொல்லெனவே அமைந்திருக்க வாயாலென வேண்டாது கூறினார், நல்லசொற்கள் பயின்றதெனத் தாம் வேண்டியதன்சிறப்பு முடித்தற்கு. இதனை வடநூலார் தாற்பரியமென்ப. (க)

**கசo. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லா ரறிவிலா தார். கo.**

இ—ள். உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார் - உலகத்தோடு பொருந்த வொழுகுதலைக் கல்லாதார்,—பல கற்றும் அறிவிலா தார் - பலநூல்களையுங் கற்றாராயினும், அறிவிலாதார். எ - று.

உலகத்தோடு பொருந்தவொழுகுதலாவது உயர்ந்தோர் பல ரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல். அறநூல்சொல்லியவற்றுள் இக் காலத்திற்கு ஏலாதனவொழிந்து சொல்லாதனவறறுள் ஏற்பன கொண்டு வருதலான அவையுமடங்க; உலகத்தோடொட்டவென் றும், கல்விக்குப் பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமுமா கலின் அவ்வொழுகுதலைக் கல்லாதார் பலகற்றுமறிவிலாதரென் றுங் கூறினார். ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல். இவையிர ண்டுபாட்டானும் சொல்லானுஞ் செயலானும் வருமொழுக்கங்க ளெல்லாம் ஒருவாற்றாற் றொகுத்துக் கூறப்பட்டன. (கo)

கடி ம் அதி.—பிறனில்விழையாமை.

அஃதாவது காம மயக்கத்தாற் பிறனுடைய இல்லாளை விரு ம்பாமை. இஃது, ஒழுக்க முடையார் மாட்டே நிகழ்வதாகலின், ஒழுக்கமுடைமையின்பின் வைக்கப்பட்டது.

**கசக. பிறன்பொருளாட்பெட்டொழுகும்பேதைமைஞா
ஞாலம்பொருள் கண்டார்க ணில். [லத்**

இ - ள். பிறன் பொருளாட் பெட்டு ஒழுகும் பேதைமை — பிறனுக்குப் பொருளாந் தன்மையையுடையாளைக் காதலித்தொழு குகின்ற அறியாமை—ஞாலத்து அறம் பொருள் கண்டார்கண் இல் - ஞாலத்தின்கண் அறநூலையும் பொருணூலையும் ஆராய்ந்தறி ந்தார்மாட்டில்லை. எ - று.

பிறன்பொருள் பிறனுடைமை. அறம் பொருளென்பன ஆகு பெயர். செவ்வெண்ணின்முறைமை தொக்குநின்றது. இன்பமொன்றையே நோக்கும் இன்பதானுடையார் இத்தீயொழுக்கத்தையும் பரகியமென்று * கூறுவராகலின், அறம் பொருள் கண்டார்கணில்லென்றார்; எனவே, அப்பேதைமையுடையார்மாட்டு அறமும் பொருளும் இல்லையெனபது பெறப்பட்டது. (ச)

கசஉ. அறன்கடை நின்றாரு லெல்லாம் பிறன்கடை நின்றாரிற் பேதையா ரில். உ.

இ - ள். அறன்கடை நின்றாருள் எல்லாம் - காமங் காரணமாகப் பாவத்தின்கண் நின்றாரெல்லாருள்ளும்—பிறன்கடை நின்றாரின் பேதையார் இல் - பிறனில்லாளைக் காதலித்து அவன் வாயிற கட்சென்று நின்றார்போலப் பேதையாரில்லை. எ - று.

அறத்தினீக்கப்பட்டமையின், அறன் கடையென்றார். அறன் கடை நின்றபெண்வழிச் செல்வாரும் வரைவின்மகளிரோடும் இழிகுலமகளிரோடுங் கூடி இன்பதுகர்வாரும்போல அறமும் பொருளும் இழத்தலேயன்றிப், பிறன்கடை நின்றார் அச்சத்தால் தாங கருதிய இன்பமும் இழக்கின்றாராகலின், பேதையாரில்லென்றார்; எனவே, இன்பமுமில்லையெனபது பெறப்பட்டது. (உ)

கசஊ. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற் றீமை புரிந்தொழுகு வார். ஊ.

இ - ள். மன்ற தெளிந்தார் இல் தீமை புரிந்து ஒழுகுவார் தம்மை ஐயுறாதாரில்லாள்கணணே பாவஞ்செயதலே விரும்பியொழுகுவார்,—விளிந்தாரின் வேறு அல்லர் - உயிருடையரேனும், இறந்தாரேயாவர்.

அறம் பொருளின்பங்களாகிய டயன் உயிரெய்தாமையின், விளிந்தாரின் வேறல்லரென்றும், அவர் தீமை புரிந்தொழுகுவது இல்லுடையவரது தெளிவுபற்றியாகலின் தெளிந்தாரில்லென்றுங் கூறினார். (ரு)

கசச. எணைத்துணைய ராயினு மென்னுந் தினைத்துணையுந் தேரான் பிறனில் புகல். ச.

இ - ள். எணைத்துணையராயினும் என்னும் - எத்துணைபெருமையுடையராயினும் ஒருவர்க்கு யாதாய முடியும்—தினைத்துணை

* பரகியம் — பிறற்குரியது.

பும் தேரான் பிறன் இல் புகல்-காமமயக்கத்தால் தினையளவுந் தம் பிழையையோராது பிறனுடைய இல்லின்கட்புகுதல்! எ - று.

*இந்திரன்போல எல்லாப்பெருமையுமிழந்து சிறுமையெய்தல் நோக்கி, என்னுமென்றார். "என்னீ ரறியாதீர் போல விவைகூறி— னின்னீர வல்ல நெடுந்தகாய" * என்புழிப்போல உயர்த்தற்கட் பன்மை யொருமை மயங்கிற்று. தேரான்பிறனென்பதனைத் தம மை ஐயுறுத பிறனென்றுரைபபாருமுளர்.* (சு)

கசடு. எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும் விளியாது நிற்கும் பழி. ஙி.

இ – ள். எளிது என இல்இறப்பான் - எய்துதலெளிதென்று கருதிப் பின்வினைவு கருதாது பிறனில்லின்கணிறப்பான்—விளி யாது எஞ்ஞான்றும் நிறகும் பழி யெயதும் - மாயதலின்றி எஞ் ஞான்றும் நிலைநிற்குங் குடிபபழியினையெயதும். எ – று.

இல்லின்கணிறத்தல் இல்லாள்கண் நெறிகடந்து சேறல். (ஙி)

கசஙு. பகைபாவ மச்சம் பழியென நான்கு மிகவாவா மில்லிறப்பான் கண். ஙு.

இ – ள். இல் இறப்பான்கண் - பிறனில்லாள்கண் நெறிகட நது செல்வானிடத்து—பகை பாவம் அச்சம் பழி என நான்கும் இகவாவாம் - பகையும் பாவமும் அச்சமுங் குடிபபழியுமென்னும் இந்நான்கு குற்றமும் ஒருகாலும் நீங்காவாம். எ – று.

எனவே, இருமையுமிழத்தல் பெற்றும். இவையாறுபாட்டா னும் பிறனில்விழைவான்கட் குறறங் கூறபபட்டது. (சு)

கசஞ. அறனியலானில்வாழ்வானென்பான் பிறனியலாள் பெண்மை நயவா தவன். எ

இ – ள். அறனியலான் இல்வாழ்வான் என்பான் - அறனுகிய இயல்போடுகூடி இல்வாழ்வானென்று சொல்லபபடுவான்—பிறன் இயலாள் பெண்மை நயவாதவன் - பிறனுக்குரிமை பூண்டு அவனு டைய இயல்பின்கண்ணே நிற்பாளது பெண்டன்மையை விரும்பா தவன். எ – று.

ஆறுபு ஈண்டு உடனிகழ்ச்சிக்கண் வந்தது. இல்லறஞ் செய வானெனப்படுவான் அவனே யென்பதாம். (எ)

* கலித்தொகை, பாலைக்கலி, ஙி-ம் பாட்டு.

**கசஅ. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றே வான்ற வொழுக்கு. அ.**

இ – ள். பிறன் மனை நோக்காத பேர் ஆண்மை – பிறன்மனையாகிய உட்கொள்ளாத பெரிய ஆண்டகைமை—சான்றோர்க்கு அறன் ஒன்றே ஆன்ற ஒழுக்கு – சால்புடையார்க்கு அறனுமாம் நிரம்பியவொழுக்கமுமாம். எ – று.

புறப்பகைகளை அடக்கும் ஆண்மையுடையார்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குதற்கருமையின், அதனையடக்கிய ஆண்மையைப் பேராண்மையென்றார். ஒன்றேயென்பது எண்ணிடைச்சொல். செய்தற்கரிய அறனும் ஒழுக்கமும் இதனைச் செய்யாமையே பயக்குமென்பதாம். (அ)

**கசகூ. நலக்குரியார் யாரெனி னுமீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார். கூ.**

இ – ள். நாம நீர் வைப்பின் – அச்சந் தருங் கடலாற் சூழப்பட்ட உலகத்து—நலக்கு உரியார் யார் எனின – எல்லாரன்மைகளும் எய்துதற்குரியார் யாவரெனின்,—பிறற்கு உரியாள் தோள் தோயாதார் – பிறனொருவனுக்கு உரிமையாகியாளுடைய தோளைச் சேராதார். எ – று.

அகலம், ஆழம், பொருளுடைமை முதலியவற்றுள் அளவிடப்படாமையின், நாம நீரென்றார். நலத்திற்கென்பது நலக்கெனக் குறைந்து நின்றது. உரிச்சொல் ஈறு திரிந்து நின்றது. * இருமையினும் நன்மையெய்துவரென்பதாம். (கூ)

**கரி0. அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று. க0.**

இ – ள். அறன் வரையான் அல்ல செயினும் – ஒருவன் அறத்தைத் தனக்குரித்தாகச் செய்யாத பாவங்களைச் செய்யுமாயினும்,—பிறன்வரையாள் பெண்மை நயவாமை நன்று – அவனுக்குப் பிறனெல்லைக்கணிற்பாளது பெண்மையை விரும்பாமையுண்டாயின், அது நன்று. எ – று.

இக்குணமே மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். இவைநான்குபாட்டானும் பிறனில் விழையாதான்கட் குணங் கூறப்பட்டது.

---

* நாம் என்றது நாம எனத் திரிந்து நின்றது.

க்ஷமம் அதி.—பொறையுடைமை.

அஃதாவது காரணம் பற்றியாதல் மடமையானுதல் ஒருவன் தமக்கு மிகை செய்தவழித் தாமும் அதனை அவன்கட்செய்யாது பொறுத்தலையுடையராதல். தெறியினீங்கிய செய்தாரையும் பொறுக்கவேண்டுமென்றற்கு, இது பிறனில்விழையாமையின்பின் வைக்கப்பட்டது.

**கறிக. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை. க.**

இ – ள். அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல - தன்னையகழ்வாரை வீழாமற்றாங்கு நிலம்போல—தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை - தம்மை அவமதிப்பாரைப் பொறுத்தல் தலையாய வறம். எ – று.

இகழ்தல் மிகையாயின செய்தலும், சொல்லுதலும். (க)

**கறிஉ. பொறுத்த றிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று. உ.**

இ – ள். என்றும் இறப்பினைப் பொறுத்தல் - பொறை நன்றாகலால், தாமொறுத்தற்கு இயன்ற காலத்தும் பிறர் செய்த மிகையைப் பொறுக்க,—அதனை மறத்தல் அதனினும் நன்று - அதனை உட்கொள்ளாது அப்பொழுதே மறத்தல் பெறின், அப்பொறையினும் நன்று. எ – று.

மிகையென்றது மேற்சொல்லிய இரண்டனையும். பொறுக்குங்காலும் உட்கொள்ளப்படுதலின், மறத்தலை அதனினு நன்றெனலாயிற்று. (உ)

**கறிங. இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. ங.**

இ – ள். இன்மையுள் இன்மை விருந்து ஓரால் - ஒருவனுக்கு வறுமையுள்வைத்து வறுமையாவது விருந்தினரையேற்றுக்கொள்ளாது நீக்குதல்;—வன்மையுள் வன்மை மடவார்ப பொறை - அதுபோல வன்மையுளவைத்து வன்மையாவது அறிவின்மையான் மிகைசெயதாரைப் பொறுத்தல். எ – று.

இஃதெடுத்துக்காட்டுவமை. அறனல்லாத விருந்தொரால் பொருளுடைமையாகாதவாறுபோல, மடவார்ப்பொறையும் மென்மையாகாதே வன்மையாமென்பது கருத்து. (ங)

கருசு. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையு போற்றி யொழுகப் படும். சு. [டைமை

இ – ள். நிறையுடைமை நீங்காமை வேண்டின் - ஒருவன் சால்புடைமை தன்கணின்று நீங்காமை வேண்டுவனாயின்,—பொறையுடைமை போற்றி ஒழுகப்படும் - அவனுற் பொறையுடைமை தனகண் அழியாமற காத்தொழுகப்படும். எ – று.

பொறையுடையாற்கல்லது சால்பில்லையென்பதாயிற்று.இவை நான்குபாட்டானும் பொறையுடைமையதுசிறப்புக் கூறப்பட்டது.

கருஙு. ஒறுத்தாரை யொன்றுக வையாரே வைப்பர் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. ஙு.

இ – ள். ஒறுத்தாரை ஒன்றுக வையார் - பிறன் தமக்குத் தீங்குசெயதவழிபபொறுது அவனையொறுத்தாரை அறிவுடையார ஒருபொருளாக மனத்துகொள்ளார்,—பொறுத்தாரைப பொன் போல் பொதிந்து வைபபர் - அதனைப் பொறுத்தாரைப் பொன போற பொதிந்து கொள்வர். எ – று.

ஒறுத்தவர் தாமும் அத்தீங்கு செயதவனோடொத்தலின், ஒன்றுகவையாரென்றார். பொதிநதுவைத்தல் சால்புடைமைபற்றி இடைவிடாது நினைத்தல். (ஙு)

கருசு. ஒறுத்தார்க்கொருநாளையின்பம்பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ். சு.

இ – ள். ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பும் - தமக்குத் தீங்கு செயதவனை யொறுத்தார்க்கு உண்டாவது அவ்வொருநாளையின்ப மே;—பொறுத்தார்க்குப் பொன்றுநதுணையும் புகழ் - அதனைப் பொறுத்தார்க்கு உலகமழியுமளவும் புகழுண்டாம். எ – று.

ஒருநாளையின்பம் அந்நாளொன்றினும் கருதியது முடிந்தே மெனத தருக்கியிருக்கும் பொயயின்பம். ஆதாரமாகிய உலகம் பொன்றப புகழும் பொன்றுமாகலின், ஏறபுடையுலகென்னுஞ் சொல் வருவித்துரைக்கப்பட்டது. (சு)

கருஎ. திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந் தறனல்ல செய்யாமை நன்று. எ.

இ – ள். திறன் அல்ல தற் பிறர் செய்யினும் - செய்யத்தகாத கொடியவற்றைத் தன்கட்பிறர் செய்தாராயினும்,—நோநொந்து—

அறன் அல்ல செய்யாமை நன்று - அவர்க்கு அதனால் வருந்துன் பத்திற்கு நொந்து தான் அறனல்லாத செயல்களைச் செயயாதிருத் தல் ஒருவனுக்கு நன்று. எ - று.

உம்மை சிறப்பும்மை. துன்பத்திற்கு நோதலாவது "உம்மை-யெரிவாய நிரயத்து வீழ்வர்கொல்" * என்றுபரிதல். (எ)

கருஅ. மிகுதியான் மிக்கவை செய்காரைக் காக்கந் தகுதியான வெனறு விடல. அ.

இ - ள். மிகுதியான் மிகவை செய்தாரை - மனச்செருக்காற் றங்கட்டீயவறறைச் செயதாரை—தாம் தந்தகுதியான் வென்றுவி டல் - தாம் தம்முடைய பொறையான் வென்றுவிடுக. எ - று.

தாமும் அவர்கட்டீயவற்றைச்செயது தோல்லாது பொறை யான் அவரின் மேம்பட்டு வெல்கவென்பதாம். இவைநானகுபாட் டானும் பிறர்செயதன பொறுத்தல் சொல்லபபட்டது. (அ)

கருகூ. துறந்தாரிற் றூய்மை யுடைய நிறந்தார்வா யின்ஞச்சொ னேற்கிற் பவர். கூ.

இ — ள். துறந்தாரின் தூய்மை உடையர் - இல்வாழ்ச்சைக்க ணின்றேயும் துறநதார்போலத் தூயமையுடையார்—இறநதார் வாய இனஞச்சொல் நோறநிற்பவர் - நெறியைக்கடநதாவாயின ஆதசொல்லிப பொறுப்பவர். எ - று.

தூய்மை மனமாசின்மை. வாயென வேண்டாது கூறினார்,தீய சொற்கள் பயின்றதெனத் தாமவேண்டியதனிழிபுமுடித்தற்கு. (கூ)

கசுo. உண்ணது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு மின்ஞச்சொ னேற்பாரிற் பின். கo.

இ - ள். உண்ணது நோற்பார் பெரியர் - விரதங்களான ஊணைத்தவிர்ந்து உற்ற நோயைப் பொறுப்பார் எல்லாரினும் பெரியர்;—பிறர் சொல்லும் இன்ஞச்சொல் நோற்பாரிற் பின் - அவர் பெரியராவது தம்மைப் பிறர் சொல்லும் இன்ஞதசொல் லைப் பொறுப்பாரிற்பின். எ - று.

---

* நாலடியார்,துறவு;—தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்பதன் றிமற்—றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா - லும்மை—யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று—பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

பிறர் அறிவிலாதார். கோலாமைக்கேதுவாகிய இருவகைப்பற்றுமே நின்றே நோற்றலின், இன்னுஞ்சொலுமென்பாரிற் பின்னென்றார். இவையிரண்டுபாட்டானும் பிறர் மிகைக்கச்சொல்லியன பொறுத்தல் கூறப்பட்டது. (கo)

கள ம் அதி.—அழுக்கர்ருமை.

இதனுள் அழுக்காறென்பது ஒருசொல். அதற்குப் பொருள் * மேலேயுரைத்தாம். அச்சொற் பின்னழுக்காற்றைச் செய்யாமையென்னும் பொருள்பட எதிர்மறையாகாரமும் மகரவைகாரவிகுதியும்பெற்று அழுக்கர்ருமையென நின்றது. இப்பொருமையும் பொறைக்கு மறுதலையாகலின், இதனை விலக்குதற்கு இது பொறையுடைமையின்பின் வைக்கப்பட்டது.

**கசுக. ஒழுக்காறுக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு. க.**

இ - ள். ஒருவன் தன்னெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு - ஒருவன் தன்னெஞ்சத்தின்கண் அழுக்காறென்னுங் குற்றமில்லாத இயல்பினை—ஒழுக்காறுக் கொள்க – தனக்கோதிய ஒழுக்கநெறியாகக் கொள்க. எ - று.

இயல்பு அறிவோடுகூடிய தன்மை. அத்தன்மையும் நன்மை பயத்தலின், ஒழுக்கநெறிபோல உயிரினுமோம்புகவென்பதாம். ()

**கசுஉ. விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின். உ.**

இ – ள். யார்மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின் - யாவர்மாட்டும் அழுக்காறதினின்று நீங்குதலே ஒருவன் பெறுமாயின்,—விழுப்பேற்றின் அஃது ஒப்பது இல்லை - மற்றவன்பெறுஞ் சீரிய பேறுகளுள் அப்பேற்றினையொப்பதில்லை. எ - று.

அழுக்காறு பகைவர்மாட்டும் ஒழிதற்பாற்றென்பார், யார்மாட்டுமென்றார். அன்மை வேறுதல். இவையிரண்டுபாட்டானும் அழுக்காறின்மையது குணம் கூறப்பட்டது. (உ)

**கசுஊ. அறனுக்கம் வேண்டாதா னென்பான் பிறனுக்கம்
பேணு தழுக்கறுப் பான். ஊ.**

* திருக்குறள், ஈடு.

இ - ள். அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான் - மறுமைக்கும் இம்மைக்கும் அறமுஞ் செல்வமுமாகிய உறுப்புக்களைத் தன்க்கு வேண்டாதானென்று சொல்லப்படுவான்—பிறன் ஆக்கம் பேணாது அழுக்கறுப்பான் - பிறன் செல்வங்கண்டவழி அதற்கு உவவாது அழுக்காற்றைச் செயவான். எ - று.

அழுக்கறுத்தலெனினும், அழுக்காறெனினுமொக்கும். அழுக்காறு செயயின் தனக்கே யேதமாமென்பதாம். (சு)

கசுசு. அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி னேதம் படுபாக் கறிந்து. சு.

இ - ள். அழுக்காற்றின் அல்லவை செய்யார் - அழுக்காறு ஏதுவாக அறனல்லவறறைச் செயயார் அறிவுடையார்—இழுக்காறறின ஏதம் படுபாக்கு அறிந்து - அத்தீநெறியால் தமக்கிருமையிலுந தனபம் வருதலையறிந்து. எ – று.

அறனல்லவையாவன செல்வம் கல்வி முதலியனவுடையார் கட்டூங்கு நிணைத்தலும், சொல்லுதலும், செயதலுமாம. (சு)

கசுரு. அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார் வழுக்கியுங் கேடீன் பது. ரு.

இ – ள். ஒன்னார் வழுக்கியும் கேடு ஈன்பது - அழுக்காறு பகைவரையொழிதலுங் கேடு பயப்பதொன்றுகலின்,—அழுக்காறு உடையாாக்கு அது சாலும் - அவ்வழுக்காறுடையார்க்குப் பகைவர் வேண்டா, கேடுபயத்தற்கு அதுதானேயமையும. எ - று.

அதுவேயென்னும் பிரிநிலையேகாரம் விகாரத்தாற்றொக்கது.()

கசுசு. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற மூடுப்பதூஉ மூண்பதூஉ மின்றிக் கெடும். சு.

இ - ள். கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் - ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதன்கண் அழுக்காற்றைச்செயவானது சுற்றம்—உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும் - உடுக்கபபடுவதும் உண்ணப்படுவதுமின்றிக் கெடும். எ - று.

கொடுப்பதன்கணழுக்கறுத்தலாவது கொடுக்கப்படும் பொருள்களைப் பற்றிப் பொறுமைசெயதல். சுற்றங்கெடுமெனவே,அவன் கேடு சொல்லாமையே பெறப்பட்டது. பிறர்பேறு பொறுமை

தன்பேற்றையேயன்றித் தன்சுற்றத்தின்பேற்றையும் இழப்பிக்கு மென்பதாம். (சு)

ககூஎ. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ டவ்வையைக் காட்டி விடும். எ.

இ - ள். அழுக்காறு உடையானை - பிறராக்கங்கண்டவழிப் பொறுமையுடையானை—செயயவள அவ்வித்துத் தவ்வையைக காட்டிவிடும் – திருமகள் தானும் பொறாது தன்றவ்வைக்குக் காடடி நீங்கும். எ - று.

தவ்வை மூத்தவள். தவ்வையைக்காட்டியென்பது "அறிவு டையந்தண னவளைச்காட் டென்றனே." * எனபதுபோல உருபு மயக்கம். மனத்தைக்சோடுவித்து அழுக்காறுடையனையினனை யென்றுரைப்பாருமுளர். (எ)

ககூஅ. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத் தீயுழி யுய்த்து விடும். அ.

இ - ள். அழுச்காறு என ஒருபாவி - அழுக்காறென்றுசொ ல்லப்பட்ட ஒப்பில்லாத பாவி—திருச் செற்றுத் தீயுழி உயதது விடும - தன்னையுடையானை இம்மைக்கட்செல்வத்தைக்கெடித்து, மறுமைக்கண் நரகத்திற் செலுத்திவிடும். எ - று.

பண்பிற்குப் பண்பிலில்லையேனும், தன்னையாக்கினனை இருமை யுங்கெடுத்தற்கொடுமைபறறி, அழுக்காறறினைப, பாவியென்றார். கொடியானைப் பாவியென்னும் வழக்குண்மையின். இவையாறுபா ட்டானும் அழுக்காறுடைமையது குற்றங் கூறப்பட்டது. (அ)

ககூகூ. அவ்விய நெஞ்சத்தா னுக்கமுஞ் செவ்வியான் கேடு நினைக்கப் படும். கூ.

இ - ள். அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் - கோட்டத்தினை ப்பொருந்திய மனத்தையுடையவனதாக்கமும்,—செவ்வியான் கே டும் நினைக்கப்படும் - எனைச் செம்மையுடையவனது கேடும் உள வாயின், அவை ஆராயப்படும். எ - று.

கோட்டம் ஈண்டழுக்காறு. உளவாயினென்பது எஞ்சிநின் றது. ஆக்கக்கேடுகள் கோட்டமுஞ் செம்மையும் எதுவாச வரு தல் கூடாமையின், அறிவுடையரால் இதற்கேதுவாகிய பழவினை

* கல்லதொகை, மருதம—எ.

மாதென்றராயப்படுதலின், நினைக்கப்படுமென்றார்: "இம்மைச் செயதன யானறி நல்வினை—யும்மைப் பயன்கொ லொருதனி யுழந்தித்—திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது" * என நினைக்கப்பட்டவாறறிக. (கூ)

கஎ0. அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில். **க0.**

இ - ள். அழுக்கற்று †அகன்றாரும் இல்லை - அழுக்காற்றைச் செய்து பெரியராயினாருமில்லை;—அஃது இல்லார் பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல் – அச்செயலிலாதார் பெருக்கத்தினீங்கினாரு மில்லை. எ - று.

இவையிரண்டுபாட்டானும் கேடுமாக்கமும் வருதற்கேது ஒருங்கு கூறபபட்டது. (க0)

கஅ ம் அதி.—வெஃகாமை.

அஃதாவது பிறர்க்குரிய பொருளை வௌவக்கருதாமை. பிறருடைமை கண்டவழிப் பொறுமையேயன்றி அதனைத் தான் வௌவக்கருதுதலுங் குறறமென்றற்கு இஃது அழுக்காறுமையின் பின் வைக்கப்பட்டது.

கஎக. நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும். **க.**

இ - ள. நடுவு இன்றி நன்பொருள் வெஃகின் - பிறர்க்குரியன கோடல் நமக்கு அறனன்றென்னும் நடுவுநிலைமையின்றி அவர் நன்பொருளை ஒருவன் வெஃகுமாயின்,—குடி பொன்றிக் குற்றமும் ஆங்கே தரும் - அவ்வெஃகுதல் அவன்குடியைக் கெடச் செயது, பல குற்றங்களையும அபபொழுதே அவனுக்குக் கொடுக்கும். எ - று.

குடியை வளரச்செய்து பலநன்மையும் பயக்குமியல்புபற்றி, வெஃகினென்பார், நன்பொருள் வெஃகினென்றார். பொன்ற வென்பது பொன்றியெனத் திரிந்துநின்றது, † செடதென்பது சொல்லெச்சம். (க)

---

* சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை.

† குடிபொன்றிக் குற்றமு மாங்கே தரும், குடிமடிந்து குற்றம் பெருகும், இருணீங்கி யின்பம் பயக்கும் என்புழிப் பொன்றவித்து, மடிவித்து, நீங்குவித்து எனற்பாலன பிறவினைப் பொருளை

**குஎ. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். உ.**

இ - ள். படு பயன் வெஃகிப் பழிப்படுவ செயயார் - பிறர் பொருளை வௌவினால் தமக்கு வரும் பயனை விரும்பி அது வௌவுதறகுப் பழியின்கண்ணே படுஞ்செயல்களைச் செயயார்—நடுவ அன்மை நாணுபவர் - நடுவநிலைமையன்மையை அஞ்சு பவர். எ - று.

நடுவ ஒருவன்பொருட்குப் பிறன் உரியனல்லனென்னும்நடுவ.

**குஏ. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். கூ.**

இ - ள். சிற்றின்பம் வெஃகி அறனல்ல செயயார் - பிறர் பால் வௌவிய பொருளால் தாமெயதும் நிலையில்லாத வின்ப த்தை விரும்பி அவாமாட்டு அறனல்லாத செயலகளைச் செய யார்—மற்றின்பம் வேண்டுபவர் - அறத்தான் வரும் நிலையுடைய வின்பத்தைக காதலிபபவர். எ - று.

பாவத்தான் வருதலின் அப்பொழுதே யழியுமென்பார், சிற்றி ன்பமென றார். மற்றையின்பமென்பது மறறின்பமென நின்றது.()

**குஐ. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். சு.**

இ - ள். இலம் என்று வெஃகுதல் செய்யார் - யாம் வறிய மென்று கருதி அது நீங்கறபொருட்டுப் பிறர்பொருளை விரும்புதல் செய்யார் - புலம் வென்ற புன்மையில் காட்சியவர் - ஐம்புலனக ளையும் வென்ற குற்றமில்லாத காட்சியினையுடையார். எ - று.

வெல்லுதல் பாவநெறிக்கட்செல்ல விடாமை. புலம்வென்ற புன்மையில் காட்சியவர்க்கு வறுமையின்மையின், வெஃகுதலு மில்லையாயிற்று. புனமையில்காட்சி பொருள்களைத் திரிபின்றி யுணர்தல். (சு)

**குஎடு. அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். டு.**

ணர்த்தும் விவ்விருதி தொக்கு, பொன்றி, மடிந்து, நீங்கி என நின்றனவெனக் கொண்டார் தொல்காப்பியச் சூத்திரவிருத் திகாரர். இங்ஙனம் வருவனவற்றை வடநூலார்/அர்தார்பாவித ணிசசென்பர்.

இ - ள். அஃகி அகன்ற அறிவு என்னும் - துண்ணிதாய் எல்லாநூல்களினுஞ்சென்ற தம்மறிவு என்னபயத்ததாம்,—வெஃகி யார்மாட்டும் வெறிய செயின் - பொருளேவிரும்பி யாவர்மாட்டும் அறிவோடு படாத செயல்களே அறிவுடையார்செய்வராயின். எ-று.

யார்மாட்டும் வெறிய செய்தலாவது தக்கார்மாட்டும் தகா தார்மாட்டும் இழிந்தனவும் கடியனவும் முதலியன செயதல். அறிவிற்குப் பயன் அவைசெயயாமையாகலின், அறிவென்னு மென்றார். (ரு)

கஎசு. அருள்வெஃகி யாற்றின்கணின்றான் பொருள் பொல்லாத சூழக் கெடும். சு. [வெஃகிப்

இ - ள். அருள் வெஃகி ஆற்றின்கண் நின்றான் - அருளாகிய அறத்தைவிரும்பி அதற்குவழியாகிய இல்லறத்தின்கணின்றவன்— பொருள் வெஃகிப் பொல்லாத சூழக் கெடும் - பிறர்பொருளை வாவி அதனை வருவிக்குங் குற்றநெறிகளே எண்ணக் கெடும். எ-று.

இல்லறநெறியால் அறிவு முதிர்ந்தழியல்லது துறக்கப்படா மையின், அதனைத் துறவறத்திற்கு ஆறென்றார். கெடுதல் இரண்ட றமுஞ் சேரவிழத்தல். சூழ்ந்த தீவினையானே கெடுமெனவே, செய் தாற்கெடுதல் சொல்லாமையே பெறப்பட்டது. (சு)

கஎஎ. வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின் மாண்டற் கரிதாம் பயன். எ.

இ - ள். வெஃகி ஆம் ஆக்கம் வேண்டற்க - பிறர்பொருளை டவாவிக்கொண்டு அதனாலாகின்ற ஆக்கத்தை விரும்பாதொழிக;— விளைவயின் பயன் மாண்டற்கு அரிதாம் - பின்னனுபவிக்குங்கால் அவ்வாக்கத்தின் பயன் நன்றாதலில்லை ஆகலான். எ - று.

விளையென்பது முதனிலைத்தொழிற்பெயர். இவையேழுபாட் டானும் வெஃகுதலின் குற்றம் கூறப்பட்டது. (எ)

கஎஅ. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகா வேண்டும் பிறன்கைப் பொருள். அ. [மை

இ - ள். செல்வத்திற்கு அஃகாமை யாதெனின் - சுருங்கன் மாலீத்தாகிய செல்வத்திற்குச் சுருங்காமைக்காரணம் யாதெ ன்று ஒருவனாயின்,—பிறன் வேண்டும் கைப்பொருள் வெஃ காமை - அது பிறன்வேண்டுங் கைப்பொருளைத் தான்வேண்டா மையாம். எ - று.

அஃகாமை ஆருபெயர். வெஃகாதான்செல்வம் அஃகாதென் பதாயிறறு. (அ)

களகூ. அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு. கூ.

இ - ள். அறன் அறிந்து வெஃகா அறிவுடையார் - இஃதற னென்றறிந்து பிறர்பொருளே விரும்பாத அறிவுடையாரை—திருத் திறன் அறிந்து ஆங்கே சேரும் - திருமகள் தானடைதற்காங்கூற் றினையறிந்து அக்கூற்றுனே சென்றடையும். எ - று.

அடைதற்காங்கூறு காலமும், இடனும், செவ்வியும் முதலா யின. இவையிரண்டுபாடானும் வெஃகாமையின குணங் கூறப பட்டது. (கூ)

கஅ0. இறலீனு மெண்ணுது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு. க0.

இ - ள். எண்ணுது வெஃகின் இறல் ஈனும் - பின் விளைவதறி யாது ஒருவன் பிறன்பொருளே வௌவக்கருதின் அக்கருத்து அவ னுக்கிறுதியைப் பயக்கும்,—வேண்டாமை என்னும் செருக்கு விறல் ஈனும் - அப்பொருளே வேண்டாமையென்னுஞ் செல்வம் வெற்றியைப் பயக்கும். எ - று.

பகையும் பாவமும் பெருக்கலின் இறலீனுமென்றும், அப் பொருளே வேண்டி உழல்வோர் யாவரையுங் கீழ்படுத்தலின் விற லீனுமென்றுங் கூறினார். செருக்கு ஆருபெயர். இதனால் அவ்விரு மையும் ஒருங்கு கூறப்பட்டன. (க0)

கசூம் அதி.—புறங்கூறுமை.

அஃதாவது காணுதவழிப் பிறரையிகழ்ந்துரையாமை. மொ ழிக்குற்றம் மனக்குற்றமடியாக வருதலான், இஃது அழுக்காறுமை வெஃகாமைகளினபின் வைக்கப்பட்டது.

கஅக. அறங்கூ றனல்ல செயினு மொருவன்
புறங்கூ றெனின்ற லினிது. க.

இ - ள். ஒருவன் அறம் கூறுன் அல்ல செயினும் - ஒருவன் அறனென்று சொல்லுவதுஞ் செயயாது பாவங்களைச் செயயுமாயி

ரும்,—புறங்கூறுன் என்றல் இனிது - பிறனைப் புறங்கூறுனென்று உலகத்தாராற் சொல்லப்படுதல் நன்று. எ - று.

புறங்கூறுமை அக்குற்றங்களானிழிக்கப்படாது மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். இதனுல் அவ்வதத்தினது நன்மை கூறப்பட்டது. (க)

கஅஉ. அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை. உ.

இ - ள். அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீது - அறனென்பதொன்றில்லையென அழித்துச்சொல்லி அதன்மேற்பாவங்களைச் செயதலினுந தீமையுடைத்து—புறன் அழீஇப் பொயத்து நகை - ஒருவனைக் காணுதவழி இகழ்ந்துரையால் அழித்துச்சொல்லிக் கண்டவழி அவனெடு பொயத்துநகுதல். எ - று.

உறழ்ச்சி நிரனிறைவகையாற் கொள்க. அழித்தல் ஒளியைக் கோறல். (உ)

கஅங. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கற் தரும். ங.

இ - ள். புறங்கூறிப பொய்த்து உயிர் வாழ்தலின் - பிறனைக் காணுதவழி இசழாதுரைததுக் கண்டவழி அவற்கினியனைப் பொயதது ஒருவனுயிர்வாழதலின்—சாதல் அறம் கூறும் ஆக்கம் தரும் - அது செயயாது சாதல் ஆவனுக்கு அறனூல்கள் சொல்லும் ஆக்கத்தைக் கொடுக்குமம். எ - று.

பின் புறங்கூறிப் பொயத்தலொழிதலின், சாதல் ஆக்கந்தரு மென்றூர். ஆக்கம் அஃதொழிந்தார் மறுமைக்கணெயதும் பயன். அறம் ஆகுபெயர், தருமென்பது இடவழுவமைதி. * (ங)

கஅச. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்ல
முன்னின்று பின்னோக்காச் சொல. ச. [ற்க்

இ – ள். கண் நின்று கண் அறச் சொல்லினும் - ஒருவனெதிரே நின்று கண்ணேட்டமறச் சொன்னுலையினும்,—முன் இன்று

* தொல்காப்பியத்துக் கிளவியாக்கத்தில், "அவற்றுள், தருசொல் வருசொல் லாயிரு கிளவியுந—தன்மை முன்னிலை யாயீரிடத்தி" என்னுஞ் சூத்திரத்திறகு மாருக ஈண்டுப படார்க்கையிடத்திற்கு வந்தமையின், இடவழுவமைதியாயிற்று.

பின் நோக்காச் சொல் சொல்லற்க - அவனெதிரின்றிப் பின்வருங் குற்றத்தை நோக்காத சொல்லைச் சொல்லாதொழிக. எ – று.

பின் | ஆகுபெயர். சொல்வான்முழில் சொன்மேலேற்றப்பட்டது. * இவை மூன்றுபாட்டானும் புறங்கூற்றினது கொடுமை கூறப்பட்டது. (சு)

கஅடு. அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்
புன்மையாற் காணப் படும். டு. [சொல்லும்

இ - ள். அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை – புறஞ் சொல்லுவானெருவன் அரணே நன்றென்று சொல்லினும், அது தன்மனத்தானுய்ச் சொல்லுகின்றுனல்லனென்பது † —புறஞ்சொல்லும் புன்மையால் காணபபடும் - அவன் புறஞ்சொல்லுதற்குக் காரணமான மனப்புன்மையாலே அறியப்படும். எ - று.

மனந்தீதாகலின், அச்சொற்கொள்ளப்படாதென்பதாம். (டு)

கஅசூ. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும். சூ.

இ - ள். பிறன் பழி கூறுவான் - பிறனெருவன் பழியை அவன்புறத்துக் கூறுமவன்—தன்பழியுள்ளும் திறன் தெரிந்து கூறப்படும் - தன்பழி பலவறறுள்ளும் உளையுந்திறமுடையவறறைத் தெரிந்து அவனுற்கூறப்படும். எ - று.

புறத்தென்பது | அதிகாரத்தாற்பெற்றும். இது வருகின்றவற்றிற்குமொக்கும். திறன் ஆகுபெயர். தன்னைப் புறங்கூறியவாறு கேட்டான் அக்கூறியாற்கு அவ்வளவன்றி அவனிறந்துபட்டு உளையுந் திறத்தனவாகிய பழிகளை நாடி எதிரே கூறுமாகலின், திறன் தெரிந்து கூறப்படுமென்றார். (சு)

கஅஎ. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்ற தவர். எ.

---

* முன்னின்று பின்னேக்காச்சொல். இது ஒருபொருளின் வினை மற்றேர்பொருளின் வினையானது. பிரயோகவிவேகம், திங்ஙப்படலம், "மருளுறு காரணம்" என்னும் கச-ம் பாட்டிற் காண்க.

† அறஞ்சொல்லு நெஞ்சத்தான் என்பதனை நெஞ்சோடறஞ் சொல்வானென விருதிபிரித்துக்கூட்டுவர் பிரயோகவிவேகனூலார்.

இ - ள். பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் - தம்மை விட்டு நீங்குமாற்றும் புறங்கூறித் தங்கேளிரையும் பிரியப்பண்ணுவர்—நகச்சொல்லி நட்பாடல் தேற்றாதவர் - கூடி மகிழுமாறு இனிய சொற்களைச் சொல்லி அயலாரோடு நட்பாடலை அறியாதார். எ-று.

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கேளிரையும் பிரிப்பரென்றகருத்தான், அயலாரோடுமென்பது வருவித்துரைக்கப்பட்டது. அறிதல் தமக்குறுதியென்றறிதல், "கடியு-மிடர்தேற்றாள் சோர்ந்தனள் கை" * என்புழிப்போலத் தேற்றாமை தன்னினையாய்நின்றது. புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவரென்பது கருத்து.(எ)

கஅஅ. தன்னியார் குற்றமும் தூற்று மாபிறர்
ரென்னைகொ லேதிலார் மாட்டு. அ.

இ - ள். தன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர்-தம்மொடு செறிந்தாரது குற்றத்தையும் அவர்புறத்துத் தூற்றுமியல்பினையுடையார்—ஏதிலார்மாட்டு என்னைகொல் - அயலார்மாட்டுச் செயவது யாதுகொல்லோ! எ - று.

தூற்றுதல் பலருமறியப பரப்புதல். அதனிற்கொடியது பிறிதொன்று காணுமையின், என்னைகொலென்றார். செயவதென்பது சொல்லெச்சம். என்னர்கொலென்று பாடமோதி, எவ்வியல்பினராவரென்றுரைப்பாருமுளர். (அ)

கஅசு. அறனெக்கி யாற்றுங்கொல் வையம் புறனெக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை. சு.

இ - ள். புறன் நோக்கிப் புன்சொல் உரைப்பான் பொறை - பிறர் கீழ்கினைவளவு பார்த்து அவர்பழித்துரையை உரைப்பானது உடறபாரத்தை—வையம் அறன் நோக்கி ஆற்றுங்கொல் - நிலம் இக்கொடியதுபொறுத்தலே எனக்கறமாவதெனக் கருதிப் பொறுக்கின்றதுபோலும். எ - று.

எல்லாவற்றையும்பொறுத்தல் இயல்பாயினும், இதுபொறுத்தற்கரிதென்னுங் கருத்தால், அறனோக்கியாறறுங்கொலென்றார். இவையைந்துபாட்டானும் புறங்கூறுவார்க்கெதுங்குற்றம் கூறப்பட்டது. (க)

கஙo. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மண்ணு முயிர்க்கு. கo.

* கலித்தொகை, மருதம்—உள்.

இ - ள். எதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின் - எதிலாரைப் புறங்கூறுவார் அதற்கு அவர் குற்றங்காணுமாறுபோலப் புறங்கூறலாகிய தங்குற்றத்தையுங் காணவல்லராயின்,—மன்னும் உயிர்க்குத் தீது உண்டோ - அவர் நிலேபேறுடையவுயிர்க்கு வருவதொரு துன்பமுண்டோ? எ - று.

நடுவுநின்று ஒப்பக்காண்டலருமைநோக்கிக் காண்கிற்பினென்றும், கண்டவழியொழிதலிற் பாவமின்றும் ஆகவே வரும் பிறவிகளினுந் துன்பமில்லையென்பதுநோக்கி உயிர்க்குத் தீதுண்டோ வென்றுங் கூறினர். இதனாற் புறங்கூற்றொழிதற்கு உபாயங்கூறப்பட்டது. (கஅ)

உஒ ம் அதி.—பயனிலசொல்லாமை.

அஃதாவது தமக்கும் பிறர்க்கும் அறம் பொருள் இன்பமாகிய பயன்களுள் ஒனறும் பயவாத சொற்களைச் சொல்லாமை. பொய, குறளை, கடுஞ்சொல், பயனில்சொல்லென வாக்கின்கணிசமும் பாவஙான்களுள், பொய் அறந்தார்க்கல்லது ஒருதலேயாகக் கடியலாகாமையின், அஃதொழித்து, இல்வாழ்வாராற் கடியப்படும் ஏனேமூன்றனுள், கடுஞ்சொல் இனியவைகூறலானும், குறளே புறங்கூறுமையானும், விலக்கி, நின்ற பயனில்சொல் இதனுள் விலக்குகின்றாராகலின், இது புறங்கூறுமையின்பின் வைக்கப்பட்டது.

ககூக. பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும். க.

இ - ள். பல்லார் முனியப் பயனில சொல்லுவான் - அறிவுடையார் பலருங் கேட்டு வெறுப்பப் பயனிலவாகிய சொறகளைச் சொல்லுவான்—எல்லாரும் எள்ளப்படும் - எல்லாராலுமிகழப்படும். எ - று.

அறிவுடையார் பலரும் வெறுப்பவே ஒழிந்தாராலும் இகழப்படுதலின், எல்லாரு மெள்ளப்படுமென்றார். மூன்றனுருபு விகாரத்தாற் றொக்கது. (க)

ககூஉ. பயனில பல்லார்முற் சொல்லல் பயனில
நட்டார்கட் செய்தலிற் றீது. உ.

இ - ள். பயன் இல பல்லார்முன் சொல்லல்-பயனிலவாகிய சொற்களை அறிவுடையார் பலர்முன்பே ஒருவன் சொல்லுதல்—

நயன் இல நட்டார்கண் செய்தலின் தீது - விருப்பமிலவாகிய செயல்களைத் தன்னட்டார் மாட்டுச் செய்தலினும் தீது. எ - று.

விருப்பமில வெறுப்பன. இச்சொல் அச்செயலினும் மிகவிக முற்பாடு பயக்குமென்பதாம். (உ)

ககூஉ. நயனில னென்பது சொல்லும் பயனில பாரித் துரைக்கு முரை. கூ.

இ - ள். பயன் இல பாரித்து உரைக்கும் உரை - பயனிலவாகிய பொருள்களை ஒருவன் விரித்துரைக்குமுரைதானே—நயன இலன் என்பது சொல்லும - இவன் நயனிலனென்பதனை உரைக்கும். எ - று.

உரையால் இவன் நயனிலனென்பதறியலாமென்பார், அதனை உரைமேலேறறி உரைசொல்லுமென்றார். (கூ)

ககூச. நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப் பண்பில்சொற் பல்லா ரகத்து. சு

இ - ள். பயன் சாராப் பண்பு இல் சொல் பல்லாரகத்து - பயனெடுபடாத பண்பில் சொற்களை ஒருவன் பலரிடைச்சொல்லுமாயின்,—நயன் சாரா நன்மையின் நீக்கும் - அவை அவர்மாட்டு நீதியோடுபடாவாய, அவனை நற்குணங்களினீக்கும். எ - று.

பண்பு இனிமையும் மெய்ம்மையும் முதலாய சொறகுணங்கள். சொல்லுமாயினென்பதும், அவர்மாட்டென்பதும், எச்சமாக வருவிக்கப்பட்டன. (ச)

ககூடு. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில நீர்மை யுடையார் சொலின். டு.

இ - ள். பயன் இல நீர்மையுடையார் சொலின் - பயனிலவாகிய சொற்களை இனியநீர்மையுடையார் சொல்லுவராயின்,—சீர்மை சிறப்பொடு நீங்கும் - அவரது விழுப்பமும் அதனால் வரும் நன்குமதிக்கற்பாடும் உடனே நீங்கும். எ - று.

நீர்மை நீரின்றன்மை. சொலினென்பது சொல்லாமையை விளக்கிநின்றது. (டு)

ககூட. பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல் மக்கட் பதடி யெனல். கூ.

இ - ள். பயன் இல் சொல் பாராட்டுவானை மகன் எனல் - பயனில்லாத சொற்களைப் பலகாலுஞ் சொல்லுவானை மகனென்று சொல்லற்க,—மக்கட்பதடி எனல் - மக்களுட்பதரென்று சொல்லுக. எ - று.

அல்லிருதியிலுங்கோள் முன் எதிர்மறையினும், பின் உடம்பாட்டினும் வந்தது. பதடிவென்னும் உள்ளீடின்மையின், மக்கட்பதடியென்றார். இவையாறுபாட்டானும் பயனில்லாதசொற்களைச் சொல்லுதலின் குற்றங் கூறப்பட்டது. (கூ)

கஙூஎ. நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. எ.

இ - ள். நயன் இல சான்றோர் சொல்லினும் சொல்லுக-நீதியோடு படாதசொற்களைச் சான்றோர் சொன்னாராயினும், அஃதமையும்:—பயன இல சொல்லாமை நனறு - அவர் பயனிலவற்றைச் சொல்லாமை பெறின், அது நன்று. எ - று.

சொல்லினுமெனவே, சொல்லாமை பெறப்பட்டது. நயனிலவற்றினும் பயனில தியவென்பதாம். (எ)

கஙூஅ. அரும்பய னுயு மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல். அ.

இ - ள். அரும்பயன் ஆயும் அறிவினர் - அறிதற்கரிய பயன்களை ஆராய்பவல்ல அறிவினையுடையார்—பெரும்பயன் இல்லாத சொல் சொல்லார் - மிக்கபயனுடையவல்லாத சொற்களைச் சொல்லார். எ - று.

அறிதற்கரிய பயன்களாவன வீடுபேறும், மேற்கதிச்செலவும் முதலாயின. பெரும்பயனில்லாதவெனவே, பயன் சிறிதுடையனவும் ஒழிக்கப்பட்டன. (அ)

கஙூகூ. பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீ
மாசறு காட்சி யவர். [ர்ந்த

இ - ள். பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் - பயனீங்கிய சொற்களை மறந்துஞ்சொல்லார்—மருள் தீர்ந்த மாசறு காட்சியவர் - மயக்கத்தினீங்கிய தூயவறிவினையுடையார். எ - று.

நூயவறிவு மெய்யறிவு. மருடீர்த்தவென்னும் பெயரெச்சம் காட்சியவரென்னுங் குறிப்புப்பெயர்கொண்டது. இவைமூன்றுபாட்டானும் பயனிலைசொல்லாமையின் குணங்கூறப்பட்டது. (க)

உ00. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க சொல்லிற் பயனிலாச் சொல். க0.

இ - ள். சொல்லின் பயனுடைய சொல்லுக - சொற்களிற் பயனுடைய சொற்களைச் சொல்லுக;—சொல்லின் பயனிலாச் சொல் சொல்லற்க - சொற்களிற் பயனில்லாத சொற்களைச் சொல்லாதொழிக. எ - று.

*சொல்லினென்பது இருவழியும் மிகையாயினும், சொற்பொருட்பின் வருநிலையென்னும் அணிநோக்கி வந்தது, "வைகலும் வைகல் வரக்கண்டும்" * என்பதுபோல. இதனாற் சொல்லப்படுவனவும் படாதனவும் நியமிக்கப்பட்டன.* (க0)

உகம் அதி.—தீவினையச்சம்.

அஃதாவது பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல். இதனான் மெயயின்கணிகழும் பாவங்களெல்லாந்தொகுத்து விலக்குகின்றாராகலின், இது பயனில சொல்லாமையின்பின் வைக்கப்பட்டது.

உ0க. தீவினையா ரஞ்சார் விழுமிய ரஞ்சுவர் தீவினை யென்னுஞ் செருக்கு. க.

இ - ள். தீவினை யென்னும் செருக்கு - தீவினையென்று சொல்லப்படும் மயக்கத்தை—தீவினையார் அஞ்சார் - முன்செய்த தீவினையுடையார் அஞ்சார்,—விழுமியோர் அஞ்சுவர் - அஃதிலராகிய சீரியார் அஞ்சுவர். எ - று.

தீவினையென்னுஞ் செருக்கெனக் காரியம் காரணமாக † உபசரிக்கப்பட்டது. மேற்றொட்டுச் செய்து கைவந்தமையான் அஞ்சாரென்றும், செய்தறியாமையான் அஞ்சுவரென்றும் கூறினார். (க)

---

* காலடியார், அறன்வலியுறுத்தல்,—வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்—வைகலும் வைகலை வைகலை வைகுமென் றின்புறுவர்—வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்—வைகலை வைத்துணரா தார்.

† காரணங் காரியமாதற்கும் காரியங் காரணமாதற்கும் விதி பிரயோகவிவேகம் திங்நூற்படலம் "மருளறுகாரணம்" என்னும் சூத்திரம் பார்த்திற்காண்க.

உ02. தீயவை தீய பயத்தலாற் றீயவை தீயினு மஞ்சப் படும். உ.

இ - ள். தீயவை தீய பயத்தலால் - தனக்கின்பம் பயத்தலைக் கருதிச் செய்யுங் தீவினைகள பின் அஃதொழித்துத் துன்பமே பயத்தலான,—தீயவை தீயினும் அஞ்சப்படும் - அத்தனமையவாகிய தீவினைகள் ஒருவனுறறீயினுமஞ்சபபடும். எ - று.

பிறிதொருகாலத்தும் பிறிதொருதேயத்தும் பிறிதோருடம் பினுஞ சென்று சுடுதல் தீக்கின்மையின, தீயினுமஞ்சப்படுவ தாயிறறு. (உ)

உ0கூ. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய செறுவாக்குஞ் செய்யா விடல். கூ.

இ - ள். அறிவினுள் எல்லாம் தலை என்ப - தமக்குறுதி நாடும் அறிவுகளெல்லாவற்றுள்ளும் தலையாய அறிவென்று சொல்லுவர் நல்லோர்—செறுவார்க்கும் தீயசெய்யா விடல் - தம்மைச் செறுவார் மாட்டும் தீவினைகளைச் செயயாது விடுதலே. எ - று.

விடுதற்குக் காரணமாகிய அறிவை விடுதலென்றும், செயத்தக்குழியுஞ் செயயாதொழியவே தமக்குத் துன்பம் வாராதென உய்த்துணர்தலின் அதனை அறிவினு ளெல்லாந்தலையென்றுங் கூறினார். செயயாதென்பது கடைக்குறைத்து நின்றது. இவை மூன்று பாடடானும தீவினைக்கஞ்சவேண்டுமென்பது கூறப்பட்டது. (கூ)

உ0ச. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு. ச.

இ - ள். பிறன் கேடு மறந்தும் சூழற்க - ஒருவன் பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை மறநதும் எண்ணுதொழிக;—சூழின சூழ்ந்தவன் கேடு அறம் சூழும் - எண்ணுவனுயின், தனக்குக கேடு பயக்கும் வினையை அறக்கடவுள் எண்ணும். எ - று.

கேடென்பன ஆகுபெயர். சூழ்கின்றபொழுதே தானுமுடன் சூழ்தலின், இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படுமென்பது பெறப்பட்டது. அறக்கடவுளெண்ணுதலாவது அவன்கெடத் தான் நீங்க நினைத்தல். தீவினை எண்ணுமாகாதென்பதாம். (ச)

உ0ரு. இலனென்று தீயவை செய்யற்க செய்யி னிலனாகு மற்றும் பெயர்த்து. ரு.

இ - ள். இலன் என்று தீயவை செய்யற்க - யான் வறியனென்று கருதி அது தீர்தற்பொருட்டுப் பிறர்க்குத் தீவினைகளை ஒருவன் செய்யாதொழிக;—செயலின் பெயர்த்தும் இலன் ஆகும - செய்வனாயின், பெயர்த்தும் வறியனும். எ - று.

அத்தீவினையாற பிறவிதோறும் இலனுமென்பதாம். ஆன்வி சூதி மூன் தனித்தன்மையினும், பின் படர்க்கையொருமையினும் வந்தது. தனித்தன்மை "உளனுவென் னுயிரையுண்டி" * என்பத னுனுமறிக. மற்று அசைநிலை. இலமென்றுபாடமோதுவாருமுளர். பொருளான் வறியனெனக் கருதித் தீயவை செயற்க செயலின் அபபொருளானேயன்றி நற்குண நற்செயகைகளானும் வறியனுமென்றுரைப்பாருமுளர். (சி)

உ०சூ. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால தன்னோ யடல்வேண்டா தான். சூ.

இ - ள். நோயப்பால தன்னை அடல்வேண்டாதான் - தான் பஞ்செயயுங் கூற்றவாகிய பாவங்கள் தன்னை பின்வந்து வருத்துதலை வேண்டாதவன்—தீபபால தான் பிறர்கண் செயயற்க - தீமைக்கூற்றவாகிய வினைகளைத் தான பிறர்மாட்டுச் செயயாதொழிக. எ - று.

செய்யின், அப்பாவங்களுதல் தருதலையென்பதாம். (சூ)

உ०எ. எனைப்பகை யுற்றாரு மூய்வர் வினைப்பகை வீயாது பின்சென் றடும். எ.

இ - ள். எனைப்பகை உற்றாரும் உய்வர் - எத்தனைப் பெரிய பகையுடையாரும் அதனையொருவாறாறுற்றப்புவர்;—வினைப்பகை வீயாது பின் சென்று அடும் - அவ்வாறன்றித் தீவினையாகிய பகை நீங்காது புக்குழிப் புக்குக் கொல்லும். எ - று.

"வீயா—துடம்பொடு நின்ற வுயிரு மில்லை." † என்புழியும் வீயாமை நீங்காமைக்கண் வந்தது. (எ)

உ०அ. தீயவை செய்தார் கெடுதல் னிழறன்னர் வீயா தடியுறைந் தற்று. அ.

இ - ள். தீயவை செய்தார் கெடுதல் - பிறர்க்குத் தீவினைகளைச்செய்தார் தாங்கெடுதல் எத்தன்மைத்தெனின்,—நிழல் தன்னை

* கலித்தொகை, குறிஞ்சி—உ.

† புறநானூறு, நகூங.

வீயாது அடி உறைந்தற்று-ஒருவனிழல் நெடிதாகப்போய்யும் அவன் றன்னை விடாது வந்து அடியின்கட்டங்கியதன்மைத்து. எ - று.

இவ்வுவமையைத் தன்காலம் வருந்துணையும் புலனுக்காது உயிரைப்பற்றி நின்று அது வந்துழி உருப்பதாய தீவினையைச்செய்தார் பின் அதனைற் கெடுதற்கு உவமையாக்கி உரைப்பாருமுளர். அஃதுரையன்றென்பதற்கு அடியுறைந்தநிழறன்னை வீய்ந்தற்றென்னுது வீயாதடியுறைந்தற்றென்ற பாடமே கரியாயிற்று. மேல் வீயாது பின்சென்றடுமென்றார், ஈண்டு அதனையுவமையான் விளக்கினார். (அ)

உ0கூ. தன்னைத்தான் காதல ஞயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால். கூ.

இ - ள். தன்னைத் தான் காதலன் ஆயின் - ஒருவன், தன்னைத்தான் காதல் செயதலுடையனாயின்,—தீவினைப்பால் எனைத்தும் ஒன்றும் துன்னற்க - தீவினையாகிய பகுதி எத்துணையுஞ் சிறிதொன்றாயினும் பிறர்மாட்டுச் செய்யாதொழிக. எ - று.

நல்வினை தீவினையென வினைப்பகுதி இரண்டாகலின், தீவினைப்பாலென்றார். பிறர் மாட்டுச்செய்த தீவினை தன்மாட்டுத் துன்பம் பயத்தல் விளக்கினாராகலின், தன்னைத்தான் காதலனாயினென்றார். இவையாறுபாட்டானும் பிறர்க்குத் தீவினைசெய்யிற்றான் கெடுவரென்பது கூறப்பட்டது. (க)

உக0. அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின். க0.

இ - ள். மருங்கு ஓடித் தீவினை செயயான் எனின் - ஒருவன் செந்நெறிக்கட்செல்லாது கொடுநெறிக்கட்சென்று பிறர்மாட்டுத் தீவினைகளைச் செயயானாயின்,—அருங்கேடன் என்பது அறிக - அவனை அரிதாகிய கேட்டையுடைய னென்பதறிக. எ - று.

அருமை இன்மை. அருங்கேடனென்பதனை "சென்று சேர் கல்லாப் புன்ன புன்னி லென்றாழ் வியன்குளம்" * என்பதுபோலக் கொள்க. † ஓடியென்னும் வினையெச்சம் செய்யானென்னும் எதிர்மறைவினையுட் செயதலோடு முடிந்தது. இதனால் தீவினைசெய்யாதவன் கேடிலனென்பது கூறப்பட்டது. (க0)

* அகநானூறு, ச2.

† அருங்கேடன் என்பதனைக் கேடரியனென விருதிபிரித்துக் கூட்டுவர் பிரயோகவிவேகனார்.

உஉ ம் அதி.—ஒப்புரவறிதல்.

அஃதாவது உலகநடையினையறிந்து செய்தல். உலக நடை வேதநடைபோல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமேயறிந்து செய்யுந்தன்மைத்தாகலின், ஒப்புரவறிதலென்றார். மேல் மன மொழி மெய்களாற்றவிரத்தகுவன கூறினார், இனிச் செய்யத்தகுவனவற்றுள் எஞ்ஞான்றன கூறுகின்றாராகலின், இது தீவினையச்சத்தின்பின் வைக்கப்பட்டது.

உகக. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்ஞற்றுங் கொல்லோ வுலகு. க.

இ - ள். மாரிமாட்டு உலகு என் ஆற்றும் - தமக்கு நீருதவுகின்ற மேகங்களினிடத்து உயிர்கள் என்னகைம்மாறு செய்யாகின்றன?—கடப்பாடு கைம்மாறு வேண்டா - ஆகலான், அம்மேகங்கள் போல்வார் செயயும் ஒப்புரவுகளும் கைம்மாறுநோக்குவனவல்ல. எ - று.

என்ஞற்றுமென்ற வினா யாதுமாற்றுவென்பது தோன்ற நிற்றலின், அது வருவித்துரைக்கப்படும். தவிருந்தன்மையவல்லவென்பது கடப்பாடென்னும் பெயராலே பெறப்பட்டது. செய்வாரது வேண்டாமையைச் செய்யப்படுவனமேலேற்றினார். (க)

உகஉ. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. உ.

இ - ள். தக்காாக்கு - தருதியுடையார்க்காயின், தாள் ஆற்றித் தந்த பொருளெல்லாம் - முயறலீச் செய்தீட்டிய பொருண்முழுதும்—வேளாண்மை செயதற் பொருட்டு - ஒப்புரவு செய்தற் பயத்தவாம். எ - று.

பிறர்க்குதவாதார்போலத் தாமே உண்டற்பொருட்டும் வைத்திழத்தற் பொருட்டு மன்றென்பதாயிற்று. (உ)

உகக. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
ஒப்புரவி னல்ல பிற. ங.

இ - ள். புத்தேளுலகத்தும் ஈண்டும் - தேவருலகத்தும் இவ்வுலகத்தும்—ஒப்புரவின் நல்ல பிற பெறல் அரிது-ஒப்புரவுபோல நல்ல பிறசெயல்களைப் பெறுதலரிது. எ - று.

ஈவாரும் ஏற்பாருமின்றி எல்லாரும்ஒருதன்மையராதலின், புத்தேளுலகத்தரிதாயிற்று; யாவர்க்குமொப்பது இதுபோற் பிறிதொன்றின்மையின், இவ்வுலகத்தரிதாயிற்று. பெறற்கரிதென்று பாட

மோதிப் பெறுதற்குக் காரணமரிதென்றுரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் ஒப்புரவினது சிறப்புக் கூறப்பட்டது. (ங)

உகச. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். ச.

இ - ள். உயிர்வாழ்வான் ஒத்தது அறிவான் - உயிரோடு கூடி வாழ்வானுவான் உலக நடையினை யறிந்து செயவான்;—மற்றை யான் செத்தாருள் வைக்கப்படும் - அஃதறிந்து செயயாதவன, உயி ருடையனேயாயினும், செத்தாருள் ஒருவனுகக் கருதப்படும். எ-று.

உயிரினறிவுஞ்செயலுங் காணுமையின், செத்தாருள்வைக்கப் படுமென்றார். இதனுல் உலகநடைவழு வேதநடைவழுப்போலத் தீர்திறனுடைத்தன்றென்பது கூறப்பட்டது. (ச)

உகரு. ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு. ரு.

இ - ள். உலகு அவாம் பேரறிவாளன் திரு - உலகநடையை விரும்பிச் செயயும் பெரியவறிவினையுடையவனது செல்வம்— ஊருணி நீர் நிறைந்தற்று - ஊரின்வாழ்வார் தண்ணீருண்ணுங் குளம் நீர்நிறைந்தாற்போலும். எ - று.

நிறைதலென்னும் இடத்தினிகழ்பொருளின்மேழில் இடத்தின் மேலேற்றப்பட்டது. பாழ்போகாது நெடிதுநின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாததவுமென்பதாம். (ரு)

உகசு. பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றுற் செல்வ
நயனுடை யான்கட் படின். சு.

இ - ள். செல்வம் நயனுடையான்கண் படின் - செல்வம் ஒப் புரவுசெய்வான் கண்ணே படுமாயின்,—பயன்மரம் உள்ளூர்ப்பழுத் தற்று-அது பயன்படுமரம் ஊர்நடுவே பழுத்தாற்போலும். எ - று.

உலகநீதி பலவற்றுள்ளும் ஒப்புரவு சிறந்தமையின், அதனையே நயனென்றார். எல்லார்க்கும் எளிதிற் பயன்கொடுக்குமென்பதாம்.

உகள. மருந்தாகித் தப்பா மரத்தற்றுற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின். எ.

இ - ள். செல்வம் பெருந்தகையான்கண் படின் - செல்வம் ஒப்புரவுசெய்யும் பெரியதகைமையையுடையான்கண்ணே படுமா

யின்,—மருந்தாகித் தப்பா மரத்தற்று - அஃது எல்லாவுறுப்பும் பிணிகட்கு மருந்தாய்த் தப்பாத மரத்தை யொக்கும். எ - று.

தப்புதலாவது கோடற்கரிய இடங்களினின்றுதல், மறைந்து நின்றுதல், காலத்தான் வேறுபட்டாதல், பயன்படாமை. தன்கு றைநோக்காது எல்லார் வருத்தமுந் தீர்க்குமென்பதாம். இவை மூன்றுபாட்டானும் கடப்பாட்டாளனுடைய பொருள் பயன்படு மாறு கூறப்பட்டது. (எ)

உகஅ. இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். அ.

இ - ள். இடன் இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்சார் - செல்வஞ் சுருங்கிய காலத்தும் ஒப்புரவு செய்தற்குத் தளரார்—கடன் அறி காட்சியவர் - தாஞ்செய்யத் தகுவனவற்றையறிந்த இயற்கையறிவுடையார். எ - று.

பிறவெல்லாம் ஒழியினும், இஃதொழியாரென்பதாம். (அ)

உகக. நயனுடையா னல்கூர்ந்தா னுதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு. கூ.

இ - ள். நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல் - ஒப்புரவுசெய்தலையுடையான் நல்கூர்ந்தானாதலாவது—செயும் நீர செயயாது அமைகலா ஆறு - தவிராது செயயுநீர்மையையுடைய அவ்வொப்புரவுகளைச் செயயபபெறுது வருந்துகின்ற வியல்பாம். எ - று.

தானுகர்வன நுகரப்பெறுமையன்றென்பதாம். இவையிரண்டுபாட்டானும் வறுமையான் ஒப்புரவொழிதற்பாற்றன்றென்பது கூறப்பட்டது. (கூ)

உஉ0. ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து. க0.

இ - ள். ஒப்புரவினால் கேடு வரும் எனின் - ஒப்புரவுசெய்தலான் ஒருவனுக்குப் பொருட்கேடு வருமென்பாருளராயின்,—அஃது ஒருவன் விற்றுக் கோட்டக்கது உடைத்து - அக்கேடு தன்னை விற்குயினுங் கொள்ளுந்தகுதியையுடைத்து. எ - று.

தன்னை விற்றுக்கொள்ளப்படுவதொருபொருளில்லையன்றே இஃதாயின் அதுவுஞ்செயயப்படுமென்றது, புகழ்பயத்தலுணர்க்கி. இதனால் ஒப்புரவினாற் கெடுவது கேடன்றென்பது கூறப்பட்டது.

அஃதாவது வறியராயேற்றூர்க்கு மாற்றுதலைக்கொடித்தல். இது மறுமைநோக்கியதாகலின், இம்மைநோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது.

உஉக. வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர தடைத்து. க.

இ - ள். வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை - ஒருபொருளுமில்லாதார்க்கு அவர்வேண்டியதொன்றைக் கொடுப்பதே பிறர்க்குக் கொடுத்தலாவது;—மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து - அஃதொழிந்த எல்லாக்கொடையுங் குறியெதிர்ப்பைகொடுக்கு நீர்மையையுடைத்து. எ - று.

ஒழிந்த கொடைகளாவன வறியரல்லாதார்க்கு ஒருபயனேக்கிக் கொடுப்பன. குறியெதிர்ப்பையாவது அளவுகுறித்துவாங்கி அவ்வாங்கியவாறே எதிர்கொடுப்பது. நீரதென்புழி அதுவென்பது பகுதிப்பொருள்விகுதி. பின்னுந் தன்பால் வருதலின், குறியெதிர்ப்பை கொடுக்கு நீரதுடைத்தென்றார். இதனுள் ஈகையதிலக்கணங் கூறப்பட்டது. (க)

உஉஉ. நில்லா தெனினுங் கொளநீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று. உ.

இ - ள். கொளல் நல்லாறு எனினும் நீது - ஏற்றல் வீட்டுலகிற்கு நல்லநெறியென்பார் உளராயினும் அது நீது;—மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று - ஈந்தார்க்கு அவ்வுலகெய்துதலில்லையென்பார் உளராயினும் ஈதலே நன்று. எ - று.

எனினுமென்பது இருவழியும் அங்ஙனங்கூறுவாரின்மை விளக்கிநின்றது. பிரிநிலையேகாரத்தால் பிறவறங்களின் ஈதல் சிறந்ததென்பது பெற்றாம். நல்லதுகூறுவார் நீயதுமுடன்கூறினார்.()

உஉங. இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. ங.

இ - ள். இலன் என்னும் எவ்வம் உரையாமை - யான் வறியனென்று இரப்பான் சொல்லுமினிவரலைத் தான் பிறர்கட்சொல்லாமையும்,—ஈதல் - அதனைத் தன்கட்சொன்னார்க்கு மாற்று நீதலும்,—உள குலனுடையான்கண்ணே - இவையிரண்டுமாவன குடிப்பிறந்தான்கண்ணே. எ - று.

மேற்றீதென்றது ஒழிதற்கும் நன்றென்றது செய்தற்குமுரிய வினை உணர்த்தியவாறு. இனி இலனென்னுமெவ்வமூரையாமையீதலென்பதற்கு அவ்வினிவரவை ஒருவன்றனக்குச் சொல்வதற்கு முன்னே அவன்குறிப்பறிந்து கொடுத்தலெனவும், அதனிற் பின்னும் பிறனொருவன்பாற்சென்று அவனுரையாவகையாற் கொடுத்தலெனவும், யான் இதுபொழுது பொருளுடையேனல்லேனெனக் கரப்பார்சொல்லும் இனிவரவைச்சொல்லாது கொடுத்தலெனவும், உரைப்பாருமுளர். அவர் ஈதலென்பதனிற பொருட்பன்மை பற்றி வந்த பன்மையாகவுரைப்பர். (ஈ)

உஉச. இன்னு திரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவு. ச.

இ - ள். இரக்கப்படுதல் இன்னுது - இரந்தலேயன்றி இரக்கப்படுதலும் இனிதன்று,—இரந்தவர் இன்முகம் காணும் அளவு - ஒருபொருளையிரந்தவர் அதுபெறுதலால் இனிதாகிய அவர்முகங் காணுமளவும். எ - று.

எச்சவும்மையும் முற்றும்மையும் விகாரத்தாற்றொக்கன. இரக்கப்படுதல் இரப்பார்க்கு ஈவலென்றிருத்தல். அதனை இன்னுதெனறது "எல்லா—பிரபபார்க்கொன்றீயாமை" * கூடுங்கொல்லோவென்னும் அச்சநோக்கி. எனவே, எல்லாப்பொருளும் ஈதல்வேண்டுமென்பது பெறப்பட்டது. (ச)

உஉரு. ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின். ஞ.

இ - ள். ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் - தவத்தான் வலியார்க்கு வலியாவது தம்மையுற்ற பசியைய பொறுத்தல்:—அப்பசியை மாற்றுவார் ஆற்றலிற்பின் - அவ்வலிதான் அங்ஙனம் பொறுத்தற்கரிய பசியை ஈகையாலொழிபபாரது வலிக்குப்பின். எ - று.

தாமும் பசித்துப பிறரையும் அது தீர்க்கமாட்டாதாற்றலின் தாமும் பசியாது பிறரையும அது தீர்ப்பாராற்றல் நன்றென்பதாம். (ஞ)

உஉசு. அற்ற ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றுண் பொருள்வைப் புழி. சு.

* காலடியார், குடிப்பிறப்பு,—கல்லாமை யச்சங் கையவர் தொழுஉச்சஞ்—சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்ச - மெல்லா—பிரப்பார்க்கொன் றீயாமை யச்ச மரத்தாரிம்—மானுக் குடிப் பிறந்தார்.

இ - ள். அற்றார்அழி பசி தீர்த்தல்-வறியாரது மிக்க பசியை அறவேக்கித் தீர்க்க,—பெற்றான் பெற்றான் ஒருவன் வைப்புழி அஃது - பொருள்பெற்றானொருவன் அதனைத் தனக்குதவவைக்கு மிடம் அவ்வறமாகலான். எ - று.

எல்லாநன்மைகளும் அழிய வருதலின், அழி பசியென்றார். அறவேக்கியென்பது எஞ்சிநின்றது. அறமாகழிபசி தீர்த்த பொருள் பின்றனக்கே வந்துதவுமென்பதாம். (சு)

உஉஎ. பாத்தூண் மீஇயவனைப் பசியென்னுந் தீப்பிணி தீண்ட லரிது. எ.

இ - ள். பாத்தூண் மீஇயவனை - எஞ்ஞான்றும் பகுத்துண்டல்பயின்றவனை—பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது - பசியென்றுசொல்லபடுந் தீயநோய தீண்டுதலில்லை. எ - று.

இவ்வுடம்பினின்று ஞானவொழுக்கங்களை அழித்து அதனால் வருமுடம்புகட்குந துன்பஞ்செயதலின், தீப்பிணியெனப்பட்டது. தனக்கு மருத்துவன்றானுகலின், பசிப்பிணி நணுகாதென்பதாம். இவையாறுபாட்டானும ஈதலினசிறப்புக் கூறப்பட்டது. (எ)

உஉஅ. ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றமுடைமை வைத்திழக்கும் வன்க ணவர். அ.

இ - ள். தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கணவர் - தாமுடைய பொருளை ஈயாதவைத்துப பின்னிழந்துபோம் அருளி லாதார்—ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல் - வறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவருவத்தலான் அருளுடையாரெ யதும் இன்பத்தினைக் கண்டறியார்கொல்லோ! எ - று.

உவக்குமென்பது காரணத்தின்கண்வந்த பெயரெச்சம்; அஃது இன்பமென்னுங் காரியப்பெயர் கொண்டது. அறிந்தாராபின், தாமும் அவவின்பத்தை யெயதுவதல்லது வைத்திழவாரென்பது கருத்து. (அ)

உஉகூ. இரத்தலி னின்ன தென்ற நிரப்பிய தாமே தமிய ருணல். கூ.

இ - ள். நிரப்பிய தாமே தமியர் உணல் - பொருட்குறை நிரப்பவேண்டி வறியார்க்கியாது தாமே தனித்துண்டல்—இரத்தலின் இன்னது மன்ற - ஒருவர்க்குப் பிறர்பாறசென்று இரத்தலினுமின்னது ஒருதலையாக். எ - று.

பொருட்குறைநிரப்பலாவது ஒரோவெண்களைக்குறித்து அத் தணையீட்டுதுமென ஈட்டத்தையே மேற்கொண்டு இவறிக் கூட்டுதல். தனித்தல் பிறரையொழித்தல். இரத்தற்குள்ளது அப்பொழுதை யிளிவரவே பின் நல்குரவில்லை, தமியருண்டற்கு அவையிரண்டுமுளவாமாகலின், இரத்தலினின்னுதென்றார். நிரப்பியவென்பதற்குத் தேடியவுணவுகளையென்றுரைபகாருமுளர். (க)

உகூ0. சாதலி னின்னுத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை. க0.

இ - ள். சாதலின் இன்னுதது இல்லை - ஒருவற்குச் சாதல் போல இன்னுததொன்றில்லை;—அதனூஉம ஈதல இயையாக்கடை இனிது - அத்தன்மைத்தாகிய சாதலும் வறியாராக்கொன்றீதன் முடியாதவழி இனிது. எ - று.

பிறர்க்குப் பயன்படாத உடறபொறை நீங்குதலான், இனி தென்றார். இவை மூன்றுபாட்டானும் ஈயாமையின் குறறங் கூறப்பட்டது. (க0)

உசாம் அதி.—புகழ்.

அஃதாவது இல்வாழ்க்கைமுதல் ஈகையீறாகச் சொல்லப்பட்ட இல்லறத்தின வழுவாதார்க்கு இம்மைப்பயனுங் இவ்வுலகின சணிகழுநது இறவாது நிறகுங்கூர்த்தி. இது, பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின், அதன்பின் வைக்கபபட்டது.

உகூக. ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லே யுயிர்க்கு. க.

இ - ள். ஈதல் - வறியார்க்கே;—இசை படவாழ்தல் - அதனாற் புகழுண்டாகவாழக;—அதுவலலது உயிர்க்கு ஊதியம் இல்லை - அபபுகழல்லது மக்களுயிர்க்குப பயன் பிறிதொன்றில்லையாகலான். எ - று.

இசைபடவாழ்தற்குக் கல்வி ஆண்மை முதலிய பிறகாரணங்களும் உளவேனும்; "உணவின் பிண்ட முண்டி முதற்று" * ஆகலின், ஈதல் சிறந்ததென்பதற்கு ஞாபகமாக ஈதலென்றார். உயிர்க்கென்பது, பொதுப்படச்கூறினுரேனும் விலங்குயிர்கட்கேலாமையின், மக்களுயிர்மேனின்றது. (க)

* புறநானூறு, கஅ.

**உஉ. உரைப்பாருரைப்பவெல்லாமிரப்பார்க்கொன்
*றீவார்மே னிற்கும் புகழ். உ.**

இ - ள். உரைப்பார் உரைப்பவை எல்லாம் - உலகத்து ஒன்றுரைப்பாருரைப்பனவெல்லாம்—இரப்பார்க்கு ஒன்று ஈவார் மேல் நிற்கும் புகழ் - வறுமையாளிரப்பார்க்கு அவர்வேண்டிய தொன்றை யீவார்கணிற்கும் புகழாம். எ - று.

புகழ்தான் உரையும் பாட்டுமென இருவகைப்படும். * அவற்றுள் உரைப்பாருரைப்பவையென எல்லார்க்குமுரிய வழக்கினையே யெடுத்தாராயினும், இனம்பற்றிப் புலவர்க்கேயுரிய செய்யுளுங் கொள்ளப்படும்; படவே, பாடுவார் பாடுவனவெல்லாம் புகழா மென்பதனுமெம் பெற்றும். ஈதற்காரணஞ் சிறந்தமை இதனுள்ளுங் காண்க. இதனைப் பிறர்மேலும் நிற்குமென்பார் தாமெல்லாஞ் சொல்லுக, புகழ் ஈவார்மேனிற்குமென்றுரைப்பாருமுளர். அது புகழது சிறப்புநோக்காமையறிக. (உ)

**உஊ. ஒன்ரு வுலகத் தயர்ந்த புகழல்லாற்
பொன்ரு தி நிற்பதொன் றில். ஊ.**

இ - ள். ஒன்ரு உயர்ந்த புகழல்லால்-தனக்கு இணையின்ரு கவோங்கிய புகழல்லது—உலகத்துப் பொன்ரு தி நிற்பது ஒன்று இல் - உலகத்து இறவாதுநிற்பது பிறிதொன்றில்லை. எ - று.

இணையின்ரு கவோங்குதலாவது கொடுத்தற்கரிய உயிருறுப் புப்பொருள்களைக் கொடுத்தமைபற்றி வருதலால் தன்னொடொப்ப தின்றித் தானேயுயர்தல். அத்தன்மைத்தாகிய புகழே செய்யப்படுவதெனபதாம். இனி ஒன்ருவென்பதற்கு ஒருவார்த்தையாகச் சொல்லினெனவும், ஒருதலையாகப் பொன்ரு தி நிற்பதெனவும் உரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் புகழது சிறப்புக் கூறப்பட்டது. (ஊ)

**உஎ. நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்ரு தி புத்தே ளுலகு. எ.**

இ - ள். நிலவரை நீள் புகழ் ஆற்றின - ஒருவன் நிலவெல்லைக்கண்ணே{ பொன்ரு தி நிற்கும் புகழைச் செய்யுமாயின்,—புத்தேள் உலகு புலவரைப் போற்ரு தி - புத்தேளுலகம் அவனியல்லது தன்னையெய்தினின்ற ஞாலிகளைப்பேணுது. எ - று.

புகழுடம்பான் இவ்வுலகும் புத்தேளுடம்பான் அவ்வுலகும் ஒருங்கே யெய்தாமையின், புலவரைப்போற்ருதென்ரார். அவன்

* புறநானூறு, உள.

இரண்டிலுமும் ஒருங்கெய்துதல் "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்—வலவ னேவா வான வூர்தி—யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்து" * எனப் பிறராலுஞ் சொல்லப்பட்டது. (ச)

உகூறு. நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. இ.

இ - ள். நத்தம் (ஆகும்) கேடும் - புகழுடம்பிற்கு ஆக்கமா குங் கேடும்,—உளது ஆகும் சாக்காடும் – புகழுடம்புளதாகுஞ் சாக்காடும்,—வித்தகர்க்கல்லால் அரிது – நிதரப்பாடிடையார்க்க ல்லதில்லை. எ - று.

நத்தென்னுந் தொழிற்பெயர் விகாரத்தான் நத்தென்றாய், பின் அம்மென்னும் பகுதிபொருள் விகுதிபெற்று, நத்தமென்ற யிற்று. போலென்பது ஈண்டுரையசை. ஆகுமென்பதனை முன்னு ங்கூட்டி, அரிதென்பதனைத் தனித்தனி கூட்டியுரைக்க. ஆக்கமா குங்கேடாவது புகழுடம்பு செல்வமெயதப் பூதவுடம்பு நல்கூர் தல். உளதாகுஞ் சாக்காடாவது புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தல். நிலையாதனவற்றுள் நிலையினவெய்துவார் வித்தகரா கலின், வித்தகர்க்கல்லாலரிதென்றார். இவையிரண்டுபாட்டானும் புகழுடையாரெயதும் மேன்மை கூறப்பட்டது. (நி)

உகூசு. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று. ஈ.

இ - ள். தோன்றின் புகழொடு தோன்றுக - மக்களாய்ப் பிற க்கின் புகழுக்கேதுவாகிய குணத்தோடு பிறக்க;—அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று - அக்குணமில்லாதார் மக்க ளாய்ப் பிறத்தலின் விலங்காய்ப் பிறத்தல் நன்று. எ - று.

புகழ் ஈண்டு ஆகுபெயர். அஃதிலாரென்றமையின் மக்களா யென்பதனாலும், மக்களாய்ப் பிறவாமையென்ற அருத்தாபத்தியான் விலங்காய்ப் பிறத்தலென்பதனாலும், பெற்றும். இகழ்வாரின்மை யின், நன்றென்றார். (சு)

உகூஎ. புகழ்பட வாழாதார் தங்கோவார் தம்மை
யிகழ்வாரை கோவ தெவன். எ.

இ - ள். புகழ் பட வாழாதார் - தமக்குப் புகழுண்டாக வாழுமாட்டாதார்—தம் கோவார் - அதுபற்றிப் பிறரிகழ்தலஞ்

* புறநானூறு, உஎ.

இவ்விகழ்ச்சி தம்மாட்டாமையான் வந்ததென்று தம்மை நோவாதே—தம்மை இகழ்வாரை நோவது எவன் - தம்மை யிகழ்வாரை நோவதென்கருதி! எ - று.

புகழ்பட வாழலாயிருக்க அதுமாட்டாத சூற்றம்பற்றிப் பிற ரிகழ்தல் ஒருதலையாகலின், இகழ்வாரையென்றார். (எ)

உஉ. வசையென்பவையத்தார்க்கெல்லாமிசையென்னு மெச்சம் பெறாஅ விடின். அ.

இ - ள். இசை என்னும் எச்சம் பெறுவிடின் - புகழென்னு மெச்சம் பெறலாயிருக்க அது பெறுதொழிவராயின்,—வையத்தா ருள் எல்லாம் வசை என்ப - வையகத்தோர்கெல்லாம் அது தானே வசையென்று சொல்லுவர் நல்லோர். எ - று.

எச்சமென்றார், செத்தவரிறந்துபோகத் தான் இறவாது நிற்ற லின். இகழப்படுதற்குப் பிறிதொருகுற்றம வேண்டாவென்பது கருத்து. (அ)

உஉ. வசையிலா வண்பயன் குன்று மிசையிலா யாக்கை பொறுத்த நிலம். கூ.

இ - ள். இசை இலா யாக்கை பொறுத்த நிலம்-புகழில்லாத வுடம்பைச் சுமந்தநிலம்—வசை இலா வண்பயன் குன்றும் - பழி படில்லாத வளப்பத்தையுடைய விளையுள் குன்றும். எ - று.

உயிருண்டாயினும் அதனுற்பயன் கொள்ளாமையின் யாக்கை யென்னும், அது நிலத்திற்குப் பொறையாகலிற் பொறுத்தவென வுங் கூறினர். விளையுள் குன்றுதற்கேது பாவயாக்கையைப் பொ றுக்கின்ற வெறுப்பு. குன்றுமென இடத்துநிகழ் பொருளின் மே லிட்டிணேயின்றது. இவை நான்குபாட்டானும் புகழில் லாதாரது தாழ்வு கூறப்பட்டது. (கூ)

உச0. வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய வாழ்வாரே வாழா தவர். கூ0.

இ - ள். வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார் - தம்மாட்டு வசையுண்டாகாமல் வாழ்வாரே உயிர்வாழ்வாராவர்;—இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர் - புகழுண்டாகாமல் வாழ்வாரே இறந்தாராவர். எ - று.

வசையொழிதலாவது இசையென்னுமெச்சம் பெறுதலாயின மையின், இசையொழிதலாவது வசைபெறுதலாயிற்று. மேல்

இசையிலாடாக்கையென்றதனை விளக்கியவாறு. இதனுள் இவ்விரண்டும் உடன்கூறப்பட்டன. மறுமைப்பயன் "வானுறையுந் தெய்வத்துள் வைகுகப்படும்" * என மேலே கூறப்பட்டது; படவே, இல்லறத்திற்கு இவ்வுலகிற் புகழும் தேவருலகிறபோகமும் பயனென்பது பெறமும்.

இனி மனுமுதலிய அறநூல்களாற் பொதுவாகக்கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவா தொகுத்துக்கூறிய இவற்றுள்ளே அடங்கும்: அஃதறிதடக்கிக்கொளக; யாமுரைபபிறபெருகும். (கo)

இல்லறவியல் முற்றிற்று.

துறவறவியல்.

இனி முறையானே துறவறங்கூறிய தொடங்கினார். துறவறமாவது மேறகூறிய இல்லறத்தின வழுவாதொழுகி அறிவுடையராயப பிறப்பினையஞ்சி வீடுபேறறின்பொருட்டுத் துறநதார்க்கு உரித்தாய அறம். அதுதான வினைமாசுதீாநது அநதக்சரணங்கள் தூயவாதற பொருட்டு அவராறதாகைகபபடும் விரதங்களும், அவற்றுள் அவை தூயவாயவழி உதிப்பதாய ஞானமுமென இருவகைபபடும்.

விரதம்.

அவற்றுள் விரதங்களாவன இன்னவறஞ்செய்வலெனவும் இன்னபாவமொழிவலெனவும் தம்மாற்றலுக்கேற்ப வரைந்துகொளவன. அவைதாம் வரம்பிலவாகலிற் பெருகுமென்றஞ்சி, அவை தம்முள்ளே பலவறறையும் அகப்படுத்துநிறருஞ் சிறப்புடையன சிலவற்றை ஈண்டுக் கூறுவான்றொடங்கி, முதற்கண் அருளுடைமை கூறுகின்றார்.

உரிமை அதி.—அருளுடைமை.

அஃதாவது தொடர்புபற்றுது இயல்பாக எல்லாவுயிர்கண்மேலுஞ் செல்வதாகிய சருணை. ‖ இல்லறத்திற்கு அன்புடைமை போல இது துறவறத்திற்குச் சிறந்தமையின் முற்கூறப்பட்டது.

உசக. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொரு
பூரிபார்கண்ணு முள. க. [ட்செல்வம்

* திருக்குறள், கo.

இ - ள். செல்வத்துள் செல்வம் அருட்செல்வம் - செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட செல்வமாவது அருளான் வருஞ்செல்வம்,—பொருட்செல்வம் பூரியார்கண்ணும் உள-அஃதொழிந்த பொருளான் வருஞ் செல்வங்கள் இழிந்தார்கண்ணு முளவாம் ஆகலான். எ - று.

அருளான் வருஞ்செல்வமாவது உயிர்களேயோம்பி அவ்வறத்தான் மேம்படுதல். உயர்ந்தார்கண்ணேயல்லதில்லாத அருட்செல்வமே சிறப்புடைய செல்வம், ஏனை நீசர்கண்ணுமுளவாம் பொருட்செல்வங்கள் சிறப்பிலவென்பதாம். (க)

உசூஉ. நல்லாற்றூ ஞடி யருளாள்க பல்லாற்றூற்
றேரினு மஃதே துணை. உ.

இ - ள். நல்லாற்றான் நாடி அருள் ஆள்க - அளவைகளானும் பொருந்துமாற்றானும் நன்னூனெறியிலே நின்று, நமக்குத் துணையாம் அறம் யாதென்றாராய்ந்து, அருளுடையராக;—பல்லாற்றால் தேரினும் துணை அஃதே - ஒன்றையொன்றெவ்வாத சமயநெறிகளெல்லாவற்றானும் ஆராயந்தாலும் துணையாவது அவ்வருளே;பிறிதில்லை. எ - று.

அளவைகளாவன பொறிகளாற் காணுங்காட்சியும், குறிகளானுயத்துணரும் அனுமானமும், கருத்தாமொழியாகிய ஆகமமுமென மூன்று. ஒப்புப்பற்றியுணரும் உவமையும், இங்ஙனமன்றியின் இது கூடாதென்றுணரும் அருத்தாபத்தியும், உண்மைக்கு மாறுய இன்மையுமென இவற்றைக் கூட்டி ஆறென்பாருமுளர். இவையும் ஒருவாற்றான் அவற்றுள்ளே அடங்குதலின், மூன்றென்றலே கருத்து. பொருந்துமாறாவது இது கூடும் இது கூடாதெனத் தன்கண்ணே தோன்றுவது: இதனை வடநூலார் யுத்தியென்ப. ஆற்றானென்பது வேற்றுமைமயக்கம். ஒன்றையொன்றெவ்வாமையாவது மதவேறுபாட்டான் அளவைகளும் பொருள்களும் தம்முண்மாறுகோடல்; அன்னவாயினும் அருடானேயென்றற்கண் ஒக்குமென்பதாம். உயிரை விட்டு நீங்காத இருணமயினுமுதவலின், துணையென்றார். இவையிரண்டுபோட்டானும் அருளினது சிறப்புக் கூறப்பட்டது. (உ)

உசூஊ. அருள்சேர்ந்த நெஞ்சினர்க் கில்லை யிருள்சேர்ந்த
தின்னு வுலகம் புகல். ஊ.

இ - ள். இருள் சேர்ந்த இன்ன உலகம் புகல் - இருள் செறிந்த துன்பவுலகத்துட்சென்றுபுகுதல்—அருள் சேர்ந்த நெஞ்சினுக்கு இல்லை - அருள்செறிந்த நெஞ்சினையுடையார்க்கில்லை. எ - று.

இருள்செறிந்த துன்பவுலகமென்றது திணிந்தவிருளையுடைத்தாய்த் தன்கட்புக்கார்க்குத் துன்பஞ்செய்வதோர் நரகத்தை; அது நிலவுலகத்துள் ஓரிடமாகலின், உலகமெனப்பட்டது. (கூ)

உசசு. மன்னுயி ரோம்பி யருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை. சு.

இ - ள். மன் உயிர் ஓம்பி அருள் ஆள்வார்க்கு - நிலைபேறுடைய உயிர்களைப்பேணி அவற்றின்கண் அருளுடையனுவானுக்கு—தன் உயிர் அஞ்சும் வினை இல் என்ப - தன்னுயிர் அஞ்சுதற்கேதுவாகிய தீவினைகள் உளவாகாவென்று சொல்லுவர் அறிந்தோர். எ - று.

உயிர்களெல்லாம் நித்தமாதலின், மன்னுயிரென்றார். அஞ்சுதல் துன்பநோக்கியஞ்சுதல். அன்னவறத்தினேன் கொலைமுதலிய பாவங்கள் செய்யானெனவே, மறுமைக்கண் நரகம் புகாமைக்கேது கூறியவாறுயிற்று. (சு)

உசஎ. அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி. ரு.

இ - ள். அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை - அருளுடையார்க்கு இம்மையினும் ஒருதுன்பமுண்டாகாது;—வளி வழங்கும் மல்லல் மா ஞாலம் கரி - அதற்குக் காற்றியங்குகின்ற வளப்பத்தையுடைய பெரியஞாலத்து வாழ்வார் சான்று. எ - று.

சான்றுவார் தாங்கண்டு தேறிய பொருளைக் காணாதார்க்குத் தேற்றுதற்குரியவர். அருளாள்வார்க்கு அல்லலுண்டாக ஒருகாலத்தும் ஓரிடத்தும் ஒருவருங்கண்டறிவாரின்மையின், இன்மைமுகத்தான் ஞாலத்தார்பாவருஞ் சான்றென்பார், வளிவழங்குமல்லன்மாஞாலங் கரியென்றார்: எனவே, இம்மைக்கண்ணெய்துந் தெற்றும். ஞாலம் ஆகுபெயர். இவைமூன்றுபாட்டானும் அத்துணையடையார்க்கு இருமையினுந் துன்பமில்லாமை கூறப்பட்டது.(எ)

உசஅ. பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார். சு.

இ - ள். அருள் நீங்கி அல்லவை செய்து ஒழுகுவார் - உயிர்க்ணமாட்டிச் செய்யப்படும் அருளைத் தவிர்ந்து தவிரப்படுங் கொடி

மைகளைச் செய்தொழுகுவாரை—பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர் - முன்னும் உறுதிப்பொருளைச் செய்யாது தாந்துன்புறுகின்றமையை மறந்தவரென்று சொல்லுவர் நல்லோர். எ - று.

உறுதிப்பொருள் அறம். துன்புறுதல் பிறவித்துன்ப மூன்றினையும் அனுபவித்தல். மறந்திலராயின், அவ்வாறொழுகாரென்பது கருத்து. (கூ)

உசஎ. அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க் கிவ்வுலக மில்லா தியாங்கு. எ.

இ - ள். அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை - உயிர்கண் மேல் அருளில்லாதார்க்கு வீட்டுலகத்தின்பமில்லை,—பொருள இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாதியாங்கு - பொருளில்லாதார்க்கு இவ்வுலகதினபம் இல்லையாயினற்போல. எ - று.

அவ்வுலகம் இவ்வுலகம் என்பன ஆகுபெயர். இவ்வுலகத்தின் பங்கட்குப் பொருள் காரணமாவதுபோல, அவ்வுலகத்தின்பங்கட்கு அருள் காரணமென்பதாயிறது. (எ)

உசஅ. பொருளற்றூர் பூப்ப ரொருகா லருளற்று
றற்றூர்மற் றூத லரிது. அ.

இ - ள். பொருள் அற்றூர் ஒருகால் பூப்பர் - ஊழான் வறியராயினர் அது நீங்கிப் பின் ஒருகாலத்துச் செல்வத்தாற்பொலிவர்,—அருள் அற்றூர் அற்றூர் மறறு ஆதல் அரிது - அவ்வாறன்றி அருளிலாதார் பாவமறுமையின் அழிந்தாரே, பினனொருகாலத்தும ஆதலில்லை. எ - று.

மறறு வினைமாற்றின்கண் வந்தது. மேற்பொருளின்மையோடு ஒருவாறறுஞைபபுமை கூறினராகலின், அது மறுத்து, பிறவாற்றுள் அதனினுங் கொடிதென்பது கூறியவாறு. (அ)

உசகூ. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றுற்றேரி
னருளாதான் செய்யு மறம். கூ.

இ - ள். அருளாதான் செய்யும் அறம் தேரின் - உயிர்கண் மாட்டு அருள்செயயாதவன் செய்யுமறத்தையாராயின்,—தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்று - ஞானமில்லாதவன் ஒருகால் மெய்ப்பொருளை உணர்ந்தாற்போலும். எ - று.

மெய்ப்பொருள் மெய்ந்நூலிற்சொல்லும்பொருள். நிலைபெற்ற ஞானமில்லாதவன் இடையே மெய்ப்பொருளையுணர்ந்தால் அதனைத் தன்ஞானமின்மையால் தானேயழித்துவிடும்,அதுபோல அருளாதான் இடையே அறஞ்செய்தால் அதனைத் தன்னருளாமையால் தானேயழித்துவிடுமென்பதையிற்று; ஆகவே, பிறவறங்கட்கெல்லாம் அருளுடைமை மூலமென்பது பெற்றும். இவைநான்குபாட்டானும் அத்துணையில்லாதார்க்கு வருங்குற்றங் கூறப்பட்டது. (க)

உருo. வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து. கo.

இ - ள். வலியார் முன் தன்னை நினைக்க - தன்னின்வலியார் தன்னை நலிய வரும்பொழுது அவர் முன் தானஞ்சிநிறகு நிலையினை நினைக்க—தான் தனனின் மெலியாரமேல் செல்லுமிடத்து - அருளில்லாதவன் தன்னினெளியார்மேல் தான் நலியச்செல்லும் பொழுது. எ - று.

மெலியாரெனச் சிறப்புடைய உயிர்நிலைமேற் கூறினராயினும், ஏனையஃறினையுங் கொளளபபடும். அதனை நினைக்கவே இவ்வுயிர்க்கும் அவ்வாறே அச்சமாமென்றறிந்து அதன்மேல் அருளுடையனுமென்பது கருத்து. இதனால் அருள பிறத்தறகுபாயங் கூறபபட்டது. (கo)

உசூ ம் அதி.—புலான்மறுத்தல்.

அஃதாவது ஊனுண்டலையொழிதல். கொலைபபாவத்தைப் பின்னுமுளதாக்கலின் அதறகுக் காரணமாதலையும் முன்னும் அதனான் வருதலின் அதன்காரியமாதலையும் ஒருங்குடைத்தாய ஊனுணடல் அருளுடையார்க்கு இயைவதன்றுகலின், அதனை விலக்குதறகு, இஃதருளுடைமையின்பின் வைககப்பட்டது.

உருக. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள். க.

இ - ள். தன் னூன் பெருக்கற்குத் தான் பிறிது னூன் உண்பான் - தன்னுடம்பை வீக்குதற்பொருட்டித் தான் பிறிதோருயிரினுடம்பைத் தின்பவன்—எங்ஙனம் ஆளும் அருள் - எவ்வகையான் நடத்தும் அருளினை! எ - று.

பயனிலாத ஊன் பெருக்கலைப் பயனெனக்கருதி இக்கொலை செய்வானே அறிவிலாத கொடியோனென்றவாருமிற்கும். எங்ஙனமாருமருளென்பது ஆளானென்பது பயப்பதின்ற இதழ்ச்சிக்குறிப்பு. (க)

உரை. பொருளாட்சி போற்றுதார்க் கில்லை யருளாட்சி யாங்கில்லை யூன்றின் பவர்க்கு. உ.

இ - ள். பொருளாட்சி போற்றுதார்க்கு இல்லை - பொருளாற் பயன்கோடல் அதனைப் பாதுகாவாதார்க்கில்லை;—ஆங்கு அருளாட்சி ஊன் தின்பவர்க்கு இல்லை - அதுபோல அருளாற்பயன்கோடல் ஊன்றின்பவர்க்கில்லை. எ - று.

பொருட்பயனிழத்தற்குக் காரணம் காவாமை போல், அருட்பயனிழத்தற்கு ஊன்றினல் காரணமென்பதாயிறறு. ஊன்றின்றாயினும் உயிர்கட்கு ஒரு தீங்கு நினையாதார்க்கு அருளாடற்கிழுக்கில்லையென்பாரை மறுத்து, அஃதண்டென்பது இவையிரண்டுபாட்டானுங் கூறப்பட்டது. (உ)

உரை. படைகொண்டார் நெஞ்சம்போனன் றூக்காதொ னுடல்சுவை யுண்டார் மனம். ஊ. [ன்ற

இ - ள். படை கொண்டார் நெஞ்சம்போல் - கொலைக்கருவியைத் தங்கையிற்கொண்டவர் மனம் அதனுற் செயயுங் கொலையையே நோக்குவதல்லது அருளே நோக்காதவாறுபோல—ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம் நன்று ஊக்காது - பிறிதோருயிரினுடலைச் சுவைப்படவுண்டவர் மனம் அவ்வூனையே நோக்குவதல்லது அருளே நோக்காது. எ - று.

சுவைப்படவுண்டல் காயங்களான் இனிய சுவைத்தாக்கியுண்டல். இதனுல் ஊன்றினுர் மனம் தீங்குநினைத்தல் உயமவளவாயாற் சாதித்து, மேலது வலியுறுத்தப்பட்டது. (ஊ)

உரை. அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறன் பொருளல்ல தவ்வூன் றினல். எ.

இ - ள். அருள் யாதெனின் கொல்லாமை - அருள் யாதெனின், கொல்லாமை;—அல்லது (யாதெனின்) கோறல் - அருளல்ல தியாதெனிற் கோறல்;—அவ்வூன் றினல் பொருளல்லது - ஆகலான், அக்கோறலான் வரத ஊனைத்தின்னுத பூவம். எ - று.

உபசாரவழக்காற் கொல்லாமை கோறலாகிய காரியங்களே அருள் அல்லதெனக் காரணங்களாக்கியும், ஊன்றின்கையாகிய காரணத்தைப் பாவமெனக் காரியமாக்கியுங்கூறினர். 'அருளல்லது கொடுமை. சிறப்புப்பற்றி அறமும் பொருளெனப்படுதலின், பாவம் பொருளல்லதெனப்பட்டது. கோறலென முன்னின்றமையின், அவ்வூனென்றார். இனி இதனை இவ்வாறன்றி அருளல்லதென்பதனை ஒன்றாக்கி,கொல்லாமை கோறலென்பதற்குக் கொல்லாமையென்னும் விரதத்தையழித்தலென்றுரைப்பாருமுளர். (ச)

உரை. உண்ணுமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணுத்தல் செய்யா தளறு. ரை.

இ - ள். உயிர் நிலை ஊன் உண்ணுமை உள்ளது - ஒருசாருயிர் உடம்பின்கண்ணே நிற்றல் ஊனுண்ணுமையென்கின்ற அறத்தினை; உண்ணு அளறு அண்ணுத்தல் செய்யாது - ஆகலான் அந்நிலை குலைய ஒருவன் அதனையுண்ணுபவின், அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ்தற்கு அங்காவாது. எ - று.

உண்ணப்படும் விலங்குகள் அதனுற்றேயந்து சிலவாக ஏனைய பலவாய வருதலின், உண்ணுமையுளதுயிர்நிலையென்றார். | உண்ணினென்பது உண்ணவெனத் திரிந்துநின்றது. ஊனுண்டவன் அப்பாவத்தான் நெடுங்காலம் நிரயத்துளழுந்துமென்பதாம் கொலைப்பாவம் கொன்றார்மேனிறறலின் பின்னூனுண்பார்க்குப் பாவமில்லையென்பாரை மறுத்து, அஃதுண்டென்பது இவ்விரண்டுபாட்டானும் கூறப்பட்டது. (ரு)

உரை. தினற்பொருட்டாற் கொல்லாதுலகெனின்யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில். சு.

இ - ள். தினற்பொருட்டு உலகு கொல்லாது எனின் - பேதைமை காரணமாகவல்லது ஊன்றின்கை காரணமாக உலகங் கொல்லாதாயின்,—விலைப்பொருட்டு ஊன் தருவார் யாரும் இல் - பொருள் காரணமாக ஊன் விற்பார் யாவரும் இல்லை. எ - று.

உலகென்பது ஈண்டு உயிர்ப்பன்மைமேனின்றது. பின்னிகழ்ந்தின்கை முன்னிகழ்ந்கொலைக்குக் காரணமாகாமையின் தின்பார்க்குக் காரணத்தான வரும்பாவமில்லையென்ற வாதியைநோக்கி, அருத்தாபத்தியளவையாற் காரணமாதல் சாதித்தலின், இதனான் மேலது வலியுறுத்தப்பட்டது. (சு)

உரிஎ. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணு ணுணர்வார்ப் பெறின். எ.

இ - ள். புலால் பிறிதொன்றன் புண் - புலாலாவது பிறிதோருடம்பின் புண்;—அது உணர்வார்ப பெறின் உண்ணாமை வேண்டும் – அது ணுய்தன்மை யறிவாரைப்பெறின், அதனை உண்ணுதொழியல்வேண்டும். எ - று.

அஃதென்னல் வேண்டுமாய்தம் விகாரத்தாற்றொக்கது. அம்மேய்ம்மையுணராமையின், அதனையுண்ணின்றாரென்பதாம். பொருநதுமாற்றாணும் * புலாலுண்டல் இழிந்ததென்பது இதனாற் கூறப்பட்டது. (எ)

உரிஅ. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணு
ருயிரிற் றலைப்பிரிந்த வூன். அ.

இ - ள். செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் - மயக்கமாகிய குற்றத்தினீங்கிய அறிவினையுடையார்—உயிரின் தலைப்பிரிந்த ஊன் உண்ணார் - ஒருயிரினீங்கிவந்த ஊனையுண்ணார். எ - று.

! தலைப்பிரிவென்பது ஒருசொல். பிணமென ஊனின்மெய்ம்மை தாமேயுணர்தலின், உண்ணாரென்றார். (அ)

உரிக. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று. க.

இ - ள். அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் - தீயின்கண் நெய முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம்வேள்வி வேட்டலினும்;—ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று - ஒருவிலங்கினுயிரைப்போக்கி அது நின்ற ஊனையுண்ணாமை நன்று. எ - று.

அவ்வேள்விகளான் வரும் பயனினும் இவ்விரதத்தான் வரும் பயனே பெரிதென்பதாம். (க)

உரிக0. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும். க0.

இ - ள். கொல்லான் புலாலை மறுத்தானை-ஒருயிரையுங்கொல்லாதவணுமாய்ப் புலாலையுமுண்ணாதவனை—எல்லாவுயிரும் கைகூப்பித் தொழும் - எல்லாவுயிருங் கைகுவித்துத் தொழும். எ - று.

* பொருந்துமாறு—யுக்தி.

இவ்விரண்டாறும் ஒருங்குடையார்க்கல்லது ஒன்றேயுடையார்க்கு அதனுற பயனில்லையாகலின், கொல்லாமையுமுடன்கூறினார். இப்பேராருளுடையான் மறுமைக்கட் டேவரின் மிக்கதெனவே அப்பயனது பெருமை கூறியவாறு. இவைமூன்றுபாட்டானும் ஊனுண்ணுமையதுயர்ச்சி கூறப்பட்டது. (கஅ)

உளம் அதி.—தவம்.

அஃதாவது மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கலும், கோடைக்கண் வெயினிலை நிற்றலும், மாரியினும பனியினும் நீர்நிலை நிறறலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவறறுற் றம்முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்து, பிறவுயிர்களையோம்புதல். புலான்மறுத்து உயிர்களை மேல் அருண் முதிர்ந்தழிச் செயப்படுவதாகலின், இது புலான்மறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

உசுக. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை யற்றே தவத்திற் குரு. க.

இ - ள். தவத்திற்கு உரு - தவத்தின் வடிவு—உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செயயாமை அற்றே - உண்டிசுருக்கன்முதலியவற்றுல் தம்முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்தலும் தாம் பிறவுயிர்கட்குத் துன்பஞ்செயயாமையுமாகிய அவ்வளவிற்று. எ - று.

மற்றுள்ளனவெல்லாம் இவற்றுள்ளே அடங்குதலின், அற்றே யெனத் தேற்றேகாரங்கொடுத்தார். தவத்திற்குருவற்றென்பது யானையதுகோடு கூரிதென்பதனை யானைக்குக் கோடு கூரிதென்றற்போல அருவதன்பொருட்கண் நான்காவது வந்த மயக்கம். இதனுல் தவத்தலிலக்கணங் கூறப்பட்டது. (க)

உசுஉ. தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை யஃகிலார் மேற்கொள் வது. உ.

இ - ள். தவமும் தவமுடையார்க்கு ஆகும் - பயனேயன்றித் தவந்தானும் உண்டாவது முற்றவமுடையார்க்கே,—அதனை அஃது இலார் மேற்கொள்வது அவம் - ஆகலான், அத்தவத்தை அம்முற்றவமில்லாதார் முயல்வது பயனின்முயற்சியாம். எ - று.

பரிசயத்தால் அறிவுமாற்றலுமுடையராய் முடிவுபோக்கலின் தவமுடையார்க் காகுமென்றும், அஃதில்லாதார்க்கு அவையின்மையின் முடிவுபோகாமையின் அவமாமென்றுங் கூறினார். (உ)

உசுஈ. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டிமறந்தார்கொல் மற்றை யவர்க டவம். ஈ.

இ - ள். மற்றையவர்கள் - இல்லறத்தையே பற்றி நிற்பார்—துறந்தார்க்குத் துப்புரவு வேண்டிய தவம் மறந்தார்கொல் - துறந்தார்க்கு உண்டியும் மருந்தும உறையுளுமுதலிய விரும்பித் தாந் தவஞ்செய்தலை மறந்தார்போலும்' எ - று.

துப்புரவு அனுபவிக்கப்படுவன. * "வேண்டிய வேண்டியாங் கெய்த" ற்பயத்தனாகலின் யாவராலுஞ்செய்யப்படுவதாய தவத்தைத் தாஞ்செய்யுந் தானத்தின்மேல் விருப்பமிகுதியான் மறந்தார்போலுமெனவே, தானத்திற்றவம் மிக்கதென்பது பெற்றும்.()

உசுஉ. ஒன்னூர்த் தெறலு முவந்தாரை யாக்கலு மெண்ணிற் றவத்தான் வரும். உ.

இ - ள். ஒன்னூர்த் தெறலும் - தம்மறத்திற்குப் பகையாய் அழிவுசெயதாரைக் கெடுத்தலும்—உவந்தாரை ஆக்கலும் - அதனையுவந்தாரை உயர்த்தலுமாகிய இவ்விரண்டையும்—எண்ணின் தவத்தான் வரும் - தவஞ்செய்வார் நினைப்பராயின், அவர் தவவலியான் அவை அவர்க்குளவாம். எ - று.

மூற்றத்துறந்தார்க்கு ஒன்னூரும் உவந்தாரும் உண்மை கூடாமையின், தவத்திறகேற்றியுரைக்கப்பட்டது. எண்ணினென்றதனான், அவர்க்கு அவையெண்ணுமை இயல்பென்பது பெற்றும். ஒன்னூர்பெரியராயினும் உவந்தார் சிறியராயினும், கேடுமாக்கமும் நினைத்தனையானே வந்து நிற்குமெனத் தவஞ்செயவார்மேலிட்டுத் தவத்தினதாற்றல் கூறியவாறு. (ச)

உசுஊ. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ மீண்டு முயலப் படும். ஊ.

இ - ள். வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் - முயன்றல் மறுமைக்கட்டாம் வேண்டிய பயன்கள் வேண்டியவாறே பெறலாம் ஆதலால்,—செய்தவம் ஈண்டு முயலப்படும் - செய்யப்படுவதாய தவம் இம்மைக்கண் அறிவுடையோரான் முயலப்படும். எ - று.

---

* திருக்குறள்—உசுஊ.

ஈண்டென்பதனுன் மறுமைக்கனென்பது பெற்றும். மேற் கதி, வீடுபேறுகள் தவத்தானன்றி எய்தப்படாவென்பதாம். இவை நான்குபாட்டானும் தவத்தது சிறப்புக் கூறப்பட்டது. (ரி)

உசுசு. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு. சுசு.

இ - ள். தங்கருமம் செய்வார் தவம் செய்வார் - தங்கருமஞ் செயவாராவார் துறந்து தவத்தைச்செயவார்;—மற்று அல்லார் ஆசையுள் பட்டு அவம் செயவார் - அவரையொழிந்த பொருளின் பங்களைச செபவாரா அவற்றின்கணுசையாகிய வலையுட்பட்டுத் தம க்குக் கேடு செயவாரா. எ - று.

அநித்தமாய் மூவகைத் துன்பத்ததாய் உயிரின்வேறுய உட றகு வருத்தம் வருமென்றெழியாது தவத்தினைச் செய்ய, பிறப்புப் பிணிமூப்பிறப்புச்சனான் அநாதியாகத் துன்பமெயதிவருகின்ற உயிர் ஞானம் பிறநது வீடு பெறுமாகலின், தவஞ்செயவாரைத் தங்கருமஞ்செயவாரென்றும், கணத்துளழிவதாய சிறறின்பத்தின் பொருட்டுப் பலபிறவியுந் துன்புறத்தக்க பாவஞ்செயதலோட லின், அல்லாதாரை அவஞ்செயவாரென்றும், கூறினர். மற்று வினைமாற்றின்கண் வ தது. (சு)

உகூஎ. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. எ.

இ - ள். சுடச் சுடரும் பொன்போல் - தீயின்கணுேடும் பொன்னுக்கு அது சுடச்சுடத் தன்னெடு கலந்த குற்றநீங்கி ஒளி மிகுமாறுபோல—நோற்கிற்பவர்க்குத் துன்பம் சுடச் சுட ஒளி விடும் - தவஞ்செயய வல்லார்க்கு அதனுன் வருந்துன்பம் வருத்த வருத்தத் தம்மொடு கலந்த பாவநீங்கி ஞானமிகும். எ - று.

சுடச்சுடரும் பொன்போலென்றராயினும், கருத்துநோக்கி இவ்வாறுரைக்கபபட்டது. ஒளிபோலப் பொருள்களை விளக்க லின், ஒளியென்றார். (எ)

உசுஅ. தன்னுயிர் தானறப் பெற்றுனே யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும். அ.

இ - ள். தன் உயிர் தான் அறப் பெற்றுனே - தன்னுயிரைத் தானதனக்குரித்தாகப் பெற்றவனே—ஏனைய மன்னுயிரெல்லாம் தொழும் - பெரியனவாகிய மன்னுயிர்களெல்லாந்தொழும். எ-று.

தனக்குரித்தாதல் தவமாகிய தன்கருமஞ்செய்தல். அதனினுங்குப் பெறுதற்கரிய தின்மையின், பெற்றானென்றார். அது பெறுதனவென்றது ஆசையுட்பட்டு அவஞ்செயயுமுயிர்களே. சாபமும ருளுமாகிய இரண்டாற்றலுமுடைமையின், தொழுமென்றார். (அ)

உசுசூ. |கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னூற்ற றலைப்பட் டவர்க்கு.

இ - ள். கூற்றம் குதித்தலும் கைகூடும் - கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாம்—நோற்றலின் ஆற்றல் தலைபபட்டவர்கு - தவத்தான் வரும் ஆற்றலைத் தலைபபட்டார்க்கு. எ - று.

நபபும்மை அது கூடாமை விளக்கிற்று; மன்னுயிரெல்லாந் தொழுதலேயன்றி இதுவுங்கைகூடுமென |எச்சவும்மையாகவுரைப் பினுமமையும். ஆற்றல் சாபவருள்கள். இவைதான்குபாட்டாணும் தவஞ்செயவாரது உயர்ச்சி கூறபபட்டது. (கூ)

உஎ0. இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். க0.

இ – ள். இலர் பலராகிய காரணம் - உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்வார் பலராதறகுக் காரணம் யாதெனின்,—நோற்பார் சிலர் நோலாதவர் பலர் - அது தவஞ்செய்வார் சிலராக அது செயயாதார் பலராதல். எ - று.

செல்வநல்குரவென்பன ஈண்டறிவினது உண்மையின்மைகளேயுங் குறித்து நின்றன; என்னை? "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதடைமை—பண்ணப் பிணைத்த பெருஞ் செல்வம்" * என்பராகலின். நோறபார் சிலரெனக் காரணங் கூறினமையான், காரியம் வருவித்தரைக்கப்பட்டது. தவஞ்செயயாதார்க்கு இம்மையின்பமுமில்லையென இதனால் அவரது தாழ்வு கூறப்பட்டது.

உஅம் அதி.—கூடாவொழுக்கம்.

அஃதாவது தாம் விட்ட சாமவின்பத்தை உரனின்மையிற் பின்னும் விரும்புமாறுதோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்

* நாலடியார், அறிவின்மை,—நுண்ணுணர் வின்மை வறுமை யஃதடைமை—பண்ணப் பிணைத்த பெருஞ்செல்வ - மெண்ணுங் காற்—பெண்ணவா யாணிழந்த பேடி யணியாரோ—தண்ணவாத் தக்க கலம்.

தோடு பொருந்தாததாய தியவொழுக்கம். அது விலக்குதற்கு இது தவத்தின்பின் வைக்கப்பட்டது.

உஎக. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க ளைந்து மகத்தே நகும். க.

இ - ள். வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் — வஞ்சம் பொருந்திய மனத்தையுடையவனது மறைந்தவொழுக்கத்தை—பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் - உடம்பாய அவனெடு கலந்து நிற்கின்ற பூதங்களைந்துங்கண்டு தம்முள்ளே நகும். எ - று.

காமம் தன்கண்ணே தோன்றி நலியாநிற்கவும் அதனதின்மை கூறிப் புறத்தாரை வஞ்சித்தலின் வஞ்சமனமென்றும், அந்நலிவு பொறுக்கமாட்டாதொழுகுங் களவொழுக்கத்தைப் படிற்றொழுக்கமென்றும், உலகத்துக்களவுடையார் பிறரறியாமற் செயவனவற்றிற்கு ஐம்பெரும்பூதங்கள் சான்றுகலின், அவ்வொழுக்கத்தையும் அவன்மறைக்கின்றவாறறையுமறிந்து அவனறியாமற் றம்முள்ளே நகுதலின், அகத்தேநகுமென றுங்கூறினார். செயதகுற்றம் மறையாதாகலின், அவ்வொழுக்கம் ஆகாதென்பது கருத்து. (க)

உஎஉ. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சா னாண மி குற்றப் படின். உ.

இ - ள். வான் உயர் தோற்றம் எவன் செய்யும் - ஒருவனுக்கு வான்போலுயர்ந்த தவவேடம் என்ன பயனைச் செய்யும்,—தான் அறி குற்றம் தன் நெஞ்சம் படின் - தான் குற்றமென்றறிந்த அதன்கண்ணே தன்னெஞ்சு தாழுமாயின். எ - று.

வானுயர்தோற்றமென்பது "வான்மூய்குடி" * என்றாற் போல இலக்கணையாய்வழக்கு. அறியாது செய்த குற்றமல்லது அறிந்தவைத்துச் செயத குற்றங் கழுவப்படாமையின், நெஞ்சு குற்றத்தாயே விடும்; விடவே, நின்ற வேடமாத்திரத்திற்குப் புறத்தாரை வெருட்டதலேயல்லது வேறுபயனில்லையென்பதாம். (உ)

உஎங. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம் புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று. ங.

இ - ள். வலி இல் நிலைமையான் வல்லுருவம் - மனத்தைத் தன்வழிப்படுத்தும் வலியில்லாத இயல்பினையுடையான் வலியுடையார் வேடத்தைக்கொண்டு தான் அதன் வழிப்படுதல்—பெற்றம்

* நாலடியார், குடிப்பிறப்பு—உ.

புலியின்மேல் போர்த்த மேய்ற்றற்று - பசு காவலர் கடியாமற் புலியின்மேலிட போர்த்துப பைங்கூழை மேய்ந்தாற்போலும். எ — று.

|இல்பொருளுவமை. வலியினிலைமையானென்ற அளை—யாலும், மேயாதறெனலுந் தொழிலுவமையாலும், வல்லுருவத்தோடு மனவழிப்படுதலென்பது பெற்றாம். காவலர் கடியாமை புலி புற்றின்ஞதென்பதனாலும், அச்சத்தாலுமாம்; ஆகவே, வல்லுருவங்கோடற்குப் பல அனனகாரணங்களான் உலகத்தார் அயிராமையாயிற்று. இவ்வாறு தனக்குரிய இல்லாளையுத்துறந்து வலியமின்றிய பிறர் அயிராத வலலுருவமுங்கொணடு நினறவன மனவழிப் படுதலாவது தன மனமோடியவழியே ஒடி மறைந்து பிறர்க்குரிய மகளிரைவிழைதலாம். அவவாறுதல், பெறறம் தனக்குரிய புல்லிவிடடுப் பிறாகுரிய பைங்கூழை மேயாதாறபோலுமென்ற உவமையான் ஆறிக. (க)

உஎச. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று. ச.

இ - ள். தவம் மறைந்து அல்லவை செய்தல் - அவ்வடி—லைமையான் தவவேடத்தினகண்ணே மறைந்துநின்று தவமல்லவற்றைச் செயதல்—வேட்டுவன் புதல் மறைந்து புள் சிமிழ்த்தாறு - வேட்டுவன் புதலின்கண்ணே மறைந்துநின்று புட்களைப் பிணித்தாற்போலும். எ — று.

தவம் ஆகுபெயர். தவமல்லவற்றைச் செயதலாவது பிறர்க்குரிய மகளிரைத் தன்வயத்ததாக்குதல். இதுவும் இதொழிலுவமையானறிக. (ச)

உஎடு. பற்றற்றேமென்பார்படிற்றொழுக்கமெற்றென்றேதம் பலவுந் தரும். டு.

இ - ள். பற்று அற்றேம் என்பார் படிற்றொழுக்கம் - தம்மைப் பிறர் நன்கு மதித்தறபொருட்டு யாம் பற்றற்றேமென்று சொல்வாரது மறைந்தவொழுக்கம்,—எற்று எற்று என்று ஏதம் பலவும் தரும் - அப்பொழுது இனிதுபோலத் தோன்றுமாயினும், பின் என்செயதேம் என்செயதேமென்று தாமேயிரங்கும்வகை, அவர்க்குப் பலதுன்பங்களையுங் கொடுக்கும். எ - று.

---

* இல்பொருளுவமை—அநுதவுவமை.

சொல்லளவல்லது பற்றறுமையின், பற்றற்றேமென்பாரென்றும், சிறிதாய்க் கணத்துள்ளே அழிவதாய இன்பத்தின்பொருட்டுப் பெரிதாய நெடுங்காலநிற்பதாய பாவத்தைச் செயவார் அதன் விளைவின்கண் அந்தோ வினையேயென்றழுங்குவராகலின், எற்றெறென்றுங் கூறினர். இவையெந்தப்பாட்டானும் கூடாவொழுக்கத்தினிழுக்கம் கூறப்பட்டது. (சு)

உஎசு. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணு ரில். சு.

இ - ள். நெஞ்சின் துறவார் - நெஞ்சாற் பற்றறுதலைத்து—துறந்தார்போல் வஞ்சித்து வாழவாரின் — பற்றற்றாரேபோன்று தானஞ்செயவாரை வஞ்சிதது வாழுமவர்போல—வன்கணர் இல்லை - வனகண்மையையுடையார் உலகத்தில்லை. எ - று.

தானஞ்செயவாரை வஞ்சித்தலாவது யாம் மறுமைக்கட்டேவராதபொருட்டு இவ்வருதவாக்கு இனனதீதுமென்று அறியாதீதாரை அதுகொண்டு இழிபிறபபினராக்குதல். அவர இழிபிறபபினராதல் ‡ "அடங்கலாக் கீந்த தானப் பயத்தினு லலறு மூக்கீர்த்—தடங்கடனடுவுட் டீவு பலவுள வவற்றுட் டோன்றி—யுடம்பொடு முகங்க ளொவ்வா சூழ்சனி மாகதி வாழ்வர்—மடங்கலஞ் சேறத் துப்பின் மானவேன் மன்ன ரேறே." * என்பதனுணர்க. தமக்கு அவனசெயதார்க்கு ஆசாதன விளைத்தலின, வன்கணரில் லென்றார். (சு)

உஎஎ. புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி மூக்கிற் கரியா ருடைத்து. எ.

இ - ள். குன்றிப்புறம் கண்டு அனையரேனும் - குன்றியின்புறம்போல வேடததாற் செம்மையுடைய ராயினும்—குன்றி மூக்கின் அகம் கரியார் உடைத்து - அதன மூக்குப்போல மனமிருண்டிருப்பாரை உடைத்து உலகம். எ - று.

குன்றி ஆருபெயர். செம்மை கருமையென்பன பொருளின் † கணிறத்தை விட்டுச் செப்பத்தினும் அறியாமையினுஞ் சென்றனவாயினும், பன்பாலொத்தலின், இவை பன்புவமை: "கூழின் மலிமணம் போன்றிரு ளாநின்ற கோகிலமே" ‡ என்பதுமது. (எ)

* சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், தானப்பயன், கச.

† பொருள்—உபமேயம்.

‡ திருச்சிற்றம்பலக்கோவையார், ஈஉஉ—வாழும் படியொன்றுங் கண்டிலம் வாழியிம் மாம்பொழிற்றேன்—சூழு மூகச்சுற்றும்

உஎஅ. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். அ.

இ - ள். மாசு மனத்தது ஆக - மாசு தம்மனத்தின்கண்ணதாக—மாண்டார் நீராடி – பிறர்க்குத் தவத்தான் மாட்சிமையுடையராய் நீரின்மூழ்கிக்காட்டி—மறைந்து ஒழுகும் மாந்தர் பலர் - தாம் அதன்கண்ணே மறைந்து செல்லும மாந்தர் உலகத்துப பலர். எ - று.

மாசு காம வெகுளி மயக்கங்கள். அவை போகற்கன்றி மாண்டாரென்று பிறர் கருதுதற்கு நீராடுதலான, ஆ தொழிலை அவர் மறைதற்கிடனுக்கினர். இனி மாண்டார் நீராடியெனபதற்கு மாட்சிமைபபட்டாரது நீர்மையையுடையராயென உரைப்பாருமுளர். இவைமூன்றுபாட்டானும் அவ்வொழுகுகமுடையாரது குற்றமும் அவரையறிந்து நீக்கல்வேண்டுமென்பதும் கூறப்பட்டன. (அ)

உஎகூ. கணிகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல். கூ.

இ - ள். கணி கொடிது யாழ் கோடு செவ்விது - அம்பு வடிவாற்செவ்விதாயினும், செயலாறகொடிது; யாழ கோடுடால் வளைந்ததாயினும், செயலாறசெவவிது;—ஆங்கு அன்ன வினைபடு பாலால் கொளல் - அவ்வகையே தவருசெயவோரையுங் கொடியர் செவ்வியரென்பது, வடிவாறகொளளாது, அவா செயல்பட்ட கூற்றுனே அறிந்துகொளக. எ - று.

கணைக்குச்செயல் கொலை. யாழுக்குசெயல் இசையாலின்பம் பயத்தல். அவ்வகையே செயல் பாவமாயிற கொடிய ரெனவும், அறமாயிற் செவவியரெனவுங் கொள்கவென்பதாம். இதனை அவரையறியுமாறு கூறப்பட்டது. (கூ)

உஅo. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின். கo.

இ - ள். மழித்தலும் நீட்டலும் வேண்டா - தவஞ்செயவார்க்குத் தலேமயிரை மழித்தலுஞ் சடையாக்கலுமாகிய வேடமும்வேண்டா,—உலகம் பழித்தது ஒழித்துவிடின்-உயர்ந்தோர் தவத்திற காகாதென்று குற்றங்கூறிய ஒழுக்கத்தைக் கடிந்துவிடின். எ - று.

பற்றின வாற்றெண்டை யங்கனிவா—யாழின் மொழிமங்கை பங்கன்சிற் றம்பல மாதரியாக்—கூழின் மலிமனம் போன்றிரு ளாகின்ற தோலிலமே.

பறித்தலும் மழித்தலுளடங்கும். மழித்தலென்பதே தலைமயிரை உணர்த்தலின், அது கூரையாயினர். இதனாற் கூடாவொழுக்கமில்லாதார்க்கு வேடமும் வேண்டாவென அவரது சிறப்புக் கூறப்பட்டது. (ச0)

உசும் அதி.—கள்ளாமை.

அஃதாவது பிறருடைமையாயிருப்பதியாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக்கொள்ளக் கருதாமை. கருதுதலும் செயதலோடொத்தலின், கள்ளாமையென்றார். இல்வாழ்வார்க்காயின் தமரோடு விளையாட்டுவகையால் அவரை வஞ்சித்துக் கோடற்கு இயைந்த பொருள்களே அங்ஙனங்கொள்ளினும் அமையும், துறந்தார்க்காயின் அதனைக் கருதியவழியும் பெரியதோரிழுக்காம் ஆகலின், இது அறவறமாயிறது. புறத்துப்போகாது மடங்கி ஒருதலைப்பட்டு உயிரையே நோக்கறபாலதாய அவர்மனம் அஃதொழிந்து புறத்தே போந்து பஃறலைபபட்டு உடம்பின்பொருட்டுப் பொருளை நோக்குதலேயன்றி, அது தனனையும் வஞ்சித்துக்கொள்ளக்கருதுதல் அவர்க்குப பெரியதோரிழுக்காதல் அறிக. இவ்வாறு வாயமை முதற் கொல்லாமையீறிய ஞானகதிகாரத்திறகுமொக்கும். பொருள்பற்றி நிகழுங் குறறத்தை விலக்குகின்றதாகலின், இது காமம் பற்றி நிகழ்வதாய கூடாவொழுக்சத்தின்பின் வைக்கப்பட்டது.

உஅக. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொ
கள்ளாமை காக்கதன் னெஞ்சு. க. [ன்றுங்

இ—ள். எள்ளாமை வேண்டுவான் என்பான் - வீட்டினீயிக ழாது விரும்புவான் இவனென்று தவத்தோரான் நன்குமதிக்கப் படுவான்—எனைத்தொனறும் கள்ளாமை தன் நெஞ்சு காக்க - யாதொருபொருளையும் பிறரை வஞ்சித்துக்கொள்ளக் கருதாவகை தன்னெஞ்சினைக் காக்க. எ - று.

எள்ளாதென்னும் எதிர்மறைவினையெச்சம் எள்ளாமையெனத் திரிந்து நின்றது. வீட்டினீயிகழதலாவது காட்சியே அளவையாவதென்றும், நிலம், நீர், தீ, வளியெனப் பூதம் நானகேயென்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தாறேறறிப் பிரிவான் மாய்வதாய உடம்பின்கண்ணே அறிவு மதுவின்கட்களிப்புப்போல வெளிப்பட்டழியுமென்றும், இறநதவுயிர் பின் பிறவாதென்றும், இன்பமும் பொருளும் ஒருவனுற செயயப்படுவதென்றுஞ் சொல்லும் உலோகாயதமுதலிய மயக்கநூல்களைத் தெளிந்து, அவற்றிற் கேற்ப ஒழுகுதல். ஞானத்திற்கேதுவாய மெயநனூற்பொருளையே

னும் ஆசிரியனே வழிபட்டன்றி அவனைவஞ்சித்துக் கொள்ளின், அதுவுங்களவாமாகலின், எனைத்தொன்றுமென்றார். நெஞ்சுகள்ளாமற் காச்சவெனவே, துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதல் கள்ளக்கருதுதலென்பது பெற்றாம். (க)

உஅஉ. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கொள்வே மெனல். உ.

இ - ள். உள்ளத்தால் உள்ளலும் தீதே — குற்றங்களைத் தந் நெஞ்சாற் கருதுதலும் துறந்தாக்குப் பாவம்;—பிறன் பொருளைக் கள்ளத்தால் கொள்வேம் எனல் - ஆதலால், பிறனொருவன்பொருளை அவன் அறியாவகையால் வஞ்சித்துக்கொள்வேமென்று கருதற்க. எ - று.

உள்ளத்தாலென வேண்டாது கூறினார், அவருள்ளம் ஏனையாருள்ளம் போலாது சிறப்புடைத்தென்பது முடித்தற்கு. உள்ளலுமென்பது இழிவுசிறப்பும்மை. அல்லிருதி வியங்கோளெதிர்மறைக்கண்வந்தது. இவையிரண்டுபாட்டானும் இருகடைச்சுக் களவாவது இதுவென்பதூஉம அது கடியப்படுவதென்பதூஉஞ் கூறப்பட்டன. (உ)

உஅஊ. களவினு லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும். ஊ.

இ - ள். களவினுல் ஆகிய ஆக்கம் - களவினுலுளதாகியபொருள்—ஆவதுபோல அளவிறந்து கெடும் - வளர்வதுபோலத் தோன்றித் தன்னெல்லையைக் கடந்துகெடும். எ - று.

ஆக்கத்திற்கேதுவாகலின், ஆக்கமெனப்பட்டது. எல்லையைக் கடந்து கெடுதலாவது தான போங்காற் பாவத்தையும் பழியையும் நிறுத்திச் செயதவறத்தையும் உடன்கொண்டுபோதல். அளவறிந்தென்று பாடமோதி, அவர் பயன்கொள்ளுமளவறிந்து அவ்வளவிற்கு உதவாது கெடுமென்றுரைப்பாருமுளர். (ஊ)

உஅசு. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும். சு.

இ - ள். களவின்கண் கன்றிய காதல் - பிறர்பொருளை வஞ்சித்துக் கோடற்கண்ணே மிக்க வேட்கை—விளைவின்கண் வீயாவிழுமம் தரும் - அபபொழுது இனிதுபோலத் தோன்றித் தான் பயன் கொடுக்கும்பொழுது தொலையாத இடும்பையைக் கொடுக்கும். எ - று.

கன்றுதலான் எஞ்ஞான்றும் அக்களைவையே பயில்வித்து அதனும் பாவமும் பழியும் பயக்தேவிடுதலின், வீயாவிழுமத் தரு மென்றார். இவையிரண்டுபோட்டானும் அது கடியப்படுதற்குக் காரணங் கூறப்பட்டது. (௪)

உஅரு. அருள்கருதி யன்புடைய ராதல்பொருள்கருதிப் பொச்சாப்புப் பார்ப்பார்க ணில். ரு.

இ - ள். அருள் கருதி அன்பு உடையராதல் - அருளினது உயர்ச்சியையறிந்து அதனமேல் அன்புடையராயொழுகுதல்—பொருள் கருதிப் பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல் - பிறர்பொருளை வஞ்சித்துக்கொள்ளக் கருதி அவரதுசோர்வு பார்பபார்மாட்டு உண்டாகாது. எ - று.

தமக்குரிய பொருளையும் அதனது குற்றம் நோக்கித் துறந்து போந்தவர் பின் பிறாகுரிய பொருளை நனகுமதித்து அதனை வஞ்சித்துக்கோடறகு அவரது சோர்வுபார்க்கும் மருட்சியரானுல், அவர்மாட்டு, உயிர்கண்மேலருள்செயதல் நமக்குறுதியெனறறிந்து அவ்வருளின் வழுவாதொழுகுக தெருட்சி கூடாதென்பதாம். (ரு)

உஅசு. அளவின்க ணின்றொழுக லாற்றூர் களவின்கட் கன்றிய காத லவர். சு.

இ - ள். அளவின்கண் நின்று ஒழுகல் ஆற்றூர் - உயிர் முதலியவற்றையளத்தலாகிய தெறியின்கணின்று அதற்கேற்ப ஒழுகமாட்டார்—களவின்கண் தூன்றியகாதலவர் - களவின்கண்ணே மிக்க வேட்கையையுடையார். எ - று.

உயிர்முதலியவற்றையளத்தலாவது காட்சிமுதலாகச் சொல்லப்பட்ட அளவைகளான உயிர்ப்பொருளையும், அதற்கு அநாதியாய் வருகின்ற நல்வினை தீவினைக் குறறவினைவுகளையும், அவறறுன் அது நாற்கதியுட் பிறந்திறந்து வருதலையும், அது செயயாமல் அவற்றைக் கெடுத்தற்குபாயமாகிய யோகஞானங்களையும், அவற்றுன் அஃதெயதும் வீட்டினையும், அளாது உள்ளவாறறிதல். இதனை ஆருகதர் தருமத்தியானமென்ப. அதற்கேற்ப ஒழுகுதலாவது அவ்வளக்கப்பட்டனவற்றுள் தீயனவற்றினீங்கி நல்லனவறறின்வழி நிற்றல். (சு)

உஅஎ. களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு மாற்றல் புரிந்தார்க ணில். எ.

இ - ள். களவு என்னும் கார் அறிவாண்மை - களவென்று சொல்லப்படுகின்ற இருண்டவதிவினையுடையராதல்—அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல் - உயிர் முதலியவற்றை அளத்தலென்னும் பெருமையை விரும்பினர்க்கணில்லை. எ - று.

இருள மயக்கம். காரியத்தைக் காரணமாகவுபசரித்துக் களவென்னுங் காரறிவாண்மையென்றும், காரணத்தைக் காரியமாக்கி அளவென்னுமாற்றலென்றுங் கூறினர். களவுநூறவும இருளுமொளியுமபோலத் தம்முண் மாருகலின், ஒருங்கு நில்லாவென்பதூ இவை மூன்றுபாட்டானும் கூறபபட்டது. (எ)

உஅஅ. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு. அ.

இ - ள். அளவு அறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும் — அவ்வளத்தலையே பயினறவர் நெஞ்சதது அறம் நிலைபெற்றாற் போல நிலைபெறும்—களவு அறிந்தார் நெஞ்சில் கரவு-களவையே பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனை. எ - று.

உயிர்முதலியவறறை அளநதறிநதார்க்குத் தூறவறஞ்சலியாது நிற்குமென்பது அவ்வுவமையாறபெறறும். களவோடு மாறின்றி நிறபது இதனைக் கூறப்பட்டது. (அ)

உஅகூ. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர். கூ.

இ — ள். அளவு அல்ல செய்தாங்கே வீவர் - அவ்வளவல்லாத தீய நினைவுகளே நினைத்தபொழுதே கெடுவர்—களவு அல்ல மறறைய தேற்றாதவர் — களவல்லாத பிறவற்றை அறியாதவர். எ — று.

தீயநினைவுகளாவன பொருளுடையாரை வஞ்சிக்குமாறும், அவ்வஞ்சனையால் அது கொள்ளுமாறும், கொண்டவதனைத் தாம் புனைகளே றுகருமாறும் முதலாயின. நினைத்தலுஞ்செயதலாகலிற் செய்தென்றும், அஃது உள்ளவறங்களைப் போக்கிக் கரந்த சொற் செயல்களைப் புகுவிதது அபபொழுதே கெடுக்குமாகலின் ஆங்கே வீவரென்றுங் கூறினர். மற்றையவாவன தூறநதார்க்கு உணவாக வோதப்பட்ட காய கனி கிழங்கு சருகு முதலாயினவும், இல்வாழ்வார் செய்யுந தானங்களுமாம். தேற்றாமை அவற்றையே றுகர்ந்து அவவளவானிறைநதிருத்தலே அறியாமை. இதனைக் கள்வார் கெடுமாறு கூறப்பட்டது. (கூ)

உகூ0. கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத் தள்ளாது புத்தே ளுலகு. க0.

இ – ள். கள்வார்க்கு உயிர்நிலை தள்ளும் – களவினைப் பயில் வார்க்குத் தம்மின் வேறல்லாத உடம்புக தவறும்;—கள்ளார்க்குப் புத்தேளுலகு தள்ளாது – அது செயயாதார்க்கு நெடுஞ்சேணதா ஙிய புதேளுலகுக தவறுது. எ – று.

உயிர் நிற்றறகிடனுகலின், உயிர்நிலையெனப்பட்டது. சிறப்பு ம்மைகளிரண்டும் விகாரத்தாறறுக்கன. இம்மையினும் அரசனு லொறுக்கப்படுதலின உயிர்நிலையுந் தள்ளுமென்றும்,மறுமையினுந் தேவராதல் கூடுதலிற் புத்தேளுலகுந தள்ளாதென்றுங் "கூறினர். "மறறது—தள்ளினுந தள்ளாமை நீறறது" * என்புழியும் தள்ளு தல் இபபொருட்டாதலறிக. இதறகுப் பிறவாறுரைப்பாருமுளா. இதனுல் இருவர்பயனும ஒருங்கு கூறப்பட்டது. (க0)

கூ0 - ம் அதி.—வாய்மை.

அஃதாவது மெயயினது தன்மை. பெரும்பான்மையுங் காம மும் பொருளும்பற்றி நிகழ்வதாய பொயமையை விலக்கலின், இது கூடாவொழுக்கங் களளாமைகளினபின வைக்கப்படடது.

உகூக. வாய்மையெனப்படுவதியாதெனின் யாதொன்றுந் தீமை யிலாத சொலல். க•

இ – ள். வாயமை எனப்படுவது யாது எனின் – மெய்ம்மை யென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்று வினவின,— தீமை யாதொன்றும் இலாத சொலல் – அது பிறிதோருயிர்க்குத் தீங்கு நிகழாதும பயவாத சொற்களைச் சொல்லுதல். எ – று.

தீமை யாதொன்றுமிலாதவென இயையும். எனப்படுவதென் பது "ஊரெனபபடுவ துறையூர்" னன்றுற்போல நின்றது. இத னுன் நிகழ்ந்தது கூறலென்பது நீக்கபபட்டது. அதுதானும்,தீங்கு பயவாதாயின் மெயம்மையாம், பயப்பிற் பொய்ம்மையாமென் பது கருத்து. (க)

உகூஉ. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்.

இ – ள். புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின் – பிறர்க்குக் குற்றந் தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின்,—பொய்ம்மையும் வாயமையிடத்த – பொயம்மைச்சொற்களும் மெய்ம்மைச்சொற்களின் பாலவாம். எ – று.

குற்றந்தீர்ந்தநன்மை அறம்; அதனைப் பயத்தலாவது கேடாதல் சாக்காடாதல் எய்தநின்றதோரியீர் அச்சொறகளின் பொய்ம்மையானே அதனினீங்கி இன்புறுதல். நிகழாதது கூறலும்,நன்மை பயவாதாயிற் பொயம்மையாம், பயப்பினு மெயமமையாமென்பது கருத்து. இவையிரண்டுபாட்டானும் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும் நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெயம்மையெனவும், நன்மை பயவாத நிகழாதது கூறலும் தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொயம்மையெனவும், அவறறிலக்கணங் கூறப்பட்டது. (உ)

உகூஉ. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும். கூ.

இ – ள். தன் நெஞ்சு அறிவது பொயயற்க-ஒருவன் தன்னெஞ்சறிவதொன்றனைப பிறரறிந்திலரென்று பொயயாதொழிக;—பொயத்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும் – பொயத்தானுயின், அதனையறிந்த தன்னெஞ்சே அபபாவத்திற்குக் காரியாய நின்று, தன்னை அதன பயனுய துனபத்தையெயதுவிக்கும். எ – று.

நெஞ்சு காரியாதல் "எண்டவ நில்லென வுலகத்து ளுணரா தார்,—தங்காது தகைவின்றித் தாஞ்செயயும் வினைகளு—ணெஞ் சறிந்த கொடியவை மறைப்பவு மறையாவா—நெஞ்சத்திற சூது ஜிய காரியில்லி யாகலின்" * என்பதனுமறிக. பொய மறையாமையின், அது கூறலாகாதென்பது இதனுற கூறப்பட்டது. (கூ)

உகூச. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன். ச.

இ – ள். உள்ளத்தால் பொயயாது ஒழுகின் – ஒருவன் தன்னுள்ளத்திற் கேற்பப் பொயகூறு தொழுகுவனுயின்,—உலகத்தார் உளளத்துளெல்லாம் உளன் – அவன் உயர்ந்தோருள்ளத்தினுங்ணெல்லாம் உளனும். எ – று.

உள்ளத்தாலென்பது வேற்றுமை மயக்கம். பொய் கூறுதொழுகுதலாவது மெய்கூறியொழுகுதல். அவனதறத்தினதருமைநோ

* கலித்தொகை, நெயதல்—அ.

க்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையே நினைப்பரென்பதாம். இதனால் இம்மைப்பயன் கூறப்பட்டது. (ச)

உகூடு. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ்செய் வாரிற் றலை. ஙூ.

இ - ள். மனத்தொடு வாயமை மொழியின் – ஒருவன் தன்மனத்தொடு பொருந்த வாயமையைச் சொல்வானெயின்,—தவத்தொடு தானம் செயவாரின் தலை – அவன் தவமுந்தானமும் ஒருங்குசெயயாரினுஞ் சிறப்புடையன். எ - று.

மனத்தோடு பொருந்துதல் மனத்திற்கேறுதல். புறமாகிய மெயயாற செயயு மவற்றினும் அகமாகிய மனமொழிகளாற் செய்யுமது பயனுடைத்தென்பதாம். (ஙூ)

உகூசு. பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை யெல்லா வறமுந் தரும். சு.

இ - ள். பொயயாமை அன்ன புகழ் இல்லை – ஒருவனுக்கு இம்மைக்குப பொயயாமையையொத்த புகழ்க்காரணமில்லை;—எயயாமை எல்லா அறமும் தரும் - மறுமைக்கு மெய வருந்தாமல் அவனுக்கு எல்லாவறங்களையுந் தானேகொடுக்கும். எ - று.

புகழ் ஈண்டு ஆகுபெயர். இல்லறத்திற்குப் பொருள்கூட்டல் முதலியவற்றினும் துறவறத்திற்கு உண்மை முதலியவற்றினும வருந்தல்வேண்டுமனறே, அவ்வருத்தங்கள் புகுதாமல் அவ்விரு வகைப்பயனையுந தானே தருமெனபார், எயயாமை யெல்லாவற முந் தருமென்றார். (சு)

உகூஎ. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற செய்யாமை செய்யாமை நன்று. எ.

இ - ள். பொய்யாமை பொயயாமை ஆற்றின் - ஒருவன் பொய்யாமையையே பொயயாமையையே செயயவல்லனெயின்,—பிற அறம் செயயாமை செயயாமை நன்று - அவன் பிறவறங்களைச் செய்யாமையே செயயாமையே நன்று. எ - று.

அடுக்கிரண்டனுள் முதலது இடைவிடாமை மேற்று, ஏனையது துணிவின்மேற்று. பலவறங்களையும் மேற்கொண்டு செய்தற் கருமையால் சில தவறிற் குற்றப்படுதலின், அவையெல்லாவற்றின் பயனையுந் தானே தரவற்றாய இதனையே மேற்கொண்டு தவறுபடற் செய்தல் நன்றென்பார், செய்யாமை செய்யாமை நன்றென்றார்.

இதனே இவ்வாறன்றிப் பொய்யாமையைப் பொய்யாமற்செய்யிற் பிறவறஞ்செயகை நன்றெனப் பொழிப்பாக்கிப் பொய்கூறிற் பிற வறஞ்செயகை நன்றாகாதென்பது அதனுற போர்த்த பொருளாக்கி உரைப்பாருமுளர். பிறவறங்களெல்லாந தரும் பயனேத் தானே தருமாறறலுடைத்தென மறுமைபபயனது மிகுதி இவைமூன்று பாட்டானுங கூறப்பட்டது. (எ)

உகூஅ. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை வாய்மையாற் காணப படும். அ.

இ - ள். புறம் தூயமை நீரான் அமையும - ஒருவனுக்கு உட ம்பு தூயதாந்தன்மை நீரானேயுண்டாம்;—அகம் தூயமை வாய மையான் காணபபடும் - அதுபோல மனந்தூயதாநதன்மை வாய மையானுண்டாம். எ - று.

காணப்படுவ துள்ளதாகலின், உண்டாமென்றுரைக்கப் பட் டது. உடம்பு தூயதாதல் வாலாமை நீங்குதல். மனநதூயதாதல் மெயயுணர்தல். புறநதூயமைககு நீரல்லது காரணமில்லாதாற் போல, அகந்தூய்மைக்கு வாயமையல்லது காரணமில்லே யென்ற வாறுயிறறு. இதனுனே துறநதாாக்கு இரண்டு தூயமையும் வேண் டுமென்பதூஉம் பெறறும். (அ)

உகூகூ. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு. கூ.

இ - ள். எல்லா விளக்கும் விளக்கு அல்ல - புறத்திருள் கடி யும் உலகத்தார் விளக்குக்களெல்லாம் விளக்காகா:—சான்றோர்க் குப் பொயயா விளக்கே விளக்கு - துறவானமைந்தார்க்கு விளக் காவது மனத்திருள் சடியும் டொயயாமையாகிய விளக்கே விளக் காவது. எ - று.

உலகத்தார் விளக்காவன ஞாயிறு, திங்கள், தீயென்பன. இவற்றிற்குப் போகாதவிருள் போகலின், பொயயாவிளக்கே விளக்கென்றார். அவ்விருளாவது அறியாமை. பொய்யாதவிளக் கென்பது குறைந்துநினறது. பொயசூறுமையாகிய விளக்கென்ற வாறு. இனி இதறகுக் கல்வி முதலியவற்றுன் வரும் விளக்கமெல் லாம் விளக்கமல்ல, அமைந்தார்க்கு விளக்கமாவது பொயயாமை யான் வரும் விளக்கமே விளக்கமென்றுரைப்பாருமுளர். (கூ)

ரூ00. யாமெய்யாக்கண்டவற்றுளில்லையெனத்தொன்றும் வாய்மையி னல்ல பிற. கடு.

இ - ள். யாம் மெய்யாக் கண்டவற்றுள் - யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள்—எனைத்தொன்றும் வாய்மையின் கல்ல பிற இல்லை - யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிறவறங்களில்லை. எ - று.

மெயயுணர்த்துவனவற்றை மெயயென்றார். அவையாவன தகுண மயக்கமின்மையின் பொருள்களேயுளவாறுணரவல்லராகாம வெகுளிகளின்மையின் அவற்றையுணர்ந்தவரே உரைக்கவும் வல்லராய இறைவர், அருளான் உலகத்தார் உறுதியெயது தறபொருட்டுக் கூறிடவாகமங்கள். அவையெல்லாவற்றினும் இஃதொபபமுடிந்ததென்பதாம். இவைமூன்றுபாட்டானும் இவ்வறத்தினது தலைமை கூறப்பட்டது. (எ0)

நகம் அதி—வெகுளாமை.

அஃதாவது சினத்தைச் செயதற்குக் காரணம ஒருவன்மாட்டுளதாயவிடத்தும் அதனைச் செயயாமை. இது பொயம்மைபறறி நிகழ்வதாய வெகுளியை விலக்கலின், வாயமையின்பின் வைக்கப்பட்டது.

**நூ0க. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்
காக்கினென் காவாக்கா லென். க. [துக்**

இ - ள். சினம் செல் இடத்துக் காப்பான் காப்டான் - தன் சினம் பலிக்குமிடத்து அதனையெழாமறறடுபபானே அருளாற்றடுபடாணுவான்;—அல் இடத்துக் காக்கின் என் காவாக்கால் என் — வேனபபலியாதவிடத்து அதனைத் தடுத்தாலென் தடாதொழிந்தாலென்! எ — று.

செல்லிடம் அல்லிடமென்றது தவத்தாற் றன்னின்மெலியாரையும் வலியாரையும். வலியார்மேற் காவாவழியும் அதனுன் அவாக்கு வருவதோர் தீங்கின்மையிற காத்தவழியும் அறனில்லையென்பார், காக்கினென் காவாக்காலென்னென்றார். இதனுன் வெகுளாமைக்கிடங் கூறப்பட்டது. (க)

**நூ0உ. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லதனிற் றீய பிற. உ.**

இ - ள். சினம் செல்லா இடத்துத் தீது - ஒருவன் வெகுளிதன்னின் வலியார்மேலெழின் தனக்கே தீதாம்;—செல் இடத்தும்

அதனின் தீய பிற இல் – மற்றையெளியார்மேலெழினும் அதனிற் றீயன பிற இல்லை. எ – று.

செல்லாவிடத்துச் சினம் பயப்பது இம்மைக்கண் அவரான் வருமேதமே, ஏனையது இம்மைக்கட்பழியும் மறுமைக்கட்பாவ மும் பயத்தலின், அதனிற்றீயன பிறவில்லையென்றார். ஒரிடத்து மாகாதென்பதாம். (உ)

கூ०ஙு. மறத்தல் வெகுளியை யார்மாட்டுக் தீய பிறத்த லதனன் வரும். கூ.

இ – ள். யார்மாட்டும் வெகுளியை மறத்தல் – யாவர்மாட்டும் வெகுளியையொழிக,—தீய பிறத்தல் அதனன் வரும்–ஒருவாக்குத் தீடனவெல்லாமுளவாதல் அதனன வரும ஆகலான். எ – று.

வலியார், ஒப்பார், எளியாரென்னும் மூவர் மாட்டும் ஆகாமை யின் யார்மாட்டுமென்றும், மனத்தாற்றுறந்தாக்கு ஆகாதனவா கிய தீச்சிறைதைகளெல்லாவற்றையும பிறபபித்தலின் தீயபிறத்தலத னன்வருமென்றுங் கூறினர். (ங)

கூ०ச. நிகையு மூவகையுங் கொல்லுஞ் சினத்திற் பகையு முளவோ பிற. ச.

இ – ள். நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் – துறந் தார்க்கு அருளானுளவாய முகதினகணகையையும மனத்தினக ணுவகையையுங் கொன்று கொண்டெழுகினற சினமேயல்லது— பிறபகையும் உளவோ – அதனிற் பிறவாய பகைகளும் உளவோ இல்லை. எ – று.

துறவாற் புறப்பகையிலராயினும் உட்பகையாய் நின்று அரு ண்முதலிய நட்பினையும் பிரித்துப் பிறவித்துன்பமுமெயதுவித்த லான், அவர்க்குச் சினத்தினமிக்க பகையில்லையாயிற்று. இவை மூன்றுபாட்டானும் வெகுளியது தீங்கு கூறப்பட்டது. (ச)

கூ०ஞ. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற் றன்னையே கொல்லுஞ் சினம். ஞ.

இ – ள். தன்னைத் தான் காக்கின் சினம் காக்க – தன்னைத் தான் தன்பமெய்தாமற்காக்க நினைத்தானுயின், தன்மனத்துச் சினம் வாராமற்காக்க;—காவாக்கால் சினம் தன்னையே கொல் லும் – காவானுயின், அச்சினந் தன்னையே கெடுக்குங் கடிந்துன்ப ங்களையெயதுவிக்கும். எ – று.

"வேண்டிய வேண்டியாங் கெய்தற்"* பயத்ததாய தவத்தைப் பிறர்மேற் சாபம்விடுதற்காக இழந்து அத்தவத்தின் பத்தோடு பழைய பிறவித்துன்பமும் ஒருங்கெய்துதலின், தன்னையே கொல்லுமென்றார். கொல்லச் சுரபதாங் கீழ்" † என்புழிபோலக் கொலைசொல் ஈண்டுத் துன்பமிகுதி யுணர்த்தி நின்றது. (நு)

நூ0சு. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்
மேமப் புணையைச் சுடும். சு. [னு

இ – ள். சினம் என்னும் சேர்ந்தாரைக்கொல்லி – சினமென்னும் நெருப்பு—இனம் என்னும் ஏமபுணையைச் சுடும் - தனக்கு இடமானவரையேயனறி அவர்க்கு இனமாகிய ஏமப்புணையையுஞ் சுடும். எ - று.

சேர்ந்தாரைக்கொல்லி யென்பது ஏதுப்பெயர்; தான் சேர்ந்தவிடத்தைக் கொல்லுந்தொழிலதென்றவாறு. சேர்ந்தாரையென உயர்திணைப்பன்மைமேல்வைத்து ஏனை நான்குபாலும் தங்கருத்தோடு கூடிய, பொருளாற்றலாறகொண்டார்; ஈண்டு உருவகஞ் செய்கின்றது துறவுதார்சினத்தையேயாகலின். சினமென்னுநெருப்பென்ற விதப்பு, உலகத்துநெருபபுச் சுடுவது தான் சேர்ந்தவிடத்தையே இருநெருப்புச் சேராதவிடத்தையுஞ் சுடுமென்னும் வேற்றுமை தோன்ற நின்றது. ஈண்டினமென்றது முற்றத் துறவுதவஞானங்களாற் பெரியராயக் கேட்டார்க்கு உறுதிமொழிகளே இனியவாகச் சொல்லுவாரை. உருவகநோக்கிச் சுடுமென்னுந் தொழில் கொடுத்தாராயினும், அகற்றுமென்பது பொருளாகக்கொள்க. ஏமப்புணை ஏமத்தையுபதேசிக்கும் புணை. இனமென்னுமேமப்புணையென்ற ஏகதேசவுருவகத்தாற் பிறவிக்கடலுளழுந்தாமல் வீடென்னுங் கரையேற்றுகின்றவென வருவித்துரைக்க. எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. தன்னையும் கீழ்த்து எடுபபாரையுமகற்றுமென்பதாம். (சு)

நூ0எ. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையாற் றற்று. எ.

இ - ள். சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு – சினத்தைத் தன்னுற்றலுணர்த்துவதோர் குணமென்று தன்கட்

* திருக்குறள்—உசுடு.

† நாலடியார், ஈயாமை,—இரவலர் கன்றுக வீவாரா வாகவிரகிறை சுரப்பதாம் வண்மை – விரகின்றி—வல்லவு ளுன்ற வடிபாபோல் வாய்வைத்துக்—கொல்லச் சுரப்பதாங் கீழ்.

கொண்டவன் அவ்வாற்றலிழத்தல்,—நிலத்து அறைந்தான் கைபி ழையாதற்று – நிலத்தின்கண் அறைந்தவன்கை அந்நிலத்தையுறு தல் தப்பாதவாறுபோலத் தப்பாது. எ – று.

ஈவுசேழுகா பொருள், பண்பு, தொழில், சாதி, விசேடம், இயைபு என்பனவற்றை அறுவகைப்பொருளென்றுற்போல, ஈண் டுக் குணம் பொருளெனபபட்டது. பிழையாதவறறென்பது குறை ந்து நின்றது. இவை மூனறுபாட்டானும் வெகுளாகாகு வருந் தீங்கு கூறப்பட்டது. (எ)

கூ0அ. இணரெரி தோய்வன்ன வின்னு செயினும்
புணரின் வெகுளாமை நன்று. அ.

இ – ன். இணா எரி தோயவு அன்ன இன்னு செயினும் – பல சுடரையுடைத்தாய பேரெரிவந்து தோயந்தாலொத்த இனனுசவ றறை ஒருவன் செயதானுயினும்,—வெகுளாமை புணரின் நன்று – அவணை வெகுளாமை ஒருவறகுக் கூடுமாயின்,அது நன்று. எ – று.

இன்னுமையின் மிகுதி தோன்ற இணரெரியென்றும், அதணை மேன்மேலுஞ் செயதல் தோன்ற இன்னுவென்றும், அச்செயல் முனிவரையும் வெகுள்விகுமென்பது தோன்றப புணரினென் றுங் கூறினுர். இதனுன் வெகுளாமையது நன்மை கூறப்பட்டது.

கூ0கூ. உள்ளிய வெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின். கூ.

இ – ள். உள்ளத்தால் வெருளி உள்ளான் எனின் – தவஞ் செயயுமவன், தன்மனத்தால் வெகுளியை ஒருகாலும் நினையாஞ யின்,—உள்ளிய எல்லாம உடன் எயதும் – தானகருதிய பேறெல் லாம ஒருங்கே பெறும். எ – று.

உள்ளத்தாலென வேண்டாது கூறியவதனுன், அருளுடையு ள்ளமென்பது முடிந்தது. அதனுனுளாமையாவது அவ்வருளா கிய பசையையவளாத்து அதனண முறறக்கடிதல். இம்மை மறுமை வீடென்பன வேறுவேறு திறத்தனவாயினும், அவையெல்லாம இவ்வொன்றுனேயெயதுமென்பார், உள்ளியவெல்லாமுடனெயது மென்றார். இதனுன் வெகுளாதார்ச்குவரும் நன்மை கூறப்பட்டது.

கூகo. இறந்தா ரிறந்தா ரணையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. கo.

இ – ள். இறந்தார் இறந்தார் அணையர் – சினத்தின்சண்ணே மிக்கார், உயிருடையராயினும்,செத்தாரோடொப்பர்;—சினத்தைத்

துறந்தார் துறந்தார் துணை — சினத்தைத் துறந்தார், சாதற்றன்மை யராயினும், அதனையொழிந்தாரளவினர். எ - று.

மிக்கசினத்தையுடையார்க்கு ஞானமெய்துதற்குரிய உயிர்கின்றதாயினும் கலக்கத்தான் அஃதெய்தாமை ஒருதலையாகலின், அவரை இறந்தாரேயென்றும், சினத்தை விட்டார்க்குச் சாச்சாடெய்துதற்குரிய யாக்கைகின்றதாயினும், ஞானத்தான் வீடுபெறுதல் ஒருதலையாகலின், அவரை வீடுபெற்றாரோடொப்பரென்றுங் கூறினார். துறந்தார்துணை பன்மையொருமைமயக்கம். இதனான் அவ்விருவர்பயனும் ஒருங்கு கூறப்பட்டது. (க0)

கூடா அதி.—இன்னாசெய்யாமை.

அஃதாவது தனக்கு ஒருபடரேனுக்கியாதல், செற்றம்பற்றியாதல், சோர்வானாதல் ஒருயிர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை. இன்னாசெயதல வெகுளி யொழியவும் நிகழுமென்பது அறிவித்தற்கு, இது வெகுளாமையின்பின வைக்கப்பட்டது.

கூகக. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா செய்யாமை மாசற்றார் கோள். க.

இ — ள். சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் - யோகமாகிய சிறப்புத் தரும் அணிமா முதலிய செல்வங்களைப் பிறர்க்கின்னா செயது பெறலாமாயினும்,—பிறர்க்கு இன்னா செயயாமை மாசு அறறார் கோள — அதனைச் செய்யாமை ஆகமங்கள் கூறியவாறன்மனநூலாயாரது துணிவு. எ - று.

உம்மை பெருமைமேற்று. சிறப்புடையதனைச் சிறபபென்றும், அதன்பயிற்சியான வாயுவை வெனறெயதப்படுதலின் எட்டிச் சித்திகளையுஞ் சிறப்பீனுஞ்செல்வமென்றும், காமம் வெகுளி மயக்கமென்னுங் குற்றங்களாறறமையான் மாசற்றாரென்றுங் கூறினார். இதனால் தமக்கொரு பயனேக்கிச் செயதல் விலக்கப்பட்டது. (க)

கூகஉ. கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா செய்யாமை மாசற்றார் கோள். உ.

இ — ள். கறுத்து இன்னா செயத அக்கண்ணும் - தம்மேற்செற்றங்கொண்டு ஒருவன் இன்னாதவறறைச் செயதவிடத்தும்—மறுத்து இன்னா செயயாமை மாச அறறார் கோள் — மீண்டு தாம் அவனுக்கின்னாதவற்றைச் செயயாமையும் அவரது துணிவு. எ - று.

இறந்தது தழீஇயவெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அவ் வின்னாதவற்றை உட்கொள்ளாது விடுதல் செயற்பால தென்பதாம். (உ)

கூகஙூ. செய்யாமற் செற்றார்க்கு மின்னாத செய்தபி
னுய்யா விழுமந் தரும். கூ.

இ – ள். செய்யாமல் செறறார்க்கும் இன்னாத செயதபின் - தான் முன்போரின்னாமை செயயாதிருக்கத் தன்மேற்செறறங்கொண்டவர்க்கும் இன்னாதவற்றைத் துறந்தவன் செய்யுமாயின்,—உய்யா விழுமம் தரும் – அச்செயல் அவனுக்குக் கடக்கமுடியாத இடும்பையைக் கொடிக்கும. எ – று.

அவ்விடும்பையாவது தவமிழந்து பழியும் பாவமுமெயதல்.()

கூகசு. இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல். சு.

இ - ள். இன்னா செய்தாரை ஒறுத்தல் - தமக்கின்னாதவற்றைச் செய்தாரைத் துறநதோரொறுத்தலாவது—அவர் நாண நன்னயம் செயது விடல் – அவர்தாமே நாணுமாறு அவர்க்கு இனிய வுவகைகளைச் செயது அவ்விரண்டனையும் மறத்தல். எ - று.

மறவாவழிப் பின்னும் வந்து கிளைக்குமாகலின், மறக்கற்பா லவாயின. அவரை வெல்லுமுபாயங் கூறியவாறு. இவைமூன்று பாட்டானுஞ் செற்றம் பற்றிச் செயதல் விலக்கபபட்டது. (சு)

கூகஙு. அறிவினு னுகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றுக் கடை. ஙு.

இ – ள். அறிவினன் ஆகுவது உண்டோ – துறக்தார்க்கு உயிர்முதலியவறறை உள்ளவாறறறிந்த அறிவினனவதொரு பயனுண்டோ,—பிறிதின் நோய தன்நோயபோல் போற்றுக்கடை - பிறிதோருயிர்க்கு வரும் இன்னாதவற்றைத் தம்முயிர்க்கு வந்தன போலக் குறிக்கொண்டு காவாவிடத்து. எ - று.

குறிக்கொண்டு காத்தலாவது நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல்முதலிய தநதொழிலகளானும் பிறவாற்றானும் உயிர்களுறுவனவற்றை முன்னேயறிந்து உறுமற்காத்தல்.இது பெரும்பானமையும் அஃறிணைக்கண் நண்ணியவுடம்புடையவற்றைப் பற்றிவருதலிற பொதுப்படப் பிறிதினோயென்றும், மறப்பான் அது தன்புறினும் நமக்கின்னாசெய்தலாமென்றறிந்து காத்தல்

வேண்டுமாகலின் அது செயற்பாலதி அறிவாற்பயனில்லையென்றுங் கூறினர். இதனாற் சோர்வாற்செயதல் விலக்கப்பட்டது. (ஞ)

௧௬௯. இன்னா வெனத்தா னுணர்ந்தவை தன்னுமை வேண்டும் பிறன்கட் செயல். ௩.

இ - ள். இன்னா எனத் தான் உணர்ந்தவை - இவை மக்கட் இன்னாதனவென அனுமானதாற்றானறிந்தவற்றை— பிறன்கண் செயல் தன்னுமை வேண்டும் — பிறன்மாட்டுச் செய்தலை மேவாமை தூறந்தவனுக்கு வேண்டும். எ - று.

இன்பத்துன்பங்கள் உயிர்க்குணமாகலின், அவை காட்சியளவையான் அறியப்படாமையறிக. அறமும் பாவமுமுளவாவது மனமுளதாயவழியாகலான், உணர்ந்தவையென்றார். (ஈ)

௧௬௰. எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானு மாஞ செய்யாமை தலை. ௧.

இ - ள். மனத்தான் ஆம் மாஞ - மனத்தோடு உளவாகின்ற இன்னாத செயல்களை—எஞ்ஞான்றும் யார்க்கும எனைத்தானும் செயாமை தலை - எக்காலத்தும யாவாக்குஞ் சிறிதாயினுஞ் செயாமை தலையாயவறம். எ — று.

ஈண்டு மனத்தானாகாதவழிப் பாவமில்லையென்பது பெற்றாம். ஆறறிவுண்டாயகாலத்தும் ஆகாமையின் எஞ்ஞான்றுமென்றார், எளியாராக்குமாகாமையின் யார்க்குமென்றும், செயல் சிறிதாயினும் பாவம் பெரிதாகலின் எனைத்தென்றுங் கூறினர். (எ)

௧௬௰அ. தன்னுயிர்க் கின்னுமை தானறிவா னென்கொலோ மன்னுயிர்க் கின்னா செயல். அ.

இ — ள். தன் உயிர்க்கு இன்னுமை தான் அறிவான் - பிறர் செயுமின்னாதன தன்னுயிர்க்கு இனனவாதன்மையை அனுபவித்தறிகின்றவன—மன் உயிர்க்கு இன்னா செயல் என்கொல் - நிலை பேறுடைய பிறவுயிர்கட்குத் தானவற்றைச் செய்தல் என்னகாரணத்தான்! எ - று.

இவ்வாறே இவை பிறவுயிர்க்குமின்னாவென்பது அனுமானத்தானறிந்துவைததுச் செயகின்ற இபபாவங்கழுவப்படாமையின், இன்னாதன யான வருந்தப் பின்னே வந்து வருத்துமென்பது ஆகமத்தினுமறிந்து ஒழியற்பாலனென்பது தோன்றத் தானென்றும், அத்தன்மைபான் ஒழியாமைக்குக் காரணம் மயக்கமென்பது

தோன்ற என்கொலோவென்றுங் கூறினர். இவை மூன்றுபாட்டானும் பொதுவகையான் விலக்கப்பட்டது. (அ)

கூகசு. பிறர்க்கின்னு முற்பகற் செய்யிற் தமக்கின்னு பிற்பகற் ருமே வரும். சூ.

இ - ள். பிறர்க்கு இன்னு முற்பகல் செயயின் - துறந்தவர் பிறர்க்கின்னுதனவறறை ஒருபகலது முற்கூற்றின்கட் செயவரா யின்,—தமக்கு இன்னு பிறபகல் தாமே வரும - தமக்கின்னுதன ஆதன்பிழகூறறின்கண் அவாசெயடாமற்ருமேவரும். எ - று.

முற்பகல் பிறபகலென்பன பின முண்ணகத்தொக்க ஆறும வேழறுமைத்தொகை. தவமழிதலின, ஆங்ஙனங் சடிதினும் எளிதி னும் வரும்; அதனுல் அவைசெயயற்கவென்பதாம். இனித் தானே வருமென்பது பாடமாயின், அச்செயருமே தமகின்னுதனவாய வருமென உபசாரவழக்காக்கி, ஆக்கம் வருவித்துரைக்க. (கூ)

கூஉ0. நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய் நோயின்மை வேண்டு பவர். க0. [யார்

இ - ள. நோய எல்லாம் நோய செயதார் மேலவாம் — இன னுதனவெல்லாம பிறிதோருயிர்க்கு இனனுதன செயதாமேல வாம்;—நோய இன்மை வேண்டுபவர் நோய செயயார - அதனுல் தம்முயிர்க்கு இனனுதன வேண்டாதார பிறிதோருயிர்க்கு இனனு தனசெய்யார. எ — று.

உயிர்நிலைதது வினைவிக்திட்டார்க்கு விளைவும் அதுவே * யாக லின், நோயெல்லா நோயசெயதார்மேலவாமென்றார். இது சொல பொருட்பினவருநிலே. இவையிரண்டுபாட்டானும் அது செயதா ரகது வருந்தீங்கு கூறப்பட்டது. (க0)

கூகூ ம் அதி.—கொல்லாமை.

அஃதாவது ஓயறிவுடையன முதல் ஓரறிவுடையனவீறய உயிர்களேச † சோர்நதுங்கொல்லுதலேச் செயயாமை. இது, மேற

* சிந்தாமணி முத்தியிலம்பகம், ககூச.

† புல்லும் மரமும் முதலியன பரிசத்தையறியும் ஓரறிவுயிர்கள். இப்பியுஞ் சங்கும் முதலியன அதனேடு இரதத்தையுமறியும் ஈரறி வுயிர்கள். கறையானும் எறும்பும் முதலியன அவ்விரண்டனேடு கநதத்தையு மறியும மூவறிவுயிர்கள். தும்பியும் வண்டும் முதலியன

கூறிய அறங்களெல்லாவற்றினுஞ் சிறப்புடைத்தாய்க் கூறுதலுறங் கீழையும் அகப்படுத்துநிற்றலின், இறுதிக்கண் வைக்கப்பட்டது. ()

கூஉக. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும். க.

இ - ள். அறவினை யாது எனின் கொல்லாமை - அறங்களெல்லாமாகிய செயலை யாதெனறு வினவின், அஃது ஒருயிரையுங் கொல்லாமையாம்,—கோறல் பிறவினை எல்லாம் தரும் - அவற்றைக் கொல்லுதல் பாவச்செயலைகளெல்லாவறறையுந் தானே தரும் ஆதலான். எ - று.

அறம் சாதியொருமை. விலக்கியதொழிதலும் அறஞ்செயலாமாகலின், கொல்லாமையை அறவினையென்றார். ஈண்டுப் பிறவினையென்றது அவற்றினவினைவை. கொலைப்பாவம் வினைக்குந்தனபம் ஏனபபாவங்களெல்லாங் கூடியும் வினைக்கமாட்டாவென்றவாறு. கொல்லாமைதானே பிறவறங்களெல்லாவற்றின் பயனாயுந்தருமென்று மேறறகோள்கூறி, அதறகேது எதிர்மறைமுகத்தாற் கூறியவாறுயிறறு. (க)

கூஉஉ. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை. உ.

இ - ள் பகுத்து உண்டு பல்லுயிர ஓம்புதல் - உண்பதனைப் பகிர்ந்தவுயிர்கட்குப பகுத்துக்கொடுத்துணடு ஐவகையுயிர்களையுங் காப்புதல்—நூலோர தொகுத்தசாஸ்திரங்கள் எல்லாம தலை - அறனாகுடையாரா லறநூல்கார்க்குத் தொகுத்தவறங்களெலலாவறறினுந் தலையாயவறம் எ - று.

பல்லுயிருமென்னும் மூனறும்மை விகாரத்தாற்றொக்கது. ஓம்புதல் சோறறுதுங் கூலை வாராமற குறிசகொணடு காத்தல். அதறகுப பகுதியுண்டல இனறியமையாவுபபாகலின், அச்சிறப்புத்தோன்ற, அதனை இறுதிகாலவினையெசசத்தாற கூறினார். எல்லாநூல்களிலும் நல்லனவெடுத்து எல்லாக்கும பொதுபடக் கூறுதல் இவநூல்யிலபாகலின, ஈண்டும் பொதுப்பட நூலோரென்றும், அவரெல்லாக்கும் ஒப்பமுடிதலான் இது தலையாயவறமென்றுங் கூறினார். (உ)

அம்மூனறனுள் உருவதையுமறியும நாலறிவுயிர்கள். வானவரும் மக்களும் நரகரும் விலங்கும் புளளும முதலியன அந்நானகனுள் சதுததையுமறியும் ஐயறிவுயிர்கள்.

ஙகூஙு. ஒன்றுக நல்லது கொல்லாமை மற்றதன்
பினசாரப் பொய்யாமை நனறு. ஙு.

இ – ள். ஒன்றுக நல்லது கொல்லாமை - நூலோர் தொகுத்த அறங்களுள் தனஞெடிணை—பபதினறித் தானேயாக நல்லது கொல்லாமை;—பொயயாமை அதன்பினசார நனறு – அஃதொ ழிநதால் பொயயாமை அதன்பினனேநிற்க நன்று. எ – று.

நூலோர் தொகுத்தவறங்களெனபது அதிகாரத்தான் வந் தது. அதிகாரம் கொல்லாமையாயினும் மேற பொயயாமைபொய யாமை யாற்றினெனவும் யாமெயயாக் கண்டவறறுளிலெயெனவும் கூறினரானகலின், இரண்டாறத்துளளும் யாது சிறந்ததென்று ஐயநிகழுமன்றே, அது நிகழாமைப்பொருட்டு, ணடி அதன் பின் சாரப் பொயயாமை நன்றெனனரர், மூறகூறியதிற் பிற்கூறியது வலியுடைத்தாகலின். அதனேப பினசாரநன்றென்றது, நன்மை பயக்கும் வழிப் பொயயும மெயயாயும், தீமை பயக்கும் வழி மெய யும் பொய்யாயும் இருனேயு முறறு ஆனறி திரிநதுவருதலானெனவு ணர்க. இவை மூன்றுபாட்டானும் இவ்வறறதினது சிறப்புக் கூற ப்பட்டது. (ஙு)

ஙகூசு. நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி. சு.

இ – ள். நல்லாறு எனப்படுவது யாது எனின் - மேற்கதி வீடுபேறுகட்கு நல்லநெறியென்று சொல்லபபடுவது யாதென்று வினவின்,—யாதொன்றும் கொல்லாமை சூழும் நெறி - அஃது யாதோருயிரையுங் கொல்லாமையாகிய அறத்தினைக்காக்கக் கரு தும் நெறி. எ - று.

யாதொன்றுமென்றது, ஓரறிவுயிரையும் அகப்படுத்தற்கு. காத்தல் வழுவாமறகாத்தல். இதனுல் இவ்வறத்தினையுடையதே நன்னெறியென்பது கூறப்பட்டது. (சு)

ஙகூருு. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை. ருு.

இ – ள். நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம் - பிறப்புநின்ற நிலை யை அஞ்சிப் பிறவாமைப்பொருட்டு மனனவாழ்க்கையைத் துறந்தா ரெல்லாருள்ளும்—கொலை அஞ்சிக் கொல்லாமை சூழவான் தலை – கொலைப்பாவத்தை அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தை மறவாத வன் உயர்ந்தவன். எ – று.

பிறப்பு நின்றநிலையாவது இயங்குவ நிற்பவென்னுமிருவகைப் பிறப்பினும் இன்பமென்பதொன்றின்றி உளளனவெல்லாந் துன்ப மேயாய நிலைமை. துறவு ஒன்றேயாயினும், சமயவேறுபாட்டாற் பலவாமாகலின, நீத்தாருளெல்லாமென்றார். இதனுன் இவ்வதம் மறவாதவனுயர்ச்சி கூறப்பட்டது. (இ)

**கூஉசு. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்
செல்லா துயிருண்ணுங் கூற்று. சு. [நாண்மேற்**

இ - ள். கொல்லாமை மேறகொண்டு ஒழுகுவான் வாழ்நாண் மேல் - கொலலாமையை விரதமாக மேறகொண்டொழுகுவானது வாழ்நாளினமேல்—உயிர உண்ணும் கூறறுச் செல்லாது - உயிரு ணுணுங் கூறறுச செல்லாது எ - று.

மிகப்பெரியவறஞ்செயதாரும் மிகப்பெரிய பாவஞ்செய்தா ரும் முறையானன்றி இம்மை தன்னுளளே அவறறின்பயன் அனுப விப்பரெனனும் அறநூறறுணிபுபறறி, இப்பேரறஞ்செயதான்ரு ணுங் கொல்லபபடான. படானுகவே, அடியிறகட்டியவாழ்நாள் இடையூறினறி யெயதுமெனபார, வாழநாணமேற கூற்றுச்செல்லா தெனறார் செல்லாதாகவே, கால நீட்டிகரும், நீட்டித்தால் ஞானம் பிறநது உயிர வீடு பெறுமென்பது கருதது. இதனுன் அவர்க்கு வரு நனமை கூறப்பட்டது. (சு)

**கூஉஎ. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும வினை. எ.**

இ - ள். தன் உயிர நீப்பினும் - அது செயயாவழித் தன்னு யிர் உடம்பினீங்கிபபோமாயினும்,—தான பிறிது இன்னுயிர் நீக் கும வினை செயயற்க - தான் பிறிதோரினனுயிரை அதனுடம்பினீ ங்குந தொழிலைச் செயயறக. எ - று.

தன்னை அது கொல்லினும் தான் அதனைக் கொல்லற்கவென் றது, பாவம் கொலையுண்டவழித் தேயதலும் கொன்றவழி வளர்த லும் நோக்கி. இனித் தன்னுயிர் நீப்பினுமென்பதற்குச் சாதனியா கச் செயயாதவழித தன்னுயிர் போமாயினுமென றுரைப்பாருமு ளர்; பிறர் செயதலுமாகாமையின், அஃதுரையன்மையறிக. (எ)

**கூஉஅ. நன்றுகு மாக்கம் பெரிதெனினுஞ்சான்றோர்க்குக்
கொன்றுகு மாக்கங் கடை. அ.**

இ - ள். நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும் - தேவர் பொருட்டு வேள்விக்கட்கொன்ருல் இன்பமிருஞ்செல்வம் பெரிதா மென்று இல்வாழ்வாக்குக் கூறப்பட்டதாயினும்,—சான்ருர்க் (குக் கொன்று ஆகும் ஆகாம் கடை - துறவாணமைந்தார்க்கு ஒரு யிரைக் கொல்லவருஞ் செல்வங்கடை. எ - று

இனபமிருஞ் செல்வமாவது தாழுந்தேவராயத் துறக்கத்தச செனறெயதுஞ்செல்வம். அது சிறிதாகலானும், பினனும் பிறத்தற் கேதுவாகலானும், வீடாகிய சாறினைபமையதுவாகாகுக் கடையெ னப்பட்டது. துறக்கமையதுவாக்கு ஆமாயினும் வீடையதுவா கு ஆகாதென்றமையின, விதி விலக்குகள தமமுண்மலியாமை விளக்கியவாருயிறறு. இஃதில்லறமனமைக்குக் காரணம் இவை பிரண்டுபாடனானறு கொலையது குறறங் கூறபபட்டது. (ஃ)

நாஉகூ. கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர் புன்மை தெரிவா ரகத்து. கூ.

இ - ள. கொலை வினைபர் ஆகிய மாக்கள் - கொலைத்தொழிலை யுடையராகிய மாநதர,—புனமை தெரிவார் அகத்துப புலை வினை யர் - அத்தொழிலின கிழ்மையை அறிடாத நெஞ்சத்தராயினும, அறிவார நெஞ்சத்துப் புலைசதொழிலினர். எ - று.

கொலைவினையரென்றதனுன், வேள்விக்கட கொலையன்மைய றிக. புலைவினையரென்றது தொழிலாறன புலையரென்றவாறு இம் மைக்கட் கீழமையையதுவரென்பதாம். (கூ)

நாநாஅ. உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற் செல்லாத்தீ வாழ்க்கை யவர். கஅ.

இ - ள். செயிர் உடம்பின் செல்லாத் தீவாழ்க்கையவர்-நோக் கலாகா நோயுடம்புடனே வறுமை கூர்ந்த இழிதொழில் வாழக் கையினையுடையாரை—உயிர் உடமபின நீக்கியாா எனப - இவர் முறபிறபபின்கண் உயிர்களை அவை நின்றவுடம்பினின்று நீக்கினவ ரெனறு சொல்லுவர் வினைவிளைவுகளைபறிநதோர். எ - று.

செல்லாவாழ்க்கை தீவாழ்க்கையெனக்கூட்டுக. செயிருடம் பினராதல் * "அக்கேபோ லங்கை யொழிய விரலழுஇத்—துக்கத்

---

* நாலடியார், தீவினையச்சம்.—அக்கேபோ லங்கை யொழிய விரலழுஇத்—துக்கத் தொழுநோ யெழுபவே - யச்சா—லலவினைக் காதலித்துக் காண்முரித்துத் தின்ற—பழவினை வாதலடைந்தக் கால்.

"தாழுநோ யெழுபவே" என்பதனுமறிக. மறுமைக்கண் இவை மெயதுவரெனபதாம். இவையிரண்டுபாட்டானும் கொல்வார் ஏரு வருந தீங்கு கூறப்பட்டது. (சு0)

அருளுடைமைமுதற் கொல்லாமையீறுசச் சொல்லபபட்ட இவ்வுறுள்ளே சொல்லபபடாத விரதங்களுமடங்கும், அஃதறிந்த டத்தியகொள்க. ராணடுரைபபிறபெருகும்.

ஞானம்.

இனி அவற்றின் பயனுயிய ஞானங்கூறியதொடங்கினர். ஞானமாவது வீடுபயக்குமுணாவு. அது நிலையாமைமுதல் அவர வதுத்தலிறுதியாக நானசதிகாரத்துளடகபபட்டது.

நூசம் அதி.—நிலையாமை.

அவறறுள நிலையாணமையாவது தோறறமுடையன யாவும் நிலையுதலிலவாநதனமை. மயங்கியவழிப பேயதேறிபுனல்போலத் தோனறி மெபயுணர்நதவழிக் கயிறறிலரவுபோலக் கெடுதலிற பொயயெனபாரும, நிலை வேறுபட்டுவருதலாற கணநதோறும பிற நிறக்குமெனபாரும, ஒருவர்றருன் வேறுபடுதலும ஒருவாற்றுன் வேறுபடாமையுமுடைமையின் நிலையுதலும நிலையாமையும் ஒருங் கேயுடையதுவெனபாருமெனப் பொருட்பெறறி கூறுவார பலதிற நாராவா; எல்லாரக்கும் அவறறது நிலையாமை உடம்பாடாகலின், ரண்டு அதனையே கூறுகின்றார். இஃதுணாநதுழிய லனறு பொருள் களிற பறறுவிடாதாகலின, இது முன வைகபபட்டது.

நூசு. நிலலா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை. கு.

இ - ள். நில்லாதவறறை நிலையின என்று உணரும் புல்லறி வாண்மை - நிலையுதலிலவாகிய பொருள்களே நிலையுதலுடையவெ னறு கருதுகினற புல்லியவறிவினையுடையராதல்—கடை - குறறம் கார்க்கிழிபு. எ - று.

தோறறமுடையவற்றைக் கேடிலவென்று கருதும் புல்லறி வால் அவற்றின்மேற பறறுச்செயதல் பிறவித்தன்பத்திற்கேதுவா கலின, அது வீடெயதுவாாச்சிழுக்கென்பது இதனுற் கூறப்பட் டது. இனிப் புல்லறிவாளர் பெரும்பான்மையும் பற்றுச்செய்வது சிற்றின்பத்துக்கேதுவாகிய செல்வத்தின்கண்ணும் அதனையனுப

வெிக்கும் யாக்கையினகண்ணுமாகலின், வருகின்ற பாட்டுக்களான் அவற்றது நிலையாமையை விதாது கூறுப. (க)

கூகூஉ. கூத்தாட் டவைக்குழாத் தற்றேபெருஞ்செல்வம் போக்கு மதுவிளிந் தற்று உ.

இ - ள். பெருஞ்செல்வம் கூத்தாட்டு அவைக் குழாத்தற்று - ஒருவன்மாட்டுப பெரியசெல்வம் வருதல் கூத்தாடுதல் செயகின்ற அரங்கின்கட் காண்போராகுமாம வந்தாறபோலும்,—போக்குமது விளிந்தற்று - அதனது போகலும அக்கூத்தாட்டு முடிந்த வழி அகலுமாம் போயினாறபோலும். எ - று.

பெருஞ்செல்வமெனவே துறகசெல்வமுமடஙகிற்று. போக்குமென்ற எச்சவும்மையான, வருதலென்பது பெறாரும். அக்குழாங் கூத்தாடுக் காரணமாக அரஙகினகட் பலீநிறத்தாறுனே வந்து, அககாரணம் போயவழித தானும் போமாறுபோல, செல்வமும் ஒருவனலவினே காரணமாக அவனமாடடுப பலீநிறத் தாறுனே வந்து, அககாரணம் போயவழித் தானும போமென்ற தாயிறறு. (உ)

கூகூகூ. அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்று லற்குப வாஙகே செயல். கூ.

இ - ள். அற்கா இயல்பிறறுச் செல்வம் - நில்லாதவியல்பினை யுடைத்துச் செல்வம்;—அது பெறறால் அறகுப ஆஙகே செயல் - அதனைப பெறறால், அதனுற செயயப்படடிம அறங்களை அப்பெறற பொழுதே செயக. எ - று.

அல்காவென்பது திரிநதுநின்றது. ஊழுள்ளவழியல்லது துறந்தாராறு பெறப்படாமையின் அது பெற்றாலென்றும், அஃதில்வழி நில்லாமையின் ஆஙகேயென்றுங்கூறினார். அதனுறசெயயப்படடிம் அறங்களாவன பயனேக்காது செயயப்படடிங கடவுட்பூசையும், தானமும் முதலாயின. அவை ஞானவேதுவாய வீடுபயத்தலின், அவற்றை அற்குபவென்றும் செயகவென்றுங்கூறினார். இவையிரண்டுபாட்டானும செல்வநிலையாமை கூறப்பட்டது. (கூ)

கூகூச. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும் வாள துணர்வார்ப் பெறின். ச.

இ - ள். நாள் என ஒன்றுபோல் காட்டி ஈரும் வாளது உயிர் - நாளென்று அறுக்கப்படுவதொருகாலவரையறைபோலத்

கண்ணைக்காட்டி ஈர்த்து செல்கின்ற வாளினது வாயது உயிர்;—உணர்வாரப பெறின் - அஃதுணர்வாரைப் பெறின். எ - று.

காலமென்னும் அருவப்பொருள் உலகியனடாத்தீற்பொருடடு ஆதித்தன் முதலிய ஆளவைகளாற கூறுபட்டதாக வழங்கப்படுவதல்லது தானுசச் கூறுபடாமையின் நாளெனவொன்றுபோலென்றும், அது தனனே வாளென்றுணர மாட்டாதாரா நமக்குப் பொழுதுபோகா நினறதென்று இன்புறுமாறு நாளாய மயக்கலிறகாடடியெனறும், இடைவிடாதிதலான வாளின் வாயதென்றும், அஃதிகினறமையை உணாவாரா அரியராகலின் உணர்வார்ப்பெறினெனறுங கூறினார். உயிரெனனுஞ் சாதியொருமைப்பெயர் ணாண்டு உடமபினமேனின்றது, ஈரப்படுவது அதுவேயாகலின். வாளெனபது ஆகுபெயர். இனி இதனை நாளென்பதொரு பொருள்போலத் தோன்றி உயிரை யீரவதொரு வாளாமென்றுரைப்பாருமுளர்: எனவென்பது பொருளறி இடைசசொல்லாகலானும், ஏனைபோறகாட்டி யெனபதறகு ஒர்பொருட்சிறப் பின்மையானும், அதுவெனபது குறறியலுகரமன்மையானும், அஃதுரைய னமையறிக. (ச)

கூகூடு. நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை மேற்சென்று செய்யப படும். டு.

இ – ள். நாச் செற்று விக்குள மேல் வாராமுன் - உரையா – உணணம் நாவையடகி விக்குளெழுவதறகுமுன்னே—நல் வினை மேறசெனறு செயயப்படும் - வீட்டிறகேதுவாகிய அறம் ரைறது செயயபபடும். எ – று.

மேலுலகெய்வருதல் ஒருதலையாகலானும், வந்துழிச் செய்த மையமறிச் செல்லலுமாகாமையானும் வாராமுனென்றும், அது தான இன்னபொழுது வருமென்பதின்மையின மேறசென்றென்றுங கூறினார் மேறசேறல் மண்டுதல். நல்வினைசெயயுமாற்றின் மேல்வைத்து நிலையாமை கூறியவாறு. (டு)

கூகூசு. நெருநற் றுளனொருவ னின்றில்லை யென்னும் பெருமை யுடைத்திவ் வுலகு. சு.

இ - ள். ஒருவன் நெருநல் உளன் இனறு இல்லை என்னும் பெருமை உடைத்து – ஒருவன நெருநலுளனாயினன் அவனே இன்றில்லையாயினனென்று சொல்லும் நிலையாமை மிகுதியுடைத்து—இவ்வுலகு - இவ்வுலகம். எ – று.

ஈண்டு உண்மை பிறத்தலையும், இன்மை இறத்தலையுமுணர்த்திநின்றன. அவைபெண்பாற்குமுளவாயினும், சிறப்புப்பற்றி ஆண்பாலையே கூறினார். இந்நிலையாமையே உலகின் மிக்கதென்பதாம்.

கூகூ.ஏ. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல. ஏ.

இ – ள். ஒருபொழுதும் வாழவது அறியார் - ஒருபொழுதளவும் தம்முடம்புமுயிரும இயைந்திருந்ததலைத தெளியமாட்டார்,—கோடியும் அல்ல பல கருதுப–மாட்டாதுவைத்தும், கோடியளவு மன்றி அதனினும பலவாய நினைவுகளே நினையா நிற்பர் அறிவிலாதார். ஏ – று.

இழிவுசிறப்பும்மையாற் பொழுதென்பது ஈண்டுக் கணத்தின் மேனின்றது. காரணமாகிய வினையினாலே வாழதறகும் அளவாசலின், அஃதறியப்படாதாயிறறு. பலவாய நினைவுகளாவன பொறிகளானுகரப்படிம இனபங்கள தமசகுரியவாமாறும, அதற்குப பொருளு துணைக்காரணமாமாறும், அது தமமுயறசிகளான வருமாறும், அவறறைத் தாமுயலுமாறும், அவ்வாறிறகுவரு மிடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், நீக்கி அபபொருளு கடைக்கூடடுமாறும், அதனைப பிறாகொளளாமற காகுமாறும், அதனை நட்டாரையாக்குமாறும், நள்ளாரையழிக்குமாறும், தாம் அவ்வின்பங்கள நுகருமாறும முதலாயின. அறிவிலாரதியல்பினமேல் வைத்து நிலையாமைகூறியவாறு. இனிக கருதுப வெனபதனை அஃறிணைபபன்மைபபெயராகவி உரைப்பாருமுளர். (ஏ)

கூகூஅ. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு. அ.

பி – ள். குடமபை தனிதது ஒழியப புள் பறந்தற்று - முன்றனியாந முட்டை தனிக்குக கிடபப அதனுளிருந்த புளளுப பருவம வருதுழிப பறநதுபோன தன்மைத்து—உடம்போடு உயிரிடை நட்பு - உடமபிறகும உயிர்க்குமுளதாய நடபு எ – று.

தனித்தொழியவென்றதனால், முனறனியாமை பெற்றும்: அஃதாவது கருவுந்தானும் ஒன்றுபப்பிறநது வேறுந்துணையும் அதற்காதாரமாய நிறறல், அதனுல் அஃது உடம்பிறகுவமையாயிற்று; அதனுள் வேற்றுமையின்றிநின்றே பின் புகாமற்போகலின், புள் உயிர்க்குவமையாயிற்று. முட்டையுட்பிறப்பன பிறவுமுளவேனும், புள்ளையே கூறினார், பறந்துபோதற்கெழிலான் உயிரோ

டொப்புமையெய்துவது அதுவேயாகலின். நட்பென்பது ஈண்டுக் குறிப்புமொழியாய நட்பின்றிப்போதலுணர்த்திநின்றது. * சேதனமாய அருவாய நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய அநித்தமாய உடம்பும் தம்முண்மாறுகலின், வினைவயத்தாற்கூடிய தல்லது நட்பிலவெனபதறிக. இனிக் குடம்பையென்பதற்குக் கூடென்றுரைபபாருமுளர் அது புள்ளுடன்றேன்றுமையாயினும், அதன்கண் அதுமீண்டு புகுதலுடைமையானும், உடம்பிற்கு உவமையாகாமையறிக. (அ)

ஈஉக. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி விழிப்பது போலும் பிறப்பு. கூ.

இ - ள். சாக்காடு உறங்குவது போலும் - ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம வருதலோடொக்கும்,—பிறபபு உறங்கி விழிபபதுபோலும் - அதனபின பிறபபு வருதல் உறங்கி விழித்தல் வருதலோடொகும். எ - று.

உறங்குதலும் விழித்தலும் உயிர்கட்கு இயல்பாயக் கடிதின் மாறிமாறி வருகின்றமுறபோலச் சாக்காடும பிறபபும் இயல்பாயக் கடிதின மாறிமாறி வருமென்பது கருத்து. நிலையாமையே நிலைபெறுதலாதலிவ்வுறபு பிறபபும உடன் கூறப்பட்டது. (கூ)

ஈகூ0. புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட் டுச்சி லிருந்த வுயிர்க்கு. க0.

இ - ள். உடமபினுள துச்சில் இருந்த உயிர்க்கு - வாதமுதலியவற்றின இல்லாயவுடமபுகளுள ஒதுகுகிருந்தே போந்த உயிர்கு—புக்கில அமைந்தின்றுகொல் - எஞ்ஞான்றுமிருபபதோரில் இதுகாறும் அபைந்ததிலலீபோலும! எ - று.

அநநோயகள இருக்கவமைந்த ஞான்று இருந்தும, வெகுண்டஞான்றுபோயும், ஒருடமபினும் நிலைபெறுது வருதலால, துச்சிலிருந்தவென்றார். பின் புறபபடாது புச்கேவிடுமில் அமைந்ததாயின், பிறரிற்சுருள் ஒதுக்கிறாதென்பதாம், ஆகவே உயிரோரிடங்கூடிநிறபதோருடம்புமில்லையென்பது பெறபபட்டது. இவையேழுபாட்டானும், முறையே யாக்கைகட்கு வறைாத நாள கழிகின்றவாறும், கழிந்தால உளதாகிலைமையும், அவை ஒரோவழிப் பிறந்த வளவிலே இறத்தலும், ஒருகணமாயினும் நிறகுமென்பது தெளி

* இவ்வாறு பெயரடியாகத் தோன்றிய சூறிபபை வடநூலார் அபிதாமூலத்தொனியென்றும், விருத்தலக்கணையென றுங்கூறுவர்.

யப்படாமையும், உயிர்நீங்கியவழிக் கிடக்குமாறும், அவற்றிற்கு இறப்பும் பிறப்பும் மாறிமாறி வருமாறும், அவைதாம் உயிர்க்குரிய வன்மையுமென்று, இவ்வாறாலும் யாக்கை நிலையாமை கூறியவாறு கண்டுகொள்க. (கo)

கூடி ம் அதி.—துறவு.

அஃதாவது புறமாகிய செல்வத்தின்கண்ணும் அகமாகிய யாக்கையின்கண்ணும் உளதாய பற்றினை, அவற்றது நிலையாமை நோக்கி, விடுதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

கூசக. யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனி னதனி னிலன். க.

இ - ள். யாதனின் யாதனின் நீங்கியான் - ஒருவன் யாதொரு பொருளின யாதொருபொருளின் நீங்கினானை—அதனின் அதனின் நோதல் இலன் - அவன அபபொருளால் அபபொருளால் துன்பமெயதுதலிலன. எ - று.

அடுச்சுக்கள பனமை குறித்துநின்றன. நீங்குதல் துறத்தல். ஈண்டுத் துன்பமென்றது இமமைமக்கண அவாறைத் தேடுதலானும், காத்தலானும், இழத்தலானும் வருவனவும, மறுமைமகட் பாவத்தான் வருவனவுமாய இருவகைத்துனபங்களையுமாம். எல்லாப பொருளையும ஒருங்கே விடுதல தலை, அஃதன்றி ஒரோவொன்றாக விடினும் அவறறான் வருந்துனபமிலனாமென்பது கருத்து. (க)

கூசஉ. வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல. உ.

இ - ள். துறந்தபின் ஈண்டு இயறபால பல - எல்லாப்பொருள்களையுந துறத்தலால் ஒருவர்க்கு இம்மைக்கண்ணே உளவாம் முறைமையையுடைய இன்பங்கள் பல;—வேண்டின உண்டாகத் துறக்க - அவ்வினபங்களை வேண்டின, அவற்றைக் காலம் பெறத் துறக்க. எ - று.

அவ்வின்பங்களாவன அப்பொருள்கள் காரணமாக மனமொழிமெயகள் அலையாது நிற்றலானும, அவை நனனெறிக்கட சேறலானும், வருவன. இளமைக்கட்டுறந்தான் அவற்றை நெடுங்காலமெயதுமாகலின், உண்டாகததுறகவென்றார். இன்பங்களென்பதும் காலமென்பதும் வருவிக்கபபட்டன. இம்மைக்கடபின்பங்கள் இலவாதலேடன்றி இன்பங்களுளவாதலுமுண்டென்பதாம்.

கூசஊ. அடல்வேண்டு மைம்தன் புலத்தைவிடல்வேண்டு வேண்டிய வெல்லா மொருங்கு. கூ. [ம்

இ – ள். ஐந்தன் புலத்தை அடல்வேண்டும் - வீடெய்துவார்க்குச் செவி முதலிய ஐம்பொறிகட்குரியவாய ஓசை முதலிய ஐம் புலன்களையுங் கெடுத்தல்வேண்டும்;—வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல்வேண்டும் - கெடுக்குங்கால் அவற்றை நுகர்தற்பொருட்டுத் தாம் படைத்த பொருண் முழுதையும் ஒருங்கே விடுதல் வேண்டும். எ – று.

புலமென்றது அவற்றை நுகர்தலை. அது மனத்தைத் துன்பத்தானும் பாவத்தானுமன்றி வாராத பொருள்கண்மேலல்லது வீட்டு நெறியாகிய யோகஞானங்களிற் செலுத்தாமையின், அதனையடல் வேண்டுமென்றும், அஃது அபபொருள்கண்மேற் செல்லின் அந் நுகர்ச்சி விறகுபெற்ற தழல்போல் முறுகுவதல்லது அடப்படாமையின், வேண்டியவெல்லா மொருங்குவிடல்வேண்டுமென்றுங் கூறினர். (கூ)

கூசஎ. இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை மயலாகு மற்றும் பெயர்த்து. எ.

இ - ள். ஒன்று இன்மை நோன்பிற்கு இயல்பாகும் - பற்றப்படுவதொருபொருளுமில்லாமை தவஞ்செயவார்க்கு இயல்பாம்;—உடைமை பெயர்த்து மற்றும் மயலாகும் - அஃதனறி, ஒன்றுயினுமுடைமை அத்தவத்தைப்போக்குதலான, மீணடும் மயங்குதற் கேதுவாம். எ - று.

இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. நோன்பென்ப தூஉம் மயலென்பதூஉம ஆகுபெயர். பெயர்த்தலைனென்பது நிரிதுநினறது. நோன்பைப் பெயர்த்தலானென வேற்றுமைப்படுத்துக்கூட்டுக. எல்லாப பொருளகளையும் விட்டு ஒருபொருளைவிடாதவழியும்,அது சாபாக விட்டனவெல்லாம் மீண்டுவந்து தவத்திற் இடையீடாய மனக்கலக்கஞ்செயயுமென்பது கருத்து. இவை நானகுபாட்டானும் எனதெனனும் புறபபற்று விடுதல் கூறப்பட்டது.

கூசஅ. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க லுற்றார்க் குடம்பு மிகை. அ.

இ - ள. பிறப்பு அறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை - பிறப்பதுத்தலே மேற்கொண்டாாக்கு அதற்குக் கருவியாகிய உடம்பும்

மிகையாம்;—மற்றும் தொடர்ப்பாடு எவன் - ஆனபின் அதற்கு மே லே இயைபில்லனவுஞ்சில தொடர்ப்பாடுளவாதல் என்னும்! எ-று.

உடம்பென்ற பொதுமையான், உருவுடம்பும் அருவுடம்புங் கொள்ளப்படும். * அவற்றுளை, அருவுடம்பாவது பத்துவகையிற்தி ரியவுணர்வோடும் ஐவகை வாயுக்களோடும் காமவினைவிளைவுக ளோடுங் கூடிய மனம்; இது தண்ணுடம்பெனவும்படும். இதன கட் பற்று நிலையாமையுணர்ந்ததனையான் விடாமையின், விடுதற் குபாயம் முன்னாக் கூறுப. இவ்வுடம்புகளால் துன்பம இடை யறுதலருதலையுணர்ந்து இவற்றுளைய கட்டினை இறைப்பொழு தும் பொருது வீட்டின்கணனே விரைதலின், உடம்பு மிகையென் றார். இன்பத்துன்பங்களான் உயிரோடு ஒற்றுமையெய்துதலின், இவ்வுடம்புகளும் யானெனப்படும். இதனுன் அகப்பற்று விடுதல் கூறபபட்டது. (நி)

கூசசு. யானென தென்னுஞ் செருக்கறுப்பான்வானோர்க் குயர்ந்த வுலகம் புகும். சு.

இ - ள். யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்-தானல் லாதவுடம்பை யானென்றும் தனதுடையையில்லாத பொருளை எனதென்றும் கருதி அவற்றினகட் பற்றுச்செயதறகேதுவாகிய மயகத்தைக் கெடுபபான்—வானோர்க்கு உயாந்த உலகம புகும - வானோர்க்கும் எய்தறகரிய வீட்டுலகதனதையெய்தும. எ - று.

மயக்கம் அறியாமை. அதனைக் கெடுத்தலாவது தேசிகர்பாற் பெறற உறுதிமொழிகளானும் யோகபயிறசியானும அவை யானெனதனமை தெளிதது, அவற்றின்கட் பறறை விடுதல். சிறப பமை விகாரதாறறுக்கது. இதனுன இவ்விருவகைப்பற்றினை யும விட்டார்களே வீடுளதெனபது கூறபபட்டது. (சு)

கூசஎ. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப் பற்றி விடாஅ தவர்க்கு. எ.

இ - ள். பற்றினைப் பறறி விடாதவர்கு - இருவகைப்பற்றி னையும இறுகப்பறறி விடாதாரை—இடும்பைகள பறறி விடா - ிறவித்துன்பங்கள் இறுகபபற்றி விடா. எ - று.

இறுகபபறறுதல் காதல்கூர்தல். விடாதவர்க்கென்பது வேற் றுமை மயக்கம். இதனுல் இவை விடாதாாக்கு வீடில்லையென்பது கூறபபட்டது. (எ)

* உருவுடம்பு தூலசரீரம். அருவுடம்பு சூக்குமசரீரம்.

கூசஅ. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். * அ.

இ—ள். தீரத் துறந்தார் தலைப்பட்டார் - முற்றத்துறந்தார் வீட்டினைத் தலைப்பட்டார்,—மற்றையவர் மயங்கி வலைபடடார் - அங்ஙனந் துறவாதார் மயங்கிப் பிறபபாகிய வலையுட்பட்டார்.எ-று

முற்றத்துறத்தலாவது பொருள்களையும் இருவகையுடம்பினையும் உவர்த்துபபறறற விடுதல். அங்ஙனந துறவாமையாவது அவறறுள் யாதானுமொன்றினகட் சிறிதாயினும் பறறுசெயதல். துணிவுபற்றித் தலைபபட்டாரெனறும், பொயாநெறிசண்டே பிறபபுவலையுளபபடுதலின் மயங்கியெனறுங கூறினார். (அ)

கூசகூ. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும். கூ.

இ—ள். பறறு அற்றகண்ணே பிறப்பு அறுக்கும் - ஒருவன இருவகைபபறறுமறறபொழுதே, அப்பறறறுதி அவன பிறபபுபயறுக்கும்,—மற்று நிலையாமை காணபபடும-அவையுருதபொழுது அவற்றுற பிறநதிறநது வருகின்ற நிலையாமை காணப்படும். எ - று.

காரணமறறபொழுதே காரியமும அற்றதாமுறைமைபறறி, பற்றற்றகண்ணே யென்றார்; "அற்றது பறறெனி-லுறறது வீடு" † எனபதனாலும் அதுபறறி வநதது. இவையிரணடுபாட்டானும் அவ்வி ருமையும் ஒருங்கு கூறபபட்டன. (கூ)

---

* இவவருமைத் திருககுறளைச சாதானகுரவரு ளொருவரா கிய கொறறவனகுடி உமாபதிசிவாசாரியா நெஞ்சுவிடுதூதில் "தே ருஙகா—லுனனே யொழிய வுறவில்லை யெனனுமது—தன்னை யறி வைத் தனியறிவை முனனந—தலைபபட்டார் தீரத் துறந்தார் மயங்கி—வலைபபடடா மறறையவ ரெனறு - நிலைத்தமிழின்—றெயவப் புலமைத திருவள்ளுவ ருரைதத—மெயவைதத சொல்லை விரும்பாம - லெவாக்கு—மாவதுவே செயதங் கவர்வழியைத் தப பாமற—பாவமெனும் பௌவப பரப்பழுநதிப் - பூவையர்தங்—கண்வலையிற பட்டுக் கலஙிக கலிபயினறங்—குண்மை நிலையுணா ச்சி யோராமற - றிண்மையிலு—ளுவிற் கொடுமை பலபிதறறி நாடோறுஞ்—சாவிற பிறப்பிற் றலைப்படடிங் - காவிநிலை—நிற் கும்வகை பாராய நிலையான நெஞ்சமே—பொற்பினுடன் யானே புகலக்கேள்" எனவெடுத்தருளிசசெயதார். இநநெஞ்சுவிடுதூது சைவசித்தாந்தம் பதினான்கினுளொன்று.

† திருவாய்மொழி, உ-ம் திருப்பதிகம், நு—அற்றது பறறெ னி—லுற்றது வீடெயிர்—செறறது மனனுறி—லற்றிறை பற்றே.

கூறும். பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு. கo.

இ - ள். பற்று அற்றான் பற்றினைப் பற்றுக - எல்லாப் பொருளையும் பற்றிநின்றே பற்றற்ற இறைவன் ஒதிய வீட்டுநெறியை இதுவே நன்னெறியென்று மனத்துக்கொள்க;—அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு - கொண்டு, அதன்கணுபாயத்தை அம்மனத்தாற் செயக, விடாது வந்த பற்று விடுதற்கு. எ – று.

கடவுள் வாழ்த்திற்கேற்ப ஈண்டும் பொதுவகையாற் பற்றற்றானென்றார். பற்றற்றான்பற்றென்பழி ஆருவது செயயுட்கிழமைக் கண்வந்தது. ஆண்டுப்பற்றென்றது பற்றப்படுவதனை. அதனகணுபாயமென்றது தியானசமாதிகளை. விடாதுவந்த பற்றென்பது அநாதியாய்வரும் உடம்பிற்பற்றினை. அபபற்று விடுதற்கு உடாயம் இதனுற் கூறப்பட்டது. (கo)

கூசும் அறிவு—மெய்யுணர்தல்.

அஃதாவது பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீதவையங்களானன்றி உண்மையானுணர்தல். இதனை வடநூலார் தத்துவஞானமென்ப. இதுவும் பற்றற்றான் பற்றினைப் பற்றியவழி உளதாவதாகலின், அக்காரணவொற்றுமைபறித்துரைவின்பின் வைக்கப்பட்டது.

கூறுக. பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு மருளாணை மாணாப் பிறப்பு. க.

இ - ள். பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருளான் ஆம் - மெயப்பொருளல்லவற்றை மெயப்பொருளென்றுணரும் விபரீதவுணர்வானே உளதாம்—மாணாப் பிறப்பு - இன்பமில்லாத பிறப்பு. எ - று.

அவ்விபரீதவுணர்வாவது மறுபிறப்பும், இருவினைப்பயனும், கடவுளுமில்லையெனவும், மற்றுமித்தன்மையவுஞ்சொல்லும் மயக்கநூல் வழக்குக்களை மெயநூல் வழக்கெனத் துணிதல். சூற்றியை மகனென்றும் இப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றனைப் பிறிதொன்றுகத் துணிதலும் அது. மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை என்பன ஒருபொருட்கிளவி. நரகர், விலங்கு, மக்கள், தேவரென்னும் நால்வகைபபிறப்பினுமுள்ளது துன்பமேயாகலின்,

மாணப்பிறப்பென்றார். இதனும் பிறப்புத் துன்பமென்பதூஉம், அதற்கு முதற்காரணம் அவிச்சையென்பதூஉங் கூறப்பட்டன. ()

கூடுஉ. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி மாசறு காட்சி யவர்க்கு. உ.

இ - ள். மருள் நீங்கி மாசு அறு காட்சியவர்க்கு - அவிச்சை யினீங்கி மெயயுணர்வினேயுடையராயினார்க்கு—இருள் நீங்கி இன் பம் பயக்கும் – அம்மெயயுணர்வு பிறப்பினே நீககி வீட்டினைக் கொடுக்கும். எ - று.

இருள் நரகம்; அஃது ஆகுபெயராய்க் காரணத்தின்மேனின் றது. நீங்கியெனத்தொடைநோக்கி மெலிந்து நின்றது; நீங்கவெ ன்பதன்றிரிபெனினுமமையும். மருணீங்கியென்னும் விகேயெச் சம் காட்சியவரென்னுங் குறிப்புவினேப்பெயர் கொண்டது. மாசறுகாட்சியென்றது கேவலவுணர்வினே. இதனால் வீடாவது நிரதிசயவின்பமென்பதூஉம், அதற்கு நிமித்தகாரணம் கேவலப் பொருளென்பதூஉங் கூறப்பட்டன. (உ)

கூடுங. ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வான நணிய துடைத்து. ங.

இ - ள். ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு - ஐயத்தினின்று நீங்கி மெய யுணர்ந்தார்க்கு—வையத்தின் வானம் நணியது உடை த்து - எய்திநின்ற நிலவுலகத்தினும் எய்தக்கடவதாய வீட்டுலகம நணித்தாதலுடைத்து. எ - று.

ஐயமாவது பலதலேயாயவுணர்வு. அஃதாவது மறுபிறப்பும், இருவினேப் பயனும், கடவுளும் உளவோ இலவோவென ஒன்றிற் றுணிவு பிறவாது நிற்றல்; பேயத்தேரோ புனலோ கயிறே அர வோவெனத் துணியாது நிற்பதும் அது. ஒருவாற்றாற் பிறர்மதங்க ளோந்து தம்மதநிறத்தல் எல்லாச்சமயநூல்கட்கும் இயல்பாகலின், அவை கூறுகின்ற பொருள்களுள் யாது மெய்யென நிகழுமையத் தினே யோகமுதிர்ச்சியுடையார் தம்மனுபவத்தானீக்கி மெய்யுணர் வாராகலின், அவரை ஐயத்தினீங்கித் தெளிந்தாரென்றும், அவர் க்கு அவ்வனுபவவுணர்வு அடிப்பட்டு வரவரப் பண்டையுலகியலு ணர்வு தூர்ந்துவருமாகலின் அதனேப் பயன்மேலிட்டு வையத்தின் வானி நணியதுடைத்தென்றுங் கூறினார்; கூறவே, ஐயவுணர்வும் பிறப்பிற்குக் காரணமாதல் கூறப்பட்டது. (ங)

நூறிச. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. ச.

இ - ள். ஐயுணர்வு எய்தியக்கண்ணும் பயம் இன்றே-செல்லப் படுகின்ற புலனகள் வேறுபாட்டான ஐதாகியவுணர்வு அவற்றை விடுதற்கு ஏதுவாகிய வழியும், அதனாற் பயனில்லையேயாம்—மெய யுணர்வு இல்லாதவர்க்கு - மெயயினையுணர்தலில்லாதார்க்கு. எ-று.

ஐந்தாகியவுணர்வு மனம். அஃதெயதுதலாவது மடங்கி ஒரு தலைப்பட்டுத் தாரணைக்கணிறறல். அங்ஙனநின்றவழியும் வீடு பய வாமையின், பயமினறென்றார். சிறபபும்மை எயதுதற்கருமை விளகுகின்றது இவையிரண்டுபாடானும் மெயயுணாவுடையா ரக்கே வீடுளதென மெயயுணாவின் சிறபபுக் கூறப்பட்டது. (ச)

நூறிநி. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. நி.

இ - ள். எபபொருள எத்தன்மைத்து ஆயினும் - யாதொரு பொருள் யாதோரியல்பிறறுபத் தோனறினும்,—அப்பொருள மெயபபொருள் காண்பது அறிவு - அத்தோனறியவாறறைக் கண் டொழியாது அப்பொருளின்கணின்று மெயயாகிய பொருளைக் காணபதே மெயயுணர்வாவது. எ - று.

பொருடோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகி ன்ற கறபனைகளைக் கழித்து, நின்றவுண்மையைக் காண்பதென்ற வாரூயிறறு. அஃதாவது கோசசேரமான் யானைக்கட்சேஎய மாந் தரஞ்சேரலிரும்பொறை என்றவழி அரசனென்பதோர்சாதியும், சேரமானென்பதொருகுடியும, வேழநோக்கினையுடையானென்ப தோர் வடிவும், சேயென்பதோரியற்பெயரும், மாநதரஞ்சேரலி ரும்பொறையென்பதோர் சிறப்புப்பெயரும், ஒருபொருளின்கட் கறபனையாகலின், அவ்வாறுணராது நிலமுதல் உயிரீறுகிய தத்து வங்களின்முருதியெனவுணர்ந்து, அவற்றை நிலமுதலாகத் தத்தங் காரணங்களுளொடுக்கிக் கொண்டுசென்றுற் காரணகாரியங்களி ரண்டுமின்றி முடிவாய நிற்பதனையுணர்தலாம். எப்பொருளெனறற் பொதுமையான் இயங்குதினையும் நிலைத்தினையுமாகிய பொருள்க ளெல்லாம் இவ்வாறே யுணரபபடும். இதனான் மெய்யுணர்வின் இலக்கணம் கூறப்பட்டது. (நி)

நூறிசு. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்பிறவர்
மற்றீண்டு வாரா நெறி.

இ - ள். ஈண்டுக் கற்று மெய்ப்பொருள் கண்டார் - இம்மைக் கட்பிறப்பின்கண்ணே உபதேசமொழிகளே அனுபவமுடைய தேசிகர்பாற் கேட்டு அதனுன் மெயப்பொருளேயுணர்ந்தவர்—மற்று ஈண்டு வாரா நெறி தலைப்படுவர் – மீண்டு இப்பிறபபின்கண் வாராத நெறியையெயதுவர். எ - று.

சதறென்றதனுல் பலர்பக்கலினும் பலகாலும் பயிறலும், ஈண்டென்றதனுல் வீடுபேறறிதருகிய மக்கட்பிறப்பினது பெறுதறகருமையும் பெறறும். ஈணடு வாராநெறி வீட்டுநெறி. வீட்டிற்கு நிமித்தகாரணமாய முதறபொருளே உணர்தறகு உபாயம் மூன்று, அவை கேளவி, விமரிசம, பாவனேயெனபன. அவறறுட்கேள்வி * இதனுற கூறபபட்டது. (சு)

சுருஎ. ஓர்த்துள்ள முள்ள துணரி னெருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறபபு. எ.

இ - ள். உள்ளம ஒருதலேடா ஓர்தது உள்ளது உணரின் - அங்ஙனங்கேட்ட உபதேசமொழிபபொருளே ஒருவனுளளம் அளவைகளானும பொருதுமாறறுணுந் தெளியவாராயாது, அதனுன் முதறபொருளே யுணரமாயின,—போததுப் பிறப்பு உள்ளவேண்டா - அவனுக்கு மாறிப பிறப்புளதாக நினைக்கவேண்டா. எ-று.

ஒருதலேயாவோர்த்தென இயையும். அளவைகளும் பொருந்துமாறும் மேலே † யுரைத்தாம். இதனுல் விமரிசங் கூறபபட்டது.()

சுருஅ. பிறப்பென்னும் பேதைமைநீங்கச்சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு. அ.

இ - ள். பிறபபு என்னும் பேதைமை நீங்க-பிறப்பிற்கு முதற் காரணமாய அவிச்சை கெட—சிறப்பு எனனும் செம்பொருளகாண்பது அறிவு - வீட்டிற்கு நிமித்தகாரணமாய செவ்வியபொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெயயுணர்வாவது. எ - று.

பிறப்பென்னும் பேதைமையெனவும், சிறப்பென்னுஞ் செம்பொருளெனவும், காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஐவகைக் குற்றங்களுள் அவிச்சை வேனய ரான்கிற்குங் காரணமாதலுடைமையின், அச்சிறப்புபபற்றி அதனேயே பிறப்பிற்குக் காரண

* கேள்வியெனினும், சிரவணமெனினுமொக்கும். விமரிசமெனினும், சிந்தித்தலெனினும், மனனமெனினு மொக்கும். பாவனேயெனினும், தெளிதலெனினும், நிதித்தியாசனமெனினு மொக்கும்.

† உசஉ-ம் குறளுரையிறகாண்க.

மாச்சிக்கூறினார். எல்லாப்பொருளினுஞ் சிறந்ததாகலால், வீடு சிறப்பெனப்பட்டது. தோற்றக்கேடுகளின்மையின் நித்தமாய், நோன்மையாற் றன்னையொன்றுங் கலத்தலின்மையிற்றூய்தாயத், தானெல்லாவற்றையுங் கலந்து நிற்கின்ற மூதற்பொருள் விசாரமின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாதல்பற்றி, அதனைச் செம்பொருளென்றார். மேல் மெய்ப்பொருளெனவும் உள்ளதெனவுங் கூறியதூஉம் இதுபற்றியெனவுணர்க. அதனைக் காண்கையாவது உயிர்தன்னவிச்சைகெட்டு அதனோடு ஒற்றுமையுற இடைவிடாது பாவித்தல். இதனைச் சமாதியெனவுஞ் சுகவிலத்தியானமெனவும் கூறுப. உயிர் உடம்பினீங்குங்காலத்து அதனுல் யர்தொனறு பாவிக்கப்பட்டது அஃது அதுவாயத் தோனறுமெனபது எல்லாவாகமங்கட்குந் துணிபாகலின, வீடெயதுவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேதுவாய பாவனை கெடுதற்பொருட்டுக் கேவலபொருளையே பாவித்தல் வேண்டுதலான், அதனை முன்னே டயிறலாய இதனின்மிக்க வுபாயமில்லையென்பதறிக. இதனுற பாவனை கூறப்பட்டது. (அ)

கூருகூ. சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்து சார்தரா சார்தரு நோய். * கூ. [ச்

இ - ள். சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகின் – ஒருவன் எல்லாப்பொருட்குஞ் சார்பாய அச்செம்பொருளைபுணர்ந்து இருவகைப்பற்றுமற ஒழுகவல்லனாயின,—சாதரும நோய அழித்து மற்றுச் சார்தரா - அவனை முன சாரக்கடவனவாய நின்ற துன்பங்கள் அவ்வுணர்வொழுக்கங்களை யழித்துப் பின்சாரமாட்டா. எ – று.

---

* இவ்வருமைத்திருக்குறளைத் திருக்கடலூர் உயயவாத தேவநாயனார் திருக்களிற்றுபபடியாரிலே "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகினென்றமையாற்—சார்புணர்வு தானே தியானமுமாஞ் - சார்பு—கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்—படவருவ தில்லைவினைப் பற்று." எனவெடுத்தருளிச்செய்தார். இவ்வுயயவந்த தேவநாயனார் பெரும்பற்றப்புலியூரில் எழுநதருளியிருந்தபொழுது தம்மையடைந்த ஓரதிபக்குவர்பொருட்டு இந்நூலைச்செய்து, இதன்பெருமையை உலகத்துள்ளார் உணர்நதுயயுமாறு திருவுளங்கொண்டு, திருவம்பலத்திற் சென்று வணங்கி, திருச்சளிறுப்படியிலே இநநூலை வைக்குமளவில் அத்திருக்களிற்றுக்கை நிமிர்ந்து இதனைவாங்கிப் பரமகருணநிதியாகிய நடராசரது திருவடியிலே கொடுத்தமையால், அத்திருப்படைவீட்டினுள்ள எழுநூறு திருமடத்து முதலிகளும் தில்லைவாழந்தணர் மூவாயிரவரும் மாகேசுவர் நாற்பத்தெண்ணாயிரவரும் திருக்கோயிற்றிருத்தொண்டு செய்யும் திருப்பேர் ஏழாயிரத்துத்தொளாயிரவரும் பிறரும் சன்னிதியிலே

ஆகுபெயராற் சாருமிடத்தையும் சார்வனவற்றையுஞ் சார் பென்றார். ஈண்டு ஒழுக்கமென்றது யோகநெறி யொழுகுதலே. அஃது இயமம், நியமம், இருப்பு, உயிர்நிலை, மனவொருக்கம், தாரணை, தியானம், சமாதியென எண்வகைப்படும். அவற்றின்பரப் பெல்லாம் ஈண்டுரைபபிறபெருகும்; யோகநூல்களுட்காண்க. மற் றுச் சார்தராவெனவியையும். சாரக்கடவனவாய நின்றநன்பங்க ளாவன பிறபபு அநாதியாய வருசலின் உயிரான் அளவின்றியீட் டப்பட்ட வினைகளின பயன்களுள் இறந்த உடம்புகளான் அனுப விக்கதனவும் பிறந்தவுடம்பான முகநது நின்றனவுமொழியப் பின் னுமனுபவிக்கக் கடவனவாயகிடந்தன. அவை விளக்கின்முன்னி ருள்போல் ஞானயோகங்களின் முன்னர்க் கெடுதலான், அழித் தச்சார்தராவென்றார். இதனை ஏருநதர் உவர்ப்பென்ப. பிறப்பிற் குக்காரணமாகலான், நல்வினைபபயனும் நோயெனப்பட்டது. மே னமூன்றுபாயத்தானும் பரம்பொருளை யுணரப பிறப்பறுமென் றார். அஃதறும்வழிக் கிடந்த தன்பங்களெல்லாம் என்செயுமெ னனுங்கடாவையாசங்கித்து அவை ஞானயோகங்களின் முதிர்ச்சி யுடையவுயிரைச் சாரமாட்டாமையானும் வேறுசார்பின்மையா னுங் செட்டுவிடுமென்பது இதனாற் கூறப்பட்டது. (கூ)

கூசு0. காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய். க0.

இ - ள். காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெட - ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையார்க்கு விழைவு, வெ றுபபு, அவிச்சையென்னு மிக்குறறங்கண்மூனறனுடைய பெயருங் கூடக்கெடுதலான்,—நோய கெடும் - அவறறின் காரியமாய வினை ப்பயன்கள் உளவாகா. எ - று.

அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யானெனமதிக்கும் அக ங்காரமும, அதுபற்றி எனக்கிதுவேண்டுமென்னும் அவாவும், அது பற்றி அப்பொருட்கட்செல்லுமாசையும, அதுபற்றி அதன்மறு தலைக்கட்செல்லுங்கோபமுமென வடநூலார் குற்றமைந்தென்றார். இவ. அவற்றுள் அகங்காரம் அவிச்சைக்கண்ணும் அவாவுதல் ஆசைக்கணனுமடங்குதலான், மூன்றென்றார். இடையிலுதி ஞான யோகங்களின் முன்னர் இக்குற்றங்கண் மூன்றுங் காட்டித்தீமூன்

கூடிநின்று வியப்புற்று, இந்நூற்குத் திருக்களிற்றுப்படியாரெனத் திருநாமஞ்சாத்தினார்களென்றறிக. இது சைவசித்தாந்த சாஸ்திரம் பதினான்கினுளொன்று.

னர்ப்பஞ்சுத்துய்போலுமாகலின், அம்மிகுதி தோன்ற இவை மூன்றுமன்கெடவென்றார். இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கெடவென்பது எச்சத்திரிவு. நோயென்பது சாதியொருமை. காரணமாய அக்குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய இருவினைகளைச் செயயாமையின், அவர்க்கு வரக்கடவதுன்பங்களுமில்லையென்பது இதனாற் கூறப்பட்டது. முன்கிடந்த துன்பங்களும் மேல் வரக்கடவ துன்பங்களுமிலவாதல் மெயயுணர்வின் பயனுகலின், இவை யிரண்டுபாட்டும் இவ்வதிகாரத்தவாயின. இவ்வாற்றானே மெயயுணர்ந்தார்க்கு நிறபன எடுத்தவுடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களுமே யெனபது பெறறும். (கo)

கூஎம் அதி.—அவாவறுத்தல்.

அஃதாவது முன்னும பின்னும் வினைத்தொடர்பறுத்தார்க்கு கடவுநின்ற உடமபும் அதுகொண்ட வினைபபயனகளும் நினறமையின், வேதனைபறறி ஒரோவழித் துறக்கபபட்ட புலனகண்மேற் பழைய ப்யிறசிவபத்தான் நினைவு செல்லுமனறே, அந்நினைவும் அவிச்சையெனப பிறவிக்கு வித்தாமாகலின், அதனை இடைவிடாத மெயப்பொருளுணர்வானறுத்தல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும.

கூசுக. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப பிறப்பீனும் விதது. க.

இ – ள். எல்லாவுயிர்கும் எஞ்ஞான்றும் தவாப் பிறப்பு ஈனும வித்து - எல்லாவுயிரகட்கும் எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறபபினை விளைவிக்கும் வித்து—அவா எனப - அவாவெனறு சொல்லுவர் நூலோர். எ – று.

உடம்பு நீங்கிப்போங்காலத்து அடுத்த வினையும், அது காட்டுங்கதிநிமித்தங்களும், அக்கதிக்கணவாவும உயிரின்கண் முறையே வந்துதிப்ப, அறிவை மோகம் மறைப்ப, அவ்வுயிரை அவ்வவா அக்கதிக்கட் கொண்டுசெல்லுமாகலான, அதனை பிறப்பீனும் வித்தென்றும், கதிவயத்தானுளதாய அவ்வுயிர்வேறுபாட்டினும் அவை தன்மை திரியும் உற்சர்ப்பிணி அவசர்ப்பிணி * யெனனுங் காலவேறுபாட்டினும் அது வித்தாதல் வேறுபடாமையின் எல்லாவுயிர்க்கு

* உற்சர்ப்பிணியாவது உலகம் வாழ்நாள் போகமுதலியவற்றுன் வளர்பிறைபோலப் பெருகுங்காலம். அவசர்ப்பிணியாவது அஃது அவறறுறறு தேயபிறைபோலச சுருங்குங்காலம்.

மெஞ்ஞான்றுமென்றும், இஃது எல்லாச்சமயங்கட்கு மொத்த லான் என்பவென்றுங் கூறினர். இதனும் பிறப்பிற்கு அவா வித் தாதல் கூறப்பட்டது. (ச)

ஈசுஉ. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது வேண்டாமை வேண்ட வரும். * உ.

இ - ள். வேண்டுங்கால் பிறவாமை வேண்டும் - பிறப்புத் துன்பமாதலறிந்தவன் ஒன்றை வேண்டிற பிறவாமையை வேண் டும்;—அது வேண்டாமை வேண்ட வரும் - அப்பிறவாமை தான் ஒருபொருளேயும் அவாவாமையைவேண்ட அவனுக்குத் தானேயு ண்டாம். எ - று.

அநாதியாகத் தான் பிறப்புப் பிணி மூப்பிறப்புக்களாற்றுன்ப முறாது வருகின்றமையையுணர்ந்தவனுக்கு ஆசை இன்பத்தின்கண் ணேயாகலிற் பிறவாமையவேண்டுமென்றும், ஈண்டைச் சிற் றின்பங்கருதி ஒருபொருளேயவாவின் அது பிறப்பீனும் வித்தா யப் பின்னும் முடிவில்லாத துன்பமே விளைத்தலின் அது வேண் டாமை வேண்டவருமென்றுங் கூறினர். பிறவாமையின் சிறப்புக் கூறிப் பின அது வரும்வழி கூறத்தொடங்குகின்றமையின், மத்து வினைமாற்றின்கண வந்தது. (உ)

ஈசுஊ. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை யாண்டு மஃதொப்ப தில். ஊ.

இ - ள். வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை—ஒருபொருளேயும அவாவாமையையடைக்கும் விழுமிய செல் வம காணப்படுகின்ற இவ்வுலகினகணில்லை;—ஆண்டும் அஃது ஒப்பது இல் - இனி அவ்வளவேயனறு, கேட்கப்படுகின்ற துறச்க த்தின்கண்ணும் அதனை யொப்பதில்லை. எ - று.

மக்கள்செல்வமும் தேவர்செல்வமும் மேன்மேனேக்கக் கீழா தலுடைமையின், தனக்கு மேலிலலாத வேண்டாமையை விழுச் செல்வமென்றும், அதற்கு இரண்டுலகினுமொப்பில்லையென்றுங் கூறினர். ஆகமவளவைபோலாது காட்சியளவை எலலாராலும்

* இவ்வருமைத்திருக்குறள திருக்களிற்றுப்படியாரிலே "வேண் டுங்கால் வேண்டும் பிறவாமை யென்றமையால்—வேண்டுமஃதே டஃதொன்றும் - வேண்டினது—வேண்டாமை வேண்டவரு மென் றமையரல் வேண்டிடுக—வேண்டாமை வேண்டுமவன் பால்." எனவெடுத்தருளிச்செயயப்பட்டது.

தெளியப்படுதலின், மக்கள்செல்வம் வகுத்து முற்கூறப்பட்டது. பிறவாமைக்கு வழியாமெனவும், விழுச்செல்வமாமெனவும்,வேண்டாமையின் சிறப்பு இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது. (கூ)

கூசுச. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். ச.

இ - ள். தூய்மை என்பது அவாவின்மை - ஒருவர்க்கு வீடென்று சொல்லப்படுவது அவாவில்லாமை;—அது வாயமை வேண்ட வரும் — அவ்வவாவில்லாமை தான் மெயம்மையைவேண்டத் தானே யுண்டாம். எ - று.

வீடாவது உயிர் அவிச்சைமுதலிய மாசு நீங்குதலாகலின், அதனைத் தூயமையென்றும், காரணத்தைக் காரியமாக உபசரித்துத் தூய்மையென்பதவாவின்மை யென்றும், மெய்ம்மையுடைய பரத்தை ஆருபெயரான் மெய்ம்மையென்றுங் கூறினர். மற்று மேலியதுபோல வினைமாற்றின்கண் வந்தது. வேண்டுதல் இடைவிடாது பாவித்தல். அவாவறுத்தல் வீட்டிறருப் பரம்பரையானன்றி நேரே யேதுவென்பதனாலும் அது வரும் வழியும் இதனுங் கூறப்பட்டன. (ச)

கூசுடு. அற்றவ ரென்பா ரவாவற்றூர் மற்றையா
ரற்றுக வற்ற திலர். டு.

இ - ள். அற்றவர் என்பார் அவா அற்றூர் - பிறவியறறவரென்று சொல்லப்படுவார் அதற்கு நேரே யேதுவாகிய அவாவறறவர்கள்;—மறறையார் அறறுக அறறதிலர்—பிறவேதுக்களற்று அஃதொனறுமறறவர்கள், அவற்றுற சிலதுன்பங்களற்றதல்லது, அவர் போற் பிறவியறறிலர். எ - று.

இதனால் அவாவறுத்தாரது சிறப்பு விதிமுகத்தானும் எதிர் மறைமுகத்தானுங் கூறப்பட்டது. (டு)

கூசுசு. அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா. சு.

இ - ள். ஒருவனை வஞ்சிப்பது அவா - மெய்யுணர்தலீறுகிய காரணங்களெல்லாமெய்தி அவற்றுன் வீடெய்தற்பாலனாகிய ஒருவனை மறவிவழியாற் புகுந்து பினனும் பிறப்பின்கண்ணே வீழ்த்துக் கெடுக்க வல்லது அவா.—அஞ்சுவதே அறன் - ஆசலான், அவ்வவாவை அஞ்சிக்காப்பதே அறவறமாவது. எ - று.

ஒருமென்ப அசைவிலே. அநாதியாய்ப் போந்த அவா; நோவழி வாய்மைவேண்டலேயொழிந்து பராத்காற் காவாளுயின், அஃதிடமாக அவனதியாமற் புகுந்து, பழையவியற்கையாய நின்று பிறப்பினையுண்டாக்குதலான்; அதனை வஞ்சிப்பதென்றார். காத்தலாவது வாய்மை வேண்டலே இடைவிடாது பயின்று அது செயியாமற் பரிகுறித்தல். இதனுல் அவாவின் குற்றமும் அதனைக் காபபதே அறமென்பதுஉங் கூறப்பட்டன. (சு)

ஈசுஎ. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றுன் வரும். எ.

இ - ள். அவாவினை ஆற்ற அறுப்பின் - ஒருவன் அவாவினையஞ்சித் துவரக்கெடுக்கவல்லனுயின்,—தவா வினை தான் வேண்டும் ஆற்றுன் வரும் - அவனுக்குக் கெடாமைக்கேதுவாகிய வினை தான் விரும்புநெறியாளேயுண்டாம். எ - று.

கெடாமை பிறவித்துண்பங்களாளழியாமை. அதற்கேதுவாகிய வினையென்றது மேற்சொல்லிய துறவறங்களே. வினை சாதியொருமை. தான் விரும்புநெறி மெய்வருந்தாநெறி. அவாவினை மூற்றவறுத்தானுக்கு வேறறஞ்செயியவேண்டா, செயதனவெல்லாம் அறமாமென்பது கருத்து. இதனுல் அவாவறுத்தற சிறபபுக் கூறப்பட்டது. (எ)

ஈசுஅ. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேற்
றவாஅது மேன்மேல் வரும். அ.

இ - ள். அவா இல்லார்க்குத் துன்பம் இல்லாகும் - அவாவில்லாதார்க்கு வரக்கடவதொருதுன்பமுமில்லை;—அஃது உண்டேல் தவாது மேன்மேல் வரும் - ஒருவறருப் பிறசாரணங்களெல்லாமின்றி அஃதொன்றுமுண்டாயின், அதனுனே எல்லாத்துன்பங்களும் முடிவின்றி இடைவிடாமல் வரும். எ - று.

உடம்பு முகந்துநின்ற துன்பம் முன்பே செய்துகொண்டதாகலின், ஈண்டுத் துன்பமென்றது இதுபொழுது அவாவாற் செய்துகொள்வனவற்றை. தவாதுமேன்மேல் வருமென்றதனுன், மூவகைத் துன்பங்களுமென்பது பெற்றும். இதனுல் அவாவே துன்பத்திற்குக் காரணமென்பது கூறப்பட்டது. (அ)

ஈசுக. இன்ப மிடையறு நீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுனபங் கெடின். கூ.

இ - ள். அவா என்னும் துன்பத்துட்டுன்பம் கெடின் - அவா வென்று சொல்லப்படுகின்ற மிக்க துன்பம் ஒருவற்குக் கெடுமா யின்,—ஈண்டும் இன்பம் இடையறாது - அவன் வீடு பெற்றவழியே யன்றி உடம்போடு நின்றவழியும் இன்பமிடையறாது. எ - று.

துன்பத்துட்டுன்பம் ஏனைத்துன்பங்களெல்லாம் இன்பமாக வருந்துன்பம். விளைவின்கண்ணோயன்றித் தோற்றத்தின்கண்ணுந் துன்பமாகலின், இவ்வாறு கூறப்பட்டது. காரணத்தைக் காரிய மாக உபசரித்து அவாவெனலுந் துன்பத்துட்டுன்பமென்றும், அதுகெட்டார்க்கு மனந்தடுமாறுதல் நிரம்பி நிறைதலான் ஈண்டுமின்ப மிடையறாதென்றுங் கூறினார். இனி ஈண்டுமென்பதற்குப் பெரு குமென வுரைப்பாருமுளர். இதனால் அவாவறுத்தார் வீட்டின்பம் உடம்பொடு நின்றே எய்துவரென்பது கூறப்பட்டது. (கூ)

ஈள ம. ஆரா வியற்கை யவாநீப்பி னங்கிலையே பேரா வியற்கை தரும். கம.

இ - ள். ஆரா இயற்கை அவா நீப்பின்—ஒருகாலும் நிரம்பாத வியல்பினையுடைய அவாவினை ஒருவன நீக்குமாயின்,—அநங்கிலை யே பேரா இயற்கை தரும் - அநங்கீப்பு அவனுக்கு அபபொழுதே யுஞ்ஞான்றும் ஒருங்கிலைமையுமியல்பைக் கொடுக்கும். எ - று.

நிரம்பாமையாவது தாமேயன்றித் தம்பயனும் நிலையாமையின் வேண்டாதனவாய பொருள்களே வேண்டி மேன்மேல் வளர்தல். அவ்வளர்ச்சிக்கு அளவினமையின், நீத்தலே தக்கதென்பது கரு த்து. களிபபுக் கவறசிகரும் பிறப்புப்பிணிமூப்பிறப்புக்களும் முத லாயினவினறி உயிர நிரதிசயவின்பத்ததாய நிறைவின், வீட்டினேப மேபராவியற்கையென்றும், அஃது அவா நீத்தவழிப் பெறுதல் ஒரு தலைபாகலின் அநங்கிலையே தருமென்றுங் கூறினார். "நனமுய ஞா னப் கடந்துபோய நல்லிந திரிய மெல்லாமீரத்—தொனமுயக் கிட நத வருமபெரும்பா ழுலப்பி லதனை யுணர்நதுணர்ந்து—சென்முங் கினபத் துன்பங்கள் செற்றுக்களைநது பசையறமு—லன்றே யப் போ தேவீடு மதுவே வீடுவீடாமே." * என்பதும் இக்கருத்தே பற்றி வந்தது. இநங்கிலைமையுடையவனை வடநூலார் சீவன்முத்த னென்ப. இதனால் வீடாவது இதுவென்பதனையும் அஃது அவாவறுத் தார்க்கு அபபொழுதேயுளதாமென்பதனையுங் கூறப்பட்டன. (கம)

துறவறவியல் முற்றிற்று.

இவ்வாற்றான் இம்மை மறுமை வீடென்னுமூன்றனையும் ப்ய த்தற்கிறப்புடைத்தாய அறங்கூறினார்; இனிப பொருளுமின்பமும் கூறுவார்,அவற்றின் முதற்காரணமாகிய ஊழின்வலி கூறுகின்றார்.

கூஅம் அதி.—ஊழ்.

அஃதாவது இருவினைப்பயன் செபதவனையே சென்றடை, தறகேதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நி ய தி, விதியெனபன ஒருபொருட்கிளவி. இது பொருளின்பங்க ளிரண்டற்கும் பொதுவாய ஓரறனுள் வைக்கப்படாமையானும் மேறகூறிய அறத்தோடியைபுடைமையானும, அதனதிறுதிக்கலை வைக்கபபட்டது.

கூஎக. ஆகூழாற் ரேன்று மசைவின்மை கைப்பொருள் போகூழாற் ரேன்று மடி. க.

இ – ள். சைபபொருள் ஆகு ஊழால் அசைவின்மை தோன் றும் - ஒருவற்குக் கைப்பொருளாதற்குக்காரணமாகிய ஊழானே முயற்சியுண்டாம,—போகு ஊழால் மடி தோன்றும் - அஃதழிதற் குக் காரணமாகிய ஊழான் மடியுண்டாம். எ – று.

ஆகூழ் போகூழெனனும் வினைத்தொகைகள் எதிர்காலத் தான் விரிக்கப்பட்டுக் காரணபபொருளவாய நின்றன. அசைவு மடி. பொருளினுக்கவழிவுகட்குத் துணைக்காரணமாய முயற்சி, மடிகளையுந் தானே தோன்றுவிக்குமென்பது கருத்து. (க)

கூஎஉ. பேதைப் படுக்கு மிழவு ழறிவகற்று, மாகலூ ழுற்றக் கடை. உ.

இ – ள். இழவு ஊழ (உற்றக்கடை) அறிவு பேதைப்படுக் கும் - ஒருவனுக்கு எல்லாவறிவுமுளவாயினும சைப்பொருளிழத் தறகேதுவாகிய ஊழ்வந்துற்றவிடத்து அஃது அவனைப் பேதையா க்கும்;—ஆகல் ஊழ உறறக்கடை அகற்றும் - இனி அவனறிவு சுருங்கியிருபபினும் கைபபொருளாதறகேதுவாகிய ஊழ்வருதுறற விடத்து அஃதவனை விரிச்சும். எ – று.

சைப்பொருளென்பது அதிகாரத்தான் வந்தது. இழவூழ், ஆகலூழென்பனவிரண்டும் வேற்றுமைத்தொகை. உற்றக்கடை யென்பது முன்னுங்கூட்டப்பட்டது. இயற்கையானுமவறினவரும் வேறுபடுக்குமென்பதாம். (உ)

நூஎநூ. நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும். நூ.

இ - ள். நுண்ணிய நூல் பல கற்பினும் - பேதைப்படுக்கு மூழுடையானொருவன் நுண்ணியபொருள்களையுணர்த்தும் நூல்பலவற்றையுங் கறறுணர்ந்தபோதிலும்,—மறறும் தன் உண்மையறிவே மிகும் - அவனுக்குப பினனுந தன்னூழானுகிய பேதைமையுணர்வே மேற்படும் எ - று.

பொருளினுண்மை நூலின்மேலேற்றப்பட்டது. மேற்படுதல் கல்வியறிவைப் பின்னிரங்குதற்காகவிச் செயலுக்குத தான்முறபடுதல். "காதன் மிக்குழிக் கறறவுங் கைசொடா—வாதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால்" * என்பதுமது. செயற்கையானைய வறிவையுங் கீழ்ப்படுத்துமென்பதாம். (நூ)

நூஎசு. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. சு.

இ — ள். உலகத்து இயறகை இருவேறு — உலகத்து ஊழினுனையவியற்கை இரண்டெறு;—திருவேறு தெள்ளியராதலும் வேறு - ஆதலாற் செல்வமுடையராதலும் வேறு அறிவுடையராதலும் வேறு. எ - று.

செல்வத்தினபபடைத்தலுங் காத்தலும் -பயன்கோடலும் அறிவுடையாரக்கல்லதியலாவனறே, அவ்வாறனறி அறிவுடையார் வறியராகவும் வினையார் செல்வராகவுங் காண்டலான், அறிவுடையராதற்காகுமூழ் செல்வமுடையராதறகாகாது, செல்வமுடையராதற்காகுமூழ அறிவுடையராதறகாகாதென்றதாயிற்று. ஆகவே செல்வஞ்செயயுங்கால அறிவாகிய துணைக்காரணமும் வேண்டாவென்பது பெற்றும். (சு)

நூஎரு. நல்லவை யெல்லா அஃ தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு. ரு.

இ - ள். செல்வம் செயற்கு - செல்வத்தையாக்குதற்கு—நல்லவை எல்லாம் தீயவாம்—நல்லவையெல்லாந்தீயவாய அழிக்கும்,—தீயவும் நல்லவாம் - அதுவேயன்றித் தீயவைதாமும் நல்லவாய ஆக்கும், ஊழ்வயத்தான். எ — று.

நல்லவை தீயவை யென்பன காலமும், இடனும், கருவியும், தொழிலும்முதலாயவற்றை ஊழானென்பது அதிகாரத்தாற்பெற்

* சீவகசிந்தாமணி, கனதமாலையாரிலம்பகம், எசு.

ரும். * அழிக்குமூழ்றவழிக் காலமுதலிய நல்லவாயினும் அழியும், ஆக்குமூழ்றவழி அவை தியவாயினும் ஆகுமென்பதாயிற்று. ஆகவே காலமுதலிய துணைக்காரணங்களையும் வேதபடுக்குமென்பது பெற்றாம். (ஞ)

**ஈஎசு. பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தமம். சு.**

இ - ள். பால் அல்ல பரியினும் ஆகாவாம் - நாமக்கூழல்லாத பொருள்கள் வருந்திக்காபபினும், தம்மிடத்து நில்லாவாம்:— தம உயத்துச் சொரியினும் போகா - ஊழாற்றமவாயபொருள்கள் பறந்தே கொண்டுபோயச் சொரிநதாலும், தம்மை விட்டுப் போகா. எ - று.

பொருள்களினிலையும் போக்கும் ஊழிஞ்ஞவதல்லது காப்பி கழச்சிகளாஞகாவென்பதாம். இவையாறுபாட்டானும் பொருட்குக்காரணமாய ஊழினவலி கூறபபட்டது. (சு)

**ஈஎஎ. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்கு நுய்த்த லரிது. எ.**

இ - ள. கோடி தொகுத்தாகும் - ஐம்பொறிகளான நுகரப்படும் பொருளகள் கோடியை முயனறு தொகுத்தாகும—வகுத்தான் வகுத்த வகையலலால் நுயத்தல் அரிது - தெயவம வகுத்த வகையானலலது நுகர்தலுண்டாகாது. எ - று.

ஒருயிர் செயதவினையின் பயன் பிறிதோருயிரின்கட் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின், வகுத்தானெனறார். † "இசைத்தலுமுரிய வேறிடத் தான." எனபதனன் உயர்திணையாயிற்று. படையாதார்க்கேயன்றிப படைத்தார்க்குமென்றமையால், உம்மை எச்சவும்மை. வெறுமுயறசி ‡ தனாற் பொருள்களைப் படைத்தலல்லது நுகர்தலாகாது அதற்கு ஊழ்வேண்டுமென்பதாயிற்று. (எ)

**ஈஎஅ. நிறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
வூட்டா கழியு மெனின். அ.**

---

* இவ்வாறு அதிகாரத்தால் வருவித்து முடிபபதனை வடனூலார் அநுஷங்கமெனபர்.

† தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளவியாக்கம், நிகூ.

‡ வெறுமுயற்சி - நல்வினை தீவினை யிரண்டினும் படாமுயற்சி. இலக்கணக்கொத்து, வினையியல் பதினேழாஞ் சூத்திரவுரையிற் காண்க.

இ—ள். துப்புரவு இல்லார் துறப்பர் - வறுமையானுங்கர்ச்சியில்லாதார் துறக்குங் கருத்துடையராவர்;—உறபால ஊட்டாகழியுமெனின் — ஊழ்கள் உறுதறபாலவாய துன்பங்களே உலுவியாதொழியுமாயின். எ—று.

துறப்பாரென்பது ஆரீற்றெதிர்கால முற்றுச்சொல். தம்மால் விடப்படுவனவாதலே விடப்பெற்றுவைத்துங் கருத்துவேறுபாடடாற்றுன்ப முறுகின்றது ஊழின வலியானெனபது எஞ்சி நின்றமனை ஒழியிசைக்கண வந்தது. (அ)

கூஎசு. நன்றுங்கா னல்லவாக் காண்பவ ரன்றுங்கா
லல்லற் படுவ தெவன். கூ.

இ - ள். நன்று அங்கால் நல்லவாக் காணபவர் - நல்வினை விளையுங்கால் அதன் விளைவாய இன்பங்களைத் துடைச்சுருதிறன ரா டாது இவை நல்லவென்று இயைநதனுபவிபபார்;—அன்று ஆங்கால் அல்லறபடுவது எவன - தீவினதிவினை விளையுங்கால் அதன விளைவாய துனபங்களையும அவ்வாறனுபவியாது துடைகழுதிறன்ற உ அல்லலுழபபது எனகருதி! எ—று.

தாமே முன்செயதுகொண்டமைதானும், ஊடடாது கழிபவாயானும், இரண்டுமிமையுதனுபவிக்கறபால; அவறறுள ஒன்றாகு இயைந்தனுபவித்து வினையுதறகு அது செயயாது வருதலி அறிவன்றென்பதாம. இவை மூனறுபாடடானும் இன்பத்தினபசடகுக் காரணமாய ஊழின்வலி கூறப்பட்டது. (கூ)

கூஅ0. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். க0.

இ—ள். மற்றொனறு சூழினும் தான் முந்துறும் - தன்னை விலக்குதற் பொருடடுத் தனகு மறுதலையாவதோருபாயத்தைச சூழினும், தான் அவ்வுபாயமேயானும் பிறிதொன்றானும் வழியாக வந்து அச்சூழ்ச்சியின் முறபடடு நிற்குமும்;—ஊழிற் பெருவலி யாஉள - அதனால் ஊழ்போல மிக்கவலியுடையன யாவையுள. எ-று.

பெருவலி ஆகுபெயர். சூழ்தல் பலருடனும் பழுதறவெண்ணுதல். செபதற்சேயன்றிச் சூழதற்கும் அவதி கொடாதென்றமையின், உம்மை எச்சவும்மை. எல்லாம் வழியாக வருதலுடைமையின், ஊழே வலியதென்பதாம். இதனுன் அவ்விருவகையுழின் வலியும் பொதுவாகக்கூறபபட்டது. (க0)

அறத்துப்பால் முற்றிற்று.

பொருட்பால்.

அரசியல்.

இனி இல்லறத்தின் வழிபடுவனவாய பொருளின்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருள் கூறுவானெடுத்துக்கொண்டார். அது தனதுணைக்காரணமாய அரசனிதி கூறவே யடங்கும் ஆதலினிதியாவது காவலோடாத்துமுறைமை. அதனை அரசியல், அங்கவியல, ஒழிபிடலென மூவகைபடுத்து, மலர்தலையுலகுறுயிரெனசிறந்த அரசனதியல்பு இருபத்தைநதிகாரத்தாற கூறுவான் றொடங்கி, முதற்கண இறைமாட்சி கூறுகின்றார்.

ஈகம் அதி.—இறைமாட்சி.

அஃதாவது அவன்றன் நற்குண நற்செயல்கள். உலகபாலருருவாய நினறு உலகங்காத்தலின, இறையென்றார, "திருவுடை மன்னரைக காணிற திருமாலைக் கண்டேனே யெனனும்" * எனனு பெரியாரும பணித்தார்.

ஈஅக. படைகுடி கூழமைச்சு நட்பரணுறு
முடையா னரசரு ளேறு. க.

இ - ள். படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும உடையான் - படையுங் குடியுங் கூழும் அமைச்சும் நட்பும் அரணுமெனறு சொல்லப்பட்ட அறங்களையு முடையவன்—அரசருள் ஏறு - அரசருள் ஏறுபோல்வான். எ – று.

ஈண்டுக் குடியென்றது அதனையுடைய நாடடினை. கூழென்றது அதற்கேதுவாய பொருளை. அமைச்சு, நாடு, அரண், பொருள, படை, நட்பென்பதே முறையாயினும், ஈண்டுச் செயயுளேக்கிப்

* திருவாயமொழி, ஈசம் திருப்பதிகம், அ.—திருவுடை மன்னரைக் காணிற திருமாலைக் கண்டேனே யென்னு—முருவுடை வண்ணங்கள் காணினுலகளந் தானென்று துள்ளுங்—கருவுடைத் தேவிற்க ளெல்லாங் கடல்வண்ணன் கோயிலே யென்னும்—வெரி விலும் வீழ்விலுமோவாள் கண்ணன் கழல்கள் விரும்புமே.

பிறழ வைத்தார். ஆறுமுடையானென்றதனால், அவற்றுள் ஒன்றில் வழியும் அரசனீதி செல்லாதென்பது பெற்றும்; வடநூலார் இவற்றிற்கு அங்கமெனப் பெயர்கொடுத்ததூஉம் அது நோக்கி. ஏறென்பது உபசாரவழக்கு. இதனால் அரசற்கங்கமாவன இவை யென்பதூஉம் இவை முற்றுமுடைமையே அவன் வெற்றிக்கேது வென்பதூஉங் கூறப்பட்டன. (க)

அஉ. அஞ்சாமை மிகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு. உ.

இ - ள். வேந்தற்கு இயல்பு - அரசனுக்கியல்பாவது—அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும் எஞ்சாமை - தின்மையும் கொடையும் அறிவும் ஊக்கமுமென்னும இந்நான்கு குணமும் இடைவிடாது நிற்றல். எ - று.

ஊக்கம் வினைசெயதறகண் மனவெழுச்சி. இவற்றுள் அறிவு ஆறங்கத்திறகுமுரிதது, ஈகை படைகருரிதது, யனைய வினைகருரிய. உயிர்க்குணங்களுள் ஒனறு தோனற வனையவ—ங்கிவரும், அவ றறுள் இவையடங்கின், அரசறகுக கெடிவன பலவாமாகலின, இவை எபபொழுதுந்தோனறி நிறறல் இயல்பாகவேண்டுமென பார், எஞ்சாமை வேநதறகியல்பென்றார். (உ)

கஅக. தூங்காமை கல்வி தணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவற்கு. கஉ.

இ - ள். நிலன் ஆள்பவற்கு - நிலத்தினையாளுந் திருவுடை யாற்கு—தூங்காமை கலவி தணிவுடைமை இம்மூனறும நீங்கா - அக்காரியங்களில் விரைவுடைமையும் அவையறிதற்கேற்ற கல்வி யுடைமையும் ஆண்மையுடைமையுமாகிய இம்மூனறு குணமும் ஒருகாலும் நீங்கா. எ - று.

கல்வியது கூறுபாடு முன்னர்க் கூறப்படும். ஆண்மையாவது ஒன்றனையும் பாராது கடிதிறசெயவதாகலின், அஃது ஈண்டு உப சாரவழக்காற றுணிவெனபபட்டது. உமமை இறற்றதழீஇய வெச்சவும்மை. இவறறுட் கல்வி ஆறங்கத்திற்கு முரித்து, வினைய வினைக்குரிய. நீங்காவென்பதற்கு மேலெஞ்சாமைக் குரைத்தாங் குரைக்க. (கஉ)

கஅச. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு. ச.

இ - ள். அறன் இழுக்காது-தனக்கோதிய அறத்தின் வழுவா தொழுகி—அல்லவை தீக்கி - அறனல்லவை தன்னுட்டின்கண்ணும் நிகழாமற் கடிந்து—மறன் இழுக்கா மானம் உடையது அரசு-வீரத்தின் வழுவாத தாழ்வின்மையினை யுடையான் அரசன். எ - று.

அவ்வறமாவது ஓதல், வேட்டல், ஈதலென்னும் பொதுத் தொழிலினும், படைக்கலம் பயிறல், டல்லுயிரோம்பல், பகைத் திறந்தெறுதலென்னுஞ் சிறப்புதொழிலினும், வழுவாது நிற்றல். * "மாண்ட—வறநெறி முதறறே யரசின் கொறறம்" எனபதனால் இவ்வறம் பொருட்குக் காரணமாதலறிக. அல்லவை கொலை, களவு முதலாயின. குறறமாய மானத்தினீக்குதறகு, மறனிழுக்காமான மென்றார்; அஃதாவது "வீறின்மையின் விலங்காமென மத வேழமு மெறியா—னேறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சிலென் றெறியான்—மாறன்மையின் மறம்வாடுமென் றிளையாரையு மெறியா—ஞறன்மையின் முதியாரையு மெறியானயி லுழவன்." † எனவும் "அழியுநர் புறக்கொடை யயில்வே லோச்சான்" எனவுஞ் சொல்லப்படுவது. அரசு அரசனது தன்மை; அஃது உபசாரவழக்கால் அவன்றன்மேனின்றது. (சு)

ஊஅநி. இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த வருத்தலும் வல்ல தரசு. நி.

இ - ள். இயற்றலும் – தனக்குப் பொருள்கள் வரும் வழிகளை மேன்மேலுள வாகலும்—ஈட்டலும்–அங்ஙனம் வாதவற்றை ஒரு வழித்தொகுத்தலும—காத்தலும் - தொகுத்தவற்றைப் பிறர்கொளாமற் காத்தலும்—காதத வருத்தலும் - காத்தவற்றை அறம் பொருளின் பங்களின் பொருட்டு விடுத்தலும்—வல்லது அரசு - வல்லவனே அரசன். எ - று.

ாட்டல், காத்தல், வருத்தலென்றவற்றிறகேற்ப இயற்றலென் பதற்குச் செயப்படுபொருள் வருவிச்சப்பட்டது. பொருள்களாவன மணி, பொன், நெல் முதலாயின. அவை வரும் வழிகளாவன பகைவரையழித்தலும், திறைகோடலும், தன்னுடு தலையளித்தலும் முதலாயின. பிறரென்றது பகைவர், கள்வர், சுறறத்தார், வினை செய்வார் முதலாயினர். கடவுளர், அந்தணர், வறியோரென்றிவர்க்கும் புகழிறகுங்கொடுத்தலே அறப்பொருட்டாகவும், யானை, குதிரை, படை, காடி, அரணென்றிவற்றிற்கும் பகையொடு கூடலிற்

* புறநானூறு, நிநி.
† சிவகசிந்தாமணி, மண்மகளிலம்பகம், எநிக.

பிரிக்கப்படுவார்க்குந் தன்னிற் பிரிதலிற் கூட்டப்படுவார்க்குங் கொடுத்தலிய பொருட்பொருட்டாகவும், மண்டபம், வாவி, செய் சூன்று, இளமரகாகா முதலிய செய்தற்கும் ஐம்புலன்களானுகர் வனவற்றிற்குங் கொடுத்தலி இன்பப்பொருட்டாகவுங்கொள்க. இயற்றன் முதலிய தவருமற்செயதல் அரிதாகலின், வல்லதென் ரூர். இவை நான்குபாட்டானும் மாட்சியே கூறப்பட்டது. (இ)

கூஅசு. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம். சு.

இ - ள். காட்சிக்கு எளியன் - முறைவேண்டினார்க்குங் குறை வேண்டினார்க்குங் காண்டற்கெளியனுய—கடுஞ்சொல்லன் அல்ல னேல் - யாவர்மாட்டுங் கடுஞ்சொல்லனல்லனுமாயின,—மன்னன நிலம் மீக்கூறும் - அம்மன்னனது நிலத்தை எல்லாநிலங்களினும் உயர்த்துக்கூறும் உலகம். எ - று.

முறைவேண்டினர் வலியராதலிவெயதினர். குறைவேண்டி னர் வறுமையுற்றிரந்தார். காணடறகெளிமையாவது பேரத்தாணி க்கண் அநதணர் சான்றோருள்ளிட்டாரோடு செவ்வியுடையனுயி ருத்தல். கடுஞ்சொல் சேனையினும் வினையினுங் கடியவாய சொல். நிலத்தை மீக்கூறுமெனவே, மன்னனை மீக்கூறுதல் சொல்லவே ண்டாவாயிறறு. மீக்கூறுதல் இவன் காக்கின்ற நாடு பசி பிணி பகைமுதலிய'வின்றி யாவாக்கும் பேரின்பநதருதலிற் றேவருலகி னும் நன்றென்றல். உலகமெனனுமெழுவாய வருவிக்கபபட்டது.

கூஅஎ. இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலா
ருன்கண் டணைத்திவ் வுலகு. எ. [ற்

இ - ள. இன்சொலால் ஈத்து அளிக்க வல்லாற்கு - இனிய சொல்லுடனே ஈதலேச்செயது அளிக்கவல்ல அரசனுக்கு—இவ்வு லகு தன்சொலால் தான் கண்டணைத்து - இவ்வுலகம் தன்புக ழோடு மேவித் தான் கருதியவளவிறறும். எ - று.

இன்சொல் கேள்வியினும் வினையினும் இனியவாய சொல். ஈதல் வேண்டுவாாக்குவேண்டுவன கொடுத்தல். அளித்தல் தன்பரி வாரத்தானும் பகைவராணும் நலிவுபடாமற் காத்தல். இவை அரிய வாகலின் வல்லாறகெனறும், அவன் மண்முழுதுமாளுமாகலின் இவ்வுலகென்றுங் கூறினர். கருதியவளவிற்றுதல் கருதியபொரு ளெல்லாஞ்சுரத்தல். (எ)

கூஅஅ. முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
இறையென்று வைக்கப் படும். அ.

இ - ள். முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் - தான்முறை செயது பிறர் நலியாமற் காத்தலேயுஞ் செய்யுமரசன்,—மக்கட்கு இறை என்று வைக்கப்படும் - பிறபபான் மகனேயாயினும், செய லான் மக்கட்குக் கடவுளென்று வேறு வைக்கப்படும். எ – று.

முறை அறநூலும் நீதிநூலுஞ் சொல்லும் நெறி. பிறரென் றது மேற்சொல்லியாரை. வேறுவைத்தல் மக்களிற்பிரித்து உயர் த்துவைத்தல். (அ)

கூஅகூ. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வே
கவிகைக்கீழ்த் தங்கு முலகு. கூ. [ந்தன்

இ – ள். சொல் செவி கைப்பப் பொறுக்கும் பண்பு உடை வேந்தன் - இடிக்குந்துணையாயினர் சொற்களைத் தன்செவி பொரு தாகவும் விரோதநோக்கிப பொறுக்கும் பண்புடைய அரசனது— கவிகைக்கீழத் தங்கும் உலகு – குடை நிழற்கண்ணே தங்கும் உலகம். எ – று.

செவிகைப்பவென்றதற் கேற்ப இடிக்குந் துணையென்பது வருவிக்கப்பட்டது. நாவினபுலத்தைச் செவிமேலேற்றிக் கைபப வென்றார். பண்புடைமை விசேடவுணர்வினதுதல். அறநீதிகளிற றவறுமையின், மண்முழுதுந தானேயாளுமென்பதாம். (கூ)

கூகூ0. கொடையளி செங்கோல் குடியோம்ப னைந்து
முடையானும் வேந்தர்க் கொளி. க0.

இ – ள். கொடை - வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்த லும்—அளி-யாவர்க்குந தலையளி செயதலும்—செங்கோல்-முறை செய்தலும்—குடி ஓமபல் - தளர்ந்த குடிகளைப் பேணலுமாகிய— ஈான்கும்உடையான் - இந்நான்குசெயலையுமுடையவன்—வேர்தர் க்கு ஒளியாம் - வேந்தர்க்கெல்லாம விளககாம். எ - று.

தலையளி முகமலர்ந்தினியகூறல். செவவியகோல்போறலின், செங்கோலெனப்பட்டது. குடியோம்பலெனவெடுத்துக் கூறின மையால், தளர்ச்சி பெற்றும்; அஃதாவது ஆறிலொன்றுய பொரு டன்னீயும் வறுமை நீங்கியவழிக் கொள்ளல்வேண்டின் அவ்வாறு கோடலும், இழத்தல்வேண்டின் இழத்தலுமாம். சாதிமுழுதும்

விளக்கலின், விளக்கென்றார். ஒளி ஆகுபெயர். இவையைந்து பாட்டானும் மாட்சியும் பயனும் உடன் கூறப்பட்டன. (கம)

சம - ம் அதி.—கல்வி.

அஃதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையாவன: அறநூலும் நீதிநூலும், யானை, குதிரை, தேர், படைக்கலமென்றிவற்றினூல்களும் முதலாயின. அரசன் அறிவுடையனாயக்கால் தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதலேக்கி, இஃதரசியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதி பயத்தற்சிறப்புடைமையிற் பொதுப்படக் கூறுகின்றார். மேல் 'தூங்காமை கல்வி' எனத் தோற்றுவாயசெய்த மாட்சியை விரித்துக் கூறுகின்றமையின், இஃதிறைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.

கூகூக. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக. க.

இ - ள். கற்பவை கசடு அறக் கற்க - ஒருவன் கற்கப்படுநூல் களைப் பழுதறக் கறக,—கற்றபின் அதறருத தக நிறக - அங்ஙனங் கற்றூல் அக்கல்விக்குத்தக அவைசொல்லுகின்ற நெறிக்கண்ணே நிறக. எ – று.

கற்பவையென்றதனான், அறம்பொருளின்பம் வீடென்னு முறுதிபொருளுணர்த்துவனவன்றிப பிறபொருளுணர்த்துவன சின்னூட்பல்பிணிச சிற்றறிவினர்க்கு ஆகாவெனபது பெற்றும். கசடறக் கற்றலாவது விபரீதனையங்களை நீக்கி மெயபபொருளை நல்லோர் பலருடனும பலகாலும் பயிறல். நிற்றலாவது இல்வாழ்வுழிக் "கருமமு முளபடாப் போகமுந் தவ்வாத்—தருமமுந் தக்காரக்கே செய" * தலினும், துறந்துழித் தவத்தான் மெயயுணர்ந்து அவாவறுத்தலினும், வழுவாமை சிறபபுடை மகற்காயிற் கற்றல்வேண்டுமென்பதூஉம், அவனும் கற்கபபடுநூல்களும், அவற்றைக் கறகுமாறும், கற்றதனை பயனும் இதனுற் கூறப்பட்டன. ()

கூகூஉ. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. உ. [டுங்

* நாலடியார். அறிவுடைமை.

இ - ள். எண் என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும் - அறியாதார் எண்ணென்று சொல்லுவனவும் மற்றையெழுத்தென்று சொல்லுவனவுமாகிய கலைகளிரண்டினையும்—வாழும் உயிர்க்குக் கண் என்ப - அறிந்தார் சிறப்புடையுயிர்கட்குக் கண்ணென்று சொல்லுவர். எ - று.

எண்ணென்பது கணிதம்: அது கருவியுஞ் செய்கையுமென இருவகைப்படும்; அவை ஏரம்பமுதலிய நூல்களுட்காண்க. எழுத்தெனவே, அதனோடொற்றுமையுடைய சொல்லுமடங்கிற்று. இவ்விருதிறமும், அறமுதற்பொருள்களைக் காண்டற்குக் கருவியாகலின், கண்ணெனப்பட்டன. அவை கருவியாதல் |"ஆதிமுதலொழிய வல்லா தனவெண்ணி—னீதி வழுவா நிலைமையவான் - மாதே—யறமார் பொருளின்பம வீடென் றிவற்றின்—நிறமாமோ வெண்ணிறைத்தாற் செபபு." "எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்—மொழித்திறத்தின் முட்டறுப்பா னூரு - மொழித்திறத்தின்—முட்டறுத்த னல்லோன முதனூற் பொருணுணர்ந்தது—கட்டறுத்து வீடுபெறும்." இவற்றுணர்க. என்பவென்பவற்றுள், முன்னையவிரண்டும் அஃறிணைபன்மைப்பெயர்; பின்னது உயர்திணைப்பன்மை வினை. அறியாதார் அறிந்தாரென்பன வருவிக்கப்பட்டன. சிறப்புடையுயிரென்றது மக்களுயிருள்ளும் உணர்வுமிகுதியுடையதனை. இதனாற் சுற்கபீடுநூல்கட்குக் கருவியாவனவும அவற்றதினியமையாமையுங் கூறப்பட்டன. (உ)

கூகூகூ. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லா தவர். கூ.

இ - ள். கண் உடையர் என்பவர் கற்றோர் - கண்ணுடையரென்று உயர்த்துச் சொல்லப்படுவார் கற்றவரே;—கல்லாதவர் முகத்து இரண்டு புண் உடையர் - மற்றைக் கல்லாதவர் முகத்தின் கண் இரண்டு புண்ணுடையர், கண்ணிலர். எ - று.

தேயமிடையிட்டவற்றையுங் காமிடையிட்டவற்றையுங் காணும் ஞானக்கண்ணுடைமையிற் கற்றோரைக் கண்ணுடையரென்றும், அஃதின்றி நோய முதலியவறாற் றுன்பஞ்செய்யும் ஊனக்கண்ணேயுடைமையிற் கல்லாதவரைப புண்ணுடையரென்றுங் கூறினர். மேற்கண்ணன்மையுணராநின்ற ஊனக்கண்ணின் மெய்ம்மை கூறியவாற்றுன், பொருணூல்களேயுங் கருவிநூல்களேயுங் கற்றாரதுயர்வும் கல்லாதாரதிழிவும் இதனாற்றொகுத்துக் கூறப்பட்டன. (கூ)

**நகூசு. உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில். சு.**

இ – ள். உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே - யாவரையும் அவருவக்குமாறு தலைபெயது இனி இவரை யாமெங் ஙனங் கூடுதுமென நினையுமாறு நீங்குதலாகிய அத்தன்மைத்து— புலவர் தொழில் - கறறறிந்தாரது தொழில். எ – று.

தாம் நல்வழியொழுகல் பிறர்க்குறுதிகூறலென்பன இரண்டு தொழிலென ஒன்றையடங்குதலின், அத்தன்மைத்தென்றார். அத்தன்மை அப்பயனைத்தருந்தன்மை. நல்லொழுக்கங் காண்டலானும், தமக்கு மதுரமுமுறுதியுமாய கூற்றுக்கள நிகழ்வெதிராவுகளினை இன்பம் பயத்தலானும, கறறார்மாட்டு எல்லாருமனபுடையராவரென்பதாம். இதனுற் கற்றாதுயர்வு வகுத்துக்கூறப்பட்டது.

**நகூரு. உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.**

இ – ள். உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார் - 'பிறறை நிலைமுனியாது கற்றல் நன்று' * தலான், செல்வர்முன் நல்கூர்ந்தார் நிற்குமாறுபோலுத் தாமும் ஆசிரியர்முன் ஏக்கறறுநின்றுங் கற்றார் தலையாயிலும்; கல்லாதவர் கடையரே - அங்ஙனக்கு நாணிக் கல்லாதவர் எஞ்ஞான்றுமிழிந்தாரேயாவர். எ - று.

உடையார் இலலாரென்பன உலகவழக்கு. ஏக்கறுதல் ஆசையாற்றுழ்தல். கடையரென்றதனுன் அதனமறுதலிபபெயர் வருவிக்கபபட்டது. பொயயாயமானநோக்கி மெயயாய கல்வியிழநதார் பினனருஞான்றும் அறிவுடையராகாமையின், கடையரேயென்றார். இதனுறை கற்றாதுயர்வுங் கல்லாதாரதிழிவுங் கூறப்பட்டன.

**நகூசு. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு. சு.**

இ – ள். மணறகேணி தொட்டனைத்து ஊறும் - மணலின் கட்கேணி தோண்டியவளவிற்றாகலூறும்;—மாந்தர்க்கு அறிவு கற்றனைத்து ஊறும் - அதுபோல மக்கட்கறிவு கற்றவளவிறறாக ஊறும். எ – று.

ஈண்டுக் கேணியென்றது அதன்கணீரை. அளவிற்றாகவென்றது அதனளவுஞ் செல்லவென்றவாறு. சிறிது கறறதுணையான்

* புறநானூறு, கஅசு.

அமையாது மேன்மேற் கற்றல்வேண்டுமென்பதாம். இஃது ஊழ் மாறுகொள்ளாவழியாகலின், மேலுண்மையிறிவே மிகு * மென்ற தனோடு மலையாமையறிக. (கூ)

நகூஎ. யாதானு நாடாமா வூராமா லென்னொருவன் சாந்துணையுங் கல்லாத வாறு. எ.

இ—ள். யாதானும் நாடாம் ஊராம் - சற்றவனுக்குத் தண்ணு நிர தன்னூருமேயன்றி யாதானுமொருநாடும் நாடாம், யாதானு மோரூரும் ஊராம்,—ஒருவன் சாகுமுணையும் கல்லாதவாறு என் - இங்ஙனமாயின ஒருவன தானிறக்குமளவுங் கல்லாது கழிகின்றது என்கருதி! எ—று.

உயிரோடு சேறலிற் சாந்துணையுமென்றார். பிறர்நாடுகளும் ஊர்களுந் தமபோல உற்றுப் பொருட்கொடையும் பூசையும் உவ ரது செய்தற்கேதுவாகலிற கல்விபோலச் சிறந்தது பிறிதில்லை, அதனையே எபபொழுதுஞ் செயகவெனபதாம். (எ)

நகூஅ. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி பொருவற் கெழுமையு மேமாப் புடைத்து. அ.

இ—ள். ஒருவற்கு - ஒருவனுக்கு—தான் ஒருமைக்கண் கற்ற கல்வி - தானொருபிறப்பின்கட்கற்ற கல்வி—எழுமையும் ஏமாபபு உடைத்து - எழுபிறபபினுஞ்சென்று உதவுதலையுடைத்து. எ—று.

வினைகள்பேரல உயிரின்கட்டிடந்து அது புக்குழிப புகுமாக லன, எழுமையுமேமாபபுடைத்தென்றார். எழுமை மேலே கூறப்ப ட்டது. † உதவுதல் நன்னெறிக்கணுயத்தல். (அ)

நகூகூ. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந் தார். கூ.

இ—ள். தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு - தாமின் புறுதறகு ஏதுவாகிய கல்விக்கு உலகமினபுறுதலால் அச்சிறபபு நோக்கி—கறறறிந்தார் காமுறுவர் - கற்றறிந்தார் பின்னும் அத னையே விரும்புவர். எ—று.

தாமின்புறுதலாவது நிகழ்வின்கட் சொற்பொருள்களின் சுவைஞகர்வானும், புகழ் பொருள் பூசை பெறுதலானும், எதிர்வி ன்கண் அறம் வீடு பயத்தலானும், அதனன் இடையறுதலின்ப

* திருக்குறள், நடிந. † சுஉ-ம், குறளுரையிற்காண்க.

மெய்துதல். உலகின்புறுதலாவது இம்மிக்காரோடு தலைப்பெய்து அறியாதனவெல்லாம் அறியப்பெற்றேமென்றும், யாண்டுபலவாக நரையிலமாயினேமென்றுமுவத்தல். செல்வமாயின், ஈட்டல் காத்தல் இழத்தலென்றிவற்றுறுன்புறுதலும் பலரையும் பகையாக்க லுமுடைத்தென அறிந்து அதனைக் காமுறுமையிற் கற்றறிந்தாரென்றும், கரும்புயிறற்குக் கூலிபோலத் தாமின்புறுதற்கு உலகின்புறுதல் பிறவாற்றுனினமையின் அதனையே காமுறுவரென்றுங் கூறினர். (கூ)

சoo. கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றை யவை. கo.

இ — ள். ஒருவற்குக் கேடு இல் விழுச்செல்வம் கல்வி - ஒருவனுக்கு அழிவில்லாத சீரியசெல்வமாவது கல்வி;—மற்றையவை மாடு அல்ல - அஃதொழிந்தமணியும பொன்னுமுதலாயின செல்வமல்ல. எ — று.

அழிவின்மையாவது தாயத்தார், கள்வர், வலியர், அரசரென்றிவராற் கொள்ளப்படாமையும், வழிபட்டார்க்குச் கொடுத்துழிக் குறையாமையுமாம். சீர்மை தக்கார்சண்மே நிறைல். மணி பொன் முதலியவற்றிறரு இவ்விரண்டுமின்மையின், அவறறை மாடல்ல வென்றார். இவையைந்துபாட்டானுங் கல்வியது சிறபபுக் கூறப பட்டது. (கo)

சகம் அதி.—கல்லாமை.

அஃதாவது கற்றலிச்செயலாமை; என்றது அதனினுமிழி நிலினை. கல்விச்சிறப்பு மேல் விதிமுகத்தாற சுறியதனினையான முற்றுபபெறுமைநோக்கி, எதிர்மறைமுகத்தானுங் கூறுகின்றதாகலின, இது கல்வியின்பின் வைக்கப்பட்டது.

சoக. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொளல். க.

இ — ள். அரங்கு இன்றி வட்டு ஆடியற்று - அரங்கினையிழையாது வட்டாடுதலொற்போலும்—நிரம்பிய நூல் இன்றிக் கோட்டி கொளல் - நிரம்புதற்கேதுவாகிய நூல்களைக்கல்லாது ஒருவன் அவையின்கணென்றனைச் சொல்லுதல். எ - று.

அரங்கு வகுத்ததானம். வட்டாடல் உண்டையுருட்டல். இவை "கட்டளே யன்ன வட்டரங் கிழைத்துக்—கல்லாச் சிறுஅர் நெல்லிவட் டாடும்" * என்பதனுனதிக. நிரம்புதல் அறியவேண்டு வனவெல்லாமறிதல். கோட்டியென்பது ஈண்டாருபெயர்,"புல்லா வெழுத்திற பொருளில் வறுங்கோட்டி" † என்புழிப்போல. சொல் லும் பொருளும் நெறிப்படாவென்பதாம். (க)

சுஅ. கல்லாதான் சொற்கா முறுதன் மூலியிரண்டு மில்லாதாள் பெண்காமுற் றற்று. உ.

இ – ள். கல்லாதான் சொற் காமுறுதல் - கல்வியில்லாதா னொருவன அவையின்கணெண்ணுசொல்லுதலே அவாவுதல்—மூலி யிரண்டும் இல்லாதாள பெண காமுறறறறு - இயல்பாகவே மூலி யிரண்டுமில்லாதாளொருத்தி பெண்மையை அவாவினுற்போ லும். எ – று.

† இனேத்தெனவறிந்த சினேயாகலின், தொகையொடு முற்று மமை கொடுத்தார். சிறுமையிலலாதாளென்பதாம. அவாவியவழிக் கடைபோகாது, போதினும நகைவிளேகுமென்பதாயிற்று. (உ)

சுஅ. கல்லா தவரு நனிநல்லர் கற்றூர்முற் சொல்லா திருக்கப் பெறின். ங.

இ – ள். கல்லாதவரும் நனி நல்லர் - கல்லாதாரும் மிகநல்ல ராவர்,—கற்றூருமுன் சொல்லாது இருக்கப்பெறின் - தாமே தம மையறிந்து கறறூரவையினகண ஒன்றேயுஞ் சொல்லாதிருத்தல் கூடுமாயின். எ - று.

உம்மை இழிவுசிறப்பும்மை. தம்மைத்தாமறியாமையின் அது கூடாதென்பார் பெறினென்றும், கூடின் ஆண்டுத் தம்மை வெளிப்

---

* நற்றிணை, ங, ஈன்பருந தூயவும் வான்பொரு நெடுஞ்சினேப்— பொரியரை வேம்பின் புள்ளி நீழற்—கட்டளே யன்ன வட்டரங் கிழைத்துக்—கல்லாச சிறுஅர் நெல்லிவட் டாடும்—வில்லே ருழ வர் வெம்முனேச் சீறூர்ச்—சுரனமுதல் வந்த வுரன்மாய மாலே— யுள்ளினெ னல்லனே யாரனே யுள்ளிய—வினேமுடித் தன்ன வினி யோண்—மனேமாண் சுடரொடு படர்பொழு தெனவே.

† நாலடியார், மேன்மக்கள்,—புல்லா வெழுதறிற் பொருளில் வறுங்'கோட்டி—கல்லா வொருவனுரைப்பவுங் கண்ணேடி—கல் லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன்—பல்லாரு ணுனல் பரிந்து.

‡ தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம். ஙஙூ.

படித்தாமையானும், பின் கல்வியை விரும்புவராகலானும் நனி நல்லரென்றுங்கூறினர். இவைமூன்றுபாட்டானுங் கல்லாதார் அவைக்கட்சொல்லுதற்குரியரன்மை கூறப்பட்டது. (ங)

சஅசு. கல்லாதா னொட்பங் கழியநன் ரூயினுங்
கொள்ளா ரறிவுடை யார். ச.

இ - ள். கல்லாதான் ஒட்பம் கழிய நன்ரூயினும் - கல்லாத வனதொண்மை ஒரோவழி மிக நன்ரூயிருபயினும்,—அறிவுடை யார் கொள்ளார் - அறிவுடையார் அதனை யொண்மையாகக் கொள் ளார். எ - று.

ஒண்மை அறிவுடைமை. அது நன்ரூகாது, தீயிற்ரூயினும் நீர்மேலெழுத்துபபோல்வதோர் விழுக்காடாகலின், நிலைபெறற நூலறிவுடையார் அதனை மதியாரெனபதாம். (ச)

சஅஞ. கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். ஞ.

இ - ள். கல்லா ஒருவன் தகைமை - நூல்களைக் கல்லாதவொ ருவன யானறிவுடையனேனைத் தன்னை மதிக்கு மதிப்பு—தலைப் பெய்து சொல்லாடச் சோர்வுபடும் - அவற்றைக் கற்றவன் கண்டு உரையாடக் கெடும். எ - று.

கற்றவனென்பது வருவிக்கபபட்டது. யாதானுமோர்வார்த் தைசொல்லுந்தனையுமே நிற்பது, சொல்லியவழி வழுப்படுதலின், அழிந்துவிடுமென்பதாம். இவையிரண்டுபாட்டானுங் கல்லாதார நியற்கையறிவின்குற்றங் கூறப்பட்டது. (ஙி)

சஅசு. உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர். கூ.

இ - ள். கல்லாதவர் - கல்லாதவர்—உளர் என்னும் மாத்தி ரையர் அல்லால் - காணப்படுதலான இலரல்லர் உளரென்று சிலர் சொல்லுமளவினராதலன்றி—பயவாக் களர் அனையர் - தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் விளையாத களாநிலத்தோடொப் பர். எ - று.

களர் தானும் பேணற்பாடழித்து உயிர்கட்கும் உணவு முத லிய உதவாததுபோலத் தானும் நன்குமதிக்கற்பாடழித்து பிறர்க் கும் அறிவு முதலிய உதவாரென்பதாம். இதனும் கல்லாதாரது பயன்படாமை கூறப்பட்டது. (கூ)

சுoஎ. நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று. எ.

இ - ள். நுண் மாண் நுழை புலம் இல்லான் எழில் நலம் - நுண்ணிதாய் மாடசிமைப்பட்டுப பலநூல்களினுஞ்சென்ற அறிவு இலாதவனுடைய எழுசசியும் அழகும்—மண் மாண் புனை பாவை ற்று - சுதையான் மாடசிமைபபடப் புனைந்தபாவையுடைய எழு சசியும் அழகும்போலும். எ - று.

அறிவிற்கு மாடசிமையாவது பொருள்களைக் கடிதிற்காண்ட லும் மறவாமையும் முதலாயின பாவை ஆகுபெயர். "உருவின்மி சகதோ ருடம்பது பெறுதலுமரிது" * ஆகலான் எழினலங்களும் ஓர்பயனேயெனினும, நூலறிவில்வழிச் சிறபபில்லென்பதாம். இத னை அவர் வடிவழகாற் பயனின்மை கூறபபட்டது. (எ)

சுoஅ. நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு. அ.

இ - ள். நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாது - சுறஞர் மாட்டுநின்ற வறுமையினுமின்னாது—கல்லார்கண் பட்ட திரு - கல்லாதார்மாட்டுநின்ற செல்வம். எ – று.

இழிவுசிறப்பும்மை விகாரத்தாறஞக்கது. தத்தநீலையினன்றி மாறிநிறறலால தாமிடுக்கட்படுதலும் உலகிறஞுத் துன்பஞ்செய்த லும் இரண்டறஞுமொக்குமாயினும், திருக் கல்லாரைச்கெடுக்க, வறுமை நல்லாரைக் கெடாது நிறறலான, வறுமையினுங திருவின் னாதென்றார். இதனால் அவர் திருவின்குறறங் கூறபபட்டது. (அ)

சுoகூ. மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. கூ.

இ - ள். கல்லாதார் மேற்பிறந்தார் ஆயினும் - கல்லாதார் உய ர்ந்தசாதிக்கட்பிறநதாராயினும்—கீழப்பிறநதும் சுறறார் அனைத் தப்பாடு இலர் - தாழ்ந்தசாதிக்கட் பிறநதவைத்துங் கற்றாரது பெருமையளவிறறாய பெருமையிலர். எ – று.

---

* சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், பெறுதறகருமை, கo—கருவி மாமழை சினபெயல் பொழிநதென வழிநா—ளருவி போற் றொடர்ந் தருதன வரும்பிணி யழலுட்—சருவிற் காயதிய கட்ட னைப் படிமையிற் பிழையா—வுருவின் மிக்கதோ ருடம்பது பெறு தலு மரிதே.

உடலோடொழியுஞ் சாதியுயர்ச்சியினும் உயிரோடு செல்லுங் கல்வியுயர்ச்சி சிறப்புடைத்தென்பதாம். இதனுல் அவர்சாதியுயர்ச் சியாற் பயனின்மை கூறப்பட்டது. (க)

சகo. விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றுரோ டேனை யவர். கo.

இ - ள். விலங்கொடு மக்கள் அனையர் - விலங்கோடு நோக்க மக்கள எத்துணைநன்மையுடையா அத்துணைச்சிறுமையுடையர்— இலங்கு நூல் கற்றுரோடு ஏனையவர - விளங்கியநூலைக் கற்று ரோடு நோக்கக் கல்லாதவர். எ - று.

இலங்கு நூலென்பது சாதிப்பெயர். விளங்குதல் மேம்படு தல். விலங்கின மக்கடமேற்றமாய உணர்வுமிகுதி காணப்படுவது சுற்றுர்கண்ணேயாகலின், கல்லாதாரும் அவரும் ஒத்தபிறபபினர ல்லரென்பதாம. மயக்கநிரனிறை. இதனுல் அவர மகடப்பிறப பாற பயனெய்தாமை கூறபபட்டது. (கo)

சஉ ம் அதி.—கேள்வி.

அரிதாவது கேட்கப்படு நூறபொருள்களைக் கற்றறிநதார் கூறக்கேட்டல். கறறவழி அதனினுயவறிவை வலியுறுததலானும், கலலாதவழியும் அதனையுண்டாக்குதலானும, இது கலவி கல்லா மைகளின்பின் வைக்கப்பட்டது.

சகக. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்
செல்வத்து ளெல்லாந் தலை. க. [வஞ்

இ - ள். செல்வத்துட்செல்வம் செவிச்செல்வம் – ஒருவற குச் சிறப்புடைய செல்வமாவது செவியானவருஞ்செல்வம்,—அச் செல்வம செல்வத்துள் எல்லாம் தலை - அச்செல்வம் பிறசெல்வங் களெல்லாவற்றினுந் தலையாகலான். எ - று.

செவியான்வருஞ்செல்வம் கேள்வியான் எல்லாப்பொருளையு மறிதல். பிறசெல்வங்கள பொருளான் வருவன. அவை நிலையா வாகலானும், தன்பவினைவின வாகலானும், இது தலையாயிற்று. அவற்றையொழித்து இதனையே செயகவென்பது குறிப்பெச்சம்.

சகஉ. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். உ.

இ - ள். செவிக்கு உணவு இல்லாத போழ்து – செவிக்குண வாகிய கேள்வியில்லாதபொழுது—வயிற்றுக்கும் சிறிது ஈயப்ப டும் – வயிற்றுக்குஞ் சிறிதுணவு இடப்படும். எ - று.

சுவைமிகுதியும் பிற்பயத்துமுடைய கேள்வியுள்ள பொழுது வெறுக்கப்படுதலான் இல்லாதபோழ்தென்றும், பெரிதாயவழித் தேடறலுன்பமேயன்றி நோயுங்காமமும் பொருளுமாற் சிறிதென் றும், அதுதானும் பின்னிருந்து கேட்டறபொருட்டாகலான் ஈயப படுமென்றுங் கூறினார். ஈதல் வயிற்றதிழிவுதோன்ற நின்றது. இவையிரண்டு பாட்டானும் கேள்வியது சிறப்புக் கூறப்பட்டது.

சகஙூ. செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னுன்றாரோ டொப்பர் நிலத்து. ஙூ.

இ - ள். செவியுணவிற் கேள்வி உடையார்–செவியுணவாகிய கேள்வியினையுடையார்,—நிலத்து அவியுணவின் ஆன்றாரோடு ஒப்பர் - நிலத்தின்கண்ணராயினும், அவியுணவினையுடைய தேவ ரோடொப்பர். எ - று.

செவியுணவு செவியானுண்ணுமுணவு. அல்வழிக்கண்வாத இன்சாரிடையதுனகரம்வலித்து நின்றது அவியாகியவுணவுதேவ ராக்கு வேள்வித்தீயிறகொடுப்பன. அறிவானிறைந்தமையான் ஆன் றரென்றும், தன்பமறியாமையாற றேவரோடொப்பரென்றுங் கூறினார். இதனால் அதனையுடையாரது சிறப்புக் கூறப்பட்டது. (ஙூ)

சகச. கற்றில னயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றுந் துணை. ச.

இ - ள். கற்றிலன் ஆயினும் கேட்க - உறுதி நூல்களைத்தான் கறறிலனாயினும், அவறறின பொருளகளைக் கறறறிந்தார்சொல்லக கேடக,—அஃது ஒருவற்கு ஒற்கத்தின் ஊறறும் துணை - அக்கே ளவி ஒருவனுகருத தளாச்சிவருதுழிப பற்றுக்கோடாந்துணையாக லான். எ - று.

டமமை கற்கவேண்டுமென்பது பட நின்றது. தளர்ச்சி வறு மையானுதல் அறிவின்மையானுதல் இடுக்கட்பட்டுழி மனந்தளா தல். அதனைக் கேள்வியினுய அறிவு நீருமாகலின், ஊறறுந்துணை யென்றார். ஊன்றென்னுமாருபெயரின்னசரம் திரிந்து நின்றது.

சக்டி. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல். டி.

இ - ள். இழுக்கல் உடை உழி ஊற்றுக்கோல் அற்று – வழுச் சூதலியுடைய சேற்றுநிலத்து இயங்குவார்க்கு ஊன்றுகோல்போ லுதவும்—ஒழுக்கம் உடையார் வாயச்சொல் - காவற்சாகாடிகைப் பார்க்கு ஒழுக்கமுடையார் வாயிறசொறகள். எ - று.

அவாயநிலையான் வந்த உவமையடையாற் பொருளடை வருவிக்கப்பட்டது. ஊற்றுகிய கோல்போலுதவுதல் தளர்ந்தழி அதனை நீச்சுதல். கல்வியுடையரேனும் ஒழுக்கமில்லாதார் அறிவிலராகலின், அவர்வாயச்சொற கேடகப்படாதெனபது தோன்ற ஒழுக்கமுடையார்வாயச்சொல்லெனமுர். வாயென்பது தீச்சொல தியாமையாகிய சிறப்புணர நின்றது. அவறறைக் கேட்கவென்பது சூறிப்டெச்சம். (இ)

சுகசு. ஏனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு மான்ற பெருமை தரும். சு.

இ - ள். எனைத்தானும் நல்லவை கேட்க - ஒருவன சிறிதாயினும் உறுதிப்பொருள்களைக் கேட்க,—அனைத்தானும் ஆனற பெருமை தரும் - அக்கேள்வி அத்துணையாயினும் நிறைநத பெருக்மையைத் தரும் ஆகலான். எ - று.

எனைத்து அனைத்து என்பன கேட்கும்பொருண்மேலுங் காலத்தின்மேலும் நின்றன. அக்கேள்வி மழைத்துளிபோல வந்தீண்டி எல்லாவதிவுகளையுமுளவாகுகலின், சிறிதெனறிகழற்க வென்பதாம். (சு)

சுகள. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்தீண்டிய கேள்வி யவர். எ. [துணர்ந்

இ - ள். பிழைத்து உணர்ந்தும பேதைமை சொல்லார் - பிறழவுணர்நதவழியும், தமக்குப் பேதைமை பயக்குஞ் சொற்களைச் சொல்லார்—இழைத்து உணர்நது ஈண்டிய கேளவிய'வர்—பொருள்களைத் தாமும் நுண்ணிதாகவாராயந்தறிநது அதன்மேலும் ஈண்டிய கேள்வியினையுடையார். எ - று.

பிழைப்பவெனபது திரிந்துநின்றது. பேதைமை ஆகுபெயர். ஈண்டுதல் பலவாற்றுன் வந்து நிறைதல். பொருள்சளின மெயம்மையைத் தாமுமறிநது அறிந்தாரோடொப்பிப்பதுஞ் செய்தார் தாமதகுணத்தான் மயங்கினராயினும், அவ்வாறல்லது சொல்லா ரென்பதாம். இவை நான்குபாட்டானுங் கேட்டார்க்கு வருஞ்ன்மைகூறபபட்டது. (எ)

சகஅ. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி. அ.

இ - ள். கேட்பினும் கேளாத் தகையவே - தம்புலமாய ஓசை மாத்திரத்தைக் கேட்கினுமாயினுஞ் செவிடாந் தன்மையவேயாம்—கேள்வியால் தோட்கப்படாத செவி - கேள்வியாற்றூளேச்சப்படாத செவிகள். எ - று.

ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. ஓசைமாத்திரத்தான் உறுதியெயதாமையிற கேளாத்தகையவென்றும், மனத்தின்சண் தூற் பொருள் தூழைதற்கு வழியாக்கலிற் கேள்வியைக் கருவியாக்கியும் கூறினர். பழையதூளே தூளையனறென்பதாம். (அ)

சகக. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது. கூ.

இ - ள். நுணங்கிய கேள்வியர் அல்லார் - நுண்ணிதாகிய கேள்வியுடையரல்லாதார்—வணங்கிய வாயினர் ஆதல் அரிது — பணிந்த மொழியினையுடையராதல் கூடாது. எ - று.

கேட்கப்படுகின்ற பொருளினது நுண்மை கேள்விமேலேற்றப்பட்டது. வாய ஆகுபெயர். பணிந்தமொழி பணிவைய புலப்படுத்திய மொழி. கேளாதார் உணர்வினமையாற் றம்மைவியகூது கூறுவரென்பதாம். அல்லாரென்பதூஉம் பாடம. (கூ)

சஉ0. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென். க0.

இ - ள். செவியிற் சுவை உணரா வாய உணர்வின் மாக்கள்—செவியானுகரப்படுஞ் சுவைகளையுணராத வாயுணர்வினையுடைய மாந்தர்—அவியினும் வாழினும் என் - சாவினும வாழினும் உலகிறகு வருவதெனனோ! எ - று.

செவியானுகரபபடுஞ்சுவைகளாவன சொற்சுவையும், பொருட்சுவையும்: அவற்றுட் சொற்சுவை குணம், அலங்காரமென இரு வகைத்து. பொருட்சுவை காமம், நகை, கருணை, வீரம், உருத்திரம, அச்சம், இழிப்பு, வியப்பு, சாநதமென ஒன்பது வகைத்து. அவையெல்லாம் ஈண்டுரைப்பிற்பெருகும். வாயுணர்வென்பது இடைப்பதங்கடொக்குகினற மூன்றும்வேற்றுமைத்தொகை: அது வாயானுகரப்படுஞ் சுவைகளையுணரும் உணர்வெனவிரியும். அவை

கைப்பு, காழ்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, நித்திப்பென ஆறும். செத்தாலிழப்பதும் வாழ்ந்தாற் பெறுவதுமின்மையின், இரண்டு மொக்குமென்பதாம். வாயுணவினென்று பாடமோதி வாருமுளர். இவை மூன்றுபாட்டானுங் கேளாதவழிப்படுங் குறறங் கூறபபட்டது. (கo)

சூடகம் அதி.—அறிவுடைமை.

அஃதாவது கல்வி கேள்விகளினுய அறிவோடு உண்மை யறிவுடையனுதல். அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

சூஉக. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
மூள்ளழிக்க லாகா வரண். க.

இ - ள். அறிவு அற்றம் காக்கும் கருவி - அரசர்க்கு அறி வென்பது இறுதிவாராமற காக்குங் கருவியாம்,—செறுவார்க்கு அழிக்கலாகா உள்ளரணும் - அதுவேயுமன்றிப பகைவர்க்கு அழி க்கலாகாத உள்ளரணுமாம். எ - று.

காத்தல் முன்னறிதது பரிகரித்தல். உள்ளரண் உள்ளாய வரண்; உள்புக்கழிக்கலாகா அரணென்றுமாம். இதனுல் அறிவி னது சிறபபுக் கூறப்பட்டது. (க)

சூஉஉ. சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு. உ.

இ - ள். சென்ற இடத்தால் செல விடா - மனத்தை அது சென்ற புலத்தின்கட் செல்ல விடாது—தீது ஒரீஇ நன்றின்பால் உய்பபது அறிவு - அப்புலத்தின் நன்மை தீமைகளையாராயந்து தீய தனினீக்கி நல்லதன்கட் செலுத்துவது அறிவு. எ - று.

விணைக்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றமெனப் புலம் ஐந்தாயினும், ஒருகாலத்தி ஒன்றின்கணல்லது செல்லாமையின், இடத்தாலென்றார். விடா தென்பது கடைக்குறைந்து நின்றது. குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன்போல வேருக்கி மனத்தைப புலமறிந்து செலுத்துவது அறிவென்றார், அஃது உயிர்க்குணமாகலின். (உ)

சூஉங. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொரு
மெய்ப்பொருள் காண்ப தறிவு. ங. [ண்

இ - ள். எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் - யாதொ ருபொருளே யாவர் யாவர் சொல்லக்கேட்பினும்,—அப்பொருள் மெயப்பொருள் காண்பது அறிவு - அப்பொருளின் மெயயாய பயனைக்காணவல்லது அறிவு. எ - று.

குணங்கண் மூன்றும் மாறி மாறி வருதல் யாவர்க்குமுண்மை மின், உயர்ந்த பொருள் இழிந்தார் வாயினும், இழிந்த பொருள் உயர்ந்தார் வாயினும், உறுதிப்பொருள் யகைவர் வாயினும், கெடு பொருள் நட்டார்வாயினும் ஓரோவழிக் கேட்கபபடுதலான், எப பொருள் யார் யார்வாயக கேட்பினுமென்றார். அடிக்குப்பன்மை பற்றி வந்தது. மாயென்பது அவர் அப்பொருளின்கட் பயிலாமை யுணர்த்தி நின்றது. மெயயாதல் நிலேபெறுதல். சொல்வாரதியல்பு நோக்காது அப்பொருளின் பயனேக்கிக் கொள்ளுதல் ஒழிதல் செயவதறிவென்பதாம். (சு)

சூஉச. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்
நுண்பொருள் காண்ப தறிவு. சு. [வாய்

இ - ள். தான் எண்பொருளவாகச் செலச் சொல்லி - தான சொல்லுஞ் சொற்களே அரியபொருளவாயினும கேட்பார்க்கு எளியபொருளவாமாறு மனங்கொளச சொல்லி—பிறர்வாய நுண் பொருள காண்பது அறிவு - பிறர்வாயக் கேடகுஞ் சொற்களின் நுண்ணியபொருள் காணவரிதாயினும் அதனைக் காணவல்லது அறிவு. எ - று.

உடையவன்றொழில் அறிவின்மேலேற்றப்பட்டது. சொல லுவன வழுவின்றி இனிது விளங்கச் சொல்லுகவென்பார் சொன மேல்வைத்தும், கேட்பன வழுவினும் இனிது விளங்காவாயினும பயனைக் கொண்டொழிகவென்பா பொருண்மேல் வைத்துங் கூறினார். (ச)

சூஉரு. உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு. ரு.

இ - ள். உலகம தழீஇயது ஒட்பம் - உலகத்தை நட்பாக்கு வது ஒருவனுக்கு ஒட்பமாம,—மலர்தலும் கூமபலும இல்லது அறிவு - அந்நட்பின்கண் முன்மலர்தலும் பின் கூம்புதலுமின்றி ஒருநிலேயனவது அறிவாம். எ — று.

தழீஇயது இல்லதென்பன அவ்வத்தொழின்மேனின்றன. உலகமென்பது ஈண்டியார்ந்தோரை. அவரோடு கயப்பூப்போல வே றுபடாது கோட்டுப்பூப்போல ஒருநிலேயே நட்பாயினுன் எல்லா

வின்பமுமெய்துமாகலின், அதனை அறிவென்றார். * காரியங்கள் காரணங்களாக உபசரிக்கபபட்டன. இதனைசசெல்வத்தின் மலாகலும் நல்குரவிற் கூம்பலுமில்லதெனறு உரைபபாருமுளா. (நி)

சாஉசு. எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு. சு.

இ - ள். உலகம் எவ்வது உறைவது - உலகம் யாதொருவாற்றுனெழுகுவதாயிறறு,—உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு - அவவுலகத்தோடு மேவித் தானும் அவ்வாற்றுனெழுகுவது அரசனுகுகறிவு. எ - று.

உலகத்தையெல்லாம் யானியமித்தலான் என்னை நியமிப்பாரில்லையெனக் கருதித் தானினைத்தவாறே ஒழுகிற பாவமும் பழியுமாமாகலான், அவ்வாறெழுகுதல் அறிவன்றென விலக்கியவாருமிறறு. இவையைநதுபாட்டானும அதனதிலக்கணங் கூறபபட்டது.

சாஉஎ. அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர். எ.

இ - ள். அறிவுடையார் ஆவது அறிவார் - அறிவுடையராவாரவரகடவதனை முன்னறியவல்லார,—அறிவிலார் அஃது அறிகலலாதவா - அறிவிலராவார் அதனை முன்னறியமாடடாதார். எ - று

முன்னறிதல் முன்னேயெணணியறிதல். அஃதறிகல்லாமை பாவது வநதாலறிதல். இனி ஆவதறிவாரென்பதறகுத் தமக்குநனமையறிவாரெனறுரைப்பாருமுளா. (எ)

சாஉஅ. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில். அ.

இ - ள். அஞ்சுவது அஞ்சாமை பேதைமை - அஞ்சபபடுவதனை அஞ்சாமை பேதைமையாம்;—அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில் - அவவஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாம். எ - று.

பாவமும் பழியுங் கேடும் முதலாக அஞ்சப்படுவன பலவாயினும, சாதிபறறி அஞ்சுவதென்றார். அஞ்சாமை எண்ணுதுசெயது

* நாலடியார், நட்பாராயதல்,—கோட்டுப்பூப போல மலர்ந்து பிற கூமபாது—வேட்டதே வேட்டதா நடபாட்சி - தோட்டல—கபபூபபோன் முன்மலர்நது பிறகூம்பு வாளர—நயபபாரு நடபாரு மில்.

நிற்றல். அஞ்சுதல் எண்ணித் தவிர்தல். அது காரியமன்றென்று இகழப்படாதெனபார் அறிவார்தொழிலென்றார். அஞ்சாமை இறைமாட்சியாகச் சொல்லப்பட்டமையின், ஈண்டஞ்சவேண்டு மிடங் கூறியவாறு. இவையிரண்டுபாடானும் அதனையுடையார் இலக்கணங் கூறப்பட்டது. (அ)

சசுகூ. எதிரதாக் காக்கு மறிவினர்க் கில்லை
யதிர வருவதோர் நோய். கூ.

இ - ள். எதிரதாக் காக்கும் அறிவினர்க்கு - வரக்கடவதாகிய வதனை முன்னறிந்து காக்கவல்ல அறிவினையுடையார்க்கு—அதிர வருவது ஓர் நோய இல்லை - அவர நடுங்க வருவதொரு துன்பமு மில்லை. எ - று.

நோயென வருகின்றமையின், வாளா எதிரதாவென்றார். இது னுற் காக்கலாங்காலம் உணர்த்தபபட்டது. காத்தல் அதன் காரணத்தை விலக்குதல். அவர்க்குத் துன்பமின்மை இதனுற் கூறப பட்டது. (கூ)

சசுஙூ. அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர். கஙூ.

இ - ள். அறிவுடையார் எல்லாம் உடையார் - அறிவுடையார் பிறிதொனறு மிலராயினும் எல்லாமுடையராவர்—அறிவிலார் என் உடையரேனும் இலர் - அறிவிலாதார் எல்லாமுடையராயி னும் ஒன்றுமிலராவர். எ - று.

செல்வங்களெல்லாம் அறிவாற்படைக்கவுங் காக்கவும்படு வ லின் அஃதுடையாரை எலலாமுடையரென்றும், அவையெல்லாம் முனனேயமைந்து கிடப்பினும் அழியாமற் காத்தற்குந் தெயவததா னழிந்தழிப் படைத்தறகுங் கருவியுடையரன்மையின் அஃதில்லா தாரை என்னுடையரேனுமிலரென்றுங் கூறினர். என்னுமென்பழி உம்மை விகாரத்தாற் றொக்கது. இதனுன் அவரதுடைமையும மனேயாரதின்மையுங் கூறப்பட்டன. (கஙூ)

சசம் அதி—குற்றங்கடிதல்.

அஃதாவது காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமெனப்பட்ட குற்றங்களாறனையும் அரசன் தனகணி கழாமற் கடிதல். இவற்றை வட்நூலார் பகைவர்க்கமென்ப. இவை

குற்றமென்றறிதலும் கடிதலும் அறிவுடையார்க்கல்லது கூடாமையின், அதன்பின் வைக்கப்பட்டது.

சஙக. செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. க.

இ - ள். செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார் பெருக்கம் - மதமும் வெகுளியுங் காமமுமாகிய குறைபங்களில்லாத வரசாது செல்வம் – பெருமித நீர்த்து-மேம்பாட்டு நீர்மையினையுடைத்து. எ - று.

மதம் செல்வக்களிப்பு. சிறியோர்செயலாகலின், அளவிறந்த காமஞ் சிறுமையெனபபட்டது. இவை நீதியல்லன செயவித்தலான, இவற்றைக் கடிநதார்செல்வம் நல்வழிபபாடும நிலேபேறு முடைமையின், மதிப்புடைத் தென்பதாம். மிகுதிபறறி இவை முறகூறப்பட்டன. (க)

சஙஉ. இவறலு மாண்பிறந்த மானமு மாணு
வுவகையு மேத மிறைக்கு. உ.

இ - ள். இவறலும் - வேண்டும்வழிப் பொருள்கொடாமையும்—மாண்பு இறந்த மானமும் - நன்மையினீங்கிய மானமும்—மாணு உவகையும் - அளவிறநதவுவகையும்—இறைக்கு ஏதம - அரசனுக்குக் குறறம். எ - று.

மாட்சியான மானதனினீக்குதற்கு மாண்பிறந்த மானமென்றார்: அஃதாவது 'அநதணர் சானறோர் அருந்தவத்தோர் தம்மூன்னோர் தந்தை தாயென்றிவ' * ரை வணங்காமையும், முடிக்கபப டாதாயினும் கருதியது முடிதீதே விடுதலும் முதலாயின. அளவிறந்தவுவகையாவது கழிகண்ணேட்டம். பிறருஞ் சினனேகாமங் கழிகணணேட்ட மென்றிவற்றை யறந்தருதிகிரிக்கு வழியடையாகுந் தீதென்றார். இவையிரண்டுபாட்டானுங் குற்றங்களாவன இவையெனபது கூறப்பட்டது. (உ)

சஙங. தினைத்தனையாங் குற்றம் வரினும்பனைத்தனையா
கொள்வர் பழிநாணு வார். ங. [க்

இ - ள். பழி நாணுவார் - பழியை யஞ்சுவார்;—தினைத்தனையாம் குற்றம் வரினும் பனைத்தனையாக் கொள்வர் - தங்கட்டினையளவாங் குறறம் வநததாயினும் அதனை அவ்வளவாகவுன்றிப பனையினளவாகக் கொளவர். எ - று.

* வெண்பாமாலை, பாடாண்படலம், ஙங.

குற்றம் சாதிப்பெயர். தமக்கேலாமையிற் சிறிதென்றுபொ
ருர் பெரிதாகக்கொண்டு வருந்திப் பின் அது வாராமற காபட
ரெனபதாம். (உ)

சஉசு. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றங தருூடம் பகை. ச.

இ—ள். அற்றம் தருூடம் பகை குறறமே - தனக்கிறுதி பப
கும பகை குறறமே,—குறறமே பொருளாகக் காகக - ஆகலான,
அகுறறம் தனகண்வாராமையே பயனுக்க கொணடு காகவேண
டும். எ - று.

இவைபறறியல்லது பகைவா அறறஙதாரூலமையின இவைபே
பகைபாவனவெனனும் வடநூலா மதம பறறிக் குறறமேயறறங
தருூடம பகையெனறும், இயறறதின்மையே குணங்களதண்மை
யாகக்கொண்டெனபாா பொருளாகவெனறுங் கூறினுர். குறறமே
காக்கவென்பது "அருமபண்பிறை நீமைகாக்க" எனபதுபோல
நின்றது. (ச)

சஉடு. வருமுன்னர்க்காவாதான்வாழ்க்கையெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். டு.

இ - ள். வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை - குற்றம் வரக்
கடவதாகினற முறகாலத்திலே அதனைக் காவாத அரசன் வாழ
க்கை—எரிமுன்னர் வைத்தூறுபோலக் கெடும் - அது வந்தால் எரி
முகத்து நினற வைக்குவைபோல அழிநதுவிடும். எ - று.

குற்றமென்பது அதிகாரத்தான் வந்தது. மூன்னரென்றதனீ
றறது பகுதிப்பொருள விகுதி. வருமென்னும் பெயரெச்சம் முன
னரென்னுங் காலப்பெயர் கொண்டது; அதனுற காக்கலாங்
காலம் பெறப்பட்டது. குற்றஞ் சிறிதாயினும் அதனுற் பெரிய
செல்வம் அழிநதேவிடுமென்பது உவமையாற் பெறறும். (டு)

சஉசு. தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு. சு.

இ - ள். தன்குற்றம் நீக்கிப் பிறர் குறறம் காண்கிற்பின் -
மூன்னர்த் தன் குற்றத்தைக் கண்டு கடிந்து பின்னர்ப் பிறர்குற
றங் காணவல்லனாயின்,—இறைக்கு ஆகும் குற்றம என் - அரசனு
க்கு ஆகக்கடவ குற்றம் யாது. எ - று.

அரசனுக்குத் தன்குற்றங் கடியாவழியே பிறர்குற்றங் கடிதல் குற்றமாம் அதுகடிந்தவழி முறைசெயதலாமென்பார், என்குறை மாருமென்றார்: எனவே, தன்குற்றங்கடிதலவனே முறைசெயதற குரியவனெனபதாயிற்று. இவை நான்குபாட்டானும் அவற்றது கடிதறபாடி பொதுவகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகை யாற கூறுப. (சு)

சஙூஎ. செயற்பால செய்யா திவறியான் செல்வ
முயற்பால தன்றிக் கெடும். எ.

இ - ள். செயற்பால செயயாது இவறியான் செல்வம் - பொருளாற றனச்குச் செயதுகொள்ளப்படுமவறறைச் செயது கொளளாது அதன்சட் பறறுள்ளஞ் செயதானது செல்வம்—உய றபாலதன்றிக் கெடும் - பின் உளதாம்பான்மைத்தன்றி வறிதே கெடும. எ - று.

செயற்பாலவாவன அறம் பொருளின்பங்கள். பொருளாற பொருள்செயதலாவது பெருச்குதல்; அது "பொன்னி ஞகும பொருபடையப்படை—தன்னி ஞகுந் தரணி தரணியிற்—பின்னி யாகும பெரும்பொரு ளபபொரு—டின்னுங் காலித் தன்ஞதன விலலியே." * என்பதனானறிக. அறஞ்செயயாமையானும் பொ ருளை பெருக்காமையானும் உயறபால தனறியென்னும், இன்பப்ப யன கொள்ளாமையிற கெடுமென்றுங் கூறினர். உயறபாலதின்றி யெனறு பாடமோதுவாருமுளர். (எ)

சஙூஅ. பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று. அ.

இ - ள். பற்றுள்ளம் என்னும் இவறன்மை - பொருளை விட தகாதுமிடத்து விடாது பற்றுதலைச் செய்யுமுள்ளமாகிய உலோபத் தினது தன்மை—எற்றுள்ளும எண்ணப்படுவது ஒன்று அன்று - குறறத்தன்மைக ளெல்லாவறறுளளும் வைத்தெண்ணப்படுவ தொனறன்று, மிக்கது. எ - று.

இவறலது தன்மையாவது குணங்களெல்லாம் ஒருங்குளவா யினும் அவற்றைக் கீழ்ப்படுத்துத் தான மேறபட வல்லவிய பு. ஒழிந்தன அதுமாட்டாமையின், எற்றுள்ளு மெண்ணப்படுவ தொன்றன்றென்றார். எவறறுள்ளுமென்பது இடைக்குறைந்து நினறது. இவையிரண்டுபாட்டானும் உலோபத்தின்றீமை கூறப பட்டது. (அ)

* சீவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம். சுரு.

சஊகூ. வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை. கூ.

இ - ள். எஞ்ஞான்றும் தன்னை வியவற்க - தான் இறப்பவுயர்ந்த ஞான்றும் மதத்தாற் றனனே நனகுமதியாதொழிக;—நனறி பயவா வினை நயவற்க - தனக்கு நன்மை பயவா வினைகளை மானதால் விரும்பாதொழிக. எ - று.

தன்னை வியத்தழி இடமும் காலமும் வலியும் அறியப்படாமையானும், அறனும பொருளும இகழப்படுதலானும், எஞ்ஞான்றும் வியவறகவென்றும், கருதியது முடித்தே விடவலென்று அறமபொருளினபங்கள பயவா வினைகளை நயபபின அவறறுற் பாவமும் பழியுங் சேடும் வருமாகலின், அவறறைநயவறகவெனறு ஊகூறினர். இதனுன மதமானங்களினறீமை கூறபபட்டது. (கூ)

சஎ0. காதல காத லறியாமை யுய்க்கிற்பி
னேதில வேதிலார் நூல். க0.

இ - ள். காதல காதல் அறியாமை உயக்கிறபின - தான காதலித்த பொருள்களை அவா அக்காதலறியாமல் அனுபவிககவல்லுபின,—ஏதிலார நூல் ஏதில - பகைவர் தனனைவஞ்சித்தறகெனனு மெண்ணம் பழுதாம். எ - று.

அறிநதவழி அவை வாயிலாகப் புகுந்து வஞ்சிப்பராகலின், அறியாமலுயததால் வாயிலினமையின் வஞ்சிக்கபபடா னெனப தாம. காமம, வெகுளி, உவகையென்பன முறறக்கடியுங் குறற மன்மையின், இதனுற பெரும்பான்மைத்தாகிய காமநுகருமாறு கூறி, ஏனைச்சிறுபான்மையவற்றிறகுப் பொதுவகை விலக்கினையே கொண்டொழிநதார். (க0)

சுருக்கம் அதி.—பெரியாரைத்துணைக்கோடல்.

அஃதாவது மூவிருகுற்றமும் முறைமையிற் கடிதலிற காவற்சாகாடுகைத்தற்குரியனுய அரசன தீநெறிவிலக்கி நனனெறிச்செலுத்தும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கோடல். அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும். பேரறிவுடையராவார் அரசர்க்கும் அங்கங்கட்கும் மாணடத்தெய்வக் குறறங்கள்வாராமற் காத்தறகுரிய அமைச்சர், புரோகிதர்.

சசக.| அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். க.

இ - ள். அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை – அறத்தது நுண்மையையறிந்து தன்னின மூத்த அறிவுடையாரது கேணமையை—தேர்ந்து திறன் அறிந்து கொளல் - அரசன் அதன தருமையை யோராது, கொளளுந திறமறிந்துசொள்க. எ - று.

அறநுண்மை நூலாணேயன்றி உயத்துணர்வானும் அறியவே ண்டுதலின, அறனறிந்தென்றார். மூத்தல் அறிவானும், சீலத்தா னும், காலத்தானும் முதிராதல். அறிவுடையார நீதியையும் உலகிய லேயுமறிதலேயுடையார. திறனறிதலாவது நன்குமதித்தல், உயரச செயதல், அவாவரைநிறறலென்பன முதலாக அவர் பிணிபபுண ணுந திறனறிது செயதல். (க)

சசஉ. உற்றநோய் நீக்கி யுறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். உ.

இ - ள். உற்ற நோய் நீச்சி – தெயவத்தானுகை மக்களானுகை தனக்கு வந்த துனபங்களே நீக்குமாறறிது நீக்கி—உறுமை முற காக்கும் பெற்றியார்-பின அபபெறறியன வாராவண்ணம் முன்ன றிந்து காக்கவல்ல தன்மையினையுடையாரை—பேணிக்கொளல் - அரசன அவர் உவபபன செயது துணேயாகக்கொள்க. எ - று.

தெயவத்தான் வருந் துன்பங்களாவன மழையினதினமை மிகுதிகளானும், காற்றுத் தீப பிணியென்றிவற்றானும், வருவன. அவை கடவுளரையுந் தக்கோரையும் நோக்கிச்செயயுஞ் சாதனிக ளானீக்கப்படும். மக்களான்வருநதுன்பங்களாவன பகைவர், கள வர், சுற்றத்தார், வினேசெயவாரென்றிவர்களான் வருவன. அவை சாம பேத தான தண்டங்களாகிய நால்வகையுபாயத்துள் நீற்ற தனுனீக்கபபடும். முற்காத்தலாவது தெயவத்தான் வருவனவ றறை உற்பாதங்களானறிந்து, அச்சாந்திகளாற்காத்தலும்; மக்க ளான்வருவனவற்றை அவர்குணம், இங்கிதம், ஆகாரம், செயலெ ன்பனவறறுனறிந்து அவ்வுபாயங்களுளொன்றுற் காத்தலுமாம ஆகவே, புரோகிதரையும அமைச்சரையுங் கூறியவாறுயிறறு இங்கிதம் குறிப்பானிகழும் உறப்பின்றெழில். ஆகாரம் குறிபபி ன்றி நிகழும் வேறுபாடு. உவப்பன நன்குமதித்தன் முதலியன. இவையிரண்டுபாட்டானும் பெரியாரதிலக்கணமும், அவரைத அணேயாகக் கோடல்வேண்டுமென்பதூஉம், கொள்ளுமாறுங் கூற ப்பட்டன. (உ)

சசஙூ. அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். ஙூ.

இ – ள். பெரியாரைப் பேணித் தமராக் கொளல் - அப்பெரியவர்களை அவர் உவப்பனவறிந்து செயது தமக்குச் சிறந்தாராகக் கொள்ளுதல்—அரியவற்றுள் எல்லாம் அரிது - அரசர்க்கு அரிய பேறுகளெல்லாவற்றுள்ளும் அரிது. எ – று.

உலகத்தரியனவெல்லாம் பெறுதற்குரிய அரசர்க்கு இப்பேறு சிறந்ததென்றது, இதனால் அவையெல்லாம் உளவாதலேனுங்கி. (ஙூ)

சசசஅ. தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. சஅ.

இ - ள். தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல் - அறிவு முதலியவற்றால் தம்மின் மிக்கார தமக்குச் சிறந்தாராகத் தாம் அவர்வழி நினறொழுகுதல்—வன்மையுள் எல்லாம் தலை - அரசர்க்கு எல்லா வலியுடைமையினுந்தலை. எ - று.

பொருள், படை, அரண்களாலுய வலியினும் இத்துணைவலி சிறந்ததென்றது, இவர் அவறருளீசகபடடாத தெயவத்தின்பமுதலியனவும் நீக்குதற்கு உரியராகலின். (சஅ)

சசஙஎ. சூழ்வார்கண் ணுக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். ஙஎ.

இ - ள். சூழ்வார் கண்ணுக ஒழுகலால் - தன்பாரம் அமைச்சரைக் கண்ணுகச்கொண்டு நடத்தலான்—மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் - அரசன் அத்தன்மையராய அமைச்சரையாராய்ந்து தனகருத் துணையாகக் கொள்க. எ – று.

இரண்டாவது விகாரத்தாற்றொக்கது. தானே சூழவல்லனாயினும் அளவிறந்த தொழில்களான ஆருலமெயதுமரசன்பா;, அதுவே தொழிலாய அமைச்சரானல்லது இனிது நடவாமைபற்றி, அவரைக் கண்ணுகக் கூறினார். ஆராயதல் அமைச்சியலுட் சொல்லப்படும் இலக்கணத்தினை ரெண்டதனை யாராயதல். இவை மூன்று பாட்டானும் பெரியாரைத் துணைக்கோடலின சிறப்புக் கூறப்பட்டது. (ஙஎ)

சசசக. திக்கா ரினத்தஞ்சித் தாஞ்சூக வல்லானைச்
செற்றூர் செயக்கிடந்த தில். சக.

களஅ சடு ம் அதி.—பெரியாரைத் துணைக்கோடல்.

இ - ள். தக்கார் இனத்தனையத் தான் ஒழுக வல்லானே - தக்காராகிய வினதையுடையனையத் தானுமறிந்தொழுகவல்லவரசனே—செற்றார் செயக் கிடந்தது இல் - பகைவர் செயயக் கிடந்த தொரு துன்பமுமில்லை. எ - று.

தக்கார் அறிவொழுக்கங்களாற்றருதியுடையார். ஒழுகுதல் அறநீதிகளின் நெறி வழுவாமனடத்தல். வஞ்சித்தல், கூடினரைப பிரித்தல, வேறுபகை விளைத்தலென்றிவற்றானும், வலியானும், பகைவர செயயுந துன்பங்கள் பலதிறத்த வாயினும், தானுமறிந்து அறிவார்சொல்லுங் கொண்டொழுகுவானகண அவற்றுளொன றும் வாராதென்பார், செற்றார் செயக்கிடந்தில்லென்றார். (சு)

சசஎ. இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர். எ.

இ - ள். இடிக்கும் துணையாரை ஆள்வாரை - தீயன கண்டால் நெருங்கிச சொல்லுந துணையாநதன்மையையுடையாரை இவர் நம க்குச் சிறநதாரென்றுளுமரசரை—கெடுக்கும் தகைமையவர் யார் - கெடுக்கும் பெருமையுடைய பகைவர் உலகத்தியாவர்? எ - று.

தீயன பாவங்களும் நீதியல்லனவும். துணையாநதனமையாவது தமக்கு அவையின்மையும் அரசன்கணன்புடைமையுமாம. அத்தன்மையுடையார் நெறியினீங்கவிடாமையின், அவரையாளு மரசர் ஒருவராலுங் கெடுக்கப்படாரென்பதாம். நெருங்கிச் சொல் லுமளவினுரையென் றுரைப்பாருமுளர். இவை யிரண்டு பாட் டாலும அதன்பயன கூறப்பட்டது. (எ)

சசஅ. இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும். அ.

இ - ள். இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் - கழறுதற் குரியாரைத் தனக்குத் துணையாகக்கொள்ளாமையிற் காவலறற அரசன்—கெடுபபார் இலானும் கெடும் - பகையாயக் கெடுப்பா இல்லையாயினும் தானே கெடும். எ - று.

இல்லாத ஏமராவென்பன ' டெயரெச்சவடுக்கு. கெடுப்பார் உளராவரெனடது தோன்ற, இலானுமென்றார். தானே கெடுத லாவது பாதனிலலாத யாணைபோல நெறியல்லாநெறிச் சென்று கெடுதல். (அ)

சசசூ. முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை. சூ.

இ - ள். முதல் இலார்க்கு ஊதியம் இல்லை - முதற்பொருளில்லாத வணிகர்க்கு அதனால் வருமூதியமில்லையாம,—மதலையாம சார்பு இலார்க்கு நிலை இல்லை-அதுபோலத தம்மைத் தாங்குவதாந துணையில்லாத அரசர்க்கு அதனன் வரும் நிலையில்லை. எ - று.

முதலைப்பெற்றே இலாபம் பெறவேண்டுமாறுபோலத் தாங்குவாரைப் பெறறே நிலைபெறவேண்டுமென்பதாம. நிலை அரசா பாரத்தோடு சலியாது நிறறல். (சூ)

சஙூ0. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். க0.

இ - ள். பல்லார் பகை கொளலின் பத்து அடுத்த தீமைத்துதானறனியலுய வைத்துப் பலரோடுமட பகைகொளறுதலிற பதிறறு மடஙகு தீமையுடைத்து—நல்லார தொடா கைவிடல் - அரசன பெரியாரோடு நட்பினைக் கொளளாதொழிதல். எ - று.

பலர் பகையாயக்கால் "மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல் - பேதுசெயது பிளநதிடல்" * என்பவை யலலது ஒருஙகு வினையாகதல் தீது, செயதாலும் ஒருவாறமுனுயதல கூடும. நல்லார் தொடாகைவிட்டால் ஒருவாறமுனுமுயறல் கூடாமையின, இது செயதல அதனினுங தீதெனபதாம. இவை மூனறுமாடாறும அது செயயாதவழிபபடுங் குறறங கூறபபடடது. (க0)

சசூ ம் அதி.—சிற்றினஞ்சேராமை.

அஃதாவது சிறியவினத்தைப பொருநதாமை. சிறியவினமாவது நல்லதனலனும் தீயதனறிமையுமில்லென்போரும விடரும தூர்த்தரும கூடருமுள்ளிடட குழு. அறிவைத் திரித்து இருமையுங் கெடுகருமியல்பிறறிய அதனேப பொருந்திற பெரியாரைத துணைக்கோடல் பயனினறெனப துணாத்தறகு இஃததன்பினவைச்சப்பட்டது.

* சீவகசிநதாமணி, விமலையாரிலமபகம, கூஉ.—நீதியாலறுத் தநநிதி யீட்டுத—லாதி யாய வருமபகை நாடுதன்—மோதிமுள்ளொடு முட்பகை கண்டிடல்—பேது செயது பிளநதிடல் பெட்டதே.

**சருக. சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். க.**

இ - ள். பெருமை சிற்றினம் அஞ்சும் - பெரியோரியல்பு சிறியவினத்தையஞ்சா நிறகும்;—சிறுமை தான சுறறமாச் சூழநது விடும் - ஈனச்சிறியோரியல்பு அது சேர்நதபொழுதே அதனைத தனக்குச் சுறறமாகவெண்ணித் துணியும். எ - று.

தத்தமறிவு திரியுமாறும் அதனுறறமக்குவருநதுன்பமும் நோக்சலின் அறிவுடையாரஞ்சுவரென்றும், அறிவொறறுமையாற பிறிது நோக்காமையின் அறிவிலாதார் தமக்குச் சுறறமாகத் துணிவரென றுங கூறினர். பொருளினருெழிலகள பண்பின்மேனின்றன இதனுற சிறியவினம் பெரியோரக்காகாதென்பது கூறப்பட்டது. (க)

**சருஉ. நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு. உ.**

இ - ள். நிலத்து இயல்பான் நீர திரிந்து அற்றாகும் - தான சேர்நத நிலத்தினதியல்பானே நீர் தன்றன்மை திரிநது அநநிலதி தின்றனமைத்தாம்,—மாநதாககு இனத்தியல்பு அறிவு (திரிநது) அதாகும் — அதுபோல மாநதாக்குத தாஞசோநத இனத்தினதியல் பானே அறிவுந தனறனமை திரிநது அவவினதத்தினறனமைத காம். எ - று.

எடுத்துக்காட்டுவமை. விசும்பின்கட்டன்றன்மைத்தாய நீர நிலைதோறு சோநதவழி, நிறம், சுவை முதலிய பண்புகள திரிந தாறபோலத் தனிநிலைக்கடடனறன்மைதாயவறிவு பிறவினத தோடு சேர்நதவழிக காடசி முதலிய தொழிலகள திரியுமென இதனுல அதனது காரணங் கூறபபட்டது. (உ)

**சருங. மனத்தானு மாந்தர்க் குணர்ச்சி யினத்தானு
மின்ன னெனபபடுஞ் சொல். ங.**

இ - ள். மாநதாக்கு உணாசசி மனத்தான் ஆம் - மாநதாக குப பொதுவுணாவு தம மனஙகாரணமாகவுண்டாம;—இன்னனை எனபபடிம சொல் இனத்தான் ஆம - இவன இத்தன்மையனென று உலகத்தாராறசொல்லபபடிம சொல் இனங்காரணமாகவுண டாம. எ - று.

இயறகையாய புலனுணர்வுமாத்திரத்திற்கு இனம யேண்டா மையின அதனை மனத்தானுமென்றும், செயறகையாய விசேடவு ணர்வுபறறி நலலனெனறுசத் தியனென்றுக நிகழுஞ்சொறகு

இனம் வேண்டுதலின் அதனை இனத்தாலுமென்றுங்கூறினார். உவமையளவை கொள்ளாது அத்திரிபும மனத்தாலுமெனபாரை நோக்கி இதனுள் அது மறுத்துக கூறபபட்டது. (சூ)

**சருசை. மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு. சை.**

இ - ள். அறிவு - அவ்விசேடவுணர்வு—ஒருவற்கு மனத்து உளதுபோலக் காட்டி - ஒருவற்கு மனத்தின்கணணேயுளதாவது போலத் தனனைப் புலப்படுத்தி—இனதது உளதாகும்-அவன்சோ நதவினத்தின் கண்ணேயுளதாம். எ - று.

மெயம்மை நோக்காமுன் மனதது ளதுபோன்று காட்டியும பின்னேச்சியவழிப பயினறவினத்துளதாயுமிருதலின, காடடி யென இறந்தகாலத்தாற கூறினார். விசேடவுணர்வுதானும் மனதினகண்ணே அனறேயுளதாவதென்பாரை நோக்கி, ஆண்டுப புலபபடுநதணேயேயுளது அதறகுமூலம இனமென்பது இதனுற கூறபபடடது. (சை)

**சருருரி. மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும். ரி.**

இ - ள. மனம் தூயமை செயவினை தூயமை இரண்டும - அவ்விசேடவுணர்வு புலபபடுதறகினறிய மனதூயனறறனமை யும செயயும்வினை தூயனறறனமையுமாகிய விரண்டும்—இனதூயமை தூவா வரும - ஒருவறகு இனதூயனறறனமை பறறுக கோடாக உளவாம. எ - று.

மனந்தூயனறலாவது விசேடவுணர்வு புலபபடுமாறு இயற்கையாய அறியாமையினீங்குதல். செயவினைதூயனறலாவது மொழிமெயகளாறசெயயும் நலவினையுடையனறல. தூவெனபது அபபொருட்டாதல் "தூவறற துறநதாரை" * எனபதனுளளுமறிக ஒருவன இனதூயனகேவே அதனேடு பயிறகிவயததான மனதூயனய அதனகண விசேடவுணாவுபுலபபடு அதனுறசெலலுஞ் செயலுநதூயனுமென, இதனுல் இனதுளளவாமாறு கூறபபட்டது. (ரி)

**சருருசு. மனந்தூயார்க் கெச்சநன் ருகு மினந்தூயார்க்
• கில்லைநன் ருகா வினை. சு.**

* கலிதறொகை, நெயதறதலி, க.

இ - ள். மனம் தூயார்க்கு எச்சம் நன்குருகும் - மனந்தூயராயினாகுமகக்கடபேறு நனருகும,—இனம தூயராகுகு நனறு ஆகா வினை இலலை - இனந்தூயராயினாகுகு நனருகாத வினையாதுமிலலை. எ - று.

காரியங் காரணத்தின் வேறுபடாமையின் எச்சந்னருகுமென றும, நல்லினத்தோடிணணிச செயயபபடுதலின எலலாவினை யும நலலவாமெனறுங கூறினார். (கூ)

சருள. மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும். எ.

இ - ள். மன உயிராகுகு மனநலம ஆக்கம (தரும) - நிலைபெறறுயிராகடகு மனத்தது நனமை செலவுதறகு கொடுகுகும,—இனநலம எலலாபபுகழும் தரும - இனதது நனமை அதனோடு எலலாபபுகழையுங்கொடுகுகும. எ - று.

மனனுயிரென்றது ரணடு உயாதிணைமேனின்றது. தருமெனனும இடவழுவமைதிசசொல முனனுங்கூடடபபடடது. உலகம இரண்டாதது சாரிஇடவெசசவும்மை. மனநனருதருமென அதமாகின ஆதமன ஆகாதருமெனறும், புகழ கொடுத்தறகுரிய நலலோராசமே இனமாதலின இனநலமெலலாபபுகழுநருமெனறு கூறினார். மேல மனநனமை இனநனமைபறறிவருமெனபதனை ஒடகொணடு ஆதியலபாவேயுடையாராகுகு அவவினநனமை வேணடாவெனபாரை நோகி, அதுவேபனரி அதகுனமைய பலவுநனறாயுங் கருமென ஆவாக்கும அதுவேண்டுமெனபது இவ்விரணடுபாடடானுங கூறபபடடது. (எ

சருஅ மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப புடைத்து. அ.

இ - ள். மனநலம நனகு உடையராயினும - மனநன்மைமை முனனை நலவினையாறறுமேயுடையராயினும,—சான்றோருகு இனநலம் மாபபு உடைதது - அமைதாராகுகு இனநனமை அதறகு வலியாதலியுடைதது. எ - று.

நனகாலெனனும மூனறனுருபு விகாரததாறறுகெடகது. அநலவினையுளவழியும மனநலதனை வளாதலுவருதலின, ஆறறுகெ டபபுடைதாயிறறு. (அ)

சருகூ. மனநலத்தி னாகு மதுமைமற் றஃது
மினநலததி னேமாப புடைத்து. கூ.

இ - ள். மனநலத்தின் மறுமை ஆரும் - ஒருவற்கு மனநலமையானே மறுமையினபமுண்டாம்;—மற்றறஞ்தும இனநலத்தினை ஏமாப்பு உடைத்து - அதனாலே அச்சிறபபுத்தானும் இனநனமையான் வலிபெறுதலையுடைத்து. எ - று.

மனநலத்தினொரு மறுமையென்றது மறுமை பயப்பது மனநலமதனானே பிறிதொன்றன்றென்னும் மதத்தையுடம்பட்டுக் கூறியவாறு. மற்று வினைமாற்று. உமமை இறந்ததுதழீஇயெச்சவும்மை. ஒரோவழித் தாமதருணத்தான மனநலந்திரியினும நலினம் ஒபபநிறுதது மறுமைபயப்பிக்குமென நிலைபெறசெயயுமாறு கூறபபட்டது. இவையைநதுபாட்டானுஞ் சிற்சினஞ்சேராமை யது சிறபபு நலலினஞ்சோதலாயிய எதிர்மறைமுகத்தாற் கூறியவாறறிக. (கூ)

சகூ0. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி னல்லற் படுப்பதூஉ மில். க0.

இ - ள். நல்லினதினின் ஊங்கு துணையும் இல்லை - ஒருவறகு நலலினதினை மிக்க துணையுமில்லை,—தீயினத்தினை (ஊஙகு) ஆலறபடுபபதூஉம இல் - தீயவினதினை மிகக பகையுமில்லை. எ - று.

ஐந்தனுருபுகள் உறழ்பொருளினகண்வந்தன. ஊங்கெனபது பின்னுங்கூட்டி உம்மை மாறறியுரைக்கப்பட்டது. நல்லினம அறிவாணமையினீக்கித் துயருறுமற காத்தலின அதனைத துணையெனறும, தீயினம அறிவினீகஙித் துயருறுவித்தலின அதனைப பகையென்றுங் கூறினார். அலலறபடுபபதெனபது ஏதுபபொருள். இதனுல் விதியெதிர்மறைகளை உடனுங் கூபபபடடன. (க0)

சொல் அதி.—தெரிந்துசெயல்வகை.

அஃதாவது அரசன தான்செயயும வினைகளெலலாவறறையுஞ செயயுநதிறம். அசசெயல பெரியாரைததுணைககோடலை பயனுடைத்தாமபவழி அவரோடிருஞ செயயபபடுவதாகலின, இது சிறறினஞ் சேராமையினபின வைக்கபபட்டது.

சகூக. அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு மூதியமுஞ் சூழ்ந்து செயல். க.

இ - ள். அழிவதூஉம - வினைசெயயுஙகால அபபொழுது அதனுலிவதனையும—ஆவதூஉம - அழிதறபினனுவதனையும—ஆகி

வழி பயக்கும் ஊதியமும் - ஆய்தின்று பிற்பொழுது தருமுதியத் தையும்—சூழ்ந்து செயல் - சீர்தூக்கி உறுவதாயிற் செய்க. எ - று.

உறுவதாவது நிகழ்வின்கண் அழிவதனில் ஆவது மிக்கு எதிர் விளும் அது வளர்ந்து வருதல். அழிவதின்மையின், எதிர்வின் கண் வருமாக்கத்தை ஊதிய மென்றார்: எனவே, அவ்வூதியம் பெறின் நிகழ்வின்கண் அழிவதும் ஆவதுந் தம்முளொத்தாலும் ஒழிதற்பாற்றன்றென்பது பெற்றும். இரண்டுகாலத்தும் பயனுடைமை தெரிந்து செய்கவென்பதாம். (க)

சசுஉ. தெரிந்த வினத்தொடுதேர்ந்தெண்ணிச்செய்வார்க் கரும்பொருள் யாதொன்று மில். உ.

இ - ள். தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு - தாந் தெரிந்துகொண்ட இனத்துடனே செயத்தகும் வினையை ஆராயந்து பின் தாமேயுமெண்ணிச் செய்து முடிக்கவல்ல அரசர்க்கு—அரும்பொருள் யாதொன்றும் இல் - எய்துதற்கரிய பொருள் யாதொன்றுமில்லை. எ - று.

ஆராயப்படுவனவெல்லாம் ஆராய்ந்துபோந்த இனமென்றுமாம். செயவார்க்கென்றதனால், வினையென்னுஞ் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. வினையாவது மேற்சேறன்முதல் வேறலீறுய தொழில். பொருள்கட்கேதுவாய அதனிற்றவருமையின், அரியபொருள்களெல்லாம் எளிதினெய்துவரென்பதாம். இவையிரண்டுபாட்டானுஞ் செயத்தகும் வினையும் அது செயயுமாறும் கூறப்பட்டன. (உ)

சசுஊ. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை யூக்கா ரறிவுடை யார். ஊ.

இ - ள். ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை - மேலெய்தக்கடவதூதியத்தினை நோக்கி முன்னெய்திநின்ற முதலதன்னையும் இழத்தற்கேதுவாய செயவினையை—அறிவுடையார் ஊக்கார் - அறிவுடையார் மேற்கொள்ளார். எ - று.

கருதியென்னும் வினையெச்சம் இழக்குமென்னும் பெயரெச்சவினைகொண்டது. எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. ஆக்கமேயன்றி முதலையுமிழக்கும் வினைகளாவன வலியுங் காலமும் இடனுமறியாது பிறர்மண் கொள்வான்சென்று தம்மண்ணுமிழத்தல்போல்வன. முன்செயதுபோந்த வினையாயினுமென்பார், செய வினையென்றார். (ஊ)

சகூசு. தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு மேதப்பா டஞ்சு பவர். சு.

இ - ள். தெளிவு இலதனைத் தொடங்கார் - இனத்தோடுந் தனித்தும் ஆராய்ந்து துணிதலில்லாத வினையைத் தொடங்கார்—இளிவு என்னும ஏதப்பாடு அஞ்சுபவர - தமக்கு இளிவரவென்னுங் குற்றமுண்டாதலே அஞ்சுவார். எ - று.

தொடங்கின் இடையின் மடங்கலாகாமையின், தொடங்கா ரென்றார். இளிவரவு அவ்வினையாற் பின்னழிவெயதியவழி அதன் மேலும் அறிவும மானமுமிலரென்று உலகத்தாரிகழுமிகமச்சி. ஆராய்ந்துண்டாதல் ஒருதலையாகலின், தெளிவுள்வழித் தொடங்குக வென்பதாம். (சு)

சகூடு. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப் பாத்திப் படுப்பதோ ராறு. டு.

இ - ள். வகை அறச் சூழாது எழுதல் - சென்றால் நிகழுந்தி றங்களெயெல்லாம் முற்றவெண்ணுது சிலவெணணிய ஆணையானே அரசன் பகைவர்மேற்செல்லுதல்—பகைவரைப பாத்திப்படுப்பது ஒராறு - அவரை வளருநிலத்திலே நிலெபெறச் செயவதொரு நெறி யாம். எ - று.

அத்திறங்களாவன வலி, காலம், இடனென்றிவற்றால் தனக் கும பகைவர்க்குமுளவாம் நிலைமைகளும், வினை தொடங்குமாறும், அதற்கு வருமிடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், வெல்லுமா றும், அதனாற் பெறும் பயனும் முதலாயின. அவற்றுட் சிலவெஞ் சினும் பகைவர்க்கு இடனுமாகலான், முற்றுப்பெறவெண்ணவே ண்டுமென்பதாம். இவை மூன்றுபாட்டானும் ஒழியத்தகும் வினை யும் ஒழியாவழிப்படுமிழுக்குங் கூறப்பட்டன. (டு)

சகூசு. செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க செய்யாமை யானுங் கெடும். கூ.

இ - ள். செய்தக்க அல்ல செயக் கெடும் - அரசன் தன்வினை களுட் செய்யத்தக்கனவல்லவற்றைச் செயதலாற்கெடும்,—செயத க்க செயயாமையானும் கெடும் - இனி அதனானேயன்றிச் செயயத் தக்கனவற்றைச் செயயாமை தன்னானுங்கெடும். எ - று.

செய்யத்தக்கனவல்லவாவன பெரிய முயற்சியினவும், செய் தாற்பயனில்லனவும், அது சிறிதாயினவும், ஐயமாயினவும், பின் முயர்வினேப்பனவுமெனவிவை. செயயத்தக்கனவாவன அவற்றின்

றுதலேயாயின. இச்செயதல் செயயாமைகளாண் அறிவு ஆண்மை பெருமையெண்ணும மூவகையாறறலுட் பொருள் படையென இரு வகைத்தாய பெருமை சுருங்கிய பகைவர்க்கு எளியஞமாகலான, இரண்டுங் கேட்டிற்கேதுவாயின. இதனுற் செயவன செயது ஒழி வனவொழிகவென இருவகையனவும் உடன் கூறப்பட்டன. (சு)

சசுஎ. எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு. எ.

இ – ள். கருமம் எண்ணித்துணிக - செயயத்தக்க கருமமும முடிக்குமுபாயத்தையெண்ணித் தொடங்குக,—துணிந்தபின் எண ணுவம என்பது இழுக்கு - தொடங்கிவைத்துப் பினனெண்ணுக கடவேமெனறெழிதல் குறறமாதலான. எ – று.

துணிவுபற்றி நிகழ்தலின், துணிவெனபபட்டது சிறப்புமமை விகாரதகாறறொக்கது. உபாயமென்பது முயாயநிலையான வந்தது. அது கொடுத்தல, இனசொறசொல்லல், வேறுபடுத்தல், ஒறுதல் லென நால்வகைபடும். இவற்றை வடநூலா தான சாம பேத தண்டமென்ப. அவறறுண் மூனனிய விரண்டும் ஐவகைய, ஏனைய மூவகைய, அவ்வகைகளெல்லாம் ஈண்டுரைப்பிற்பெருகும.* இவ்வு பாயமெல்லாமெண்ணுது தொடங்கின் அவ்வினை மாற்றுஞல் விளை கபபடடு முடியாமையானும், இடையிஞெழிதலாகாமையானும், ஆசனனுயருறுதலின், அவ்வெண்ணுமையை இழுக்கெனறார். செய வனவறறையும் உபாயமறிநதே தொடங்குகவென்பதாம. (எ)

சசுஅ ஆற்றின் வருந்தா வருதகம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். அ.

இ – ள். ஆறறின் வருந்தா வருத்தம்-முடியுமுபாயத்தாற் சாருத்தை முயலாதமுயறசி—பலர் நின்று போறறினும் பொத துபபடும் – துணைவரபலர் நின்று புரைபடாமற் காப்பினும புரை படும. எ – று.

முடியுமுபாயத்தான் முயறலாவது கொடுத்தலைப் பொருண சையாளனகண்ணும; இன்சொல்லைச் செப்பமுடையான், மடியா

---

* அரும்பொருள் கொடுத்தல், தரும்பொருள்பெறுது விடுதல், கொடுக்கும்பொருள் கொடுத்தல், பிறன்பொருளகொண்டு கொடு தல், இறையொழிதல் எனக் கொடுத்தல் ஐநது; வணங்கல், புகழ் தல், எதிர்கோடல், நட்புக்கூறல், உறவுகூறல் என இன்சொற சொல்லல் ஐந்து; வஞ்சித்தல், கூடினரைப்பிரித்தல், வேறுபகை வினைத்தல் என வேறுபடுத்தல் மூன்று; துன்பஞ்செயதல், பொரு ட்கோடல், கோறல் என ஒறுத்தல் மூன்று.

ளன், முன்னே பிறரோடு பொருது தொந்தவனென இவர்கண் ணுமை; வேறுபடுத்தலைத் துணைப்படையாளன், தன் பகுதியோடு பொருந்தாதானென இவர்கண்ணும், ஒறுத்தலை இவற்றின் வாரா தவழி இவர்கண்ணுந் தேறப்படாத மேமவக்கள்கண்ணுஞ் செயது, வெல்லுமாற்றுன்முயறல். புரைபடுதல் கருதிய நன்மையன்றிக சருதாத தீமைபயத்தல். உபாயத்தது சிறப்புக் கூறியவாறு. (அ)

சசுகூ. நின்றுற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றுக் கடை. கூ.

இ - ள். நன்று ஆற்றலுள்ளும் தவறு உண்டு - வேறுவேர் தர்மாட்டு நன்றனவுபாயஞ்செயதற்கண்ணுங் குற்றமுண்டாம்,— அவரவர் பண்பு அறிந்து ஆற்றுக்கடை - அவரவருணங்களையாரா யந்தறிந்து அவறறிறகியையச செயயாவிடின. எ - று.

நனறனவுபாயமாவது கொடுத்தலும் இன்சொற்சொல்லுதலு மாம். அவை யாவர்கண்ணும் இனியவாதற்சிறப்புடைமையின, உம்மை சிறப்பும்மை. அவற்றை அவரவரா பண்பறிந்தாற்றுமை யாவது அவறறிற்கு உரியரல்லாதாரகண்ணே செயதல். தவறு அவ்வினை முடியாமை. (கூ)

சஎ ம. எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு. க ம.

இ - ள். தம்மொடு கொள்ளாத உலகு கொள்ளாது - அரசா வினைமுடித்தற்பொருட்டுத் தருநிலைமையோடு பொருந்தாத உபா யங்களைச் செய்வராயின உலகந தம்மையிகழாநிற்கும்;—எள்ளாத எணணிச் செயல்வேண்டும் - ஆகலான் அஃது இகழாவுபாயங்களை நாடிச் செயக. எ — று.

தம்மென்பது ஆருபெயர். தருநிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது தாம் வலியராய்வைத்து மெலியார்க் குரிய கொடுத்தன்முதலிய மூனறனைச்செய்தலும், மெலியராய வைத்து வலியார்க்குரிய ஒறுத்தலைச்செயதலுமாம். இவையிரண டும் அறிவிலார் செய்வனவாகலின், உலகங்கொள்ளாதென்றார். அஃதெள்ளாதன செய்தலாவது அவற்றைத் தத்தம் வண்மை மென் மைகட்கேற்பச் செயதல். மேல் இடவகையானுரிமை கூறிய உபா யங்கட்கு வினைமுதல்வகையான உரிமை கூறியவாறு. இவை நான் குபாட்டானுஞ் செயவனவற்றிற்கு உபாயமும் அதனதுரிமையுங் கூறப்பட்டன. (சஎ)

சமம் அறி.—வலியறிதல்.

அஃதாவது அவ்வுபாயங்களுள் ஒறுத்தல் குறித்தவரசன் நால்வகை வலியையும் அளந்தறிதல். அதிகாரமுறைமையும் இதனுளே விளங்கும்.

சஎக. வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந் துணைவலியுந் தூக்கிச் செயல். க.

இ – ள். வினை வலியும் - தான்செய்யக்கருதிய வினைவலியையும்—தன்வலியும் - அதனைச் செய்து முடிக்குந் தன்வலியையும்—மாற்றான் வலியும் - அதனை விலக்கலுறும் மாற்றான்வலியையும்—துணை வலியும் - இருவர்க்குந் துணையாவார் வலியையும்—தூக்கிச் செயல் - சீர்தூக்கித் தன்வலிமிகுமாயின் அவ்வினையைச் செய்க. எ – று.

இந்நால்வகைவலியுள் வினைவலி அரண்முற்றலும் கோடலும் முதலிய தொழிலானும், ஏனைய மூவகையாற்றலானுங் கூறுபடுத்துத் தூக்கப்படும். தன்வலி மிகவின்கட் செயகவென்ற விதியால், தோற்றல் ஒருதலையாய குறைவின்கண்ணும் வேறல் ஐயமாய ஒப்பின்கண்ணும் ஒழிகவென்பது பெற்றம். (க)

சஎஉ. ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச் செல்வார்க்குச் செல்லாத தில். உ.

இ – ள். ஒல்வது அறிவது அறிந்து - தமக்கியலும் வினையையும் அதற்கறிய வேண்டுவதாய வலியையும அறிந்து—அதன்கண் தங்கிச் செல்வார்க்கு - எப்பொழுதும் மனமொழிமெயகளே அதன்கண்வைத்துப் பகைமேற்செல்லும் அரசர்க்கு—செல்லாதது இல்—முடியாதபொருளில்லை. எ – று.

ஒல்வதெனவே வினைவலி முதலாய மூன்றுமடங்குதலின், ஈண்டறிவதென்றது துணைவலியேயாயிற்று. எல்லாப்பொருளுமெய்துவரென்பதாம். இவையிரண்டுபாட்டானும் வலியின்பகுதியும் அஃதறிந்து மேற்செல்வாரெய்தும் பயனும் கூறப்பட்டன. (உ)

சஎஊ. உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி யிடைக்கண் முரிந்தார் பலர். ஊ.

இ – ள். உடைத் தம் வலி அறியார் - கருத்தாவாதலையுடைய தம்வலியினளவறியாதே—ஊக்கத்தின் ஊக்கி - மனவெழுச்சியாற் தம்மின்வலியாரோடு வினைசெய்தலைத் தொடங்கி—இடைக்கண் முரிந்தார் பலர் - அவர் அடர்த்தலான் அது செய்து முடிக்கப்பெறுது இடையே கெட்டவரசர் உலகத்துப் பலர். எ – று.

உடையவென்பது ஆவாய்நின்றமையின், செயப்படுபொருள் வருவிக்கபபட்டது. மூவகையாற்றலுள்ளுஞ் சிறப்புடைய அறிவுடையார் சிலராதலின் மூரிந்தார் பலரென்றார். அதனுல் தம்வலியறிந்தே தொடங்குகவென்பது எஞ்சிநின்றது. (ங)

சஎச. அமைந்தாங் கொழுகா னளவதியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும். ச.

இ - ள். ஆங்கு அமைந்து ஒழுகான் - அயல்வேந்தரோடு பொருந்தியொழுகுவதுஞ் செயயாது—அளவு அதியான் - தன் வலியளவறிவதுஞ்செயயாது—தன்னை வியந்தான் - தன்னை வியந்த அவரோடு பகைத்தவரசன்—விரைந்து கெடும்-விரையக்கெடும். எ - று.

காரியத்தைக் காரணமாக உபசரித்து, வியந்தானென்றார். விரையவென்பது திரிந்து நின்றது. நட்பாயொழுகுதல், வலியறிந்து பகைத்தலென்னுமிரண்டனுள் ஒன்றன்றே அயல்வேந்தரோடு செயற்பாலது, இவையன்றித் தான மெலியனுய்வைத்து அவரோடு பகைகொண்டானுக்கு ஒருபொழுதும் நிலையின்மையின், விரைந்து கெடுமென்றார். இவையிரண்டுபாட்டானும் தன்வலியறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது. (ச)

சஎஙி. பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின். ஙி.

இ - ள். பீலி பெய் சாகாடும் அச்சு இறும் - பீலியேற்றிய சகடமும் அச்சுமுறியும்,—அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்-ஆப் பீலியை அது பொறுக்குமளவன்றி மிகுத்தேற்றின். எ - று.

உம்மை சாகாட்டது வலிச்சிறப்பேயன்றிப் பீலியது நொய்மைச்சிறப்புந்தோன்ற நின்றது. இறுமென்னுஞ்சினைவினை முதன்மேனின்றது. எளியரென்று பலரோடு பகைகொள்வான் தான் வலியனேயாயினும் அவர் தொக்கவழி வலியழியுமென்னும் பொருடோன்ற நின்றமையின், இது.பிறிதுமொழிதலென்னுமலங்காரம்: இதனை நுவலாதுவற்சியென்பாரும் ஒட்டென்பாருமூளர். ஒருவன் தொகுவார்பலரோடு பகைகொள்ளற்கவென்றமையின், இதனுன் மாற்றன் வலியும் அவன்றுணைவலியும் அறிடாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது. (ஙி)

சஎ்சு. நுனிக்கொம்ப ரேறினு ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்.

இ - ள். கொம்பர் தூனி எறினூர் அஃது இறந்து ஊக்கின்-ஒரு மரக்கோட்டினது தூனிக்கண்ணேயேறிநின்றூர் தம்மூக்கத்தால் அவ்வளவினைக் கடந்து மேலுமேறவுக்குவராயின,—உயிரகு இறுதியாகி விடும் - அவ்வூக்கம் அவருயிர்க்கு இறுதியாய முடியும். எ - று.

தூனிக்கொம்பரென்பது கடைக்சணென்பதுபோலப் பின்மு னுஞ்சுதொக்க ஆறும் வேறறுமைத்தொகை. பன்மை அறிவின் மைபற்றி இழித்தறகணவந்தது. இறுதிகதேதுவாவதனை இறுதி யென்றூர். பகைமேற்செல்வான்றெடங்கித் தன்னூற் செல்லலாம ளவுஞ் சென்று நின்றூன் பின அவ்வளவினிலலாது மனவெழுச்சி யாண்மேலுஞ் செல்லுமாயின், அவ்வெழுச்சி வினைமுடிவிற்கேது வாகாது அவனுயிர்முடிவிறகேதுவாமெனனும் பொருடோனறநின் றமையின, இதுவும் மேலையலங்காரம். அளவறிநதுநிறறல்வேண்டு மென்றமையின, இதனுல் வினைவலியறியாவழிபபமை இழுக்குக் கூறபபட்டது. (சு)

சுஎஉ. ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி. எ.

இ - ள். ஆற்றின் அளவு அறிந்து ஈக - ஈயுநெறியாலே தமக் குள்ள பொருளினெல்லையையறிநது அதறகேறபவீக;—அது பொ ருள் போற்றி வழங்கும் நெறி - அங்ஙனமீதல் பொருளைப் பேணி க்கொண்டொழுகும் நெறியாம். எ – று.

ஈயுநெறி மேல் இறைமாட்சியுள் வகுத்தலும் வல்லதரசு என் புழி உரைத்தாம். * எல்லைக்கேறபவீதலாவது ஒனறுனவெல்லையை ஞானகுகூறுக்கி, அவற்றுள் இரண்டனைத் தன்செலவாக்கி, ஒனை றனை மேல் இடர்வருதுழி அது நீக்குதற்பொருட்டு வைப்பாக்கி, ஞனறொன்றனைமீதல்: பிறரும் "வருவாயுட்கால்வழங்கி வாழ தல்" † என்றூர். பேணிக்கொண்டொழுகுதல் ஒருவரோடு கடபி லாத அதனைத் தம்மோடு கட்புண்டாக்கிக்கொண்டொழுகுதல். முத லிறசெலவு சுருங்கிற பொருள் ஒருகாலும் நீங்காதென்பதாம். (எ)

சுஎஅ. ஆகா தளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. அ.

---

* ஈஅநி–ம் சூறஞரையிற்காண்க.

† திரிகடுகம், உக.—வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவா யிப்பச்—செயதவை நாடாச் சிறப்புடைமை - யெயதப்—பலநாடி நல்லவை கறறலிம்மூன்று—நலமாட்சி நல்லவர் கோள.

இ - ள். ஆகு ஆறு அளவு இட்டிதாயினும் சேமி இல்லை - அரசர்க்குப பொருள்வருகின்ற நெறியளவு சிறிதாயிற்றாயினும் அதனைறகேடிலலையாம்,—போகு ஆறு அகலாக்கடை-போகின்ற நெறியளவு அதனிற்பெருகாதாயின. எ - று.

இட்டிதெனவும் அகலாதெனவும் வந்தபண்பின்றொழில்கள் பொருண்மேனின்றன. பொருளென்பது அதிகாரத்தான் வருவித்து, அளவென்பது பின்னுங்கூட்டி உரைக்கப்பட்டன. முதலுஞ் செலவுந் தம்முளொப்பினுங் கேடில்லையென்பதாம். (அ)

சஎகூ. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றுக் கெடும். கூ.

இ - ள். அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை - தனக்குள்ள பொருளினெல்லையையறிந்து அதறகேற்ப வாழமாட்டாதான வாழகைகள்—உளபோல இல்லாகித் தோன்றுக் கெடும் - உள்ளன போலத் தோனறி மெயம்மையான இல்லையாயப் பின்பு அத்தோற றமுமின்றிக் கெட்டுவிடும். எ — று.

அவ்வெல்லைக்கேற்ப வாழ்தலாவது அதனிற் சுருங்கக் கூடாதாயின் ஒக்கவாயினும் ஈததுந தியத்தும வாழ்தல். தொடக்கத்திற கேடு வெளிபபடாமையின், உளபோலத்தோன்றியென்றா. முதலிறசெலவு மிக்கால் வருமேதங் கூறியவாறு. (கூ)

சஅ0. உளவரை தூக்காத வொப்புர வாண்மை !
வளவரை வல்லைக் கெடும். க0.

இ — ள். உள வரை தூக்காத ஒப்புரவு ஆணமை - தனக்குளளவளவு தூக்காமைக்கேதுவாய ஒப்புரவாண்மையால்—வளவரை வலலைக் கெடும் - ஒருவன் செலவத்தினெல்லை விரையக கெடும். எ — று.

ஒபபுரவேயாயினும் மிகலாகா தென்றமையான், இதுவுமது. இவைநான்குபாட்டானும் மூவகையாற்றலுட் பெருமையின் பகுதி யாய பொருளவலியறிதல் சிறபபுநோக்கி வகுத்துககூறபபடடது.

சகூ - ம் அதி.—காலமறிதல்.

அஃதாவது வலியான் மிகுதியுடையனுயப பகைமேற்சேற றுறற அரசன் அச்செலகிறகேற்ற காலத்தினையறிதல். அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.

சஅக. பகல்வெல்லுங்கூகையைக்காக்கையிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. க.

இ - ள். கூகையைக் காக்கை பகல் வெல்லும் - தன்னின் வலிதாய கூகையைக் காக்கை பகற்பொழுதின்கண் வெல்லா நிற கும்,—இகல்வெல்லும் வேந்தர்க்குப் பொழுது வேண்டும் - ஆத லால் பகைவரதிகலை வெல்லக் கருதுமரசர்க்கு அதற்கேற்ற காலம் இன்றியமையாது. எ – று.

எடுத்துக்காட்டுவமை காலமல்லாவழி வலியாற் பயனில்லை யென்பது விளக்கி நின்றது. இனிக் காலமாவது வெம்மையுங் குளி ர்ச்சியுந் தம்முளொத்து நோய செய்யாது தண்ணீரும் உணவும் முதலியவுடைத்தாயத் தானே வருந்தாது செல்லுமியல்பினதாம். இதனுற் காலத்தது சிறப்புக் கூறப்பட்டது. (க)

சஅ௨. பருவத்தோ டொட்ட வொழுக நிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு. உ.

இ - ள். பருவத்தோடு ஒட்ட ஒழுகல் - அரசன் காலத்தோடு பொருந்த வினைசெயதொழுகுதல்—திருவினைத் தீராமை ஆர்க் கும கயிறு - ஒருவர்கண்ணும் நில்லாது நீங்குஞ் செல்வத்தைத் தனகணீங்காமற் பிணிக்குங்கயிறும். எ - று.

காலத்தோடு பொருந்துதல் காலந்தப்பாமற் செய்தல். தீரா மையென்றதனுல், தீர்தன்மாலியதென்பது பெறறும். வினை வாய தது வருதலான், அதனினுகுஞ் செல்வம் எஞ்ஞான்றும் நீங்கா தென்பதாம். (உ)

சஅஙு. அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின். ங.

இ - ள். அருவினை என்ப உளவோ - அரசராற செயதற்கரிய வினைகளென்று சொல்லப்படுவன உளவோ,—கருவியான் காலம் அறிநது செயின் - அவற்றை முடித்தற்காங்கருவிகளுடனே செய தறகாங்காலம அறிநது செயவராயின். எ – று.

கருவிகளாவன மூவகையாற்றலும் நால்வகையுபாயங்களு மாம் அவை உளவாயவழியுங் காலம் வேண்டுமென்பதறிவித்தற்கு, கருவியாலென்றார். எல்லாவினையும் எளிதின்முடியுமென்பதாம.

சஅச. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின். ச.

இ - ள். ஞாலம் கருதினுங் கைகூடும்—ஒருவன் ஞாலமுழுது ந்தானே யாளக் கருதினுமையினும் அஃது அவன்கையகத்ததாம்,—காலம் கருதி இடத்தான் செயின் - அதற்குச் செயலும் வினையைக் காலமறிந்து இடத்தோடு பொருந்தச் செயவனையின். எ - று.

இடத்தானென்பதற்கு மேற்கருவியானென்பதற்கு உரைத் தாங்குரைக்க. கைகூடாதனவும் கைகூடுமென்பதாம். இவை மூன் றுபாட்டானுங் காலமறிதற்பயன் கூறப்பட்டது. (ச)

சஅடு. காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர். டு.

இ - ள். கலங்காது ஞாலம் கருதுபவர் — தப்பாது ஞாலமெ ல்லாங் கொள்ளக்கருதுமரசர்—காலம் கருதி இருப்பர் - தம் வலி மிகுமாயினும் அது கருதாது அதற்கேற்ற காலத்தையே கருதி அதுவருந்துணையும் பகைமேற் செல்லார். எ - று.

தப்பாமை கருதியவழியே கொள்ளுதல். வலிமிகுதி காலங் கருதி யென்றதனாற் பெறரும். அது கருதாது செல்லின் இருவ கைப் பெருமையுந் தேயந்து வருத்தமுறுமுவராகலின், இருப்ப ரென்றார். இருத்தலாவது நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டலென்னும் அறுவகைக்குணங்களுள் மேற்செலவிறகு மாறுயது. இதனாற் காலம் வாராவழிச் செய்வது கூறபபட்டது. (டு)

சஅசு. ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்/
தாக்கற்குப் பேருந் தகைத்து. சுூ. /

இ — ள். ஊக்கம் உடையான் ஒடுக்கம் - வலிமிகுதியுடைய வரசன் பகைமேற் செல்லாது காலம் பார்த்திருக்கின்ற இருப்பு— பொரு தகர் தாக்கற்குப் பேரும் தகைத்து — பொருகின்ற தகா தன் பகை கெடப் பாய்தற்பொருட்டுப் பின்னே கால்வாங்கு தன்மைத்து. எ - று.

உவமைக்கட்டாக்கற்கென்றதனால், பொருளினும் வென்றி யெய்தற்பொருட்டென்பது கொள்க. இதனால அவவிருப்பின் சிறப்புக் கூறப்பட்டது. (சு)

சஅள. பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர். எ.

இ - ள். ஒள்ளியவர் — அறிவுடையவரசர்—ஆங்கே பொள ளெனப புறம்வேராார் — பகைவர் மிகைசெயத பொழுதே அவரறி

யபபுறத்து வெகுளார்,—காலம் பார்த்து உள் வேர்ப்பர் - தாம் அவரை வெல்லுதற்கேற்ற காலத்தினையறிந்து அது வருந்துணையும உள்ளே வெகுள்வர். எ - று.

பொள்ளெனவென்பது குறிப்புமொழி. வேரார் வேர்ப்பரெனக் காரணத்தைக் காரியமாகவுபசரித்தார். அறிய வெகுண்டுழித் தமமைக காபபராகலிற் புறம்வேராரென்றும், வெகுளியொழிந்து ழிப பின்னும் மிகை செயயாமலடக்குதல் கூடாமையின உள வேர்பபரென்றுங் கூறினர். (எ)

சஅஅ. செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை காணிற் கிழக்காந் தலை. அ.

இ - ள். செறுநரைக் காணின் சுமக்க - தாம் வெல்லக் கருதிய வரசா பகைவருக்கு இறுதிக்காலம் வருந்துணையும் அவரைக் கணடாறபணிக;—இறுவரைகாணின் தலை கிழக்காம் - பணியவே அக காலம வநதிறும்வழி அவர் தகைவின்றி யிறுவர். எ - று.

பகைமையொழியும் வகை மிகவுந தாழ்கவென்பார் சுமக்க வெனறும, அங்ஙனந் தாழவே அவர் தம்மைக காத்தலிகழவராக லிற றப்பாமறகெடுவரென்பார் அவாதலே கிழாமென்றுங கூறினார். தலைமேறகொண்டதொருபொருளைத் தளரங்கால அது தன றலைகீழாக விழுமாகலின், அவவியலபு பெறபபடடது. இவையிரணடுபாட்டானும இருக்கும்வழிப் பகைமை தோன்றுமலிருகக வென்பது கூறப்படடது. (அ)

சஅசு. எய்தற் கரிய தியைந்தக்கா லங்கிலேயே செய்தற் கரிய செயல். கூ.

இ - ள். எயதறகு அரியது இயைந்தக்கால் — பகையை வெலலக கருதுமரசர் தம்மாலெயதுதற்கரிய காலம் வநதுகூடியககால்,—அஙகிலேயே செயதற்கு அரிய செயல் — அது கழிவதறகு முனபே அது கூடாவழித் தம்மாற செயதற்கரிய வினைகளைச செயக. எ - று.

ஆறறன்முதலியவற்றுற் செயதுகொள்ளப்படாமையின் எய்தறகரியதென்றும, அது தானேவநதியைதல் அரிதாகலின் இயைநதகாலென்றும, இயைந்தவழிப பின்னில்லாதோடுதலின் அஙகிலேயேயென்றும, அது பெருவழிச் செயயப்படாமையிற செயதறகரியவெனறுங் கூறினர். இதனால் காலம் வந்துழி வினைந்து செயக வெனபது கூறபபட்டது. (க)

சகூ0. தொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. க0.

இ - ள். கூம்பும் பருவத்துக் கொக்கு ஒக்க - வினைமேற செல்லாதிருங்குங் காலத்துக் கொக்கிருக்குமாறுபோல இருக்க,—மறுச் சீர்த்த இடத்து அதன்குத்து ஒக்க - மறைச செல்லுங காலம வாயத்தவழி அது செயது முடிக்குமாறுபோலத தப்பாமற செயதுமுடிகக. எ - று.

மீனகோடறகிருக்கும்வழி அது வற்தெய்துந்துணையும் முன்னறிந்து தபபாமற பொருட்டு உயிரில்லதுபோன்றிருகுமாகலானும், எய்தியவழிப் பின்றபபுவதறகுமுன்பே விரைந்து குத்துமாகலானும், இருப்பிற்குஞ் செயலிற்குங் கொக்கே உவமையாயிறறு. கொககொக்கவென்னுராயினும் அது கூம்புமாறுபோலக் கூமபுக வென்றும், குத்தொக்க வென்னுராயினும் அது குத்துமாறுபோலக குத்துகவென்று முரைக்கப்படும், இது தொழிலுவமமாகலின. உவமைமுகத்தால் இருபபிற்குஞ் செயலிற்கும் இலக்கணங் கூறிய வாருயிறறு. (க0)

நோ ம் அதி.—இடனறிதல்.

அஃதாவது வலியுங் காலமுமறிந்து பகைமேற் செலவான தான் வெலலுதறகேறற நிலத்தினையறிதல். அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

சகூக. தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க மூற்று
மிடங்கண்ட பின்னல் லது. க.

இ – ள். மூற்றம இடம் கண்டபின்னல்லது—பகைவரை மூறறுதறகாவதோரிடம் பெறறபின்னல்லது—எவ்வினையும் தொடங்கற்க - அவர்மாட்டு யாதொருவினையையுங தொடங்காதொழிக;—எள்ளற்க - அவரைச் சிறியரெனறிகழாதொழிக. எ – று.

மூற்றுதல் வளைத்தல். அதற்காமிடமாவது வாயில்களானும் நூழைகளானும் அவர் புகலொடு போக்கொழியும்வகை அரணினைச் சூழ்ந்து ஒன்றற்கொன்று துணையாயத் தம்முணலிவிலாத பலபடையிருப்பிறகும் மதிலும் அகழுமுதலிய வரண்செயயபபட்ட அரசிருப்பிற்கு மேற்ற நிலக்கிடக்கையும் நீருமுடையது. அது பெற்றால் இரண்டுஞ்செயகவெனபதாம். (ச)

சகூஉ. மூரண்சேர்ந்த மொய்ம்பினவர்க்குமரண்சேர்ந்தா
மாக்கம் பலவுந் தரும். உ.

இ - ள். மூரண் சேர்ந்த மொய்ம்பினவர்க்கும் - மாறுபாட்டோடு கூடிய வலியினையுடையார்க்கும்—அரண் சேர்ந்து ஆம் ஆக்கம் பலவும் தரும் - அரணைச்சேர்ந்தாகின்றவாக்கம் பலபயன் களையுங்கொடுக்கும். எ - று.

மாறுபாடாவது ஞாலம் பொதுவெனப் பொருவரசர் மேற்சென்றவரசர் மேற்றுயிற்று. உம்மை சிறப்பும்மை. அரண்சேராதாமாக்கமுமுண்மையின், ஈண்டாக்கம் விசேடிக்கப்பட்டது. ஆக்கமென்றது அதற்கேதுவாய முற்றினை. அது கொடுக்கும் பயன்களாவன பகைவராற்றமக்கு நலிவின்மையும், தாம் நிலைபெற்று நின்று அவரை நலிதலும் முதலாயின. (உ)

சகூஙு. ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின். ங.

இ - ள். ஆற்றாரும் ஆற்றி அடுப - வலியரல்லாதாரும் வலியராய் வெல்வர்,—இடன் அறிந்து போற்றிப் போற்றார்கண் செயின் - அதற்கேற்றவிடத்தினையறிந்து தம்மைக் காத்துப் பகைவர்மாட்டு வினை செயவராயின். எ - று.

வினையென்பதனும் தம்மையென்பதனும் அவாய்நிலையான் வந்தன. காத்தல் பகைவரான் நலிவு வாராமல் அரணினும் படையானுங் காத்தல். இவ்வாற்றான் வினைசெய்வராயின் மேற்சொல்லிய வலியின்றியும் வெல்வரென்பதாம். (ங)

சகூச. எண்ணியா ரெண்ணமிழப்ப ரிடனறிந்து
தன்னியார் தன்னிச் செயின். ச.

இ - ள். இடன் அறிந்து தன்னியார் - தாம் வினைசெய்தற்கேற்றவிடத்தினை யறிந்து சென்ற வரசர்—தன்னிச் செயின் - அரணைப் பொருந்தினின்று அதனைச் செய்வராயின்;—எண்ணியார் எண்ணம் இழப்பர் - அவரை வெல்வதாக வெண்ணியிருந்த பகைவர் அவ்வெண்ணத்தினை யிழப்பர். எ - று.

அரணென்பது அவாய்நிலையான் வந்தது. எண்ணமென்றது எண்ணப்பட்ட தம்வெற்றியை. அதனை யிழப்பரென்றார், அவர் வினை செய்யாமற் றம்மைக்காத்தமையின். இதனால் அவர் பகைவர்

தோற்டரென்பதாயிற்று. இவை நான்குபாட்டானும் பகைவரரணின்புறத்திறுப்பார் அதற்காமிடமறிதல் கூறப்பட்டது. (ச)

சகூடு. நெடும்புனலுள் வெல்லு முதலே யடும்புனலீங்கினதனைப் பிற. இ.

இ – ள். முதலே நெடும்புனலுள் (பிற) வெல்லும் - முதலே ஆழமுடைய நீரின்கணையிற் பிறவற்றையெல்லாந் தான் வெல்லாநிற்கும்,—புனலின் நீங்கின் அதனைப் பிற அடும் - அப்புனலினீங்குமாயின் அதனைப் பிறவெல்லாம் வெல்லாநிற்கும். எ - று.

எனவே, எல்லாருந் தந்நிலத்து வலியரென்பது கூறப்பட்டது. பிறவென்பது முன்னுங் கூட்டப்பட்டது. நிலைப்படா நீரின்கட் பிறவெல்லாம் நிற்றலாற்றுமையின் அவையெல்லாம் முதலைக்களியவாம் அவையியங்குதற்குரிய நிலத்தின்கண் அஃதியங்கலாற்றுமையின் அஃதவற்றிற்கெல்லா மெளிதாமென்றது, மேற்செல்லும் அரசர் பகைவர் நிற்றலாற்றுவிடனறிந்து செல்வராயின் அவர் தமக்களியராவரன்றித் தாநிற்கலாற்றுவிடத்துச் செல்வராயின் அவர்க்களியராவரென்னும் பொருடோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதலென்னுமலங்காரம். அவரை அவர் நிற்றலாற்றுவிடத்துச் சென்று வெல்கவென்பதாம். (ரு)

சகூசு. கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு நாவாயு மோடா நிலத்து. கூ.

இ - ள். கால் வல் நெடுந்தேர் கடல் ஓடா - நிலத்தின்கணேடுங் கால் வலியநெடிய தேர்கள் கடலின்கணேடமாட்டா,—கடல் ஓடும் நாவாயும் நிலத்து ஓடா - இனி அக்கடலின்கணேடும் நாவாய்கடாமும் நிலத்தின்கணேடமாட்டா. எ - று.

கடலோடாவென்ற மறுதலையடையான் நிலத்தோடு மென்பது வருவிக்கப்பட்டது. கால்வனெடுந்தேரென்பது ஓடுதற்கேற்றகாலும் பெருமையமுடையவாயினுமென்பது படநின்றது. மேற்சென்றூர் பகைவரிடங்களே யறிந்து அவற்றிற்கேற்ற கருவிகளான் வினைசெய்கவென்பது தோன்றநின்றமையின், இதுவும் மேலையலங்காரமாயிற்று. (கூ)

சகூள. அஞ்சாமை யல்லாற்றுணைவேண்டாவெஞ்சாமை யெண்ணி யிடத்தாற் செயின். எ.

இ – ள். எஞ்சாமை எண்ணி இடத்தான செயின் – பகையிடத்து வினைசெயயுந் திறங்களெயெல்லாம் ஒழியாதெண்ணி அவறை அரசர் இடத்தோடு பொருநதச் செயவராயின;—அஞ்சாமை அல்லால் துணை வேண்டா – அச்செயற்குத தருதிண்மையல்லது பிறிதொருதுணை வேண்டுவதில்லை. எ – று.

திண்ணியராய நின்று செயது முடித்தலே வேண்டுவதல்லது துணைவேணடாவென்றார், அவ்வினை தவறுதறகேதுவினமையின இவை மூன்றுபாட்டானும் வினை செய்தறகாமிடனறிதல் கூறப பட்டது. (எ)

சகூஅ. சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா
னூக்க மழிந்து விடும். அ.

இ – ள். உறுபடையான் – பெரும்படையுடையவரசன்—சிறு படையான செல் இடம் சேரின் – ஏனைச்சிறுபடையுடையானை யழிதறல் கருதி அவன் புகலிச் சென்று சாருமாயின,—ஊகக மழிந்துவிடும – அவனுற் றன்பெருமை யழியும். எ – று.

செல்லிடம் அவனுக்குச் செல்லுமிடம். அழிந்துவிடுமென பது எழுநதிருக்கு மென்றுற்போல ஒருசொல். ஊக்கத்தினழிவு டையான்மேலேற்றப்பட்டது. தன்படைபபெருமை நோககி இடனுக்காது செல்வனுயின், அஃது அபபடைக் கொருங்கு சென்று வினைசெயலாகாமையானுகப பயிற்சியின்மையானுக அப பெருமையாற் பயனினறித் தானழிந்துவிடுமென்பதாம். (அ)

சகூகூ. சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது. கூ.

இ – ள். சிறை நலனும் சீரும் இலர் எனினும் – அரணழித்தற் கருமையும் பெருமையாகிய வாற்றலுமுடையரல்லராயினும்,—மாந்தா உறை நிலத்தோடு ஒட்டல் அரிது – வினைக்குரிய மாந்தரை அவருறைகின்ற நிலத்தின்கட்சென்று தாக்குதலரிது. எ – று.

நிலத்தோடென்பது வேற்றுமை மயக்கம். ஆண்மையுடையாரைச் சிறுமை நோக்கி இருப்பின்கட் சென்று தாக்கின் அவர் அது விட்டுப்போதற் றுணிவினரன்றிச் சாதற்றுணிவினராவர்; ஆகவே, அவர்க்குப் பெரும்படையுடையுமென்பதாம். (கூ)

மி00. காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு. க0.

இ - ள். கண் அஞ்சா வேலாள் முகத்த களிறு - பாகர்க்கட ங்காவுமாய் வேலாட்களைக் கோதத கோட்டவுமாய சளிறுகளை— கால் ஆழ் களரின நரி அடும் - அவை காலாழுமியல்பிறழுய சேறமு நிலத்துப்பட்டுழி நரி கொல்லும். எ - று.

முகம் ஆகுபெயர். ஆண்மையும பெருமையுமுடையாரும் தமக கேலாநிலத்துச் செல்லின் அவறருஞ் பயனின்றி மிகவுமெளியராம அழிவரென்பது தோன்ற நின்றமையின், இதுவும் அவ்வலங்காரம. வேலாழமுகத்தவென்று பாடமோதுவாருமுளர் வேறபடை சூளி த்த முகத்தவாயின் அதுவும் நரியடிதற்கேதுவாய் முடிதலின, அது பாடமன்மையறிக. இவை மூன்றுபாட்டானும் பகைவரைச் சாரா காவிடனும் சார்ந்துழிப படுமிழுகளுங் கூறப்பட்டன. (கo)

நிகம் அதி.—தெரிந்துதெளிதல்.

அஃதாவது அமைச்சர் முதலாயினுரைப பிறப்புக் குணம் அறிவென்பனவறறையுஞ் செயலையுங் காட்சி கருத்து ஆகமமென் னும அளவைகளானுராயநது தெளிதல். வலிமுதன் மூனறு மறி நது பகைமேறசெல்வானுக்குத் தானே வினையுறறுச் செயதறபொ ருட்டும் அறைபோகாமறபொருட்டும் இது வேண்டுதலின், அவற நின்பின் வைக்கப்பட்டது.

நிoக. அறம்பொருளின்ப முயிரச்ச நான்கின் நிறந்தெரிந்து தேறப் படும். க.

இ - ள். அறம் பொருள் இன்பம் உயிரச்சம் - அரசனுற்றெ ளியப்படுவானெருவன், அறமும் பொருளும இன்பமும் உயிர்ப பொருட்டான்வருமச்சமுமென்னும்—நான்கின் திறம் தெரிந்து தேறப்படும் - உபதை * நான்கின்றிறத்தான் மனவியல்பாராயந தால் பின்பு தெளியபபடும். எ - று.

அவற்றுள், அறவுபதையாவது புரோகிதரையும் அறவோரை யும் விட்டு, அவரால் இவ்வரசன் அறவோனன்மையின் இவனேப போக்கி அறனுமுரிமையு முடையானெருவனே வைத்தறகெண்ணி னம் இதுதான் யாவர்க்கு மியைந்தது நினகருத்தெனனேயெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது சேனைத்தலை வனேயும் அவனேடியைந்தாரையும் விடடு, அவரான் இவ்வரசன் இவறன்மாலையனுகலின் இவனேப் போக்கிக் கொடையுமுரிமையு

* உபதை—சோதனை.

மூடையாஞெருவனே வைத்தற்கெண்ணினம் இதுதான் யாவர்க்கு மியைந்தது நின்கருத்தென்னேயெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இன்பவுபதையாவது தொன்றுதொட்டு * உரிமையோடு பயின்றுளோர் தவமுதமகளேவிட்டு, அவளால் உரிமையுள இன்னுள் நின்னேக்கண்டு வருத்தமுற்றுக் கூடுவிக்கவேண்டுமென்று என்னேவிடுத்தாள் அவளேக கூடுவையாயின் நினக்குப் பேரின்பமேயன்றிப் பெரும்பொருளும் கைகூடுமெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். அச்சவுபதையாவது ஒரு நிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சனுல் ஏனேயோரை அவனில்லின்கணழைப்பித்து, இவர் அறை போவானெண்ணற்குக் குழீஇயினுரென்று தான் காவல்செயது, ஒருவனுல் இவ்வரசன் நம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின் அதனே ஈமுற்படச்செய்து நமக்கினியவரசனெருவனே வைத்தல் ஈண்டை யாவர்க்கு மியைந்தது நின்கருத்தென்னேயெனச் சூளுற வோடு சொல்லுவித்தல். இந்நான்கினுந் திரிபிலனுயவழி எதிர்காலத்துந் திரிபிலனெனக் கருத்தளவையாற் றெளியப்படுமென்பதாம். இவ்வடநூற்பொருண்மையையுட்கொண்டு இவரோதியதறியாது பிறரெல்லாம் இதனே உயிரெச்சமெனப் பாடந்திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே யுரைத்தார். (க)

நிoஉ. குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு நாணுடையான் கட்டே தெளிவு. உ.

இ - ள். குடிப் பிறந்து - உயர்ந்த குடியிற் பிறந்து—குற்றத்தின் நீங்கி - குற்றங்களினின்று நீங்கி—வடுப் பரியும் நாண் உடையான் கட்டே தெளிவு-நமக்கு வடு வருங்கொலென்றஞ்சாநிற்கும் நாணுடையவன் கண்ணதே அரசனது தெளிவு. எ - று.

குற்றங்களாவன மேலரசனுக்குச் சொல்லியவகையாறும், † மடி, மறப்பு, பிழைப்பென் றிவைமுதலாயவுமாம். நாண் இழிதொழில்களின் மனஞ்செல்லாமை. இவை பெரும்பான்மையும் தக்கோர்வாய்க் கேட்டலாகிய ஆகமவளவையாற்றெரிவன. இந்நான்குமுடையவனேயே தெளிகவென்பதாம். (உ)

நிoங. அரியகற் றூசற்றூர் கண்ணுந் தெரியுங்கா லின்மை யரிதே வெளிறு. ங.

இ — ள். அரிய கற்று ஆசு அற்றூர் கண்ணும் - கற்றற்கரிய நூல்களைக் கற்று மேற்சொல்லிய குற்றங்களற்றூர்மாட்டும்—தெரி

* உரிமை - அரசன்மனேவியர்.

† சங்க-சங்உ-ம் குறள்களிற்காண்க.

யுங்கால் வெளிறு இன்மை அரிது — நுண்ணிதாகவாராயுமிடத்து வெண்மையில்லாமை அரிது..எ — று.

வெண்மை அறியாமை; இஃது இவர்மாட்டுளதாவது மனத்தது நிலையாமையான் ஒரோவழியாகலின், தெரியுங்காலென்றார். காட்சியளவையாற்றெரிந்தால் அதுவுமில்லாதாரே தெளியப்படுவரென்பது குறிப்பெச்சம். இவ்வளவைகளான் இக்குணமுங் குற்றமுந்தெரிந்த குணமுடையாரைத் தெளிகவென்பது இவை மூன்று பாட்டானுங் கூறப்பட்டது. (ஈ)

நிoசு. குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல். சு.

இ — ள். குணம் நாடி — குணங்குற்றங்களுள் ஒன்றேயுடையார் உலகத்தின்மையின் ஒருவன் குணங்களேயாராய்ந்து,—குற்றமும் நாடி — வேண்டுங்குற்றங்களேயுமாராய்ந்து,—அவற்றுள் மிகை நாடி — பின் அவ்விருபகுதியுள்ளும் மிக்கவற்றையாராய்ந்து,—மிக்க கொளல் — அவனே அம்மிக்கவற்றானேயறிக. எ — று.

மிகையுடையவற்றை மிகையென்றார். அவையாவன தலைமையானுகப் பண்மையானுக உயர்ந்தன. அவற்றானறிதலாவது குணமிகுகதாயின் வேண்டுகுரியனென்றும், குற்றமிக்கதாயின் அல்லனென்றுமறிதல். குணமேயுடையார் உலகத்தரியராகலின், இவ்வகையாவரையுந் தெளிதலென்பது இதனுற் கூறப்பட்டது. (சு)

நிoரு. பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல். ரு.

இ — ள். பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் கட்டளைக்கல் — பிறப்புக் குணம் அறிவென்பனவற்றான் மக்களெய்துதும் பெருமைக்கும் மற்றைச்சிறுமைக்கும் உரைகல்லாவது—தத்தம் கருமமே — தாந்தாஞ்செய்யுங்கருமமே, பிறிதில்லை. எ — று.

இஃதேகதேசவுருவகம். மக்களது பெருமையுஞ் சிறுமையுந் தப்பாமலறியலுறுவார்க்குப் பிறகருவிகளுமுளவாயினும், மூடிந்த கருவி செயலென்பது தேற்றேகாரத்தாற்பெற்றும். இதனுற் குணங் குற்றங்கள் நாடற்குக் கருவி கூறப்பட்டது. (ரு)

நிoசூ. அற்றுரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணுர் பழி. சூ.

இ — ள். அற்றூரைத் தேறுதல் ஓம்புக - சுற்றமில்லாதாரைத் தெளிதலேயொழிக;—அவர் மறனுப பறனு இலா - அவர் உலகத் தோடு தொடர்பிலர்,—பழி நாணா—ஆகலாற் பழிச்கஞ்சார். எ - று.

பற்றிலரென்பதனுல் சுறறமென்பது வருவிக்கப்பட்டது. உலகத்தார் பழிப்பனவொழிதறகும புகழவன செயதறகுமேதுவா கிய உலகநடையியல்பு சுறறமில்லாதார்கரு இன்மையின, அவர் தெளியபபடாரெனபதாம். (சு)

நி0எ. காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாங் தரும். எ.

இ - ள். காதன்மை கந்தா அறிவு அறியார்த் தேறுதல் - அன் புடைமை பற்றுக்கோடாகத் தமக்கறியவேண்டுவன அறியாதா ரைத் தெளிதல்—பேதைமை எல்லாம் தரும் - அரசனுக்கு எல்லா வறியாமையையுங் கொடுக்கும். எ - று.

தன்னோடி அவரிடைநின்றவன்புபற்றி அரசன் அறிவிலார் மேல் விணையைவைப்பின், அஃது அவரறிவின்மையாற கெடிம, கெட்டால் அவர்க்குளதேயன்றி விணேக்குரியாரை அறியாமை, மேல்விளேவறியாமை முதலாக அவனுக்கு அறியாமை பலவுமுள வாமென்பதாம். (எ)

நி0அ. தேரான் பிறனேத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும். அ.

இ - ள். பிறனேத் தேரான் தெளிந்தான் - தன்னோடியைபு ளனல்லாதானேப் பிறப்புமுதலியவற்றனும் செயலானும் ஆரா யாது தெளிந்த அரசனுக்கு—வழிமுறை தீரா இடும்பை தரும - அத்தெளிவு தன்வழிமுறையினும் நீங்காத துன்பத்தைக் கொடுக் கும். எ — று.

இயைபு தன் குடியொடு கோடாமரபு. இதனுனே அதுவும் வேண்டுமென்பது பெற்றும். தெளிதல் அவன்கண்ணே விணேயை வைத்தல். அவ்விணே கெடிதலால் தன்குலத்துப் பிறந்தாரும் பகை வர்கைப்பட்டுக் கீழாய விடிவரென்பதாம். நான்கனுருபு விகாரத் தாற்றொக்கது. (அ)

நி0கூ. தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் பொருள். கூ.

இ - ள். யாரையும் தேராது தேறற்க-யாவரையும் ஆராயாது தெளியாதொழிக;—தோந்தபின் தேறும் பொருள் தேறுக - ஆராயாதபின் தெளியும்பொருட்களே ஐயுறுதொழிக. எ - று.

தேறற்கவென்ற பொதுமையான் ஒருவினைக்கண்ணுந் தெளியலாகாதென்பது பெற்றும். ஈண்டுத் தேறுகவென்றது தாற்பரியத்தால் ஐயுறவினது விலகினமேனின்றது. தேறுமபொருளென்றது அவரவராற்றற்கேற்ற வினைகள். பொருள் ஆகுபெயர். (கூ)

நெக0. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும் தீரா விடும்பை தரும். க0.

இ – ள். தேரான் தெளிவும் - அரசன் ஒருவனியாராய்ந்து தெளிதலும்—தெளிந்தான்கண் ஐயுறவும் - ஆராயாது தெளிந்தவனமாட்டு ஐயப்படுதலும் இவ்விரண்டும்—தீரா இடும்பை தரும-அவனுக்கு நீங்காத துன்பத்தைக் கொடுக்கும். எ – று.

வினை வைத்தபின் ஒருதவறு காணுதவைத்து ஐயுறுமாயின், அவனை அவனறிந்த இனி இது நில்லாதெனனுங்கருத்தான ஆவவினையை நெகிழ்த்துவிடும், அதுவேயனறிப் டகைவரால் எளிதிற பிரிக்கவும்படும், ஆகலாற தெளிந்தான்கண் ஐயுறவுமாகாதாயிறறு. தெளிவிற்கெல்லை கூறியவாறு. இவையைந்தபாட்டானும், தெளியபபடாதார் இவரென்பதனுஉம், அவரைத் தெளிந்தாறபடிமிழுகுமும், தெளிவிற்கெல்லையும கூறப்பட்டன. (க0)

நெடும் அதி.—தெரிந்துவினையாடல்.

அஃதாவது அத்தெளியப்பட்டாரை அவர் செய்யவலல வினைகளையறிந்து அவற்றின்கண்ணேயாளுஞதிறம். அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

நெகக. நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த தன்மையா னளப படும். கக.

இ - ள். நன்மையும் தீமையும் நாடி - அரசன் முதற்கண் ஒரு வினையைத் தன்கண்வைத்தால், அதன்கணவனவும் ஆகாதனவுமாய செயல்களையாராயந்தறிந்து—நலம் புரிந்த தன்மையான் - அவறறுள ஆவனவறறையே விரும்பிய வியல்பினையுடையான—ஆளபபடும - பின் அவனுறை சிறநதவினைகளிலேயாளப்படும். எ - று.

தன்னேயுரிமையறிதற்பொருட்டு அகம்புறங்கட்கு நடுவாய தோர்வினையை அரசன்றன்கண்வைத்தவழி அதன்கணஞ்செயல்க ளேயே செயதவன் பின்னும் அவ்வியல்பினைதல்பற்றி அகமாய வினைக்கண்ணேயாளப்படுவனென்பதாயிற்று. புரிந்தவென்ற இற நதகாலத்தான், முன்னுரிமையறிதற்பொருட்டு வைத்த வினையா தல் பெற்றும். (க)

திருக்குறள் - வாரி பெருக்கி வளம்படுத் தற்றவை யாராய்வான் செய்க வினை. உ.

இ - ள். வாரி பெருக்கி-பொருள் வருவாயில்களே விரியச்செ யுது—வளம் படுத்து - அப்பொருளாற் செல்வங்களே வளர்த்து—உறறவை ஆராயவான் - அவ்வாயில்கட்கும் பொருட்குஞ் செல்வ ங்கட்குமுற்ற இடையூறுகளே நாடோறுமாராயநது நீக்கவல்ல வன்—வினை செயக - அரசனுச்சு வினைசெயக. எ - று.

வாயில்களாவன மேல் இறைமாட்சியுள் இயற்றலும் * என் புழி யுரைத்தனவும், உழவு, பசுக்காவல், வாணிகமென்னும் வார்த் தையு † மாம். செல்வங்களாவன ஆண்டுப் பொருளுமின்பமுமாக உரைக்கப்பட்டன. இடையூறுகளாவன அரசன் வினைசெய்வார், சுறறத்தார், பகைவர், கள்வரென்றிவரான் வரு நலிவுகள். (உ)

திருக்குறள் - அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு நன்குடையான் கட்டே தெளிவு. ரு.

இ - ள். அனபு - அரசன மாட்டனபும்—அறிவு - அவனுக் காவனவறியுமறிவும்—தேற்றம் - அவை செயதற்கட்கலங்காமை யும்—அவாவின்மை - அவற்றுற் பொருள் கையுறறவழி அதன்மே லவாவின்மையுமாகிய—இந்நான்கும் நன்கு உடையான்கட்டே தெளிவு - இந்நான்கு குணங்களேயும் நிலேபெறவுடையான் மேலதே வினையைவிட்டிருக்குந் தெளிவு. எ - று.

இந்நான்கு நன்குடைமை இவன் செய்கின்ற வினைக்கண் பாதமாராயவேண்டுவதில்லேயென்று அரசன் தெளிதற்கேதுவாக லின, அவனே அதன் பிறப்பிடனுக்கிக்கூறினுர். இவைமூன்று பாட்டானும் ஆடற்குரியானதிலக்கணங் கூறப்பட்டது. (ரு)

திருக்குறள் - எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையா வேறுகு மாந்தர் பலர். ச. [ன்

* திருக்குறள் - ருஅரு. † வார்த்தை - விர்த்தி, தொழில்.

இ – ள். எனவகையான் தேறியக்கண்ணும் - எல்லாவகையானுமாராய்ந்து தெளிந்தது வினை வைத்தபினனும்—வினைவகையான் வேறுகும் மாந்தர் பலர் - அவ்வினையியல்பானே வேறுபடுமாந்தர் உலகத்துப பலர். எ – று.

கட்டியங்காரன் * போல அரசவின்பத்தினை வெஃகி விகாரப்படுவதல்லது அதனைக் குற்றமென்றெழிந்து தம்மியல்பினிற் பார் அரியராகலின், வேறுகுமாந்தர் பலரென்றார். வினை வைபப தற்குமுன் எல்லாக்குணங்களுமுடையராய வைத்தபின் விகாரபடுவாரை இடையாயதொருவினையை வைத்தறிந்து ஒழிக்கவென்பதாம். இதனுன் ஒருவகையாலொழிக்கப்படுவார் இவரென்பது கூறபபட்டது. (ச)

நிகரி. அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான் சிறந்தானென் றேவற்பாற் றன்று. நி.

இ – ள். அறிந்து ஆற்றிச் செயகிற்பாற்கு அல்லால் - செயமுபாயங்களையறிந்து செயலாணும இடையூறுகளாணும் வருந்துனபங்களைபபொறுத்து முடிவுசெயயவல்லானையல்லது—வினைதான சிறந்தான் எனறு ஏவற்பாறறன்று - வினைதான் இவன கமமாடடு அனபுடையனென்று பிறஞருவனையேவு மியல்புடைத்தனறு. எ – று.

செயகிறபாறகென்பது வேற்றுமைமயக்கம். அறிவாறறல்களாளல்லது அன்பான் முடியாதென இதனுல் வினையினதியல்பு கூறபபட்டது. (ரு)

நிகசு. செய்வானே நாடி வினைநாடிக் காலதோ டெய்த வுணர்ந்து செயல். சு.

இ - ள். செயவானே நாடி - முதற்கண்ணே செயவானதிறகணத்தையாராயநது,—வினை நாடி - பின செயயப்படும் வினையினதியல்பை யாராயநது,—காலத்தோடு எயத உணர்ந்து செயல் - பின் அவனையும் அதனையுங் காலததோடு படுத்துப பொருநதவறி நது அவனை அதனகணடகொச்செயக. எ - று.

செயவானதிலக்கணமும வினையினதியல்பும் மேலே கூறபபடடன. காலத்தோடெயதவுணாதலாவது இக்காலத்து இவ்விலகணமுடையான் செயயின் இவ்வியல்பிற்றுயவினை முடியுமென்று கூடடியுணர்தல். (சு)

* கட்டியங்காரன் சீவகசிநதாமணியிற் கூறபபடும் சச்சந்தனெனனும் அரசனுடைய மநதிரி.

நிகஎ. இதனை யிதனை யிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல். எ.

இ – ள். இதனை இதனுள் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து - இவ்வினையை இக்கருவியால் இவன் முடிக்கவல்லனெனக் கூறுப டுத்தாராய்ந்து,—அதனை அவன்கண் விடல் - மூன்றுந் தம்முளி யைந்தவழி அவ்வினையை அவன்கண்ணே விடுக. எ – று.

கருவி தானேவரும், பொருளும் முதலாயின. வினைமுதலும் கருவியும் வினையுந் தம்முளியைதலாவது ஒருொன்றேடு னேய விரண்டறகும் பொருத்தமுண்டாதல். விடுதல் அதற்கு அவனையு ரியனாக்குதல். (எ)

நிகஅ. வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல். அ.

இ – ள். வினைக்கு உரிமை நாடிய பின்றை - ஒருவனை அ சன் தன்வினைசெயதற்குரியனாகவாராய்ந்து தணிந்தால்,—அவனை அதறகு உரியனாகச் செயல் - பின்னவனை அதற்குரியனாமாறு உய ரசசெயச. எ – று.

உயரசசெயதலாவது அதனைத் தானே செயதுமுடிக்குமாறற லுடையனாக்குதல். அது செயயாகாலுங் கெடுமெனபது கருத்து.

நிகக. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்குந் திரு. கூ.

இ – ள். வினைக்கண் வினை உடையான் கேண்மை - எப்பொழு தாந தன்வினையின்கண்ணே முயறலையுடையான் அவ்வரிமையாற றனகுக் கேளாயொழுகுகின்ற தன்மையை—வேறாக நினைபபா னைத் திரு நீங்கும் - அது பொருதார்சொற்கேட்டு அரசன் மாறுப டக் கருதுமாயின், திருமகள் அவனைவிட்டு நீங்கும். எ – று.

கேளாயொழுகுகின்ற தன்மையாவது தான் பிறனை நில்லாது கேளிர்செயயுரிமையெல்லாஞ் செயதொழுகுதல். அவனை அவம திபபாகக் கொண்டு செறக்கருதுமாயிற் பின்னுருவருமுட்பட்டு முயலவாரில்லையாம், ஆகவே, தன்செல்வங்கெடுமென்பது கரு தது இராமாண்குபாடானும் ஆடற்குரியானையாஞ்திறங் கூற பபட்டது. (கூ)

நிக௦. நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு. க0.

இ - ள். வினை செய்வான் கோடாமை உலகு கோடாது - வினைசெயவான் கோடாதொழிய உலகு கோடாது,—மன்னன் நாடோறும் நாடுக - ஆதலால் அரசன் அவன்செயலை நாடோறு மாராயக. எ — று.

அஃதொன்றனையுமாராயவே அதன்வழித்தாய உலகமெல்லா மாராயந்தானும், அதனால் அவனுரிமை அழியாமற்றன்னுளளே யாராயந்து போதுகவென்பதாம். இதனுன் ஆண்டவழிச்செயவது கூறபபட்டது. (கo)

நெடும் அதி.—சுற்றந்தழால்.

அஃதாவது அரசன் தன்னிலேஞரைத் தன்னினீங்காமல் அணைத்தல். வினைசெயவாரைக் கூறி ஏனைச்சுறறங்கூறுகினமுராக லின், இது தொிந்துவினையாடலின்பின் வைக்கப்பட்டது.

நெஉக. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள. க.

இ - ள். பற்று அற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல் - ஒரு வன் செல்வந்தொலேந்து வறியனுயவழியும் விடாது தம்மோடு அவ னிடைப் பழைமையை எடுத்துக்கொண்டாடுமியல்புகள்—சுறறத் தார் கண்ணே உள - சுற்றத்தார்மாட்டே உளவாவன. எ - று.

சிறப்பும்மை வறியனுயவழிப் பாராட்டப்படாமை விளக்கி நின்றது. பழைமை பற்றறுக்காலத்துத் தமக்குச் செயத உபகா ரம். பிறரெல்லாம் அவன் பற்றற்றபொழுதே தாமும் அவனேடு பறறறுவராகலின், ஏகாரந் தேறறத்தின்கண் வநதது. இதனுல சுறறத்தது சிறப்புக் கூறபபட்டது. (க)

நெஉஉ. விருப்பறுச் சுற்ற மியையி னருப்பறு
வாக்கம் பலவுந் தரும். உ.

இ — ள். விருப்பு அறுச் சுற்றம் இயையின் - அன்பறுத சுற்றம் ஒருவற்கெயதுமாயின்,—அருப்பு அறு ஆக்கம் பலவும் தரும் - அஃது அவற்குக் கிலேத்தலறுத செல்வங்கள் பலவறறை யுங் கொடுக்கும். எ — று.

உடம்பகையினீக்குதற்கு விருப்பறுச்சுற்றமென்றும், தானே வளர்க்குமொருதலேயாய செல்வத்தினீக்குதற்கு அருப்பறுவாக்க மென்றும், விசேடித்தார். தொடைநோக்கி விகாரமாயிற்று. இயை

மினென்பது அதனதருமை விளக்கி நின்றது. ஆக்கமென்பது ஆகு பெயர். பலவுமென்றது அங்கங்களாறனையுநோக்கி. பலாகூடி வளராத்தலின், அவை மேன்மேற கினைக்குமென்பது கருத்து. (உ)

நிஉகூ. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று. கூ.

இ - ள். அளவளாவு இல்லாதான் வாழ்க்கை - அச்சுறறற் றோடு நெஞ்சுகலத்தலில்லாதவன் வாழ்க்கை—குள வளாக் கோடு இன்றி நீர் நிறைந்தற்று - குளப்பரபபுக் கரையின்றி நீர்நிறைந தாறபோலும. எ - று.

சுற்றத்தோடென்பது அதிகாரத்தான் வந்தது. நெஞ்சுகலபுத் தன்னளவும் அதனளவுமுசாவுதலான் வருவதாகலின். அளவளாவெனபது ஆகுபெயர். வாழக்கையென்றதனாலுஉம் அதறகேது வாய செல்வங்களே. நிறைதலென்னும் இடத்துநிசழபொருளிளருழில் இடத்தின்மேனின்றது. சுறறமில்லாதான் செல்வங்கள் தாங்குவாரினமையிற புறத்துப் போமெனபதாம். (கூ)

நிஉசு. சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான் பெற்றத்தாற் பெற்ற பயன். சு.

இ - ள். செல்வம் பெற்றத்தான் பெற்ற பயன் - செல்வம் பெற்றவதனால் ஒருவன் பெறற பயனுவது—சுற்றத்தான் தான சுறறபபட ஒழுகல் - தன்சுறறத்தால் தான் சூழபபடும்வகை அதனைத் தழீஇ யொழுகுதல். எ - று.

பெற்றவென்பதனுள் அகரமும் அதனுனென்பதனுள் அன் சாரியையும் தொடைநோக்கி விகாரத்தாறறொக்கன. இவ்வொழுகுப் பகையினறி ஊரசாடற்கேதுவாசலின், இதனைச் செல்வத்திறகுப் பயனென்றார். இவையூன்றுபாட்டானும் சுறறந்தழால் செலவத்திறசேதுவும் அரணுமபயனுமாமென்பது கூறபபட்டது. (சு)

நிஉடு. கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய சுற்றத்தாற் சுற்றப் படும். டு.

இ - ள். கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் - ஒருவன் சுறறத்திறகு வேண்டுவனகொடுத்தலையும் இன்சொற்சொல்லுதலையும் வல்லனுயின்,—அடுக்கிய சுற்றத்தான் சுற்றப்படும் - தம்மிற்றொடர்ந்த பலவகைச் சுற்றத்தானே சூழப்படும். எ - று.

இரண்டும் அளவறிந்தாறுதலறிதென்பதுதோன்ற, ஆற்றி னென்றார். தம்மிற்றொடர்தலாவது சுற்றத்தது சுறறமும் அதனது சுறறமுமாய அவற்றுற் பிணிபபுண்டிவருதல். இவ்வுபாயங்களை வடநூலார் தானமுஞ் சாமமுமென்ப. (கூ)

குறள் ௫. பெருங்கொடையான் பேணன் வெகுளியவனின் மருங்குடையார் மாநிலத் தில். கூ.

இ - ள். பெருங்கொடையான் வெகுளி பேணன் - ஒருவன மிக்க கொடையையுடையனுமாய வெகுளியை விரும்பானுமா யின்,—அவனின் மருங்கு உடையார் மாநிலத்து இல் - அவன்போ லக இனியுடையார் இவ்வுலகத்தில்லை. எ - று.

மிக்ககொடை ஒன்றனும் வறுமையெயதாமற் கொடுத்தல் விரும்பாமை இஃதரசறகுவேண்டுவதொன்றெனறு அளவிறந்தது செயபாமை. (கூ)

குறள் ௬. கரக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு மன்னரீ ரார்க்கே யுள. எ.

இ - ள். காக்கை கரவா கரைந்து உண்ணும் - காக்கைகள் தமக்கிரையாயின கண்டவழி மறையாது இனத்தையழைத்து அத னோடுங்கூடவுண்ணுநிறகும;—ஆக்கமும் அன்ன ரோர்க்கே உள - சுறறத்தானெயதும் ஆக்கங்களும் அப்பெற்றித்தாய இயல்பினையு டையார்க்கே உளவாவன. எ - று.

அவ்வாக்கங்களாவன பகையின்மையும், பெருஞ்செல்வமு டைமையும் முதலாயின. எச்சவும்மையான் அறமுமின்பமுமேயன றிப் பொருளுமெயதுமென்பது பெறுதும். அப்பெற்றித்தாயவியல் பென்றது தாம் நுகர்வனவெல்லாம அவரும் நுகருமாறு வைத்தல்.

குறள் ௭. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி னதுநோக்கி வாழ்வார் பலர். அ.

இ – ள். பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோச்சின் - எல்லாரையும் ஒருதன்மையராக நோக்காது அரசன் தத்தநதகுதி க்கேற்ப நோக்குமாயின,—அது நோக்கி வாழ்வார் பலர் - அச்சிற பபுநோக்கி அவனேவிடாது வாழுஞ்சுற்றத்தார் பலர். எ - று.

உயர்ந்தார் நீங்குதலேனைக்கிப் பொதுநோக்கை விலக்கி, எல்லா ரும் விடாதொழுகுதலேனைக்கி வரிசைநோக்கை விதித்தார். இநநா ன்குபாட்டானுஞ் சுற்றந்தழுவுமுபாயங் கூறப்பட்டது. (அ)

நிஉகூ. தீமராகித் தற்றுறந்தார் சுற்ற மமர்மைக்
காரண மின்றி வரும். கூ.

இ - ள். தமராகித் தற்றுறந்தார் சுற்றம் - முன்றமராய்வைத்
துத் தன்னேடு அமராது யாதானுமொருகாரணத்தாற் றன்னேட
பிரிந்துபோயவர் பின்னும் வந்து சுற்றமாதல்—அமராமைக் கார
ணம் இன்றி வரும் - அவ்வமராமைக்காரணம் தன்மாட்டில்லேயா
கத தானேயுளதாம். எ – று.

அமராமைக்காரணமின்றியென்றதனுன், முன் அஃதுண்டா
யித் துறத்தல் பெறுமும்: அஃதாவது அரசனருளெனிகெடவொழு
கல் வெறுப்பனசெயதலென்றிவை முதலியவற்றுன் வருவது.
ஆக்கம் வருவிக்கப்பட்டது. இயற்கையாகவே அன்புடையராய
சுற்றத்தார்க்குச் செயற்கையான் வந்த நீக்கம் அதனேயொழிய ஒழி
யும, ஒழிந்தால் அவர்க்கன்புசெயதுகொள்ளவேண்டா, பழையவி
யலபாய நிற்குமென்பார், வருமெனறார். (கூ)

நிஉo. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தாணே வேந்த
னிழைத்திருந் தெண்ணிக் கொளல். கo.

இ – ள். உழைப் பிரிந்து காரணத்தின் வந்தாணே - காரணமி
னறித் தன்னிடத்து நின்றும பிரிந்துபோயப் பின் காரணத்தான்
வந்த சுறறத்தாணே—வேந்தன் இழைத்து இருந்து எண்ணிக் கொ
ளல - அரசன் அக்காரணத்தைச் செயதுவைத்து ஆராயந்து தழீஇ
க்கொளக. எ – று.

வாளா உழைப்பிரிந்தென்றமையின், பிரிதற்குக் காரணமி
ன்மை பெற்றும். வருதற்காரணத்தைச் செய்யாதவழிப் பின்னும்
பிரிந்துபோய்ப் பகையோடு கூடுமாகலின் இழைத்திருந்தென்றும்,
ஆன்பின்றிப் போயப் பின்னுங்காரணத்தான் வந்தமையின் எண்
ணிக்கொளலென்றுங்கூறினுர். பிரிந்துபோய சுற்றத்தாருள் தீமை
செயயப்போய அதனேயொழிய வருவாணும் அது செயயாமற்போ
யப் பின்னன்மை செயய் வருவாணும் தழுவப்படுமாகலின், தழுவு
மாறு முறையே இவ்விரண்டுபாட்டானுங் கூறப்பட்டது. (கo)

நிசம் அதி.—பொச்சாவாமை.

அஃதாவது உருவும் திருவும் ஆற்றலும் முதலாயவற்றுன்
மகிழ்ந்து தற்காத்தலினும் பகையழித்தன்முதலிய காரியங்களினும்
சோர்தலிலச்செய்யாமை. மேற்சொல்லிய சுற்றத்தாராற் பயனுள்

ளது இச்சோர்வில்வழியாகலின், இது சுற்றத்தழாலின்பின் வைக்கப்பட்டது.

நிகக. இறந்த வெகுளியிற் றீதே சிறந்த வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு. க.

இ – ள். சிறந்த உவகை மகிழ்ச்சியிற் சோர்வு - மிக்கவுவகைக்களிபபான் வரும் மறவி—இறந்த வெகுளியிற் றீது - அரசனுக்கு அளவிறந்த வெகுளியினுந்தீது. எ – று.

மிக்கவுவகை பெருஞ்செல்வம், பேரின்பம், பெருமிதமென்றிவறறுன் வருவது. அளவு பகைவரையடர்த்தறகும் கொடியோரையொறுத்தறகும் வேண்டுவது. இறநதவெகுளி ஒரோவழிப் பகைவரையுங்கொல்லும், இஃதன்னதன்றித் தன்னையே கோறலின, அதினுங தீதாயிற்று. (க)

நிகஉ. பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. உ.

இ – ள். புகழைப் பொச்சாப்புக் கொல்லும் - ஒருவன் புகழினை அவன் மறவிகெடுக்கும்;—அறிவினை நிச்சநிரப்புக் கொனறாங்கு - அறிவினை நிச்சநிரபபுக்கெடுக்குமாறுபோல. எ – று.

நிச்சநிரப்பு நாடோறும் இரவான் வருந்தித் தன்வயிறு நிறைத்தல். அஃது அறிவுடையான்கணுண்டாயின் அவற்கு இளிவரவாணும் பாவத்தானும் எள்ளற்பாட்டினை விளைத்து அவனன்குமதிப்பினையழிக்கும்; அதுபோல மறவியும் புகழுடையான்கணுண்டாயின் அவற்குத் தற்காவாமையானும் காரியக்கேட்டானும் எள்ளறபாட்டினை விளைத்து அவனன்குமதிப்பினை அழிக்குமென்பதாயிற்று. இவையிரண்டுபொரட்டானும் பொச்சாப்பினது குற்றங் கூறப்பட்டது. (உ)

நிகங. பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத் தெப்பாலா ரேலோர்க்குந் தணிவு. ங.

இ – ள். பொச்சாப்பார்க்குப் புகழ்மை இல்லை - பொச்சாந் தொழுகுவார்க்குப் புகழுடைமையில்லை;—அது உலகத்து எப்பால் நூலோரார்க்கும் தணிவு - அவ்வின்மை இருநிதிநூலுடையார்க்கேயன்றி உலகத்து எவ்வகைப்பட்ட நூலுடையார்க்கும் ஒப்ப முடிந்தது. எ – று.

அரசர்க்கேயன்றி அறமுதலிய நான்கினும் முயல்வார் யாவர்க்கும் அவை கைகூடாமையிற புகழில்லையெனபது தோன்ற, எப்பாலோர்க்குந துணிவென்றார். (ங)

குஙச. அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. ச.

இ - ள். அரண் அச்சம் உடையார்க்கு இல்லை-காடு மலை முதலிய அரணகளுள்ளே நிறபினும், மனததின்கணச்சமுடையார்க்கு அவற்றுறபயனில்லை;—அங்கு நன்கு பொச்சாபபு உடையார்க்கு இல்லை - அதுபோலச் செல்வமெல்லாமுடையராயினும், மனத்தின் கண் மறவியையுடையாராககு அவற்றுற்பயனில்லை. எ - று.

நனமைக்கேதுவாகலின், நன்கென்றார். அச்சமுடையார் நினற அரணழியுமாறுபோல மறவியுடையாருடைய செலவங்களும அழியுமென்பதாயிறறு. (ச)

குஙடு. முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும். டு.

இ - ள். முன்னுறக் காவாது இழுக்கியான்-தன்னுறக்காக்கப்படுந்துன்பங்களை அவை வருதற்குமுன்னே அறிந்து காவாது மறநதிருந்தான—பின் ஊறு தன்பிழை இரங்கிவிடும்-பின்வருதற்றகாலத்துகாக்கலாகாமையின் அபபிழைபபினை நினைநதிரங்கிவிடுமெ-று.

காக்கப்படுந் துன்பங்களாவன சோர்வுபார்த்துப் பகைவர் செயவன. ஊற்றினகணைன்புழி உருபுஞ்சாரியையும் உடனெருகுக. உறறகாலத்துக் காக்கலாகாமையின், இரங்கிவிடுமெனறார். இவைமூன்றுபாட்டானும் பொச்சாபபுடையார்க்கு வருமேதங கூறபபட்டது. (டு)

குஙசு. இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில். சு.

இ – ள். இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை வாயின - அரசர்க்கு மறவாமைக்குணம் யாவர்மாட்டும் எக்காலத்தும் ஒழிவின்றி வாயக்குமாயின்,—அது ஒபபது இல - அதனையொக்கும் நன்மை பிறிதில்லை. எ - று.

வினைசெயவார் சுற்றத்தாரென்னுந் தம் பாலார்சுண்ணும் ஒப்பவேண்டுதலின் யார்மாட்டுமென்றும், தாம் பெருகியஞான்றும் சுருங்கியஞான்றும் ஒப்பவேண்டுதலின என்றுமென்றும், எல்

லாக்காரியங்களினும் ஒப்பவேண்டுதலின் வழுக்காமையென்றும கூறினார். வாயினென்பது முதனிலைத்தொழிறபெயரடியாகவந்த விணையெச்சம். வாயத்தல் நோபடுதல். (சு)

நிஉஎ. அரியவென் றுகாத வில்லைபொச் சாவாக் கருவியாற் போற்றிச் செயின். எ.

இ - ள். அரிய என்று ஆகாத இல்லை - இவை செய்தற்கரியன வென்று சொல்லப்படடு ஒருவற்கு முடியாத காரியங்களில்லை,—பொசசாவாக் கருவியால் போற்றிச் செயின் - மறவாத மனத்தானே எண்ணிச செயபபபெறின். எ - று.

பொச்சாவாத என்பதனிறுதிநிலை விகாரத்தாறறொக்கது. அநதக்கரணமாகலிற் கருவியென்றார். * இடைவிடாத நினைவும் தபபாத சூழச்சியுமுடையார்க்கு எல்லாம எளிதின் முடியுமென் பதாம். இவையிரண்டுபாட்டானும் பொச்சாவாமையது சிறபபுக் கூறபபட்டது. (எ)

நிஉஅ. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா திகழ்ந்தார்க் கெழுமையு மில். அ.

இ - ள். புகழநதவை போறறிச் செயல்வேண்டும் - நீதிநூலு டையார் இவை அரசர்க்குரியனவென்று உயர்ந்துக்கூறிய செயல்க ளைக் கடைப்பிடித்துச் செய்க,—செயயாது இகழநதார்க்கு எழு மையும் இல் - அங்ஙனஞ்செயயாது மறந்தவர்க்கு எழுமையினும் நனமையில்லையாகலான். எ - று.

அச்செயல்களாவன † மூவகையாற்றலும், நால்வகையுபாய மும், ஐவகைத்தொழிலும், அறுவகைக்குணமும் முதலாய செயல

* பொச்சாவாக்கருவி என்பதறகுப பொச்சாவாமையாகிய கரு வியெனப் பொருள்கோடலே சிறபபு. அது தொல்காப்பியத்து விணையியலுள் "நிலனுமபொருளும்" என்னும் முப்பத்தேழாஞ்சூத் திரதத்துரையிலே சேனாவரையர் "நின்மூகங்காணுமருநதினேன னெபபுழிக் காட்சியை மருநதென்றாகலிற காணுமருநதென்பது விணைபபெயர் கொண்டதாம். பொச்சாவாக்கருவியாற போற்றிச் செயின் என்பதிப் பொச்சாவாக்கருவி என்பதாம் அது" எனக் கூறுமாறறுணர்க. இலக்கணவிளக்க நூலார்க்கும் இலக்கணவி ளக்கச்சூறாவளியார்க்கும் இதுவே கருத்தென்க.

† மூவகையாற்றல் அறிவு, ஆண்மை, பெருமை என்பன; நால் வகை உபாயம் கொடுத்தல், இன்சொற்சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தல் என்பன; ஐவகைத்தொழில் மேறசேறறல், அரண்முற்றல், கோடல், பொருதல், வேறறல் என்பன; அறுவகைக்குணம் நட்பாக் கல், பகையாக்கல், மேற்சேறறல், இருத்தல், பிரித்தல், கூட்டலென்

கள்.சாதிதருமமாகிய இவற்றின் வழீஇயோர்க்கும் உள்ளது நிரய(த்)தன்பமேயாகலின், எழுமையுமில்லென்றார். எழுமை ஆகுபெயர். இதனாற் பொச்சாவாது செயயவேண்டுவன கூறப்பட்டன. (அ)

நெஉக. இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம் மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. கூ.

இ—ள். தம் மகிழ்ச்சியின் தாம் மைந்து உறும் போழ்து - அரசர் தம்மகிழ்ச்சிக்கட்டாம் வலியுறும்பொழுது,—இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக - முற்காலத்து அதனிலுய சோர்வாற் கெட்டவர்களே நினைக்க. எ—று.

காரணங்களோடு அவர்க்குளதாய உரிமையை மகிழ்ச்சிமேலேற்றித் தம்மகிழ்ச்சியினென்றும், இகழ்ச்சியுங் கேடும் உடனருண்றுமாகலின் மகிழ்ச்சியின் மைந்துறும்போழ்தென்றுங் கூறினர். கெட்டாரை உள்ளவே, நாமும் அவ்வாறே கெடுதலுமென்று அதன்கண் மைந்தருருரென்பது கருத்து. எண்ணுகவென்று பாடமோதுவாருமுளர். (கூ)

நெசெ. உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா னுள்ளிய துள்ளப் பெறின். கஎ.

இ—ள். தான் உள்ளியது எய்தல் எளிது மன் - அரசனுக்குத் தானெயத நினைத்த பொருளை அநினைத்த பெறலியே எய்துதல் எளிதாம்,—மற்றும் உள்ளியது உள்ளப் பெறின் - பின்னும் அதனையே நினைக்கக்கூடுமாயின். எ - று.

அது கூடாதென்பது ஒழிந்து நின்றமையின், மன் ஒழியிசைக்கண்வந்தது. அதனையே நினைத்தலாவது மறவியின்றி அதன்கண்ணே முயறல். இவை யிரண்டுபோட்டாலும் பொச்சாவாமைக்கு உபாயங் கூறபபட்டது. (கஎ)

நெடு ம் அதி.—செங்கோன்மை.

அஃதாவது அரசனுற் செய்யப்படும் முறையினது தன்மை. அம்முறை ஒருபாற்கோடாது செவ்வியகோல்போறலிற் செங்கோலெனப்பட்டது. வடநூலாரும் தண்டமென்றார். அது சோர்வில்லாத அரசனுற் செயற்பாலதாகலின், இது பொச்சாவாமையின் பின் வைக்கப்பட்டது.

பன. இவற்றுள் மூவகையாற்றலே சசுசு ம் குறளுரையினும், நால்வகை உபாயத்தை சசுஎ ம் குறளுரையினும், ஐவகைதொழிலே சசுஉ, சளக ம் குறளுரையினும், அறுவகைக்குணத்தை சஅடு ம் குறளுரையினும் காண்க.

**திசை. ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை. க.**

இ - ள். ஓர்ந்து - தன்கீழ் வாழ்வார் குற்றஞ்செய்தால் அக் குற்றத்தை நாடி—யார்மாட்டும் கண்ணோடாது-பாவர்மாட்டுங் கண்ணோடாது—இறை புரிந்து - நடுவுநிலைமையைப் பொருந்தி—தேர்ந்து-அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடு மாராய்ந்து—செய்வஃதே முறை - அவ்வளவிற்ருகச செயவதே முறையாம். எ - று.

நடுவுநிற்றல் இறைக்கியல்பாகலின் அதனையிறையென்றும, உயிரினுஞ் சிறந்தார்கண்ணுமென்பார் யார்மாட்டுமென்றுங் கூறினர். இறைமை இறையெனவும், செய்வது செய்வஃதெனவும் நின்றன. இதனுற் செங்கோன்மையதிலக்கணங் கூறபபட்டது. ()

**திசை. வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி. உ.**

இ - ள். உலகு எல்லாம் வான் நோக்கி வாழும் - உலகத்துயிரெல்லாம் மழையுளதாயின் உளவாகாநிற்குமேயெனினும,—குடி மன்னவன் கோல் நோக்கி வாழும் - குடிகள் அரசன்செங்கோலுளதாயின் உளவாகாநிற்கும். எ - று.

நோக்கிவாழ்தல் இன்றியமையாமை. வானினுயவுணவை வானென்றும், கோலினுயவேமத்தைக் கோலென்றுங் கூறினர். அவ்வேமமில்வழி உணவுளதாயினுங் குடிகட்கு அதனுற்பயனில்லை யெனபதாம். (உ)

**திசை. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல். ங.**

இ - ள். அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது-அந்தணர்க்குரித்தாய வேதத்திற்கும் அதனுற் சொல்லப்பட்ட அறத்திற்குங் காரணமாய நிலைபெற்றது—மன்னவன் கோல் - அரசனுற் செலுத்தபபடுகின்ற செங்கோல். எ - று.

அரசர் வணிகரென்னுமேனையோர்க்கு முரித்தாயினும், தலைமைபற்றி அந்தணர்நூலென்றார். "மாதவர் நோன்பு மடவாரகறபுங்—காவலன் காவ லன்றித் தங்கா" * ஆகலின், ஈண்டறமென்றது ஆவையொழிநதவற்றை. வேதமும் அறனும அநாதியாயினுஞ் செங்கோலில்வழி நடவாவாகலின், அதனை அவற்றிற்காதி

* மணிமேகலை, இருபத்திரண்டாவது சிறைசெயதகாதை.

யென்றும், அபபெற்றியே தனக்காதியாவது பிறிதில்லையென்பார் நினறதென்றுங்கூறினார். இவையிரண்டுபாட்டானுஞ் செங்கோலது சிறபபுக் கூறபபடடது. (சு)

திசசு. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன னடிதழீஇ நிற்கு முலகு. சு.

இ - ள். குடிதழீஇக் கோல் ஒச்சும் மாநிலமன்னன் அடி - நன்குடிகளையுமணைத்துச் செங்கோலையுஞ் செலுத்தும் பெருநில வேநதனடியை—தழீஇ நிறகும் உலகு - பொருந்தி விடார் உலகத்தார். எ - று.

அணைத்தல் இன்சொறசொல்லுதலும், தளர்ந்துழி வேண்டுவன கொடுத்தலும் முதலாயின. இவ்விரண்டனையும் வழுவாமற செயவான் நிலமுழுதுமாளுமாகலின் அவனை மாநிலமனனனென றும, அவன்மாட்டியாவரும் நீங்காவன்பினராவராகலின் அடிதழீஇ நிற்குமுலகெனறும், கூறினார். (சு)

திசசு. இயல்புளிக் கோலோச்சு மன்னவ னுட்ட பெயலும் விளையுளுந் தொக்கு. கு.

இ - ள். பெயலும் விளையுளும் தொக்கு – பருவமழையுங குன்றுதவிளைவும் ஒருங்கு கூடி—இயல்புளிக் கோல் ஒச்சும் மன்னவன் நாட்ட - நூல்கள் சொல்லியவியல்பாற செங்கோலைச செலுத்துமரசனது நாட்டின்கண்ணவாம. எ - று.

உளியெனபது மூன்றுவதன்பொருள்படுவதோரிடைச்சொல். வாணும் நிலனுஞ் சேரத் தொழிறபட்டு வளஞ்சுரக்குமெனபதாம

திசசு. வேலன் றுவென்றி தருவது மன்னவன் கோலதூஉங் கோடா தெனின். சு.

இ - ள். மன்னவன் வென்றி தருவது வேல் அன்று கோல் – மன்னவனுக்குப் போரின்கண் வெனறியைக் கொடுபபது அவனெறியும் வேலன்று கோல்,—அதனூஉம் கோடாது எனின் - அஃதும அபபெறறித்தாவது தான் கோடாதாயின். எ - று.

கோல் செவ்விதாயவழியே வேல் வாயப்பதென்பார் வேலன் றென்றார். "மாண்ட - வறநெறி முதற்றே யரசின் கொறறம" * எனறா பிறரும். கோடாவெனபது பாடமாயின், கருஷியின்றொழில் வினைமுதன்மேனின்றதாக வுரைக்க. (சு)

* புறநானூறு, திரு.

குசஎ. இறைகாக்கும் வையக மெல்லா மவனே
முறைகாக்கும் முட்டாச் செயின். எ.

இ - ள். வையகம் எல்லாம் இறை காக்கும் - வையகத்தையெல்லாம அரசன் காக்கும்;—அவனே முறை காக்கும் - அவன்றன்னே அவனது செங்கோலே காக்கும்;—முட்டாச் செயின் - அதனே முட்டவந்தழியும் முட்டாமற்செலுத்தவனையின். எ - று.

முட்டாமற் செலுத்தியவாறு மகனே முறைசெயதான் * கண்ணும் தன்கை குறைத்தான் † கண்ணுங் காண்க. முட்டாதெனப தன் இறுதிநிலே விகாரத்தாறறெருக்கது. இவை நான்குபாட்டானும் அதனேச் செலுத்தினனெயதும் பயன் கூறப்பட்டது. (எ)

குசஅ. ஏண்பதத்தா னேரா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தாற் ருனே கெடும். அ.

இ - ள். எண்பதத்தான் ஓரா முறை செயயா மன்னவன் — முறைவேண்டினார்க்கு எளிய செவ்வியையுடையனய அவர் சொலலிடவற்றை நூலோர் பலரோடுமாராயந்து நின்றவண்மைக்கொப முறை செய்யாதவரசன்—தண்பதத்தான் தானே கெடும் — தாழ்ந்த பதத்திலே நின்று தானே கெடும். எ — று.

எண்பதத்தானென்னும முற்றுவினேயெச்சமும், ஓராவென்னும் வினேயெச்சமும், செயயாவென்னும் பெயரெச்சவெதிரமறையுட செயதல்வினேகொண்டன. தாழ்நதபதம் பாவமும், பழியுமெயதிநிற்கும்நிலே. ‡ "அல்லவைசெயதாற கறங்கூறறம்" ஆகலின, பகைவரின்றியுங்கெடுமென்றார். இதனுன் முறைசெலுத்தாதானது கேடு கூறப்பட்டது. (அ)

குசகூ. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில். கூ.

இ - ள். குடி புறங்காத்து ஓம்பிக் குற்றம் கடிதல் - குடிகளேப பிறர் நலியாமற் காத்துத் தானும் நலியாது பேணி, அவாமாட்டுக் குற்றங்கழின அதனே யொறுப்பானெழித்தல்—வேந்தன்

---

* மனுநீதிகண்டசோழன. சிலப்பதிகாரம. வழக்குரைகாதை, குங-குடு.

† பாண்டியன். சிலப்பதிகாரம். கட்டுரைகாதை, சஉ-குங.

‡ நான்மணிக்கடிகை. மேலே எடுத்துக்காட்டினும் ஆங்குக் காண்க.

வடி அன்று தொழில் - வேந்தனுக்குப் பழியன்று, தொழிலாக லான். எ — று.

தூண்பஞ்செயதல், பொருட்கோடல், கோறலென ஒறுப்புமூ னறு, அவற்றுள் ஈண்டைக்கெயதுவன முன்னியவென்பது குற றங்கடிதலென்பதனைற் பெற்றும். தன்கீழ் வாழ்வாரை யொறுத் தல அறனன்மையின வடுவாமென்பதனே யாசங்கித்து,அஃதாகாது, அரசனுக்கு அவரை அக்குற்றத்தினீக்கித் தூயராக்குதலுஞ் சாதி ரூமமென்றார். (கூ)

நிநிo. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங் களைகட் டதனெடு நேர். கo. [கூழ்

இ — ள். வேந்து கொடியாரைக் கொலையின் ஒறுத்தல் - அர சன் கொடியவர்களைக் கொலையானெறுத்துத் தக்கோரைக் காத் தல—பைங்கூழ் களை கட்டதனெடுநேர் - உழவன் களையைக் களை யாது பைங்கூழைக் காத்ததனேடொக்கும். எ - று.

கொடியவரெனறது தீங்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவி யிறகொல்வார், கள்வர், ஆறலைபபார, சூறைகொள்வார, பிறனில விழைவாரென்றிவா முதலாயினுரை. இவரை வடநூலார் ஆதாத யிகளென்ப. இப்பெறறியாரைக் கண்ணேடிக் கொல்லாவழிப புற களைக்கு அருசாநின்ற பைங்கூழபோன்று நலிவுபலவெயதி உலகு இடர்பபடுதலின், கோறலும அரசற்குச் சாதிதரும மென்பதாயி றறு இவையிரண்டுபாடடாஞுஞ் செங்கோல செலுத்தும் வெண் சூடை வேநதற்குத் தியாமாட்டு மூவகையொறுப்பும் ஒழியற பாலவல்லவெனபது கூறபபட்டது. (கo)

நிசும் அதி.—கொடுங்கோன்மை.

அஃதாவது அம்முறையினது கோடிதறறன்மை. ஈண்டும உவமையின் பெயர் பொருண்மேலாயிற்று. செங்கோன்மைககு மாருகலின, இஃததன்பின் வைக்கபபட்டது.

நிநிக. கொலைமேற்கொண் டாரிற் கொடிதே யலைமேற் டல்லவை செய்தொழுகும் வேநது. க. [கொண்

இ - ள். கொலை மேற்கொண்டாரிற கொடிது - பகைமைபற றிக் கொலையுதறறொழிலைத் தமமேற்கொண்டொழுகுவாரினுங்கொ டியன—அலை மேறகொணடு அல்லவை செயது ஒழுகும் வேநது -

பொருள் வெஃகிக் குடிகளையலைத்தற்முழிலைத் தன்மேற்கொண்டு முறையல்லவறைச் செயதொழுகும் வேந்தன். எ - று.

அவர் செயவது ஒருபொழுதைத் துன்பம், இவன் செயவது எபபொழுதுந துன்பமாமென்பதுபற்றி, அவரினுங கொடியனென்றார். பாண்மயக்குறழ்சசி. வேந்தென்பது உயர்திணைப்பொருட் கணவந்த அஃறிணைச்சொல். அலை கொலையினுங் கொடிதெனபதாயிற்று. (க)

நிநிஉ. வேலொடு நின்ற னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்ற னிரவு. உ.

இ - ள். வேலொடு நின்றுன் - ஆறலைக்குமிடத்துத் தனியே வேல்கொண்டு நின்ற கள்வன்—இடு என்றது போலும் - ஆறுசெலவாணை நினைகைப்பொருடாவெனறு வேண்டுதலோ டொக்கும—கோலொடு நினறுன் இரவு - ஒறுத்தறமுழிலோடு நின்றவரசனை குடிகளைப் பொருள் வேண்டுதல். எ - று.

வேலொடு நின்றுனென்றதனுறை பிறரொடு நில்லாமையும், இரவென்றதனுல் இறைப்பொருளனமையும், பெற்றும். தாராகக் கால் ஒறுப்பலென்னுங் குறிபபினுகலின், இரவாற்கோடலும் கொடுங்கோன்மையாயிற்று. இவையிரண்டுபாட்டானுங் கொடுங்கோன்மையது குற்றங் கூறப்பட்டது. (உ)

நிநிஊ. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னுடொறு நாடு கெடும். ஊ.

இ - ள். நாடொறும் நாடி முறை செயயா மன்னவன - தனனுட்டு நிகழும் தீமைகளை நாடோறுமாராயாது அதறகொரு முறைமையைச் செய்யாதவரசன்—நாடொறும் நாடு கெடும - நாடோறும் நாடிழக்கும். எ - று.

அரசனுக்கு நாடி உறுப்பாகலின், அதன்வினை அவன்மேனின்றது. இழத்தல பயனெயதாமை. மன்னவனுடி நாடொறுங் கெடுமென்றுரைபபாருமுளர். (ஊ)

நிநிசு. கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு. சு.

இ - ள். சூழாது கோல் கோடிச் செய்யும் அரசு - மேலவினைவதெண்ணது முறை தப்பச்செயயுமரசன—கூழும் குடியும்

ஒருங்கு இழக்கும் - அச்செயலான் முன்னீட்டிய பொருளையும் பின்னீட்டுதற்கேதுவாகிய குடிகளையுஞ் சேரவிழக்கும். எ - று.

கோடவென்பது திரிந்து நின்றது. முன்னீட்டியபொருள் இழத்தற்கேது வருகின்ற பாட்டாற் கூறுப. (சு)

குறள். அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. கூ.

இ - ள். அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே - அரசன் முறைசெயயாமையாற் குடிகள் துன்பமுற்று அதனைப பொறுக்கமாட்டாது அழுத கண்ணீரன்றே—செல்வத்தைத் தேயக்கும் படை - அவன் செல்வத்தைக் குறைக்கும் கருவி. எ - று.

அழுதகண்ணீர் அழுதலான் வந்த கண்ணீர். செல்வமாகிய மரத்தையென்ஞமையின், இஃதேகதேசவுருவகம். அல்லற்படுதல் தியாபாவத்தது தொழில் அதற்கேதுவாகிய கண்ணீர்மேனின்றது. அக்கண்ணீரிற் கொடிது பிறிதின்மையின், செல்வங் கடிதிற்றேயுமென்பது கருத்து. (கூ)

குறள். மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்
மன்னுவா மன்னர்க் கொளி. கூ. [றேன்

இ - ள். மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை - அரசர்க்குப் புகழ்கடாம் நிலைபெறுதல் செங்கோன்மையாலும்;—அஃது இன்றேல் மன்னர்க்கு ஒளி மன்னுவாம் - அச்செங்கோன்மையில் லையாயின, அவர்க்கு அப்புகழ்கடாம் உளவாகா. எ - று.

விகாரத்தாற்றொக்க மூன்றாவது விரித்து ஆக்கம் வருவித்துரைக்கப்பட்டது. மன்னுதற்கேது புகழாதல் * "இந்நிலத்து மனுதல் வேண்டி னிசைநடுக" என்பதனானுமறிக. மன்னுமை ஒரு காலு நிலையாமை. பழிக்கப்பட்டால் ஒளி மன்னுவாம், ஆகவே, தாமுமன்னுரென்பதாயிற்று. வென்றி கொடை முதலிய வேதுக்களாற் புகழ் பகுதிப்படுதலின், பன்மையாற் கூறினார். அவையெல்லாம் செங்கோன்மையில்வழி இலவாமென்பதாம். இவைதான் குபாட்டானுங் கொடுங்கோலனுயினன் எயதுங் குற்றங் கூறபபட்டது. (சு)

குறள். துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
னளியின்மை வாழு முயிர்க்கு. எ.

---

* நான்மணிக்கடிகை.

இ - ள். தெளியின்மை ஞாலத்திற்கு எறறு - மழையில்லாமை வையத்து வாழுமுயிர்கட்கு எவ்வகைத் துனபம் பயக்குமோ,—அற நேறி வேந்தன் அளியின்மை வாழும் உயிர்க்கு - அவ்வகைத்துன பம பயக்கும் அரசன்றண்ணளியில்லாமை அவனுட்டிவாழுங்குடி கட்கு. எ - று.

சிறப்புப்பற்றித் தெளியென்பது மழைமேனின்றது; உயிரெ ன்பது குடிகண்மேனின்றது. மேல் வாளுக்கிவாழு மென்றதனை எதிர்மறை முகத்தாற் கூறியவாறு. (எ)

குடுஅ. இன்மையி னின்ன துடைமை முறைசெய்யா மன்னவன் கோற்கீழ்ப் படின். அ.

இ - ள். முறை செயயா மன்னவன் கோற்கீழ்ப் படின் - முறைசெயயாத அரசனது கொடுங்கோலின்கீழ் வாழின்,—இன மையின் உடைமை இன்னது - யாவர்க்கும் பொருளினின்மையி னும் உடைமை இன்னது. எ - று.

தனக்குரிய பொருளோடு அமையாது மேலும் வெஃகுவோ னது நாட்டுக் கைநோவ யாப்புண்டல் முதலிய வருவது பொரு ளுடையார்க்கே யாகலின், அவ்வுடைமை இன்மையினுமின்னதாயி றறு. இவையிரண்டுபாட்டானும் அவனுட்டி வாழ்வார்க்கு வருங் குறறங் கூறப்பட்டது. (அ)

குடுகூ. முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி யொல்லாது வானம் பெயல். சூ.

இ - ள். மன்னவன் முறை கோடிச் செய்யின் - மன்னவன் தான் செய்யும் பொருளே முறை தப்பச் செயயுமாயின்,—உறை கோடி வானம் பெயல் ஒல்லாது - அவனுட்டிப் பருவமழை இன முமவகை மேகம் பொழிதலிலச்செய்யாது. எ - று.

இரண்டிடத்துங் கோடவென்பன திரிந்துநின்றன. உறை கோடுதலாவது பெய்யுங்காலத்துப பெயயாமை. அதற்கேது வரு கின்ற பாட்டாற் கூறுப. (கூ)

குடுo. ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர் காவலன் காவா னெனின். கo.

இ - ள். காவலன் காவான் எனின் – காத்தற்குரியவரசன் உயிர்களிக் காவானுயின்.—ஆ பயன் குன்றும் - அறனில்லாத அவ னுட்டிப் பசுக்களும் பால்குன்றும்,—அறுதொழிலோர் நூல் மறப் பர் - அந்தணரும் நூல்களே மறந்து விடுவர். எ - று.

ஆபயன ஆவாற்கொள்ளும் பயன். அறுதொழிலாவன ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றலெனவிவை. பசுக்களை பால்குன்றியவழி அவியின்மையானும், அது கொடுத்தற குரியார மற்றிரங்கற்பமெனபன ஓதாமையானும், வேள்வி நடவா தாம, ஆகவே, வானம் பெயலொல்லாதென்பதாயிறறு. இவை யிர ணடு பாட்டானும் அவனுட்டின்கணிகழுங்குறறங கூறபபட்டது.

நெ ம் அதி.—வெருவந்தசெய்யாமை.

அஃதாவது குடிகளஞ்சுவதும் பகுதி * யஞ்சுவதும் தான றஞ்சுவதுமாய தொழிலகளைச் செயயாமை. அவை செயதல் கொடு ங்கோனமைப்பாற்படுதலின, இஃததன்பின் வைக்கப்பட்டது.

நிசுக. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து. க.

இ - ள். தக்காங்கு நாடி - ஒருவன் தனனின்மெலியார்மேற் சென்றவழி அதனை நடுவாக நின்றராயாது—தலைச்செல்லாவண் ணதால் ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து - பின்னும் அது செய்யா மறபொருட்டு அவனை அக்குற்றத்திற்கொப்ப ஒறுப்பானே அரச னவான். எ - று.

தக்காங்கு ஒத்தாங்கென்பன ஒருசொல். தகுதியென்பது நடுவு நிலைமையாதல் † "தகுதி யெனவொன்று நன்றே" என்பத னனுமறிக. இதனனே தக்காங்கு நாடாமையும்,பிறிதோர்காரணம் பறறி மிகவொறுத்தலும்,குடிகளஞ்சும் வினையாதல் பெறறும்.(க)

நிசுஉ. கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்க
நீங்காமை வேண்டு பவர். உ.

இ - ள். கடிது ஓச்சி - அவ்வொத்தாங்கொறுத்தல் தொட ங்குங்கால் அளவிறப்பச் செயவார்போற்றொடங்கி,—மெல்ல எறிக - செயயுங்கால அளவிறவாமற்செய்க—ஆக்கம் நெடிது நீங் காமை வேண்டுபவர் - ஆக்கந் தங்கணெடுங்கால நிற்றலை வேண்டு வார எ - று.

கடிதோச்சல் குற்றஞ்செய்வார் அதனை யஞ்சுதற் பொருட் டும, மெல்லவெறிதல் யாவரும் வெருவாமைபபொருட்டுமாம். தொடங்கினவளவிற்குறைதல் பற்றி மென்மை கூறப்பட்டது. ஓசசுதல் எறிதலென்பனவிரண்டும் உவமைபற்றி வந்தன. இவை

* பகுதி - மந்திரிமுதலியவர்கள். † குறள், கக்க.

யிரண்டி பாட்டானும் குடிகள் வெருவந்த செயயாமைய தியல்பு கூறப்பட்டது. (உ)

**நிசுஈ. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயி
னெருவந்த மொல்லைக் கெடும். ஈ.**

இ - ள். வெருவந்த செயது ஒழுகும் வெங்கோலன் ஆயின் — குடிகள வெருவிய செயல்களைச் செயது நடக்கும் வெங்கோலனு மாயின்;—ஒருவந்தம் ஒல்லைக் கெடும் - அரசன் ஒருதலையாகக் கடி திற கெடும். எ - று.

வெங்கோலனென்பது ஈண்டு வாளா பெயராய நின்றது. ஒருவநதம், ஒருதலை, ஏகாந்தமென்பன ஒருபொருட்கிளவி. அச் செயல்களுங் கேடுகளும் முன்னர்க் கூறபபடும். (ஈ)

**நிசுசு. இறைகடிய னென்றுரைக்குமின் னஞ்சொல்வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும். சு.**

இ - ள். இறை கடியன் என்று உரைக்கும் இன்னஞ்சொல் வேந்தன் - குடிகளான நம்மிறைவன் கடியனென்று சொலலப் படும் இன்னதசொல்லியுடைய வேந்தன்—உறை கடுகி ஒல்லைக் கெடும் — ஆயுளுங்குறைந்து செல்வமுங்கடிதினிழக்கும். எ - று.

நெஞ்சு நொந்து சொல்லுதலான், இன்னமை பயப்பதாய சொல்லை இன்னஞ்சொல்லென்றார். உறையென்பது முதனிலைத் தொழிறபெயர். அஃது ஈண்டாகுபெயராய உறைதலைச்செயயும் நாண்மேனின்றது. அது குறைதலாவது அச்சொல்லில்லாதார்க்கு உள்ளதிற் சுருங்குதல். (சு)

**நிசுநி. அருஞ்செவ்வி யின்னு முகத்தான் பெருஞ்செல்
பேஎய்கண் டன்ன துடைத்து. நி. [வம்**

இ - ள். அருஞ்செவ்வி இன்னமுகத்தான் பெருஞ்செல்வம் - தன்னைக் காணவேண்டுவார்க்குக் காலமரியனுயக் கண்டால் இன் னத முகத்தினையுடையானது பெரியசெல்வம்—பேய கண்டன் னது உடைத்து - பேயாற் காணப்பட்டாற்போல்வதொரு குறற முடைத்து. எ - று.

எனவே, இவை யிரண்டும் வெருவந்த செய்தலாயின. இவை செய்வானைச் சார்வாரின்மையின், அவனது செல்வந் தனக்கும் பிறர்க்கும் பயன்படா தென்பதுபற்றிப் பேய்கண்டன்ன துடைத் தென்றார். காணுதல் தன்வயமாக்குதல். (நி)

குசுசு. கடுஞ்சொல்லன் கண்ணில னயி னெடுஞ்செல்வ நீடின்றி யாங்கே கெடும். சு.

இ—ள். கடுஞ்சொல்லன் கண் இலன் ஆயின் - அரசன் கடிய சொல்லையுமுடையனும்மக் கண்ணோட்டமுமிலனுமாயின்,—நெடுஞ் செல்வம் நீடி இன்றி ஆங்கே கெடும் - அவனது பெரியசெல்வம நீடுதலின்றி அபபொழுதே கெடும். எ - று.

"வேட்டங் கடுஞ்சொன் மிகுதண்டஞ் சூதுபொரு—ளீட்டங் சட காமமோ டேழு." எனப்பட்ட விதனங்களுட் கடுஞ்சொல்லை யும் மிகுதண்டத்தையும் இவர் இவ்வெருவந்தசெயதலுளடகினார். கண் ஆருபெயர். இவை செயதபொதுதே கெடுஞ் சிறுமைத்தனரு யினு மெனபார், நெடுஞ்செல்வமென்றார். நீடுதல் நீட்டித்தல். (சு)

குசுஎ. கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த னடுமுரண் டேய்க்கு மரம். எ.

இ - ள். கடுமொழியும் கை இகந்த தண்டமும் - கடிய சொல லுங் குற்றத்தின் மிக்க தண்டமும்—வேந்தன் அடு முரண் தேயக குமு அரம் - அரசனது பகை வெல்லுதற்கேற்ற மாறுபாடாகிய இரும்பினைத் தேயக்கும் அரமாம். எ - று.

கடுமொழியாற்றுணையுங் கையிகந்ததண்டத்தாற்றேசமுங் கெ டடி முரண் சுருங்கி வருதலின் அவற்றை அரமாக்கி, திண்ணிதாயி னுந தேயுமென்றதற்கு அடுமுரணை இரும்பாக்கினார். எகதேசவரு வகம். அரமென்பதனைத் தனித்தனி கூட்டுக. * இவையைந்துபா ட்டானும், செவ்வியின்மை, இன்னுமுகமுடைமை, கண்ணோட்டமி னமை, கடுஞ்சொறசொல்லல், கையிகந்ததண்டமென்றிவைகள் குடிகளுஞ்சும் வினையென்பதனுஉம், இவை செய்தான் ஆயுளும் அடு முரணுஞ் செல்வமுமிழக்குமென்பதனுஉங் கூறப்பட்டன. (எ)

குசுஅ. இனத்தாற்றி யெண்ணுதவேந்தன் சினத்தாற்றிச் சீறிற் சிறுருங் திரு. அ.

இ - ள். இனத்து ஆற்றி எண்ணுத வேந்தன் - காரியத்தைப் பற்றி வந்த வெண்ணத்தை அமைச்சர்மேல்வைத்து அவரோடு தானுமெண்ணிச் செயயாதவரசன்—சினத்து ஆற்றிச் சீறின் - அப் பிழைப்பாற் றன்காரியந் தப்பியவழித் தன்னைச் சினமாகிய குறற

* இவ்வாறு ஒருமைப்பெயரை வாக்கியபேதமாகத் தனித்தனி கூட்டி முடிப்பதனைத் தேர்வடமிழுப்பார்போலப் பிரத்தியேகபத காந்துவய மென்பர் வடநூலார்.

க்கின்கண்ணே செலுத்தி அவரை வெகுளுமாயின்,—திருச் சிறுகும் - அவன்செல்வம் நாடோறுஞ் சுருங்கும். எ - று.

அரசர்பாரம் பொறுதகுயத்தலொப்புமையான் அமைச்சரை னமென்றும், தான் பின் பிழைப்பாதலறிந்து அமையாது அதனை அவாமேலேறறி வெகுளின் அவர் வெரீஇ நீங்குவர், நீங்கவே, அப் பிழைபபுத் தீருமாறும் அப்பாரமினிதுயக்குமாறும் இலனுமென பது நோக்கித் திருச்சிறுகுமென்றுங் கூறினார். இதனுறை பகுதியுஞ் சுமவினையும் அது செயதானெயதுங் குறறமுங் கூறப்பட்டன. ()

நிசுசு செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். சு.

இ - ள். சிறை செய்யா வேந்தன் - செரு வருதற்குமுன்னே தனக்குப் புதலாவதோரரண் செயதுகொள்ளாதவரசன்—செரு வந்த போழ்தில் வெருவந்து வெயது கெடும் - அது வந்தகாலத்து ஏமமின்மையான் வெருவிக் கடிதிற்கெடும். எ - று.

பகையை வெருவிச் சேர்ந்தார் நீங்குதலிற்றமியனுய்த் தானும் வெருவி அப்பகையயத்தனுமென்பதாம். இதனுல் தானஞ்சும வினையும் அது செயதானெய்தும் பயனுங் கூறப்பட்டன. (சு)

நிஎ0. கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை. க0.

இ - ள். கடுங்கோல் கல்லார்ப் பிணிக்கும் - கடுங்கோலனுய வரசன் நீதிநூன்முதலிய கல்லாதாரைத் தனக்குப் பகுதியாகக் கூட்டாநிற்கும்;—அதுவல்லது நிலக்குப் பொறை இல்லை - அக கூட்டமல்லது நிலத்திற்கு மிகையாய பாரம் பிறிதில்லை. எ - று.

கடுங்கோலென்பது ஈண்டு மிக்கதண்டத்தின்மேற்றன்றி அத ணை செயவான்மேற்றுயிற்று. அவன் அது செயதற்கினையவாரை யல்லது கூட்டாமையிற் கல்லார்பபிணிக்குமென்றும், ஏனையவற றையெல்லாம் பொறுக்கின்றதியல்பாகலின் நிலத்திற்குப் பொறை அதுவல்லதில்லையென்றுங் கூறினார். நிலக்கென்பது செயபுள்வி காரம். இதனுல் வெருவந்த செயதலின் குற்றங் கூறப்பட்டது. ()

நிஅ ம் அதி.—கண்ணேட்டம்.

அஃதாவது தன்னெடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறி யன மறுக்கமாட்டாமை. இஃது அவர்மேற் கண்சென்றவழி நிக முவதாகலின், அப்பெயர்த்தாயிற்று. மேல் வெருவந்தசெயயாமை

யுட் கூறியவதனையே சிறப்புபபற்றி விரித்துக்கூறுகின்றமையின், இஃததனபின் வைக்கபபட்டது.

நிஎக. கண்ணேட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு. க.

இ - ள். கண்ணேட்டம் என்னும கழி பெருங்காரிகை உண மையான் - கண்ணேட்டமெனறு சொல்லப்படுகின்ற சிறப்புடைய வழகு அரசர்மாட்டு உண்டாகலான்,—இவ்வுலகு உண்டு - இவவு லகமுண்டாகாநின்றது. எ - று.

கழிபெருங்காரிகையென்புழி ஒருபொருட்பன்மொழி இவ்வு பிரழகது சிறப்புணர நினறது. இவவழகு அதறகுறுப்பாகலின், உண்மையானென நிலேபேறுங்கூறினார். இன்மை வெருவநதசெய தலாகலின அவர்நாட்டு வாழவார்! புலியையடைநத புல்வாயினம போன்று ஏமஞ்சாராமைபறறி, இவ்வுலகுண்டென்றார். (க)

நிஎஉ. கண்ணேட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை. உ.

இ - ள். உலகியல் கண்ணேட்டத்து உள்ளது - உலகநடை கணணேட்டத்தின்கண்ணே நிகழ்வது—அஃது இலார் உண்மை நிலக்குப் பொறை - ஆகலான், அக்கண்ணேட்டமில்லாதார் உ ராதல் இநநிலத்திறகுப் பாரமாதறகே, பிறிதொனறற்கன்று.எ-று.

உலகநடையாவது ஒப்புரவுசெயதல், புறந்தருதல், பிழைத் தன பொறுத்தலென்றிவைமுதலாயின. அவைநிகழாமையால் தம சக்கும் பிறர்க்கும் பயன்படாரென்பதுபற்றி, நிலைக்குப்பொறையென் றார். அதறகென்பது சொல்லெச்சம். இவையிரண்டுபாட்டா னுங கண்ணேட்டத்தது சிறபபுக் கூறப்பட்டது. (உ)

நிஎங. பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணெ
கண்ணேட்ட மில்லாத கண். ங. [ன்னுங்

இ – ள். பண் என்னும் பாடற்கு இயைபு இன்றேல் - பண் என்னபயத்ததாம் பாடற்குழிலோடு பொருத்தமின்றுயின்'— கண் என்னும் கண்ணேட்டம் இல்லாத கண் - அதுபோலக் கண் என்னபயத்ததாங் கண்ணேட்டமில்லாதவிடத்து! எ - று.

பண் சண்ணென்பன! சாதிப்பெயர். பண்களாவன பாலி யாழ்முதலிய நூற்றுமூன்று. பாடற்குழில்களாவன யாழின்கண்

வார்தல் முதலியவெட்டும், * பண்ணல் முதலியவெட்டும், † மிடற்றின்கண் எடுத்தல், படுத்தல், நலிதல், கமபிதம், குடிலமென்னுமை நதும், பெருவண்ணம், இடைவண்ணம், வனப்புவண்ணமுதலிய வண்ணங்களெழுபத் தாறுமாம். இவற்றேழியையாதவழிப பண்ணுறபயனில்லாதவாறு போலக் கண்ணேட்டத்தியையாதவழிக் கணணுறபயனில்லையென்பதாம். கண் சென்றவழி நிகழ்தல்பற்றி அதனே யிடமாக்கினர். இறுதிக்கட்கண்ணென்பதனைக் ‡ "கண்ணகன ஞாலம்" என்புழிபபோலக் கொள்க. (கூ)

நிசச. உளபோன் முகத்தெவன் செய்யு மளவினற் கண்ணேட்ட மில்லாத கண். ச.

இ - ள். முகத்து உளபோல் எவன் செய்யும் - கண்டார்கு முகத்தின்கண் உளபோறனேன்றலல்லது வேறென்ன பயனைச் செயயும்—அளவினன் கண்ணேட்டம் இல்லாத கண் - அளவிற வாத கண்ணேடிதலியுடையவல்லாத கணகள். எ - று.

தோன்றலல்லதென்னுஞ்சொறகள் அவாயநிலையான் வந்தன. சிழிகண்ணேட்டத்தினீக்குதறகு, அளவினனெனறார். ஒருபயனை யஞ் செயயாவென்பது குறிபபெச்சம். (ச)

நிஎகூ. கண்ணிற் கணிகலங் கண்ணேட்ட மஃதின்றேற் புண்ணென் றுணரப் படும். கூ.

இ - ள். கண்ணிற்கு அணி கலம் கண்ணேட்டம் - ஒருவன கணணிறகு அணியுங்கலமாவது கண்ணேட்டம்,—அஃது இனறேல் புண் என்று உணரப்படும் - அக்கலமில்லையாயின் அஃதறிவுடையாராற புண்ணென்றறியப்படுமம். எ - று.

வேறணிகலமின்மையிற் கண்ணிறகணிசலமென்றும், கண்ணியத்தோன்றினும் நோயகளாணும் புலன்பறறலானுங துயாவிளைத்தலேக்கிப் புண்ணென்றுணரப்படுமென்றும் கூறினர். இவை மூனறுபாட்டானும் ஒடாது நின்ற கண்ணின்குறறங் கூறப்பட்டது. ()

நிஎசு. மண்ணே டியைந்த மரத்தனீயர் கண்ணே டியைந்துகண் ணேடா தவர். கூ.

இ - ள். கண்ணேடு இயைநது கண்ணேடாதவர் - ஒடுதறகுரிய கண்ணேடுபொருநதிவைத்து அஃதோடாதவர்—மணணேடு

---

* வாதல் முதலிய இசைக்காரணங்களெட்டாவன வாதல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், எள்ளல, படடை ஏனவிவை. † பண்ணல முதலிய கலைத்தொழில்களெட்டாவன பண்ணல், பரிவட்டணை, ஆராயதல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ, குறும்போக்கு எனவிவை. ‡ திரிகடுகம். க.

இலைகத மரத்து அனேயர் - இயங்காகின்றராயினும் மண்ணேடு பொருந்திநிறகின்ற மரத்தினேயொப்பர். எ - று.

ஒடாதவரென்புழிச் சினேவினே முதன்மேனின்றது. மரமுங கண்ணேடியைந்து கண்ணேடாமையின், இது \ தொழிலுவமம். இதனேச் சுதைமண்ணேடு கூடிய மரப்பாவையென்றுரைப்பாருமுளர். அஃதுரையன்மை காணப்படுங்கண்ணனன்றி அதனுண மறைந்து நிற்கின்ற ஒருசாருள்ளீட்டாற் கூறினமையாலும், "மரக கண்ணே மண்ணுள்வார் கண்ணென்—நிரக்கண்டாய" * என்பதனுமறிக. (சு)

நிஎஎ. கண்ணேட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடை கண்ணேட்ட மின்மையு மில். எ. [யார்

இ - ள். கண்ணேட்டம் இல்லவர் கண் இலர் - சண்ணேட்ட மிலராதவர் கண்ணுடையருமல்லர்;—கண் உடையார் கண்ணேடடம் இன்மையும் இல் - கண்ணுடையவர் சண்ணேட்டமிலராதலு மில்லே. எ - று.

சண்ணுடையராயிற் காட்சிக்கண்ணே அஃதோடுமென்பது பறறிக் கண்ணேட்டமில்லவர் கண்ணிலரெனக் கூறிப் பின அதனேயெதிர்மறைமுகத்தான் விளக்கினர். உம்மை \ இறகதகுதிழியு வெச்சவும்மை. இவையிரண்டுபாட்டானுங் கண்ணேடாதாரதிழிபு கூறப்பட்டது. (எ)

நிஎஅ. \ கருமஞ் சிதையாமற் கண்ணேட வல்லார்க் குரிமை யுடைத்திவ் வுலகு. அ.

இ - ள். கருமம் சிதையாமல் கண்ணேட வல்லார்க்கு-முறை செய்தலாகிய தநதொழிலழியாமற் கண்ணேட வல்ல வேநதாகு-- உரிமை உடைத்து இவ்வுலகு - உரித்தாந்தன்மையுடைத்து இவ்வுலகம். எ - று.

தம்மொடு பயின்றார் பிறரையிடுக்கண்செய்துழி அவரைக சண்ணேடியொறுதார்க்கு முறை சிதைதல் மேல் † "ஓர்தலுகண்ணேடாது" என்ற முறையிலக்கணத்தானும் பெற்றும். முறை சிதையவரும்வழிக் கண்ணேடாமையும் வாராவழிக் கண்ணேடலும் ஒருவற்கியல்பாதலருமையிற் கண்ணேடவல்லார்க்கென்றும,

* முத்தொள்ளாயிரம். வரக்கண்டு நாணுதே வல்லேயா னெஞ்சே—மரக்கண்ணே மண்ணுள்வார் கண்ணென் - நிரகணடாய—வாளுழுவை வெல்கொடியான் வண்புனனீர் காடற்கென்—றோளுழுவந் தோன்றத் தொழுது. † குறள், நிசக.

அவ்வியல்புடையார்க்கு உலகமுழுதும் நெடுங்காலஞ்சேறலின் உரிமையுடைத்தென்றுங் கூறினர். இதனாற் கண்ணோடுமாறு கூறப்பட்டது. (அ)

நிஎகூ. ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. கூ.

இ - ள். ஒறுத்தாற்றும் பண்பினர்கண்ணும் - தம்மையொறுக்குமியல்புடையாரிடத்தும்—கண்ணோடிப பொறுத்தாறறும் பனபே தலை - கண்ணோட்டமுடையராயக் குற்றத்தைப் பொறுக்குமியல்பே அரசர்க்குத் தலையாயவியல்பாவது. எ - று.

பண்பினரென்றதனால் அவர்பயிற்சி பெற்றும். ஒறுத்தாறறும், பொறுத்தாற்றுமென்பன ஈண்டொருசொணீர. (கூ)

நிஅ0. பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். க0.

இ - ள். நஞ்சு பெயக் கண்டும் உண்டி அமைவர் - பயின்றார் தமக்கு நஞ்சிடகனகண்டுவைத்தும் | கண் மறுக்கமாட்டாமையின் அதனேயுண்டி பினனுமவரோடி மேவுவர்—நயத்தக்க நாகரிகமவேண்டுபவர் - யாவராலும் விரும்பத்தக்க கண்ணோட்டத்தினே வேண்டுமவர். எ - று.

நாகரிகமென்பது கண்ணோட்டமாதல் "மூந்தை யிருந்து நடடோர் கொடுப்பி—னஞ்சு முணைபர் நனிநா கரிகர்."* என்பதனாலு மறிக. அரசர் அவரையொறுது கண்ணோடறபாலது தம்மாடடுக்கு றறஞ்செயதழியென்பது இவ்விரண்டுபாட்டானுங் கூறப்பட்டது.

நிகூம் அதி.—ஒற்றுடல்.

அஃதாவது பகை, நொதுமல், நட்பென்னும் மூன்றுகிறத தாமாடடும் நிகழ்ததனவறிதற்கு ஒறறரையாளுதல். மேறசொல்லிய விலக்கணத்தனய அரசனுக்குத் தன்னுடி செலுத்துங்காலும் பிறர்நாடி கொள்ளுங்காலும் வேண்டுவன கூறுகின்றாராகலின், அவ விருமைக்கும் இன்றியமையாதாய இது முனவைக்கப்பட்டது.

நிஅக. ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண். க.

* நற்றிணை, நடுநி.

இ - ள். ஒற்றும் உரை சான்ற நூலும் இவை இரண்டும் - ஒறறுமை புகழமைந்த நீதிநூலுமாகிய இவையிரண்டனையும்—மனனவன் கண் தெற்றென்க - அரசன் தன்னிரண்டுகண்ணுமாகத் தெளிக. எ - று.

ஒறறுத் தன்கண் செல்லமாட்டாத பரப்பெலாஞ்சென்று கணடு ஆண்டு நிகழ்ந்தனவெல்லாமுணர்த்தலானும், நூல் அந்நிகழாதவற்றிற்குத் தன்னுணர்வு செல்லமாட்டாத வினைகளெயெல்லாஞ் சொல்லியுணர்த்தலானும், இவ்விரண்டனையுமே தனக்கு னக்கண்ணும் ஞானக்கண்ணுமாகத் துணிந்துகொண்டொழுகுக வென்பதாம். ஒற்றனை ஒற்றெனறூர், வேந்தனை வேநதெனறூற போல.| தெற்றென்கவென்பது தெற்றெனென்பது முதனிலையாக வநத|வியங்கோள். அது தெறறெனவெனனுஞ் செயவெனெச்சத் தானறிக. இதனால் ஒற்றினது சிறப்புக் கூறபபட்டது. (உ)

நிஅ. எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும் வல்லறிதல் வேந்தன் றொழில். அ.

இ - ள். எல்லார்க்கும் நிகழ்பவை எல்லாம் எஞ்ஞான்றும் வல் அறிதல் – எல்லார்கண்ணும் நிகழ்வனவெல்லாவறறையும நாடோறும் ஒற்றன் விரைந்தறிதல்—வேந்தன் தொழில - அரசனுக்குரிய தொழில். எ - று.

எல்லார்க்குமென்றது மூன்றுதிறத்தாரையும். நான்காவது எழாவதன்டொருட்கண் வநதது. நிகழ்வனவெல்லாமென்றது நல்லவநதீயவுமாய சொற்களையுஞ் செயல்களையும். அவை நிகழ்ந்த பொழுதே அவற்றிற்குத்தக்க அளியாகத் தெறலாகச் செயயவேணுதலின் வல்லறிதலென்றும், அவ்விருதொழிறகும் அறிதல் காரணமாசலின் அதனையேயுபசாரவழக்காற் றொழிலென்றுங் கூறினார். ஒற்றுனென்பது | அதிகாரத்தான் வந்தது. இதனால் ஒற்றினுய பயன் கூறப்பட்டது. (உ)

நிஅக. ஒற்றினு னொற்றிப் பொருடெரியா மன்னவன் கொற்றங் கொளக்கிடந்த தில். கூ.

இ - ள். ஒற்றினுன் ஒற்றிப் பொருள் தெரியா மன்னவன் - ஒற்றினுனே எல்லார்கண்ணும் நிகழ்ந்தவற்றை ஒற்றுவித்து அவறறுனையதும் பயனையாராயாதவரசன்—கொற்றம் கொளக் கிடந்தது இல - வென்றியடையக்கிடந்தது வேறெறுருநெறியில்லை. எ - று.

அந்நிகழ்ந்தனவும் பயனும் அறியாது பகைக்களியனுதல் பிறிதிற்றீராமையின், கொற்றங்கொளக்கிடந்ததில்லென்றூர். இத

ற்குக் கொளக்கிடந்ததொருவென்றியில்லையென்றுரைப்பினுமமையும். இதனால் அத்தொழில் செயற்பாலதவழி வருங்குற்றங் கூறப்பட்டது. (ங)

**நிஅசு. வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதாரென்றாங்
கினைவரையு மாராய்வ தொற்று. சு.**

இ - ள். தம் வினை செயவார் சுற்றம் வேண்டாதார் எனற அனைவரையும் ஆராயவது - தங்காரியஞ் செயவார், சுற்றத்தார், பகைவரென்று சொல்லப்பட்ட அனைவரையும் சொற்செயல்களாலாராயவானே—ஒற்று - ஒற்றனுவான். எ – று.

தம்மென்றது அரசனெனிளப்படுத்தி. அவனுக்குக் காரியஞ் செயவார் செயவனவும், சுற்றத்தார் தன்னிடத்தும் நாட்டிடத்துஞ் செயவனவும், பகைவர் தன்னற்றமாராயதலும மேறறேறப்படுதலும முன்னிட்டுத் தன்னிடத்துச் செயவனவுமறிந்து, அவறறிறகேற்றன செயபவேண்டுதலின்,இம்மூவகையாரையும எஞ்சாமலாராயவேண்டுமென்பார், அனைவரையுமாராயவ தொறறெனறார்.

**நிஅஙி. கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
மூகாஅமை வல்லதே யொற்று. ஙி.**

இ - ள். கடா உருவொடு - ஒற்றப்பட்டார் கண்டால் ஐயுறுதவடிவோடு பொருந்தி—கண் அஞ்சாது - அவர் ஐயுறறறியலுறிற செயிர்த்து நோக்கிய அவர்கண்ணிற்கஞ்சாது நின்று—யாண்டும உகாமை வல்லதே ஒற்று - நான்குபாயமுஞ் செயதாலும மனதது க்கொண்டவறறை உமிழாமை வல்லவனே ஒறறனுவான். எ - று.

கடாவென்பது கடிச்சும் பெயரெச்சத்தெதிர்மறை. ஐயுறுதவடிவாவன பார்ப்பார், வணிகர் முதலாயினுர் வடிவு. (ஙி)

**நிஅசு. துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று. சு.**

இ - ள். துறந்தார் படிவத்தர் ஆகி இறந்து ஆராயந்து - முறறத்துறந்தாராயும் விரதவொழுக்கினராயும் உள்புகுதற்கரியவிடங்களெல்லாம் உள்புக்கு ஆராயவேண்டுவன வாராயந்தறிந்து—என் செயினும் சோர்வு இலது ஒற்று – ஆண்டையார் ஐயுறுபபிடித்து எல்லாத்தன்பமுஞ்செயது கேட்டாலும் தன்னை வெளிபடுத்தாதவனே ஒற்றனுவான். எ - று.

விரதவொழுக்கம் தீர்த்தயாத்திரை முதலாயின. செயினுமென்பது அறவோரென்று செயவாரின்மை விளக்கி நின்றது. மேல்

நால்வகையுபாயத்தினுஞ் சோர்வின்மைசொல்லிவைத்து ராண்டுந் தண்டத்தைப் பிரித்துக் கூறியது அதனது பொறுத்தற்கருமைச் சிறபபு நோக்கி. இதனேப் படிவமென்றதனே வேடமாக்கித் துறந தார் வேடத்தாராகியென்றுரைப்பாருமுளர். (சு)

நிஅஎ. மறைந்தவை கேட்கவற் றுகி யறிந்தவை யையப்பா டில்லதே யொற்று. எ.

இ - ள். மறைந்தவை கேட்க வற்று ஆகி - ஒற்றப்பட்டார் மறையச்செயத செயல்களே அவர்க்குள்ளாயினுரா ற் கேட்க வல்ல னுய—அறிந்தவை ஐயப்பாடு இல்லதே ஒற்று - கேட்டறிந்த செயல்களிற பின்னேயப்படாது துணியவல்லவனே ஒறறனுவான். எ - று.

மறைந்தவை சொல்லுவாரையறிந்து, அவரயிராமற்சென்று ட்டித் தாமே சொல்லும்வகை அதறகேறற சொல்லாகச் செயலாக முனனே வினேத்து, அத்தொடர்பாற்கேட்குங்காலும் உறுதார் போனுநின்று கேட்கவேண்டுதலிற் கேட்கவற்றுகியென்றும், கேட்டறிந்தவறறைத் தானேயையுற்றுவந்து சொல்லின் அரசனுல அவற்றிறகேற்ற வினே செயயலாகாமையின ஐயப்பாடில்லதே யெனறுங்கூறினுர். இவைதான்குபாட்டானும் ஒற்றின திலக்க ணங் கூறப்பட்டது. (எ)

நிஅஅ. ஒற்றொற்றித் தந்த பொருளேயு மற்றுமோ ரொற்றினு லொற்றிக் கொளல். அ.

இ - ள். ஒற்று ஒற்றித் தந்தபொருளேயும் - ஒரொற்றன் ஒற்றி வந்தறிவித்தகாரியத்தன்னேயும்—மற்றும் ஒரொறறினுல் ஒறறிக் கொளல் - பிறனேரொற்றனுலும் ஒறறுவித்து ஒப்புமை கண்டு கொள்க. எ – று.

ஒற்றப்பட்டாரோடொத்துநின்று மாறுபடக்கூறலுங் சூடுமா சலின், ஒருவன்மாற்றங் தேறப்படாதென்பதாம். (அ)

நிஅகூ. ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர் சொற்றொக்க தேறப் படும். கூ.

இ - ள். ஒற்று ஒற்று உணராமை ஆள்க – ஒற்றரையாளுமிட த்து ஒருவனேயொருவனறியாமலாள்க;—உடன் மூவர் சொல் தொக்க தேறப்படும் – அங்ஙனமாண்டவொற்சர்மூவரை ஒருபொ ருண்மேல் வேறுவேறுவிட்டால் அம்மூவர் சொல்லும் பயனுலொ த்தனவாயின், அது மெயயென்று தெளியப்படும். எ - று.

ஆயினென்பது வருவிக்கப்பட்டது. ஒருவனேயொருவனறியிற் றம்முளியைந்து ஒப்பக்கூறுவராகலின் உணராமையாள்கவெனறும், மூவர்க்கு நெஞ்சொற்றுமைபபடுதலும் பட்டால் நீடுநிறற லுங்கூடாமையிற றேறப்படுமெனறுங்கூறினர். இதனானே அஃதொதிலவாயிற் பின்னுமாராயகவென்பதூஉம் பெற்றும். (சு)

நிகூ0. சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற் புறப்படுத்தா னாகு மறை. க0.

இ - ள். ஒற்றின்கண் சிறப்பு அறியச் செய்யற்க - மறைநூ வையறிநது கூறிய ஒற்றினகட்செயயுஞ்சிறப்பினை அரசன் பிறரறி ய செயயாதொழிக;—செயயின மறை புறப்படுத்தான ஆகும - செயதானையிற றன்னகத்தடக்கபபடும் மறையைத்தானே புறத்தி டானும். எ - று.

மறையாவது அவனெற்றனையதூஉம், அவன் கூறியதூஉமாம. சிறபபுபபெற்றவிவன் யாவனென்றும் இது பெறுதற்குக காரணம் யாதெனறும வினவுவாரும் இறுப்பாரும் அயலாராகலின, புறபபடுத்தானாகுமென்றார். இவைமூன்றுபாட்டானும் ஒற்றரை யாளுமாறும், அவராலிகழ்ந்தனவறியுமாறும், அறிநதாற சிறபபுச செயயுமாறுங் கூறப்பட்டன. (ட0)

சூ0 ம் அதி.—ஊக்கமுடைமை.

அஃதாவது மனம் மெலிதலின்றி வினைசெயதற்குட் கிளாச்சியுடைத்தாதல். ஒற்றரான் நிகழநதனவறிந்து அவறறிறகேறற வினைசெயவானுக்கு இஃதின்றியமையாமையின், ஒறறுடலின்பின வைக்கபபட்டது.

நிகூக. உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லா ருடைய துடையரோ மற்று. க.

இ - ள். உடையர் எனப்படுவது ஊக்கம் - ஒருவரை உடையரென்று சொல்லச்சிறந்தது ஊக்கம்;—அஃது இல்லார் மறறு உடையது உடையரோ - அவ்வூக்கமில்லாதார் வேறுடையதூதானும் உடையராவரோ, ஆகார். எ - று.

வேறுடையதென்றது முன்னெய்திநின்ற பொருளை. உம்மை விகாரத்தாற்றொக்கது. காக்குமாறறலிலராகலின், அதுவுமிழபப ரென்பதாம். (க)

குகூ2. உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். உ.

இ - ள். உள்ளம் உடைமை உடைமை - ஊக்கமுடைமையே ஒருவனுக்கு நிலைநின்ற உடைமையாவது;—பொருள் உடைமை நிலையாது நீங்கிவிடும் - மற்றைப்பொருளுடைமை நிலைநில்லாது நீங்கிப்போம். எ - று.

உள்ளம் ஆகுபெயர். ஊக்கம் உள்ளத்துப் பண்பாகலின், அதுதரு நிலைநிற்றலும், பொருள் உடம்பினும் வேறுய அழிதன்மாகலானும் அதற்கு நிலை நில்லாமையுங்கூறினர். கூறவே, அஃது உடைமையன்றென்பது பெறப்பட்டது. (உ)

குகூங. ஆக்க மிழந்தேமென் றல்லாவா ருக்க
மொருவந்தங் கைத்துடை யார். ங.

இ - ள். ஆக்கம் இழந்தேம் என்று அல்லாவார் - இழந்தாராயினும் யாம கைப்பொருளையிழந்தே மென்றலமரார்—ஒருவநதம் ஊககம கைத்து உடையார் - நிலைபெற்றஆக்கத்தைக் கைப்பொருளாக வுடையார். எ - று.

ஆக்கம் ஆகுபெயர். ஒருவந்தமாயஆக்கமென்க. கைத்துக் கையகத்தாயபொருள்: "கைதணடாம் போழ்தே கரவா தறஞ் செயம்மின்" * என்றார் பிறரும். அல்லாவாமைக்கேது வருகின்ற பாடாறற கூறுப. (ங)

குகூச. ஆக்க மதர்விஞையச் செல்லு மசைவிலா
வூக்க முடையா ணுழை. ச.

இ - ள். அசைவு இலா ஊக்கம் உடையாணுழை - அசைவில்லாத ஊக்கத்தையுடையான்மாட்டு—ஆக்கம் அதர் விஞையச் செல்லும - பொருள் தானே வழிவினவிக்கொண்டு செல்லும். எ - று.

அசைவின்மை இடுக்கண் முதலியவற்றுற்றளராமை. வழிவினவிச் சென்று சார்வார்போலத் தானே சென்று சாருமென்பார், அதர்விஞையச்செல்லுமென்றார். எயதுநின்ற பொருளினும் அதற

* நாலடியார், இளமை நிலையாமை,—மற்றறிவா நல்வினை யாமி
னேய மென்னுது—கைதணடாம் போழ்தே கரவா தறஞ்செயம்
மின்—மூற்றியிருந்த கனியொழியத் தீவளியா—னற்கா யுதிர்தலு
மண்டு.

குக் காரணமாயவூக்கஞ் சிறந்ததென்பது இலவை நான்குபாட்டா னுங் கூறப்பட்டது. (சு)

நிகூடு. வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம் மூள்ளத் தனைய துயர்வு. நி.

இ – ள். வெள்ளத்தை அனைய மலர் நீட்டம் - நின்ற நீரினள் வினவாம் நீர்ப்பூக்களின்முனை நீளங்கள்;—மாந்தர்தம் உள்ள த்து அனையது உயர்வு - அதுபோல் மக்கடம்மூக்கத்தளவினதாம அவருயர்ச்சி. எ - று.

மலர் ஆகுபெயர். நீர் மிக்கதனையும் மலர்த்தாள் நீளுமென் பது பட, வெள்ளத்தனையவென்றார். இவ்வுவமையாற்றலான் ஊக் கமிக்கதனையும் மக்களுயர்வரென்பது பெறப்பட்டது. உயர்தல் பொருள் படைகளான் மிகுதல். (நி)

நிகூசு. உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது தள்ளினுந் தள்ளாமை நீர்த்து. சு.

இ – ள். உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் - அரசராயி னுர் கருதுவதெல்லாம தம்முயர்ச்சியையே கருதுக;—அது தள்ளி னும் தள்ளாமை நீர்த்து - அவ்வுயர்ச்சி பால்வகையாற் கூடிற்றில்லை யாயினும், அக்கருத்துத் தள்ளாமை நீர்மையுடைத்து. எ - று.

உம்மை தள்ளாமை பெரும்பான்மையாதல் விளக்கிற்று. தள்ளியவழியுந் தாளாண்மையிற்றவறின்றி நல்லோராற்பழிக்கப் படாமையின், தள்ளாவியற்கைத்தென்பதாம். மேல் உள்ளத்தனை யதுயர்வு என்றதனையே வற்புறுத்தியவாறு. (சு)

நிகூஎ. சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற் பட்டுப்பா டேன்றங் களிறு. எ.

இ – ள். களிறு புதை அம்பின் பட்டுப் பாடு ஊன்றும்-களிறு புதையாகிய அம்பாற் புண்பட்டவிடத்துத் தளராது தன்பெரு மையை நிலைநிறுத்தும்;—உரவோர் சிதைவிடத்து ஒல்கார் - அது போல ஊக்கமுடையார் தாங்கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு வர்த விடத்துத் தளராது தம்பெருமையை நிலைநிறுத்துவர். எ - று.

புதை அம்புக்கட்டு. பன்மை கூறியவாறு. பட்டாலென்பது பட்டெனத் திரிந்துநின்றது. ஒல்காமை களிற்றுடனும், பாடேன்று தல் உரவோருடனும், சென்றியைந்தன. தள்ளினுந்தவருதுள்வி

யது முடிப்பரென்பதாம். இவை மூனறுபாட்டானும் ஊக்கமுடை யாரதுயர்ச்சி கூறப்பட்டது. (எ)

நிகூஅ. உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு. அ.

இ - ள். உள்ளம் இலாதவர்-ஊக்கமில்லாதவரசர்—உலகத்து வளளியம் என்னும் செருக்கு எயதார் - இவ்வுலகத்தாருள் யாம வண்மையுடையமென்று தம்மைத தாமதித்தலைப் பெறார். எ-று.

ஊக்கமில்லையாகவே, முயற்சி, பொருள், கொடை, செருக்கு இவை முறையே இலவாமாகலின், செருக்கெயதாரென்றார். கொடைவென்றியினுயவின்பம் தமக்கல்லது பிறர்க்குப புலனாகாமையின, தன்மையாற் கூறப்பட்டது. (அ)

நிகூகூ. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். கூ.

இ - ள். பரியது கூர்ங்கோட்டது ஆயினும் - எல்லாவிலங்கினுந தான் பேருடம்பினது அதுவேயுமனறிக் கூரியகோட்டையுமுடையதாயினும்,—யானை புலி தாக்குறின் வெரூஉம - யானை தனைப் புலியெதிர்ப்படின் அதறகஞ்சும். எ - று.

பேருடம்பான் வலிமிகுதி கூறப்பட்டது. புலியின்மிக்க மெய வலியுங் கருவிசசிறப்புமுடைத்தாயினும் யானை ஊக்கமின்மையான அஃதுடைய அதறகஞ்சுமென்ற இது, பகைவரின மிகக மெயவலியுங் கருவிச்சிறப்புமுடையராயினும் அரசர் ஊக்கமிலராயின அஃதுடையவரசர்க்கஞ்சுவரென்பது தோன்றநின்றமையின், பிறிதுமொழிதல். (கூ)

சுoo. உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு. கo.

இ - ள். ஒருவற்கு உரும் உள்ள வெறுக்கை - ஒருவற்குத் திணணிய வறிவாவது ஊக்கமிகுதி;—அஃது இல்லார் மரம் - அவ் ஆகமிகுதியில்லாதார் மக்களாகார், மரங்களாவார்;—மக்களாதலே வேறு - சாதிமரங்களோடு இம்மரங்களிடை வேற்றுமை வடிவு மக்கள்வடிவே, பிறிதில்லை. எ - று.

உரமென்பது அறிவாதல் * "உரனென்னுந் தோட்டியாள்" என்பதனானுமறிக. மரமென்பது சாதியொருமை. மக்கட்குள்ள

* குறள, உச.

நல்லறிவுங் காரியமுயற்சியுமின்மைபற்றி மரமென்றும், மரத்திற் குள்ள பயன்பாடின்மைபற்றி மக்களாதலே வேறென்றுங்கூறினர். பயன் பழமுதலியவும், தேவர்கோட்டம், இல்லம், தோ. நாவாயகடகு உறுப்பாதலும் முதலிய. இவமூன்றுபாட்டானும மூக்கமில்லாதாரதிழிபு கூறப்பட்டது. (கo)

சூக - ம் அதி.—மடியின்மை.

அஃதாவது கருதியன செய்யுங்காற் சோம்புதலில்லாமை. ஊக்கமுடையார்கு ஒரோவழிக் குணவயத்தான் மடி வருதலுண்டாகி, இஃதூக்கமுடைமையினபின் வைக்கபபட்டது.

சூoக. குடியென்னுங் குன்ற விளக்க மடியென்னு மாசூர மாய்ந்து கெடும். க..

இ - ள். குடி எனனும் குனறு விளக்கம் - தான் பிறந்த குடியாகிய நந்தாவிளக்கு—மடி என்னும் மாசு ஊர மாயநது கெடுமஒருவன மடியாகிய இருளடர நந்திபபோம். எ - று.

உலகநடையுள்ளதுணையும் இடையறுது தன்னுட்பிறந்தாரை விளக்குதலிற் குடியைக்குன்ருவிளக்கமெனறும், தாமதகுணத்தான் வருதலின் மடியைமாசென்றும், அஃது ஏனையிருளபோலாது அவ்விளக்கத்தைத் தானடர்நது மாயக்கும் வலியுடைமையின் மாசூரமாய்ந்துகெடுமென்றுங் கூறினர். கெடுதல் பெயர்வழக்கமுமில்லையாதல். (க)

சூo2. மடியை மடியா வொழுகல் குடியைக் குடியாக வேண்டு பவர். உ.

இ - ள். குடியைக் குடியாக வேண்டுபவர் - தாம் பிறநத குடியை மேன்மேலுயரும் நற்குடியாக வேண்டுவார்—மடியை மடியா ஒழுகல் - மடியை மடியாகவே கருதி முயற்சியோடொழுகுக. எ - று.

முயற்சியோடென்பது அவாயநிலையான் வந்தது. நெருபபிற் கொடியது பிறிதின்மைபற்றி நெருபபை நெருபபாகவே கருதுக வெனறுறபோல மடியிற்றீயது பிறிதின்மைபற்றிப் பினனும அபபெயர்த்தன்னுனே கூறினர். அங்ஙனங்கருதியதணைக் கடிந்து முயன்றொழுகவே தாமுயர்வர், உயரவே, குடியுயருமென்பார், குடியைக் குடியாகவேண்டுபவரென்றும அங்ஙனமொழுகாக்காற குடி

யழியுமென்பது கருத்து. இனி மடியாவென்பதனை வினையெச்சமாக்கிக் கெடுத்தொழுகுகவென்று உரைப்பாருமுளர். (உ)

சுoகூ. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த குடிமடியுந் தன்னினு முந்து. கூ.

இ - ள். மடி மடிக்கொண்டு ஒழுகும் பேதை பிறந்த குடி - விடத்தகுவதாய மடியைத் தன்னுள்ளே கொண்டொழுகும் அறிவில்லாதான் பிறந்த குடி—தன்னினும் முந்து மடியும் - அவன்றன்னினும் முந்துறவழியும். எ - று.

அழிவு தருவதனை அகத்தே கொண்டொழுகுதலிற் பேதையென்றும், அவனைப் புறந்தரப்படுவதாகலிற் குடி தன்னினுமுந்துற வழியுமென்றுங் கூறினார். ஆக்கத்திற பிற்படினும் அழிவின் முற்படுமென்பதாம். (கூ)

சுoசு. குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து மாண்ட வுஞற்றி லவர்க்கு. சு.

இ – ள். மடி மடிந்து மாண்ட உஞற்று இலவர்க்கு - மடியினை கண்ணே வீழ்தலாற் றிருந்திய முயற்சியிலராயினார்க்கு—குடி மடிந்து குறறம் பெருகும் - குடியும் மடிந்து குற்றமும் பல்கும். எ - று.

மடிந்தெனத் திரிந்துநின்ற வினையெச்சம் இலவரென்னுங் குறிப்பு வினைபயர் கொண்டது. குற்றங்கள் முன்னர்க் கூறுப. இலவ நான்குபாட்டானும் மடியின்றீமை கூறப்பட்டது. (சு)

சுoசூ. நெடுநீர் மறவி மடிதுயி னைங்குங் கெடுநீரார் காமக் கலன். சூ.

இ – ள். மடி நெடுநீர் மறவி துயில் நான்கும் - மடியும் விரைந்து செயவதனை நீட்டித்துச் செயயுமியல்பும் மறப்பும் துயிலுமாகிய இந்நான்கும்—கெடும் நீரார் காமக் கலன் - இறக்குமியல்பினையுடையார் விரும்பியேறும் மரக்கலம். எ - று.

முன்னிற்கற்பாலதாய மடி செய்யுணேக்கி இடைநின்றது. நெடுமையாகிய காலப்பாண்பு அதன்கணிகழ்வதாய செயன்மேனின்றது. காலநீட்டத்தையுடைய செயல் முதன்மூன்றும் தாமதகுணத்திற்றேன்றி உடனிகழ்வனவாகலின், மடியோடு ஒருங்கெண்ணப்பட்டன. இறக்குமியல்பு நாஞலத்தல். இவை தன்புறுநீரார்க்கு இன்புறுத்துவபோன்று காட்டி அவர் விரும்பிக் கொண்டவ

ழித் துன்பத்திடை வீழ்த்தலின், நாளுலந்தார்க்கு ஆக்கம் பயப்பதுபோன்றுகாட்டி அவர் விரும்பியேறியவழிக் கடலிடை வீழ்க்குங் கலத்தினை யொக்குமென்னும் உவமைக்குறிப்புக் காமக்கலனென்னுஞ் சொல்லாற் பெறப்பட்டது. இதற்கு விரும்பிப் பூணுமாபரணமென்றுரைப்பாருமுளர். (ஙூ)

சுoசூ. படியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடை மாண்பய னெய்த லரிது. சூ. [யார்

இ - ள். படி உடையார் பற்று அமைந்தக்கண்ணும் - நிலமுழுதுமாண்டாரது செல்வந் தானே வந்தெய்தியவிடத்தும்—மடி உடையார் மாண் பயன் எய்தல் அரிது - மடியுடையார் அதனான் மாண்ட பயனையெய்துதலில்லை. எ - று.

உம்மை எய்தாமை விளக்கிநின்றது. மாண்பயன் பேரின்பம். அச்செல்வம் அழியாமற்காக்கும் முயற்சியின்மையின் அழியும்,அழியவே, தருதுன்பநீங்காதென்பதாம். இதற்கு நிலமுழுதுமுடையவேந்தர் துணையாதல் கூடியவிடத்துமென் றுரைப்பாருமுளர்.(சூ)

சுoஎ. இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து மாண்ட வுஞற்றி லவர். எ.

இ – ள். மடி புரிந்து மாண்ட உஞற்று இலவர் – மடியை விரும்புதலான் மாண்டமுயற்சியில்லாதார—இடி புரிந்து எள்ளும் சொறகேட்பர் - தந்நட்டார் முன் கழறுதலை மிகச்செய்து அதனாற பயன் காணுமையிற் பின் இகழ்ந்து சொல்லுஞ் சொல்லைக் கேட்பர். எ – று.

இடியென்னும் முதலினிலத்தொழிற்பெயரான், ஈட்டாரென்பது பெற்றும். அவரிகழச்சி சொல்லவே, பிறரிகழ்ச்சி சொல்லாமையே முடிந்தது. அவற்றிற்கெல்லாம் மாறு சொல்லுமாற்றலின்மையின், கேட்பரென்றார். (எ)

சுoஅ. மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் ஞென்னுர்க் கடிமை புகுத்தி விடும். அ.

இ - ள். மடிமை குடிமைக்கண் தங்கின் - மடியினது தன்மை குடிமையுடையான்கண்ணே தங்குமாயின்,—தன் ஒன்னுர்க்கு அடிமை புகுத்திவிடும் - அஃதவனைத் தன்பகைவர்க்கு அடியனாந தனமையையடைவித்துவிடும். எ - று.

மடியினதுதன்மை காரியக்கேடு. குடிமை குடிசெயதற்றன மை. அஃது அதனையுடையவரசன்மேறருதல், தனஞென்ஞ ராக்கென்றதனுன் அறிக. அடியளந்ததனமை தாழ்ந்துநினறே வல்கேட்டல். இவைநான்குபாட்டானும் மடிமைக்குறறங்கள் கூற பபட்டன. (அ)

சூoகூ. குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன் மடியாண்மை மாற்றக் கெடும். கூ.

இ - ள். ஒருவன் மடி ஆண்மை மாற்ற - ஒருவன் தன்மடி யாளுந தனமையை யொழிக்கவே,—குடி ஆண்மையுள் வந்த குற றம கெடும் - அவன்குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங் கள் கெடும். எ - று.

மடியாளுந்தன்மை மடியுடைமைக்கேதுவாய தாமதகுணம். குடிபாண்மை யென்பது உம்மைத்தொகை. அவற்றின்கண வந்த குறறமென்றது மடியானன்றி முன்னே பிறகாரணங்களான் நிகழ நதவுறறை. அவையும் மடியாண்மையை மாற்றி முயறசியுடைய ஞக நீங்குமெனபதாம். (கூ)

சூகo. மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான் முயல தெல்லா மொருங்கு. கo.

இ - ள். அடி அளந்தான் தாயது எல்லாம் - தனனடியள வானே எலலாவுலகையுமளநத இறைவன் கடநத பரப்புமுழுதை யும—மடி இலா மன்னவன் ஒருங்கு எயதும் - மடியிலாதவரசன் முறையானனறி ஒருங்கேயெயதும். எ - று.

அடியளந்தானென்றது வாளா பெயராய் நின்றது. தாவிய தெனபது இடைகுறைந்து நின்றது. எப்பொழுதும் வினையின் கண்ணே முயறலின், இடையீடின்றி யெயதுமென்பதாம். இவை யிரண்டுபாடடானும் மடியிலாதான் எயதும்பயன் கூறபபட்டது.

சூஉ ம் அதி.—ஆள்வினையுடைமை.

அஃதாவது இடைவிடாத மெய்ம்முயறசியுடையனுதல். அஃது ஆளும் வினையெனக் காரியத்தாற் கூறப்பட்டது. மடிகெ டுதலும வினை முயற்சியானன்றியாளப்படாமையின், இது மடி யின்மையின்பின் வைக்கப்பட்டது.

**சுகக. அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். க.**

இ - ள். அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும் - தஞ்சிறுமை நோக்கி நாமிவ்வினைமுடித்தலருமையுடைத்தென்று கருதித் தளராதொழிக;—பெருமை முயற்சி தரும் - அது முடித்தறகேற்ற பெருமையைத் தமக்கு முயற்சியுண்டாக்கும். எ - று.

சிறுமைநோக்கி யென்பது பெருமை தருமென்றதனாலும், வினைமுடித்தலென்பது அதிகாரத்தானும், வருவிக்கப்பட்டன. விடாதுமுயலத் தாம் பெரியராவர், ஆகவே, அரியனவும் எளிதின முடியுமென்பதாம். (க)

**சுகஉ. வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு. உ.**

இ - ள். வினைக்குறை தீர்ந்தாரின் உலகு தீர்ந்தன்று - வினையாகிய குறையைச் செயயாது விட்டாரை உலகம் விட்டது,—வினைக்கண் வினைகெடல் ஓம்பல் - அதனைச் செய்யப்படும் வினைக கட்டவிர்ந்திருத்தலேயொழிக. எ - று.

குறை இன்றியமையாப்பொருள். அது * "பயக்குறை யில்லை தாம் வாழுநாளே" என்பதனானுமறிக. இதற்கு வினைசெயயவேண்டுங் குறையை நீங்கினாரினீங்கிறதென்றுரைபபாருமுளர். (உ)

**சுகங. தாளாண்மை யென்னுந் தகைமைக்கட்டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு. ங.**

இ - ள. தாளாண்மை என்னும தகைமைக்கண் தங்கிற்று - முயற்சியென்று சொல்லப்படுகின்ற உயர்ந்த குணத்தின்கண்ணே நிலைபெற்றது—வேளாண்மை என்னும் செருக்கு - எல்லார்கு முபகாரஞ்செயதலென்னும மேம்பாடு. எ - று.

பொருள் கைகூடுதலான் உபகரித்தற்குரியார் முயற்சியுடையாரென்பார் அவ்வகருணங்கண்மேல் வைத்தும், அது பிறர்மாட்டில்லையென்பார் தங்கிற்றேயென்றுங்கூறினார். இவை மூனறுபாடுடனும் முயற்சியது சிறப்புக் கூறப்பட்டது. (ங)

**சுகச. தாளாண்மை யில்லாதான் வேளாண்மைபேடிகை
வாளாண்மை போலக் கெடும். ச.**

* புறநானூறு. சுத்-ம் குறளில் மேலெடுத்துக காட்டினுமாங்குக்காணக.

இ - ள். தாளாண்மை இல்லாதான் வேளாண்மை - முயற்சி யிலாதவன் உபகாரியாதனமை—பேடி கை வாள் ஆண்மை போலக கெடும - படைகண்டாலஞ்சும் பேடி அதனிடைத் தன கையில் வாளே ஆளுதறறன்மைபோல இல்லையாம். எ - று.

ஆளென்பது முதனிலைத்தொழிற்பெயர். பேடி வாளைப் பணி கோடறகருத்துடையளாயினும் அது தன்னசததான் முடியாத வாறுபோல முயறசியில்லாதான பலர்க்குமுபகரித்தறகருதுடை யளுயினும் அது தன் வறுமையான் முடியாதென்பதாம். வாளாண் மையென்பதறகு வாளாற்செயயுமாண்மையென்றுரைப்பாருமு ளர். இதனுள அஃதில்லாதானது குற்றங் கூறபபட்டது. (உ)

சுஉடு. இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர் துன்பந் துடைதது தூன்றுங தூண். டு.

இ - ள. இன்பம் விழையான் வினை விழைவான் - தனக்கின் பத்தை விரும்பாளுகி வினைமுடித்தலையே விரும்புவான்—தனகே ளிர தூனபம் துடைத்து ஊன்றும தூண் - தனகேளிராகிய பாரத தினறுன்பதனை நீக்கி அதனைத் தாங்குந்தூணும். எ - று.

இஃதேகதேசவுருவகம். ஊன்றுமென்றது அபபொருட்டா நல "மதலையாய மறறதன வீழுனறி யாங்கு" * என்பதனுளும நிக. சுறறததார் நட்டாரது வறுமையுந்தீர்த்து அவர்கேமஞ்செய யுமாறறலையுடையனுமெனவே, தனனைகூறவேண்டாவாயிறறு. காரியத்தை விழையாது காரணத்தை விழைவான் எல்லாபபயனு மெயதுமென்றதனுல், காரணததை விழையாது காரியததை விழை வான் யாதுமெயதாளென்பது பெற்றும். இதனுல் அஃதுடையா னது நனமை கூறப்பட்டது. (டு)

சுஉசு. முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை யின்மை புகுத்தி விடும். சு.

இ - ள். முயற்சி திருவினை ஆக்கும் - அரசர்மாட்டிளதாய முயறசி அவரது செல்வத்தினை வளாகரும்;—முயறறு இனமை இனமை புகுத்தி விடும் - அஃதிலலாமை வறுமையை யகடவித்து விடும. எ - று.

---

* நாலடியார், தாளாண்மை,—கிதலை தினபபட்ட வால மத கக்தை—மதலையாய மற்றதன் வீழுனறி யாங்குக்—குதலைமை தா எதைகட் டோனறிற்ருன பெற்ற—புதல்வன மறைபபத கெடும்.

செல்வம் • அறுவகையங்கங்கள். வறுமை அவற்றுள் வறியராதல். அதனை யடைவிககவே, பகைவராணழிவரென்பது கருத்து. (கூ)

கூகஎ. மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
ருளுளா டாமரையி னாள். எ.

இ – ள். மா முகடி மடி உளாள் • கரியசேட்டை ஒருவள மடியின்கண்ணே யுறையும்,—தாமரையினாள் மடி இலான தாள உளாள் எனப - திருமகள் மடியிலாதானது முயறசிககண்ணே யுறையுமெனறு சொல்லுவர் அறிஞரோர். எ – று.

பாவத்தின் கருமை அதன்பயனய முகடியேலேறறபபட டது. மடியும முயறசியுமுடையார்மாடடு நிலேயை அவை தமமேல வைத்துக் கூறினார். இவையிரண்டுபாடடானும அவவிருமைகளு மேது கூறபபடடது. (எ)

கூகஅ. பொதியின்மை யார்க்கும் பழியன் றறிவதிங்
தாள்வினை யின்மை பழி. அ.

இ – ள். பொறி இன்மை யார்க்கும் பழியனறு - பயனைத் தருவதாய விதியில்லாமை ஒருவறகும் பழியாகாது;—அறிவு அறி ஙது ஆளவினை இனமை பழி - அறிடவேண்டுமவறனறயறிரு வினை செயயாமையே பழியாவது. எ – று.

அறியவேண்டுவன வலி முதலாயின. தெயவமியையாவழி ஆள்வினையுடைமையாற பயனில்லையென்பாரை நோககி, உலகம பழவினைபறறிப பழியாது ராண்டைக் குறறமுடைமைபறறியே பழிபடதென்றார். அதனால விடாதுமுயலவெனபது குறிப பெசசம். (அ)

கூகக. தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். கூ.

இ – ள். தெயவத்தான் ஆகாது எனினும - முயன்ற வினை பால்வகையாற் கருதியபயனைத் தாராதாயினும்,—முயறசி தன மெய வருத்தக் கூலி தரும் - முயற்சி தனக்கிடமாய உடமபு வரு திய வருததத்தின் கூலியளவு தரும், பாழாகாது. எ – று.

தெயவத்தானுயவழித் தன்னளவின் மிக்க பயனைத் தருமெ னபது உமமையாற் பெற்றும். இருவழியும பாழாகலினமையின தெயவநோக்கியிராது முயலகவெனபது கருத்து. (க)

சூஉ0. ஊழையு முப்பக்கங் காண்ப ருலிவின்றித்
தாழா துஞற்று பவர். க0.

இ - ள். ஊழையும் உப்பக்கம் காண்பர் - பயனே விலக்குவ தாய ஆழினையும் புறங்காண்பா—உலவு இனறித் தாழாது உஞ் றறுபவர் - அவ்விலக்கிற ஙியாது வினையைத் தாழவற முயல் வார். எ — று.

தாழ்வறுதல் சூழ்ச்சியினும், வலிமுதலியவறிதலினும், செய லினுங் குறறமறுதல். ஊழ் ஒருகாலாக இருகாலாகவல்லது விலக் கலாகாமையிற பலகான் முயல்வார் பயனெய்துவரென்பார், உப்ப க்கங்காண்பரென்றார். தெயவத்தானிடுக்கண்வரினும் முயற்சி விடற் பாலதன்றென்பது இவை மூனறுபாட்டானுங் கூறபபட்டது. ()

சூகூ ம் அதி.—இடுக்கணழியாமை.

அஃதாவது வினையின்கண் முயல்வான், தெய்வத்தாலாக, பொருளின்மையாலாக, மெய்வருத்தத்தாலாகத் தனக்கிடுக்கண் வந் தழி, அதற்கு மனங்கலங்காமை. அதிகாரமுறைமையும் இதனா னேவிளங்கும்.

சூஉக. இடுக்கண் வருங்கா னகுக
யடுத்தூர்வ தஃதொப்ப தில். க.

இ - ள். இடுக்கண் வருங்கால் நகுக - ஒருவன் வினையாற் றனக்கிடுக்கண் வருமிடத்து அதற்கழியாது உண்மகிழ்க;--அதனை அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல் - அவ்விடுக்கணை மேன்மே லடரவல்லது அம்மகிழ்ச்சிபோல்வது பிறிதில்லையாகலான். எ-று.

வினை இனிது முடிந்தழி நிகழற்பாலதாய மகிழ்ச்சியை அதற் கிடையே இடுக்கண் வருவழிச் செயயவே, அவன் அழிவின்றி மனவெழுசியான் அதனைத்தள்ளி அச்குறை முடிக்குமாற்றலு டையனுமாகலின், அதனையடுத்தூர்வதஃதொப்பதிலெனறார். ()

சூஉஉ. வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும். உ.

இ - ள். வெள்ளத்து அனைய இடும்பை - வெள்ளம்போலக் கரையிலவாய இடும்பைகளெல்லாம்,—அறிவுடையான் உள்ளத் தின் உள்ளக் கெடும் - அறிவுடையவன தன்னுள்ளத்தான் ஒன் றனை நினைக்க, அத்தனையானே கெடும். எ - று.

இடும்பையாவது உள்ளத்து ஓர்கோட்பாடேயன்றி [illegible]றிதி
ல்லையென்பதூஉம் அது மாறுபடக்கொளள நீங்குமென்பதூஉம்
அறிதல்வேண்டுதலின், அறிவுடையானென்றும், அவ்வுபாயத்தெ
ண்மை தோன்ற உள்ளத்தினுள்ளவென்றுங் கூறினார். இவையிர
ண்டுபாட்டானும் ஊழினுைய இடுக்கணுல் அழியாமைக்கு உபா
யங் கூறப்பட்டது. (உ)

சூஉகூ. இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்
கிடும்பை படாஅ தவர். கூ.

இ - ள். இடும்பைக்கு இடும்பை படாதவர் – வினைசெயுங்
கால் அதற்கிடையே வந்த துன்பத்திறகு வருந்தாதவர்—இடும்பை
க்கு இடும்பை படுப்பர் – அத்துன்பதனக்குத் தாந்துன்பம்
வினைபபர். எ - று.

வருந்துதல் இளைத்து விடாநினைத்தல். மனத்திட்பமுடைய
ராய விடாது முயலவே வினை முறறுப்பெற்றுப் பயன்படும், பட
வே, எல்லாவிடும்பையுமிலவாமாகலின், இடும்பைக்கிடும்பை படு
பபரென்றார். வருகின்றபாட்டிரண்டினும் இதற்கிவ்வாறே கொ
ள்க. சொறபொருட்பின்வருநிலை. (கூ)

சூஉசா. மடித்தவா யெல்லாம் பகடன்ன ஞற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து. சா.

இ - ள். மடித்த வாய் எல்லாம் பகடு அன்னன் - மிலங்கிய
விடங்களெல்லாவற்றினுஞ் சகடமீர்க்கும் பகடுபோல வினையை
யெடுத்துக்கொண்டு உய்க்கவல்லானை—உற்ற இடுக்கண் இடர்ப்
பாடு உடைத்து - வருதறற இடுக்கண் தானே இடர்ப்படுதலையு
டைத்து. எ - று.

மடித்தவாயெல்லாமென்பது பொதுப்பட நின்றமையின், சக
டத்திறகு அளற்றுநிலமுதலியவாகவும், வினைக்கு இடையூறுகளா
கவுங் கொள்க. பகடு மருங்கொற்றியும் மூக்கூன்றியும் தாடவ
ழ்ந்தும் * அரிதினுயக்குமாறுபோலத் தன்மெயவருத்த நோக்
காது முயன்றுயபபானென்பார், பகடன்ஞனென்றார். (சா)

சூஉருி. அடுக்கி வரினு மழிவிலா ஞற்ற
விடுக்க ணிடுக்கட் படும். ருி.

இ - ள். அடுக்கி வரினும் - இடை விடாது மேன்மேல் வந்தன
வாயினும்,—அழிவிலான் உற்ற இடுக்கண் இடுக்கட்படும் - தன

* சிந்தாமணி முத்தியிலம்பகம், கஅசு.

ஞாளக்கோட்பாடு விடாதான் உற்றவிடுக்கண்டாம் இடுக்கணி லே படடுப்போம். எ - று.

ஒனறே பலகால வருதலும் வேறுபட்டன விராய்வருதலும டஙக, அடுக்கிவரினுமெனறார். அழிவென்னுங்காரணபபெயர் காரி யத்தினமேனின்றது. இவை மூனறுபாடடானும் தெவவதகாலுய தறசழியாமை கூறபபட்டது. (நி)

சூஉசு. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென் றேம்புத றேற்ற தவர். சு.

இ - ள். அற்றேம என்று அல்லற்படுபவோ - வறுமைக்கால தது யாம வறிய மாயினேமென்று மனததாற றுயருழபபரோ— பெறறேம எனறு ஓமபுதல தேறறுதவா - செலவக்காலத்து இது பெறறேமென்று இவறுதலிலடறியாதார். எ - று.

பெறறவழி இவறுமை நோக்கி அறறவழியும் அபபகுதி விடா தாகலின, அலலற்பாடில்லோயிறறு. இதனுற பொருளினமையா லுயதறகு அழியாமையும் அதற்குபாயமுங் கூறபபட்டன. (சு)

சூஉஎ. இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக் கையாறுக் கொள்ளாதா மேல். எ.

இ - ள். உடமபு இடுமபைக்கு இலக்கம் என்று - நாற்கதியி னுமுளளவுடமபுகள இடுமபையென்னும் வாளுக்கிலககெனறு தெ ளிந்து,—கலக்கதைதக் கையாறுக் கொளளாதாம் மேல் - தமமேல வநத இடும்பையை இடும்பையாகக் கொளளார் அறிவுடையார். எ - று.

ஏகதேசஉருவகம். உடம்பு சாதிப்பெயர். கலக்கமெனனுங காரியபபெயர் காரணத்தினமேனினறது. கையாறெனபது ஒரு சொல. இதறகு ஒழுக்கநெறியென்றுரைப்பாருமுளர். இயல்பா கக கொள்வரெனபது குறிபபெசசம. (எ)

சூஉஅ. இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான் றுன்ப முறுத லிலன் அ.

இ – ள். இன்பம் விழையான் இடும்பை இயல்பு என்பான - தன்னுடம்பிற்கு இனபமாயவறறை விரும்பாதே வினையாலிடுமபை பெயறதல் இயல்பென்று தெளிந்திருப்பான்—துன்பம் உறுதல் இலன - தனமுயறசியாற் றுன்பமுறான். எ - று.

இன்பத்தை விழையினும், இடும்பையை யியல்பென்னது ாக்கக்கருதினும், துனபம் வினைதலின, இவ்விரண்டுஞ் செயயா தானைத் துனபமுறுதலிலனெனமுர். (அ)

சூஉகூ. இன்பத்து ளின்பம் விழையாதான் துன்பத்துட் டுன்ப முறுத லிலன். சூ.

இ - ள். இன்பத்துள் இன்பம் விழையாதான் - வினையாற் றனக்கின்பம் வருதுழி அதனே யனுபவியாநின்றே மனத்தான விருமபாதான—துன்பத்துள் துன்பம உறுதல் இலன் - துன்பம வருதுழியும அதனே யனுபவியாநின்றே மனத்தான வருநதான. எ - று.

துன்பம் முயறசியான் வருமிடக்கண். இரண்டையும் ஒருதனமையாகக கோடலின, பயனகளுமிலவாயின. (கூ)

சூகூ0. இன்ஞமை யின்ப மெனக்கொளி ஞகுந்தன் ஞென்ஞர் விழையுஞ் சிறப்பு. க0.

இ - ள். இன்ஞமை இன்பம் எனக் கொளின் - ஒருவன வினை செயயுமிடத்து முயற்சியான் வருநதுன்பநதன்னையே தனக கினபமாகக் கறபித்துகொள்வனையின,—தன ஒன்ஞர் விழையும சிறபபு ஆகும - அதனாற் றனபகைவர் நன்குமதிதற்கேதுவாய உயரசசியுணடாம். எ - று.

துன்பநதானும் உயிர்க்கியல்பன்றிக் கணிகமாய் மனத்திடை நிகழவதோ கோடபாடாகலின, அதனை மாறுபடக்கொளளவே, அதறகழிவினறி மனமகிழ்சசியுடையனைய அதனாற றொடங்கிய வினை முடித்தேவிடுமாற்றலுடையனெனபது கருத்து. இவை நானகுபாட்டானும் மெயவருத்தத்தானுயதறகு அழியாமையும அதறகுபாயமுங் கூறப்பட்டன. (க0)

அரசியல் முற்றிற்று.

அங்கவியல்.

இனி முறையானே அரசியனடாத்துதற்கண் ஒனறற்கொன்று துணையாய அங்கங்களாறனதியலபு மூபபதிரணடதிகாரத்தாற கூறுவானெடுத்துக்கொணடு, அவையாறனுள்ளும் "காவற சாகாடுகைத்தற்" * கண் அவ்வரசற்குணையாய அமைச்சனதியல்பு

* புறநானூறு, கஅசு.

பதத்திகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கண் அமைச்சுக் கூறுகின்றார.

சூசோம் அதி.—அமைச்சு.

அஃதாவது அமைச்சனது தன்மை: என்றது அவன்றன் குணங்களையுஞ் செயல்களையும்.

சூகூக. கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு மருவினையு மாண்ட தமைச்சு. க.

இ - ள். கருவியும் - வினைசெயயுங்கால அதற்கு வேண்டுங் கருவிகளும்—காலமும் – அதற்கேறறகாலமும்—செயகையும - அது செயயுமாறும்—செய்யும் அருவினையும் - அவ்வாற்றிறசெயய படுமை அவவரிய வினைதானும்—மாண்டது அமைச்சு - வாயபப வெணண வல்லவனே அமைச்சனுவான். எ - று.

கருவிகள் தானையும் பொருளும். காலம் அது தொடங்குங காலம். செயகையெனவே, அது தொடங்குமுபாயமும் இடையூறு நீக்கி முடிவுபோக்குமாறும் அடங்கின. சிறிய முயறகியாற்பெரிய பயனறுவதெனபார், அருவினையெனறார். இவையைநதினையும் வடநூலார் மநதிரத்திற்கங்கமென்ப. (க)

சூகூஉ. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் லாள்வினையோ டைந்துடன் மாண்ட தமைச்சு. உ.

இ - ள். வன்கண் - வினைசெயதற்கண் அசைவின்மையும்—குடி காத்தல் – குடிகளைக் காத்தலும்—கறறு அறிதல் - நீதிநூல்க ளைக கறறுச் செயவன தவிர்வனவறிதலும்—ஆள்வினை - முயற்சி யும்—ஐநதுடன் மாண்டது அமைச்சு - மேற்சொல்லிய அவ்வங் கங்களைந்துடனே திருந்தவுடையானே அமைச்சனுவான். எ - று.

எண்ணெடு நீண்டது. அவ்வைநதெனச் சுட்டு வருவிக்க. இந் நான்கனையும் மேற்கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது, அவையு மிவறறோடு கூடியே மாட்சிமைப்படவேண்டுதலானும், அவற்றி றகு ஐநதென்னுந்தொகை பெறுதற்கும். இனி இதனை ஈண்டென் ணியவற்றிற்கே தொகையாக்கிக் குடிகாத்தலென்பதனைக் குடிப்பி றப்பும், அதனையொழுக்கத்தாற் காத்தலுமெனப் பகுப்பாரும், கற றறிதலென்பதனைக் கற்றலும் அறிதலுமெனப் பகுபபாருமுளர். அவர் உடனென்பதனை முற்றும்மைபபொருட்டாக்கியும், குடியெ ன்பதனை ஆகுபெயராக்கியும் இடர்ப்படுப. (உ)

சுசுசு. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப் பொருத்தலும் வல்ல தமைச்சு. சு.

இ - ள். பிரித்தலும் - வினை வந்துழிப் பகைவர்க்குத் துணை யாயினரை அவரிற் பிரிக்கவேண்டிப் பிரித்தலும்—பேணிக்கொள லும் - தம்பாலாரை அவர்பிரியாமற் கொடை இன்சொற்களாற பேணிக்கொள்ளுதலும்—பிரிந்தார்ப் பொருத்தலும்-முன்னே தம மினும் தம்பாலாரினும் பிரிந்தாரை மீண்டுப் பொருத்தவேண்டிற பொருத்தலும்—வல்லது அமைச்சு - வல்லவனே அமைச்சனு வான். எ - று.

இவற்றுள் அப்பொழுதை நிலைக்கேற்ற செயலறிதலும் அதனை அவரறியாமல் ஏற்றவுபாயத்தாற் கடைப்பிடித்தலும் அரியவாத னைக்கி, வல்லதென்றார். வடநூலார் இவற்றுட் பொருத்தலைச்சந தியென்றும், பிரித்தலை விக்கிரகமென்றுங் கூறுப. (சு)

சுசுச. தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச் சொல்லலும் வல்ல தமைச்சு. ச.

இ - ள். தெரிதலும்-ஒருகாரியச்செய்கை பலவாற்றுற்றோன் றின் அவற்றுள் அவதாரணாயந்தரிதலும்—தேர்ந்து செயலும் - அது செய்யுங்கால் வாயக்குந்திறனுடிச் செய்தலும்—ஒருதலையாச்சொல் லலும் - சிலரைப் பிரித்தல் பொருத்தல்செயற்கண் அவர்க்கு இது வே செயற்பாலதென்று துணிவுபிறக்கும்வகை சொல்லுதலும—வல்லது அமைச்சு - வல்லவனே அமைச்சனுவான். எ - று.

தெரிதல் செயன்மேலதாயிற்று, வருகின்றது அதுவாகலின்.

சுசுசுரு. அறனறிந்தான்றமைத்தசொல்லானெஞ்ஞான்றுங் திறனறிந்தான் றேர்ச்சித் துணை. ரு.

இ - ள். அறன் அறிந்து ஆன்று அமைந்த சொல்லான் - அர சனுற் செயயப்படும் அறங்களையறிந்து தனச்கேற்ற கல்வியானினை நதமைந்த சொல்லையுடையனைய—எஞ்ஞான்றும் திறன் அறிந் தான் - எக்காலத்தும் வினை செய்யுந்திறங்களையறிந்தான்—தேர்ச சித் துணை - அவர்க்குச சூழ்ச்சித்துணையாம். எ - று.

தன்னரசன் சுருங்கியகாலத்தும் பெருகியகாலத்தும் இடை நிகராயகாலத்துமென்பார், எஞ்ஞான்றுமென்றார். சொல்லானெ னபதனை ஒடிவுருபின்பொருட்டாய ஆறுபாக்கியுரைப்பாருமு ளர். இவையைந்துபாட்டானும் அமைச்சரது குணத்தன்மை கூறப்பட்டது. (ரு)

**சுருக்கம். மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை.	சு.**

இ - ள். மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு - இயற்கையாகிய நுண்ணறிவைச் செயற்கையாகிய நூலறிவோடு உடையராய அமைச்சர்கருகு—அதிநுட்பம் முன நிறபவை யாவுள - மிக்கநுட்ப தையுடைய சூழ்ச்சிகளாய முனனிறபன யாவையுள! எ - று.

மதிநுட்பமென்பது பின்மொழிநிலையல். அது தெயவந்தரவேண்டுதலின் முற கூறப்பட்டது. நூலென்பதுஉம அதிநுட்பமென பதுஉம், ஆகுபெயர். அதியென்பது வடசொல்லுள மிகுதிபபொருளதோரிடைச்சொல்; அது திரிநத நுட்பமென்பதனோடு தொககது. முன்னிறறல் மாறறூர் சூழச்சியாயின தஞ்சூழச்சியால் அழியாது நிற்றல். இனி அதிநுட்பமெனறு பாடமோதி, அதனினுட்பம் யாவென்றுரைப்பாருமுளர்; அவர் சூழ்ச்சிக்கினமாய முனசுட்டபபடுவதொன்றில்லாமையும், சுட்டுபெயர் ஐந்தாமுருபேறற வழி அவ்வாறு நில்லாமையுமறிநதிலர். பகைவர் சூழ்வனவறறறத் தாமறிந்து அழித்து அவரறிநதழியாதன தாஞ்சூழ்வரென்பது கருத்து. இதனால் அவரது சிறப்புக் கூறபபட்டது. (சு)

**சுருக்கம். செயற்கை யறிந்தக் கடைத்து மூலகத்
தியற்கை யறிந்து செயல்.	எ.**

இ — ள். செயற்கை அறிந்தக்கடைத்தும் - நூனெறியான் வினைசெயயுநதிறங்களையறிநத விடத்தும்,—உலகத்து இயற்கை அறிநது செயல் - அப்பொழுது நடக்கின்ற உலகவியறகையையறிநது அதனோடு பொருந்தச் செய்க. எ - று.

கடைத்துமென்புழித் து பகுதிப்பொருள் விகுதி. நூனெறியேயாயினும் உலகநெறியோடு பொருநதாதன செயயறக. செயினை அது பழிக்குமென இயறகையறியாற பயன் கூறியவாறு (எ)

**சுருக்கம். அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்.	அ.**

இ - ள். அறி கொன்று அறியான் எனினும் - அறிநதுசொலலியாராது அறிவையுமழித்து அரசன தானுமறியானேயாயினும,—உறுதி கூறல் உழையிருநதான் கடன - அக்குற்றம் நோக்கியொழியாது அவனுக்கு உறுதியாயின கூறுதல் அமைச்சனுககு முறறமை. எ - று.

அறியென்பது முதனிலைத்தொழிற்பெயர். கோறல் தான்கொ ளாமைமேலும் இகழாதுகூறுதல். உழையிருந்தானெனப்பெயர் கொடுத்தார், அமாத்தியரென்னும் வடமொழிப்பெயர்க்கும் பொரு ண்மை அதுவாகலின். * உறுதி கூருக்கால் அவனதிறுதியெய்தாது றத்தை உலகந தன்மேலேற்றுமென்பார், கூறல்கடனென்றார். இவையிரண்டுபாட்டானும் அவர்செயல் கூறப்பட்டது. (அ)

சுகூ. பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ ரெழுபது கோடி யுறும். கூ.

இ - ள். பக்கத்துள் பழுது எண்ணும் மந்திரியின் - பக்கத்தி ருந்து பிழைபபவெண்ணும் அமைச்சனெருவனில்—ஒரெழுபது கோடி தெவ் உறும் - அரசனுக்கு எதிர் நிறபார் ஒரெழுபதுகோடி பகைவருறுவர். எ - று.

எழுபதுகோடியென்றது மிகப்பலவாயவெண்ணிற்கொண்டு காட்டியவாறு. வெளிப்படநிற்றலான் அவர் காக்கபபடுவர், இவன உடபகையாய நிறறலாற் காக்கபபடானென்பதுபற்றி, இவ்வாறு கூறினார். எழுபதுகோடிமடஙகு நலலரெனறுரைபபாரும், எழு பதுகூறு தலையென்று பாடமோதுவாருமுளர். (கூ)

சுசo. முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர் திறபபா டிலாஅ தவர். கo.

இ - ள். முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செயவர் - செய யபபடும் வினைகளே முன அடைவுபடவெண்ணிவைத்தும், செயயு ஙகால் அவை முடிவிலவாகவே செயயாநிறபர்—திறப்பாடு இலாத வர் - முடித்தறகேறற கூறுபாடில்லாதார். எ - று.

அக்கூறுபாடாவன வநத வநத விடையூறுகட்கு ஏறறவேறற பரிகாரமறிநது செயதலும், தாநதிண்ணியராதலுமரம். பிழையாம லெணண வல்லராயவைத்தும செயதுமுடிக்கமாடாருமுளரென பதாம. இவையிரண்டுபாட்டானும் அமைசசருள விடப்படுவா ரது குறறங் கூறபபட்டது. (கo)

சூரி ம் அதி.—சொல்வன்மை.

அஃதாவது தான் கருதிய வினை முடியுமாற்றால் அமைச் சிய னடத்தறகேதுவாய சொற்களைச் சொலல வல்லனதல். மேல "ஒருதலையாச் சொல்லலும் வல்ல" † தெனறதனையே சிறப்புப்ப

* அமாத்தியரெனபதனுள அமா ஏன்பதறகுபொருள் அண்மை.
† திருக்குறள், சுசு.

ற்றி. விரித்துரைக்கின்றமையின், இஃது அமைச்சின்பின் வைக் கப்பட்டது.

சுசக. நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று. க.

இ - ள். நாநலம் என்னும் நலன் உடைமை - அமைச்சர்க்கு இன்றியமையாக் குணமாவது சான்றோரான் நாநலமென்று சிறப பித்துச் சொல்லப்படும் நலத்தினையுடையராதல்,—அந்நலம் யாநல த்து உள்ளதூஉம் அன்று - அந்நலம் பிறாக்கும் பிறநலமெல்லா வற்றுளளும் அடங்குவதன்றி மிக்கதாகலான். எ - று.

நாவாலுளதாய நலமென விரியும். இந்நலம உலகத்தைத் தம வயத்ததாக்கும் அமைச்சர்க்கு வேறுகவேண்டுமென்னும் நீதிநூல் வழக்குபபற்றி நாநலமென்னுநலனென்றும், பிறர்க்கும் இதுபோற கிறந்தது பிறிதின்மையான் அந்நலம் யாநலத்துள்ளதூஉமன்றெ னறுங கூறினார். பிரித்தல் பொருதுதல் முதலிய தொழிலில்லாதா ர்க்கும் இஃதின்றியமையாதாயபின் அத்தொழிலார்க்குக் கூறவே ணடுமோவென்பது கருத்து. (க)

சுசஉ. ஆக்கமுங் கேடு மதனல் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு. உ.

இ - ள். ஆக்கமுங் கேடும் அதனல் வருதலால் - தம்மரசற குமு அங்ஙங்கட்குமு ஆக்கவழிவுகள் தஞ்சொல்லான் வருமாக லாண்,—சொல்லினகண் சோவு காத்து ஓம்பல் - அப்பொறறித் தாய சொல்லின்கட் சோர்தலில அமைசசர் தங்கணிகழாமற போற நிகாக்க. எ - று.

ஆக்கத்திற்கேதுவாய நற்சொல்லியும் கேட்டிற்கேதுவாய தீச் சொல்லியும சொல்லாதலொப்புமைபறறி அதனலெனறார். செய யுளாகலின, சுட்டுப்பெயர் முன்வந்தது. பிறர் சோர்வுபோலாது உயிர்கட்கெல்லாம் ஒருங்குவருதலால், காத்தோமபலென்றார். இவையிரண்டுபாட்டானும் இஃது இவர்க்கின்றியமையாதென்பது கூறபபட்டது. (உ)

சுசஊ. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல். ஊ.

இ - ள். கேட்டார்ப் பிணிக்கும் தகை அவாய் - நட்பாயே ற்றுகொண்டாரைப்பின் வேறுபடாமற் பிணிக்குங் குணங்களை

அவாவி—கேளாரும் வேட்ப மொழிவது - மற்றைப் பகையாய ஏறறுக்கொள்ளாதாரும் பின் அப்பகைமையொழிந்து நட்பினை விரும்பும்வண்ணஞ் சொல்லப்படுவதே—சொல்லாம் - அமைச்சாக்குச் சொல்லாவது. எ - று.

அகீருணங்களாவன வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுபபயன்றருதலென்றிவை முதலாயின. அவறறை யவாவுதலாவது சொல்லுவான் குறித்தனவேயன்றி வேறு றுண்ணுணர்வுடையோர் கொள்பவறறின்மேலும் நோக்குடைத்தாதல். அவாயென்னுஞ் செயதெனெச்சம் மொழிவதென்னுஞ்செயபபாட டவினை கொண்டது. இனிக் கேட்டார் கேளாரென்பதற்கு நூல கேடடார் கேளாதாரெனவும், வினவியார் வினவாதாரெனவுமுரைபபாருமுளர். தகையவாயென்பதற்கு எல்லாருங் தகுதியையுடையவாயென்றுரைத்தார்; அவர் அபபண்மை மொழிவதெனனும ஒருமையோடு இயையாமை நோக்கிறறிலர். இதனுற சொல்லின திலக்கணங் கூறப்பட்டது. (சு)

சுசசு. திறனறிந்து சொல்லுக சொல்லி யறனும்
பொருளு மதனினூஉங் கில். சு.

இ - ள். சொல்லைத் திறன் அறிந்து சொல்லுக - அடபெறறிதாய சொலலே அமைசசா தம்முடையவுங் கேட்பாருடையவுமாய திறங்களையறிந்து சொல்லுக,—அதனின் ஊங்கு அறனும் பொருளும இல் - அங்ஙனஞ் சொல்லுதறகு மேற்பட்ட அறனும் பொருளுமில்லையாகலான். எ - று.

அநதிறங்களாவன குடிப்பிறபபு, கல்வி, ஒழுக்கம், செல்வம, உருவம், பருவமென்பனவறறுள் வருந்தகுதிவேறுபாடுகள். அவறறையறிந்து சொல்லுதலாவது அவற்றுற் றமக்கும் அவர்க்குமுளவாய ஏறறத்தாழ்வுகளை யறிந்து அவ்வம்மரபாற சொல்லுதல. அஃது உலகத்தோடொட்டவொழுகலையும் இனிமையையும் பயதலின் அறனுமாயிற்று, தங்காரியமுடித்தலிற பொருளாயிறறு. அறனும்பொருளுமெனக் காரணத்தைக காரியமாக்கிக கூறினார். (சு)

சுசசு. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து. சு.

இ - ள். சொல்லைப் பிறிது ஓர்சொல் வெல்லும் சொல் இனமை அறிந்து - தாஞ்சொல்லக்கருதிய சொலலைப பிறிதோர்சொலாய வெல்லவல்லதொருசொல் இல்லாமையறிந்து,—அச்சொலலைச் சொல்லுக - பின அச்சொல்லைச் சொல்லுக. எ - று.

பிறிதோர்சொல் மாற்றுரைது மறுதலைச்சொல். வெல்லுதல் குணங்களானமிகுதல். அதுவே வெல்லச்சொல்லுகவென்பதாம். இன்ன பிறிதோர்சொல் வெல்லுஞ்சொல்லெனச் செவ்வெண்ணு கரு, ஒத்தசொல்லும் மிக்கசொல்லுமுளவாகாமற சொல்லுகவென லுரைபபாருமுளர். இது சொற்பொருட்பின்வருநிலை. (சு)

சூசசு. வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோ
மாட்சியின் மாசற்றூர் கோள். சூ. [டன்

இ - ள். வேட்பத் தாம் சொல்லிப் பிறர் சொற்பயன் கோடல - பிறாக்குத் தாஞ்சொல்லுங்கால் அவர் பின்னுங்கேட்டலே விருமபுமாறு சொல்லி, அவா தமக்குச்சொல்லுங்கால் அச்சொல் லினபயனைக் கொணடொழிதல்—மாடசியின மாசு அறறூர்கோள - அமைசசியலுட் குறறமறறூரது துணிபு. எ - று.

பிறாசொறகளுட் குறறமுளவாயினும அவை நோக்கியிகழா ரெனபதாம. வல்லாரையிகழதல் வல்லுநர்க்குத் தகுதியனமையின, இதுவுமுடன கூறினர். இவை மூனறுபாடடானும அதனைச சொல லுமாறு கூறப்பட்டது. (கூ)

சூசஎ. சொலல்வல்லன் சோர்விலனஞ்சா னவனீ
யிகல்வெல்லல யார்க்கு மரிது. எ.

இ - ள். சொலல் வல்லன - தானெண்ணியகாரியங்களைப பிற ர்கேறபச் சொலலுதல்வல்லனய—சோர்வு இலன - அவை மிகப பலவாயவழி ஒன்றினுஞ் சோர்விலனய—அஞ்சான - அவைகளுஞ் சானறினன் யாவன—அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது - அவனை மாறுபாட்டினகண் வெல்லுதல் யாவாக்குமரிது. எ - று.

ஏறபச்சொல்லுதல அவர்க்கு அவை காரியமல்லவாயினும ஆமெனத துணியுமவகை சொல்லுதல். சோர்வு சொல்லவேண்டுவ தனை மறபபாலெழிதல். இம்மூனறுகுணமுமுடையானை மாறறு ராயப பிரிதலதல் பொருத்தல்செயது வெலவாரிலலையெனபதாம். ()

சூசஅ. விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். அ.

இ - ள். தொழில் நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப பெறின - சொல்லபபடுங்காரியங்களை நிரல்படக் கோத்து இனிதா கச செலலுதலவலலாரைப பெறின,—ஞாலம விரைநது கேட குமு - உலகம அவறறை விரைநதேறறுக்கொளளுமு. எ - று.

தொழில்சாதி யொருமை. நிரல்படக் கோத்தல் முன்சொல வனவும் பின்சொல்வனவுமறிந்து அமமுறையே வைத்தல். இனி தாதல் கேட்பார்க்கின்பம் பயத்தல். சொல்லுதல்வல்லான் ஞாலஞ் ரவருளொருவன் என்ற வடமொழிபறறிப பெறினென்ரூ. ாண டிங கேட்டல் ஏற்றுக்கோடல். இவையிரண்டுபாட்டானும அவவா ற்ரூற சொல்லுதல்வல்லாரது சிறப்புக கூறபபடடது. (அ)

சூசசூ. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்ரூ தவர். கூ.

இ - ள். மாசு அற்ற சில சொல்லல் தேற்ரூதவர் - குற்றமறற னவாயச் சிலவாய வார்த்தைகளே அவ்வாறறூற சொல்லுதலேயறியா தார்—பல சொல்லக் காமுறுவர் - பலவாய வார்த்தைகளைத் தொடுத் துச் சொல்ல விரும்புவர். எ - று.

குறறம் மேறசொல்லிய குணங்கட்கு மறுதலேயாயின. இடை விடாது பலசொல்லுதலேயுஞ் சொல்வன்மையெனறு விரூமபுவாரு ளர், அவர் இவ்வாறு சொல்லமாட்டாதாரே, வலலார அதுசெயயா ரென யாப்புறுப்பார், மன்றவென்ரூர். (கூ).

சூடு0. இணரூழ்த்து நாரூ மலரினேயர் கற்ற
துணர விரித்துரையா தார். க0.

இ - ள். கற்றது உணர விரித்து உரையாதார் - கறறுவைதத நூலைப் பிறரறியும்வண்ணம் விரித்துரைக்கமாட்டாதவர—இணர ஊழத்தும நாரூ மலர் அனேயர் - கொத்தின்கண்ணே மலாநதுவை தஞும நாரூத பூவையொப்பர். எ - று.

செவ்விபெற மலர்ந்துவைத்தும் நாறறமில்லாத பூச் சூடப படாதவாறுபோல நூலைக் கற்றுவைத்துஞ் சொல்லமாட்டா தார் நன்குமதிக்கப்படாரென்றமையின், இது தொழிலுவமையா யிறறு. இவை இரண்டுபாட்டானும் அது மாட்டாதாரதிழிபு கூறபபட்டது. (ச0)

சூசூ ம் அதி.—வினைத்தூய்மை.

அஃதாவது செயயப்படும் வினைகள் பொருளேயன்றி அற மும் புகழும் பயந்து நல்வாதல். சொலலேயன்றிச் செயலும ந்ன்ரூகவேண்டுமென்கின்றமையின், இது சொல்வன்மையினபின வைக்கப்பட்டது.

சுருக. துணைநல மாக்கந் தருஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும். க.

இ - ள். துணை நலம் ஆக்கம் தருஉம் - ஒருவனுக்குத் துணையது நனமை செல்வமொனறனையுங்கொடுகரும்;—வினை நலம் வேணடிய எல்லாம தரும - அவ்வளவன்றி வினையது நன்மை அவன் வேண்டியன யாவறறையுங்கொடுக்கும். எ - று.

வேண்டியவெல்லாமென்றது இம்மைக்கண் அறம் பொருளினபமுதலாயவற்றையும் மறுமைக்கட்டான்விரும்பிய பதங்களையுமா இதனூற காணப்படுந துணைநன்மையினுங் கருதப்படும் வினைநனமை சிறந்ததென வினைத்தூயமையது சிறப்புக் கூறப பட்டது. (க)

சுருஉ. என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. உ.

இ - ள். புகழொடு நன்றி பயவா வினை - தம்மரசனுக்கு இம்மைக்கட் புகழும் மறுமைக்கண் அறமும பயவாத வினைகளை—எனறும் ஒருவுதல் வேண்டும் - அமைசசர்க்கு எக்காலத்துமொழிதல்வேண்டும். எ – று.

பெருகல், சுருங்கல், இடைநிற்றலென்னும் நிலைவேறுபாடு காலத்தான் வருதலின, எனறுமென்றார். வேண்டுமெனபது ஈண்டு இன்றியமையாதென்னும் பொருட்டு. (உ)

சுருஊ. ஒஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர். ஊ.

இ - ள. ஆதும் என்னுமவர் - மேலாகக்கடவேமென்று கருதுவார்—ஒளிமாழ்கும் வினை செய ஒதல்வேண்டும் - தம்மொளி கெடுதற்குக் காரணமாய வினையைச் செயதலைத் தவிர்க. எ - று.

ஒதல்வேண்டுமென்பது ஒருசொன்னீர்மைத்து. ஒவுதலென்பது குறைநதுநின்றது. ஒளி தாமுளகாலத்து எல்லாராலும் நன்குமதிக்கப்படுதல். செயலெனனும் முதனிலைத்தொழிறபெயர் மாறறப்பட்டது. அன்றிச் செயவினையென வினைத்தொகையாக் கியவழிப் பொருளின்மையறிக. ஒளி கெடவருவது ஆக்கமன்றெனபதாம். (ஊ)

சுருஎ. இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். எ.

இ - ள்: இடுக்கட்படினும் இளிவந்த செயயார் - தாமிடுக்க ணிலேபடவரினும், அது தீர்தற்பொருட்டு முன் செயதார்க்கு இளி வந்த வினைகளைச்செயயார்—நடுக்கு அறற காட்சியவா - னிளக்கமுற்ற தெளிவினையுடையார். எ - று.

சிறிதுபோழ்திற் கழிவதாய இடுக்கணேக்கி எஞ்ஞான்றுங்க ழியாதவிழிவு எபதற்பாலதன்றெனபதூஉம் அஃதெயதினுலும் வருவது வருமென்பதூஉம் தெளிவராகலால், செயயாரென்றார். (டு)

சூருடு. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று. டு.

இ - ள். எறறு என்று இரங்குவ செயயற்க - யான் செயதது எதற்கன்மைத்தெனறு பின் முனேயிரங்கும் வினைகளை ஒருகாலுஞ் செயயாதொழிக,—செயவரனேல் மற்று அன்ன செயயாமை நனறு — அனறி ஒருகான்மயங்கி அவற்றைசெயயுந்தன்மையனு யினுலுயின், பின்னிருநது அவ்விரங்கல்களைச் செய்யாதொழிதல் நனறு. எ - று.

இரங்குவனென முன்வந்தமையிற் பின் அன்னவெனச் சுட்டி யொழிநதார. அவ்வினைகளது பன்மையான், இரச்சமும் பலவா யின. அசெயற்குப பின்னிருந்திரங்குவதுயின், அது தீரும் வாயி லறிநதிலனெனவும், திட்பமிலனெனவும், பயனிலனென செயங்ன முனெனவும், தனபழியைத் தானே தூற்றுங்முனெனவும், எல லாருமிகழ்தலிற பினனிரங்காமை நன்றெனறார். இதுவும், வினைத் தூயார் செயலாகலின், உடனசூறப்பட்டது. பிறறொடறறுச் செவ்வானுயின் அவைபோல்வனவுஞ்செயயாமை நனறெனப் பிற ரெலலாம் இயைபறவுரைத்தார். (டு)

சூருசு. ஈன்றுள் பசிகாண்பா னுயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. சு.

இ - ள். ஈன்றுள் பசி காண்பான் ஆயினும - தனனெப பயந தாளது பசியை வறுமையாற்கண்டிரங்குந் தன்மையனுயினுனெ னினும்,—சான்றோர் பழிக்கும் வினை செயயற்க - அது சுட்டி அறிவுடையார் பழிக்கும் வினைகளை ஒருவன் செயயாதொ ழிக. எ — று.

ஈறறந்த மூப்பினராய இருமுதுகுரவருங் கற்புடைமனைவியுங் குழவியும் பசியான் வருந்துமெல்லைக்கண் தீயனபலவுஞ்செதாயி னும் புறநதருகவென்னும் அறனறறபொதுவிதி பொருணல்வழி

பொருளுதலும் அரசர் தொழிறகுரியராதலும் நன்குமதிக்கறபாடு முடைய அமைச்சாக்கெயதாமைபறறி, இவவாறு கூறினார். இவை யைநதுபாடடானும் பாவமும் பழியும் பயகரும் வினை செயயற்க வெனபது கூறபபடடது. (சு)

சூறுள. பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர் கழிநல் குரவே தலை. எ.

இ - ள். பழிமலைந்து எயதிய ஆக்கத்தின – சாலாதார் தீயவி னைகளைச செயது அதனால பழியைத் தமமேற்கொணடு பெறற செலவத்தின—சானறோ கழி நல்குரவே தலை – அது மேறகொ ளளாத சானறோரனுபவிகரும் மிக்க நல்குரவே உயாநதது. எ-று.

நிலையாத செலவத்தின்பொருட்டு நிலையின பழியை மேற கோடல சாலபோடியையாமையின, சானறோகழிநல்குரவே தலை யெனறார். (எ)

சூறுஅ. கெடுந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதா முடிந்தாலும் பீழை தரும். அ.

இ – ள். கடிநத கடிநது ஒரா செயதார்க்கு - நூலோர் கடிந தவினைகளைத தாமுங்கடிநதொழியாது பொருணேர்சிக்செயத ஆமைசாகரு—அவைதாம் முடிநதாலும பீழை தரும - அவை தூயவணமையின் முடியா, ஒருவாறரூன முடியினும பின்னுனபத னையே கொடுக்கும். எ - று.

முடிதல் கருதியபொருடருதல் பீழைதருதலாகிய பொருளி னெருழில அதறகுக காரணமாய வினைகண்மேலேறறபபட்டது.()

சூறுகூ. அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும் பிற்பயக்கு நற்பா லவை. கூ.

இ - ள். அழக் கொண்ட எல்லாம் அழப் போம் - ஒருவன தீயவினைகளைச செயது பிறரிரஙகக் கொண்ட பொருளெல்லாம் இமமையிலே அவன்ருனிரங்கப்போகாநிற்கும்,—நற்பாலவை இழ பபினும பிறபயக்கும் - மறறைத் தூயவினையான் வநத பொருள கள் முனனிழநதானையினும அவனுகுப பினனர் வந்து பயன கொடுக்கும். எ - று.

பின்னெனவே, மறுமையுமடங்கிற்று. பொருள்களான் அவ ற்றிற்குக் காரணமாய வினைகளதியல்பு கூறியவாறு. (கூ)

சூசூ0. சலித்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று. க0.

இ - ள். சலத்தால் பொருள் செயது ஏமார்த்தல் - அமைச்சன் தீயவினைகளாற பொருளபடைத்து அதனால் அரசனுக்கேமஞ் செயதல்—பசுமட்கலத்துள நீர் பெயது இரீஇயறறு - பசியமட்கலத்துளளே நீரைபபெயது அதறகேமஞ்செயததனோடொகுமெ - று.

முன் ஆக்கம் பயப்பனபோறருனறிப் பின்னழிவே பயதலால், அவை சலமெனப்பட்டன. ஏமமார்த்தலெனபது ஏமாாத்தலெனருயிறறு. ஏமத்தையடையப்பண்ணுதலென்றவாறு. இருத்துதல் நெடுங்காலமிருப்பசெயதல். அரசனும்பொருளும் சேரபபோமென்பதாம். பிறரெல்லாம் ஏமாதலென்று பாடமோதி, அதறகு மகிழதலென்றும், இரீஇயற்றென்பதற்கு வைத்தார்போலுமென்றுமுரைத்தார்; அவர் அவை தன்வினையும் பிறிதினவினையுமாய உவமையிலகணத்தோடு மாறுகோடல் நோகஇறறிலா. இவைநானகுபாட்டானும அதறகுக் காரணங கூறபபட்டது. (க0)

சூள ம் அதி.—வினைத்திட்பம்.

அஃதாவது அத்தாய வினை முடிப்டானுக்கு வேண்டுவதாய மனததிணமை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

சூசூக. வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற. க.

இ - ள். வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம் - வினைசெய்தறகட்டிண்மையென்று சொல்லபபடுவது அதனை முடித்தறகுரியானொருவன் மனத்தினது திண்மை;—மறறைய எலலாம் பிற - அஃதொழிந்தனவெல்லாம அதற்குத் திண்மையென்று சொல்லப்படா. எ - று.

ஒழிநதனவாவன படை, அரண், நட்பு முதலியவறறின்றிணமைகள். அவையும் அதற்கு வேண்டுவனவாய இனமாகலின மறறையவென்றும, வேண்டினும அஃதில்வழிப பயனிலவாகலிற் பிறவென்றுங கூறினார். இதனால் வினைத்திட்பமாவது இன்னதென்பது கூறபபட்டது. (க)

சூசூஉ. ஊருராா லுற்றபி னெல்காமை யிவ்விரண்டி
னூறென்ப ராய்ந்தவர் கோள். உ.

இ - ள். ஆய்ந்தவர் கோள் = முன் நீதியாராய்ந்த அமைச்ச ரது தணிபு—ஊறு ஓரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின் ஆறு என்பர் - பழுதுபடும் வினைகளைச் செய்யாமையும் செயயும வினை தெயவத்தாற்பழுதுபட்டவழி அதற்குத் தளராமையுமாகிய இவ்விரண்டன் வழியெனபர் நூலோர். எ - று.

தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப்பூண்ட வியாழ வெள்ளி களது தணிபு தொகுத்துப் பின் நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின், ஈண்டு வினைதணய்மையும் உடன்கூறினர். உறுதலுடையதனை முன் ஊறென்றமையின் உற்றபினென்றும, இவவிரண்டினகண்ணே பட்டதென்பார் இரண்டிஞறெனறுங் கூறினர். ஊறொராரென்று பாடமோதுவாருமுளர், அஃது ஒல் காமையென்னுமெண்ணேடும் இரண்டென்னுங தொகையோடும் இயையாமை அவரறிநதிலர். (உ)

சூசூகூ. கிடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக் னெற்ரு விழுமந் தரும். கூ. [கொட்கி

இ - ள. கடைக் கொட்கச் செய்தக்கது ஆண்மை - செயப படும வினையை முடிவின்கட் புலப்படும்வகை முன்னெல்லாம மறைத்துச செயவதே திட்பமாவது;—இடைக் கொட்கின் எறரு விழுமம் தரும - அங்ஙனமன்றி இடையே புலபபடுமாயின் அப புலப்பாடு செயவானுககு நீங்காத இடும்பையைக கொடுக்கும. எ - று.

மறைத்துச் செய்வதாவது அங்கமைந்துமெண்ணியாறு பிற றியாமலும்; தானறிநதனூஉம், தன்னிங்கிதம், வடிவு, செயல, சொற்களான் அவருயத்தணராமலும் அடக்கிச் செயதல். அத்தி ட்பம், ஆண்டன்மையான வருதலின், ஆண்மையெனப்பட்டது. எறருவிழுமமாவன பகைவர் முன்னறிந்து அவ்வினையை விலக்கு தல், செயவானை விலக்குதல் செயவராகலின், அவற்றுனை வரு வன. விழுமம் சாதிப்பெயா. இவையிரண்டுபாட்டானும் அதனது பகுதி கூறபபட்டது. (கூ)

சூசுச. சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ் சொல்லிய வண்ணஞ் செயல். ச.

இ - ள். சொல்லுதல் யார்ச்சும் எளிய - யாரம் இவ்வினையை இவ்வாற்ருற செயதுமென நிரல்படச் சொல்லுதல் யாவர்க்குமெ ளிய;—சொல்லியவண்ணம செயல் அரியவாம் - அதனை அவ்வாற் ருனே செயதல் யாவர்க்கு மரியவாம். எ - று.

சொல்லுதல், செயலென்பன சாதிப்பெயர். அரியவற்றையெ ண்ணிச்சொல்லுதல் திட்பமில்லாதார்க்குமியறலின், எளியவென ரூர் இதனுல் அதனதருமை கூறபபட்டது. (ச)

சுசுஙி. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க ணூறெய்தி யுள்ளப் படும். ஙி.

இ - ள். வீறு எய்தி மாண்டார் வினைத்திட்பம் - எண்ணுந் தாற் சிறப்பெயதிப் பிறவிலக்கணங்களாலும் மாட்சிமைபபடட அமைச்சரது வினைத்திட்பம்,—வேந்தன்கண் ணூறு எயதி உள்ளப படும் - வேநதனகண்ணே உறுதலேயெயதலான், எல்லாராலும நனகுமதிக்கபபடும். எ - று.

வேந்தன்கணூறெயதல் எடுத்தவினை அதனுன் முற்றுப்பெற் றுச் செல்வமும் புகழும் அவன்கண்ணவாதல். எயதலானென்பது திரிநது நின்றது. உள்ளல் மதிப்பான் மறவாமை. இதனுல் அதன சிறபபுக் கூறபபட்டது. (ஙி)

சுசுசு. எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார் திண்ணிய ராகப் பெறின். சு.

இ - ள். எண்ணிய எண்ணியாங்கு எய்துப - தாமெய்த எண் ணிய பொருள்களெலலாவற்றையும் அவ்வெண்ணியவாறே எய துவர்;—எண்ணியார் திண்ணியராகபபெறின் - எண்ணியவர் அவ றிறகு வாயிலாகிய வினைக்கட் டிண்மையுடையராகப்பெறின். எ – று.

எளிதினெய்துபவென்பார், எண்ணியாங்கெய்துப வென்ரூர். அவர் அவ்வாறல்லதெண்ணுமையிற் றிண்ணியராகவே வினைமுடி யும், அது முடிய அவையாவையுங் கைகூடுமென்பது கருத்து. இதனுல் அஃதுடையாரெயதும் பயன் கூறப்பட்டது. (சு)

சுசுஎ. உருவுகண் டெள்ளாமைவேண்டுமுருள்பெருந்தே கச்சாணி யன்ரு ருடைத்து. எ. [ர்க்

இ - ள். உருள் பெருந்தேர்க்கு அச்சு ஆணி அன்ரூர் உடை த்து - உருளாகினற பெரிய தேர்க்கு அச்சின்கணணியிபோல வினை க்கட்டிண்ணியாரையுடைத்து உலகம்;—உருவு கண்டு எள்ளாமை வேண்டும் - அதனுல் அவரை வடிவின சிறுமைநோக்கி இகழ்தலே யொழிக. எ - று.

சிறுமை, எள்ளாமைவேண்டுமென்பதனானும். உவமையாலும் பெறலும். அச்சு உருள்கோத்த மரம். தூணி உருள் கழலாது அதன்கடைகளைக் செருகுமது. அது வடிவாற சிறிதாயிருந்தே பெரிய பாரத்தைக் கொண்டுபோய்க்குந்திட்பமுடைத்து, அதுபோல, வடிவாறசிறியராயிருந்தே பெரிய வினைகளைக் கொண்டுய்க்குந் திட்பமுடைய அமைச்சருமுளர், அவரை அத்திட்பநோக்கி அறிந்துகொளக வெனபதாம். இதனால் அவரையறியுமாறு கூறபபட்டது. (எ)

சுசுஅ. கலங்காது கண்ட வினைக்கட் டளங்காது தூக்கங் கடிந்து செயல். அ.

இ - ள. கலங்காது கண்ட வினைக்கண்-மனந்தெளிந்து செய்வதாகத தணிந்த வினையினகண்—தளங்காது தூக்கம் கடிந்து செயல் - பின்னைதலின்றி கீட்டித்தகிலையொழிந்து செயக. எ-று.

கலங்கியவழி ஒழிவதும் செயவதுபோற் றோனறுமாகலின், தெளிந்தது பலகாலாராயந்து தாஞ்செயவதாக ஓத்த வினையைக் கலங்காது கண்டவினையென்றார். தளங்காமை திட்பமுடைமை.()

சுசுகூ. இன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி யின்பம் பயக்கும் வினை. கூ.

இ – ள். இன்பம் உற வரினும் - முதற்கண் மெய்ம்முயற்சியாற் றமக்குத் துன்பம் மிக வருமாயினும்,—இன்பம் பயக்கும் வினை துணிவு ஆறறிச் செயக - அது நோக்கித் தளராது முடிவினகண் இன்பம் பயக்கும் வினையைத் திட்பமுடையராய்ச் செயக. எ – று.

துணிவு கலங்காமை. அஃதுடையார்க்கல்லது கணிகமாய முயறசித்துன்ப நோக்காது கிலையுதலுடைய பரிணமவின்பத்தை நோகஙிச் செயதல கூடாமையின், துணிவாற்றிச்செயகவென்றார். இவையிரண்டிபாட்டானும் அவர் வினைசெயயுமாறு கூறப்பட்டது.

சுஎ0. எனைத்திட்ப மெய்திய கண்ணும் வினைத்திட்பம் வேண்டாரை வேண்டா துலகு. க0.

இ - ள். வினைத்திட்பம் வேண்டாரை - வினைத்திட்பத்தை இது நமக்குச் சிறநததென்று கொளளாத அமைச்சரை,—எனைத்திட்பம் எயதியக்கண்ணும் - ஒழிநத திட்பங்களெல்லாமுடையராயிடத்தும்,—வேண்டாது உலகு - நன்குமதியார் உடர்நதோரா. எ - று.

மனத்தின்கட் டிட்பமில்லாதார்க்குப் படை, அரண், நட்பு முதலியவறறின்றிட்பங்களெல்லாம் உளவாயினும், வினை முடியாதாம், ஆகவே, அவையெல்லாங் கெடுமென்பதுபற்றி உலகு வேண்டாதென்றார். இதனால் வினைத்திட்பமில்லாதாரதிழிபு கூறப படடது. (கo)

சுஅ ம் அதி.—வினைசெயல்வகை.

அஃதாவது அத்திட்பமுடையவமைச்சன் அவ்வினையைச செயயுந்திறம். அதிகாரமுறைமையும இதனானே விளங்கும.

சுஎக. சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு தாழ்ச்சியுட் டங்குத றீது. க.

இ - ள். சூழ்ச்சி முடிவு துணிவு எயதல் - விசாரத்திற்கெல்லையாவது விசாரிகின்றான் இனி இது தபபாதென்னுந துணிவினைப பெறுதல்,—அததுணிவு தாழச்சியுள தங்குதல தீது - அங்ஙனந துணிவுபெறற வினை பின நீடடிப்பின்கட்டங்குமாயின், அது குற்றமுடைத்து. எ - று.

சூழசசிமுடிவு துணிவெயதலெனவே, துணிவெயதுமளவுஞ் சூழவேண்டுமென்பது பெற்றும். பின்னாத் துணிவு ஆகுபெயர். நீடடிப்பு செயயுங்காலத்துச் செயயாமை. அஃதளவழிக் காலகழிவாகலானும், பகைவர் அறிந்தழித்தலானும் முடியாமையின், அதனைத தீதென்றார். (க)

சுஎஉ. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க தூங்காது செய்யும் வினை. உ.

இ - ள். தூஙகிச் செயறபால தூஙகுக - நீட்டித்துச் செயயும பருதியவாய வினைகளுள நீட்டிக்க,—தூங்காது செயயும வினை தூஙகற்க - நீட்டியாது செயயும் வினைகளுள நீடடியாதொழிக. எ - று.

இருவழியும் இறுதிக்கட்டொக்க ஏழாவது விரிக்கப்பட்டது. இருவகை வினைகளும வலியானுங்காலத்தானும் அறியப்படும். மாறிச்செயயின், அவை வாயாவென்பது கருதது. மேறறூங்காமையெனறார், ஈண்டதனைப் பகுத்துக்கூறினார். இவையிரண்டுபாட்டானும் பொதுவகையால் வினைசெயயுந்திறங் கூறப்பட்டது. (உ)

சுஎங. ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக் செல்லும் வாய் நோக்கிச் செயல். ங. [காற்

இ - ள். ஒல்லும் வாய் எல்லாம் வினைநன்று - வினைசெய்யுங்கால் இயலுமிடத்தெல்லாம் போராற்செயதல் நன்று;—ஒல்லாக்கால் செல்லும் வாய நோக்கிச் செயல் - அஃதியலாவிடத்து ஏனை மூன்றுபாயத்துள்ளும் அது முடிவதோருபாயநோக்கிச் செயக. எ – று.

இயலுமிடம் பகையிற்றான் வலியனாயகாலம். அக்காலத்துத் தண்டமே நன்றெண்ணார், அஞ்சுவது அத்தற்கேயாகலின். இயலாவிடம் ஒத்தகாலமும் மெலியகாலமும். அவ்விரண்டு காலத்துஞ் சாம பேத தானங்களுள் அது முடியுமுபாயத்தாற் செயகவென்றார், அவை ஒன்றற்கொன்று வேறுபாடுடையவேனும் உடம்படுத்தறபயத்தாற றம்முளொக்குமாகலின். இதனுள் வலியான், ஒப்பான், மெலியனென நிலை மூவகைத்தெனபதூஉம், அவறறுள் வலியது சிறப்பும், கூறப்பட்டன. (சு)

சுஎச. வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற் றீயெச்சம் போலத் தெறும். ச.

இ - ள். வினை பகை என்ற இரண்டின் எச்சம் - செயயத் தொடங்கிய வினையும் கீளையத் தொடங்கிய பகையுமென்று சொலலபபட்ட இரண்டனதொழிவும்—நினையுங்கால தீயெச்சமபோலதெதறும் - ஆராயுங்காற றீயினதொழிவுபோலப் பின வளாநது கெடுகும். எ - று.

இனி இக்குறை என்செயவதென்று இகழ்ந்தொழியற்க, முடியசெயகவெனபதாம. பின் வளர்தலொபபுமைபறறிப பகையெசமும உடன் கூறினார். இதனுன் வலியான் செயயுநதிறங் கூறபபடடது. (ச)

சுஎடு. பொருள்கருவி காலம் வினையிடனெ டைந்து மிருஉர வெண்ணிச் செயல். டு.

இ - ள். பொருள் கருவி காலம் வினை இடனெடு ஐநதும் - வினைசெயயுமிடத்துப பொருளுங் கருவியுங் காலமும் வினையும இடனுமாகிய இவ்வைந்தினையும்—இருள் தீர எணணிச் செயல - மயக்கமறவெண்ணிச் செயக. எ - று.

எண்ணெடு பிறவழியுங் கூட்டபபட்டது. பொருள் ஆழியும் பொருளும ஆகும் பொருளும். கருவி தன்றினையும மாற்றார்தானையும. காலம் தனக்காங்காலமும் அவர்க்காங்காலமும். வினை தான

வல்லவினையும் அவர் வல்லவினையும். இடம் தான் வெல்லுமிட மும் அவர் வெல்லுமிடமும். இவற்றைத் தான் வென்றியெய்துங் திறத்திற பிழையாமலெண்ணிச் செயகவென்பதாம். (கூ)

கூஎசூ. முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். சூ.

இ - ள். முடிவும் - வினைசெய்யுங்கால் அது முடிதற்குளதாம் முயற்சியும்—இடையூறும் - அதற்கு வருமிடையூறும்—முறறியாங்கு எய்தும் படுபயனும் - அது நீங்கி முடிந்தாற் ருனெய்தும பெரும்பயனும—பார்த்துச் செயல் - சீர்தூக்கிச் செயக. எ - று

முடிவு ஆகுபெயர். முயறசியிடையூறுகளதளவிற் பயனதளவு பெரிதாயிற செயகவென்பதாம். (சூ)

கூஎஎ. செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல். எ.

இ - ள். செயவினை செய்வான் செயன்முறை - அவ்வாற்ருற செயயபபடும் வினையைத் தொடங்கினான் செய்யுமுறைமையாவது—அவ்வினை உள் அறிவான் உள்ளம் கொளல் - அதனதுளப பாட்டினையறிவான் கருத்தினைத் தானறிதல். எ - று.

அவ்வாறென்றது பொருண் மூதலியவெண்ணலியும் முடிவு முதலிய தூக்கலியும். உளறிவான் முனசெயது போநதவன. அவன் கருத்து அவன செயது போந்த உபாயம். அதனையறியவே, தானும் அதனுறசெயது பயனெய்துமென்பதாம. இவை மூன்று பாடடானும் ஒபபான் செயயுந்திறங் கூறப்பட்டது. (எ)

கூஎஅ. வினையான் வினையாக்கிக் கோட னனைகவுள்
யானையால் யானையாத் தற்று. அ.

இ – ள். வினையான் வினை ஆக்கிக்கோடல் - செய்கின்றவினையாலே அன்னது பிறிதுமோர்வினையை முடித்துக்கொள்க;—நனைகவுள் யானையால் யானை யாத்தற்று - அது மதத்தானனைந்த கபோலத்தினையுடைய யானையாலே அன்னது பிறிதுமோர் யானையைபபிணித்ததலை டொக்கும். எ - று.

பிணித்தற்கருமை தோன்ற நனைகவுளென்பது பின்னுங் கூட்டபபட்டது. தொடங்கிய வினையானே பிறிதுமோர்வினையை

முடிதகறகுபாயமாமாறு எண்ணிச்செயக, செயயதவே,' அமமுறை யான எலலாவினையும எளிதின் முடியுமென்பதாம். (அ)

சுஎசு. நிட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே யொட்டாரை யொட்டிக் கொளல். 'சு.

இ - ள். நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே - வினை செயவானும் றன்னட்டார்க்கு இனியவறறைச் செயதலினும் விரை ருது செயயபபடும்—ஒட்டாரை ஒட்டிக் கொளல் - தன்பகைவ ரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாகஙக கோடல். எ - று.

அவவினை வாயதறபயத்தவாய இவ்விரண்டும பகைவர்க் குத்தனமெலிவு புலனுவதன்முன்னே செயகவெனபார், விரைாத தெனறூர். விரைருது செயயபபடுவதெனறவாறு. வினைசெயயுந ருறுமாகலிற பகைவரோடொட்டாராயிறறு. தன்னெடடார பிற ருட கூடாமல மாறறி வைததலெனினுமமையும. (கூ)

சுஅ0. உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறிற் கொளவர் பெரியார்ப பணிந்து. க0.

இ - ள. உறை சிறியார் - ஆளுமிடஞ்சிறியராய அமைச்சர்,— உள நடுஙகல ஞ்சி - தமமினவலியா எதிர்ந்தவழித தமபகுதி நடுங்கலியஞ்சி,—குறை பெறின பெரியாரப பணிந்து கொளவா - அநநிலைககு வேண்டுவதாய சநது கூடுமாயின, அவரைத தாழாது அதனேயேறறுக்கொள்வா. எ - று.

இடம நாடுமெ அரணும். அவறறது சிறுமை ஆள்வா மேலே ற்றபபட்டது. மெலியாரோடு சநதிக்கு வலியார இயைதலரிதாக வின, பெறினென்றூர. அடியிலே மெலியராயினூ தமபகுதிய மஞசி நீஙகின முதலொடுங கெடுவராகலின, அது வாராமற சிறிது கொடுதது சநதினேயேறறுக்கொளகவெனபதாம். பணிதல் மான மூடையாக்குக் கருகதனமையின, கொள்வரென உலகியலாற கூறினூர. இவை மூனறுபாடடாலும மெலியான செயயுநதிறங கூறபபடடது. (க0)

சுகூம் அதி.—தூது.

அஃதாவது சநதி விகதிரகஙகட்கு வேறறு வேந்தரிடைச செலவாரதுதனமை. அவ்விரணடனையும மேல் வினைசெயல்வகை யென்றமையின, இஃதனபின வைக்கப்பட்டது. தான் வகுத்துக

கூறுவான்] கூறியது கூறுவாவினைத் தூது இருவகைப்படும். அவருள முனனேன் அமைச்சனேடொப்பானுகலானும், பினனேன அவனிற காறகூறு குணங குறைந்தோனுகலானும, இம் மைச்சியலாயிறறு.

சுஅக. அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம் பண்புடைமை தூதுரைபபான் பண்பு. க.

இ - ள். அன்பு உடைமை - தன் சுற்றத்தாரமாட்டு அனபுடையனுதலும்—ஆன்ற குடிபபிறதுதல - அமைச்சுப பூணரகமாக குடியின்கட்பிறத்தலும்—வேநது அவாம் பணபு உடைமை - அரசாசாதி விருமபும பணபுடையனுதலும—தூது உரைபபான பணபு - தூதுவார்த்தை சொல்லுவானுகஇலக்கணம். எ - று.

முன்னேயஇரண்டனலும், முறையே சுறறத்தாராக்குத் தீங்கு வாராமற முன்பேணியொழுகலும, தன்முன்னோ தூதியல் கேட டறிதலும் பெற்றும். வேநதவாம்பணபுடைமை முனனா மனனரைச் சோநதொழுகறகட் பெறப்படும. அதனல வேறறரசரும் அவன் வயதத்தாறதல பெறுதும. (க)

சுஅஉ. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப் கினறி யமையாத மூன்று. உ. [பார்க்

இ - ள். அன்பு - தம்மரசனமாட்டனபுடைமையும—அறிவு - அவனுக்கு ஆவனவறியுமறிவுடைமையும—ஆராயந்த சொல்வன்மை - அவறறை வேறறரசரிடைச சொலலுங்கால ஆராயந்து செல்லுதல் வன்மையுமென—தூது உரைபபார்க்கு இனறியமையாத மூன்று - தூதுரைக்கவரியாாக்கு இன்றியமையாத குணங்கள் மூன்று. எ - று.

ஆராயதல் அவற்றிற்குடம்படுஞ்சொற்களைத் தெரிதல். இனறியமையாத மூன்றெனவே, அமைச்சர்க்குச சொல்லிய பிறகுணங்களும் வேண்டுமெனபது பெறறும். இவையிரண்டுபாட்டானும இருவகையார்க்கும் பொதுவிலக்கணங் கூறப்பட்டது. (உ)

சுஅசு. நூலாரு ணுல்வல்ல னுருதல் வேலாருள் வென்றி வினையுரைபபான் பண்பு. ங.

இ - ள். வேலாருள் வென்றி வினை உரைபபான பண்பு - வேலியுடைய வேறறரசரிடைச் சென்று தன்னரசனுக்கு வெனறி

தரும் வினையைச் சொல்லுவானுக்கு இலக்கணமாவது—நூலா ருள நூல் வல்லன் ஆகுதல் - நீதிநூலையுணர்ந்த அமைச்சரிடைத் தான் அநநூலை வல்லனுதல். எ - று.

கோறன்மாலையரென்பது தோன்ற வேலாரென்றும், தூது வினையிரணமிமடங்ங வென்றிவினையென்றுங் கூறினர். வல்ல னுதல் உணர்வுமாத்திரமுடையராய அவர்முன் வருகருமாற்றலு டையனுதல். (சு)

சூஅசு. அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. சு.

இ - ள். அறிவு - இயற்கையாகிய வறிவும்—உரு - கண்டார் விரும்புந் தோற்றப பொலிவும்—ஆராயந்த கல்வி – பலரோடும் பலகாலுமாராயப்பட்ட கல்வியுமென—இம்மூன்றன் செறிவு உடையான - நன்குமதித்தற்கேதுவாய இம்மூன்றனது கூட்டத் தையுடையான்—வினைக்குச் செல்க - வேறறுவேந்தரிடைத் தனது வினைக்குச் செல்க. எ - று.

இம்மூன்றும் ஒருவன்பாற் கூடுதலரிதாகலின், செறிவுடையா னெனருர். இவற்றுன் நன்குமதிப்புடையனுகவே, வினை இனிது முடியுமென்பது கருத்து. (சு)

சூஅஞ. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது. ஞ.

இ - ள். தொகச் சொல்லி - வேற்றரசர்க்குப் பலகாரியங்க ளோச சொல்லும் வழிக் காரணவகையாற் ருெருகுத்துச்சொல்லி யும—தூவாத நீக்கி நகச் சொல்லி - இன்னுதகாரியங்களேச் சொல் லும் வழி வெயயசொற்களே நீக்கி இனிய சொற்களான் மனமகி ழச்சொல்லியும்—நன்றி பயப்பது தூதாம் - தனனரசனுக்கு நன் மையைப் பயப்பவனே தூதனுவான். எ - று.

பலகாரியங்கட்குடம்படாதார் பரம்பரையான் அவற்றிற்குக் காரணமாயதொன்றைச் சொல்லி அதனுல் அவை வினையுமாறுந் துணரவருமையாலுஞ் சூருக்கத்தானு முடம்படுவர், இன்னுதவற் றிற் குடம்படாதார் தம்மன மகிழச்சொல்ல அவ்வின்னுயை காணுது உடம்படுவராதலின், அவரிருவாறருளும் தன்காரியந் தவ ருமல் முடிக்கவல்லானென்பதாம். எண்ணும்மைகள் விகாரத் தாற்ருெக்கன. (ஞ)

சூஅசூ. கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்
தக்க தறிவதாந் தூது. சூ. [தாற்

இ - ள். கறறு - நீதிநூல்களைக் கற்று—செலச் சொல்லி - தான் கொன்றகருமத்தைப் பகைவேந்தர் மனங்கொளச் சொல்லி—கண் அஞ்சான்—அவர்செயிர்த்துநோக்கின் அக்கோக்கிற்கஞ்சாது—காலத்தால் தக்கது அறிவது தூதாம் - காலத்தோடு பொருந்த அது முடிக்கத்தக்கவுபாயமறிவானே தூதனுவான். எ - று.

அவ்வுபாய மதிதற்பொருட்டு நீதிநூற்கல்வியும், அதனுணன்றிப் பிறிதொன்றுன் முடியுங்காலம் வரின் அவ்வாறு முடிக்கவேண்டுதலிற சாலத்தாறறக்கதறிதலும், இலக்கணமாயின. (சூ)

சூஅஎ. கிடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை. எ.

இ - ள். கடன் அறிந்து - வேறறரசரிடத்துத் தான் செய்யுமுறைமையறிந்து—காலம கருதி - அவர்செவ்வி பார்த்து—இடன் அறிந்து - சென்ற கருமஞ் சொல்லுதறகேற்ற இடமறிந்து—எணணி – சொல்லுமாறறை முனனே விசாரித்து—உரைப்பான தலை - அவ்வாறு சொல்லுவான் தூதரின் மிக்கான். எ - று.

செயயுமுறைமையாவது அவர்நிலையும் தன்னரசனிலையும் தன்னிலையும் தூக்கி அவறறிறகேறபக் காணுமுறைமையும் சொல்லுமுறைமையும் முதலாயின. செவ்வி தனசொலலே யேற்றுக்கொளளும் மனநிகழ்ச்சி. அது காலவயத்தாகலிற் காலமென்றார். இடம தனச்குத் துணையாவாருடனுயவிடம். எண்ணுதல் தான் ஆது சொல்லுமாறும் அதற்கு அவாசொல்லு மூத்தரமும் அதற்குப் பின்னுஞ சொல்லுவனவுமாக இவ்வாற்றுன் மேன்மேற றுனே கறபித்தல். வடனூலார் இவ்விருவகையாருடன் ஓலிலொடித்து நிற்பாரையுங் கூட்டித் தூதரைத் தலை, இடை, கடையென்று வகுத்துக்கூறினுராகலின, அவர்மதமுந்தோனறத் தலையென்றார். தூதென்பது அதிகாரத்தான் வந்தது. இவையைந்துபாட்டானும் தான் வகுத்திக் கூறுவானதிலக்கணங் கூறப்பட்டது. (எ)

சூஅஅ. தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு. அ.

இ - ள். வழி உரைப்பான் பண்பு - தன்னரசன் வார்த்தையை அவன்சொல்லியவாறே வேற்றரசர்க்குச் சென்று சொல்லுவானதிலக்கணமாவது—தூயமை–பொருள் காமங்களாற்றூயனுத

,லும—துணைமை - தனக்கு அவரமைச்சர் துணையாகதன்மையும்—
,துணிவுடைமை - துணிதலுடைமையும்—இம்மூன்றின வாயமை -
இமமூனறோடு கூடிய மெயம்மையுமெனவிவை. எ - று.

பொருள் காமங்கள்பற்றி வேறுபடக் கூறுமைப்பொருட்டித்
,தாயமையும, தனனரசனுக்கு உயாச்சிகூறியவழி எம்மனோ்க்கஃ்தி
பலபெனக்கூறி அவர் வெகுளி நீக்குதறபொருட்டுத் துணைமையும,
இது சொல்லின் இவரேதஞ்செயவரெனமுழியபாமறபொருட்டித
,துணிவுடைமையும, யாவராணுநதேறபடுதறபொருடடு மெயம
மையும, வேண்டபபட்டன. இன் ஓதவினபொருட்கண் வந்தது. ()

**கூஅகூ. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன். கூ.**

இ - ள். விடு மாறறம வேநதர்க்கு உரைபபான் - தனனர
சனை சொல்லிவிட்ட வாாததையை வேறறரசாககுச்/சென்று சொ
லலுவரியான்—வடு மாறறம வாயசோரா வனகணவன - தனககு
வருமேததறகஞ்சி அவனுக்குத் தாழவான வாாததையை வாய
சோராதனுஞ் சொலலாத திண்மையை யுடையன. எ - று.

தாழவு சாதிதருமமன்மையின். வடுவென்றார். வாயசோரா
வெனகாரியங் காரணததுளடகபபட்டது. (கூ)

**கூகூ0. இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது. க0.**

இ - ள். இறுதி பயப்பினும் எஞ்சாது—அவ்வார்த்தை தன்னுயிர்
க்கிறுதி தருமாயினும் அதற்கஞ்சி யொழியாது—இறைவாககு உறு
திபயபபது தூதாம் - தனனரசன் சொல்லியவாறே அவனுக்கு மிகு
தியை வேற்றரசரிடைச் சொல்லுவானே தூதனுவான். எ - று.

இறுதிபயப்பினுமென்றதனால், ஏனைய பயத்தல் சொல்லவே
ண்டாவாயிறறு. இவை மூன்றுபாட்டானுங் கூறியது கூறுவான
திலகணைங் கூறப்பட்டது. (க0)

எ0 - ம் அதி.—மன்னரைச்சேர்ந்தொழுகல்.

அஃதாவது அமைச்சர் அரசரைப் பொருந்தியொழுகுமாறு.
இது, வேநதவாம் பணபுடைமை * யென மேலே வேணடபபட
டமையின், தூதின்பின் வைக்கப்பட்டது.

* குறள், கூஅக.

சுகூக். அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். க.

இ - ள். இகல் வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - மாறுபடுதலை யுடைய அரசரைச் சேர்ந்தொழுகும் அமைச்சர்—அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க - அவரை மிகநீங்குவதும் மிகசெறிவதுஞ் செய்யாது தீக்காய்வாரைபோல இடைநிலத்திலே நிறுக. எ-று.

கடிதின் வெகுளுந் தனமையரென்பது தோன்ற, இகல்வேந்த ரென்றார். மிகவகலிற பயன் கொடாது மிகவணுகின ஆபமதிபற நிந்து தெறும் வேந்தர்க்கு, மிகவகலிற குளிர் நீகாது மிகவணுங்ற சுடுவதாய தீயோடுளதாய தொழிலுவமம பெறபபடடது. (க)

சுகூஉ. மன்னர் விழைப விழையாமை மன்னரான
மன்னிய வாக்கந் தரும். உ.

இ - ள். மன்னர் விழைப விழையாமை - தம்மாற சேரப்ப ட்ட மன்னர் விரும்புவனவறறைத் தாம விரும்பாதொழிதல்—மன்னரான மன்னிய ஆக்கம் தரும – அமைசசாக்கு அவராலே நிலைபெறற செலவத்தைக் கொடுக்கும். எ - று.

ஈண்டு விழைபவென்றது அவர்க்குச் சிறபபாகவுரியவறறை. அவை நுகரபபடுவன, ஒபபீன, மேன்மையென்றிவை முதலாயின. இவறறை ஒப்பிறகஞ்சித் தாம் விழையாதொழியவே, அவ்வசச நோச்கியுவநது அவர்தாமே எல்லாச்செல்வமும் நல்குவரென்பது கருத்து. எனவே, அவறறை விரும்பிற கேடுதருமெனபதாம். (உ)

சுகூகூ. போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது. கூ.

இ - ள். போற்றின் அரியவை போற்றல் – அமைச்சர் தம மைக் காக்கக் கருதின் அரியபிழைகள் தங்கண்வாராமற காக்க,—கடுத்தபின தேறறுதல் யார்க்கும் அரிது - அவற்றை வநதனவாகக கேடடு அவ்வரசர் ஐயுற்றால் அவரைப பின்னெளிவித்தல யாவ ாக்கு மரிதாகலான். எ - று.

அரியபிழைகளாவன அவராற்பொறுத்தறகரிய அநதேபா தல், உரிமைபெறுமமைசுவல், அரும்பொருள் வெளவலென்றிவை முதலாயின. அவற்றைக் காத்தலாவது ஒருவன் சொல்லியகாலை, தஞ்மோ வென்றையுறுது தகாதென்றே அவர் துணியவொழுகல். ஒருவாற்றாறெளிவித்தாலும் கடன்கொண்டான்றென்றப் பொ

ருடோன்றுமாறுபோலக் கண்டுழியெல்லாம் அவை நிலைக்கப்படுதலின யார்க்கு மரிதென்றார். இவைமூன்றுபாட்டானும் அது பொதுவகையாற் கூறப்பட்டது. (சு)

சுகூஅ. செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுகலான்ற பெரியா ரகத்து. ச.

இ - ள். ஆன்ற பெரியாரகத்து - அமைந்தவரசரருகிருந்தால்,—செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்து ஒழுகல் - அவாகாண ஒருவன்செவிக்கட்சொல்லுதலேயும் ஒருவன் முகநோக்கி நகுதலேயுந் தவிர்ந்தொழுகுக. எ - று.

சேர்தல் பிறனெடு சேர்தல். செயதொழுகின், தங்குற்றங் கணடு செயதனவாகக கொள்வரென்பது கருத்து. (ச)

சுகூஉ. எப்பொருளு மோரார்தொடரார்மற்றப்பொருளே விட்டக்காற் கேட்க மறை. ஞ.

இ - ள். மறை - அரசனுக்குப் பிறரோடு மறை நிகழ்வுழி—எப்பொருளும் ஓரார் - யாதொருபொருளேயுஞ செவிகொடுத்துக் கேளாது,—தொடரார் - அவனே முடுகி வினவுவதுஞ் செயயாது,—அபபொருளே விட்டக்கால் கேடக - அம்மறைபபொருளே அவனருனே அடக்காது சொல்லியக்காற கேட்க. எ - று.

ஓர்தற்கேற்கும்பொருளாயினுமென்பார், எபபொருளுமென்றார். மறறு வினைமாற்றின்சண் வநதது. (ஞ)

சுகூசு. குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில வேண்டுப வேட்பச் சொலல். சு.

இ - ள். குறிப்பு அறிநது - அரசனுக்குக் காரியஞ்சொல்லுங்கால் அப்பொழுதுநிகழுகின்ற அவன்குறிபபினையறிந்து—காலங் கருதி - சொல்லுதறகேறற காலத்தையும் நோக்கி,—வெறுப்பு இல வேண்டுப வேட்பச் சொலல் - வெறுப்பிலவுமாய வேண்டுவனவுமாய காரியங்களே அவன்மனம் விரும்புமவகை சொல்லுக. எ-று.

குறிப்புக் காரியத்தின்கணன்றிக் காமவெகுளியுள்ளிட்டவற றினிகழவுழியும் அதறகேலாக்காலத்துஞ் சொல்லுதல் பயனின்றுகலிற் குறிப்பறிந்து காலங்கருதியென்றும், அவனுடம்படாதன முடிவுபோகாமையின் வெறுப்பிலவென்றும், பயனில்லவும் பயன்சுருங்கியவுஞ் செயதல்வேண்டாமையின் வேண்டுபவென்றும், அவ

ற்றை இனியவாயச் சுருங்கி விளங்கிய பொருளாவாய சொற்க ளாற சொல்லுகவென்பார் வேட்பசொலலெனறுங் கூறினர். ()

கூகூஎ. வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங் கேட்பினுஞ் சொல்லா விடல். எ.

இ - ள். வேட்பன சொல்லி - பயன் பெரியனவுமாய அர சன் விரும்புவனவுமாய காரியங்களை அவன் கேட்டிலனுயினுஞ் சொல்லி,—எஞ்ஞான்றும் வினை இல கேட்பினும சொலலாவி டல் - எஞ்ஞான்றும் பயனிலவாயவறறைத் தானேகேட்டாலுஞ் சொல்லாதுவிடுக. எ – று.

வினையிலவெனவுங் கேட்பினுமெனவும் வந்த சொற்களான், அவறறின் மறுதலைச்சொற்கள் வருவிச்சப்பட்டன. வினையான் வருதலின் வினையென்றும், வறுமைக்காலமுமடங்க எஞ்ஞானறு மென்றுங் கூறினர். சொல்லுவனவுஞ் சொல்லாதனவும் வருத் துக் கூறியவாறு. இவைானகுபாட்டானுஞ் சிறப்புவகையாற கூறப்பட்டது. (எ)

கூகூஅ. இளைய ரினமுறைய ரென்றிகழார் கின்ற வொளியோ டொழுகப் படும். அ.

இ - ள். இளையர் இன முறையர் என்று இகழார் - இவர் எம் மினிளையரென்றும் எமக்கின்ன முறையினையுடையரென்றும் அரச ரையவமதியாது,—நினற ஒளியோடு ஒழுகபபடும் - அவர்பாடு நின்றவொளியோடு பொருநத ஒழுகுதல் செயப்படும். எ - று.

ஒளி—உறங்காநிற்கவுந் தாமுலகங்காக்கின்ற அவர் கடவுட் டன்மை. * அதனோடு பொருந்தவொழுகலாவது அவர் கடவுள ருந தாம் மக்களுமாயொழுகுதல். அவ்வொளியாற் போக்கப்பட்ட வினைமையும் முறையும்பறறி இகழ்வராயின், தாமும் போக்கப்படு வரென்பது கருத்து. (அ)

கூகூகூ. கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத துளக்கற்ற காட்சி யவர். கூ. [செய்யார்

இ - ள். கொளப்பட்டேம் என்று எண்ணிக் கொள்ளாத செயயார் - அரசனுல் யாம் நன்குமதிக்கப் பட்டேமென்று கருதி

---

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், உகக.—உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி—கறங்கு தெண்டிரை வையகங் காக்குமா—லிறங்கு கண்ணிமை யார்விழித் தேயிருந்—தறங்கள் வெளவ வதன்புறங் காக்கலார்.

அவன விரும்பாதவறறைச் செய்யார்—துளக்கு அற்ற காட்சிய வர் - நிலேபெறற வறிவினேயுடையார். எ - று.

கொள்ளாதன செய்தழிவெயதுவார் கொளப்பாட்டிறகுப் பின்றம்மை வேறொருவராகக கருதுவராகலின், முன்னே ராகவே கருதியஞ்சி யொழுகுவாரைத் துளகுகறறகாட்சியவரென்றார். (கூ)

எ00. பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங் கெழுதகைமை கேடு தரும். க0.

இ - ள். பழையம் எனக் கருதிப் பண்பு அல்ல செயயும் கெழுதகைமை - அரசனுககு யாம பனழயமெனக் கருதித் தமககி யல்பல்லாதவறறைச் செயயுமுரிமை—கேடு தரும - அமைசசர்க் ஞக் கேட்டினேப் பயக்கும். எ - று.

அவன் பொறுது செறும்பொழுதின் அப்பழமைநோக்கிக் கண்ணேடாது உயிரை வெளவுதலான், அவன்வேண்டாதன செய தறகேதுவாய கெழுதகைமை கேடுதருமென்றார். இவை மூன்று பாட்டானும் பொறுபபரெனறு அரசர் வெறுபபன செயயறகுரிய னவது கூறபபட்டது. (க0)

எக ம் அதி.—குறிப்பறிதல்.

அஃதாவது அரசர் கருதியவதனே அவர் கூறுமலறிதல். இது, மனனரைச்சோருதொழுகுறகு இனறியமையாதாகலின், அத னபின் வைக்கபபட்டது.

எ0க. கூறுமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று மாறுநீர் வையக் கணி. க.

இ - ள். குறிப்புக் கூறுமை நோக்கி அறிவான் - அரசனுற் குறிதத கருமத்தை அவன் கூறவேண்டாவகை அவன்முகமானுங் கண்ணனுநோக்கி அறியுமமைச்சன்—எஞ்ஞான்றும் மாறு நீர் வைடக்கு அணி - எஞ்ஞான்றும் வறறுத நீராறசூழப்பட்ட வைய த்துளளார்கு ஒராபரணமாம். எ - று.

ஒட்பமுடையனுய எல்லார்க்குமு அழகுசெயதலான், வையக் கணியென்றார். குறிப்பும் வையமும் ஆகுபெயர். வையத்திறகென் பது விகாரப்பட்டு நின்றது. (க)

எ0உ ஐயப் படாஅ தகத்தி தணர்வானேத் தெய்வத்தோ டொப்பக் கொளல். உ.

இ - ள். அகதது ஐயப்படாது உணர்வானே - ஒருவன் மன தகின்கணிகழ்வதனே ஐயப்படாது ஒருதலேயாகவுணரவல்லானே— தெயவததோடு ஒப்பக் கொளல் - மகனேயாயினும், தெயவத்தோ டொபப நன்கு மதிக்கீ. எ - று.

உட்மபு முதலியவறறுள் ஒவ்வானுயினும் பிறர்நினேத்தது ணருந ·தெயவத்தன்மையுடைமையின், தெயவத்தோ டொபப வெனறார். (உ)

எ0ஙூ குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள் யாது கொடுத்துங் கொளல். ஙூ.

இ - ள. குறிப்பின் குறிப்பு உணர்வாரை - தங்குறிப்பு நிக ழுமாறறிநது அதனுற் பிறர்குறிப்பறியுந்தன்மையாரை,—உறுப்பி னுள் யாது கொடுத்தும் கொளல் - அரசர் தம்முறுப்புக்களுள் அவர் வேண்டுவதொனறனேக் கொடுத்தாயினும், தமக்குத் துணே யாகக் கொளக. எ - று.

உண்ணிகழுநெறி யாவர்க்குமொத்தலின், பிறர்குறிப்பறிதற் குத தங்குறிப்புக கருவியாயிறறு. உறுபபுக்களாவன பொருளும நாடும யானேகுதிரைகளும் முதலிய புறத்துறுபபுக்கள். இதறகுப பிறா முகக்குறிபடினே அவா மனகருறிபபுணர்வாரையெனறு ரைபபாருமுளர். இவைமூனறுபபாட்டானுங் குறிபபறிவாரது ஆற பபுக் கூறபபட்டது. (ஙூ)

எ0ச. குறித்தது கூருமைக் கொள்வாரோ டேனை யுறுபபோ ரனேயரால் வேறு. ச.

இ - ள். குறித்தது கூருமைக கொளவாரோடு - ஒருவன் மனததுக் கருதியவதனே அவனகூறவேண்டாமல் அறியவல்லா ரோடு—ஏனே உறுபபு ஒருனேயர் - மறறைமாட்டாதார் உறுப பாலொருதனமையராக வொபபாராயினும்,—வேறு - அறிவான் வேறு. எ - று.

கொள்ளாதாரென்பதனுலும், ஆயினுமென்பதனுலும் அவாய நிலேயான் வந்தன. சிறந்த வறிவின்மையின், விலங்கென்னுங்கரு த்தான் வேறென்றார். (ச)

ஏ0ரு. குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு ளென்ன பயத்தவோ கண். ரு.

இ - ள். குறிப்பின் குறிப்பு உணராவாயின் - குறித்தது காணவல்ல திங்காட்சியாற் பிறர்குறிபபிணையுணரமாட்டாவா யின்,—உறுப்பினுள் கண் என்ன பயத்தவோ - ஒருவனுறுப்புக்க ளுட் சிறந்த கண்கள் வேறென்ன பயனைச் செயவன! எ - று.

முதற்கட் குறிப்பு ஆகுபெயர். குறிப்பறிதற்கட் பிணையாதற் சிறப்புபபற்றி உயிரதுணாவு சண்மேலேற்றப்பட்டது. அக்கண களாற் பயனில்லையென்பதாம். இவையிரண்டுபாட்டானுங் குறிபப றியாரதிழிபு கூறப்பட்டது. (நி)

எ0சு. அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங் கடுத்தது காட்டு முகம். சு.

இ - ள். அடுத்தது காட்டும் பளிங்குபோல் - தன்னையடுத்த பொருளது நிறத்தைதத் தானே கொண்டுகாட்டும் பளிங்கு போல—நெஞ்சங் கடுத்தது முகம் காட்டும் - ஒருவனெஞ்சதது யிக்கதனை அவன்முகந் தானேகொண்டு காட்டும். எ - று.

அடுத்ததென்பது ஆகுபெயர். | கடுத்ததென்பது கடியென்னு மூரிச்சொலடியாயவந்த தொழிற்பெயர். | உவமை ஒருபொருள பிறிதொருபொருளின்பண்பைக் கொண்டு தோறறுதலாகிய தொ ழில்பறறி வநதது. (சு)

எ0எ. முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங் காயினுந் தான்முந துறும். எ.

இ - ள். உவப்பினும் காயினும் தான் முந்துறும் - உயிர ஒரு வனையுவத்தலானுங் காயதலானுமுறின், தானறிநது அவறறின கண் அதனின்முற்பட்டு நிற்குமாகலான்,—முகத்தின் | முதுகு குறைந்தது உண்டோ - முகம்போல |அறிவுமிக்கது பிறிதுண்டோ இல்லை. எ - று.

உயிர்க்கே அறிவுள்ளது ஐம்பூதங்களானிடன்ற முகத்திற்கில் லையென்பாரைநோக்கி, உயிரது கருத்தறிநது அஃதவகதுறின மலர்ந்துங் காயவுறிறகருகியும் வரலான், உண்டென மறுபபா போன்று, குறிபபறிதற்குக் கருவி கூறியவாறு. (எ)

எ0அ. முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி யுற்ற துணர்வார்ப் பெறின். அ.

இ - ள். அகம் நோக்கி உற்றது உணர்வார்ப் பெறின் - குறை யுறுவானும் தன்மனத்தைக் குறிப்பானறிநது தானுற்றவதனைத தீர பபாரைப் பெறின்,—முகம் நோக்கி நிற்க அமையும்-அவர் தனமு

எஉ ம் அதி.—அவையறிதல்.

அஃதாவது அரசனோடிருந்த அவையினியல்பையறிதல். காரியஞ்சொலலுங்கால் அவன் குறிபபறிதலேயன்றி இதுவும் வேண்டுதலின், இஃததன்பின் வைக்கபபட்டது.

எகக. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
ரெகையறிந்த தூய்மை யவர். க.

இ - ள். சொல்லின் தொகை அறிந்த தூயமையவர் - சொல்லின் குழுவினையறிந்த தூயமையினையுடையார்—அவை அறிந்து ஆராயந்து சொல்லுக - தாமொன்று சொல்லுங்கால் அப்பொழுதையவையினையறிந்த ஆராயந்து சொல்லுக. எ - று.

சொல்லின்குழுவெனவே, செஞ்சொல், இலக்கணச்சொல், குறிப்புச்சொல்லென்னும் மூவகைச்சொல்லுமடங்கின. * தூயமை அவற்றுள் தமக்காகாதனவொழித்து ஆவன கோடல். அவையென்றது ஈண்டதனளவை. அது மிகுதி, ஒப்பு, தாழ்வென மூவகைத்து. அறிதல் தம்மொடு தூக்கியறிதல். ஆராய்தல் இவ்வவைக்கட் சொல்லுங்காரியம் இது, சொல்லுமாறிது, சொன்னால் அதன்முடிவிதுவென்று இவையுள்ளிட்டனவாராயதல். (க)

எகஉ. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுகசொல்லி
னிடைதெரிந்த நன்மை யவர். உ.

இ – ள். சொல்லின நடைதெரிந்த நன்மையவர் - சொற்களினடையினை ஆராயுதறிந்த நன்மையினையுடையார்—இடை தெரிந்து நன்கு உணர்ந்து சொல்லுக - அவைக்கண் ஒன்றுசொல்லுங்கால் அதனசெவ்வியையாராயுதறிந்து வழுப்படாமல் மிகவுந்தெளிந்துசொல்லுக. எ - று.

சொற்களினடையாவது அம்மூவகைச் சொல்லும் செம்பொருள், இலக்கணப்பொருள், குறிப்புப்பொருளென்னும் பொருள்களோடு பயக்குமாறு. செவ்வி கேட்டற்கண் விருப்புடைமை. வழுச்சொல்வழுவும் பொருளவழுவும். இவையிரண்டுபோட்டாலுமொன்று சொல்லுங்கால் அவையறிந்தே சொல்லவேண்டுமென்பது கூறபபட்டது. (உ)

* செஞ்சொல், இலக்கணச்சொல், குறிப்புச்சொல்லென்பனவற்றை முறையே வடநூலார் அபிதை, இலக்கணை, வியஞ்சனையிருதியெனபர்.

**எகசூ. அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொ
வகையறியார் வல்லதூஉ மில். சூ. [ல்லின்**

இ - ள். அவை அறியார் சொல்லல் மேற்கொள்பவர் சொல்லின் வகை அறியார் - அவையினதளவையறியாது ஒன்று சொல்லுதலைத் தம்மேற்கொள்வார் அச்சொல்லுதலின் கூறுபாடும் அறியார்,—வல்லதூஉம் இல்-கற்றுவல்ல கலியும் அவர்க்கில்லை. எ-று

அம்மூவகைச்சொற்களால் வருஞ் சொல்லுதல்வகைமை கேட்பாரதுணர்வுவகைமைபற்றி வருதலாற் சொல்லின்வகையறியாரென்றும், இஃதறியார் யாதுமறியாரென்று எல்லாராலுமிகழப்படுதலின் வல்லதூஉமில்லென்றுங்கூறினார். இதனால் அவையறியாக்கால் வருங்குற்றங் கூறப்பட்டது. (சூ)

**எகஅ. ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல். அ.**

இ - ள். ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் - அறிவாலொள்ளியார் அவைக்கட் டாமுமொள்ளியராக,—வெளியார்முன் வான்சுதை வண்ணம் கொளல் - ஏனைவெள்ளைகளவைக்கட்டாமும் வாலிய சுதையினிறத்தைக் கொள்க. எ - று.

ஒள்ளியாரென்றது மிக்காரையும் ஒத்தாரையும். அதனதிகாரத்தால் ஒளியாரென நின்றது. ஒள்ளியராதல் தந்நூலறிவுஞ் சொல்வன்மையுந்தோன்ற விரித்தல். அவையறியாத புல்லரை வெளியாரென்றது, வயிரமின்மரத்தை வெளிறென்னும் வழக்குபற்றி. அவர் மதிக்கும்வகை அவரினும் வெண்மையுடையராகவென்பார், வான்சுதைவண்ணங்கொளலென்றார். அவையளவறிந்தார் செயயுநிறம் இதனைத் தெரிவுத்துக்கூறப்பட்டது. முன்னர் விரித்துக்கூறுப.

**எகஇ. நின்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருண்
மூந்து கிளவாச் செறிவு. இ.**

இ - ள். நனறு என்றவற்றுள்ளும் நன்றே-ஒருவற்கு இது நன்றென்று சிறப்பித்துச்சொல்லபபட்ட குணங்களெல்லாவற்றுள்ளும் நன்றே—முதுவருள் மூந்து கிளவாச் செறிவு - தம்மினமிக்காரவைக்கண் அவரின் முற்பட்டு ஒன்றனைச் சொல்லாதவடக்கம். எ—று.

..தங்குறைவும் அவர்மிகுதியும் மூந்துகிளந்தாற்படுமிழுக்கும் கிளவாச்காலெயது நன்மையும் அறிந்தேயடங்கினமையின், அவ்வடகத்தினை நன்றென்றவற்றுள்ளுநன்றெனரூர். முன்கிளத்தலையே

விலக்கினமையின், உடன்கிளத்தலும் பின்கிளத்தலுமாமென்பது பெற்றும். இதனுன் மிக்காரவைக்கட்செயயுந்திறங் கூறப்பட்டது.

எகசு. ஆற்றி னிலேதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு. சு.

இ - ள். ஆற்றின் நிலே தளர்ந்தற்று - வீடெய்தற்பொருட்டு நன்னெறிக்கணின்ருனெருவன் அருநெறியினின்றும் நிலே தளர்ந்து வீழ்ந்தாலொக்கும்—வியன் புலம் ஏற்று உணர்வார்முன்னர் இழுக்கு - அகன்ற நூற்பொருள்களேயுட்கொண்டு அவற்றின் மெய்ம்மையுணரவல்லாரவைக்கண் வல்லாஞெருவன் சொல்லிழுக்குப் படுதல். எ - று.

நிலேதளர்ந்து வீழ்தல் "உரனென்னுந் தோட்டியாஞரைந் துங்கா"த்தொழுகியான் பின்னிழுக்கிக் கூடாவொழுக்கத்தனுதல். பயனிழத்தலேயன்றி இகழவும்படுமென்பதாம். இதனுன் அதன் கணிழுக்கியவழிப் படுங்குற்றங் கூறபபட்டது. (சு)

எகள. கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து. எ.

இ - ள். கசடு அறச் சொற்றெரிதல் வல்லாரகத்து - வழுப்படாமற் சொற்களேயாராய்தல் வல்லாரவைக்கட்சொல்லின்,—கற்று அறிந்தார் கல்வி விளங்கும் - பலநூல்களேயுங்கற்று அவற்றினுல பயனேயறிந்தாரது கல்வி யாவர்க்கும் விளங்கித் தோன்றும்.எ-று.

சொல்லினெனபது அவாயகிலியான் வந்தது. ஆண்டே சொல்லவெனபதாம். (எ)

எகஅ. உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொரிந் தற்று. அ.

இ - ள். உணர்வது உடையார்முன் சொல்லல் - பிறருணர்த்தலின்றிப் பொருள்களேத் தாமேயுணரவல்ல அறிவினேயுடையாரவைக்கட் கற்றூர் ஒன்றனேச் சொல்லுதல்—வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்தற்று - தானே வளர்வதொரு பயிர் நின்ற பாத்திக்கண் நீரினேச் சொரிந்தாற்போலும். எ — று.

தானேயும் வளர்தற்குரிய கல்வி மிக வளருமென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் ஒத்தாரவைக்கண் எவ்வழியுஞ்சொல்லுகவென்பது கூறபபட்டது. (அ)

எகூ. புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்கல்லவை
ணன்கு செலச்சொல்லு வார். கூ. [யு

இ – ள். நல்லவையுள் நன்கு செலச் சொல்லுவார் - நல்லாரிருந்தவவைக்கண் நல்லபொருள்களே அவர்மனங்கொள்ளச் சொல்லுதற்குரியார்—புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க - அவையறியாத புல்லரிருந்தவவைக்கண் அவற்றை மறந்துஞ்சொல்லாதொழிக. எ - று.

சொல்லின், தம்மவையறியாமையை நோக்கி நல்லவையும், பொருளறியாமையாற் புல்லவைதானும் இகழ்தலின், இரண்டவைக்குமாகாரெனபது கருதிப் பொச்சாந்துஞ் சொல்லற்கவெனறார்.

எஉ0. அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல். க0.

இ – ள். தம் கணத்தர் அல்லார்முன் கோட்டி கொளல் - நல்லார் தம்மினத்தரல்லாதாரவைக்கண் ஒன்றனையுஞ்சொல்லற்க;—அங்கணத்துள உக்க அமிழ்தற்றறு – சொலலின், அது ணாயதல்லாத முற்றத்தின்கணுக்க அமிழ்தினையொக்கும். எ – று.

கொள்ளென்னும் முதனிலைத்தொழிற்பெயர் மூன்னின்று பின்னெதிர்மறையல்விருதியோடு கூடி "மகனெனல்" என்பது போனின்றது. சொல்லின் அது என்டன அவாயநிலையான் வந்தன. பிறரெல்லாங்கொளலென்பதனைத் தொழிற்பெயராக்கியுரைத்தார்; அவர் அத்தொழில் அமிழ்தென்னும் பொருளுவமையோடு இலையாமை நோக்கிற்றிலர். சாவாமருந்தாதலறிந்து நுகர்வார் கையினும் படாது அவ்வங்கணத்துக்கு மியைபின்றிக்கெட்டவாறு தோன்ற, உக்கவமிழ்தென்றார். அச்சொற்பயனில்செல்லாமென்பதாயிற்று. இவையிரண்டுபாட்டானும் தாழ்ந்தாரவைக்கண் ஒரு வழியுஞ் சொல்லறகவென்பது கூறபபட்டது. (க0)

எங் ம் அதி.— அவையஞ்சாமை.

அஃதாவது சொல்லுதற்குரிய அவையினையறிந்து சொல்லுங்கால் அதற்கஞ்சாமை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

எக்க. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
ருகையறிந்த தூய்மை யவர். க.

இ - ள். வகை அறிந்து வல்லவை வாய்சோரார் - கற்றுவல்ல வகை, அல்லாவகையென்னும் அவைவகையினையறிந்து வல்லவைக்கண் ஒன்றுசொல்லுங்கால் அச்சத்தான் வழுப்படச்சொல்லார்—சொல்லின் தொகை அறிந்த ஞயமையவர் - சொல்லின்றொகையெல்லாமறிந்த ஞயமையினையுடையார். எ – று.

இருந்தாரது வன்மை அவைமேலேற்றப்பட்டது. வல்லவையென்பதற்குத் தாங்கற்றுவல்ல நூற்பொருள்களேயென்றுரைப்பாருமுளர். அச்சத்தானென்பது அதிகாரத்தான் வந்தது. சொல்லின் றொகை, ஞயமை என்பன * வற்றிற்கு மேலுரைத்தாங்குரைக்க.

எஉஉ. கற்றருட் கற்ற ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார். உ.

இ - ள். கற்றருள் கற்றர் எனப்படுவர் - கற்றரெல்லாரினும் இவர் நன்குகற்றரென்று உலகத்தாராற் சொல்லப்படுவார்—கற்றாருமுன கற்ற செலச் சொல்லுவார் - கற்றாரவைக்கண் அஞ்சாதே தாங்கற்றவற்றை அவர்மனங்கொள்ளும்வகை சொல்லவல்லார். எ - று.

உலகமறிவது அவரையேயாகலின், அதனாற் புகழப்படுவாரும் அவரென்பதாம். (உ)

எஉங. பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர். ங.

இ - ள். பகையகத்துச் சாவார் எளியர் - பகையிடையஞ்சாது புக்குச் சாவவல்லார் உலகத்துப் பலர்;—அவையகத்து அஞ்சாதவர் அரியர் – அவையிடையஞ்சாது புக்குச் சொல்லவல்லார் சிலர். எ – று.

அஞ்சாமை சாவாரென்பதனோடுங்கூட்டி, அதனாற் சொல்ல வல்லாரென்பது வருவித்துரைக்கப்பட்டது. இவை மூன்றுபாட்டானும் அவையஞ்சாதது சிறப்புக்கூறப்பட்டது. (ங)

எஉச. கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல். ச.

இ – ள். கற்றார்முன் கற்ற செலச் சொல்லி - பலநூல்களேயுங் கற்றாரவைக்கட் டாங்கற்றவற்றை அவர்மனம் கொள்ளுமாற்றாற்

* குறள், எகக.

சொல்லி—தாம் கற்ற மிக்க மிக்காருள் கொளல் - அவற்றின் மிக்க பொருள்களே அம்மிகக்கற்றாரிடத்திற்திதுகொள்க. எ – று.

எல்லாம் ஒருவர்க்குக் கற்றல் கூடாமையின் வேறுவேறாய கல்வியுடையார் பலரிருந்த அவைக்கட் டாங்கற்றவற்றை அவர்க் கேற்பச் சொல்லுக; சொல்லவே, அவரும் அவையெல்லாஞ் சொல் லுவராகலான், ஏனைக்கற்கப்பெறுதன கேட்டறியலாமென்பதாயி ற்று. இதனுல் அதனதொருசார்பயன் கூறப்பட்டது. (கூ)

எஉடு. ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா மாற்றங் கொடுத்தற் பொருட்டு. டு.

இ - ள். ஆற்றின் அளவு அறிந்து கற்க - சொல்லிலுத்தன நெறியாலே அளவுநூலே அமைச்சர் உட்பட்டுக் கற்க,—அவை அஞ்சா மாற்றம் கொடுத்தற்பொருட்டு - வேற்றுவேந்தரவையிடை யஞ்சாது அவர் சொல்லிய சொற்கு உத்தரஞ் சொல்லுதற் பொரு ட்டு. எ – று.

அளவைநூல் சொன்னூல் கற்றே கற்கவேண்டுதலின், அதற் கஃதாறென்பப்பட்டது. அளக்குங் கருவியை அளவென்னூர், ஆகு பெயரான். அவர்சொல்லே வெல்வதொருசொற் சொல்லலாவது நியாயத்த வாத செற்ப விதண்டைகளும் சலசாதிகளும் முதலிய கறளர்க்கேயாகலின், அவற்றைப் பிழையாமற் கற்கவெனபதாம். இதனுல் அதன்காரணங் கூறப்பட்டது. (கூ)

எஉசு. வாளொடென் வன்கண்ணரல்லார்க்கு நூலொடெ ணுண்ணவை யஞ்சு பவர்க்கு. சு.

இ – ள். வன்கண்ணரல்லார்க்கு வாளொடு என் - வன்கண் மையுடையரல்லாதார்க்கு வாளோடென்ன வியைபுண்டு—நுண் ணவை அஞ்சுபவர்க்கு நூலொடு என் - அதுபோல நுண்ணியாரத வையை யஞ்சுவார்க்கு நூலோடென்னவியைபுண்டு! எ - று.

இருந்தாரது நுண்மை அவைமேலேற்றப்பட்டது. நூறஞரி யரல்லரென்பதாம். (சு)

எஉஎ. பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத் தஞ்சு மவன்கற்ற நூல். எ.

இ - ள். பகையகத்துப் பேடி கை ஒள்வாள் - எறியப்படும் பகைதடுவன் அதனையஞ்சும் பேடி பிடித்த கூர்வாளே யொக்கும்-

அவையகத்து அஞ்சுமவன் கற்ற நூல் - சொல்லப்படும் அவைஅடு வண அஃதே யஞ்சுமவன கற்றநூல். எ - று.

பேடி பெண்ணியல்புமிக்கு ஆணியல்புமுடையவள். களமும் வாயத்தைத் தானும நனருயிருந்தேயாயினும பிடித்தவள் குறறத தால் வாள் சிறப்பின்ருயினறபோல, அவையும் வாயத்திரதானும நன்ருயிருந்தேயாயினுங் கற்றவன குறறத்தால் நூல் சிறப்பின ருயிறறு. (எ)

எஉஅ. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு ணன்கு செலச்சொல்லா தார். அ.

இ -ள். நல்லவையுள் நன்கு செலச் சொல்லாதார் - நல்லா ரிருந்தவவைக்கண் நல்லசொற்பொருளகளைத் தம்மச்சத்தான அவர்க்கேற்கச் சொல்லமாட்டாதார—பல்லவை கறறும பயம இலரே - பலநூல்களைக் கறறராயினும் உலகிறகுப பயனபடுத விலா. எ - று.

அறிவார்முற்சொல்லாமையிற் கல்வியினுண்மையறிவாரிலலை யென்பதாம. இனிப் பயமிலரென்பதறகுக் கல்விப்பயனுடைய ரல்லரென்றுரைப்பாருமுளர். (அ)

எஉக. கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து நல்லா ரவையஞ்சு வார். கூ.

இ - ன். கறறு அறிந்தும் நல்லார் அவை அஞ்சுவார் - நூல் களைக கறறுவைத்தும் அவற்றுற் பயனறிதலுவைத்தும் நல்லாரிரு ந்த அவையினையஞ்சி ஆண்டுச் சொல்லாதாரை—கல்லாதவரின கடை என்ப - உலகத்தார் கல்லாதவரினுங் கடையரென்று சொல லுவர். எ - று.

அக்கல்வியறிவுகளாற பயன்ருமுமெயதாது பிறரையெய்து விப்பதுஞ்செயயாது கல்வித்தன்மே யெயதினிறறலின், கல்லாத வரிற்கடையென உலகம்பழிக்குமென்பதாம். (கூ)

எஉ0. உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக் கற்ற செலச்சொல்லா தார். க0.

இ - ள். களன் அஞ்சிக் கற்ற செலச் சொல்லாதார் - அவைக் களத்தையஞ்சித் தாங்கற்றவற்றை அதற்கேற்கச் சொல்லமாட்டா தார்—உளர் எனினும் இல்லாரொடு ஒப்பர் - உயிர் வாழ்கின்ருரா

யினும், உலகத்தூராலெண்ணப்படாமையின் இறந்தாரோ டொப் பர். எ – று.

ஈண்டுக் களனென்றது ஆண்டிருந்தாரை. இவையைந்துபாட் டானும் ஓவையஞ்சுவாரதிழிபு கூறப்பட்டது. (கo)

அங்கவியலில் அமைச்சியல் முற்றிற்று.

எசு ம் அதி.—நாடு.

இனி அவ்வரசனுயும் அமைச்சனுலுங் கொண்டுய்க்கப்படுவ தாய ஏனையரண் முதலிய அங்கங்கட்கு இன்றியமையாச் சிறப்பிற் றுய நாடு ஒதிகாரததாற் கூறுகின்றூர்.

எஙக. தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச் செல்வருஞ் சேர்வது நாடு. க.

இ - ள். தள்ளா விளையுளும்–குன்றுத விளையுளைச் செயவோ ரும்—தக்காரும் - அறவோரும—தாழ்வு இலாச் செல்வரும் – கே டில்லாத செல்வமுடையோரும்—சேர்வது நாடு - ஒருங்கு வாழ் வதே நாடாவது. எ – று.

மற்றையுயர்திணைப் பொருள்களோடுஞ் சேர்தற்கெழிலோ டும் இயையாமையின், விளையுளெனபது உழவர்மேனின்றது. குன் றுமை எல்லாவுணவுகளும் நிறையவுளவாதல். இதனுன் வாழ்வார் க்கு வறுமையின்மை பெறப்பட்டது. அறவோர் துறந்தோர், அந்த ணர் முதலாயினுர். "நற்றவஞ்செய வார்க்கிடந் தவஞ்செயவார்க்கு மஃதிடம்" * என்றுர் பிறரும். இதனுல் அழிவின்மை பெறப்பட் டது. சேடில்லாமை வழங்குதலையுமை. செல்வர் நிலத்தினுங் காலினும் அரும்பொருடரும் வணிகர். இதனுல் அரசனுக்கும வாழவார்க்கும் பொருள் வாயத்தல் பெறப்பட்டது. (க)

எஙஉ. பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட் லாற்ற விளைவது நாடு. உ. [டா

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், சுஅ—நற்ற வஞ்செய் வார்கடிடந் தவஞ்செய வார்க்கு மஃதிட—நற்பொருள்செய வார் க்கிடம்பொருள்செய் வார்க்கு மஃதிடம்—வெற்ற வின்பம் விளை விப்பான் விண்ணுலகாள வீழ்ந்தென—மற்றை நாடு வட்ட மாக வைகுமற்றந் நாடரோ.

இ - ள். பெரும்பொருளால் பெட்டக்கது ஆகி - அளவிறந்த பொருளுடைமையாற் பிறதேயத்தாராலும் விரும்பத்தக்கதாய்—அருங்கேட்டால் ஆற்றவினிலவது நாடு – கேடின்மையோடு கூடி மிக வினிலவதே நாடாவது. எ - று.

அளவிறப்புப் பொருள்களது பன்மைமேலும் தனித்தனி அவற்றின் மிகுதிமேலும் நின்றது. கேடாவது மிக்கபெயல், பெய வின்மை, எலி, விட்டில், கிளி, அரசண்மையென்றிவற்றுள் வருவது. "மிக்கபெய லோடுபெய வின்மையெலி விட்டில்கிளி - யக்க ஞர சண்மையோடாறு." இவற்றை வடநூலார் ஈதிகளென்ப. இவற்றுண் முன்னையவற்றதின்மை அரசனறத்தானும், பின்னைய தின்மை அவண்மறத்தானும், வரும். இவ்வின்மைகளான் மிகவினிலவதாயிற்று. (உ)

எஙூ. பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறை கிறையொருங்கு நேர்வது நாடு. ஙூ. [வற்

இ – ள். பொறை ஒருங்கு மேல்வருங்கால் தாங்கி - பிறநாடுகள் பொறுத்தபாரமெல்லாம் ஒருங்கே தன்கண்வருங்கால் அவற்றைத் தாங்கி—இறைவற்கு இறை ஒருங்கு நேர்வது நாடு - அதன் மேற்றன்னரசனுக்கு இறைப்பொருண் முழுதையும் உடம்பட்டுக் கொடுப்பதே நாடாவது. எ - று.

பாரங்கள் மக்கட்டொகுதியும் ஆனெருமை முதலிய விலங்குத் தொகுதியும். தாங்குதல் அவை தத்தந்தேயத்துப் பகை வராதிறுத்ததாக, அரசு கோல்கோடியதாக, உணவின்மையானுகத் தன்சண் வருதால் அவ்வத்தேயங்களிப்போல இனிதிருப்பச் செயதல். அச்செயலால் இறையைக் குறைபடித்தாது தானேகொடுப்பதென்பார், இறையொருங்கு நேர்வதென்றார். (ஙூ)

எஙூ. உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ் சேரா தியல்வது நாடு. சூ.

இ - ள். உறு பசியும் - மிக்க பசியும்—ஓவாப் பிணியும் – நீங்காத நோயும்—செறுபகையும் சேராது - புறத்து நின்று வந்த ழிவு செய்யும் பகையுமின்றி—இயல்வது நாடு - இனிது நடப்பதே நாடாவது. எ - று.

உறுபசி உழவருடைமையாலும் ஆற்றவினிலதலாலும் சேரா தாயிற்று. ஓவாப்பிணி தீக்காற்று மிக்கருவிர் வெப்பங்களும் ருகரப்பமவற்றது தீமையுமின்மையிற் சேரதாயிற்று. செறுபகை

அரசனுற்றலும் நிலைப்படையும் அடலியும் அரணுமுடைமையிற் சேராதாயிற்று. (எ)

எஙடு. பல்குழுவும் பாழ்செய்யு மூட்பகையும் வேந்தலைக் கொல்குறும்பு மில்லது நாடு. டு. [குன்

இ - ள். பல் குழுவும் - சங்கேதலுயத்தான் மாறுபட்டுக் கூடும் பல்கூட்டமும்—பாழ் செய்யும் உட்பகையும்—உடனுறையாநின்றே பாழாகச் செய்யுமூட்பகையும்—வேந்து அலைக்கும் கொல் குறும்பும் இல்லது நாடு - அளவுவந்தால் வேந்தனியலைக்குங் கொல்லினைக்குறும்பரு மில்லாததே நாடாவது. எ - று.

சங்கேதம் சாதிபற்றியும் கடவுள்பற்றியும் பலர்க்குளதாமொருமை. உட்பகை ஆறலைப்பார், களவர், குறுநெடுவுவார் முதலிய மக்களும், பன்றி, புலி, கரடி முதலிய விலங்குகளும். உட்பகை குறும்பென்பன ஆகுபெயர். இம்மூன்றும் அரசனுலும் வாழ்வாராலுங் கடியப்பட்டு நடப்பதே நாடென்பதாம். (இ)

எஙசு. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்று நாடென்ப நாட்டிற் றலை. சு.

இ - ள். கேடு அறியா - பகைவராற் கெடுதலறியாததாய்—கெட்டவிடத்தும் வளம் குன்றுநாடு—அரிதிற்கெட்டதாயினும் அப பொழுதுந் தன்வளங்குன்றுத நாட்டினை—நாட்டின் தலை என்ப - எல்லாநாட்டினுந்தலையென்றுசொல்லுவர் நூலோர். எ - று.

அறியாத குன்றுதவென்னும் பெயரெச்சங்களினிறுதிநிலை களை விகாரத்தாற்றொக்கன. கேடறியாமை அரசனுற்றலானுங் கடவுட்பூசையறங்களென்றிவற்றது செயலானும் வரும். வளம் ஆகரங்களிற்படுவனவும் வயலினுந் தண்டலையினும் விளைவனவுமாம். குன்றுமை அவை செயவேண்டாமல் இயல்பாகவேயுளவாயும் முன்னீட்டப்பட்டுங்குறைவறுதல். இவையாறுபாட்டானும் நாட்டிலக்கணங் கூறப்பட்டது. (சு)

எஙஎ. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் வல்லரணு நாட்டிற் குறுப்பு. எ.

இ— ள. இருபுனலும் - கீழ்நீர் மேனீரென்பட்ட தன்கணீரும்—வாயந்தமலையும் — வாயப்படைத்தாய மலையும்—வருபுனலும் - அதனினின்றும் வருவதாய நீரும்—வல்லரணும் - அழியாத நகரியும்—நாட்டிற்கு உறுப்பு - நாட்டிற்கவயவமாம். எ - று.

ஈண்டுப் புனலென்றது தூரவு கேணிகளும் ஏரிகளும் ஆறுகளு மாகிய ஆதாரங்களை, அவயவமாதற்குரியன அவையேயாகலின். அவற்றுள் வானம் வறப்பினும் வளனுடைமை பெறப்பட்டது. இடையதன்றியொருபுடையதாகலும் தன்வளந் தருதலும மாரிக்கு ணுண்டீர் கோடைக்கணுமிழ்தலுமுடைமைபற்றி வாயந்த மலை யென்றார். அரண் ஆருபெயர். இதனுள் அதனவயவங் கூறப பட்டது. (எ)

எஙஅ. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம
| மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. அ.

இ - ள். பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம் இவ வைந்து - நோயின்மையுஞ் செல்வம் விளைதல் இனபம் காவலென றிவை யுடைமையுமாகிய இவ்வைந்தினையும்—நாட்டிறகு அணி என்ப - நாட்டிற்கழகென்று சொல்லுவர் நூலோர். எ - று.

பிணியின்மை நிலநலத்தான் வருவது. செல்வம் மேறசொல்லி யன. இன்பம் விழுவும் வேள்வியுஞ் சானறோருடைமையானும, நுகர்வனவுடைமையானும், நிலநீகளது நனமையானும், வாழ வார்க்கு உண்ணிகழ்வது. காவலெனவே அரசனகாவலும் வாழ வோர் காவலும் அரண்காவலு மடஙகின. பிறதேயஙகளினுள்ள ரும் விழைநது பின் அவையுளளாமைகேதுவாக அதனழகு இத் னுற கூறபபட்டது. (அ)

எஙகூ. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு. கூ.

இ - ள். நாடா வளத்தன நாடு என்ப - தங்கண்வாழ்வார் தேடி வருந்தாமல் அவர்பாறருளே யடையுஞ் செல்வத்தையுடை யவறறை நூலோர் நாடென்று சொல்லுவர்;—நாட வளம் தரும நாடு நாடு அல்ல - ஆதலாற் றேடிவருந்தச் செல்வமடைவிக்கும நாடுகள் நாடாகா. எ - று.

நாடுதல் இருவழியும் வருத்தத்தின்மேனின்றது. "பொருள செயவார்க்குமஃதிடம்" * என்றார் பிறரும். நூலோர் விதிபற்றி எதிர்மறைமுகத்தாற குற்றங்கூறியவாறு. இவ்வாறன்றி என்பவெ ன்பதனைப் பின்னுங்கூட்டி இருபொருள்பட வுரைப்பின், அது வாதமாம்.

* நற்றவஞ்செயவார்க்கிடம் என்னுஞ் செயயுளின் உளளது.

எசஅ. ஆங்கமை வெய்திய கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு. கஅ.

இ - ள். வேந்து அமைவு இல்லாத நாடு - வேந்தரோடு மேவு தலில்லாத நாடு—ஆங்கு அமைவு எய்தியக் கண்ணும் பயம் இன்றே - மேற்சொல்லிய குணங்களெல்லாவற்றினும் நிறைந்திருந்தாயினும் அவற்றாற் பயனுடைத்தன்று. எ - று.

வேந்தனமைவெனவே, குடிகள் அவன்மாட்டன்புடையராதலும் அவன்ஞான இவர்மாட்டருளுடையனாதலும் அடங்கின. அவையில்வழி வாழ்வோரின்மையின், அவற்றாற் பயனின்றாயிற்று. இவையிரண்டுபாட்டானும் அதன்குறைங் கூறப்பட்டது. ()

எடு ம் அதி.— அரண்.

இனி அந்நாட்டிற்குறப்பாயடங்குமாயினும் பகைவராற்றெ லைவுவந்தழி அது தனக்குமை அரசனறனக்கும் எமமாதறிறபபுப பறறிப் பிறிதோரங்கமாக வோதபபட்ட அரண் இவ்வதிகாரத தாற கூறுகின்றார.

எசக. ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள. க.

இ - ள். ஆற்று பவர்க்கும் அரண் பொருள் - மூவகையாற்ற லுமுடையராயப் பிறாமேற செல்வார்க்கும் அரண் சிறந்தது;— அஞ்சித் தற்போற்றுபவர்க்கும (அரண்) பொருள் – அவையினறித தமமேல் வருவாய்களஞ்சித் தனனேயேயடைவார்க்கும் அரண் சிறந்தது. எ – று.

பிறர்மேறசெல்லுங்கால் உரிமை பொருண் முதலியவறறைப பிறனொருவன் வௌவாமல் வைத்துச் செல்லவேண்டுமாகலானும, அபபொருமை தொலைநதிறுதி வநதழிக்கடனடுவணுடைகள் தாரபோன்று மெங்காணதிறுவராகலானும், ஆறறுபவர்க்கும போற்றுபவர்க்கும் அரண் பொருளாயிறறு. அரணில்வழி அழியுமபாலராகலின், அவரை முறகூறினர். இதனால் அரணினது சிறப்புக் கூறப்பட்டது. (க)

எசஉ. மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண். உ.

இ - ள். மணி நீரும மண்ணும் மலையும் அணிநிழற்காடும் உடையது அரண் - மணிபோலு நிறத்தினையுடைய நீரும் வெளிளை நிலமும மலையுங் குளிர்ந்த நிழலையுடைய காடுமுடையதே அரணுவது. எ - று.

ஞ்ஞான்றும் வற்றுத நீரென்பார் மணிநீரென்றும், நீருநிழலுமில்லா/மருநிலமென்பார் மண்ணென்றும், செறிந்த காடென்பார் அணிநிழற்காடெனறுங் கூறினர். மதிற்புறத்து மருநிலம் பகைவர் அரண்பற்றுமைப்பொருட்டு. நீரரண், நிலவரண், மலையரண, காட்டரணென இயற்கையுஞ் செயற்கையுமாய இந்நான்கரணுஞ் சூழப்படுவது அரணென்பதாம். (உ)

எசுசு. உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர ணென்றுரைக்கு நூல். சு.

இ-ள். உயர்வு அகலம் திண்மை அருமை இந்நான்கின் அமைவு - உயர்ச்சியும் அகலமுந் திண்மையும் அருமையுமெனறு சொலலபபட்ட இந்நான்கின் மிகுதியையுடைய மதிலை—அரண் என்று உரைக்கும் நூல் - அரணென்று சொல்லுவர் நூலோர். எ - று.

'அமைவு நூலென்பன ஆகுபெயர். உயர்வு | எணணியயதாதது. அகலம புறத்தோர்க்கு அகழலாகா அடியகலமும், அகத்தோர்கு னெறு வினைசெயயலாக தகலயகலமும். திண்மை கல்லிட்டிகைகளாற செயதலிற் குத்தப்படாமை. அருமை பொறிகளான் அணுகருமை. பொறிகளாவன "வளைவிற் பொறியு மயிறசெறி நிலையுவ—கருவிர லுகமுங் கல்லுமிழ கவணும்—பரிவுறு வெருவெயும பாகடு குழிசியுங்—கயபொன் னுலையுங் கல்லிடு கூடையுங்—தூண்டிலுந் தடக்கு மாண்டலை யடுபபுங்—கலையுங் கழுவும் புதையும் புழையு—மையவித் தலாமுங் கையெய ரூசியுஞ்-சென்றெறி சிரலும் பனறியும் பகணை—மெழுவுஞ் சிப்பு முழுவிறற் கணையமுங்—கோலுங் குரதமும் வேலுஞ் சூலமும்" * என்றிவை முதலாயின.

எசுசு. சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண்.

இ - ள. சிறுகாப்பிற் பேர் இடத்தது ஆகி - காக்கவேண்டிமிடஞ்சிறிதாய அகன்றவிடத்தை யுடைத்தாய—உறு பகை ஊக்கம அழிபபது அரண் - தன்னைவந்து மூறறிய பகைவரது மனவெழுச்சியைக கெடிபபதே அரணுவது. எ - று.

* சிலபபதிகாரம், அடைக்கலக்காதை.

வாயிலும் வழியுமொழிந்த விடங்கள மகில், காடு, நீர்நிலையென்றிவறறுள் ஏறபன வுடைத்தாதல்பறறிச் சிறுகாப்பினென்றும், அகத்தோர் நலிவின்றியிருத்தல்பற்றிப் பேரிடத்ததாகியென்றும, தம்வலி நோக்கி இதுபொழுதே யழித்துமென்று வரும்பகைவர் வந்து சூண்டால் அவ்வுக்கமொழிதல்பற்றி ஊக்க மழிபப தென றுங்கூறினர். (சு)

எசுரு. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகியகத்தார் நிலைக்கெளிதா நீரதரண். ரு.

இ - ள். கொளற்கு அரிதாய - புறத்தாராற் கோடற்கரிதாய - கொண்டகூழ்த்தாகி - உட்கொண்ட பலவகையுணவிற்குய—அகத்தார் நிலைக்கு எளிதாம் நீரது அரண் - அகத்தாரது போர்நிலைக்கெளிதாய நீர்மையையுடையதே அரணுவது. எ - று.

கோடற்கருமை இரை கிடங்குகளானும் பொறிகளானும் இடங்கொள்ளுதற்கருமை. உணவு தலைமைபற்றிக் கூறினமையின. மற்றுள்ள நுகரப்படுவனவுமடங்கின. நிலைகெளிதா நீர்மையாவது அகத்தார் விட்டவாயுதமுதலிய புறத்தார்மேலெறிதற்கேதுவும், அவர்விட்டன அகத்தாமேற் செல்லாகையும், பதணமுயரமும் முதலாயின. (ரு)

எசுசு. எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு நல்லா ளுடைய தரண்.

இ — ள். எல்லாப்பொருளும் உடைத்தாய - அகத்தோர்க்கு வேண்டும் பொருள்களெல்லாவறறையும உள்ளே யுடைதாய— இடத்து உதவும் நல்லாள் உடையது அரண் - புறத்தோரால் அழிவெயது மெல்லிக்கண் அஃதெயதாவகையுதவிக் காகுமு நலல வீரரையுமுடையதே அரணுவது. எ - று.

அரசன்மாட்டன்பும் மானமும் மறமும் சோர்வினமையும முதலிய நற்குணங்களுடைமைபற்றி நல்லாளெனைரர். (சு)

எசுள. மூற்றியு மூற்று தெறிந்து மறைப்படுத்தும் பற்றற் கரிய தரண். எ.

இ - ள். மூற்றியும் - புகலொடு போக்கொழியுமவகை நெருங்கிச் சூழ்ந்தும—மூறறது எறிந்தும் - அங்ஙனஞ்சூழாது நெடுந்த விடனேக்கி ஒருமுகமாகப பொருதும—அறைப்படுதலும - அகத்தோரை அவர் தெளிந்தோரைவிட்டுக் கீழறுதலைத் தடுபபத

தும்—பறறற்கு அரியது அரண் - புறத்தோராற் கொள்ளுதற்கரி யதே அரணுவது. எ - று.

இம்மூன்றுபாயத்துள்ளும் முதலது எல்லாப்பொருளுமுடை மையானும், ஏனைய நல்லாளுடைமையானும், வாயாவாயின. (எ)

எசஅ. முற்றூற்றி முற்றி யவரையும் பற்றூற்றிப் பற்றியார் வெல்வ தரண். அ.

இ—ள். முற்று ஆற்றி முற்றியவரையும் - தானைப்பெருமை யாற் சூழதல்வல்லராய வந்து சூழ்ந்த புறத்தோரையும்—பற்றி யார் பறறு ஆறறி வெல்வது அரண் - தன்னைப்பற்றியவகத்தோர் தாம் பறறியவிடம் விடாதே நின்று பொருது வெல்வதே அரணு வது. எ—று.

உமமை சிறப்பும்மை. பற்றின்கண்ணேயாற்றியெனவிரியும். பற்று ஆகுபெயர். வெல்வதென உடையார்தொழில் அரண்மே னினறது. பெரும்படையானைச் சிறுபடையான் பொறுத்து நிற் கு தானையேயன்றி வெல்லுமியல்பினதென்பதாம். இதறகுப் பிறி தரைப்பாருமுளர். இவையேழுபாட்டானும் அதனிலக்கணங் கூறபபட்டது. (அ)

எசஉ. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து வீறெய்தி மாண்ட தரண். கூ.

இ—ள். முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து வீறு எய்தி - போர்தொடங்கினவளவிலே பகைவர் கெடும்வண்ணம் அகத்தோர் செயயும் வினைவேறுபாடுகளான் வீறுபெற்று—மாண டது அரண் - மறறும் வேண்டுமாட்சியையுடையதே அரணுவது. எ—று.

தொடக்கத்திற் சென்டார் பின்னுங் கூடிப் பொருதல் கூடா மையின், முனைமுகத்துச்சாயவென்றார். வினைவேறுபாடிகளாவன பகைவா தொடங்கியபோரினையறிந்து எயதல், எறிதல், குதறதல், வெட்டுதலென்றிவை முதலாயின வினைகளுள் அதனைச் சாயப்பன செயதல். மற்றும் வேண்டுமாட்சியென்றது புறத்தோரறியாமற் புகுதல் போதல் செயதறகுக் கண்ட சுருங்கைவழி முதலாயின வுடைமை. (கூ)

எரு0. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி யில்லார்க ணில்ல தரண். க0.

இ - ள். அரண் - அரண்,—எனைமாட்சித்து ஆயிக்கண்ணும் - மேற்சொல்லப்பட்ட மாட்சியெல்லாமுடைத்தாய விடத்தும்,—வினைமாட்சி இல்லார்கண் இல்லது - வினைசெயதற்கண் மாடசியில்லாதார்மாட்டு அவையிலதாம். எ - று.

வாளாவிருத்தலும் அளவறியாது செயதலும் ஒலாதது செய்தலுமெல்லாம் அடங்க வினைமாட்சியில்லாரென்றும், ஏற்றவினையை யளவறிந்துசெயது காவாக்கால் அம்மாட்சிகளாற பயனின்றியழியுமென்பார் அவையுடைத்தன்றென்றுங் கூறினார். இவை பிரண்டுபாட்டானுங் காப்பாரையின்றியமையாதென்பது கூறப பட்டது. (கo)

எண்ணும் அதி.—பொருள்செயல்வகை.

இனிப் பெரும்பான்மையும் சாலாமையும் அதனையும் ஆக்கவுங் காக்கவும் படுவதாய பொருளைச் செயதலினதிறம் இவ்வதிகாரத்தாற் கூறுகினறார்.

எறிக. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள். க.

இ - ள். பொருள் அல்லவரைப் பொருளாகச் செயயும்பொருளல்லது - ஒருபொருளாக மதிக்கப்படாதாரையும் படுவாராகச செயயவல்ல பொருளையொழிய—பொருள் இல்லை - ஒருவனுக்குப பொருளாவதில்லை. எ - று.

மதிக்கப்படாதார் அறிவிலாதார், இழிகுலத்தார். இழிவுசிறப பும்மை விகாரத்தாறறெக்கது. மதிக்கப்படுவாராகச் செயதல் அறிவுடையாரும் உயர்குலத்தாரும் அவர்பாற்சென்று நிற்கப பண்ணுதல். அதனால் ஈட்டப்படுவது அதுவே பிறிதில்லை யென்பதாம். ()

எறிஉ. இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை யெல்லாருஞ் செய்வா சிறப்பு. * உ.

இ - ள். இல்லாரை எல்லாரும் எள்ளுவர் - எல்லாநன்மையுமுடையராயினும் பொருளில்லாரை யாவருமிகழ்வர்;—செல்வரை எல்லாரும் சிறப்புச்செய்வர் - எல்லாத்தீமையுமுடையராயினும அஃதுடையாரை யாவருமுயரச்செயவர். எ - று.

* இத்திருக்குறள் சேரமான்பெருமாணயனார் திருக்கைலாய ஞானவுலாவில் எடுத்தாரைக்கப்பட்டது.

உயரச்செயதல் தாந்தாழாது நிற்றல். இகழ்தறசணணுந தாழ் தறகண்ணும் பகைவா, நட்டார், நொதுமலசென்னுமி மூவகையா ருமொத்தலின், யாவருமென்றார். பின்னுங் கூறியது அதனே வலி யறுத்தறபொருட்டு. (உ)

எநிஉ. பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு மெண்ணிய தேயத்துச் சென்று. ஈ.

இ - ள். பொருள் என்னும் பொய்யா விளக்கம் - பொருளெ னறு எல்லாராலுஞ் சிறப்பிக்கப்படும் ; நநதாவிளக்கு—எண்ணிய தேயத்தச சென்று இருள் அறுக்கும் - தண்ணேச் செயதவர்களு அவா நினைத்த தேயத்துச் சென்று பகையென்னுமிருளை கெடுக கும். எ - று.

எல்லார்க்கும் எஞ்ஞான்றும் இன்றியமையாததாய வருதல பறறிப் பொயயாவிளக்கமெனறும், ஏனைவிளக்கோடி இதனிடை வேறறுமைதோன்ற எண்ணியதேயத்துச்சென்றென்றுங் கூறினா, எகதேசவுருவகம். இவைமூனறுபாட்டானும் பொருளது சிறப்புக் கூறபபட்டது. (ஈ)

எநிச. அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து தீதின்றி வந்த பொருள். ச.

இ - ள். திறன அறிந்து தீது இன்றி வந்த பொருள் - செய யுநதிறத்தினேயறிந்து அரசன கொடுங்கோன்மையிலனெ உளதாய பொருள்—அறன் ஈனும இன்பமும ஈனும் - அவனுக்கு அறத்தே யங்கொடுக்கும், இன்பத்தையுங்கொடுக்கும். எ - று.

செயயுநதிறம் தான் பொருள்செயதற்குரிய நெறி. இலனெ வெனபது இன்றியெனத் திரிநதுநின்றது. செங்கோலென்று புகழப்படுதலானும் கடவுட்பூசை தானங்களாற் பயனெயதலா னும அறனீனுமென்றும், நெடுங்காலநின்று துயக்கப்படுதலான் இனபமுமீனுமென்றுங் கூறினர். அதனை அத்திறத்தாற் ற்ந்த வெனபதாம். (ச)

எநிஙி. அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம் புலவார் புரள விடல். ஙி.

இ - ள். அருளொடும் அனபொடும் வாராத பொருள் ஆக கம் - தாங்குடிகணமாடுசெ செயயுமருளோடும அவா தமமாட்டிச செயயுமனபோடுங்கூடி வாராதபொருளீட்டத்தை—புல்லார் புர ளவிடல் - அதசா பொருநதாது கழியவிடுக. எ - று.

அவற்றோடு கூடிவருதலாவது ஆறிலொன்றாய் வருதல். அவ் வாறு வாராத் பொருளீட்டம் பசுமட்கலத்தணீர்போலச் செயதா னேயுங்கொண்டிறத்தலின், அதனேப புல்லாரென்றெழியாது புரள விடலென்றுங் கூறினார். (சு)

எகுசு. உறுபொருளு மூல்கு பொருளுந்தன் னெண்ணூர்த் தெறுபொருளும் வேந்தன் பொருள். சு.

இ - ள். உறு பொருளும் - உடையாரின்மையிற் றூனேவந்து றற பொருளும்—உல்கு பொருளும் - சுங்கமாகிய பொருளும்—தன் ஒனனூர்த் தெறுபொருளும் - தன்பகைவரைத் திறையாகக் கொள்ளும் பொருளும்—வேந்தன் பொருள் - அரசனுக்குரிய பொருள்கள். எ - று.

உறுபொருள் வைத்தாரிறந்துபோக நெடுங்காலம் நிலத்தின் கட்கிடந்து பின கண்டெடுத்தனஉம், தாயத்தார் பெறுதனஉமாம். சுங்கம் கலத்தினுங் காலினும் வரும் பண்டங்கட்கிறையாயது. தெறுபொருள தெறுதலான் வரும் பொருளெனவிரியும். ஆறி லொன்றெழியவும் உரியன கூறியவாறு. இவை மூன்றுபாட்டா னும அஃதீட்டுநெறி கூறப்பட்டது. (சு)

எகுஎ. அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ் செல்வச் செவிலியா லுண்டு. எ.

இ - ள். அன்பு ஈன் அருள் என்னும் குழவி - அன்பினுலீனப்பட்ட அருளெனனுங்குழவி—பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு - பொருளென்று உயர்த்துச்சொல்லப்படுஞ்செல்வத்தையுடைய செவிலியான் வளரும். எ - று.

தொடர்புபற்றுதே வருத்தமுற்றூர்மேற் செல்வதாய அருள் தொடர்புபற்றிச் செலலுமனபு முதிர்ந்துழி உளதாவதாகலின் அதனே அன்பீன்குழவியென்றும், அது வறியார்மேறசெல்வது அவ்வறுமை கீளையவல்லார்க்காதலிற் பொருளே அதறகுச செவிலி யென்றும், அஃது உலகிற்செவிலியர்போலாது தானேயெல்லாப் பொருளுமுதவி வளர்த்தலிற் செல்வச்செவிலியென்றுங் கூறினார்.

எகுஅ. குன்றேறி யாணப்போர் கண்டற்றூற் றன்கைத் துண்டாகச் செய்வான் வினை. அ. [தொன்

இ - ள். தன் கைத்து உண்டாக ஒன்று செய்வான் வினை - தன் கையதாகிய பொருளுண்டாக ஒருவினையையெடுத்துக்கொ

ண்டான் அதனைச் செய்தல்—குன்று ஏறி யானைப்போர் கண்ட றறு - ஒருவன மலைமேலேறி நின்று யானைப்போரைக் கண்டா லொக்கும். எ - று.

ஒன்றெனபது வினையாதல் செய்வானென்றதனாற் பெற்றும். குன்றேறியான் அச்சமும் வருத்தமுமின்றி நிலத்திடை யானையும யானையும் பொருபோரைத் தானினிருந்து காணுமதுபோலக் கைத்துண்டாக வினையை மேற்கொண்டானும் அச்சமும் வரு த்தமுமின்றி வல்லாரையேவித் தானினிருந்து மூடிக்குமெ னபதாம். (அ)

எஙிசூ. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு மெஃகதனிற் கூரிய தில. கூ.

இ - ள். பொருளைச் செயக - தமக்கொன்றுண்டாகச் சரு துவார் பொருளையுண்டாக்குக;—செறுநர் செருக்கு அறுக்கும எஃகு - தம்பகைவர் தருக்கினையறுக்கும் படைக்கலம் அதுவாம்,— அதனிற் கூரியது இல - அதற்கதுபோலக் கூரிய படைக்கலம் பிறிதில்லை. எ - று.

அதுவாம் அதற்கென்பன அவாய்நிலையான் வந்தன. பொரு ளைச் செயயவே பெரும்படையும் நட்புமுடையராவர், ஆகவே, பகைவர் தருக்கொழிந்து தாமேயடங்குவரென்பார் செறுநர்செ ருக்கறுக்குமெஃகமென்றும, ஏனையெஃகுகள் அதுபோல அரு ஷப்பொருளையறுக்கமாட்டாமையின் அதனிற்கூரிய தில்லென் றுங்கூறினர். (கூ)

எசுஂ. ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க்கெண்பொரு ளேனை யிரண்டு மொருங்கு. கஂ.

இ - ள். ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு – நெறியான் வரும் பொருளை இறபப மிகப் படைத்தார்க்கு—ஏனை இரண்டும் ஒருங்கு எண்பொருள் - மற்றையறனுமின்பமும் ஒருங்கேயெளிய பொருள்களாம். எ - று.

காழ்த்தல் முதிர்தல். பயன்கொடுத்தல்லது போகாமை யின் ஒண்பொருளென்றும், ஏனையிரண்டும் அதன வினைவாகலிற் முமே யொருகாலத்திலேயுளவாமென்பார் எண்பொருளெல்றுங் கூறினர். இவை நான்குபாட்டானும் அதனன் வரும்பயன் கூற ப்பட்டது. (கஂ)